வெளியீடு 2-8-19 2]
[Issued 2-8-1982

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1982 பிப்ரவரி 6—தொகுதி XXVI எண் 4
Saturday 6th February 1982—Volume XXVI No. 4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்]
[Price Rs. 3-50 Paise

| | பக்கங்கள் |
|---|---|
| அறிவிப்புகள்—தொடர்ச்சி. | |
| மதுரை—காமராஜ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல். | 56–57 |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 57 |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம், விவாதம் (தொடர்ச்சி). | 59—98 |
| | 100—112 |
| | 206—277 |
| | 336—412 |
| | 495—543 |
| இரங்கல் குறிப்புகள்— | |
| முன்னாள் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா மறைவு (தீ). | 23—24 |
| முன்னாள் உறுப்பினர் திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் மறைவு. | 291—292 |
| முன்னாள் உறுப்பினர்களான திரு. பக்கிரிசாமி பிள்ளை, திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர், முன்னாள் அமைச்சரும் மேலவை உறுப்பினருமான டாக்டர் எம்.ஷி. கிருஷ்ணராவ் ஆகியோர் மறைவு. | 1—2 |
| முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம், முன்னாள் அமைச்சரும், உறுப்பினருமான திரு.பி. கக்கன் ஆகியோர் மறைவு (தீ). | 2—23 |
| உரிமைப் பிரச்சினை— | |
| எதிர்க் கட்சித் தலைவர் மீது அவையில் எழுப்ப அனுமதி வழங்குவது. | 461—490 |
| ஒழுங்குப் பிரச்சினை— | |
| ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக்கொள்வது. | 334—335 |
| | 457—461 |





| | பக்கங்கள் |
|---|---|
| கவன ஈர்ப்புகள்— | |
| சென்னை மாநகரில் கொசுத் தொல்லை அதிகரிப்பு | 492—495 |
| வேடசந்தூர் வட்டத்தில் வெங்காயப் பயிர் நோயினால் பாதிக்கப் பெற்றுள்ளது | 490—492 |
| தகவல் கோரல்— | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 190 |
| கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு | 190—203 |
| நீதிபதி பால் கமிஷன் அறிக்கை, விவாதம் கோரல் | 58—59 |
| பால் கமிஷன் அறிக்கை—ஆங்கிலப் படிவம் | 203—204 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 112—129 |
| | 278—280 |
| | 412 |
| | 543 |
| வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 25—56 |
| | 157—190 |
| | 292—330 |
| | 413—457 |

V211,31 N82
N83.26;2
122217

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது
சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்

1982 பிப்ரவரி 2, 4, 5 மற்றும் 6-ம் நாட்கள்

(தொகுதி XXVI—எண்கள் 1-4)

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—iii |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | vii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உள்பட). | ix—xvi |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு 1982, | 330—331 |
| கடன் நிவாரணத் திருத்த சட்ட முன்வடிவு, 1982 | 331—334 |
| அறிக்கை அளித்தல்— | |
| உரிமைக் குழு | 205 |
| பொது நிறுவனங்கள் குழு | 205 |
| அறிவிப்புகள்— | |
| எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982, | 330 |
| பேரவை அலுவல் | 99—100 |


டி 2 A 270-1

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:—

| | | |
|---|---|---|
| அ. | .. | அறிக்கை |
| அறிவி. | .. | அறிவிப்பு |
| அ.வி. | .. | அரை மணி நேர விவாதம் |
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச.ஆ.நி. | .. | சட்ட முன்வடிவின் ஆய்வுநிலை—இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு / கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |



| | | |
|---|---|---|
| ச.பிரி.ஆ. | .. | சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல். |
| ச.பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ.தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | .. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை. |
| பே.அ. | .. | பேரவையின் அலுவல் |

# அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக (தீ) என்று போடுவது தீர்மானத்தையும் (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும் (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்டமுன் வடிவுகளும் 'சட்ட முன்வடிவு' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப்பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். . | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு) |
| 9. அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி |
| 18. ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2 |
| 20. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21. ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 23. இராசகுமார், திரு. மெ. அ. .. | மருங்காபுரி |
| 24. இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 25. இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 26. இராசாம்பாள், திருமதி தா. .. | தலைவாசல் (செ.வ.) |
| 27. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28. இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 29. இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 30. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 31. இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33. இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 34. இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36. இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 37. இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38. இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39. இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40. இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41. இராஜசேகரன், திரு. வே. .. | இராதாகிருஷ்ண நகர் |
| 42. இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43. இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44. இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46. உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம் |
| 47. உச்சி, திரு. கே. .. | கூடலூர் |
| 48. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49. உமாநாத், திரு. ரா. .. | நாகை |
| 50. கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |
| 52. கணேசன், திரு. இ. .. | இடைப்பாடி |
| 53. கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 54. கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 55. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 56. கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 57. கருணாநிதி, டாக்டர். மு. .. | அண்ணா நகர் |
| 58. கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 59. கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 60. கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை |
| 61. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 62. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 63. கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 64. கலைஅரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65. காளிமுத்து, திரு. கா. .. | திருப்பரங்குன்றம் |
| 66. கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம் |
| 67. கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 69. கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 70. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 71. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 72. கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 73. குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர் |
| 74. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 75. குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 76. குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 77. குருசாமி, திரு. ப. .. | அந்தியூர் (செ.வ.) |
| 78. குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 79. குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80. குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 81. கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 82. கோபால், திரு. சி. .. | சோளிங்கர் |
| 83. கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84. கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |
| 85. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87. கோவைத் தம்பி, திரு. .. | பேரூர் |
| 88. சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி |
| 89. சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 90. சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 92. சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93. சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94. சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95. சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 96. சமரசம், டாக்டர், கே. | காவேரிப்பட்டணம் |
| 97. சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99. சித்தன், திரு. என்.எஸ்.வி. | திருமங்கலம் |
| 100. சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101. சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102. சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103. சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104. சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106. சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107. சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108. சின்னராசு திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109. சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110. சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111. சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112. சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113. சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114. சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115. சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117. சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 118. சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119. சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120. சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121. சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம் |
| 123. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 124. செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125. செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 126. சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127. சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128. சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130. சோமு, திரு. என்.வி.என். | பூங்காநகர் |
| 131. சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2 |
| 132. டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 133. தங்கமணி திரு. கே. எம். | திண்டிவனம் |
| 134. தங்கராசு, திரு. எ. | குறிஞ்சிப்பாடி |
| 135. தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம்(செ.வ. |
| 136. தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137. தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 138. தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139. தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141. தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142. திருச்சி ஆர். சௌந்திரராஜன், திரு. | ஸ்ரீரங்கம் |
| 143. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144. திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145. திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.) |
| 146. திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147. தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148. துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 149. துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151. துரைராஜ், திரு. பி. | சங்கரநாராயணர் கோவில் (செ.வ.) |
| 152. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 153. நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154. நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 155. நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 156. நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 157. நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 158. நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159. நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி |
| 160. நெடுஞ்செழியன், டாக்டர், இரா. | திருநெல்வேலி |
| 161. நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 162. பக்கிர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 163. பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 164. பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 165. பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 166. பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 167. பழனிச்சாமி திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 168. பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 169. பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170. பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 171. பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 172. பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173. பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு |
| 174. பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 175. பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 176. பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 177. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178. பாலசுப்பிரமணியன், வேடசந்தூர், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179. பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 180. பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181. பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 182. பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம் |
| 183. புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை |
| 184. பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185. பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 186. பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 187. பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 188. பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 189. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190. பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 191. பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 192. மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 193. மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 194. மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195. மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 196. முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 197. முசிறிபுத்தன், திரு. பி. .. | திருச்சி-1 |
| 198. முத்துக்கிருஷ்ணன், திரு. சு. .. | கன்னியாகுமரி |
| 199. முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 200. முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201. முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 202. முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 203. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204. முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு |
| 205. மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட் (செ.வ.) |
| 206. மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207. யசோதா, திருமதி, டி. .. | ஸ்ரீபெரும்புதூர் |
| 208. ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 209. ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 210. ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211. ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான், திரு. | புதுக்கோட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 213. ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214. ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 215. வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 216. விசயலட்சுமி, செல்வி, வி. .. | வீரபாண்டி |
| 217. வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 218. விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 219. விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 220. விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர் |
| 221. விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட் |
| 222. வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 223. வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224. வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 225. வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 226. வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 227. வெள்ளைச்சாமி, திரு. வி. .. | ஆத்தூர் |
| 228. வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 229. வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை |
| 230. ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 231. ஜான் வின்சென்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233. ஹஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235. மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.**

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்,

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்ட மன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்

1982 பிப்ரவரி 2, 4, 5 மற்றும் 6-ம் நாட்கள்

(தொகுதி XXVI-எண்கள் 1-4)


பக்கங்கள்

**அ**

அங்குசாமி, திரு. ச.—
தேவகோட்டை-கன்னங்குடி, நகரப் பேருந்து 453—454

அண்ணாதாசன், திரு. எம்.—
ஆளுநர் உரை (தீ.) 356—358
359—362

அப்பாதுரை, திரு. மு.—
சுகாதார உதவியாளர்கள், நிர்வாகக் கட்டுப்பாடு 49

அம்பிகாபதி, திரு. மு.—
ஆளுநர் உரை (தீ.) 228—238, 411, 525
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த. கோ). 459
பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 464, 469
பைங்கிணர் கிராமம், பட்டா வழங்குதல் 299—302

அருணகிரி, திரு. இரா.—
ஆளுநர் உரை, (தீ.) 501—503

## இ—தொடர்ச்சி.


இரங்கல் குறிப்புகள்—தொடர்ச்சி.

பக்கிரிசாமிப் பிள்ளை, திரு. எஸ்., அங்கமுத்து நாயக்கர், திரு. எஸ்., முன்னாள் உறுப்பினர்கள், கிருஷ்ணராவ் டாக்டர் எம். வி., முன்னாள் அமைச்சர் 1—2

பாலசுப்பிரமணியம், திரு. ஏ., கக்கன், திரு. பி. (இ. தீ.) 2—23

மோகன்லால் சுகாதியா, திரு., முன்னாள் ஆளுநர் 23—24

இராகவானந்தம், திரு. எஸ்.—

ஆளுநர் உரை (தீ). 260, 528

இராசகுமார், திரு. மே. அ.—

மணப்பாறை நகரம். மாமுண்டி ஆற்றில் பாலம் 183—184

இராசாம்பாள், திருமதி தா.—

கெங்கவல்லி அரசினர் மேல்நிலைப் பள்ளி பெண்கள் பிரிவு 308—310

இராசாராயன், திரு. எஸ்.—

ஆளுநர் உரை (தீ). 516

ஊராட்சி எழுத்தர்கள் சங்கம். விண்ணப்பம் 441—442

இராசு, திரு. ஜே. எஸ்.—

ஆளுநர் உரை (தீ) 242—252, 358—359

மின்வாரிய ஊழியர்கள். 'தனிமையிடப்படி' 413—414

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

ஆளுநர் உரை (தீ) 223, 347, 349, 352—353, 354, 355

பாலசுப்பிரமணியம், திரு. ஏ., கக்கன்திரு. பி. (இ. தீ.) 22—23




## இ—தொடர்ச்சி.


இராமச்சந்திரன் திரு. ச.—

கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ.) 196, 197, 198, 199, 200

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 479, 480, 488

இராமச்சந்திரன் திரு. செஞ்சி ந.—

புதிய மின் திட்டங்கள் 157—160

இராமசாமி திரு. எஸ். என்.—

ஆளுநர் உரை (தீ). 536—538

திருச்செந்தூர் தாலூகா, பனை மரங்கள் மூலம் வருமானம் 168—169

இராமலிங்கம் திரு. செ.—

சென்னை, அரசின் சார்பில் 5 நட்சத்திர விடுதி கட்டுதல் 169—170

இளையபெருமாள் திரு. எல்.—

ஆளுநர் உரை (தீ) 100—105, 107—112, 543

விவசாய அலுவலர்கள் தேர்வும், நியமனமும் 176—179


## ஈ.


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு. பி.—

தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள், விருது வழங்கல் 304—307

மணிமுத்தாறு. பாபநாசம், சுற்றுலா மைய மாக்குதல் 424—425

மேல் மணிமுத்தாறு நீர் மின் திட்டம், தகவல்கள் 160—161

பக்கங்கள்.

உ.

உக்ம்சந்த் திரு. எஸ். டி.—

மதுராந்தகம் காகித ஆலை அமைத்தல் 327

உத்திராபதி திரு. பொ.—

ஆளுநர் உரை (தீ) 263. 540—543

கொருக்கை கால்நடைப் பண்ணை, விரிவாக்கம் 189

உமாநாத் திரு. ரா.—

ஆளுநர் உரை (தீ) 373—391, 517

கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ.) 191, 192, 194, 198, 200

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 462

வேளாங்கண்ணி மீனவர் குடியிருப்புகள். 297—298

உரிமைப் பிரச்னைகள்—

பார்க்க—தலைவர்

உள்ளாட்சிகள்—

ஆலோசனைக் குழுக்கள் 442—447

உள்ளாட்சிகள்—தொடர்ச்சி.

ஆற்காடு நகராட்சி, திரையரங்கம் மற்றும் சமூகக் கூடம் அமைத்தல். 439—440

ஊராட்சி எழுத்தர்கள் சங்கம், விண்ணப்பம். 441—442

கம்போஸ்ட் உரம், தேக்கநிலை. 185—186

சேடப்பட்டி ஒன்றியம், பாலர் பள்ளிகள் 56

பக்கங்கள்

ஏ

ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப் பெற்றவை 112—129, 278—280, 412—543

ஏற்றுமதி—இறக்குமதி—

மணல் (மோனோஸைட்) ஏற்றுமதி, குளச்சல் துறைமுகம் 326

க

கணேசன் திரு இ.—

மறைமலை நகர், பேருந்து வசதி 55

கருணாநிதி டாக்டர் மு.—

கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ.) 195-197, 199

கருணாநிதி டாக்டர் மு.— தொடர்ச்சி.

பால் கமிஷன் அறிக்கை, ஆங்கிலப் படிவம் (த.கோ.) 204

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 464, 465, 466, 468, 473, 474, 475, 476, 479, 484, 485, 486, 489, 490,

பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அலுவலர்கள்—

குஜிலியம்பாறை ஒன்றியம், பணியாளர்களுக்கு வீடுகள் 94

சுகாதார உதவியாளர்கள், நிர்வாகக் கட்டுப்பாடு 49

விவசாய அலுவலர்கள், தேர்வும் நியமனமும் 176—179

அழகர்சாமி, திரு. சோ.—

ஆளுநர் உரை (தீ) 229, 517

பாலசுப்பிரமணியம், திரு. ஏ., கக்கன், திரு. பி. (இ.தீ.) 12—13

பைங்கிணர் கிராமம், பட்டா வழங்குதல் 299—302

அன்பழகன், திரு. க.—

ஆளுநர் உரை (தீ.) 342, 344, 345, 346, 347, 348, 349, 350, 353—354, 377, 378

கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த. சோ.) 193—194, 202—203

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 462—463, 465—466, 468, 470, 471—472, 473, 474—475, 479, 868—447



பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அன்பழகன், திரு. தி.—தொடர்ச்சி.

ஆளுநர் உரை (தீ.) 93—98

பொது நிறுவனங்கள் குழு, அறிக்கை அளித்தல் 205

ஆ

ஆசிரியர்கள்—

தொழில் நுட்பக் கல்லூரி, விருது வழங்கல் 304—307

ஆண்டி அம்பலம், திரு. மெ.—

தீவிர கால் நடை வளர்ப்புத் திட்டங்கள் 56

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—

ஆளுநர் உரை, (தீ) 517, 518

பாலசுப்பிரமணியம், திரு. ஏ., கக்கன் திரு. பி. (இ. தீ.) 15—16

ஆதி திராவிடர் நலன்—

பள்ளிக் கட்டிடங்கள், செங்கம் தொகுதி 328

மாணவ, மாணவியர், உதவித் தொகை 329—330

ஆறுமுகம், திரு. எம்.—

ஆளுநர் உரை (தீ) 398—403

இ

இரங்கல் குறிப்புகள்—

சுப்பிரமணிய கவுண்டர், திரு. கே. எஸ்., முன்னாள் உறுப்பினர் 291—292

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

பாலசுப்பிரமணியம் திரு ஏ., கக்கன் திரு பி. (இ.தீ.) 7—8

கருப்பையா திரு இரா.—
ஆலோசனைக் குழுக்கள், உள்ளாட்சி மன்றங்கள். 442—447
ஆளுநர் உரை (தீ). 528

கல்லன் திரு கே.—
நீலகிரி மாவட்டம், தொழிற்பேட்டைகள் தொடங்குதல் 162—164

கல்விக் கூடங்கள்—
செங்கவல்லி அரசினர் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் பிரிவு. 308—310
சேலம் அரசு கலைக் கல்லூரி, மாலை நேர முது லை வகுப்புகள். 307—308
விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரி, முதுநிலைப் பட்டப் படிப்புகள். 310

கவன ஈர்ப்புகள்—
சென்னை, கொசு தொல்லை தடுப்பு 492—495
வேடசந்தூர், வெங்காயப் பயிர் பாதிப்பு. 489—492

காட்டுவளம்—
திருச்செந்தூர் தாலூகா, பனைமரங்கள் மூலம் வருமானம் 168—169

கால்நடைகள்—
கொருக்கை கால்நடைப் பண்ணை, விரிவாக்கம் 189



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

தீவிரத் திட்டம் 56
வறட்சிப் பகுதிகள், கால்நடைகளுக்கு குடிநீர் தொட்டிகள் 189

காளிமுத்து திரு கா—
வெங்காயப்பயிர் பாதிப்பு, வேடசந்தூர், (க.ஈ.அ.) 489—492

கிருஷ்ணமூர்த்தி திரு வி—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 335—460
கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ.) 190, 191, 199, 201
பால்கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ. பி.) 466, 467, 472, 481,

கிருஷ்ணமூர்த்தி திரு ரா.—
ஆளுநர் உரை, (தீ). 516
கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ) 190
விவசாயிகள் சங்கக் கோரிக்கைகள் 172—176

குடிநீர்—
மேல் நிலைத்தொட்டிகள், திருவள்ளூர் வட்டத்தில் அமைத்தல் 184—185

குப்புசாமி திரு கே—
பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து, (உ.பி.) 46

பக்கங்கள்

க—தொடர்ச்சி.


குப்புசாமி திரு செ—

ஆளுநர் உரை (தீ) 538—540

குமரி அனந்தன் திரு—

ஆளுநர் உரை (தீ). 517

கோதுமை, தமிழகத்தில் பயரிடுதல் 179—180

பாலசுப்பிரமணியம் திரு ஏ., கக்கன் திரு பி. (இ.தீ.) 13—14

குலசேகரபாண்டியன் திரு ந—

வாணியம்பாடி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பட்டா நிலம், 298—299

குழந்தைவேலு திரு ப—

ஆளுநர் உரை (தீ) 82, 84, 269, 344—345, 346

சென்னை, கொசுத் தொல்லை தடுப்பு(க.ஈ.அ.) 492—493 494—495

குழுக்கள்—

உரிமைக்குழு, அறிக்கை அளித்தல் 205

பொது நிறுவனங்கள் குழு, அறிக்கை அளித்தல் 205

கூட்டுறவு—

பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம், திருவில்லிப்புத்தூரில் அமைத்தல் 29—30




பக்கங்கள்.

க—தொடர்ச்சி.


கோபால், திரு. சி—

ஆளுநர் உரை (தீ) 394—397

மினி பஸ்கள், கிராமங்களில் செல்பவை 54—55

கோபாலகிருஷ்ணன், திரு. கா—

கொடைக்கானல் 'டம்டம்' பாறை, சாலை விபத்துக்கள் 182—183

லாரிகள், வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்துதல் 55

கோவேந்தன், திரு. எம். ஆர்—

பேராவூரணி மருத்துவமனை, சித்த மருத்துவப் பிரிவு 54

ச.

சங்கரய்யா, திரு. என்—

ஆளுநர் உரை (தீ) 230, 392—393

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 463—464

பாலசுப்பிரமணியம் திரு. ஏ., கக்கன் திரு. பி. (இ.தீ.) 10—12

சட்ட முன்வடிவுகள்—

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982;

ஆ.இ. 330,

அ.நி. 330—331,

கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவு, 1982: (அ.நி.) 331—334

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

சண்முகம் திரு. இரா—

திருத்தணி, பூண்டி, சுற்றுலாமையமாக்குதல் 428—429

திருவள்ளூர் வட்டம், மேல்நிலைத் தொட்டிகள் அமைத்தல் 184—188

சத்தியமூர்த்தி, திரு. வ—

முகவை மாவட்டம், நடமாடும் மருத்துவக் குழு 447—451

சந்திரசேகரன், திரு. ஏ—

ஆளுநர் உரை (தீ) 520

சந்தைகள்—

சேலம் மாவட்டம், பட்டுப்புழு விற்பனை நிலையம் 164—167

சமரசம், டாக்டர் கே—

ஆளுநர் உரை (தீ) 216—222, 224—228

கிருஷ்ணகிரி, பால்பவுடர் தொழிற்சாலை 167—168

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 466, 467—479

சாமிக்கண்ணு, திரு. தா—

செங்கம் தொகுதி, ஆதிதிராவிடர் நலப்பள்ளிக் கட்டிடங்கள் 328

சாலைகள்—

கொடைக்கானல் 'டம்டம்' பாறை, விபத்துக்கள் 182—183



பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

சாலைகள்—தொடர்ச்சி.

செங்கல்பட்டு, ஜி. எஸ். டி. ரோடு, மாற்றுவழிப் பாதை 437—438

சித்தன் திரு. என். எஸ். வி—

கப்பலூர், தொழிற்சாலைகள் 423—424

கப்பலூர், மின்சார உபநிலையம் நிறுவுதல் 29

சிவசாமி திரு. செ—

திருப்பாலைக்குடி ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை 447

வேலையற்ற விவசாயத் தொழிலாளர்கள், மானியம் 44—47

வைகை ஆறு, கால்வாய்களை சீரமைத்தல் 319—322

சிவப்பிரகாசம், திரு. சீ—

போக்குவரத்துக் கழகங்கள், தொழிலாளர்களின் குழந்தைகள், இலவசப் பயணம் 451—453

சிவராமன், திரு. எஸ்—

கோமுகி அணை, கல்வராயன் மலைப்பகுதி, சுற்றுலாத்தலங்களாக்குதல் 171—172

சிறைச்சாலைகள்—

மத்திய அரசின் உதவி 315—318

சின்னசாமி, திரு. எம்—

கரூர், ரயில்வே நிலையத்தருகில் உள்ள பாலம் 47—48

சின்னராசு திரு. மா—

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 461

| | பக்கங்கள். |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| சுந்தரராஜ் திரு. நா— | |
| ஆளுநர் உரை (தீ) | 106, 107, 235, 301—313 |
| கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ) | 929 |
| பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (ஒ.பி.) | 465, 482—483 |
| பாலசுப்பிரமணியம் திரு. ஏ., கக்கன் திரு.பி. (இ.தீ.) | 8—10 |
| சுப்பிரமணியன் திரு. உ— | |
| ஆளுநர் உரை (தீ). | 520 |
| சுப்பிரமணியன் திரு. கே. எம். எஸ்— | |
| கம்போஸ்ட் உரம், தேக்கநிலை | 185—186 |
| சுப்பிரமணியன் திரு. மா— | |
| வறட்சிப்பகுதிகள், கால்நடைகளுக்கு குடிநீர் தொட்டிகள் | 188 |
| சுற்றுலா— | |
| கோமுகி அணை, கல்வராயன் மலைப் பகுதி, சுற்றுலாத்தலங்களாக்குதல் | 171—172 |
| சென்னை, அரசின் சார்பில் 5 நட்சத்திர விடுதி கட்டுதல் | 169—170 |
| திருத்தணி, பூண்டி, சுற்றுலாமையமாக்குதல் | 428—429 |
| மணிமுத்தாறு, பாபநாசம் சுற்றுலா மையமாக்குதல் | 424—425 |
| செம்மலை திரு. செ— | |
| ஆளுநர் உரை (தீ) | 252—257 |
| எண்ணெய் வித்துக்கள், உற்பத்தி | 41—44 |





| | பக்கங்கள் |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| செம்மலை திரு. செ—தொடர்ச்சி. | |
| சேலம் மாவட்டம், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைத்தல் | 425—428 |
| சேலம் மாவட்டம், பட்டுப்புழு விற்பனை நிலையம் | 164—167 |
| பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதை குறித்து (உ.பி.) | 461 |
| மின்கட்டணம், ஆய்வுக் குழு அறிக்கை | 25—28 |
| செல்லமுத்து திரு. எம்.— | |
| ஆளுநர் உரை (தீ) | 525—530 |
| சேதுராமன் திரு. ஏ. எம்.— | |
| ஆற்காடு நகராட்சி, திரையரங்கம் மற்றும் சமூகக் கூடம் அமைத்தல் | 439—440 |
| சோமசுந்தரம் திரு. எஸ். டி— | |
| ஆளுநர் உரை (தீ) | 105—106 |
| சோமு, திரு. என். வி. என் | |
| ஆளுநர் உரை (தீ) | 336—344, 347—348, 350—352, 355—356 |
| சௌந்திரராசன் திரு. கே— | |
| ஆளுநர் உரை (தீ) | 521—525 |
| சௌரிராஜன் டாக்டர் கே— | |
| ஆளுநர் உரை (தீ) | 404—412 |
| சென்னை, கொசுத் தொல்லை தடுப்பு (க.ஈ.) | 402, 492—493, 494 |

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சௌந்திரராஜன் டாக்டர் கே—தொடர்ச்சி.

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதை குறித்து (உ.பி.) 486

"த"

தங்கமணி திரு. கே. எம்—

ஆளுநர் உரை (தீ) 518—519

விக்ரவாண்டி, நில ஆக்கிரமிப்புகள் 302—304

தலைவர்—

அறிவிப்புகள்—

பேரவை அலுவல்கள் 99—100

மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவை தேர்தல் 56—57

மாற்றுத் தலைவர்கள் நியமனம் 57

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—

ஒழுங்கு—

உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது முறையல்ல (ஆ.உ.) 222

உறுப்பினர்கள் தலைவரை பார்த்துத்தான் பேச வேண்டும். தங்களுக்குள் நேரிடையாக விவாதத்தை வைத்துக்கொள்ளக் கூடாது (ஆ.உ.) 234

ஒரே நேரத்தில் பல உறுப்பினர்கள் எழுந்து பேசுவது சரியல்ல (ஆ.உ.) 346

குற்றச்சாட்டு—

கேள்வி நேரத்தில் தவிர்ப்பது நல்லது (வி.வி.) 444

குறுக்கீடு—

ஒரு உறுப்பினர் பேசும்போது இடையே நினைத்த போதெல்லாம் குறுக்கிடக் கூடாது. (ஆ.உ.) 231



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—

அவசரமான பிரச்னைகளை அவையில் எழுப்புவதற்கு உறுப்பினர்களுக்கு அடிப்படை உரிமை இருப்பினும் நேரத்தைப் பொறுத்துத்தான் அனுமதி அளிக்க வேண்டியிருக்கிறது. (ஒ.பி.) 335

ஆளுநர் உரை மீதான விவாதம் நடக்கும் போது எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பேசுவதற்கு வாய்ப்பிருப்பதால் ஒத்திவைப்பு, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஆகியவை பொதுவாக எடுத்துக் கொள்ளப் பெறுவதில்லை என்ற மரபு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், ஏதாவது விசேஷமான பிரச்னைகள் திடீரென்று வருமானால் பேரவைத் தலைவரின் 'டிஸ்கிரிஷன்' படிதான் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. (ஒ.பி.) 457—461

சட்டமுன்வடிவின் அறிமுக நிலையில் அதை எதிர்ப்பதாக இருந்தால் மட்டுமே கருத்துக் கூறலாம் (அ.ச.மு.) 331

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப் பெற்றது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மீது உறுப்பினர்கள் அளித்த உரிமைப் பிரச்னை அறிவிக்கைகளை அவையில் படிக்காமலேயே, அது குறித்து விளக்கம் அளிக்க ஒரு உறுப்பினரை மட்டும் பேரவைத் தலைவர் அழைத்தார். அந்த அறிவிக்கைகளைப் பேரவையில் படித்த பின்னரே அப்பொருள் குறித்து பேரவை அறிகிறது என்றும், அதன்பின்னர்தான் அறிவிக்கை கொடுத்த உறுப்பினர்கள் அதன்மீது விளக்கம் அளிக்கலாம் என்றும் சில உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

சிறிது நேர விவாதத்திற்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆறு அறிவிக்கைகளின் நகல்கள் அனுப்பப் பெற்று அவற்றிற்கு மொத்தமாக அவர் பதில் அளித்திருப்பதால், அந்த அறிவிக்கைகளில் குறிப்பிட்ட ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வதாக இருந்தால், அதை மட்டும் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி, பதில் பெற்று, பின்னர் அப்பிரச்னையை அவையில் எடுத்துக் கொள்ளலாம் என எதிர்க்கட்சித் தலைவரும், அவை முன்னவரும் கூறியதற்கு இணங்க பிரச்னை அத்துடன் நிறுத்திக் கொள்ளப் பெற்றது. (உ.பி.) 461—489, 490

பேரவை முன் வைக்கப் பெற்றுள்ள நீதிபதி பால் கமிஷன் அறிக்கை மீது விவாதம் வேண்டும் எனக் கோரப்பெற்றபோது, அலுவல் ஆய்வுக் குழுவின் முன் வைத்து, தலைவர்களையும், அரசையும் கலந்து, அது பற்றி முடிவெடுக்கப் பெறும் எனத் தலைவர் குறிப்புரைத்தார். (த.கோ.) 58

பேசும் முறை—

மத்திய அரசைப் பற்றி கொள்கை அடிப்படையில் பேசலாம். தனிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டியதில்லை. (ஆ.உ.) 230

விசாரணையில் இருக்கும் அல்லது வழக்கு மன்றத்தில் இருக்கும் பொருள் குறித்து விவாதிக்கக் கூடாது (ஆ.உ.) 348—349



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்.

ஒரே நேரத்தில் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாமே தவிர, பட்டியல் போட்டு கேட்டால் பதிலளிக்க இயலாது (து.வி.) 300—301

கேள்வி சுருக்கமாக இருத்தல் வேண்டும்; விளக்கம் தேவையில்லை. (து.வி.) 175, 295

கேள்வி நேரத்தில் சர்ச்சைக்குரிய பிரச்னைகளை எழுப்பக் கூடாது. மூலக் கேள்வியையொட்டி கேட்கப்பெற வேண்டும். (து.வி.) 37

தனுக்கோடித் தேவர், திரு. கே.—

மலட்டாறு திட்டம் 318—319

முதுகுளத்தூர் தொகுதி, நூறு குழாய்த் திட்டம் 181—182

தாமரைக்கனி, திரு. இரா.—

எண்ணெய் வித்துக்கள், உற்பத்தி 41—44

கேரளாவிலிருந்து மின்சாரம் பெறுதல் 161—162

திருவில்லிப்புத்தூர், பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் 29—30

நாகர்கோவில், அமரர் ஜீவாவுக்கு சிலை 429—430

மீன்பிடி கப்பல்கள் வாங்கல் 292—297

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ.) 201

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதை குறித்து (உ.பி.) 469, 472, 474, 475, 476, 477, 486

திருவேங்கடம், திரு. பெ. சு.—

வள்ளுவர் கோட்டம் (சென்னை), வருமானம் 35—37

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

திருவேங்கடம், திரு. பெ. சு.—தொடர்ச்சி.

தீர்மானம்—
ஆளுநர் உரை, நன்றி நவிலல் 59—112, 206—277, 336—412, 495—543

துரைமுருகன், திரு.—
ஆளுநர் உரை (தீ.) 74—93, 219, 220, 221, 222, 223, 231, 232
உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 334—335, 460—461
பால் கமிஷன் அறிக்கை, ஆங்கிலப் படிவம் (த.கோ.) 203—204
பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 481—482, 485, 486, 488, 490

துரைராஜ், திரு. பி.—
ஆளுநர் உரை (தீ.) 263—266

தொழில்கள்—
நீலகிரி மாவட்டம், தொழிற்பேட்டைகள் அமைத்தல் 162—164

தொழிற்சாலைகள்—
கப்பலூர் 423—424
காகித ஆலை, மதுராந்தகம் 327
சந்தனத் தைலத் தொழிற்சாலை 31—35
தீப்பெட்டி, சேலம் மாவட்டம் 425—428
பால்பவுடர் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி 167—168

தோட்டப் பயிர்கள்—
கொக்கோ, ஊக்கமளித்தல் 433—434





பக்கங்கள்

"ந"

நரசிம்மன், திரு. பூ. மு.—
ஆளுநர் உரை (தீ.) 366—369

நல்லப்பன், திரு. தி. கா.—
சென்னிமலை, நொய்யல் ஆற்றில் அணை 322—324

நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர்—
ஆளுநர் உரை (தீ) 266—270

நிலங்கள்—
ஆக்கிரமிப்புகள், விக்கிரவாண்டி 302—304
பட்டா வழங்குதல், பைங்கிணர் கிராமம் 299—302
வாணியம்பாடி, வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோருக்குப் பட்டா நிலம் 298—299

நினைவுச் சின்னங்கள்—
நாகர்கோவில், அமரர் ஜீவாவுக்கு சிலை 429—430
வள்ளுவர் கோட்டம், (சென்னை.) வருமானம் 35—37

நீக்கங்கள்—
221, 229, 230, 231, 248

நீதிமன்றங்கள்—
அதிகாரிகள், நியமனம் 311—315
ஒருங்கிணைப்பு 310—311

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—
எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 330—331
கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 331—332
கோட்டைப்பகுதியில் காவல் கண்காணிப்பு (த.கோ.) 193, 195, 197, 201, 202

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நெடுஞ்செழியன் டாக்டர் இரா.—தொடர்ச்சி.

| | |
|---|---|
| பால்கமிஷன் அறிக்கை, ஆங்கிலப்படிவம் (த.கோ.) | 204 |
| பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) | 467, 468, 471, 482, 489 |
| பாலசுப்பிரமணியம், திரு. ஏ.; கக்கன், திரு. பி. (இ.தீ.) | 3—7 |

நெடுமாறன், திரு. ப.—

| | |
|---|---|
| ஆளுநர் உரை (தீ) | 378, 504, 516, 517, 518 |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) | 190 |
| பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) | 477—478 |
| பாலசுப்பிரமணியம், திரு. ஏ.; கக்கன், திரு. பி. (இ.தீ.) | 16—19 |
| மணப்பாறை, மாமுண்டி ஆற்றில் பாலம் | 183—184 |
| மதுரை மாவட்டம், வெற்றிலை கொடிக்கால் வாடல் நோய் | 430—433 |

ப.

பணப்பயிர்கள்—

| | |
|---|---|
| மதுரை மாவட்டம், வெற்றிலை கொடிக்கால் வாடல் நோய் | 430—433 |
| வெங்காயப் பயிர் பாதிப்பு, வேடசந்தூர் (க.ஈ.) | 489—492 |

பம்மல் நல்லதம்பி, திரு.—

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர், உதவித் தொகை | 329—330 |



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பலராமன் திரு. இல—

| | |
|---|---|
| ஆளுநர் உரை (தீ) | 51[illegible], 52[illegible] |
| நகர்ப் புறக் கழிவு நீர், பயன் படுத்துதல் | 37—3[illegible] |

பழனிமுத்து திரு சி—

| | |
|---|---|
| ஆளுநர் உரை (தீ) | 362—3[illegible] |

பழனியப்பன், திரு. கு. பா—

| | |
|---|---|
| விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரி, முதுநிலைப் பட்டப்படிப்புகள் | 31[illegible] |

பழனிவேல் திரு. என்—

| | |
|---|---|
| அரசுப் பண்ணைகள், உற்பத்தி | 39—41 |
| உரங்கள், விலை குறைப்பு, | 435—436 |
| சந்தனத்தைலத் தொழிற்சாலை | 31—3[illegible] |

பாசனம்—

| | |
|---|---|
| நொய்யல் ஆற்றில் அணை, சென்னிமலை | 322—324 |
| மலட்டாறு திட்டம் | 318—319 |
| முதுகுளத்தூர் தொகுதி, நூறுகுழாய்த் திட்டம் | 181—182 |
| வைகை ஆறு, கால்வாய்களை சீரமைத்தல் | 319—322 |

பாண்டியன் திரு பி. எச்—

| | |
|---|---|
| உரிமைக் குழு, அறிக்கை அளித்தல் | 205 |

பாரமலை திரு க—

| | |
|---|---|
| ஆளுநர் உரை (தீ) | 270—277 |

பால்வளம்—

| | |
|---|---|
| பால்குளிரூட்டும் நிலையம், கொமாரபாளையம் | 30—31 |
| பால் பவுடர் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி | 167—168 |

பாலகிருஷ்ணன், திரு க—

| | |
|---|---|
| சென்னிமலை, நொய்யல் ஆற்றில் அணை | 322—324 |

பக்கங்கள்

ப—தொடர்ச்சி,

பாலங்கள்—

கரூர், ரயில்வே நிலையத்தருகில் உள்ளதைப் புதுப்பித்தல் 47—48

மணப்பாறை நகரம். மாமுண்டி ஆற்றில் பாலம் 183—184

பாலசுப்பிரமணியன் திரு வேடசந்தூர் வி.பி.—

ஆளுநர் உரை (தீ) 243

குஜிலியம்பாறை ஒன்றியம், பணியாளர்களுக்கு வீடுகள் — 49

நீதித்துறை அதிகாரிகள் நியமனம், போட்டித் தேர்வு 311—315

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 461—462, 467

மின்சார மோட்டார்கள், தரம் 421—423

வேடசந்தூர், வெங்காயப் பயிர் பாதிப்பு (க.ஈ.) 489,491,492

பாலன் திரு சு—

ஆளுநர் உரை, (தீ). 518

பிரபாகரன் திரு ஜே. சி. டி.—

ஆளுநர் உரை (தீ) 59—74

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 461

புருஷோத்தமன் திரு து—

எண்ணெய் வித்துக்கள், உற்பத்தி 41—44

சிறைச்சாலைகள், மத்திய அரசின் உதவி. 315—318



பக்கங்கள்

ப—தொடர்ச்சி,

பூங்காவனம், திரு. என். ஏ—

பைங்கிணர் கிராமம், பட்டா வழங்குதல் 299—303

பெரியசாமி, திரு, ரா—

ஆளுநர் உரை (தீ) 257—263

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 458

பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ்—

சர்க்கரை, கலால் வரி 324—325

பொன்னுரங்கம், திரு. ப—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 457

கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவு 1982, 331—332

பொன்னையன் திரு. சி—

ஆளுநர் உரை, (தீ) 339, 342 343

கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவு, 1992 331, 332—333, 334

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டது குறித்து (உ.பி.) 470, 472—474, 475, 478 484—485

போக்குவரத்து—

ஆட்டோ ரிக்ஷாக்கள், கோவை 455—457

கழகத்தொழிலாளர்கள் குழந்தைகள், இலவசப் பயணம் 451—453

நகரப் பேருந்து, தேவகோட்டை—கன்னங்குடி 453—454

மறைமலை நகர், பேருந்து வசதி 55

மினி பஸ்கள், கிராமங்களில் செல்பவை 54—55

லாரிகள், வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தல் 55

ம


மக்கள் நல்வாழ்வு—

சென்னை, கொசுத் தொல்லை தடுப்பு (க. ஈ.) 492—495

மணி திரு. டி—

ஆளுநர் உரை (தீ) 516—517

குளச்சல் துறைமுகம், மணல் (மோனோஸைட்) ஏற்றுமதி 325—326

மணிமாறன் திரு. ஆர்—

ஆளுநர் உரை (தீ) 220, 221, 222

மருத்துவம்—

நடமாடும் மருத்துவக் குழு, முகவை மாவட்டம் 447—451

மருத்துவ மனைகள்—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நோயாளிகள் உணவுச் செலவு 50—53

திருப்பாலை ஊராட்சி ஒன்றியம் 447

பேராவூரணி, சித்த மருத்துவப் பிரிவு 54

மின்சாரம்—

கட்டணம், ஆய்வுக் குழு அறிக்கை 25—28

கப்பலூர், உப நிலையம் திறவுதல் 29

கேரளாவிலிருந்து பெறுதல் 161—161

புதிய திட்டங்கள் 157—160

மின்வாரியம், ஊழியர்களுக்கு தனிமையிடப்படி 413—414

மின்வாரியம், விளக்குகள் தயாரித்தல் 415—422

மேல் மணிமுத்தாறு நீர்மின் திட்டம், தகவல்கள் 160—161






ம—தொடர்ச்சி.


மின்சாரம்—தொடர்ச்சி.

மோட்டார்கள், தரம் 421—423

மீனளம்—

மீன்பிடி கப்பல்கள் வாங்குதல் 292—297

முகமது இஸ்மாயில், திரு. பி.—

ஆளுநர் உரை (தீ) 519 520, 530—536

முத்துக்கிருஷ்ணன் திரு. சு.—

மின்வாரியம், விளக்குகள் தயாரித்தல் 415—421

முத்தையா திரு. இரா.—

சேடப்பட்டி ஒன்றியம், பாலர் பள்ளி 56

மூர்த்தி திரு. ஜி.—

பாலசுப்பிரமணியம் திரு. ஏ. கக்கன் திரு. பி.— (இ. தீ.) 20—22

ரகுமான்கான் திரு. அ.—

ஆளுநர் உரை (தீ.) 226

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) 458—459, 460—461

கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவு 1982 333

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.

ரகுமான்கான் திரு. அ.—தொடர்ச்சி.

பால் கமிஷன் அறிக்கை (த. கோ.) 58

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ. பி.) 483—481

ரங்கசாமி திரு. ஆர்.—

கோமாரப்பாளையம் பால் குளிரூட்டும் நிலையம் 30—31

ரமணி திரு. கு.—

ஆளுநர் உரை (தீ) 206—216

கோவை, ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் பொருத்தப்படாமை 455—457

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நோயாளிகள் உணவுச் செலவு 50—53

ராஜமாணிக்கம் திரு. எம். கே.—

வறட்சிப் பகுதிகள், கால்நடைகளுக்கு குடிநீர் தொட்டிகள் 188

வ

வரிகள்—

சர்க்கரை, கலால் வரி 324—325

விசயலட்சுமி செல்வி ப.—

சேலம் அரசு கலைக் கல்லூரி, மாலைநேர முதுகலை வகுப்புகள் 307—308



பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வின்சென்ட் திரு. மி.—

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டது குறித்து (உ.பி.) 461

வில்வநாதன் திரு. கோ.—

கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவு 1982 331

விஜயபாலன் திரு. என்.—

தஞ்சை மாவட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தோர் 186—187

விஜயராகவன் திரு. பொ.—

ஆளுநர் உரை (தீ.) 519—520

சந்தனத் தைலத் தொழிற்சாலை 31—35

பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 488

பாலசுப்ரமணியம் திரு. ஏ..) கக்கன் திரு. பி. (இ.நி 19—20

வீட்டு வசதி—

மீனவர், வேளாங்கண்ணி 297—298

வெங்கட சுப்பிரமணியம், திரு. ப.—

ஆளுநர் உரை, (தீ) 369—373

நீதிமன்றங்கள், ஒருங்கிணைப்பு 310—311

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வேணுகோபால் திரு. த.—

ஆளுநர் உரை (தீ) 495—501

கொக்கோ பயிர், ஊக்கமளித்தல் 433—434

மின்வாரியம், விளக்குகள் தயாரித்தல் 415—421

வேலைவாய்ப்பு—

உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தோர், தஞ்சை மாவட்டம். 186—187

வேளாண்மை—

அரசுப் பண்ணைகள், உற்பத்தி 39—41

இடு பொருட்கள், விலை குறைப்பு 435—436

எண்ணெய் வித்துக்கள், உற்பத்தி 41—44

கோதுமை, தமிழகத்தில் பயிரிடுதல் 179—180

நகர்ப்புற கழிவுநீர், பயன்படுத்துதல் 37—39

விவசாயிகள் சங்க கோரிக்கைகள் 172—176

வேலையற்ற தொழிலாளர்கள், மானியம் 44—47

ஜ

ஜெகதீசன், திரு. ஆனூர் பு. கோ.—

செங்கல்பட்டு, ஜி.எஸ்.டி. ரோடு, மாற்று வழிப் பாதை 437—438

ஜெயராமன் திரு. வே. இரா.—

ஆளுநர் உரை (தீ) 238—242



பக்கங்கள்

ஹ

ஹ்ராஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி.—

ஆளுநர் உரை (தீ) 234, 378, 382

பால்கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைக் குறித்து (உ.பி.) 468—474

ஹேமச்சந்திரன், திரு. ஜே.—

ஆளுநர் உரை (தீ) 516

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 457

குளச்சல் துறைமுகம், மணல் (மோணோஸைட்) ஏற்றுமதி 325—326

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காம் கூட்டத் தொடர்

செவ்வாய்க்கிழமை, 1982 பிப்ரவரி 2

தை 20, துன்மதி-திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது இன்றேல் புண் என்று உணரப்படும்.''

ஒருவனுடைய கண்ணிற்கு அழகு தரும் அணிகலன் கருணை நிறைந்த நோக்கமாகும். இந்த அணிகலனைப் பெறாத கண்கள் புண் என்றே கொள்ளப்படும்.

### 1. இரங்கற் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். பக்கிரிசாமி பிள்ளை, திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர், முன்னாள் அமைச்சரும் மேலவை உறுப்பினருமான டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் 7—11—1981 ஆம் தேதியன்றும், திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர் அவர்கள் 22—11—1981 ஆம் தேதியன்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் அவர்கள் 17—10—1981 அன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும் இரு முறை சென்னை நகரம்-பெரம்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இவர் பல்வேறு தொழிற்சங்கங்களில் பணிபுரிந்து தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தார்.

திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள்.

டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் அவர்கள் சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, 1—4—1952 முதல் 30—9—1953 வரை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 10—4—1952 முதல் 30—9—1953 வரை திரு இராஜாஜி அவர்களின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

**(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம், முன்னாள் அமைச்சரும், உறுப்பினருமான திரு. கக்கன் ஆகியோர் மறைவு (தீ)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்தவரும் பொது உடைமை (மார்க்சிஸ்ட்) கட்சி பொலிட்பீரோ உறுப்பினராக இருந்தவரும், ஒரு சிறந்த தொழிற்சங்கவாதியுமான திரு. ஏ. பாலசுப்ரமனியம் அவர்கள் 5—9—1981 அன்று காலமான செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், பத்து ஆண்டுகள் தமிழ்நாட்டில் அமைச்சராக இருந்தவருமான திரு. கக்கன் அவர்கள் 23—12—1981 அன்று மறைந்ததை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானங்களை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. ஏ. பாலசுப்பிரமனியம் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தையும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. கக்கன் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தையும் ஒரு சேர இந்த அவை முன் கொண்டுவருகின்ற முறையில் நான் கீழ்க்கண்ட தீர்மானங்களை மொழிகிறேன்.

"இப்பேரவையில் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையில் மதுரை மாவட்டம், திண்டுக்கல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஏ. பாலசுப்பிரமணியம் அவர்கள் 5—9—1981 நாளன்று இறந்தார்கள். அன்னார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலச் செயலாளராக 1971-லிருந்து இருந்து வந்தார்கள். அக் கட்சியின் அரசியல் தலைமை குழு (பொலிட்டிபீரோ) உறுப்பினராகவும் 1978லிருந்து சி.ஐ.டி.யூ. தொழிற்சங்க நிர்வாகிகளிலே ஒருவராகவும் 1967 முதல் 1971 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் தலைவராகவும் மற்றும் பல்வேறு தொழிற்சங்கங்களின் தொழிலாளர்களுக்காகவும் தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

அன்னார் மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது."

"அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகவும், 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1952-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டுவரை அரியலூர் தொகுதியிலிருந்து தேர்தெடுக்கப்பெற்று, நாடாளுமன்ற உறுப்பினராகவும், மேலும், 1957-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை மேலூர் (செ. வ.) தொகுதியிலிருந்தும், 1962-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை சமயநல்லூர் (செ. வ.) தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றும், 1957-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை திரு. காமராஜ் மற்றும் திரு. பக்தவத்சலம் ஆகியோர் அமைச்சரவைகளில் அமைச்சராகவும் பணியாற்றிய திரு. பி. கக்கன் அவர்கள் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டவராவார். அன்னார் 23—12—1981 ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப் பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 2

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களில்
ஒருவராக விளங்கிய திரு. ஏ. பாலசுப்பிரமணியம் அவர்கள்
நீண்ட பெருங்காலமாகவே கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தன்னை
ஒப்படைத்து, அதனுடைய கொள்கைகள், கோட்பாடுகளுக்காக
அரும்பாடுபட்டு மிகவும் உழைத்த ஒரு பெரியவர் ஆவார்.
எதிலேயும் தெளிவான கொள்கையைக் கொண்டு எந்தவொரு
செயலைச் செய்வதாக இருந்தாலும் திட்டவட்டமாகவும்,
தெளிவாகவும் அவற்றிலே ஈடுபடுகின்ற திண்மை உள்ளம்
படைத்த ஒருவராக பாலசுப்பிரமணியம் அவர்கள் திகழ்ந்தார்கள்.
இந்தச் சட்ட மன்றப் பேரவையினுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியினுடைய பேரவைக் கட்சித் தலைவராக விளங்கி, இந்த
அவையினுடைய பணிகள் சிறப்புற நடைபெறுவதற்கு மிகவும்
நல்ல முறையில் உதவி செய்தார்கள். அவர்கள் எந்தவொரு பிரச்
னையைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் உணர்ச்சிவயப்
படாமலும், ஆனால் தெளிவாகவும், திட்பமாகவும் தாம்
கொண்ட கருத்துக்களை எடுத்து வைப்பதிலே ஆழ்ந்த தன்மையி
னுடைய அடிப்படையில் எடுத்து வைக்கின்ற நல்ல பாங்கு
களைப் படைத்தவர் ஆவார்கள்.

தன் வாழ்நாள் முழுதையும் கொள்கைக்காக ஒப்படைத்து
அவ்வப்பொழுது உடல் நலிவு ஏற்பட்ட நிலையிலேயும்கூட
பொதுத் தொண்டு புரிவதை எந்த நேரத்திலும் மறந்து விடாமல்
தன்னுடைய உடல் நலத்தைவிட பொதுத் தொண்டுதான் மேல்
என்று கருதி, தன்னுடைய உடல் நலம் பல சமயங்களிலே பாதிக்
கப்பட்டிருந்த நேரத்திலும் தொண்டாற்றிக் கொண்டிருந்தார்
என்பதை அவரைப்பற்றி நன்கறிந்தவர்கள் மிகவும் உணரு
வார்கள்.

அந்த அளவிலே பொது வாழ்வுக்குச் சிறந்த எடுத்துக்
காட்டாக விளங்கி, தாம் எந்தக் கட்சியிலேயிருந்து பாடுபடு
கிறோமோ அந்தக் கட்சியினுடைய கொள்கைகளுக்கு எவ்வளவு
இடுக்கண்கள் வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் உள்ள
உறுதியோடு அவற்றை நிறைவேற்றுவதிலே ஈடுபாடும் ஆர்வ
மும் செலுத்தி வந்தவர் அவர்கள்.

அப்படிப்பட்டவருடைய மறைவு குறித்து இந்தப் பேரவை
தன் இரங்கலைத் தெரிவித்து அன்னாரைப் பிரிந்து வருந்தும்
குடும்பங்களுக்கு இந்தப் பேரவை ஆழ்ந்த அனுதாபத்தைப்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, அண்மையிலே நாமெல்லாம் வருந்தத்
தக்க அளவிற்கு, காங்கிரஸ் கட்சியிலே முக்கிய தலைவர்களிலே
ஒருவராகத் திகழ்ந்த திரு. கக்கன் அவர்களுடைய மறைவு
அமைந்திருக்கிறது.



1982 பிப்ரவரி 2] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

திரு. கக்கன் அவர்கள் 1909-ஆம் ஆண்டு பிறந்து 72 ஆண்டு
கள் வாழ்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் காங்கிரஸ் தலைவர்
களிலே முக்கியமான ஒருவராகத் திகழ்ந்தவர்கள். அவர்க
ளுடைய பெயர் தமிழகத்தினுடைய எல்லாத் தொகுதிகளி
லேயும் உள்ள மக்களுக்கு நன்கு அறிமுகமான பெயராக
விளங்கிற்று.

அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பிலே பிறந்து அந்த வகுப்பினர்
பல்வேறு வகைகளிலேயும் உயர்வு பெற வேண்டுமென்று தம்
வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு, அந்த வகுப்பினர் எல்லா
வசதிகளையும் தகுதிகளையும் பெறுவதற்கு, அரும்பாடு பட்டு
வந்தவர்கள் ஆவார்கள்.

அவர்கள் 7-வது வகுப்பிலேயிருந்து 10-வது வகுப்பு வரை
யிலும் மதுரை பசுமலை உயர்நிலைப் பள்ளியிலே படித்தவர்கள்.
அப்பொழுது அமெரிக்க மிஷன் அவருக்கு உதவித் தொகையாக
18 ரூபாய் வழங்கியது. அந்த 18 ரூபாயை வைத்து பத்தாவது
வரையிலும் அவர் படித்தார் என்றும், அந்த 18 ரூபாயை அவருக்கு
உதவித் தொகையாக அமெரிக்க மிஷன் வழங்குவதன் காரண
மாக அங்குள்ள அந்த நிறுவனத்தைச் சார்ந்த ஒரு வேலையைப்
பகுதி நேர வேலையாகச் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையின்
பேரில் அந்த 18 ரூபாயை வாங்கிக் கொண்டது மட்டுமல்லாமல்,
அந்த அமெரிக்க மிஷன் நிறுவனத்திலே ஒரு பகுதி நேர வேலை
யிலே பணியாற்றிப் பாடுபட்டு விளங்குவதற்குச் சிறந்த எடுத்
துக்காட்டாக திகழ்ந்தார்கள்.

இருபது வயது முதல் இறந்துபடுகின்ற வரையிலும் அரசிய
லிலே ஈடுபட்டு அவர் பொது வாழ்க்கையிலே தம்முடைய முழுக்
கவனத்தையும் செலுத்தி வந்தவர்கள் ஆவார்கள். அவர்கள்
அரசியல் நிர்ணய சபையினுடைய உறுப்பினராகவும் இருந்
தார்கள். அரியலூர் தொகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு
நாடாளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்தார்கள். அதற்குப்
பிறகு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்
தெடுக்கப்பட்டு, இந்தச் சட்டமன்றப் பேரவையிலே அமைச்சர்
பொறுப்பையும் வகித்தவர்கள் ஆவார்கள்.

(முற்பகல் 9-10).

அவர் பொது வாழ்க்கையிலே சிறந்த எடுத்துக்காட்டாக
விளங்கினார்; எளிமையாக வாழ்ந்தார்; அமைதியானவர்.
ஆரவாரத்திற்கு இடமில்லாமல், படோடோபத்திற்கு இட
மில்லாமல், மிகவும் அமைதியாக தன்னுடைய அரசியல்
வாழ்க்கையை நடத்திய தூய்மையானவர் என்று கருதப்படுகிற
அளவுக்கு மற்றவர்களால் பாராட்டப்பட்டவர் ஆவார்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 2

பெருந்தலைவர் காமராஜருடைய நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் உரியவராகக் கடைசி வரையிலே திகழ்ந்து, அவருக்கு உறுதுணையாக நின்று பணியாற்றியவர் என்று பெயர் பெற்றவர். காமராஜருடைய தலைமையில், அவர் எதைச் சொல்லுகிறாரோ, எதைச் செய்ய விரும்புகிறாரோ, அதில் கடுகளவும் மீறாமல் செய்ய வேண்டுமென்ற அளவுக்குத் தன்னை முழுவதும் ஒரு அணுக்குத் தொண்டனாக அமைத்துக் கொண்டு, அந்த அளவிலே அரும் தொண்டாற்றியவர் ஆவார்கள். அந்த வகையிலே அவர் சிறந்த பணிகளைத் தமிழகத்திற்கு ஆற்றியிருக்கிறார் என்பது மட்டுமல்லாமல், அரசியலிலே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார் என்பது மட்டுமல்லாமல் 1942ஆம் ஆண்டு சுதந்திர போராட்ட காலத்தில் 2 ஆண்டுக்காலம் சிறை வாழ்வை ஏற்கும் அளவுக்குத் தியாகம் புரிந்தவர். அவர் மிக எளிமையாக, மிக அடக்கமாக, ஆரவாரத்திற்கு இடம் இல்லாமல், யாரிடத்திலும் பணிவு காட்டுகின்ற பண்போடு, அவரைப் பார்க்கச் சென்றவர் சிறியவராக இருந்தாலும் சரி, பெரியவராக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர் அல்லாதவராக இருந்தாலும் சரி, அவரிடத்திலே சென்று முறையிடும்போது. சொல்லப்படுபவற்றை அமைதியாகக் கேட்டு, அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்குத் தம்மால் ஆன அளவுக்கு அவர் அமைச்சராக இருந்த காலத்தில் பணியாற்றியவர் என்பதை நானே அறிவேன். அந்த அளவுக்குச் சிறந்த பண்பாட்டுக்குரியவரும், சிறந்த ஆற்றலுக்குரியவருமான அவர் மறைந்தது நமக்கெல்லாம் பேரிழைப்புக்குரிய ஒன்றாகும்.

அது மட்டுமல்லாமல், அவர் வாழ்க்கையிலே தன்னைப் பற்றி கவலைப்படாமல், தன்னுடைய குடும்பத்தைப் பற்றி கவலைப்படாமல், கொள்கையைப் பற்றியே எண்ணித் திகழ்ந்த காரணத்தால், வாழ்க்கையில் இடர்படுகிறார் என்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருக்கு ஒரு நிம்மதியான வாழ்வு கிடைக்க வேண்டும், அவர் ஆற்றிய அரசியல் பணிகளுக்காகவும், பொதுப் பணிகளுக்காகவும் நாம் நன்றிக் கடன் ஆற்ற வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில், வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் அவர் அமைதியான வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற அடிப்படையில், அதற்கு எந்த இடர்பாடும் ஏற்படக்கூடாது, எந்தக் கவலையும் அவரைத் தாக்கக் கூடாது என்று கருதி, 2—1—1979 ஆம் நாள் முதல் அவருக்கு மாதத்திற்கு ரூ. 500 ஊதியம் அளித்தார். அதோடு மட்டுமல்லாமல், அவர் குடியிருந்த வீட்டுக்கு வாடகையை அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற அளவில், அவர் அந்த வீட்டிலேயே இலவசமாக வாழ வேண்டுமென்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதோடு 'மட்டுமல்லாமல், அமைச்சர்களுக்கு மருத்துவ வசதிகள் எந்த அளவுக்கு அளிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு அவருக்கும் மருத்துவ வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.



1982 பிப்ரவரி 2] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அது மட்டுமல்லாமல், தமிழக அரசின் சார்பாக இருக்கிற போக்குவரத்துச் சாதனங்களின் மூலமாக, தமிழகம் முழுவதும் எந்த இடத்திற்கும் அவர்கள் இலவசமாக சென்று வரலாம் என்று சலுகை அளித்தது கூட, ஓரளவுக்கு அவருக்கு அமைதி ஏற்பட வேண்டும், நிம்மதி ஏற்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான். இருந்தாலும் அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சிறந்த சேவை செய்வார்கள் என்று எதிர்பார்த்தாலும், அவர் தன்னுடைய 72-வது வயதில் மறைந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.. அவருடைய மறைவானது அரசியலிலே ஒரு பேரிழப்பாகும். அவரை இழந்து வருந்துகிற அவருடைய குடும்பத்தினருக்கு இந்தப் பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தையும் நான் முன்மொழிகிறேன். அவற்றை வழிமொழிந்து நிறைவேற்றித் தரும்படியாக இந்தப் பேரவையினை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்ட இரங்கற் தீர்மானங்களை நானும் வழிமொழிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மறைந்த பெரியவர்கள் இருவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே அமைச்சர் பொறுப்பையும், நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பையும், அதற்கு முன்பு சட்டப் பேரவை உறுப்பினர் பொறுப்பையும் ஏற்றிருந்தவரும் இந்திய மண்ணை மீட்கும் போராட்டத்தில் தன்னையும் அர்ப்பணித்துக்கொண்டவரும் ஏழை, எளிய மக்களுடைய இதயங்களில், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் உள்ளங்களில் என்றும் மறையாத நிலவாக ஆகி விட்டவருமான திரு. கக்கன் அவர்களை இந்தத் தமிழகம் தன்னுடைய வரலாற்றில் என்றென்றும் பதிய வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. முன்னவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல மறைந்த திரு. கக்கன் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அமைச்சரவையிலே ஒரு அமைச்சராக இருந்தாலும், கட்சி என்ற அளவிலே பெருந்தலைவர் காமராஜருடைய அன்பிற்குரிய, நம்பிக்கைக்குரிய தொண்டராக விளங்கியவர்கள் ஆவார்கள்.

இனிய இயல்பு, எளிய வாழ்வு இவைகளின் மூலம் அரசியல் அரங்கத்திற்கு ஒரு வழி சாட்டிய பெருமை மறைந்த பெரியவர் கக்கன் அவர்களுக்கு உண்டு. அவருடைய பேரிழப்பால் அவருடைய குடும்பம் மாத்திரமல்ல. அவர் சார்ந்திருந்த இயக்கம் மாத்திரமல்ல, இந்த தமிழகமே அதிர்ச்சியுற்றது; வருந்துகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய பெரியவர் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்கு மாத்திரமல்ல, அவருடைய கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் நண்பர்களுக்கு மாத்திரமல்ல, அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 பிப்ரவரி 2

இந்திய கம்யூனிஸ்ட்டினுடைய (மார்க்சிஸ்ட்) தலைவர்
களிலே முன்னோடிகளிலே ஒருவராக விளங்கியவரும், கால
மெல்லாம் பாட்டாளி வர்க்கத்திற்காகப் பாடுபட்டவரும், இந்த
அவையிலே அழுத்தந்திருத்தமாக வாதங்கள் பலவற்றை
எடுத்து வைத்து, தன்னுடைய கொள்கைக்கு, லட்சியத்திற்கு
அவ்வப்போது வலிவினைப் பெருக்கியவருமான ஏ. பாலசுப்பிர
மணியம் அவர்களுடைய மறைவு உழைக்கும் வர்க்கத்திற்கே
ஒரு பெரும் இழப்பாகும். அவருடைய மறைவுக்காக,
அவருடைய குடும்பத்தாருக்கு மாத்திரம் அல்ல, பாட்டாளி
வர்க்கத்திற்கும், அவர் சார்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்
தலைவர்களுக்கும் தோழர்களுக்கும் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு,
முன்னவர் அவர்கள் முன் மொழிந்த இரங்கல் தீர்மானங்
களோடு கழகத்தின் இரங்கலையும் இணைத்து அமர்கிறேன்.

*திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, அவை முன்ன
வர் அவர்கள் இன்றைக்கு முன்மொழிந்திருக்கின்ற இரங்கல்
தீர்மானத்தை வழி மொழிந்து, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே
எங்களுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறோம்.
1900 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, மரியாதைக்
குரிய பெரியவர் மறைந்த கக்கன் அவர்கள் மதுரை மாவட்டத்
திலே பிறந்தார். பிறகு சில காலம் தியாகி வைத்தியநாத
ஐயர் பராமரிப்பிலே வளர்ந்து, பின்னர் மிஷன் உயர்நிலைப்
பள்ளியிலே படித்தார். அதற்குப் பிறகு தேசிய வேள்வி
யிலே தன்னை ஈடுபடுத்தி, சுதந்திரப் போராட்டத்தில் தன்னை
ஈடுபடுத்திக் கொண்டு, 1942 ஆம் ஆண்டு "க்விட் இண்டியா
மூவ்மென்ட்" "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்
டத்திலே கலந்து கொண்டு, பல்வேறு சித்திரவதைகளுக்கு
ஆளாகி, 18 மாதங்கள் தஞ்சை சிறையிலே வாடவேண்டிய
துர்பார்க்கியமான நிலைக்கு ஆளாக்கப்பட்டார்.

அதற்குப் பிறகு 1946 ஆம் ஆண்டு அன்றைக்கு ஒருங்கிணைந்த
சென்னை மாகாண சட்டமன்றத்திலே உறுப்பினராகப் பணி
யாற்றினார். அதற்குப் பிறகு 1952 ஆம் ஆண்டிலே மீண்டும்
சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர்,
1954 ஆம் ஆண்டு தமிழக காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராகப்
பொறுப்பேற்றார். மீண்டும் 1957 ஆம் ஆண்டு தேர்தலிலே
சட்டமன்றத் தேர்தலிலே வெற்றிபெற்று, அமைச்சராக
ஆனார். 1957 முதல் 1967 வரை, பல முக்கியமான இலாக
காக்களுக்குப் பொறுப்பு வகித்தார். இன்னும் சொல்லப்
போனால், மிகக் கேந்திரமான இலாகாவான உள் துறை
இலாகாவானது அன்றைக்கு ஒரு அரிசன அமைச்சர் பொறுப்பில்
—மறைந்த கக்கன் அவர்கள் பொறுப்பில்— வைக்கப்பட்டு
இருந்தது. அன்றைக்கு அரிசன மக்களுக்கு கொடுக்கப்பட்ட
பெருமை என்று சொன்னால் அது மிகையாகாது. அவர் அதைச்



1982 பிப்ரவரி 2] [திரு. நா. சுந்தரராஜ்]

செம்மையாகவும், திறமையாகவும் வகித்து வந்தார். அதே
நேரத்தில் எந்தவிதமான கெடுபிடியும் இல்லாமல் எந்த ஏழை
மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டுமோ அந்த மக்களுக்குப்
பாதுகாப்பாக விளங்கினார் என்று சொன்னால் அது மிகை
யாகாது.

அது மட்டுமல்ல. 10 ஆண்டுக்காலம் அமைச்சராக இருந்த
பிறகு, 1967-ல் தேர்தலில் அவர் தோல்வி அடைந்த
பின்னால், தனக்கு என்று ஒரு வீடுகூட இல்லாமல், தனக்கு
என்று ஒரு வாகனவசதிகூட இல்லாமல், சென்னையிலே
பல்வேறு இடங்களில் பஸ்களுக்காக காத்து இருக்கக்கூடிய
அவலமான காட்சியை நாம் பார்க்க நேர்ந்தது. ஆனால்
அன்றைக்கு இருந்தவர் ஒரு ஒழுக்கமான மனிதராக, ஒரு ஒழுக்க
மான அமைச்சராக இருந்தார். இன்றைக்கு நம்முடைய
முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, ஆரம்ப காலத்திலே
வெளிநாட்டைச் சேர்ந்த மிஷன் நிறுவனங்கள் அவருடைய
கல்விக்காக உதவி புரிந்தது. அவர் சாகின்ற வரையிலும்
அரசாங்கம் அவருக்கு உதவி செய்ய வேண்டிய துர்பார்க்கிய
மான நிலை அவருக்கு ஏற்பட்டது என்று சொன்னால்
அவர் எந்த அளவுக்கு நியாயமாக நேர்மையாக செயல்
பட்டார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

(முற்பகல் 9-20.)

அது மட்டுமல்ல. ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லா
மல், இன்றைக்கு அன்றாடம் அரசியல்வாதிகளைப் பற்றி
பேசப்படுகின்ற அந்தச் சொற்கள், அன்றைக்கு அவர் பக்கமே
எட்டிப் பார்க்காமல் எந்தவித தவறும் செய்யாத மனிதராக
விளங்கினார் என்றால், தமிழகத்திலே இருக்கக்கூடிய
ஒவ்வொரு அரசியல்வாதியும் அவரிடம் இருந்து கற்றுக்
கொள்ள வேண்டிய அறிவுரைகள் ஏராளம் என்று சொன்
னால் அது மிகையாகாது. அதுமட்டுமல்ல, அவர் எந்தப்
பிரச்சினையாக இருந்தாலும் தீர விசாரித்து உண்மையைக்
கண்டுபிடித்துக் காரியங்கள் ஆற்றினார். எளிய வாழ்க்கை
வாழ்ந்தார், படாடோபமான வாழ்க்கை வாழவில்லை. இன்
றைக்கு அவருடைய பிரிவால் தமிழகத்திலே காங்கிரஸ் கட்சி
மாத்திரமல்ல, ஒடுக்கப்பட்ட பின்தங்கிய தாழ்த்தப்பட்ட
மக்கள் என்று சொல்லக்கூடிய அரிசன மக்கள் பல்வேறு
வகையான வேதனைக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள்.
காரணம், தங்களுக்கு ஒரு தலைவன் இல்லையே என்ற எண்ணம்
அவர்கள் மத்தியில் இருக்கிறது. அது போன்ற தலைவர்
தமிழகத்தில் தோன்றக்கூடுமா என்ற சந்தேகம் உண்டு. ஆகவே
அவரைப் பிரிந்து வாழும் அவர்களுடைய குடும்பத்தாருக்கு
மட்டுமல்ல, அவரை இழந்து நிற்கும் லட்சக்கணக்கான,
கோடிக்கணக்கான ஏழை மக்களுக்கு எனது சார்பிலும்
காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1982 பிப்ரவரி 2

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பால
சுப்பிரமணியம் அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் உறுப்பின
ராகப் பணியாற்றியிருக்கிறார்கள். பல தொழிற்சங்கங்களில்
பணியாற்றியிருக்கிறார்கள். அவருடைய கட்சிக்காக மட்டு
மல்ல, உழைக்கின்ற வர்க்கத்திற்காகவும் பல்வேறு போராட்
டங்களில ஈடுபட்டு, அதன் காரணமாக பல்வேறு கொடுமை
களுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் தான்
மேற்கொண்ட கொள்கைகளைச் செயல்படுத்த பல்வேறு வகை
களில் பணியாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அவரைப் பிரிந்து
வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சிக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, முன்னவர் அவர்கள்
முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட
இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக நான் வழிமொழிகிறேன்.

தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் 1946-லே ரயில்வே
போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, எங்களுடன் சேர்ந்து
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்ததற்காகவும், மதுரையில்
தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்தியதற்காகவும் அன்று
இருந்த அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு, அதற்குப் பிறகு
வேலூர் சிறையில் வைக்கப்பட்டு, இந்தியா சுதந்திரம் அடை
வதற்கு முதல் நாள் அன்று, அன்றிருந்த இடைக்கால அர
சாங்கத்தால் எங்களோடு சேர்ந்து விடுதலை செய்யப்பட்டார்
கள். அதற்குப் பிறகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தி
லேயும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்திலேயும்
தன்னலமற்ற முறையிலே பணியாற்றி, தமிழகத்தில் பலம்
பொருந்திய ஒரு தொழிற் சங்க இயக்கத்தை உருவாக்கி,
உழைக்கும் மக்களுக்காகப் போராடியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநிலச் செயலாளராகவும் இந்
திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்
குழுவின் உறுப்பினராகவும், சி.ஐ.டி.யு.வின் உதவித் தலைவராக
வும் அவர்கள் பொறுப்பேற்று செயலாற்றியிருக்கிறார்கள். மார்க்
சிசம், லெனினிசம் ஆகிய கொள்கைகளை பல்வேறு சிரமங்
களுக்கு இடையிலே பாதுகாப்பதற்காகவும், உழைப்பாளி வர்க்
கத்தின் மத்தியிலும், தமிழக மக்கள் மத்தியிலும் அதனைப்
பரப்புவதற்காகவும் அவர்கள் ஆற்றிய சேவையை மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் அது ஒரு
முன் உதாரணமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது என்று நான்
கூற முடியும். அவருடைய மறைவால் வருந்துகின்ற அவருடைய
குடும்பத்தாருக்கும் இன்றைக்கு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்
படுகின்ற இந்த இரங்கல் தீர்மானத்தின் மூலமாக மீண்டும்



1982 பிப்ரவரி 2] [திரு. என். சங்கரய்யா]

எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அதோடு, தோழர் பாலசுப்பிரமணியம் அவர்களுடைய
வாழ்க்கை சரித்திரம் தமிழகத்தில் புதிய சோஷலிச சமுதா
யத்தை உருவாக்கப் போராடுகின்ற லட்சக்கணக்கான மக்களுக்கு
கலங்கரை விளக்கமாகத் திகழும் என்று தெரிவித்து அவருக்கு
என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த தலைவர் கக்கன் அவர்களை முப்பத்தைந்து
ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். மதுரை மாவட்டம்,
மேலூர் தாலுக்காவில் ஒரு ஏழைக் குடும்பத்தில் தாழ்த்தப்பட்ட
மக்கள் மத்தியில் தோன்றிய அவர், இந்திய தேசியக் காங்கிரஸ்
இயக்கத்தில் பணியாற்றி, 1942 ஆம் ஆண்டு நடைபெற்ற
போராட்டத்தில் ஈடுபட்டு, அதன் காரணமாகக் கைது செய்யப்
பட்டு, அங்கேயிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரால் படு
மோசமாக சித்திரவதை செய்யப்பட்டார்கள். அப்படிப்பட்ட
மோசமான சித்திரவதையை ஒரு சில தோழர்கள் தான் பிரிட்டிஷ்
ஏகாதிபத்தியில் அனுபவித்தார்கள் என்பதை இந்த நேரத்தில்
நான் நினைவு கூறவிரும்புகிறேன். அதற்குப்பிறகு 1944-ல் அவர்
கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள்
காமராஜருடன் தொண்டராக நின்று காங்கிரஸ் இயக்கத்தில்
பணியாற்றி பல போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அவர்
வாழ்நாள் முழுவதும் ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபட்டு,
கடைசிவரையில் சாதாரண மக்களுக்காகவே போராடி, சாதா
ரண மக்கள் மத்தியிலேயே வாழ்ந்து அவர்களுடைய அனுதாபத்
தைப் பெற்றுக் கொண்டு வந்தார்கள்.

தமிழ்நாட்டிலே அரிசன மக்களுக்கு மட்டுமல்லாமல்
சாதாரண மக்களுக்கெல்லாம் நற்பணியாற்றி அவர்கள் மத்தி
யிலே நல்ல செல்வாக்கோடு திகழ்ந்தவர் திரு. கக்கன் அவர்கள்.
அவர்களுடைய மறைவுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
யின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரி
வித்துக்கொள்கிறேன்.

அவர்களுடைய மறைவு குறித்து அவர்களுடைய குடும்பத்
தாரிடம் துக்கம் விசாரிப்பதற்காகச் சென்றிருந்தபோது அவர்கள்
ஒரு செய்தியைச் சொன்னார்கள். இந்த நேரத்தில் அதை
தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
அது அவர்களுடைய பிள்ளைகளுக்குரிய பிரச்சினை. மாண்புமிகு
அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி திரு. கக்கன்
அவர்களுடைய குடும்பத்தார் குடியிருப்பதற்காக அரசாங்கச்
செலவில் வீட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்போது
திரு. கக்கன் அவர்கள் மரணம் அடைந்த காரணத்தால் அந்தக்
குடும்பத்தார் அதே வீட்டில் தொடர்ந்து குடியிருப்பதில் சில
பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அந்த
வீட்டிலே அந்தக் குடும்பம் தொடர்ந்து குடியிருக்க மாநில அரசு
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 2

மறைந்த திரு. கக்கன் அவர்களுடைய மரணத்திற்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது. அதைப்போல தோழர் பாலசுப்பிரமணியம் அவர்களுடைய மரணத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தை மீண்டும் வழிமொழிந்து, அமர்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இரங்கல் தீர்மானததை வழிமொழிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இரங்கலையும் அஞ்சலியையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த மதிப்பிற்குறிய கக்கன் அவர்கள் பல்லாண்டு காலம் சட்ட மன்ற உறுப்பினராகவும், பராளுமன்ற உறுப்பினராகவும, 10 ஆண்டுக்காலம் அமைச்சராகவும் இருந்து பணியாற்றினார்கள். அது மட்டுமல்லாமல் அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் பங்குகொண்டு சிறந்ததொரு சேவையை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை பொதுவாழ்விலே ஈடுபட்டுள்ள நம்மைப்போன்ற அனைவருக்கும் ஒரு முன் உதாரணமாக, பொதுவாழ்வில் ஈடுபடுகின்றவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு இலக்கணமாக அமைந்திருந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு கக்கன்ஜி அவர்கள் 4 ஆண்டுகளுக்கு முன்னால் மதுரை மருத்துவமனையில் இருந்தபோது நான் பார்க்கச் சென்றிருந்தேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால்— அவர்கள் முதலிலே பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போது வறட்சி பகுதியான எங்கள் வட்டாரத்திலே அதிகமான பாசனக் கண்மாய்களை அமைக்க பெரிதும் காரணமாக இருந்து பல நல்ல ஏற்பாடுகளை அங்கே செய்தார்கள். ஆகவே, அவர்களிடம் எனக்கு அதிகமான மதிப்பும் மரியாதையும் உண்டு. அவர்களை பார்க்கச் சென்றிருந்தபோது, அவர்கள் 10 ஆண்டு காலம் இந்த மாநிலத்தின் அமைச்சராக இருந்தபோதிலும் ஸ்பெஷல் வார்டு கொடுக்காமல் ஜெனரல் வார்டுதான் கொடுத் தார்கள் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று பார்த்த பிறகுதான் ஸ்பெஷல் வார்டு கொடுக்கவேண்டுமென்று சொன்னபிறகுதான் ஸ்பெஷல் வார்டு கொடுத்தார்கள் என்று அவரின் துணைவியார் அந்த அம்மையார் சொன்னர்கள். அப் போது திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்களும் அந்த மருத்துவ மனையில் பக்கத்து வார்டில் இருந்தார்கள். அவ்வளவு பெரிய பதவியில் இருந்தும் தனக்கு என்று, தன்னுடைய குடும்பத்திற்கு என்று எந்த விதமான பொருளும் சம்பாதிக்காமல், நேர்மையான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார்கள் திரு. கக்கன்ஜி



1982 பிப்ரவரி 2] [திரு. சோ. அழகர்சாமி]

என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இதைச் சொல்கிறேன். நாமெல்லாம் பாராட்டுகின்ற வகையிலே அவர்களுடைய வாழ்க்கை எளிய வாழ்க்கையாக, தூய வாழ்க்கையாக அமைந்திருந்தது. அன்னாரை இழந்து வருந்துகின்ற அந்த குடும்பத்தாருக்கும் காங்கிரஸ் இயக்கத்திற்கும் எங்கள் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தோழர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆரம்பக் காலத்திலிருநதே இந்த நாட்டிலே உழைக்கிற மக்களுக்காக, பாடுபடுகிற மக்களுக்காக ஆற்றிய அரும்பணிகள் எப்போதும் நினைவு கூறத்தக்கவை. அவர்களுடைய கடைசி காலத்தில் கூட பல மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, தொழிலாளர் உரிமைக்காக நடைபெறும் இயக்கங்களிலே முழுமையாகப் பங்குகொண்டிருந்தார்கள், என்பது மட்டுமல்ல. அவர்கள் இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களுக்காக, அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டார்கள். இந்தச் சட்டமன்றத்திலும் அவர்கள் பணியாற்றியபோது நானும் உடன் இருந்திருக்கிறேன். அவர்கள் பணியாற்றும்போது எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் உழைக்கின்ற மக்களுடைய பிரச்சனை வரும்போது உறுதியாக, சரியான முறையிலே வாதாடி, அவர்களுக்காக அயராது பாடுபட்ட அன்னாரை இழந்து துயருகிற அந்தக் குடும்பத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அமர்கிறேன்.

(முற்பகல் 9—30)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இஙகே எடுத்து வைத்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தில் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய இரங்கலையும் இணைக்கின்ற முறையிலே நின்றுகொண்டிருக்கிறேன்.

பெருமைக்குரிய கக்கன்ஜி அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த நேரத்திலே அவருக்குக் கீழே பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். அவர் எந்தெந்த வகையிலே எவ்வெவ்வாறு தன்னை இந்த அரசியல் உலகத்திலே நடத்திக் காட்டினார் என்பதைப் பக்கத்திலிருந்து பார்க்கின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். சுதந்தரப் போராட்டக் காலத்திலே சர்வபரித்தியாகம் செய்தவர்களிலே அவர் மிக முக்கியமானவர். வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்தே மாதரம் எனக் குரல் எழுப்பி அவர் தியாக வேள்வியிலே குதித்தபோது அங்கிருந்த போலீசார் அவரைச் சங்கிலியால் பிணைத்து அடித்தார்கள். அந்த அடியினையும் தாங்கிக்கொண்டு பாரத மாதாவின் கைகளிலே அன்னியர் பிணைத்த அடிமை விலங்கை ஒடிப்பதுதான் எனக்கு முக்கியமே தவிர நீ அடிப்பதை நான் பெரிதாகக் கருதவில்லை என்று வீர முழக்கமிட்ட ஒரு மாவீரன் கக்கன்ஜீ அவர்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1982 பிப்ரவரி 2

சுதந்திரத்திற்குப் பிறகு அவர் அமைச்சர் பதவியில் இருந்த போது கூட ஆர்பாட்டமும் அட்டகாசமும் நிறைந்த அரசியல் உலகத்திலே அமைதியும் சாந்தமும் நிறைந்த ஒரு தீபமாக அவர் உலவி வந்த காட்சியினையும் நாம் எல்லாம் கண்டோம். படாடோபம் அவருடைய பக்கத்திலே எட்டிப் பார்த்தது இல்லை. அரிய ஒரு பிறவியாக அவர்கள் காட்சியளித்தார்கள். பாழும் பாலைவனத்து மத்தியிலே ஊறி இருக்கின்ற பளிங்கு நீர் ஊற்றாக அவர்கள் காட்சியளித்தார்கள். புழுதி படிந்த சாலை ஓரத்திலே சில நேரங்களிலே வீசுகின்ற சோலை இளம் தென்றலாக அவர்கள் காட்சியளித்தார்கள். அவர்களுடைய எளிமையான வாழ்க்கையைப் பார்க்கின்ற நேரத்தில் எல்லாம் அரசியலில் இருக்கின்றவர்கள் காந்தியினுடைய தத்துவத்தை தங்களுடைய நெஞ்சத்திலே ஏற்றுக் கொண்டால் எப்படி இருப்பார்களோ, அப்படி அதற்கு உருவம் கொடுத்திருந்தார்கள். காந்தியின் தொண்டராய், காமராஜருடைய தோழராய் ஏழை எளியவர்களுக்கு எப்போதுமே தோள் கொடுக்கின்ற ஒரு நல்ல தளபதியாக இருந்துக் கொண்டிருந்த கக்கன்ஜீ அவர்களின் மறைவு அவர்களுடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்ல, நல்லனவெல்லாம் எண்ணுகின்ற நெஞ்சம் உடைய அத்தனை பேர்களுக்கும் ஒரு பெரிய இழப்புத்தான் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. அன்னார் செய்த தியாகம் என்றும் எரிந்து கொண்டிருக்கின்ற தீபச் சுடராக அரசியல் வானிலே பிரகாசித்துக் கொண்டு இருக்கும் என்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை. அன்னாரை இழந்திருக்கின்ற அவர்களுடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவர்களுடைய புகழ் என்றும் நீடு நிற்கும் என்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பாட்டாளியின் கூட்டாளியாகவே எப்போதும் தன்னை நினைத்துக் கொண்டு அதற்குத் தகுந்தவாறு செயல்பட்டுக் கொண்டிருந்த ஒரு பொது உடைமைத் தத்துவத் தலைவர் பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவு அந்தக் கட்சிக்கு மட்டுமல்லாமல் அரசியல் உலகத்திற்கே ஒரு இழப்பாகும். உழைக்கும் வர்க்கத்தை உள்ளத்திலே சுமந்து திரிந்த ஒரு உத்தமர் அவர். தத்துவங்களை எதிரே இருந்து கேட்கின்றவர்கள் எளிதிலே புரிந்து கொள்கிற அளவுக்கு மெதுவான ஆனால் அழுத்தமான வகையிலே எடுத்துச் சொல்கிற ஆற்றல் பெற்றவர். தன்னுடைய இறுதி மூச்சு இருக்கும் வரை இந்த தேசத்தில் இருக்கின்ற பாட்டாளி வர்க்கத்திற்காகவே உழைத்து தொழிலாளர் போன்றவர்களை நெஞ்சத்திலே சுமந்து அவர்களுடைய நல்வாழ்வுக்காக அயராது உழைத்த பாலசுப்பிரமணியம் அவர்களுடைய மறைவுக்கு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய இரங்கலைத் தெரிவித்து மறைந்த திரு. எஸ். பக்கிரிசாமி பிள்ளை, திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர், டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் போன்றவர்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்று என்னுடைய இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.



1982 பிப்ரவரி 2]

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானத்தினை அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக வழிமொழிகின்றேன்.

மதிப்பிற்குரிய தோழர் ஏ. பாலசுப்பிரமணியம் அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர். அவர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு சென்னை மற்றும் இந்தியா முழுவதும் இருக்கின்ற சி. ஐ. டி. யு. தொழிற் சங்கத்தினுடைய துணைத் தலைவராகவும் பணியாற்றி பாட்டாளி வர்க்கத்துக்கு ஆபத்து என்று சொல்கின்ற நேரத்திலே எல்லாம் குரல் கொடுக்கின்ற முன்னணித் தலைவராக பணியாற்றினார்கள்.

அவர்களோடு நெருங்கி தொடர்பு கொண்ட எங்களுடைய இயக்கம் அவரோடு தோளோடு தோள் நின்று பாட்டாளி வர்க்கத்திற்கு ஆபத்து என்று சொல்கின்றபோது அவர்கள் சொல்கின்ற சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டது.

அது மட்டும் அல்ல தொழிலாளர் வர்க்கம் ஒரு நல்ல தலைவரை இழந்து விட்டது. அவரைப்போன்ற தலைவர்கள் இனியும் தொழிலாளர் வர்க்கத்திற்கு, அதனை பாதுகாக்கின்ற முறையில், அமைவார்களா என்று வேதனைப்படும் அளவிற்கு இருந்த திரு. ஏ. பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவு, ஒரு பெரிய இழப்புதான். அந்த வகையில் அவரை இழந்து வாடுகின்ற அன்னாருடைய குடும்பத்தாருக்கும், தன்னுடைய தலைவர்களுள் ஒருவரை இழந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய மறைந்த திரு. கக்கன் அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எந்த அளவுக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார்கள் என்று அவை முன்னவர் அவர்களும், மற்ற தலைவர்களும் கூறினார்கள். அவர் இந்த மாமன்றத்தில் 10 ஆண்டு காலம் அமைச்சராக இருந்தார்கள். 1958-லே அவர்கள் பொதுப் பணித்துறையின் அமைச்சராக இருந்த காலத்தில், நான் பட்டப் படிப்பை முடித்து, அதே பொதுப் பணித்துறையில் இந்த செயலகத்திலேயே, பொதுப்பணித்துறையின் அமைச்சரின் கீழ் ஒரு குமாஸ்தாவாக பணியாற்றியவன் என்ற முறையிலேயும், அதற்குப் பின்னாலும் ஒரே மாவட்டத்தில் இருந்த காரணத்தினால் அவர்களை அடிக்கடி பார்க்கின்ற வாய்ப்பும், நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பும் பெற்றவன் என்ற முறையிலேயும், எனக்கு நன்றாகத் தெரியும் அவர் எந்த அளவுக்கு நேர்மையாக இருந்தார் என்பதும், இனிமேல் அப்படி ஒருவர் இருப்பாரா என்று கருதக்கூடிய அளவுக்கு இருந்தார் என்பதும்,

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1982 பிப்ரவரி 2

அமைச்சராக 10 ஆண்டுகாலம் இருந்தவர், அந்தப் பதவிக் காலத்திற்கு பின்னால், அவருடைய வாழ்க்கைக்குக் கூட எந்த ஒரு சேமிப்பும் இல்லாமல் வாழ்ந்தார்கள் என்பது மட்டும் அல்லாமல் எவ்வளவோ எளிமையாகவும் வாழ்ந்தார்கள். ஒரு முறை மதுரை மத்திய பஸ் நிலையத்திலிருந்து இறங்கி நடந்தே இரயில் நிலையத்திற்கு வந்து 3-வது வகுப்பு டிக்கெட்டை வாங்கி பின் சென்னைக்கு வந்தார்கள். அந்த அளவுக்கு தன்னை தாழ்த்திக் கொண்டு வாழ்ந்த ஒரு உத்தமர் கக்கன் அவர்கள். அவர் ஒரு உதாரண புருஷராக வாழ்ந்தார்கள் என்பது வெறும் வார்த்தை மட்டும் அல்ல, அவருடைய பதவிக் காலங்களுக்கு பின்னாலும், இம்மாமன்றத்தின் மூலமாக அவர்களுக்கு 500 ரூபாய் பென்ஷன் கிடைத்து, அதன் மூலமாகத் தான் வாழ முடியும் என்ற அளவில் அவருடைய வாழ்க்கைத் தரம் இருந்திருக்கிறது. அதிலிருந்தே தெரிகிறது அவர் எப்படி வாழ்ந்திருந்தார் என்பது.

மதிப்பிற்குரிய தோழர் சங்கரய்யா அவர்கள் அவருடைய வாடகை வீட்டிற்கான வாடகையை தமிழக அரசு கொடுக்கும் என்று அறிவித்து, அவருக்குப் பின்னால், அந்த வாடகையை கொடுக்க முடியாமல் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த நிலைமை உண்மைதான். ஆகவே அவருடைய துணைவியார் இருக்கும் வரை அந்த வீட்டிற்கான வாடகையை தமிழக அரசு ஏற்றுக் கொள்வதோடு மறைந்த மதிப்பிற்குரிய கக்கன் அவர்களுக்கு கொடுத்து வந்த பென்ஷனையும் அவருடைய துணைவியாருக்கு அவர்களுடைய ஆயுட்காலம் வரையில் தமிழக அரசு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுத்து, அவரை இழந்திருக்கிற அகில இந்திய காங்கிரஸ் இயக்கத்திற்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இங்கே மறைந்த தியாகத் தலைவர் கக்கன்ஜீ அவர்களுக்கும், மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஏ. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் இரங்கலைத் தெரிவித்து அவை முன்னவர் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

மறைந்த தியாகத் தலைவர் கக்கன்ஜி அவர்களுக்கு எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு கட்சியின் தலைவர்கள் புகழாஞ்சலி செலுத்தினார்கள். தமிழ்நாட்டின் சரித்திரத்தில் தியாகமே வடிவான ஒரு தலைவர் இருந்தார் என்றால் அது கக்கன்ஜியாகத்தான் இருக்க முடியும் என்று கூறுவேன். அவருடைய வாழ்க்கையில் இளமைப் பிராயத்திலிருந்து இறுதியிலே அவர்



1982 பிப்ரவரி 2] [திரு. ப. நெடுமாறன்]

உயிர் விடுகிற அந்த நாள் வரையில் தியாகத்தின் சின்னமாகத் தான் அவர்கள் விளங்கினார்கள். அதுவும் அந்தக் காலத்தில் ஜாதி கொடுமைகள் உச்சக்கட்டமாக இருந்த காலத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் தோன்றி, நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவது என்பது மிகப் பெரிய விஷயமாகும்.

(முற்பகல் 9—40)

ஒரு எளிய குடும்பத்தில், ஏழையாகப் பிறந்த கக்கன்ஜி அவர்கள் மிக இளம் வயதிலேயே தன்னை முழுமையாக் சுதந்திரப் போராட்டத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டவர்களாவார். நாட்டின் விடுதலைக்காக அவர்கள் எண்ணற்ற தியாகங்களைச் செய்தார்கள்.

இந்தியாவிலேயே முதன் முதலாக ஆலயப் பிரவேசம் என்பது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில்தான் நடந்தது. அது ஒரு சரித்திரப் பிரசித்திப் பெற்ற நிகழ்ச்சியாகும். மதுரையைச் சேர்ந்த மாபெரும் தியாகசீலர் திரு. வைத்தியநாத ஐயர் அவர்கள் முன் நின்று அதை நடத்தினார்கள். மீனாட்சி கோவிலில் ஆலயப்பிரவேசம் செய்வது என்பது முடிவு செய்யப்பட்டு அரிஜனச் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரை அழைத்துச் செல்லவேண்டும், அவர் யாராக இருக்க வேண்டும் என்பது பற்றி திரு. வைத்தியநாத ஐயர் அவர்கள் முடிவு செய்த போது அவர்களது வீட்டில் வளர்க்கப்பட்ட கக்கன்ஜி அவர்களை தான் அன்றைக்குத் தேர்ந்தெடுத்தார்கள். கக்கன்ஜி அவர்களை முன்னால் நிறுத்தி வைத்து திரு. வைத்தியநாத ஐயர் அவர்கள் உட்பட பல்வேறு காங்கிரஸ் தோழர்களும் அவர்களுக்குப் பின்னால் சென்று முதல் தடவையாக இந்தியாவிலேயே ஆலயப் பிரவேசத்தை வெற்றிகரமாக நடத்தினார்கள். அந்த நேரத்தில் சனாதனிகள் அதை எதிர்த்து எது எதையோ செய்து பார்த்தார்கள். எதற்கும் அஞ்சாமல் தியாக சீலர் கக்கன்ஜி அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு மிகவும் தைரியமாக, துணிவோடு செயல்பட்டு ஆலயப் பிரவேசத்தைச் செய்தார்கள். தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி அடிகள் தம்முடைய அரிஜன் பத்திரிகையில் பாராட்டி எழுதக்கூடிய அளவிற்கு பெருமைக்குரியவராக கக்கன்ஜி விளங்கினார்கள்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் மதுரை மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்ட நேரத்தில் அன்றிருந்த போலீஸார் அவர்களை அவர்களது சொந்த ஊராகிய மேலூரில் இரண்டு கைகளையும் கட்டிவைத்து வீதிவழியாக அடித்து இழுத்து வந்தார்கள். அவ்வளவு தூரம் இந்த நாட்டின், விடுதலைக்காக கக்கன்ஜி அவர்கள் பல்வேறு கொடுமைகளை அனுபவித்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் இந்திய

[திரு ப. நெடுமாறன்] [1982 பிட்ரவரி 2

நாடாளுமன்றத்தில் உறுப்பினராகவும், அரசியல் சட்டத்தை
வகுத்த அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராகவும், தமிழக
சட்டமன்றத்தில் உறுப்பினராகவும், தமிழ்நாட்டில் பத்து ஆண்டு
கள் அமைச்சராகவும் பணியாற்றிய பெருமைக்குரியவர். எந்தப்
பதவியை அவர்கள் வகித்தபோதிலும் அல்லது பதவிகள் இல்லாத
காலத்திலும் தியாக உணர்வும் எளிமை உணர்வும் உடையவராக
இறுதிவரை நாட்டின் நலனுக்காக் பாடுபட்டு வந்தார்கள்.

மறைந்த மாபெரும் தலைவர் காமராஜ் அவர்களின் நம்பிக்கைக்
குரிய சகாவாக அவர்கள் விளங்கினார்கள். தமிழ்நாடு காங்கிரஸ்
கமிட்டித் தலைவராக யாரை தேர்ந்தெடுப்பது என்ற
சிக்கல் இரண்டு தடவை ஏற்பட்டது, மிக நெருக்கடியான நேரம்
அது. தலைவர் காமராஜ் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திர
மான ஒருவரைத்தான் அந்தப் பொறுப்பில் அமர்த்த வேண்டும்
என்ற நிலைமை வந்தது இரண்டு தடவைகளும். அப்போது
நம்முடைய தியாக சீலர் கக்கன்ஜி அவர்கள்தான் பெரும் தலைவர்
காமராஜ் அவர்களால் அழைக்கப்பட்டு அந்தப் பொறுப்பில்
அமர்த்தி வைக்கப்பட்டார். அந்த அளவிற்கு அவர்கள் பெருந்
தலைவர் அவர்களின் அன்பிற்குரியவராக விளங்கினார்கள்.
அந்தத் தியாகத் தலைவர் கக்கன்ஜீ அவர்கள் இன்று நம் மத்தியில்
இல்லை. அவர்களது மறைவிற்கு நமது தமிழக சட்டமன்றம்
அஞ்சலி செலுத்துவது மட்டுமல்ல, எனக்கு முன்னால் பேசிய
மற்ற தலைவர்கள் குறிப்பிட்டதுபோல் கக்கன்ஜி அவர்களுடைய
துணைவியாருக்கு அவர்களுக்கு அளித்து வந்த பென்ஷனை
தொடர்ந்து அளிக்க வேண்டும் என்பதையும் நமது மதிப்பிற்குரிய
முதல் அமைச்சர் அவர்களிடம் வேண்டிக் கொள்கிறேன். அவர்
கள் வாழ்ந்து வந்த வீட்டை அவர்கள் துணைவியார் இருக்கிற
காலம் வரை அதே சலுகைகளுடன் அவர்கள் அந்த வீட்டில்
இருப்பதற்கும் அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு
தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் சார்பில் மறைந்த தலைவர் கக்
கன்ஜி அவர்களுக்கு நான் அஞ்சலி செலுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, மார்க்ஸிஸ்ட் கட்சித் தலைவராக விளங்கிய அருமைத்
தோழர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் மறைவிற்கு தமிழ்
நாடு காமராஜ் காங்கிரஸ் சார்பில் அஞ்சலி செலுத்திக் கொள்
கிறேன். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஏழை எளிய
மக்களுக்கு உற்ற துணைவராக விளங்கினார் என்பது மட்டுமல்ல,
அவர்களது குடும்பமே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட
குடும்பம். அவர்களுடைய தந்தையார் அவர்கள் அரிஜன
முன்னேற்றத்திற்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்
கொண்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்.

அந்தக் குடும்பத்தில் தோன்றிய இவர் சுதந்திரப் போராட்
டத்தில் ஈடுபட்டு, அதற்குப் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில்
சேர்ந்து, அதற்காக எண்ணற்ற தியாகங்களைச் செய்த பெரு
மைக்குரியவர். அவரை அரசியல்வாதி என்று பார்ப்பதைவிட



1982 பிப்ரவரி 2] [திரு. ப. நெடுமாறன்]

மாபெரும் அறிஞர் என்ற முறையில் பார்க்கலாம். அவரை
ஒரு இன்டலக்சுவல் ஜையின்ட் என்று சொன்னால் அது மிகை
யாகாது. அந்த அளவிற்கு அவர் எல்லாத் துறைகளிலும் ஒரு
சிறந்த ஞானமும், அறிவும் கொண்டவராகத் திகழ்ந்தார்.
அவருடைய மறைவின் மூலம் நம் தமிழக அரசியலில் ஒரு சிறந்த
தலைவரை இழந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகை
யாகாது. அவரை இழந்து வருந்துகின்ற மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சிக்கு, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பாக
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய
உரையை முடிக்கிறேன்.

*திரு பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, மறைந்த
இருபெரும் தேசியத் தலைவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்
துகின்ற வகையில், இங்கே அவை முன்னவர் அவர்களால்
கொண்டு வரப்பட்டிருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை ஜனதா
கட்சியின் சார்பில் வழிமொழிந்து ஒருசில வார்த்தைகளைக்
குறிப்பிட விரும்புகிறேன்.

தலைவர் கக்கன் அவர்களைப் பொறுத்தவரையில், ஏறத்
தாழ 6 ஆண்டுகள் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராக
வும், 5 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், 10 ஆண்டு
கள் அமைச்சராகவும், இரண்டு முறை தமிழ்நாடு காங்
கிரஸ் கட்சியின் தலைவராகவும் பணியாற்றி, அரசியல் வாழ்வில்
வாழ்கின்றவர்களுக்கும், பொது வாழ்வில் ஈடுபட்டுக் கொண்
டிருக்கிறவர்களுக்கும் அவர்கள் ஒரு இலக்கணமாக திகழ்ந்
தார்கள். என்று சொன்னால் அது மிகையாகாது. பெருந்
தலைவர் காமராஜ் அவர்கள் அன்புக்குப் பாத்திரமானவராக
வும், அவருடைய நம்பிக்கைக்கு உரியவராகவும் விளங்கி
னார். மரியாதைக்குரிய கக்கன் அவர்கள், தலைவர் காமராஜ்
அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொறுப்பை விட்டு
வெளியே போகின்றபோது, உடனடியாக அவருடைய நம்
பிக்கைக்கு உரியவர் மட்டுமல்ல, அனைவருடைய நம்பிக்கைக்கு
பாத்திரமானவராகவும் உள்ள அவர் உடனடியாக தமிழ்நாடு
காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

அது மட்டுமல்ல, பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் மறு
படியும் 1957 ஆம் ஆண்டில் காங்கிரஸ் - கட்சியின் அமைச்சர்
அவையை அமைக்கின்ற போது, சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்
கப்பட்ட மரியாதைக்குரிய தலைவர் கக்கன் அவர்களை தன்
னுடைய அமைச்சர் அவையில் சேர்த்துக் கொண்டார். 10
ஆண்டுகள் அமைச்சர் பொறுப்பை நடத்தியும், பல்வேறு
அரசியல் பொறுப்புகளில் இருந்திருந்தாலும் கூட, தனக்கென
வாழாது, இந்த தமிழகத்திற்காக, இந்த சமுதாயத்திற்காக
வாழ்ந்த அந்த பெருமகனாரை இன்றைக்கு நாம் நினைத்துப்
பார்க்கவேண்டிய கடமை நமக்கிருக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ்
கமிட்டியின் தலைவராக, மறு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட

போது, மாணவர் இயக்கங்களில் பங்கு கொள்ளுகின்ற நிலையில், அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை நான் பெற்றவன். அரசியல் வாழ்வில் ஈடுபடுகின்றபோது, அரசியல் வாழ்வில் எப்படி எப்படியெல்லாம் விளங்க வேண்டுமென்பதற்கு ஒரு உதாரணமாக, அதுவும் எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்கினார் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவில் அரசியல், வாழ்வில், பொது வர்ழ்வில் இலக்கணமாகத் திகழ்ந்துவந்த அந்தப் பெருமகனார், இன்றைக்கு நம்மிடையே இல்லை. மறைர்து விட்டார்கள். அவருடைய மறைவால் வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய மறைவால் வாடுகின்ற அவருடைய கட்சியினருக்கும், பொதுவாக அவருடைய மறைவால் மிகப் பெரிய ஒரு ஒழுக்க சீலரை, தலைவரை இழந்து வாடுகின்ற தமிழகத்திற்கும் என்னுடைய இரங்கலையும், ஜனதா கட்சியின் இரங்கலையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஏ. பாலசுப்பிரமணியம் அவர்கள், இன்றைக்கு நம்மிடையே இல்லை. போலீட் பீரோவின் உறுப்பினராகவும், தமிழக மார்க்கிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும், மிகப் பெரிய தொழிற் சங்கங்களின் ஒன்றாக விளங்கும் சி.ஐ.டி.யூ.-வின் துணைத் தலைவராகவும், இப்படி பல்வேறு வகைகளிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, தொழிலாளர் வர்க்கத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டவர் மட்டுமல்ல. சுதந்திர போராட்ட காலத்தில் மிகப் பெரிய சுதந்திர வீரராகவும், இங்கே மற்றவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லா காரண காரியங்களிலும் ஒரு தர்க்க ரீதியாக ஆழ்ந்து விவாதிக்கின்ற ஒரு மிகப் பெரிய அறிஞராகத் திகழ்ந்தார் என்று சொன்னால், அது நிச்சயமாக மிகையாகாது. அவரை இழந்து வாடுகின்ற அவரது குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கட்சி ஊழியர்களுக்கும் ஜனதா கட்சி சார்பாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன் நன்றி வணக்கம்.

(முற்பகல் 9–50).

திரு ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானங்களின்மீது ஒருசில வார்த்தைகளை குடியரசுக் கட்சியின் சார்பில் சொல்ல விரும்புகிறேன்.

மறைந்த மாபெரும் தியாகி, முன்னாள் அமைச்சர், காங்கிரஸ் கட்சியினுடைய உண்மையான ஊழியர் தலைவர் கக்கன் அவர்கள் மறைவுக்கு நம்முடைய மன்றம் அனுதாபத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறது. மறைந்த தலைவர் கக்கன் அவர்கள் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஏழை





எளிய மக்களுடைய நலத்தில் நாட்டம் கொண்டவர்களாக வாழ்ந்து வந்தார்கள். தான் எங்கு இருந்தாலும், எந்தப் பதவியில் இருந்தாலும் ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்கு தன்னால் என்ன செய்ய முடியும் என்பதிலேயே நாட்டத்தைக் காட்டினார். கடைசி வரையில் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்து பிற்பட்ட மக்களின் தலைவனாக, காங்கிரஸ் திட்டங்களை நிறைவேற்றுகிற தீவிரமான தலைவனாக வாழ்ந்து வந்த அவர்களை காங்கிரஸ் இயக்கமும், தமிழகமும், தாழ்த்தப்பட்ட மக்களும் இழந்திருக்கிறோம்.

அவர்கள் காவல் துறை அமைச்சராகவும் தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள். இந்தத் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அவருக்கு அந்தப் பதவியை பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தந்தார்கள். அப்படி காவல் துறை அமைச்சராக இருந்தபோது அந்தத் துறையின் மூலம் எந்த அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்புத் தரமுடியும் என்பதில் நாட்டம் கொண்டிருந்தார்கள். ஒருமுறை அவர்கள் வேலூருக்கு வந்திருந்தபோது தாழ்த்தப்பட்ட அரசு ஊழியர்கள் சார்பில் அவர்கள் பேசியது இன்று கூட மறக்க முடியாத நிகழ்ச்சியாக இருக்கிறது. இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாத் துறையிலும் பதவி வகிக்கிறார்கள் ; இன்றைக்கு நீங்கள் தவறு செய்வீர்களானால் உங்களைக் காப்பாற்றக்கூடிய பெரிய தலைவர்கள் கிடையாது. மற்றவர்கள் தவறு செய்வார்களானால் அவர்களைக் காப்பாற்ற தலைவர்கள் இருக்கிறார்கள் ; பலம் வாய்ந்த இயக்கங்கள் இருக்கின்றன. ஆகவே, நீங்கள் தவறுக்கு இலக்காகாமல் கொஞ்சம் கூட மரியாதை, குறைவுக்கு இடம் கொடுக்காமல் நடந்துகொள்ள வேண்டும் என்று பேசினார்கள். அந்த அளவுக்குத் தூய்மையான வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று அந்த ஊழியர்களுக்குச் சொன்னதோடு மட்டுமல்லாமல் தானும் அரசியலில் அவ்வாறு வாழ்ந்து காட்டினார்கள். அரசியலில் தம்மைப் பற்றித் தவறாக இயக்கம் கருதக் கூடாது. தவறான பிரசாரத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற முறையில் காந்தியார் நெறிப்படி பெருந்தலைவரின் தொண்டனாக கக்கன் அவர்கள் சாகிற வரை வாழ்ந்து காட்டினார்கள்.

அவர்கள் கடைசிக் காலத்தில் தன்னுடைய ஜீவனத்திற்கே சிரமப்பட்டுக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த நிலையைப் பார்த்து தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் குடும்பத்தின் நலனைக் கருதி மாதா மாதம் நிதி உதவி அரசிலிருந்து அளித்து வந்தார்கள். அந்த நிதி உதவி மேலும் தொடர வேண்டும் ; அந்தக் குடும்பத்தின் வறுமைப் பிணியைப் போக்கும் வகையில் அந்த உதவியைத் தொடர்ந்து தரவேண்டும். தமிழக முதல்வர் அவர்கள் அந்த உதவியைக் கொடுத்து அந்தக் குடும்பத்தாரைக் காப்பாற்ற வேண்டுமென்று குடியரசுக் கட்சியின் சார்பில் கேட்டுக் கொண்டு மறைந்த அன்னாருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஜி. மூர்த்தி] [1982 பிப்ரவரி 2

அதே போன்று மறைந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் அவர்கள் மறைவுக்கும் அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் அனுதாபம் தெரிவித்தார்கள். அவருடைய மறைவுக்கும் எங்கள் குடியரசு கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்துவிட்ட இருபெரும் தலைவர்களுக்கு இங்கே இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இங்கு பல கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை நல்ல விளக்கத்தோடு எந்த அளவுக்கு அனுதாப உணர்வோடு எடுத்து வைத்தார்களோ அதே உணர்வுகளோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

குறிப்பாக திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எந்தக் கொள்கையைச் சொன்னார்களோ இறுதிவரையில் அந்தக் கொள்கையைச் செம்மையாகக் கடைப்பிடித்தது மட்டுமல்லாமல் எவ்வளவு எதிர் உணர்வோடு அவர்களிடம் பேச நெருங்கினாலும்கூட அவர்களிடம் பேசும்போது மற்றவர்கள் அன்பு காட்டும் அளவிற்கு அவர்களை மாற்றக்கூடிய பாங்கோடு அவர்கள் நடந்துகொண்டு இருந்தார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிடுவது என் கடமையென நான் எண்ணுகிறேன்.

அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே இருந்திருக்க வேண்டியவர்கள், அந்த வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்காமல் போனது இந்தச் சட்டமன்றம் செய்த துரதிருஷ்டம் என்றுகூட நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப்பட்டவருடைய இரங்கலுக்காக நாம் இரங்கல் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய தியாகத்தை மதிக்கின்ற வகையில் நாம் இங்கே நமது செயலின் மூலமாக சில காரியங்களைச் செய்வோமானால் அது அவர்களுக்குச் செய்கின்ற கடமையாக இருக்கும் என்று கூடச் சொல்வேன்.

அதுபோல் மறைந்த திரு. கக்கன் அவர்கள்—இங்கே அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூறியதுபோல்—பதவி எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் எவ்வளவு வாய்ப்பு வசதி இருந்தாலும் அதைத் தனக்காகப் பயன்படுத்திக் கொள்ளாது வாழவேண்டுமென்ற ஒரு நல்ல பண்பை உலகத்திற்கே எடுத்துக்காட்டும் வகையில் வாழ்ந்து, பதவியில் இல்லாத நேரத்திலே அவர் ஒரு சிறிய வீட்டில் அல்ல, ஒரு அறையில் குடியேறவேண்டிய அளவிற்கு எளிமையாக தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் நினைவுகூர்வது மூலம் அது நம் எல்லோருக்கும் ஒரு பாடமாக அமையும் என்று கருதுகிறேன்.



1982 பிப்ரவரி 2] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அப்படிப்பட்டவருடைய குடும்பம் துயரத்திற்கு சூழ்நிலையால் ஆளாகிறது என்றால், அதைத் தவிர்க்கவேண்டியதும், அதை மாற்றவேண்டியதும் நம் அனைவருடைய பொறுப்பு என்பதிலே எனக்குச் சந்தேகமில்லை. அந்தப் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதிலே இங்கே நான் உறுதிகூறப் பின்வாங்கவில்லை. இங்கே மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கூறியதுபோல் அவருடைய வாழ்க்கைத் துணைவியார் இறுதிக்காலம் வரையில் அந்த வீட்டிலேயே இருப்பதற்கு இந்த அரசு வாய்ப்பு அளிக்கும் என்பதையும் அதோடு மட்டுமல்லாமல் திரு. கக்கன் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்த மாத ஊதியம்—மாத ஊதியம் என்று சொல்லமுடியாது, சாணிக்கை என்று சொல்வது பொருத்தமாக இருக்குமென கருதுவோமானால் அதை இந்த அரசு தொடர்ந்து அந்த அம்மையாருக்கு அளிக்கும் என்பதையும் இங்கே எடுத்துக்கூறி, இருவருடைய மறைவிற்கும் அஞ்சலி செலுத்துகின்ற இந்த இரங்கல் தீர்மானங்களில் என்னுடைய உணர்வையும் சேர்த்துக்கொண்டு நான் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு பேரவைத் முன்னவரும் மற்றக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய உணர்வையும் இணைத்துக் கொள்கிறேன்.

தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து மவுனமாக இரண்டு நிமிடங்கள் நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றன.

## (இ) முன்னாள் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா மறைவு (ஈ)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு எதிர்பாராத வகையில் திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் மறைந்து போயிருக்கிறார்கள். அதற்கான இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

16—6—1976 முதல் 8—4—1977 வரை தமிழ்நாடு ஆளுநராக இருந்த திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் இன்று காலை பிகானீரில் மரணம் அடைந்த செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் ஜூலை 31, 1916 ஆம் ஆண்டு பிறந்தார். உதயபூர், நாத்வாரா, பம்பாயிலும் கல்வி பயின்றார். அன்னார் இளைஞர் காங்கிரஸில் தீவிர பங்கு

எடுத்துக்கொண்டு 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் ஒன்றரை ஆண்டுகாலம் காவலில் வைக்கப்பட்டார். மேவார் மாநிலத்தில் உணவு பொருள் வழங்கல், பொதுப் பணித் துறை மற்றும் துயர் துடைப்பு மறுவாழ்வுத் துறை அமைச்சராக பதவி வகித்தார். இராஜஸ்தான் மாநிலத்தின் உதயபுரி நகரத் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உணவு பொருள் வழங்கல் மற்றும் பாசனம் உட்பட்ட விவசாய அமைச்சராக 1951–52-லும், 1952–54 இல் விவசாயம், வருவாய் மற்றும் பஞ்சத் துயர் துடைப்புத் துறை அமைச்சராகவும், பின் நவம்பர் 1954-லிருந்து ஜூலை 1971 வரை இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராகவும் பணி புரிந்தார்.

பிறகு 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதியிலிருந்து 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் 9 ஆம் தேதி வரை கர்நாடக மாநில ஆளுநராகவும், 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 15 ஆம் தேதி வரை ஆந்திர ஆளுநராகவும், 1976 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் நாளிலிருந்து 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் நாள் வரை நம் மாநிலத்தில் ஆளுநராகவும் இருந்தார்.

(முற்பகல் 10-00)

அன்னார் இன்று காலை இராஜஸ்தான் மாநிலத்தில் பிகானீர் நகரில் இயற்கையெய்தினார். அவர் சிறந்த அரசியல்வாதியாகவும், திறமைமிக்க நிர்வாகியாகவும் விளங்கினார். அவர் தற்பொழுது நாடாளுமன்றத்தில் உறுப்பினராகவும் இருந்தார். அன்னார் மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து மவுனமாக இரண்டு நிமிடங்கள் நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றதின் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் 15 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் காலை 10-20 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை காலை 10-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





காலை 10-20 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## (உ) வினாக்கள் விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மின்கட்டண ஆய்வுக்குழு.

*வினா எண் 1—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மின் கட்டணத்தை திருத்தி அமைக்க மின் கட்டண ஆய்வுக்குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் குழு அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதா?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்ட் (ஆ) ஆம்.

(இ) மின் கட்டண ஆய்வுக்குழு அரசுக்கு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மின்கட்டண சீரமைப்பு குறித்து இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தது. இவற்றை ஏற்று 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குழுவின் இறுதி அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்திக்காகும் அடக்க விலையை விட அதனுடைய விநியோக விலை எந்தக் காரணத்தைக் கொண்டும் குறையக் கூடாது என்று மத்திய குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில்தான் இந்த மின் கட்டண ஆய்வுக் குழு அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. பொதுவாக மின்சார உற்பத்தியின் அதிகச் செலவுக்குக் காரணம், நிலக்கரி விலை, பெட்ரோலியம் போன்ற மூலப் பொருள்களின் விலை, மற்றும் சரக்குக் கட்டணத்தினுடைய விலை உயர்வுதான் என்று தெரிகிறது. எனவே, இதுபோன்ற மூலப் பொருள்களை, மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கும்போது, குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்துமா? அதற்காக இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முக்கியமாக மின் வாரியத்திற்குச் செலவு கூடுதலாவது, அவ்வப்போது, மத்திய அரசு, நிலக்கரி விலையை உயர்த்துவது, ரெயில்வே கட்டணத்தை உயர்த்துவது, அதே போல் பாய்லர்களுக்குத் தேவையான 'ஃபர்னேஸ் ஆயில்' இவைகளின் விலையை உயர்த்துவது என்கிற நடவடிக்கைகளின் காரணமாகவும் பெரும் செலவுகளுக்கு ஆளாகி இருக்கிறோம். அண்மையில் நடந்த மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அரசு நடத்துகின்ற பொது நிறுவனங்களில் இத்தகைய நிலக்கரி விலையை உயர்த்துகிறபொழுதோ அல்லது ஆயில் போன்றவைகளின் விலையை உயர்த்துகின்றபொழுதோ, கூடுமான வரையில் மாநிலங்களையும் கலந்து ஆலோசித்தபிறகு அவர்கள் முடிவெடுத்தால் நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், மத்திய அரசைப் பொறுத்த வரையில், மாநில மின்சார வாரியங்களிடமிருந்து சுலபமாகப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், மாநிலங்களைப் பொறுத்தவரையில் பல இலட்சக்கணக்கான மக்களிடமிருந்து அந்த நிதியைப் பெற வேண்டியிருக்கிறது. எந்த அளவு பயனீட்டாளர்கள் தாங்குவார்கள் என்பதை மாநிலங்கள்தான் உணர்கின்றன. எனவே, மாநிலங்களைக் கலந்து கொண்டு, அந்தக் காரியங்களைச் செய்வது நன்றாக இருக்கும் என்று மத்திய அரசுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தி, விநியோகம் ஆகிய இரண்டையும் ஒரு மத்திய அமைப்பின்கீழ் கொண்டு வர மத்திய அரசு முடிவெடுத்திருப்பதாகக் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு உயர் அதிகாரி பத்திரிகைகளிலே பேட்டி கொடுத்திருக்கிறார்கள். எனவே, அப்படி மத்திய அமைப்பின் கீழ் கொண்டு வரும்போது, நம்முடைய அரசு நேரடியாக சில சாதனைகளைச் செய்வது தடைப்படும் என்ற கருத்தில் இதுகுறித்து ஏதேனும் ஆட்சேபனையை நமது அரசு தெரிவித்திருக்கிறதா? அதில் நம்முடைய அரசின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நானும் அந்தத் தகவலைப் பத்திரிகையிலேதான் பார்த்தேன். அதைப் போல் எந்தத் தகவலும் நம்முடைய அரசுக்கு வரவில்லை. மத்திய அரசு மாநில அரசுகளின் விவகாரங்களில் தலையிடுவதைவிட அவர்களுடைய வேலைகளில் கவனம் செலுத்துவது நல்லது.

திரு. இரா. கருப்பையா : "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் கட்டணம் திருத்தி அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவில் அங்கம் பெற்றவர்கள் யார், யார் என்பதை





அறிவிக்க இயலுமா? மற்றும், அதனுடைய ஆய்வுரைகள் என்ன என்பதைத தற்சமயம் அமைச்சர் அவர்கள் சபைக்கு அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கின்றவர்கள் மின் வாரியத் தலைவர், பொதுப பணித் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், தொழில் துறைச் செயலாளர், கணக்கு உறுப்பினர், மின் வாரியம், தொழில் நுட்ப உறுப்பினர், மின வாரியம், பேராசிரியர் டி.ஆர். இராசகோபாலன், திருச்சி, நிதிக் கட்டுப்பாட்டாளர் (வரவு) மின் வாரியம் ஆகியோராவர்.

ஏற்கனவே, இடைக்கால அறிக்கை கொடுத்து, அதிலே ஒவ்வொரு பயனீட்டாளருக்கும் ஓரே சீரான கட்டணத்தை, அதாவது மீட்டர் வாடகை போன்றவற்றை மாற்றி, ஓரே கட்டணமாக வசூலிக்கலாம் என்று பரிந்துரை கொடுததார்கள். அதை ஏற்றுக் கொண்டோம். இன்னும் மேற்கொண்டு கூடுதலாக இருக்கக்கூடிய செலவுகளைக் கருத்தில் கொண்டு, எந்த எந்த வகையில் மின் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் குறைவாக வசூலிப்பதால் அரசுக்கு 1981—82-ல் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு? தமிழ்நாட்டில் வசூலிப்பது மற்ற எந்தெந்த மாநிலங்களில் வசூலிப்பதை விட குறைவாக உள்ளது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980—81-ல் குறைவாக மின்கட்டணம் வசூலித்ததினால் ஏற்பட்ட வருவாய் இழப்பு 106 கோடி ரூபாய். 1981—82-ல், 117·81 கோடி ரூபாயகள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இநதத் தகவல் தரப்பட்டிருக்கிறது. குறிப்பாக மற்ற மாநிலங்களைப் பற்றிக் கேட்டார்கள். அது மிகப் பெரிய புள்ளிவிவரமாக இருக்கின்றது. அதனால்தான் ஆளுநர் உரையில், மற்ற மாநிலங்களை பற்றி எண்ணிப் பார்ககிற போது, தமிழகத்திலே உள்ள மின் வருவாய் கட்டண விகிதம் குறைவாக உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு பெ.சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் கட்டணத்தைத் திருத்தி அமைப்பதற்காக, இந்த அய்வுக்குழு போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வுக் குழுவினர் மின்வாரியத்திற்கு வரக்கூடிய நஷ்டங்களை மட்டும ஆராய்ந்தார்களா? அல்லது

[1982 பிப்ரவரி 2

மின்சாரம் உபயோகிப்பவர்களுடைய கஷ்டங்களையும் ஆராய்ந்து கட்டணத்தை உயர்த்த இருக்கிறார்களா? அதைப்பற்றி யோசிக்க அரசாங்கம் அவர்களுக்கு அறிவுரை வழங்கி இருக்கிறதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கஷ்டங்கள் நஷ்டங்கள் இரண்டையும் ஆராய்ந்தார்கள்.

திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அமைப்பில், அந்தக் குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் அதிகாரிகளைத் தவிர, ஒரு பேராசிரியர் இருக்கிறார் என்று தெரிகிறது. இந்தக் குழுவிலே அனைத்துக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற அரசு ஆவன செய்யுமா? அதோடு மட்டுமல்ல இந்த மின்கட்டண உயர்வு என்பது, அந்த மின்வாரியத்திற்கு அதிகமான ஊழியர்களை நியமிப்பதன் காரணமாகவும் மற்றும் கட்டட வேலைகளுக்கு செலவழிக்கப்பதும்தான் மின் கட்டணம் உயர்வதற்கு காரணம் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அதிகாரிகள் மட்டும்தான் அந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து மின் கட்டண உயர்வுக்குப் பரிந்துரை செய்தால் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கக்கூடாது என்பதல்ல. மின்வாரிய ஆலோசனைக் குழு இருக்கிறது. அதிலே அனைத்துக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அதிலும் இதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மின்வாரியத்திற்கு இழப்பு எப்படி ஏற்படுகின்றது என்ற விவரங்களைப் பற்றி இந்தக் கூட்டத்தொடரில் மின்சார வாரியத்தின் வரவு செலவுத் திட்டம் விவாதத்திற்கு வரும் என்று கருதுகிறேன். அப்போது விரிவாகப் பேசிக்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: Is it not a fact that the staff in Electricity Board is very much more than what is required? If so may I know what Government proposes to do now?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறோம்.



1982 பிப்ரவரி 2]

கப்பலூரில் உபமின்நிலையம் நிறுவும் திட்டம்.

*வினா எண் 2—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருமங்கலம் அருகே கப்பலூரில் மின்சார உபநிலையம் Sub-Station துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) அண்ட் (ஆ): தென் மதுரையிலும் திருமங்கலம் வட்டாரங்களிலும் உள்ள பசுமலை, திருமங்கலம், கப்பலூர் மற்றும் செக்கானூரணி ஆகிய இடங்களை இணைத்து கப்பலூரில் 110 கி.வா. உப மின் நிலையம் ஒன்று நிறுவ ஊரக மின கழகம் ( R.E.C ) திட்டம் சீர்ப்படுத்தல் பிரிவின் கீழ் பிப்ரவரி 1981-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஊரக மின் கழகம் ரூபாய் 58·743 லட்சம் கடன் வழங்கியுள்ளது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, மின் உற்பத்தி செய்வதற்குத் தனியார் யாருக்காவது லைசன்சு கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

[முற்பகல் 10—30]

திருவில்லிபுத்தூர் யூனியனில் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 3—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிபுத்தூர் யூனியனில் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பிக்க விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவு சங்கம் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் அன்று பதிவு செய்யப்பட்டு 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் முதல் அங்கு செயல்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டுப் பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதன் மூலமாக ஒரு ஏக்கருக்கு 10,000 கூடுகள் அல்லது 400 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது என்றும், ஜப்பான் நாட்டுப் பூச்சிகளை வளர்த்தால் ஒரு ஏக்கருக்கு 17,000 கூடுகள் அல்லது 700 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆகவே, ஜப்பான் பட்டுப் பூச்சிகளை அதிக அளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைப் பரிசீலித்து, அது உகந்ததாக இருந்தால் செயல்படுத்தப்படும்.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூச்சி வளர்ப்பு பற்றி விவசாயிகள் அறிவதற்காக சினிமாப் படம் எடுக்கப்படும் என்று முன்பொருமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்மிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

கொமாரபாளையத்தில் நிறுவப்படும் பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண் 4—திரு. ஆர். அரங்கசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சத்தியமங்கலம் தொகுதி, கொமாரபாளையம் கிராமத்தில் தேசிய பால்வள நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும் பால் குளிரூட்டும் நிலையத்தின் மதிப்பீடு என்ன ?

(ஆ) நாள் ஒன்றுக்கு எத்தனை லிட்டர் பால் சேமிக்க முடியும் ?

(இ) எப்பொழுது இந்த நிலையம் வேலையைத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சத்தியமங்கலம் தொகுதி கொமாரபாளையத்தில் நிறுவப்படும் குளிரூட்டும் நிலையத்தின் மதிப்பீடு ரூபாய் 24.875 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) இக்குளிரூட்டு நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்ப்படுத்தும் திறனுடையது.

(இ) இக்குளிரூட்டு நிலையத்தின் கட்டிட வேலை சிறிது காலத்திற்குள கட்டி முடிக்கப் பெற்று செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.





திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, குளிரூட்டு நிலையங்கள் இல்லாத காரணத்தால் பல இடங்களில் கிராமக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆரம்பிப்பது தடைபட்டு இருக்கிறது. இது ஆரம்பித்த பிறகாவது புதிதாக அங்கே பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே விடை அளித்தபடி கொமாரபாளையத்தில் ஒரு சில்லிங் சென்டரும், தாராபுரத்தில் ஒரு சில்லிங் சென்டரும் துவங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தாராபுரத்தில் சில்லிங் சென்டர் இன்னும் 15-20 நாட்களுக்குள் தொடங்கப்பட இருக்கிறது. சத்தியமங்கலம் தொகுதி கொமாரபாளயைத்தில் விரைவில் ஒரு சில்லிங் சென்டர் தொடங்கப்பட இருக்கிறது. இந்த இரண்டும் தொடங்கப்படுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னது போல் அங்கே விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படும்.

சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 5—திரு. பொ. விஜயராகவன், திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக காடுகளில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி சந்தனத் தைலம், சந்தனப் பவுடர், சந்தன சோப் ஆகிய பொருட்களைத் தயாரிக்கும் அரசுத்துறை தொழிற்சாலையை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தமிழக காடுகளில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி சந்தனத் தைலம் தயாரிக்கும் திட்டம் மட்டுமே அரசிடம் உள்ளது.

(ஆ) இத்தொழிற்சாலையை வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அருகே நிறுவ, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் அரசால் பணிக்கப்பட்டுள்ளது.

[1982 பிப்ரவரி 2

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, இங்கே
நம்முடைய அரசால் கொடுக்கப்பட்டு இருக்கிற புள்ளி விவரப்
புத்தகத்தில் சந்தனத் தைலம் எடுக்கின்ற தொழிற்சாலை ஏற்
கெனவே இருப்பதைப்போல் ஓர் அறிவிப்பைக் கொடுத்துள்ளார்
கள். ஆனால், இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்
பார்த்தால் வட ஆற்காடு மாவட்டத்தில் இனிமேல்தான் தொடங்
கப்படும் என்பதுபோல் தெரிகிறது. இப்படி தொடங்கப்படுகிற
தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு எவ்வளவு சந்தனத் தைலம்
தயாரிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, இந்தத் திட்டம் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பே
அறிவிக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
மத்திய அரசு இதை சிறு தொழிலுக்கு ஒதுக்கி இருக்கிறோம்
என்று அறிவித்ததன் காரணமாக அதிலே இடையே தடையேற்
பட்டது. அதற்குப் பிறகு, அதை சிறு தொழிலாக அமைக்கலாம்
என்று முடிவு எடுத்து, 100 டன் சந்தனக் கட்டைகளைப் பயன்
படுத்தி, 4.5 டன் சந்தன எண்ணெய் உருவாக்கும் வகையில்
ஒரு ஆலையை அமைக்கலாம் என்று முடிவு எடுத்து, அதற்காக
22,85 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டது. அதற்குப்
பிறகு, 4·5 டன் சந்தன எண்ணெய் தயாரித்தால் அதிலே நஷ்டம்
தான் ஏற்படும் என்கிற விவரம் நிபுணர்களால் தெரிவிக்கப்பட்ட
தால், 400 டன் கொள்ளளவு உள்ள சந்தனத் தொழிற்சாலையை
ஏற்படுத்தினால், அதன்மூலம் 18 டன் சந்தன எண்ணை தயாரிக்
கலாம், அதனால் இலாபம் கிடைக்கலாம் என்று சொல்லப்பட்ட
தால், பின்னாலே அது பரிசீலிக்கப்பட்டது. அதையொட்டி
கடந்த ஆண்டு 400 டன் மரங்களைப் பயன்படுத்துகின்ற முறை
யில் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி, அதற்கு 49.99
இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, இந்தச் சந்
தனத் தைலத்தை மூலப்பொருளாகக் கொண்டு சோப் தயாரிப்
பது போன்ற துணைத் தொழில்களையும் தொடங்குவதற்குத்
திட்டங்கள் தயாரிக்க அரசு முயற்சி செய்யுமா? கர்நாடகம்,
கேரளம் போன்ற மாநிலங்களில் சோப் தயாரித்தல் போன்ற
துணைத் தொழில்களையும் செய்து பெரிய அளவில் இலாபம்
அடைகிறார்கள். அதைப்போல நம்முடைய மாநிலத்திலும்,
தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
இதுவரையில் சந்தனத் தைலம் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற
திட்டத்திற்குத்தான் ஆலை அமைக்கப்படுகிறது. இந்த ஆலை
தொடங்கிய பிறகு, அதிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற
தைலம் எந்த அளவுக்கு விற்பனையாகிறது என்பதைத் தெரிந்து,
பின்னால்தான் துணைத் தொழில்களைத் தொடங்குவது பற்றி
பரிசீலிக்க இயலும்.



1982 பிப்ரவரி 2]

திரு என். பழனிவேல்: : மாண்புமிகு தலைவரவர்களே, சந்
தனத் தொழிற்சாலை ஏற்படுத்துவது, சந்தன சோப் தயாரிப்பது
சம்பந்தமான இந்தக் கேள்விக்கு அமைச்சரவர்கள் வடாற்காடு
மாவட்டம் திருப்பத்தூரில் தொழிற்சாலை ஆரம்பிக்க இருப்ப
தாகச் சொன்னார்கள். மதுரை மாவட்டம் கொடைக்கானலி
லும், பழனியிலும் சந்தன மரங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன.
ஆகவே, மதுரை மாவட்டத்தில் ஒரு சந்தனத் தொழிற்சாலையை
ஆரம்பித்தால் அது உற்பத்திச் செய்வதற்கும் சுலபமாக இருக்கும்.
அதே நேரத்தில் அங்கே பயன்படுத்துகிறவர்களும் அதிகமாக
இருப்பதால் விற்பனையிலும் சிரமம் இருக்காது. ஆகவே,
அங்கே சந்தனத் தொழிற்சாலை அமைக்க அரசு மறுபரிசீலனை
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர்.எம். வீரப்பன்: தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல மதுரை
மாவட்டத்தில் கொடைக்கானல் மற்றும் பழனி வட்டாரங்களில்
அதிகமாக சந்தன மரங்கள் கிடைக்கவில்லை. வடாற்காடு
மாவட்டம், தர்மபுரி மாவட்டம், பெரியார் மாவட்டத்திலும்
உள்ள காடுகளில் சந்தன மரங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன.
ஆகவே, முதலிலே பரீட்சார்த்தமாக 400 டன் கொள்ளளவு உள்ள
தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கிற காரணத்தால், அது உற்பத்தி
செய்யத் தொடங்கிய பிறகுதான் மற்ற இடங்களில் ஆரம்பிப்
பது பற்றி மேலும் பரிசீலனை மேற்கொள்ள இயலும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சரவர்களுடைய பதிலில் மத்திய அரசு பெரிய தொழிற்
சாலை என்று கணக்கிலிருந்து விடுபட்டு, சிறிய தொழிற்சாலை
என்ற கணக்கில் இணைத்துக்கொண்டதால் காலதாமதம் ஏற்
பட்டது என்று சொன்னார்கள். அப்படி இருக்கும்போது சிறு
தொழில் என்ற அளவிலே நம்முடைய மாநிலத்தின் பல்வேறு
பகுதிகளில்—பெரியார், தர்மபுரி, வடாற்காடு மாவட்டங்களில்
அதிகமாக சந்தன மரம் கிடைக்கிற இடங்களில்—ஆரம்பித்து,
கர்நாடகத்திற்குத் தேவையான சந்தனக் கட்டைகள் எல்லாம்
கேரளத்திலிருந்தும், தமிழ்நாட்டிலிருந்தும் செல்லுகின்ற நிலை
மாறி, அந்த மரங்களை முழுமையாக இங்கேயே பயன்படுத்த
விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே,
சந்தன மரம் என்பது இயற்கையாக கிடைக்கிற ஒரு மரமாதுக்
அதுவும் இன்றைக்கு நாம் காய்ந்த மரங்களாகத்தான் எடுத்.
கொண்டிருக்கிறோம். ஆண்டு ஒன்றுக்கு 1,000 முதல் 1,500
டன் வரையில் இப்போது கிடைக்கிறது என்ற கணக்கு இருக்கிறது.
இப்படி பல்வேறு இடங்களில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்
படுவதாக இருந்தால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில்
மூலப்பொருள்கள் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படலாம்.

(முற்பகல் 10–40)

இப்போது கர்நாடக மாநிலத்திலே அவர்களுக்கு அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அவர்களுடைய தொழிற்சாலைகள் முழு அளவுக்கு இயங்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. மேலும் ஒரு பெரிய சிக்கலும், அச்சமும் இருக்கின்றது. அதாவது இந்தச் சந்தன மரங்களை மரமாகவே விற்றால் கிடைக்கின்ற ரூபாய், தொழிற்சாலை வைத்து எண்ணெயாகத் தயாரித்து விற்றால் கிடைக்குமா என்ற சந்தேகமும் இருக்கின்றது. மேலும் இயற்கையான சந்தன எண்ணெய் போன்றே இப்போது செயற்கையாக வாசனைப் பொருட்கள் எல்லாம் வந்துவிட்ட காரணத்தால் மக்களுக்கு இயற்கைப் பொருளிலே இருக்கின்ற மோகம் குறைந்து கொண்டிருக்கின்றது. இப்படிப் பல பிரச்சினைகள் இருப்பதால் பல இடங்களிலே தொழிற்சாலைகள் அமைக்கின்ற வகையிலே அகலக் கால் வைப்பதை விட ஒரு இடத்திலே தொழிற்சாலை அமைத்து அதன்பின் இருக்கின்ற நிலைமைகளைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகுதான் மேலும் அதிலே இறங்க முடியும்.

**திரு. ப. சுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலே சந்தனத் தொழிற்சாலை அமைப்பதாக ஓராண்டு காலமாக சட்டமன்றத்திலும் வெளியிலேயும் பேசப்பட்டு வருகின்றது. அதற்கான இடம் பார்க்கப்பட்டதா ? அது எப்போது ஆரம்பிக்கப்படும் ? அந்தத் தொழிற்சாலை ஆரம்பித்தால் எத்தனை. பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூருக்கு அருகிலே இருக்கின்ற ஒரு இடத்தைப் பார்த்து தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே இப்போது தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகத்தைக் கிளப்பி இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரச்சினைகள் எல்லாம் பரிசீலிக்கப்படுகின்ற காரணத்தாலேதான் தாமதம் ஏற்படுகின்றது. 100 டன் என்பதை 400 டன் கெப்பாசிட்டி கொண்ட தொழிற்சாலையாக மாற்றுவதற்கு சிறிது காலம் பிடித்திருகின்றது. ஆகவே எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற விவரங்கள் எல்லாம் அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை. இடம் உறுதி செய்யப்பட்ட பிறகுதான் அந்தத் தகவல்களைத் தர இயலும்.

**திரு ப. நெடுமாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருந்து சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு விதித்திருந்த தடையினை நீக்க வேண்டும் என்று தமிழக அரசு கோரிக்கை விடுத்திருப்பதாக மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத்திலே சொன்னார்கள். அந்தக் கோரிக்கை என்ன ஆயிற்று என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கை இன்னும் மத்திய அரசினுடைய காதிலே விழாமல்தான் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு என். பழனிவேல் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் இயற்கையாக உண்டானதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மற்ற கனி வர்க்கங்கள் எல்லாம் ஒட்டு முறையிலே பயிர் செய்யப்படுகின்றது. அதுபோன்று இந்த மரத்தினையும் ஒட்டாக வைத்து வளர்ப்பதற்கு ஏதாவது பண்ணைகள் மூலம் முயற்சி செய்யப்பட்டதா ? செய்யப்படாமல் இருந்தால் இனியாவது செய்யப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சந்தனத் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட கேள்வி நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே விவசாயம் சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்காதீர்கள்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மத்திய அரசின் காதிலே விழவில்லை என்று கூறினார்கள். விழும்படியாக நமது மாநில அரசு ஏதாவது ஏற்பாட்டினைச் செய்தார்களா ? அப்படி ஏதாவது ஏற்பாடுகளைச் செய்திருந்தால் அது சம்பந்தப்பட்ட பேப்பரை இங்கே வைப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாகச் சொல்லி வருகிறோம். டெல்லியிலே நடைபெற்ற மாநாடுகளிலே கூட அமைச்சர்களை நேரிலே சந்தித்து சொல்லி இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதற்குப் பிறகும் என்ன முயற்சிகளை மேற்கொண்டால் அவர்களுடைய காதிலே விழும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் தெரிவிக்க வேண்டும்.

**வள்ளுவர் கோட்டம் மூலம் கிடைத்த வருமானம்.**

*வினா எண் 6—**திரு பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு வருமானம் வந்துள்ளது ?

(ஆ) அதை மேம்படுத்தும் எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் கிடைத்துள்ள வருமானத்தின் விபரம் :—

| | | |
|---|---|---|
| 1979–80 | .. | ரூபாய் 3,59,121.50 |
| 1980–81 | .. | ரூபாய் 3,30,223.75 |

(ஆ) வள்ளுவர் கோட்டத்தில் கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள விரிசல்கள், ஒலி அமைப்புக்கள் போன்ற குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பின்புறத்தில் ஒரு அங்காடிக் கட்டிடம், ஒரு சிறிய அரங்கம் முதலியவற்றைக் கட்டுதல் போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலவற்றை இங்கே அறிவித்தார்கள். வள்ளுவர் கோட்டத்தினைப் பார்க்க வருகின்றவர்கள் நம்முடைய மாநிலத்து மக்கள் மட்டுமல்லாமல் வெளி மாநிலத்து மக்களும் பார்க்க வருகின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. ஆனால் சுற்றுப்புறம் கூட சரியாகப் பராமரிக்கப்படாமல் குப்பை மேட்டுக்கிடையிலே இருக்கின்ற கோட்டமாக அது காட்சியளிக்கின்றது. அதை நல்ல நிலைமையிலே பராமரிக்கவும் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுப்பார்களா? கார்டன் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? அங்காடி என்று சொல்வதை எல்லாம் கைவிட்டுவிட்டு பார்க் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறம் சரியாக இல்லாத இடத்திலே கொண்டு போய் வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி விட்டார்கள். அதனால் சுற்றுப்புறத்தை சரி செய்ய மிகுந்த சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி மிகப் பெரிய பள்ளங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளங்களை நிரப்பிக் கொண்டிருக்கும் வேலையில் தற்போது ஈடுபட்டிருக்கிறோம். அதனால்தான் சுற்றி குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது. அவைகளை சமப்படுத்திய பிறகுதான் அழகுபடுத்தும் வேலைகள் செய்ய வேண்டும். அதன் அருகாமையிலும் காலி இடங்கள் கிடையாது. ஆகையினால் சுற்றுப் புறத்தை முதலில் சமப்படுத்தும் முயற்சியோடு, வேறு கட்டிடங்கள் அங்கே வந்து விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

குப்பைகளைக் கொட்டி நிரம்பிய இடங்களில் வேறு பல துறைகளைச் சேர்ந்தவர்கள், அங்கே தாங்கள் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி கேட்கிறார்கள். அங்கே யாரும் கட்டிடம்



கட்டிக் கொள்ள முயல வேண்டாம் என்று மற்ற துறைகளுக்கும் தெரிவித்து இருக்கிறோம். வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி நல்ல பூங்காவாக அமைக்க வேண்டும், அழகுபடுத்த வேண்டும், அப்படிச் செய்தால் மிக நன்றாக இருக்கும். வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கும், மற்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் பார்ப்பதற்கு அப்போது மிக நன்றாக இருக்கும் என்ற வகையில் ஒரு திட்டத்தை தீட்டி தர வேண்டும் என்று பொதுப் பணித் துறையிடம் கேட்டிருக்கிறோம். அவர்களும் விரைவில் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

அது தவிர, அங்காடிக்கான கட்டிடம் கட்டவிருப்பதாக நான் சொல்வது வள்ளுவர் கோட்டத்தின் பின் பக்கத்திலே. அதன் முன்னாலே இருக்கும் இடம் மிகக் குறுகலானது. அதிலே பல கடைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தின் கீழ், பின்னாடி அங்காடிக்கான கட்டிடங்களைக் கட்டினால், வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கும் அவைகள் வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில், வள்ளுவர் கோட்டத்தின் பின்னாலே குடிசைகள் கட்டிக் கொண்டிருந்தவர்களை காலி பண்ணியிருக்கிறோம். அந்த இடத்திலேதான் அங்காடிகள் கட்ட வேண்டும் என்கிற திட்டம் இருக்கிறது.

திரு ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் வருடம் ஜூன் மாதத்தில் அங்கே வள்ளுவர் கோட்டத்தில் கட்சியின் சார்பாக ஒரு வார காலம் விழா எடுப்பதற்கான ஒத்திகை நடைபெற்றதற்கு......(குறுக்கீடு-மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தில் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை எழுப்ப வேண்டாம். மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

திரு ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, அதற்கான வாடகை வசூலிக்கப் பெற்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்கிற கேள்விக்கு என்னிடத்திலே தகவல் இல்லை.

### நகர்ப்புற கழிவு நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

*வினா எண் 7—திரு இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகர்ப்புற கழிவுநீர் விவசாயத்திற்கு நேர்முகமாக உபயோகிக்க ஆராயப்பட்டதா ?

(ஆ) இதை உபயோகிப்பதனால் எவ்வளவு ஏக்கர் பயிர் செய்ய நீர் வசதி ஏற்படும் ?

[1982 பிப்ரவரி 2

**மாண்புமிகு திரு கா. காளிமுத்து:**

(அ) நகர்ப்புற கழிவு நீரை நேரடியாக உபயோகிப்பதனால் விஷக் கிருமிகளினால் ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே அதனை தெளிவுபடுத்தி தற்போது விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது நகர்ப்புற கழிவு நீரை பாசனமாகக் கொண்டு சுமார் 512 ஹெக்டேரில் பயிர்ச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இதனால் எவ்வளவு ஏக்கர் பயிர் செய்ய வசதி ஏற்படும் என்ற விவரத்தைக் கேட்டிருந்தேன். அதற்கான தகவல் அமைச்சரிடம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தேன் 512 ஹெக்டேரில் பயிர்ச் சாகுபடி செய்யப்படுகிறது என்று.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா ? அல்லது அதற்கான சாத்தியக் கூறுகள் ஏதாவது இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மேலும் அபிவிருத்தி செய்ய திட்டம் இருக்கிறது. ஆனால் ஆராய்ச்சித் துறையினரின் கருத்துப்படி இந்தக் கழிவு நீரை சாகுபடிச் செய்ய அதிகமாகப் பயன்படுத்தினால், நிலத்தடி நீர் பாதிக்கப்படக்கூடும் என்ற எண்ணமும் இருப்பதால், இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கழிவு நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தி எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த கிராமங்களில் எத்தனை ஏக்கர்கள் நிலம் சாகுபடிச் செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு, கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இது நகர்ப்புறங்களிலே செய்யப்படுகிற ஏற்பாடு.



1982 பிப்ரவரி 2]

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர்ப்புற கழிவு நீரைக் கொண்டு, மதுரை மாநகரிலே அவனியாபுரம் என்னும் இடத்திலே கால்நடைகளுக்கான தீவனம் மிகப் பெரிய அளவிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அதுபோலவே இதர நகர்ப்புறங்களிலேயும், கழிவு நீரைப் பயன்படுத்தி கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, சென்னை மாநகர், மதுரை மாநகர் கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் ஏனைய 17 நகராட்சிகளிலேயும், இப்படி நகர்ப்புற கழிவு நீரை பயன்படுத்தி புல் போன்ற கால்நடைத் தீவனங்களை, விளைவிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதை அதிகரிப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10.50.)

**திரு ஏ. டி. குலசேகர்: :** கோவை நகரத்தில் வெள்ளலூர் பகுதியில் கழிவு நீருக்காக இதுவரை எவ்வளவு ஏக்கர்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு கா. காளிமுத்து :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

**1979-80-ல் அரசு பண்ணைகளில் சாகுபடி செய்யப்பட்ட உணவுப் பயிர்களின் அளவு.**

* வினா எண் 8—**திரு என். பழனிவேல் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பண்ணைகளில் 1979–80 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்கள் எத்தனை ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்டது?

(ஆ) அதன் உற்பத்தித் திறன் என்ன ?

(இ) அதனால் அரசுக்கு லாபமா ? நட்டமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) 4,366 ஏக்கர்கள்.

(ஆ)

| பயிர்கள். | சராசரி ஏக்கர் விளைச்சல். கிலோ. |
|---|---|
| நெல் .. .. .. .. | 1,018 |
| சிறுதானியம் .. .. .. | 391 |
| வீரிய ஒட்டு சிறுதானியம் .. | 470 |
| பயறு வகைகள் .. .. | 61 |
| காய்கறிப் பயிர்கள் .. .. | 236 |

(இ) நட்டம்.

[1982 பிப்ரவரி 2

திரு. என். பழனிவேல் : அமைச்சர் அவர்கள் 4,366 ஏக்கருக்கு சராசரி 1,018 ஏக்கர் உற்பத்தியானதாகச் சொன்னார்கள். இது சாதாரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்வதை விட அதிகமா அல்லது கம்மியா ? நஷ்டம் என்று சொன்னார்கள் பொதுவாக. அது ஆண்டு வாரியாக எவ்வளவு நஷ்டம் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பண்ணைகளைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பது நோக்கமாக இருக்கிற காரணத்தால் மற்ற விவசாயிகள் செய்வதைவிட இது சற்று அதிக உற்பத்திச் செலவை பெற வேண்டியிருக்கிறது. ஆகவே இழப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதிலுள்ள நிலங்கள் பெரும்பாலும் புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்கள், நீர்ப்பாசன வசதி கிடைக்க முடியாத நிலங்களாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் இப்போதுதான் சீர்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒட்டு மொத்தமாகப் பார்க்கப் போனால் இதில் விதைக் கிடங்குகள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் இவற்றிற்கான முதலீட்டுத் தொகைக்கு வட்டியும், விதைக் கிடங்குகள் மற்றும் கருவிகளின் தேய்மான தொகையும் செலவினமாக எடுத்துக் கொள்ளப்படுவதால் இந்த இழப்பு ஏற்படுகிறது. அலுவலர்களுக்கான செலவு என்பதை மட்டும் பார்க்கிறபோது 1979—80-ல் ரூ. 3.47 இலட்சம் இலாபத்தில் இயங்கியுள்ளன. வருகிற ஆண்டு கூட ஐந்து லட்சம் ரூபாய் இலாபம் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : கட்டடங்கள் போன்ற செலவுகளை நீக்கி இலாபம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்தத் தொழில் இலாபகரமாக இயங்குகிறது என்று நான் கருதுகிறேன். இந்தச் சூழ்நிலையில் நேற்றைய பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் தஞ்சை மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் உள்ள பண்ணைகளில் பணி புரியக்கூடிய தொழிலாளர்களை வேலையை விட்டு நிறுத்தியிருப்பதாகவும் இதன் காரணமாக அந்தக் குடும்பங்கள் நடுத் தெருவில் நிற்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இந்நிலை ஏன் ஏற்பட்டது ? இந்நிலையை நீக்கி சட்டபடி அவர்களுக்குண்டான உரிமைகள் அவர்களுக்கு கிடைப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதைத் தனியாக ஆராய வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அதைப் பற்றி அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.



1982 பிப்ரவரி 2]

திரு. நா். சுந்தரராஜ் : பல ஆண்டுகளுக்கு முன்பு அரசுப் பண்ணை ஒன்று என் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக பல இலட்சக்கணக்கான ரூபாயில் கட்டடங்கள் கட்டப்பட்டு இன்று அப்பண்ணை செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆராயப்படும்.

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.

*வினா எண். 9 திரு. து. புருஷோத்தமன், திரு. செ. செம்மலை, திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணெய் வித்துக்கள் 1978—79, 1979—1980 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி அளவு எவ்வளவு ?

(ஆ) உற்பத்தியை பெருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

திரு து. புருஷோத்தமன் : கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் இவைகள் எல்லாம் ஏழைகள் வாங்கமுடியாத அளவிற்கு அவற்றின் விலைகள் ஏறியிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? ஆகவே, அவற்றின் உற்பத்தியை தீவிரப்படுத்த புதுத் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா ? அதே போல் மத்திய அரசு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்கிறது. தேங்காய் எண்ணெய் விலை ஏறாமல் இருக்க மத்திய அரசிடமிருந்து தேவையான அளவு, அதிகப்படியான அளவில் தேங்காய் எண்ணெய் பெறுவதற்கு திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து : எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகமாக்க வேண்டும் என்பதற்காகத்தான் எண்ணெய் வித்துத் துறை என்பது நிறுவப்பட்டு 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளிலிருந்து அது இயங்கிக் கொண்டிருக்கிறது. வித்துக்கள் அதிகமாக உற்பத்தியாவதற்குரிய வகையில்

* 129 மற்றும் 130 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

பல்வேறு சலுகைகள் வேளாண் பெருமக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதே போல் தென்னை உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இத்திட்டங்கள் எல்லாம் வெற்றி பெறுமானால் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் எண்ணெய் விலையைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் நிச்சயமாகக் கிடைக்கும்.

**திரு து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்வதாக அறிகிறேன். எனவே, மத்திய அரசிடமிருந்து தேங்காய் எண்ணெயை அதிகமாகப் பெற்று, ஏறிக் கொண்டிருக்கும் அதனுடைய விலையைக் குறைப்பதற்கு ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வேறு துறையிடம் கேட்க வேண்டிய கேள்வி.

**திரு செ. செம்மலை :** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற திட்டங்களோடு, எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயிகளுக்கு ஏதாவது இன்சென்டிவ் அதாவது மானிய உதவி வழங்குகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அப்படி வழங்கப்பட்டு வருகின்றது. பயிர் பாதுகாப்புக்கானப் பூச்சி, நோய் கொல்லி மருந்துகள் பாதி விலையில் எண்ணெய் வித்து சாகுபடியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், ஒட்டு மொத்தமாக பூச்சி மருந்தடிக்க மானியம் ஹெக்டேருக்கு ரூபாய் 15 வீதம் வழங்கப்படுகிறது. 1981 82-ஆம் ஆண்டில் 50,000 ஹெக்டேரில் 9 மாவட்டங்களில் ஒட்டு மொத்த பூச்சி, மருந்தடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைப்போலவே, தரமான வித்துக்கள் மூலமே உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை நன்கறிந்து 4,500 டன் தரமான நிலக்கடலை விதை, 50 டன் எள் விதை, 900 டன் சூரியகாந்தி விதை, 23 டன் ஆமணக்கு விதை நடப்பு ஆண்டில் வழங்கத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு செ. செம்மலை :** பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில், கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஏதாவது செயல்பட்டு வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?





**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, செயல்பட்டு வருகின்றது.

**திரு இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சமையலுக்குப் பயன் படுத்தும் பாமாலின் எண்ணெய், மலேசியாவிலுள்ள பனங்கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. தமிழகத்திலும் கோடிக்கணக்கான பனைமரங்கள் இருக்கின்றன. எனவே, இங்குள்ள பனங்கொட்டைகளிலிருந்து அத்தகைய பாமாலின் எண்ணெய் தயாரிக்கின்ற செயற் குறிப்பு உண்டா ? அதற்கான பூர்வாங்க ஆராய்ச்சி ஏதாவது செய்யப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, செம்பனை சாகுபடியை ஊக்குவித்து "பாமாலின்" எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்ள திட்டம் ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, மலேசியாவிலுள்ள சீதோஷ்ண நிலை தமிழ்நாட்டிலேயும் உள்ளதால், இங்கும் அத்தகைய பனை மரங்களை பயிரிடுவதற்கான யோசனை தமிழக அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே அத்தகைய பருவ நிலைகள் கொண்டுள்ள கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இம்மரங்களை வளர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்த அரசு தயாராக இருக்கிறது.

**திரு ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரெட் ஆயில் பாம் அமைப்பதற்கான இடங்கள் பார்க்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு, வன இலாகாவிலிருந்து அந்த இடத்தைப் பெறுவதற்காக அவர்கள் குறிப்பு அனுப்பியிருந்தார்கள். வன இலாகாவிலிருந்து அந்த இடத்தைப்பெற்று பாம் மரங்கள் பயிரிடுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அந்த முயற்சி மேற்கொள்ளப்படும். வனத் துறை இந்தத் துறைக்கு கருணை காட்டும் என்று நம்புகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே தீவிர எண்ணெய் வித்து சாகுபடிக்கும், நிலக்கடலை, சூரியகாந்தி போன்றவற்றிற்கும்

மத்திய அரசு உதவித் தொகை அளிப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி கொடுக்கப்படும் உதவித் தொகை, ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று இருக்கிறதா? அல்லது அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், ஏதாவது பூச்சி விழுந்தால் அதைப் போக்குவதற்காக மட்டும் உதவித் தொகை வழங்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் போன்றவைகளுக்கு அரசு மானியம் அளிக்கிறது. அதைப்போலவே, எண்ணை வித்துக்களை அதிகமாக்குவதற்குத் தேசிய பால் வள வாரியத்தின் உதவியோடு தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்விணையகம் ஜனவரித் திங்கள் 1981 முதல் இயங்கி வருகிறது.

திரு சோ. அழகர்சாமி : : தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையகம் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அந்த இணையகம் மேற்கொண்ட பணியின் காரணமாக, மேற்கொண்டு எந்த அளவுக்கு எண்ணை வித்துக்கள் அதிகரித்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்த இணையகம் நிலக்கடலை பயிரிடுவதை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டு வருகிறது. முதற்கட்டப் பணியாக, தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் இவ்விணையத் திட்டம் செயல்படுத்தப்படும் நிலைமை இருக்கிறது. உற்பத்தியாகக் கூடிய சூழ்நிலையோ அல்லது உற்பத்தி ஏற்பட்டது பற்றியோ இன்னும் தெளிவாகத் தமக்கு விவரம் கிடைக்கவில்லை.

**வேலையற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்.**

*வினா எண். 10—திரு செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேலையற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வழங்கும் திட்டம் என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் வேலைக்காகப் பதிவு செய்து கொண்ட வேலையற்றிருக்கும் விவசாயத் தொழிலாளர் மட்டு





மின்றி கிராமப்புறங்களில் வேலையற்றவருக்கும் பதிவு செய்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வேலை கொடுக்க இயலாவிட்டால் அப்படிப்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் அவர்களுக்கு வேலை கொடுக்கும் வரை ஒரு நபருக்கு ஒவ்வொரு நாளுக்கு 1 ரூபாய் மதிப்புள்ள அரிசி இனாமாக வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்தகைய மானியம் கொடுக்கும் நிலை இதுவரை ஏற்படவில்லை.

(முற்பகல் 11–00)

திரு செ. சிவசாமி : ஒவ்வொரு நாளுக்கும் வேலையற்ற விவசாயத் தொழிலாளிக்கு ஒரு ரூபாய் பெறுமான அரிசி கொடுக்கப் பெறுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இது நடைமுறையில் அமல்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை; இது எப்போதிலிருந்து அமலுக்கு வந்திருக்கிறது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : இந்தத் திட்டம், கடந்த 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து அமலாக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பொ. உத்திராபதி: அமைச்சர் அவர்கள் 1979 இல் இருந்து இந்தத் திட்டம் அமலாகி வருவதாகச் சொல்லுகிறார்கள். 1979-இல் இருந்து இதுவரை தமிழகத்தில் எவ்வளவு பேர் பதிவு செய்திருக்கிறார்கள்? அவர்களில் எவ்வளவு பேருக்கு இந்த உதவி அளிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : கடந்த 1981 அக்டோபர் மாதம் முடிய 2,53,26,000 மனித நாட்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரு கு. ரமணி : கிராமங்களில் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வேலையற்றோர் எவ்வளவு பேர் என்று கேட்டால் அமைச்சர் அவர்கள் மனித நாட்களைச் சொல்லுகிறார்கள். எவ்வளவு தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுக்க அமைச்சர் அவர்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ? அதற்காக என்ன அமைப்பு இருக்கிறது? எவ்வளவு பேர் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : நான் சொன்னதை சரியாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் புரிய வைக்க முடியவில்லையோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. இதிலே வேலை கொடுப்பது என்ற நிலை வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. ஃபுட் பார் ஓர்க் புரோக்கிராம் என்ற திட்டத்தின் அடிப்படையில் 30 நாட்களுக்கு

வேலை கொடுக்கப்படவில்லை என்றால் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் அளவுக்கு அரிசி கொடுக்கும் திட்டம். முப்பது நாட்களுக்கு முன்பாகவே எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும், கிராம நல ஊழியர்களிடம் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படிப பதிவு செய்து கொண்டவர்களுக்கு அப்போதிருந்து வேலை கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

திரு செ. சிவசாமி: இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வேலை கொடுக்கப்படாத நிலையில் எவ்வளவு அரிசி இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது? அதனால் எவ்வளவு பேர் இதுவரை பயன் பெற்றிருக்கிறார்கள்.?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ' வேலையற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வழங்கும் திட்டம் என்ன நிலையில் உள்ளது? என்பதுதான் கேள்வி? இந்தத் திட்டம் 1979 ஆம் ஆண்டில் இருந்து அமலாக்கப்பட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முடிய 2,53,26,000 மனித நாட்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதில் தரப்படும்.

திரு பாபு ஜனார்த்தனன் : வேலையற்ற விவசாயத் தொழிலாளர்கள் எவ்வளவு பேருக்கு ஒரு ரூபாய் வீதம் தொகை வழங்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு தொகை இதுவரை ரொக்கமாக தரப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: நான் ஏற்கனவே பதில் கொடுத்திருக்கிறேன். எவ்வளவு தொகை என்பதல்ல; ஒரு ரூபாய் அளவுக்கு அரிசி கொடுக்க வேண்டுமென்பது. ஆனால் அதைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதைத் தான் நான் குறிப்பிட்டேன். இந்தத் திட்டம் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் அடிப்படையில் செய்யப்பட்டு வருகிற காரணத்தால் அப்படி வேலை இல்லாத நிலை ஏற்பட்டு அரிசி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதைத்தான் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எல். இளையபெருமாள் : நம்முடைய அமைச்சர் அவர்கள் மனித நாட்கள் என்ற கணக்கைச் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது—எத்தனை விவசாயத் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டார்கள்? எவ்வளவு விவசாயத் தொழிலாளர்கள் இதனால் பலன் அடைந்



தார்கள்? அப்படிப் பலன் அடையாதவர்களுக்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது? இந்த வேலைத் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் முறைப்படி அரிசி கொடுக்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அமலாக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அதிலிருந்து உங்களுக்குப் புரிந்து இருக்கும். யாரும் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற நிலை தமிழகத்திலே இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் ஒன்றை நான் விளக்கமாகக் குறிப்பிட வேண்டுமானால் கிராம நல அலுவலரிடம் யார் யார் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்தார்களோ அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரிடத்திலே பதிவு செய்தவர்கள் யாரும் வேலையில்லாமல் இல்லை, என்று தெரிவித்த பிறகும்கூட எவ்வளவு பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று கேள்வி கேட்டால்—இவ்வளவு மனித நாட்கள் அதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்து இருக்கிறேன்—அதற்காக ஏறத்தாழ $2\frac{1}{2}$ கோடி மனித நாட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தான் சொல்ல முடியும். பதிவு செய்தவர்களில் யாருக்காவது வேலை கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து எவ்வளவு தொகை இதற்காகப் பெறப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் மானியம் மத்திய அரசால் கொடுக்கப்படுகிறது. 50 சதவீதம் மானியம் தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு எதுவும் கொடுப்பது இல்லை.

### கரூர் ரயில் நிலையத்தருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே, கட்டப்பட்டுள்ள பாலம்

*வினா எண் 11—திரு எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், கரூர் ரயில் நிலையத்தருகில், அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வெள்ளத்தால் பழுதடைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

(இ) அதுவரை அப்பாலத்தின் மீது, கார்கள், லாரிகள், பஸ்கள், மாட்டு வண்டிகள் செல்வதை அரசு தடை செய்யுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) புதிய பாலம் கட்டும் திட்டம் கரூர் நகராட்சியின் ஆய்வில் உள்ளது.

(இ) வாகனங்கள் போக்குவரத்தைத்தடை செய்து கரூர் நகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு எம். சின்னசாமி : இந்தத் திட்டத்திற்காக செலவிட அந்த நகராட்சியிலே பணவசதியில்லை என்ற தகவல் அரசுக்கு வந்ததா? அப்படி வந்திருந்தால் அரசு அதற்காக ஏதாவது உதவி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : அந்த நகராட்சியின் சார்பிலே ரூபாய் 30 இலட்சம் மானியமாகக் கொடுக்க வேண்டுமென்ற தாக்கீதுகள் வந்திருக்கின்றன. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பை-பாஸ் பாலத்திற்கு தடுப்புச் சுவர்கள் இல்லாததால் அதன் வழியாகச் செல்கின்ற வண்டிகள் கீழே விழுந்துவிட்டன என்று செய்தி வந்தது. ஆகவே உடனடியாக தடுப்புச் சுவர்கள் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: இதுவரையிலும் எந்த விதமான விபத்தும் ஏற்படவில்லை. இனிமேலும் நடக்கக்கூடாது என்றுதான் எதிர்ப்பார்க்கிறோம். அதற்கு முன்பாகவே புதிய பாலம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு இரா. கருப்பையா : கரூர் நகரத்தை மற்றப் பகுதிகளோடு இணைக்கும் முக்கியமான, கேந்திரமான பாலமாக அது இருப்பதால் அரசே நேரடியாக அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : அந்தப் பாலம் நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிற பாலம், ஆகவே நகராட்சி மன்றம் தான் கட்ட வேண்டும். ஆனாலும் நிதிநிலை சரியில்லை என்று நகராட்சி தாக்கீது கொடுத்து இருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.



குஜிலியம் பாறையில் ஒன்றியப் பணியாளர்களுக்கான வீடு கட்டும் திட்டம்.

*வினா எண் 12—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேடசந்தூர் தொகுதி குஜிலியம்பாறையில் ஒன்றிய பணியாளர்களுக்கென வீடு கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் வீடு கட்டும் பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தப் பணிக்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு? எப்போது இத்திட்டம் முடிவு அடையும்? இதுபோன்ற பணிகள் தமிழகத்திலே எத்தனை ஊராட்சி ஒன்றியங்களிலே செயல்படுத்தப்படுகின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : 1981–82 ஆம் ஆண்டின் இரண்டாவது பகுதித் திட்டத்தில் 20 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன. இதற்காக சுமார் 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் சுகாதார உதவியாளர்கள்

*வினா எண். 13—திரு மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் சுகாதார உதவியாளர்கள் பணிபுரிவோர் தொழில் முறையில் மருத்துவராலும் நிர்வாகத் துறையால் ஆணையாளராலும் ஆட்படுத்தப்படுகிறார்கள் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர அரசு முயலுமா?

மாண்புமிகு திரு ப குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அல்லது மாவட்ட சுகாதார அலுவலர் இவர்களில் ஒருவருடைய முழு கட்டுப்பாட்டில் கொண்டு வருவது சாத்தியமில்லை.

[1982 பிப்ரவரி 2

[முற்பகல் 11-10.]

கோவை மருந்துவக் கல்லூரி மருத்துவ மனை:

*வினா எண். 14—திரு கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மருந்துவக் கல்லூரி மருத்துவமனையில் சாதாரண உள் நோயாளியாக உள்ளவர்களுக்கு நாள் ஒன்றுக்கு உணவுக்காக மட்டும் என்ன செலவிடப்படுகிறது ?

(ஆ) உணவுக்கு தற்பொழுது செலவிடப்படும் தொகை எந்த வருடத்தில் நிர்ணயிக்கப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: (அ) கோவை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்படும் சாதாரண உள் நோயாளிக்கு அளிக்கப்படும் உணவிற்கு நாளொன்றுக்கு ரூபாய் 4·17 வீதம் செலவிடப்படுகிறது.

(ஆ) உணவிற்காகச் செலவிடப்படும் தொகை 1969 ஆம் வருடம் நிர்ணயிக்கப்பட்டது.

திரு கு. ரமணி : தலைவரவர்களே, 1969 ஆம் வருடத்திலிருந்து இப்பொழுது 1982 ஆம் வருடத்திற்குள் இந்த 13 வருடங்களுக்குள், எத்தனையோ பெருமளவிற்கு விலைவாசிகள் ஏறியிருந்தும்கூட இவ்வளவு குறைந்த தொகையைக் கொண்டு சாதாரண ஊட்டச் சத்துள்ள உணவை நோயாளிகளுக்குக் கொடுக்க முடியுமா ? அதைப்பற்றி அரசு ஏதாவது நினைத்தது உண்டா ? அந்தத் தொகையை உயர்த்துவதற்கு அரசு ஏதாவது யோசனையைத் தயாரித்துள்ளதா ? எப்பொழுதிலிருந்து, அது உயர்த்தப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே நாம் இன்னும் கொஞ்சம் செலவழிக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கத்திலேயிருக்கும் உயர் மட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லி, புள்ளி விவரங்களையும் வரவழைத்து இருக்கிறோம் அதன் அடிப்படையில்,

1978–79-இல் 1 கோடியே 79 இலட்சம் ரூபாய்;
1979–80-இல் 1 கோடியே 79 இலட்சம் ரூபாய்;
1980–81-இல் 1 கோடியே 83 இலட்சம் ரூபாய்;
1981–82-இல் 1 கோடியே 85 இலட்சம் ரூபாய்;



என்று இப்படிச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாகச் செலவு செய்யவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதற்காக நாம் இந்த ஆண்டு மீண்டும் அந்த அறிக்கையை வரவழைத்து, புள்ளி விவரங்களைத் தெரிந்து கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கு. ரமணி : தலைவரவர்களே, ஆஸ்பத்திரிக்கு வரும் சாதாரண நோயாளிகளுக்குக் குறைந்த பட்ச ஊட்டச் சத்துணவு கிடைக்க வேண்டுமென்பதற்காக என்ன அடிப்படையை அரசு தயாரித்திருக்கிறது ? அதற்கு ஏதாவது நார்ம்ஸ் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால் அந்த நார்ம்ஸ் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, I.C.O.D.-Indian Convalescence Ordinary Die—

Orange—1
Ordinary plantain—1
Coffee with jeggery—200 Ml.
Boiled rice—300 grams (morning 150—evening 150)
Bread—100grams
Butter—10 grams
Vegetables—100 grams
Sambar—200 Ml.

இவற்றைக் கொடுத்துக்கொண்டு வருகிறது. இதனால் தேவைப்படும் அந்த காலரீஸ் கிடைக்கும் என்ற அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது.

C.M.B.—Convalescence milk and bread, T. B. diet—இப்படிப் பல்வேறு குறிப்புகள். குறிப்பாக ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டாக, தனித்தனியாகப் பார்த்து அதற்காக நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில், உள் நோயாளிகளுக்கு நாளொன்றுக்கு 4 ரூபாய் 17 காசு செலவழிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால், கோவை மருத்துவமனையில் இருக்கும் நோயாளிகளுக்கு அரிசியும் ரொட்டியும் தரமானதாகக் கொடுக்கப்படவில்லை என்று அரசாங்கத்திற்குப் புகார் வந்துள்ளதா ? அப்படி வந்திருந்தால் அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்னவென்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டு இப்படிப்பட்ட ஒரு புகார் வந்து, மருத்துவ மனைக்கு இரண்டு முறை யாருக்கும் தெரிவிக்காமல் சென்று அந்த உணவையெல்லாம் பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, அதற்காக மீண்டும் கண்காணிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். எனவே, திடீர் சோதனை மூலமும், துறைத் தலைவரை—டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷனை ஆங்காங்கு பார்வையிடச் செய்து சோதனைகளைச் செய்து தக்க நடவடிக்கை எடுத்து, கொடுக்கப்படும் உணவின் தரத்தை உயர்த்துவதற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இருக்கிற நோயாளிகளுக்கு 1969 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி உணவு அளிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது கோவை மருத்துவ மனைக்கு மாத்திரமா, அல்லது தமிழகத்திலுள்ள எல்லா மருத்துவ மனைகளுக்கும் இந்த 1969 ஆம் ஆண்டு புள்ளி விவர அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நான் கொடுத்திருக்கக்கூடிய அத்தனை விவரங்களும் மருத்துவக் கல்வி இலாகாவின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அத்தனை மருத்துவ மனைகளுக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு மா. சின்னராசு. பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல மருத்துவர்களையும், நல்ல மருத்துவச் சோதனைக் கூடங்களையும் கொண்டிருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் ஓரளவு வசதி படைத்தவர்களும், நடுத்தர மக்களும் சிகிச்சை பெறுகிறார்கள். அவர்களுக்கு உணவு வழங்குவதற்காக வசதி படைத்தவர்களிடம் நாள் ஒன்றுக்கு குறைந்தது ரூபாய் 5 கட்டணம் வாங்கினால், மக்கள் அதைக் கொடுக்கத் தயாராக இருப்பார்கள். ஆகவே, நல்ல வசதி ஏற்படுத்துவதற்கு, கொடுக்கப்படுகின்ற உணவுக்கு ஒரு குறைந்தபட்ச கட்டணத்தை நிர்ணயிக்க அரசு. முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை.

திரு. ஏ. டி. குலசேகர்: பேரவைத் தலைவர் அவர்களே' கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள நோயாளிகளுக்கு உணவுக்காக வழங்கப்படும் தொகை குறைவாக இருப்



தால் ஒப்பந்தக்காரரர்கள் கோவை மருத்துவ மனைகுங்வக் குழம் அரிசி மற்றும் ரொட்டி போன்ற உணவுப் பொருள்களின் தரம் மிகவும் குறைவாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, அந்தத் தரம் குறைவான பொருளை நீக்கி, அரசே தரமான பொருள்களை வழங்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மனதிலே கொண்டு, Dies-Rev sion in the rate of milk-Mod fled p. ce lis. of ce tain diet article: என்ற தலைப்பில்

1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் அன்று நான் உத்தரவு போட்டுள்ளேன். விலையை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்கலாம் என்ற அளவில் உத்தரவு போடப்பட்டுள்ளது. விலைவாசிக்கு ஏற்ற வகையிலே தொகை அளிக்க வேண்டும், தரம் குறையக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற யோசனையை நடைமுறைப்படுத்தி இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் ஒரு நபருக்கு ரூபாய் 4.17 காசு செலவு செய்வதாக அறிவித்தார்கள். மற்ற மருத்துவ மனைகளில் ஒரு நபருக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்பதையும், அதே நேரத்தில், அந்தத் தொகை குறைவாக இருக்கிற காரணத்தால், எந்த ஆண்டு முதல் அந்தத் தொகையை அதிகரிக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, தொகையை அதிகப்படுத்துவது, அப்போதைக்கப்போது இருக்கிற விலைவாசிக்கேற்றவாறு. மற்ற மருத்துவ மனைகளைப் பற்றி இன்னொரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இங்கே உள்ள மூல வினாவே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையைப் பற்றித்தான். நான் அதைக் கொஞ்சம் விஸ்தரித்து மருத்துவக் கல்வித் துறையின் கீழ் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். மற்ற மருத்துவ மனைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், இன்னும் கொஞ்சம் விவரம் சேகரித்துத்தான் முழு விவரங்களையும் சொல்ல முடியும்.

[1982 பிப்ரவரி 2

## பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் திட்டம்.

*வினா எண். 15— திரு எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேராவூரணி அரசினர் தாலுகா தலைமை மருத்துவ
மனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் செயற் குறிப்பு
அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எப்போது தொடங்கப்படும் ?

(அ) மற்றும்
மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :
(ஆ) : பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப்
பிரிவு 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23-ஆம் நாள் முதல்
சயல்பட்டு வருகிறது.

பேரவைத் தலைவர் அவர்
திரு எம் ஆர் கோவேந்தன் : 
களே, பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப்
பிரிவைத் தொடங்கிய தற்கு இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்
கொள்வதோடு, தமிழகத்தின் பழம் மருத்துவமான சித்த மருத்
துவத்திற்கு என்று, எல்லா மருத்துவ மனைகளிலும், சித்த மருத்
துவப் பிரிவு ஒன்றைத் தொடங்க அரசு முன் வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, Sanc lon has been acc rded to
the opening of Siddha Wings in 30 Governmen Hospl als.
30 மருத்துவ மனைகளிலே நாம் சித்த மருத்துவத்திற்காகப்
பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறோம் என்ற நல்ல செய்தியுடன்.
200 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கூட இதற்கென பிரிவு
ஏற்படுத்தி, அதற்காக டாக்டர்களை 100 இடங்களில் நியமித்து
உத்தரவு போட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 16 முதல்
20 வரை, அவற்றுக்கான விடைகளுடன் பேரவை நடவடிக்கைக்
குறிப்பில் அச்சிடப் பெறும்.

## தனியார் துறை மூலம் கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டம்.

*வினா எண். 16—திரு. சி. கோபால் மாண்புமிகு போக்கு
வரத்துத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்
பாரா :—

கிராமங்களுக்குச் செல்லும் மினி பஸ்ஸை தனியார் துறை
யிடம் விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1982 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. தனியார் துறையினரும்
உரிமங்கள் பெற்று கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டத்தினை
நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

## மறைமலை நகரிலிருந்து நகரப் பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 17—திரு இ. கணேசன் மாண்புமிகு போக்கு
வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா :—

(அ) சென்னைக்கு அருகில் உருவாகிவரும் மறைமலை நக
ரிலிருந்து தாம்பரத்திற்கும், செங்கற்பட்டிற்கும் நகரப் பேருந்து
விட அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) :—
மறைமலை நகர் மக்களின் வசதியை முன்னிட்டு தாம்பரத்தில்
இருந்து சிங்கப்பெருமாள் கோயில் வரையிலும் மறைமலை நகர்
வழியாக (தடம் எண் : டி. 32) ஒரு நகரப் பேருந்தும், செங்கற்
பட்டிலிருந்து மாடம்பாக்கம் வரையில் மறைமலை நகர் வழியாக
(தடம் டி. 11) ஒரு நகரப் பேருந்தும் நீண்ட நாட்களாக இயங்கி
வருகின்றன.

மறைமலை நகர் மக்களின் தற்போதைய தேவையை முன்
னிட்டு 1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5-ஆம் நாள் முதல்
செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் வரையில் மறைமலை நகர் வழி
யாக (தடம் எண். டி. 60 கூடுதலாக இரண்டு நகரப் பேருந்து
கள் விடப்பட்டுள்ளன.

மேற்கொண்டு தேவை ஏற்பட்டால் மறைமலை நகரி
லிருந்து கூடுதல் பேருந்துகள் விடுவதற்குத் தக்க நடவடிக்கைகள்
எடுக்கப்படும்.

## தனியார் லாரிகளில் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தும் திட்டம்

*வினா எண். 18—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்பு
மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா :—

தனியார் லாரிகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி அமைக்க
வேண்டும் என்று உத்தரவிடும் செயற் குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. : ஆம்.

[1982 பிப்ரவரி 2

சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குழந்தைகள் நல காப்பகங்கள்.

*வினா எண் 19—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை பாலர் பள்ளிகள் உள்ளன ?

(ஆ) அப்பகுதியில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு பாலர் பள்ளி தொடங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். : (அ) சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் ஏழு குழந்தைகள் நல காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இல்லை.

தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள்.

*வினா எண் 20—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை மாவட்டங்களில் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். : (அ) ஏற்கனவே தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் தஞ்சை, திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர். : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (* உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 11-20)

(3) அறிவிப்புகள்

(அ) மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவையில் (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த



1982 பிப்ரவரி 2]

(1) திரு. அ. ரகுமான்கான்,

(2) திரு. கே. குப்புசாமி,

(3) திரு இ. இராமசுப்பிரமணியன்,

(4) திரு. மெ. ஆண்டி அம்பலம்.

ஆகியோரின் பதவிக் காலம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாளுடன் முடிவடைந்து விட்டதால், பல்கலைக் கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதி முறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Proportional Representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை. எனவே வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6 ஆம் நாள் சனிக்கிழமை மாலை 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 8 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் புதன் கிழமை காலை 9-00 மணிக்கும் பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு—தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1) இன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை, இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :—

(1) திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்,

(2) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்,

(3) திரு. துரைமுருகன்,

(4) திரு. இல. பலராமன்

[1982 பிப்ரவரி 2

## (4) தகவல் கோரல்

### நீதிபதி பால் கமிஷன் அறிக்கை—விவாதம் கோரல்

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நீதிபதி பால் கமிஷன் அறிக்கை டேபிளில் வைக்கப் பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய அறிக்கையில், சட்டப் பேரவையில் பால் கமிஷன் அறிக்கை வைக்கப்பட்டால் அது குறித்து விவாதம் செய்வதற்கு முன் ஏற்பாடு செய்கின்ற முறை யில் தான் பால் கமிஷன் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறது. இந்தக் கமிஷனுடைய பல்வேறு இரக்கமன்டேஷன்களை, சிபாரிசுகளை அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. இது ஒரு முக்கியமான பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. ஆகையினால் இதை விவாதத்திற்கு அனுமதிக்க வேண்டும். அதுமட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் முருகேசன் கமிஷன் ரிப்போர்ட்; அதாவது திருச்சி சிறையிலே 2 கைதிகள் இறந்து போனார்கள், அது சம்பந்தமாக இந்தக் கமிஷன் சம்பந்தமாக டேபிளில் வைக்கப் பட்ட அறிக்கையை விவாதம் செய்ய வேண்டும் என்று கேட்ட போது நீங்கள் அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே இதை விவாதிப்பதற்கு ஒரு நாள் 2 நாட்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து அறிவிப்பு இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதை அலுவல் ஆய்வுக் குழுவின் முன் வைத்து, தலைவர்களைக் கலந்து, அரசையும் கலந்து அது பற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். ஏற்கனவே வேறு கூட்டத் தொடரிலே கூட உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதிகாரிகள் எதிர்கட்சித் தலைவரைப்பற்றி எந்த அளவு உணர்வோடு இருக் கிறார்கள் என்பதைப் பற்றிதான் சொல்லவருகிறேனே தவிர, எங்கள் தலைவருக்கு இந்தப்பட்டங்கள் எல்லாம் வேண்டாம். வேறு யாராவது போட்டுக் கொள்ளட்டும். ஆனால் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறார்களே இது முறையா, சரியா என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளன்று கமிஷனர் கடிதம் ஒன்று ஸ்பீக்கர் அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு அனுப்பப் படுகிறது. அதிலே என்ன இருக்கிறது என்றால்,—I h ve he h o r inf m y u th Thi uv lu M. K unan t .... என்று இருக்கிறது. ஏற்கனவே நீங்கள், இனிமேல் இதுபோன்று நடைபெறாது என்று உறுதி அளித்தீர்கள். ஆனால் மீண்டும் நடைபெற்றிருக்கிறது. இது முறையா என்று கேட்க விரும்பு கிறேன்,



1982 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கை எடுக்கப் படும்.

## (5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" 1982 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 1 ஆம் தேதி யன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்களின் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் "

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி நவிலும் தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

*திரு ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆளுநர் அவர்கள் அவைக்கு உவந்தளித்திருக்கின்ற உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற தீர்மானத்தை முன் மொழிய கிடைத்த இவ்வாய்ப்புக்கு நான் எனது நன்றியையும், பெரு மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள் கிறேன். உரையின் துவக்கமே, சென்ற ஆண்டு நான் உரை யாற்றியபோது, உலகத் தமிழ் மாநாட்டை நாம் கொண்டாடிய பெருமிதத்தோடு தொடங்கினோம், இந்த ஆண்டு துவங்கி உரை யாற்றுகிற போது தமிழுக்குச் சிறப்புச் சேர்த்திட்ட ஒரு பெரு மகனாருக்கு நூற்றாண்டு விழா எடுத்த பூரிப்போடு இருக்கிறோம் என்று கூறி இனிமையோடு உரையாற்றியிருப்பது சிறந்த மகிழ்ச் சிக்குரியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தமிழையும் நாம் மறக்கவில்லை, தமிழுக்குச் சிறப்புச் சேர்த்தவர்களையும் நாம் மறந்துவிடவில்லை என்பதை நாட்டோருக்கு உணர்த்திடும் விதத் தில் இந்த உரையின் துவக்கம் அமைந்து இருக்கிறது. ஆனால், சில பேருக்கு இருக்கின்ற வயிற்றெரிச்சல் எல்லாம் இந்த பாரதிக்கு இப்படியெல்லாம் சிறப்பு சேர்க்கிறார்களே என்று இருக்கிறது. ஆகவே, பாரதிக்குக்கூட சாதிச் சாயம் பூசிப் பார்க்கும் நிலைமை கள் தமிழகத்தில் ஏற்பட்டு இருப்பதைப் பார்த்து, உள்ளபடியே,

*131–142 ஆம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 142–156 ம் பக்கங் களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

நாம் வேதனைப்படுகிறோம். ஜாதி, மத, இன, நில, மொழி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு விளங்கிய ஒரு சமுதாயக் கவிஞருக்கு விழா எடுக்கிறபோது, இப்படிப்பட்ட செய்திகள் கூட நம்முடைய காதுகளுக்கு எட்டுகிறபோது, உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். மொழியால், மதங்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு சமுதாயக் கவிஞருக்கு, விஞ்ஞானக் கவிஞருக்கு, தமிழ் கவிஞருக்கு, நூற்றாண்டுவிழா எடுக்கிறோம் என்கிற பெருமிதத்தோடு நாம் இருக்கின்றபோது; நம்முடைய எண்ணமெல்லாம் நாம் போற்றும் பாவேந்தன், புரட்சிக் கவிஞன் வாக்கியத்தில் சொல்லவேண்டுமானால்—

" பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில்—இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையை கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன் புதிய
அறம்பாட வந்த அறிஞன்—நாட்டிற்பட்டும்
சாதிப்படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன் "

என்கிற வார்த்தைகளை இங்கே நான் நினைவு கூற விரும்புகிறேன்.

அந்தக் கவிஞருக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறோம் என்று நினைக்கிறபோதுதான் நம்முடைய சிந்தனையெல்லாம்—

" ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் ?"

என்கிற வார்த்தைகளையும்

" காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம் "

என்கிற வரிகளை எண்ணும்போதும்,

" வானை யளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம் "





என்று விஞ்ஞான உணர்வோடு, நடைமுறை வாழ்க்கையோடு தம்மை ஐக்கியப்படுத்திப் பார்த்த அந்த கவிஞருக்கு விழா எடுக்கிறோம் என்கிற உணர்வு நம்முடைய நெஞ்சத்தில் நிச்சயமாகப் பெருமிதத்தை ஏற்படுத்துகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

" சிந்து நதியின் மிசை நிலவினிலே "

என்று துவங்கி,

" சேரத்துத் தந்தம் வரைக்கும் "

இணைத்து, செந்தமிழ் நாடு என்று சொல்லுகிறபோதும்,

" வாழிய செந்தமிழ், வாழ்கநற் றமிழர் "

என்று அந்தக் கவிஞன் வாயார வாழ்த்துகிறபோதும்,

" ஏழையென்றும் அடிமை யென்றும்
எவருமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பர்
இந்தியாவில் இல்லையே "

என்று ஒப்புவமை இல்லாத சமதர்ம சமுதாயத்தை அமைத்துக் கொடுத்த அந்தக் கவிஞன் கண்ட கனவுகளை எண்ணிப் பார்க்கிறபோதும் என்னுடைய நினைவுகள் இன்னொன்றையும் தொட்டுப் பார்க்கிறது.

1970 ஆம் ஆண்டுகளிலே " கரீபி ஹடோ "—வறுமையை ஒழிப்போம்—என்கிற வாசகங்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் நிரம்பியிருந்த அந்த நேரத்தை நான் எண்ணிப்பார்க்கிறேன். அந்த வறுமையை ஒழிக்க, அந்த மகாகவி கூறிய வார்த்தைகளை எண்ணிப் பார்க்கிறேன்.

" இனியொரு விதி செய்வோம்—அதை
எந்தநாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடுவோம் "

என்று அன்றைக்கே சாடிக்காட்டியிருக்கிறான்.

இங்கே மட்டுமல்ல, பரந்து விரிந்து கிடக்கின்ற உலக நிகழ்வுகளிலே தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்ட அந்த உலகக் கவிஞருக்கு நாம் விழா எடுக்கிறோம். ருஷ்ய நாட்டைப் பார்க்கிறான். " ஆகா என்றெழுந்தது பார், யுகப் புரட்சி " என்று சொல்கிறான். வெல்ஜியத்தை வாழ்த்துகிறான். இப்படி கடல் கடந்து போய் கூட அங்கேயிருக்கின்ற மனித சமுதாய நிகழ்வுகளோடு தன்னை இணைத்துக் கொண்ட அந்தக் கவிஞருக்கு விழா எடுப்பதில் நாம் பெருமைப் படுகிறோம்.

[திரு. ஜே. சி. டி. பிரபாகரன்] [1982 பிப்ரவரி 2

ஆளுநர் உரை முழுவதும் மைய-மாநில அரசுகளுக்கு இடையே
எழுந்து இருக்கின்ற புதிய உறவுகளை, புதுப்பிக்கப்பட்டு வலுப்
பெற்று இருக்கின்ற அந்த உறவுகளை தெளிவாகக் காட்டும்
விதத்தில் அமைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

[முற்பகல் 11–30]

1962 லே பேர்றிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் திரா
விட நாடு கோரிக்கையைத் தள்ளி வைத்ததற்கான காரணத்தை
எடுத்துச் சொல்லி, இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்
பாட்டை நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு என்றைக்கும் பின்தங்கி
இருக்காது என்று சொன்னார்கள். அந்த வகையிலே இன்றைக்
கும் கூட ஏற்பட்டிருக்கிற புதிய சூழ்நிலையில் பாரதிக்கு விழா
எடுக்கும்போது அந்த ஒருமைப்பாட்டு உணர்வு கிஞ்சிற்றும் குறை
யாது. இந்தியத் துணைக் கண்டம் முழுமையும் ஒருமைப்பாடு
ஆண்டாக இந்த ஆண்டு கொண்டாடப்படுகிற அளவுக்கு ஏற்பாடு
களைச் செய்ய இந்த மாநில அரசு மைய அரசுக்கு வேண்டுகோள்
விடுத்திருக்கிறது. இந்த வேண்டுகோளினை அனைத்துக் கட்சி
களும் வற்புறுத்த வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பருவ மழை பொய்த்தாலும் தான்
கொடுத்த வாக்குறுதிகளை பொய்க்காது நிறைவேற்றுகின்ற
கோமான், இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் வரட்சி
நிவாரணப் பணிகளை எத்தகைய போர்க்கால வேகத்தில் சந்தித்
தார்கள் என்பதை விளக்கமாகத் தந்திருக்கிறார்கள். போர்க்
கால வேகத்தோடு நிறைவேற்றியிருக்கிற அந்த வறட்சி நிவா
ரணப்பணிகள்தான் ஒட்டிய வயிறும், குழி விழுந்த கண்களும்
கொண்ட கிராமப் புற மக்களின் துயரங்களைத் துடைத்திருக்
கின்றன; அவர்களுடைய துயரங்களை, வாட்டங்களைப் போக்
கிட அந்த அளவுக்கு போர்க்கால வேகத்தோடு நடவடிக்கைகளை
இந்த அரசு எடுத்திருக்கிறது என்ற செய்தியை ஆளுநர் அறிக்கை
யிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

துயர்துடைப்புப் பணிக்காக மாநில அரசு கேட்டிருந்தது 100
கோடி ரூபாய்க்கு மேல். 48.90 கோடி ரூபாயை மைய அரசு
நமக்குத் தந்தது. ஆனால், 55.24 கோடி ரூபாய்க்கு மேலே
நாம் செலவிட்டு, வறட்சி நிவாரணப் பணிகளை, துயர்துடைப்புப்
பணிகளைச் செய்திருக்கிறோம். குறிப்பாக, இன்றைக்கு கிராமப்
புறங்களிலே இருக்கிற வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற,
வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற, அத்தனை பேர்களுக்கும்,
துயர்துடைப்புப் பணியின் பயன் போய் சேர்ந்திருக்கிறது என்ற
மன நிறைவு நமக்கு இருக்கிறது.

ஆனால், சிலர் ஆண்ட காலத்திலே, சிலருடைய ஆட்சிக்
காலத்திலே தமிழ்நாட்டிலே வறட்சி ஏற்பட்டபோது ஒதுக்கப்
பட்ட பணம் முறையாக பொதுமக்களுக்குப் போகவில்லை என்ற



1982 பிப்ரவரி 2] [திரு. ஜே. சி. டி. பிரபாகரன்]

குற்றச்சாட்டு இருந்ததே, குறைபாடு இருந்ததே, அவையெல்லாம்
இன்றைக்கு இல்லாமல் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.
இதுவரையில் எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. மைய அரசி
லிருந்து வந்த அந்த பணம் முழுமையாக மக்களுக்குப் போய்ச்
சேர்ந்திருக்கிறது என்று மன நிறைவு இன்றைக்கு நமக்கெல்லாம்
இருக்கிறது. அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் கொண்ட
குழுக்களை ஆங்காங்கே அமைத்து, அவர்கள் ஆங்காங்கே நடை
பெற்ற பணிகளைப் பார்வையிட்டதன் மூலமாக குறைபாடுகளைக்
களைந்திருக்கிறோம்.

ஆனால், 1974-லே வறட்சி நிவாரணப் பணிகள் ஒழுங்காக
நடைபெறவில்லை. துயர்துடைப்புப் பணிகள் சரியாக நடை
பெற்றதாகத் தெரியவில்லை. மைய அரசு கொடுத்த பணத்
தையும் ஒழுங்காக செலவு செய்யவில்லை என்ற காரணத்தால்
இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் ஆங்காங்கே கஞ்சித்
தொட்டிகளைத் திறந்ததை நான் எண்ணிப்பார்க்கிறேன். இன்
றைக்கு அந்த நிலை இல்லை. மைய அரசிலே இருப்பவர்கள்
இந்த வறட்சிப் பணிகளுக்கு கொடுத்த பணம் மட்டுமல்லாமல்
அதற்கு மேலேயும் செலவு செய்திருக்கிற ஒரு நிலைமையை,
ஏற்படுத்தியிருக்கிற ஒரு சாதனையை இந்த அரசு படைத்திருக்
கிறது. அந்த சாதனை மக்கள் துயரங்களைப் போக்கியிருக்கிறது.
அதன் மூலம் பல்வேறு பணிகளை நிறைவு செய்வதற்காக எடுத்
திருக்கிற நிரந்தர திட்டங்களை நான் உள்ளபடியே வரவேற்
கிறேன்.

ஆகஸ்ட் திங்களிலே இந்த மாமன்றத்தின் முன்பு வைக்கப்
பட்டிருந்த அந்த வெள்ளை அறிக்கை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற
துயரங்களையும், துயர்துடைப்புப் பணிகளையும் தெளிவாக எடுத்
துக் காட்டியது. மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும்
பொருட்களை பொது விநியோக முறைகள் மூலம் அனைவருக்
கும் தந்தாக வேண்டுமென்று பல்வேறு திட்டங்களை வகுத்து
எவ்வளவு அக்கறையோடு செயல்படுத்தினோம் என்பதை எடுத்துக்
காட்டியது. மைய அரசிடம் நாம் கோரியிருந்த அரிசியும்,
கோதுமையும் எந்த அளவுக்குக் கிடைத்தது என்பதை நாம்
அந்த அறிக்கையிலே பார்த்தோம். நம்முடைய மாநிலத்தில்,
கொள்முதல் செய்வதன் மூலம், அதிகமாக உற்பத்தியாகின்ற
வெளி மாநிலங்களிலே கொள்முதல் செய்வதன் மூலம், கூட்
டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்வதன் வாயிலாக
நிலைமைய திருப்திகரமாகச் சமாளித்திருக்கிறோம் என்ற வகை
யிலே நாம் மனநிறைவு கொள்கிறோம் என்றால் எந்த அளவுக்கு
இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை இங்கே
சொல்லியாக வேண்டும்.

ஆளுநர் உரையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்,
அடுத்த ஆண்டு 711 கோடி ரூபாய்க்கான பெரும் திட்டத்திற்கு
மைய அரசிலே இருக்கிற திட்டக்குழு நமக்கு அனுமதி அளித்தி

ருக்கிறது. நிதி ஒதுக்கியிருக்கிறது. இங்கே நாம் நிறைவேற்றுகின்ற
திட்டங்களை இந்தியாவிலே இருக்கின்ற மற்றவர்கள் எல்லாம்
பாராட்டுகிறார்கள். அந்த அளவுக்கு நாம் திட்டங்களை இங்கே
தீட்டி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று நான் சொல்ல
வில்லை: இந்தியத் துணைக் கண்டத்தை ஆளுகிற திருமதி
இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் செப்டம்பர் திங்களிலே
சென்னைக்கு வந்தபோது இங்கே புரட்சித் தலைவர் அவர்க
ளுடைய அரசு போட்டிருக்கிற முற்போக்கான திட்டங்களைக்
குறிப்பிட்டு அந்த அம்மையார் சூசகமாக பாராட்டும் முறையிலே
ஒன்றைச் சொன்னார்கள்.

நமது அரசு படைத்திருக்கின்ற சாதனைகள், எடுத்துச்
செய்திருக்கின்ற அந்தத் திட்டங்கள் திருப்திகரமாக இருக்கின்
றது என்று சூசகமாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்கு
பிறகு அந்த அம்மையார் தமிழகத்திற்கு வந்து க்ளீன் சிட் தந்து
சென்றார்கள். அதற்குப் பின்னாலேதான் நமக்கு மத்தியிலே
இருக்கின்ற நிதிக் குழு 711 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருக்
கின்றது. ஆகவே பல நேரங்களிலே நாம் வாதாடிப் பெற
வேண்டிய நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு நாம்
சாதனைகளைச் செய்து அவற்றைப் பெற்றிருக்கிறோம் என்ற
மகிழ்ச்சி நிறைவாகவே இருக்கின்றது.

ஆண்டுதோறும் வேளாண்மையில் நாம் காட்டுகின்ற ஆர்வ
மும், அதற்கு நாம் தருகின்ற ஊக்கமும் கொஞ்சம் கூட குறை
வில்லாத வகையிலே இந்த ஆண்டும் தரப்பட்டிருப்பது உள்ள
படியே மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது.

அடுத்து பயிற்சிப் பார்வையிடல் திட்டம் 8 மாவட்டங்
களுக்கு மட்டும்தானா என்ற அந்தக் குறைபாடு போக 1982 ஆம்
ஆண்டு சூலைத் திங்கள் முதல் எல்லா மாவட்டங்களுக்கும் அது
விரிவாக்கப்படும் என்ற அந்தச் செய்தி மகிழ்ச்சிகரமானதாக
இருக்கின்றது. ஒழுங்குமுறை அங்காடிகளின் தரத்தை உயர்த்து
வதற்கும், புதிய அங்காடிகளைத் திறப்பதற்காகவும், அழுகும்,
பொருட்களுக்கு தனியாக அங்காடிகள் ஏற்படுத்துவதற்கும் விரி
வான அறிக்கை ஒன்றை மாநில அரசு மத்திய அரசுக்கு வைத்
திருக்கின்றது என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்
கள். மத்திய அரசின் முன்பு ஒப்புதலுக்காக வைக்கப்பட்டிருக்
கின்ற அந்த அறிக்கைகளுக்கு விரைவாக ஒப்புதல் வர வேண்டும்
என்பதிலே நமக்கு இருக்கின்ற ஊக்கம் போல் மத்திய அரசுக்கும்
இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். வேலைகள்
துரிதமாக நடைபெற வேண்டும் என்பதற்காக நாம் திட்டங்
களைப் போட்டிருக்கிறோம். அத்தனைத் திட்டங்களும் வெற்றி
பெற வேண்டும். ஆகவே மத்திய அரசினிடத்திலே ஒப்புதலுக்
காக நாம் வைத்திருக்கின்ற அத்தனை அறிக்கைகளுக்கும்,
திட்டங்களுக்கும் மத்திய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க





வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.
அதற்கான குறைந்த பட்ச கால அளவையாவது எடுத்துக்
கொண்டு மாநில அரசு ஒப்புதலுக்காக வைத்திருக்கின்ற
அத்தனை அறிக்கைகளுக்கும் உடனடியாக ஒப்புதல் வழங்க
வேண்டும் என்று இங்கே நம்முடைய எல்லோர் சார்பாகவும்
நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, சமையல் எண்ணெய் உற்பத்தியினை உயர்த்துகின்ற
அந்தத் திட்டத்தினுடைய ஒரு படியாக இன்றைக்கு ஏழை எளிய
மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கும்போது ஒவ்வொரு
வருக்கும் ஒரு தென்னங்கன்று வழங்கப்படும் என்று அறிவித்
திருக்கின்ற ஒரு திட்டமும் ஆளுநர் உரையிலே தெளிவாகச்
சொல்லப்பட்டிருக்கின்றது. கிராமப்புற மக்களுக்கு ஏழை எளிய
மக்களுக்கு, பட்டாவைப் பெறுவதற்குக் காத்துக் கொண்டிருக்
கின்ற மக்களுக்கு உதவுகின்ற திட்டமாக வாழ்வ
தற்கு நிலப்பட்டா, வாழ்விக்க ஒரு தென்னங்கன்று என்று இந்தத்
திட்டம் அமைந்திருப்பது உள்ளபடியே பெருமகிழ்ச்சிக்குரிய
ஒன்றாகும்.

அடுத்து. உழவர் பெருமக்களின் கடன் சுமையைக் குறைப்
பதற்காக இந்த அரசு அடுக்கடுக்காக எடுத்திருக்கின்ற முயற்சி
களை நியாய உணர்வுள்ள எந்த இந்தியக் குடிமகனும் பாராட்
டாமல் இருக்க முடியாது. 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30
நாள் வரை நீட்டிக்கப்பட்டிருந்த அந்தக் கால அளவை 1981
ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை நீட்டித்திருப்
பது என்பதற்காக உள்ளபடியே விவசாயப் பெருங்குடி மக்கள்
வாழ்த்தி வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். விவசாயி
களின் கடன் சுமையைக் குறைப்பதற்கு ஏறத்தாழ 98 கோடியே
68 இலட்சம் ரூபாயை நாம் தள்ளுபடி செய்திருக்கிறோம்.
அந்தச் செய்திகளைக் கூட நாம் இங்கே சுட்டிக் காட்ட முடியும்.
கடன் சுமையைக் குறைப்பதற்காக நாம் அளித்திருக்கின்ற
அத்தனைச் சலுகைகளையும் எண்ணிப் பார்க்கின்றபோது இன்
றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களை வைத்து அரசியல்
ஆதாயம் தேட நினைப்பவர்கள், விஷமத்தனம் செய்ய நினைத்
தவர்கள் இன்றைக்கு தங்கள் சில்லரைக் கடைகளை மூடிவிட்டுச்
செல்கின்ற அளவுக்கு நம்முடைய சாதனைப் பட்டியல் வளர்
கிறது.

ப உழவர்களின் உற்ற நண்பனாக இருக்கின்ற புரட்சித் தலை
விபர் அவர்களின் அரசுக்கு எதிராக யார் யார் எல்லாம் நிற்க
முயலுகிறார்களோ அப்படிப்பட்டவர்களின் முகமூடியைக்
கிழித்து எறிவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று
உழவர் பெருங்குடி மக்கள் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்
கிறார்கள்.

அடுத்து, நிலச்சீர்திருத்தச்சட்டம் என்பது இந்த மாநிலத்திலே உள்ள நிலங்களை முறைப்படுத்த அதாவது குறிப்பாக பினாமி நிலங்களை ஒழிப்பதற்கும், இதுவரை கணக்கிலே கொண்டு வரப் படாமல் இருக்கின்ற நிலங்களைக் கணக்கிடுவதற்கும் 1958 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதியிலிருந்து 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் தேதி வரைக்கும் எப்படிப்பட்ட நில மாற்றங்கள் நடந்திருக்கின்றன என்ற பேருண்மைகளைக் கண்டுபிடித்து வெளியே கொண்டுவர வேண்டும் என்பதற்காக நாம் போட்ட அந்த சட்டத்தை நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். நாம் மிட்டா மிராசுதாரர்களுக்காக இல்லை. இந்தச் சட்டம் போடுவதன் மூலம் சிலருடைய கொட்டத்தை அடக்கவேண்டும் என்பதற்காகத்தான். சட்டங்களுக்குள்ளே புகுந்துகொண்டு விளையாடத் தெரிந்த அப்படிப்பட்டவர்களுக்கு இந்த அரசு துணை போகிறது என்ற அவப்பெயர் வேண்டாம் என்பதற்காகத் தான் மத்திய அரசை நோக்கி இந்த மாமன்றத்திலே நாம் நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கின்ற அந்தத் தீர்மானம் எந்த நிலைமைக்குப் போய் இருக்கின்றது என்பது இந்த ஆளுநர் உரையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

(பிற்பகல் 11–40)

உள்ளபடியே நாங்கள் வேதனையோடு கேட்கிறோம். இந்த நிலைமைக்காக உண்மையிலேயே மன வருத்தப்படுகிறோம். We are not here to rob Peter and pay Paul. But we only advocate that Paul must get his legitimate share.

என்பதற்காக மைய அரசுக்கு அந்த சட்டத்தை அனுப்பி வைத்திருக்கிறோம். ஆனால் அந்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறாமலேயே திரும்பி வந்திருக்கிறது என்ற அந்தச் செய்தி, உள்ளபடியே இந்த மாமன்றத்தில் இருக்கிற அத்தனை பேருக்கும் மன வேதனையை தருகிற ஒரு செய்தியாக இருக்கிறது. ஆகையால்தான் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், 1980 ஆம் ஆண்டு தேர்தலிலே சிறப்பாக வெற்றி பெற்ற பிறகு, Eastern Economist என்ற பத்திரிகையிலே பேட்டியளிக்கும்போது மிகச் சரியாகச் சொன்னார்கள் அன்றைக்குச் சொல்கிறபோது State Government should have more freedom. The centre is often insensitive to the States Special Issues என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில் நிலவியிருக்கிற பிரத்யேகமான பிரச்சினைகளில் மைய அரசு இன்னும் அதிகமான அக்கறை காட்ட வேண்டும், ஆனால் இதுவரை காட்டவில்லை என்பதற்கு, இதைவிட அருமையான உதாரணத்தை யாரும் கொடுத்து விட முடியாது. நான் இங்கே இடம் பெற்றிருக்கும் அன்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கிறேன். தமிழகத்திற்குத் தேவையான ஒரு சட்டம் இன்றைக்கு குடியரசுத் தலைவரால் ஒப்புதல் பெறாமல் திரும்பி வந்திருக்கிறது. நாடாளுமன்றத்திலே உள்ள உங்கள்





கட்சி உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்பதற்காக, ஏன் நிறை வேற்றித் தரவில்லை என்பதற்காக, வெளி நடப்புச் செய்தார்களா? வினாக்களைத்தான் கொடுத்தார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்?

ஆனால், நீங்கள் அவர்களை எந்தக் கேள்வியும் கேட்க மாட்டீர்கள் என்று நன்றாகத் தெரியும் இங்கே இருக்கிற அரசு வைக்கிற அறிக்கையாக இருந்தால், அல்லது இந்த அரசின் சார் பாக காவல் துறையினர் ஏதாவது நடவடிக்கை எடுக்கும்போது, பாராளுமன்றத்திலே நீங்கள் வினாக்களைத் தொடுப்பீர்கள். ஆனால் இந்தச் சட்டம் ஏன் நிறைவேற்றப்படவில்லை என்று பாராளுமன்றத்திலே மைய அரசை நோக்கி தெளிவோடு கேட்கிற அந்தத் தைரியம், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கு மேயானால், உள்ளபடியே அவர்களை வாழ்த்தி வணங்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் கேட்கவில்லை; கேட்க மாட்டார்கள் என்றும் தெரியும்.

விலைவாசி உயர்வுக்கு மாநில அரசு மட்டும் அல்ல மைய அரசும் தான் மிகப் பெரிய பொறுப்பை ஏற்கிறது என்பதற்கான வாதத்தை ஏற்கனவே இந்த அவையிலே பல முறை எடுத்து வைத்திருக்கிறோம். புள்ளி விவரங்களை ஏற்கனவே தந்திருக்கிறோம். பொருளாதார நிபுணர்கள் குறித்துக் கொடுத்திருக்கிற புள்ளி விவர அறிக்கைகளின் மீது வாதம் புரிந்திருக்கிறோம். ஆனாலும் மைய அரசை சுட்டிக் காட்டுகின்ற நிலைமையிலேயே, மாநில அரசு, தான் எடுத்து வைத்திருக்கிற இலட்சியங்களிலிருந்தும், வகுத்து வைத்திருக்கிற கொள்கைகளிலிருந்தும் எள்ளளவும் பின் வாங்காது என்ற உண்மையினை, "விலைவாசிகளை குறைப்பதிலே பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலே தங்களுக்குரிய பங்கினை ஏற்பதில் மாநில அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது" என்று இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டியிருப்பதை, எடுத்துக் கூறி பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அந்த வகையிலே, உற்பத்தியாளர்கள் தங்களுக்கென்று கூட்டுறவு முறையிலே அமைப்பு ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டு, இடைத் தரகர்களின் குறுக்கீடுகள் இல்லாமல், கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு மொத்தக் கொள்முதலை ஏற்படுத்தி அதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைத்து, நட்டம் ஏற்படாத நிலையையும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைத்து இன்னல் ஏற்படாத நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அடுத்து, எங்களைப் பொருத்தவரையில் சொல்லக்கூடிய இன்னொரு முக்கியமான திட்டம், இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் மிகச் சிறந்த முன் உதாரணமாக இருக்கிற தன்னிறைவுத் திட்டத்தை, எத்தனை

முனைப்போடு இந்த அரசு செயல்படுத்தியிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். 219க்கும் மேற்பட்ட வளர்ச்சி வட்டாரங்களில் இந்தத் திட்டத்தின் கீழ் நம் அரசு ஆற்றியிருக்கிற அரும்பணிகள், இன்றைக்கு இந்தியா விடுதலை பெற்ற பிறகு, கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்பட்டு, கிராமப் புறங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை விவசாய மக்கள், மகாத்மா காந்தியடிகளை, புரட்சித் தலைவர் அவர்களின் உருவத்திலே பார்த்து வாழ்த்தி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகச் சிறப்பு வாய்ந்த இந்த தன்னிறைவுத் திட்டத்தை செயலாற்றி, இந்த அரசு மாடல் வில்லேஜ், மாடல் டவுன் என்று சிறப்பாக உருவாக்கி, இந்தியத் துணைக் கண்டத்திலேயே மாடல் ஸ்டேட் ஆக இந்த தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நம்முடைய மாநிலத்தை விளங்கச் செய்திருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியினை இந்த ஆளுநர் உரையிலே எடுத்துச் சொல்லியிருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின்சாரத் துறையைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றியும் நான் பேசித்தான் ஆக வேண்டும். ஆளுநர் உரையிலே இந்தத் துறைக் கென்று தனியாக பிரத்யேகமாகப் போட்டிருக்கிற திட்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் தேதியன்று அது வரைக்கும் போடப்பட்டிருந்த கட்டுப்பாடுகளையெல்லாம், மின்சாரம் உபயோகிப்பது சம்பந்தமாக போட்டிருந்த தடைகளையெல்லாம் நீக்கியிருக்கிறார்கள்.

இதுவரையில் இருந்த கட்டுப்பாடுகள் ஒரேயடியாக ஒரே நாளில் நீக்கப்பட்ட அந்த நிகழ்ச்சி தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்திக்காக அரசாங்கத்திற்கு நாம் நம் பாராட்டுதல்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தனியார் மின் உற்பத்தி செய்வதை தாராளமாக அனுமதிக்க அந்த ஆலோசனையை ஏற்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்ற அறிவிப்பினை நான் உள்ளபடியே வாழ்த்தி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்பாட் பில்லிங் சிஸ்டத்தை முனைப்போடு செயல்படுத்தி வருகிறோம். அதனால் காலதாமதம் தவிர்க்கப்படுகிறது என்ற செய்தி மனதிற்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. மின்சார வாரியம் நட்டத்தில் ஓடுகிறது என்ற செய்தி நமக்குப் புதிதல்ல. மின்சார வாரியம் 1970 ஆம் ஆண்டிலிருந்து நட்டத்தில் இயங்கிக் கொண்டு வந்திருக்கிற ஒரு நிறுவனமாக இருந்து வருகிறது. 1980–81 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 115 கோடி ரூபாய் அளவிற்கு நாம் நஷ்டக் கணக்கைத்தான் பார்க்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நஷ்டத்திற்குக் காரணம் மாநில அரசின் நிர்வாகத் திறமைக்குறைவு அல்ல. மாநில அரசு





எவ்வளவு முனைப்போடு மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களைத் தந்திருக்கிறது என்பதை நாம் கூறவில்லை. மைய அரசு வல்லுநர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து பார்வையிட்டு அறிக்கை தந்திருக்கிறார்கள். திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சென்னைக்கு வந்தபோது அனல், புனல் மின் நிலையங்களில் தன்னிறைவு எட்டுகிற அளவிற்கு இங்கே நாம் செயலாற்றி வந்திருக்கிறோம் என்பதை தெளிவாக அவர்கள் எடுத்துச் சொல்லி பாராட்டுகளைத் தந்திருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை என்பது நாடு தழுவிய பிரச்சினை. அது தமிழகத்தில் மட்டுமல்ல. பீகாரை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு மாதத்திற்கு 30 மணி நேரம்தான் மின்சாரம் கிடைக்கிறது. ராஜஸ்தானிலும் இந்த நிலைமைதான். ஜம்மு-காஷ்மீரில் 5 நாட்களுக்கு 6½ மணி நேரமும் மீதமுள்ள இரண்டு நாட்களுக்கு நான்கு மணி நேரம் தான் மின்சாரம் கிடைக்கிறது என்ற செய்திகளை எல்லாம் நாடாளுமன்றத்தில் தந்திருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக் குறையை அறவே போக்குவதற்கு தமிழக அரசு முனைப்பாக திட்டங்களைத் தீட்டியுள்ளது.

அனல் மின் நிலையங்களை அதிகப்படுத்துவதின் மூலமும், அணு மின் நிலையங்களை அதிகப்படுத்துவதின் மூலமும் மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நாம் தயாராகிக் கொண்டிருக்கிறோம். கல்பாக்கம் அணு மின் நிலையம் 1974லேயே கமிஷன் செய்யப்பட்டிருக்க வேண்டும். உற்பத்தியைத் துவக்கியிருக்க வேண்டும். ஆனால் அதில் காலதாமதமாகிறது. அதற்குப் பின்னால் மற்ற மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்ட மின் திட்டங்கள் எல்லாம் வேகமாக செயல்படுகின்றன என்ற செய்திகள் உள்ளபடியே மனதிற்கு வேதனையை அளித்தாலும் கூட இன்று ஒரு மாறுபட்ட சூழ்நிலையில் இது துரிதப் படுத்தப்படும் என்ற நம்பிக்கையை ஆளுநர் அவர்கள் உரை நமக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது.

கடல் நீரைக் கொண்டு மின் சக்தி உற்பத்தி செய்வதற்குண்டான உத்தேசமும் உள்ளது. நெதர்லாண்ட், மற்றும் அமெரிக்க நாட்டு நிறுவனத்தின் உதவியோடு திட்டத்தை தயாரிக்க இருக்கிறார்கள்என்ற செய்தியைப் பார்த்து அகமகிழ்வு அடைகிறோம். கடல் நீர் என்று எடுத்துக் கொண்டால், குறிப்பாக தமிழ்நாடு கடல் நீர் பூகோள ரீதியாக மின்சாரத்தை தயாரிப்பதற்கு மிக ஏற்றதாக இருக்கிறது. அந்தச் செய்தி உள்ளபடியே உள்ளத்திற்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. ஏறத்தாழ 10,000 மெகா வாட்ஸ் மின்சாரம் வரையில் இங்கே கடல் நீரிலிருந்து தயாரிக்க முடியும் என்ற அப்படிப்பட்ட செய்திகளை எல்லாம் வல்லுநர்கள் இன்று அரசுக்கு தந்திருக்கிறார்கள்.

1974-ல் மின் கட்டணம் சீரமைத்ததற்குப் பிறகு இந்த ஆண்டு அது சீரமைக்கப்படும் என்று தெரிகிறது. மின் கட்டணங்களை சீர் செய்ய வேண்டியதற்கான காரணங்கள்

உள்ளன. அவற்றை நான் விளக்கியாக வேண்டும். நிலக்கரிக்கு நாம் முன்பு கொடுத்ததைவிட இப்போது அதிகமான விலை கொடுக்க வேண்டிய சூழ்நிலை. நிலக்கரியை எடுத்து வருவதற்கு ரெயில்வே வாகன்களுக்கு இன்று நாம் அதிகமாக பணம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள். கேரளாவிலிருந்து வாங்குகிற மின்சாரத்திற்கு அதிக விலை கொடுக்க வேண்டிய சூழ்நிலை. நெய்வேலியிலிருந்து வாங்குகிற மின்சாரத்திற்கு அதிக விலை கொடுக்க வேண்டி இருக்கிறது. மின் உற்பத்தி செய்வதற்கான கருவிகள், பொருட்களுக்கு மைய அரசின் வரி விதிப்பினால் விலைகள் கூடுதலாக இருக்கின்றன என்ற நிலைமையும் இருக்கிறது. ஆகவே மின்சாரத்தின் விலை உயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது. 1974–க்குப் பிறகு இன்று நாம் எடுத்துக் கொண்டிருக்கிற அத்தனை முயற்சிகளும் இந்திய உப கண்டத்தில் மின் சக்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற முயற்சி வெற்றிகரமாக இருந்தாலும் கூட—மின் கழகத்திற்கு பணம் கட்ட வேண்டாம் என்று சொன்னவர்கள், மின் கழகத்திற்கு சேர வேண்டிய நியாயமான பணத்தை சேர்க்க வேண்டாம் என்று சொன்னவர்கள் கூட இந்தச் சிரமைப்பிற்கு ஒரு பக்கத்தில் காரணமாக இருந்திருக்கிறார்கள். அரசுக்கு நியாயமாகப் போய் சேர வேண்டிய பணத்தை, விவசாயிகள் கொடுக்க வேண்டிய மின் கட்டணத்தை, நியாயமாக அரசுக்குக் கிடைக்க வேண்டியதை, அந்த மின் கட்டண பாக்கிகள் இன்று வசூலிக்கப்படாத நிலையை யார் யார் தமிழகத்தில் ஏற்படுத்தினார்களோ அவர்கள் அத்தனை பேர்களும் இந்த மின் கட்டணச் சிரமைப்பிற்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–50).

ஏறத்தாழ 74 கோடி ரூபாய்க்கும் அதிகமாக விலையேற்றம் காரணமாக நஷ்டஈட்டிற்கு நாம் ஆளாகியிருக்கிறோம். லைன் லாஸ் மூலமாக, மின்சாரத்தைக் கொண்டு வருவதன் மூலமாக 19 விழுக்காடு நமக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தடுக்கின்ற முயற்சியாக, திட்டக் குழு சென்ற நவம்பர் திங்களிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே, அமைச்சர் திரு. கனிகான் சவுத்திரி அவர்கள் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசுகள் தங்களுடைய மின்சார கட்டண விகிதத்தை மாற்றினால் ஒழிய, இழப்பு ஏற்படுவதைச் சரிக்கட்ட முடியாது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி மைய அரசு எடுத்துச் சொல்லியிருக்கின்ற அத்தனை குறிப்புகளையும் நாம் செயல்படுத்தாமல் போனால், நிலைமைகள் இப்படித்தான் போகும். அப்படிப்பட்ட நிலைமை ஆனதற்குப் பிறகுதான், கட்டணத்தை சீரமைக்கின்ற கட்டாயத்திற்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கின்றோம்.





கடல் நீரிலிருந்து மின்சாரம் பெறுகின்ற அந்த நன்னாளும், திருநெல்வேலி மாவட்டம், கூடன் குளத்தில் அமைய இருக்கின்ற அனல் மின் நிலையமும் நிறைவேறுகின்ற நிலைமை ஏற்படுமானால், நமக்குத் தேவையான மின்சாரம் பெறுகின்ற, தன்னிறைவு பெறுகின்ற நிலைமை ஏற்படும். அந்த நன்நாளை, அந்தப் பொன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற வகையிலே ஆளுநர் அவர்கள் உரை அமைந்திருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி நாம் நீண்ட நெடுங்காலமாக சொல்லிக் கொண்டு வருகிறோம். இது இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினை மட்டுமல்ல. மைய அரசும் இதற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும். அப்படி ஏற்றால் ஒழிய இப்பிரச்சினை தீராது என்று நாம் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு வருகிறோம். மைய அரசு ஒரு மாநாட்டைக் கூட்டி, அந்த மாநாட்டிலே ஒரு தீர்மானத்தை வைத்து, அந்தத் தீர்மானம் வாயிலாக ஒரு சுமுகமான நிலைமை ஏற்படுமானால், சென்னைக்கு காவிரி நீர் பெறுகின்ற நிலைமைகள் ஏற்படும். அதன் மூலம் பாசனத்திற்குரிய, ஒப்பந்தப்படி நாம் நீர் பெறுகின்ற நிலைமை உருவாகும். இந்த நிலைமையை உருவாக்குவதற்கு இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் வித்திடுகின்ற வகையில், ஆளுநர் அவர்கள் உரை அமைந்திருக்கிறது.

கோயம்புத்தூரிலே பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சியிலே பாரதிதாசன் பல்கலைக் கழகம், செப்டம்பர் 15 லே தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று இப்படி தமிழுக்கு அடுக்கடுக்காக, தமிழ்கூர் நல்லுலகம் போற்றுகின்ற அத்தனை சாதனைகளையும் எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் ஆற்றியது பற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதை எடுத்துச் சொன்னோம். அதன்படி, 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பதிலே இந்த அரசு அக்கறை எடுத்து, பிப்ரவரி 1 அம் தேதி முதல் சிவில் கோர்ட்டுகளில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருப்பது உள்ளபடியே நாம் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய வேண்டும்" என்று சொன்ன பாரதியாருக்கு விழா எடுக்கும் ஆண்டில் இன்றைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது உள்ளபடியே மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

தொழுநோய் அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அதிலும் குறிப்பாக பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் பாலர்களுக்கு வராமல் தடுக்க வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்துகின்ற வகையிலே இந்த அரசு உருவாக்கியுள்ள திட்டத்தை நாம் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. ஜே. சி. டி. பிரபாகரன்] [1982 பிப்ரவரி

தொழிலாளர் நலம் காக்கின்ற வகையிலே இந்த அரசு பொறுப்பேற்ற உடனே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர்கள் வாழ்க்கையிலே ஒரு கலங்கரை விளக்காக தொழிலாளர்கள் அனைவரும் வரவேற்கின்ற வகையிலே, 1981 ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்கள் சட்டத்தை செயல்படுத்துகின்ற வகையிலே ஒரு சட்டத்தை இயற்றி, அது குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக சென்று வரும் அந்த நன்னாளை இன்றைக்கு தொழிலாளர் பெருமக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதி திராவிட மக்களுக்கு இந்த அரசு, ஆற்றி வருகின்ற சாதனைகளுக்கு, எத்தனையோ பாராட்டுகளைப் பெற்று வருகின்றது. சென்ற ஆண்டு 71.66 கோடி ரூபாயாக இருந்தது, இந்த ஆண்டு 83.04 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் நான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சம்பந்தி என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. அதேபோல், புரட்சித் தலைவர் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. ஆனால், அவர்களுக்காக அடுக்கடுக்காக நல்ல திட்டங்களைப் போட்டதன் மூலமாக, பொருளாதார ரீதியாக இன்றைக்குப் பின் தங்கியிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு இந்த அரசின் சார்பாக போடப்பட்டுள்ள நல்ல திட்டங்களை நாம் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பின் தங்கிய வகுப்பினர்கள் பொருளாதார முன்னேற்றம் காண நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களைப் பாராட்டுகிறேன். ஊனமுற்றவர்கள் சென்ற ஆண்டோடு எங்கள் கதை முடிந்துவிட்டதா என்று ஏக்கத்தோடு எண்ணும் நிலைமைக்கு மாறாக ஊனமுற்றவர்கள் இருக்கிற வரைக்கும் அரசின் சலுகைகள் தொடர்ந்து தரப்படும் என்ற அறிவிப்பு உள்ளபடியே மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழியக்கூடிய இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று எண்ணுகிறேன். ஊராட்சித் தேர்தல்களைக் குறித்து நான் இங்கே சொல்லித்தான் ஆகவேண்டும. சிலருக்கு இதிலே வருத்தம் கூட இருக்கலாம். ஆனால் உண்மைகளை எடுத்துச் சொல்லுவதில் பெருமைப்படவேண்டும் ஆட்சியில் இருந்தபோது ஊராட்சித் தேர்தல்கள் வேண்டமென்று தள்ளிப் போட்டவர்கள் யார் என்பதை நாடு நிச்சயமாக அறியும். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தலைக் நடத்திக் காட்டுவோம் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து. பேசினோம், அனைவரையும் அழைத்துப் பேசி சுமுகமாக



1982 பிப்ரவரி 2] [திரு. ஜே. சி. டி. பிரபாகரன்]

சூழ்நிலையில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தாக வேண்டும். ஆதித் திராவிடமக்களுக்கு இட ஒதுக்கீடு செய்தாகவேண்டும் என்று கூடிப் பேசி, வாக்குவாதங்கள், கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு தேர்தலை அறிவித்தோம். சிலபேர் மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டுவதில் வல்லவர்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள். மக்கள் மத்தியில் தேர்தலுக்குத் தயார், தயார் என்று ஒருபக்கம் சொல்லிக் கொண்டு மறு பக்கத்தில் வழக்காடு மன்றத்தில் தங்கள் கட்சி வழக்கறிஞர்களை வைத்தார்கள், கட்சிக்காரர்களை வைத்தார்கள், தடை உத்தரவைப் பெற்றார்கள். நான் மெத்தப்பணிவோடு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைக் கேட்கிறேன்— இன்றைக்கு பஞ்சாயத்துத் தேர்தலைச் சந்திக்க நீங்கள் பயந்த காரணந்தான் என்ன என்று எங்களுக்கு புரியவில்லை. ஒரு வேளை திருப்பத்தூர் தந்த திருப்புமுனையாக இருக்குமோ திருப்பத்தூர் உங்களைத் திணற வைத்திருக்குமோ; திருப்பத்தூர் உங்களைத் திகைக்க வைத்திருக்குமோ: என்றுதான் எண்ண தோன்றுகிறது. ஒன்றைமட்டும் தெளிவாகக் கூறுகிறேன். இன்றைக்கு வழக்காடு மன்றத்தில் நீங்கள் பெற்றிருக்கிற தடை உத்தரவுகள் அத்தனையும் தாற்காலிகமானவைதான். அரசு சார்பாக வாதாடுகின்ற வழக்கறிஞர்கள் வாதங்களை எடுத்துவைக்கிறபோது, தடைகள் உடைகின்றபோது தேர்தல் வரத்தான் போகிறது; அப்போது நிச்சயமாக மக்கள் உங்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். இந்தத் தேர்தல்நேரத்தில் மக்களைத் திசை திருப்ப என்ன முயற்சிகளைச் செய்தாலும், நீங்கள் பாதயாத்திரை போனாலும், படுத்து உருண்டாலும் தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு நோக்கி ஆளுநர் அவர்கள் விடுத்திருக்கும் வேண்டுகோள் வரவேற்கத்தக்கது. மத்திய அரசோடு சுமுகமான உறவை ஏற்படுத்தும் வகையில் இருபது அம்சத் திட்டம் அத்தனையையும் ஏற்றுக் கொள்கிறது இந்த அரசு என்று பெருமிதத்தோடு சொல்லியிருக்கிற காரணத்தால் அதனை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கு சட்டம் ஒழுங்கு சீராக இருக்கிறது என்று ஒரு வரியில் சொல்லியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் காவலராக முதல்வர் அவர்கள், இதய தெய்வமாம் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள் என்பது மனதிற்கு மெத்த மகிழ்ச்சியாக் இருக்கிறது. ஆனால் சட்டம் ஒழுங்கைப்பற்றிச் சொல்லும்போது ஒன்றைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. செப்டம்பர் மாதந்தான் எத்தனை பெரிய அரசியல் மாற்றங்களுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. இந்த செப்டம்பர் திங்களில் இதய தெய்வமாம் புரட்சித் தலைவரை நோக்கி வீசப்பட்ட ஏளனச் சொற்கள் கேட்கப்பட்ட கேள்விகள் எத்தனை? இந்த செப்டம்பர் திங்கள் 15 ஆம் தேதி தமிழ்கூறும்

[திரு. ஜே. டி. பிரபாகரன்] [1982 பிப்ரவரி 2

நல்லுலகம் போற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைகிறது. தமிழுக்காக வாழ்ந்திட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செம்டம்பர் 15-ல் தமிழ்ப் பல்கலைக் கழகம் துவங்குகிறது. வாருங்கள் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தமிழுக்குச் சிறப்புப் செய்யவேண்டியவர்கள், சிறப்புச் செய்யப் பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் தமிழுக்குச் சிறப்புச் செய்யாவிட்டாலும் நம்மை ஆளாக்கிய அண்ணாவுக்குச் சிறப்புச் செய்கிற அண்ணாவின் பிறந்தநாளில் என்ன செய்தார்கள். 'பிடி' என்று சொன்னார்கள். பிடிக்க முடியுமா என்று கேட்டார்கள், அதற்குப் பின்னால் நிலைமை என்னவாயிற்று? சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற இந்த அரசு அத்தனை முயற்சிகளையும் எடுத்துக் கொண்டது, எந்தத் தனி மனிதனானாலும் சரி, எந்த இயக்கமானாலும் சரி, பொதுமக்கள் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படும் வகையிலோ பொதுமக்களைத் திசை திருப்பும் வகையிலோ செயல்பட்டால் சட்டம் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறாது என்பதை எங்கள் இதய தெய்வமாம் புரட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற இந்த அரசு அத்தனை முயற்சிகளையும் எடுத்துக் கொண்டது என்று ஆளுநர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பதற்காக என்னுடை நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Honour and shame from no condition raise, Act well your part,
And he call the Honour lies.

(நண்பகல் 12-00)

என்று சொல்வார்கள். அந்த வாக்கின் அடிப்படையில் இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் தன்னுடைய வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் லட்சியங்களை இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோட்பாடுகளை, கொள்கை விளக்கங்களை இன்றைக்கு தெளிவாகச் சொல்லி யிருக்கின்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து நான் என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

திரு துரை முருகன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கவர்னர் அவர்களால் படிக்கப்பட்ட அறிக்கை யின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துவைக்கக் கடமைப்பட்டி ருக்கிறேன். நான் ஏற்கெனவே ஒரு முறை குறிப்பிட்டதைப் போல் ஒரு நூலுக்கு பாயிரம்போல் அமைவது ஆளுநர் உரை யாகும். வருகிற நிதியாண்டில் திட்டங்கள் பல போடப்படும் பட்ஜெட்டிலே. அவைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற் போல் ஒரு அரசாங்கத்தினுடைய கொள்கையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி இந்த வழியாக அரசு செல்கிறது என்பதை நாட்டு



1982 பிப்ரவரி 2] திரு. துரைமுருகன்

மக்களுக்கு அறிவிப்பதுதான் ஆளுநர் உரையாக இருக்கும். காரணம் ஆளுங்கட்சியால் தயாரிக்கப்பட்டு, ஆளுநரிடத்திலே தரப்பட்டு அவர் படிக்கிறாரே தவிர அவருக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை நாம் நன்றாக அறிவோம்.

இந்த ஆளுநர் உரையிலே அண்ணா தி.மு.க. அரசினுடைய கொள்கை ஏதாவது பிரதிபலிக்கிறதா, புதிய சித்தாந்தங்கள் மலர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் அவைகள் எல்லாம் ஒன்றும் இல்லை. ஆனால் ஒன்று தெரிகிறது நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாக ராஜதந்திரத்தை கையாண்டு தனக்கு இந்த பட்ஜெட்டை இந்த அவையில் விவாதிக் கின்ற வாய்ப்பு பலமுறை இல்லாத காரணத்தினால் சரியான நேரம் பார்த்து, ஆளுநர் உரையிலே மின்சார பட்ஜெட்டை முழுக்க நுழைத்து விட்டு இருக்கிறார். இது ஒரு மின்சார பட்ஜெட்தானே ஒழிய ஆளுநர் உரையல்ல.

சாவனீர் போடுகிறபோது சில விளம்பரங்களை வாங்கிச் சேர்த்துவிடுவார்கள் பல பக்கங்களுக்கு. அப்படித்தான் வறட்சி நிவாரணம் என்றோ அது என்றோ இது என்றோ இரண்டு மூன்று விளம்பரங்களை வாங்கி அதிலே சேர்த்துவிட்டு பட்ஜெட் வைத் திருக்கிறார் மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் என்று அவருக்குத்தான் இது போகுமே தவிர இது ஆளுநர் உரை என்று கருதப்படுவதற்கு எந்தவிதமான இடமும் இல்லை.

வழக்கமான பல்லவியாக இருக்கிறது. எடுத்தவுடனே மின் சாரத்துறையிலே என்ன செய்திருக்கிறோம் என்பதைப்பற்றிச் சொல்லிவிட்டு என்ன செய்யப்போகிறோம் என்பதைச் சொல் கிறார்கள். இன்றைக்குக் காலையிலே தமிழ்நாட்டிலே வருகிற பத்திரிகைளையெல்லாம் நான் புரட்டிப் பார்த்தேன். நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் நடுநிலை ஏடுகளாக உள்ளவற்றை நான் புரட்டிப் பார்த்தேன். இந்துவோ, தினமணியோ இந்தியன் எக்ஸ்பிரஸோ—அந்தப் பத்திரிகைகளிலே என்ன தலைப்புகள் போட்டிருக்கிறார்கள் என்று பார்த்சால் பவர் டாரிப் அப்லிப்ட் என்று போட்டிருக்கிறார்கள். வரியேற்றப்படும். வரி ஏற்றப் படும் என்ற அறிவிப்பு எப்படி இதிலே வரும். அதற்கு என்று இன்றைக்கு ஒரு பட்ஜெட் இல்லை. உங்களுக்கு என்று ஒரு பட்ஜெட் இல்லை. அதற்கென்று நிதியாண்டு இல்லை. கொள்கை யைச் சொல்வதற்குப் பதிலாக வரியை ஏற்றுகிறோம் என்று சொல்வதற்காக ஆளுநர் உரையைப் பயன்படுத்துகிறீர்கள் என்று சொன்னால் மின்சாரத் துறை திவாலாகக்கூடிய நிலைக்கு வந்து விட்டது, நடப்பு நிதியாண்டு வரையிலும்கூட பொறுக்கமுடியாத அளவுக்கு ஒரு அரிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை இதிலே நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். எந்தவிதமான குறையும் சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல, புகழலாம் என்றுகூட எனக்கு ஆசை. ஆனால் இதிலே எதுவும் இல்லை. வழக்கமாக இதைப் பார்த்தால் மத்திய சர்க்கார் எங்களுக்கு கோதுமை தரவில்லை

என்பது ஒரு பொதுவான குற்றச்சாட்டு. போதுமான அளவுக்கு அரிசி தரவில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் திரு. டென்னிஸ் என்ற பாராளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்துலே இதைப் பற்றிக் கேட்கிறபோது ராவ் பிரேந்திர சிங் என்ற அமைச்சர் ஒதுக்கப்பட்ட அரிசியை எடுத்துக்கொண்டு போவதற்கு வக்கில்லாமல் இருக்கிறது. அரிசி கிடைக்கவில்லை என்று கன்னியாகுமரியிலிருந்து வந்து புலம்புகிறீர்களே என்று நாடாளுமன்றத்துலே கேட்டார்.

அதற்கு நம்முடைய நாவலர் துடித்தெழுந்து அரசாங்கத்தின் சார்பிலே மறுப்புரைத்திருப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இதுவரையிலே அந்த மறுப்பு என் கண்ணிலே படவில்லை. வேறு என்ன திட்டங்கள்? கடல் நீரை குடிநீராக்குவோம். முடியுமா என்று கேட்டால் முதலமைச்சர் கதையொன்று சொல்வார். ஒரு கிழவர் மாங்கன்று நட்டாராம் தெரியுமா என்று கதையொன்று சொல்வார். அதைப்போல் மற்றும் சென்னை, மேட்டூர், தூத்துக்குடி அனல் மின் திட்டங்கள் அமைக்கும் யோசனையில் இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அப்புறம் என்ன சொல்லியிருக்கிறீர்கள் சமரச சோஷலிஸம். தனியார் துறைக்கு மின்சாரம் உற்பத்தி செய்யக் கொடுத்துவிடு. கோத்தாரி அன்றைக்கே அறிக்கை விட்டார். நாங்கள் திட்டம் போட்டு இத்தனை கோடி ரூபாய்க்கு சர்க்காரிடத்திலே சமர்ப்பித்து விட்டோம் என்றார். நடக்குமா என்று பார்த்தேன். யாமிருக்க பயமேன் என்கிறது ஆட்சி. கோத்தாரிகளும் பண முதலைகளும் நாட்டிலே மின்சாரத்துறையைக் கைப்பற்றப் போகிறார்கள். நல்ல சோஷலிஸம். வாழ்க உங்கள் சமதர்மம்.

அடுத்து என்ன பிரச்சினை. காவிரிப் பிரச்சினை. தீர்க்க முடியவில்லையே என்கிறார்கள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, நாங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது கோபமாக பேசுவார்கள். ஆளுங்கட்சியினுடைய கையாலாகாத தனத்தால் காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை என்றார்கள். இப்போது என்ன என்று கேட்டால் மத்திய அரசே, நீ தான் வழி காட்ட வேண்டுமென்று தெண்டனிட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையைச் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள்.

இதில் வேறு என்ன கொள்கை இருக்கிறது? எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல், ஏதோ மளிகைக் கடை சாமான் கணக்கைக் காட்டுவதைப் போல வறட்சிக்காகச் செய்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதிலேயாவது என்ன செய்திருக்கிறோம் என்பதைப் பற்றி ஒன்றிரண்டு சொல்ல வேண்டாமா?

எதிலே பார்த்தாலும் விளம்பர நோக்கம் தான். இங்கேகூட நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள், யார் யாருக்குத் தமிழ் நாட்டில் வேலை இல்லையோ அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வாருங்கள்; வேலைத் தேடித் தரும் நிலையத்திற்குப் போக வேண்டாம்; பஞ்சாயத்து யூனியனிலே பதிவு செய்து கொள்ளுங்கள் பெயரை; நாங்கள் வேலை தருகிறோம் என்று சொன்னார். இரண்டரை கோடி பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவ்வளவு பேர்களுக்கும் வேலை கொடுத்தாகி விட்டதா என்று காலையில் கேட்ட பொழுது ஆளுக்கு வேலை இல்லை, மேன் பவரைப்பற்றிச் சொல்கிறேன், எவ்வளவு மனிதத் திறன் என்பதைப் பற்றிச் சொல்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் பத்திரிகைகளிலே பெரிய பெரிய விளம்பரங்கள். இரண்டரை கோடி பேருக்கு வேலை என்று. ஆனால் எவ்வளவு பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் சொல்லவில்லை. காரணம் ஏதோ விளம்பரத்திற்காக இருக்க வேண்டுமென்று செய்கிறார்களே தவிர, ஒரு காரியம் நடைபெற வேண்டுமென்ற முனைப்பில் இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து, கவர்னர் உரையிலே முதல் பக்கத்திலே, வழக்கமாகச் சொல்வதைப் போல நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றியும், அதற்குப் பிறகு எட்டயபுரத்திலே நடைபெற்ற பாரதியார் விழாவைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். எட்டயபுரம் பாரதி விழாவில் சொலு பண்டபங்கள், விவாத அரங்குகள், இசைப் போட்டிகள், அப்பப்பா, என்னென்ன நடந்தன ஆனால் அது பாரதிக்கு எடுத்த விழாவா அல்லது இவர்களுக்காக விழா எடுத்துக் கொண்டார்களா என்றுதான் எனக்குப் புரியவில்லை.

நாங்கள் இந்த மன்றத்திலே ஆளுங்கட்சியாக இருக்கும் பொழுது அந்த நேரத்திலே பீரங்கி போலப் பேசக்கூடிய ஹண்டே அவர்கள் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர். அப்பொழுது, அவர் கலைஞரைப் பார்த்துச் சொன்னார், இந்த முதலமைச்சர் விளம்பரப் பிரியர், சுய விளம்பரவாதி Personality cult என்றெல்லாம் அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை தூக்கிப் போட்டிருக்கிறார்கள். இப்பொழுது நான் கேட்க விரும்புகிறேன், பாரதி நூற்றாண்டு விழா நடந்துக் கொண்டிருக்கிறது; பாரதிக்கு விழா எடுக்கிறார்கள்; அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் சர்க்கார் செலவிலே வெளியிடப்படும் தமிழரசு பத்திரிகையிலே பார்த்தால் அந்தப் பாரதியாரின் படத்தை வெளியிட்டு தமிழரசு இணைப்பாக இணைத்திருக்கலாம். ஆனால் விளம்பரத்தையே விரும்பாத இவர்கள், விளம்பரம் என்றாலே படுத்துக் கொள்பவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? மாண்புமிகு முதலமைச்சரவர்களின் படத்தை இவ்வளவு பெரிதாகப் போட்டு, இரத்தின சிம்மாசனம் போல வைத்து, அவர்களுக்குப் புருவம் தீட்டி இருக்கிறார்கள். புன்னகை முகத்தில் தவழ்கிறது. இப்படிப் போட்டு விளம்பரத்

[திரு. துரைமுருகன்] [1982 பிப்ரவரி 2

தைத் தேடிக் கொள்கிறார்கள். பாரதியார் விழா அதற்குச் சாக்காகக் கிடைத்தது. தமிழரசு பத்திரிகை போட்டிருக்கிறார்கள். அதிலே பாரதியாரின் படங்களை எத்தனை இடங்களில் பார்க்கிறீர்கள்? முதல் பக்கத்திலே இரண்டு இடங்களிலே முதலமைச்சரின் படம்; இந்தப் பக்கத்திலே நான்கு இடங்களிலே முதலமைச்சரின் படம். அடுத்த பக்கத்தில் இரண்டு இடங்களில் முதலமைச்சர் படம். இந்தப் பக்கத்தைப் பார்த்தால் இங்கேயும் முதலமைச்சர் படம்.

இப்படி முதலமைச்சர் படம் இல்லாத தமிழரசு பத்திரிகையே இல்லை. இதைவிட விளம்பரம் உண்டா? சர்க்கார் விளம்பரங்கள் எதுவானாலும் சரி, அது குடிசை மாற்று வாரிய விளம்பரமானாலும் சரி, சுகாதாரத் துறையிலே ஆஸ்பத்திரி திறக்கின்ற விளம்பரமானாலும் சரி, அந்த அமைச்சரின் படம், அடுத்து முதலமைச்சரின் படம் என்று "வாதாபி கணபதி நமோ நம" என்று பாடுவதைப் போல முதலமைச்சரின் படத்தைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அன்றைக்கு எவ்வளவு வேகமாகக் கொந்தளித்தவர்கள் இன்றைக்குச் சும்மா இருப்பதைப் பார்க்கும்பொழுது, நல்ல சுகம் தோழி பதவி சுகம் என்று. நினைக்கத் தோன்றுகிறதே தவிர வேறு என்ன நினைக்க முடியும்? அந்த அளவிற்கு இப்படிப்பட்ட விளம்பரங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கவர்னர் உரைக்காக கூட்டத்தை எப்படிக் கூட்டியிருக்கிறீர்கள்? அரசியல் சட்டத்திலே ஆறு மாதங்களுக்கு மேலே சபை கூடாமல் இருக்கக் கூடாது என்று எப்படியோ எழுதி வைத்து விட்டதால் கூட்டியிருக்கிறீர்களே தவிர, உமாநாத் அவர்கள் கூடக் கடிதம் எழுதினார்கள், நாடு கொந்தளிக்கிறது, கூட்டுங்கள் என்று. அப்பொழுதெல்லாம் சட்டசபையைக் கூட்ட மாட்டேன் என்றீர்கள். விண்டர் செஷன் என்று எல்லா மாநிலங்களிலேயும் நடந்தது; ஆனால் இந்த மாநிலத்தில் நடக்கவில்லை. கேட்டால் என்ன சொல்கிறீர்கள், எங்களுக்குச் சர்க்கார் நடக்காதா என்று கேட்கிறீர்கள். நடக்கும், எப்படி நடக்கும்? ஆர்டினன்ஸ் மூலம் நடக்கும். அரசியல் சட்டத்திலே இருக்கிறது என்பதற்காக எடுத்ததற்கெல்லாம் ஆர்டினன்ஸ், பத்து பதினாறு ஆர்டினன்ஸ் என்று இது ஆர்டினன்ஸ் சர்க்காராக இருக்கிறதே தவிர அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காராக இல்லை.

தலைவரவர்களே, அப்படியொரு ஆர்டினன்ஸை, அவசரச் சட்டத்தை அடிக்கடி பிறப்பிப்பது எவ்வளவு ஜனநாயக விரோத செயல் என்பதைக் குறித்து பாராளுமன்றத்தின் சபாநாயகராக இருந்த மௌலாங்கர் 1959 ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 11 ஆம் தேதி ஒரு கடிதத்தை அந்தப் பார்லிமெண்டரி விவகார அமைச்சர் எஸ். என். சின்காவுக்கு எழுதுகிறார். அந்தக் கடிதத்தில், அவசரச் சட்டம் பிறப்பிக்கும் செயல்முறை ஜனநாயகத்



1982 பிப்ரவரி 2] [திரு. துரைமுருகன்]

திற்கு விரோதமானது. லோக் சபை புறக்கணிக்கப்படுகிறது என்ற உணர்வை ஏற்படுத்துவதாகும். அவசரச் சட்டத்தை லோக் சபை ஏற்றுக் கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை என்று ஆட்சி நினைப்பதாகக் கருத இடம் உண்டு. அவசரச் சட்டங்கள் அவை பிரகடனம் செய்யப்பட்ட உடனேயே, அமுலுக்கு வந்து விடுகின்றன. 'பார்லிமென்ட்' கூடுவதற்கு இரண்டு மாதங்கள் இருந்தால் இடைக் காலத்தில் பார்லிமெண்ட்டின் சம்மதம் இன்றியே அந்தச் சட்டம் அமுலுக்கு வந்து விடுகிறது" என்று குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். நான் இதை எதற்குச் சுட்டிக் காட்டுகிறேன் என்று 'சொன்னால், அந்த நிலைமையில் அவசரச் சட்டத்தின் மூலமாகவே ஆட்சியை நடத்திவிடலாம் என்று கருதிக் கொண்டிருக்கிற இந்தச் சர்க்கார், அவசர சர்க்கார் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது என்பதற்காகத்தான் நான் அதைச் சுட்டிக் காட்டினேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, கவர்னர் உரையிலே, பல்வேறு பிரச்னைகளைப் பற்றி எனக்கு முன்னாலே, ஆளுங்கட்சி உறுப்பினர் பேசும்போது சொன்னார்கள். விற்பனை வரி வசூல் செய்கிற உரிமையை மத்திய அரசு பறிக்கக் கூடாது என்று வன்மையாக மறுத்து, தி.மு. கழகத்தினர் பேசி இருக்கிறார்களா என்றால், நாடாளுமன்றத்திலே அதுபற்றி பலமுறை பேசப்பட்டிருக்கிறது. யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பது அல்ல, தமிழ்நாட்டினுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் அதைப் பார்த்துக் கொண்டிருக்காது. எனவேதான் விற்பனை வரியை மத்திய அரசு எடுத்துக் கொள்ளும் என்று சொன்னால்—எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்பது அல்ல: விற்பனை வரி என்பது அந்த மாநிலத்திற்கு இருக்கிற கற்பகத்தரு அந்தக் கற்பகத் தருவையும் தட்டிக் கொண்டு போய் விடுகிறது என்று சொன்னால், கொடி தூக்குகிற கட்சி, திராவிட முன்னேற்றக் கழகமாகும். ஆனால் நீங்கள் அப்படி அல்ல.

இன்னொன்று கூடச் சொன்னார், திரு பிரபாகர். பினாமி ஒழிப்புச் சட்டம்—லான்ட் ரிஃபார்ம்ஸ்—அனுப்பப்பட்டதை ஜனாதிபதி மறுத்து விட்டார், திராவிட முன்னேற்றக் கழகம் குரல் கொடுக்குமா? வெளி நடப்பு செய்யுமா? கோஷம் கிளப்புமா என்று கேட்டார். எனக்கு ஞாபகம் இருக்கிறது—அவர்கள் கட்சியிலே கூட யாரோ இரண்டொருவர் லோக் சபாவில் இருப்பதாகக் கேள்வி. ஆனால் நான் பத்திரிகைகளில் படித்தேன். அது மறுக்கப்பட்டது என்ற செய்தியைக்கேட்டவுடன்—சென்ற பாராளுமன்றக் கூட்டத் தொடரிலேயே தெரிவிக்கப்பட்டது. ஒரு அமைச்சர் சொன்னார், 'தலைவெட்டி ராட்சசனாக உக்கிரமானவனாக மாறுவேன் அப்படி சொன்னவர் நடுங்கவைத்த செய்தியை நான் எந்தப்பத்திரிகையிலும், பார்க்கவில்லை, பார்த்திருந்தால்

சொல்லுங்கள், கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய கட்சி ஏகோபித்து முடிவெடுத்து தீர்மானம் போட்டு, எங்கள் இயக்கத்தின் சார்பிலே போட்டிருக்கிற தீர்மானம் இது ஆகவே நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்று குரல் கொடுத்து வெளியே வந்துவிட்டு, நாங்கள் வெளியே வந்துவிட்டோம், திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளே உட்கார்ந்திருந்தது என்று சொன்னால் அதிலே ஏதாவது பொருள் இருக்கிறது, விஷயம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் நீங்களே அங்கே 'ரிவீட்' அடித்தாற்போல் உட்கார்ந்து கொண்டிருந்துவிட்டு, வெளியே வருகிற தைரியம் உண்டா என்று கேட்கிறீர்கள், அடேயப்பா, அதை நீங்கள் சொல்லக் கூடாது. ஆனால் முன்னேற்றக்கழகம் அப்படி அல்ல. ஜனதா ஆட்சி இந்த நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, மாநிலங்களவையிலே தனி நபர் தீர்மானம் ஒன்று கொண்டு வந்தார்கள். அது இந்தி எதிர்ப்பைப் பற்றியது. ஆனால் அங்கு இருந்து அ.இ.அ.தி.மு.க. எம்.பி.க்கள் அதில் பேசவில்லை என்ற குற்றச்சாட்டை அவருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எனவே, உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறது என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இங்கே பஞ்சாயத்து தேர்தலைப் பற்றி ஆளுங்கட்சி உறுப்பினர் பேசினார். பஞ்சாயத்து தேர்தல்—அது ஒரு பெரிய வரலாறு. அந்த வரலாறில், எங்களுக்கே ஞாபகம் இல்லை. இதை நீங்கள் எத்தனை முறை தள்ளி வைத்தீர்கள் என்று நேற்று ஒரு பத்திரிகையில் படித்தேன், ரொம்ப அழகாக எழுதியிருந்தார்கள். அந்தப் பத்திரிகை ''I l n Ex r s'' C di ln i x es. அதில் போடப்பட்டிருக்கிறது ஏன் தள்ளி வைக்கிறீர்கள் என்று. இப்பொழுது ஏன் தள்ளி வைக்கிறீர்கள்? மழைக் காலம் அதற்குப் பிறகு ஏன் தள்ளிவைக்கிறீர்கள்? வறட்சி காலம்; அதற்கடுத்து ஏன் தள்ளுகிறீர்கள்? பயிர் அறுவடைக் காலம்: அடுத்து, இப்பொழுது ஏன் நடத்தவில்லை, சட்டமன்றம் கூடியிருக்கிறது. அடுத்து, இப்பொழுது ஏன் நடத்தவில்லை? 18 வயதுக்காரர்களுக்கு ஓட்டு கொடுக்கப் போகிறோம். இப்பொழுது ஏன் நடத்தவில்லை? ஓட்டர்ஸ் லிஸ்டில் போகஸ் இருக்கிறது, அதைத் திருத்தப் போகிறோம். அதற்கடுத்து ஏன் நடத்தவில்லை? பெண்களுக்கும் அரிசனங்களுக்கும் ஒதுக்கப் போகிறோம். இப்படித் கிட்டத்தட்ட நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, சற்றொப்ப 10 முறை தேர்தலைத் தள்ளிவிட்டு, கடைசியாக வேறு வழியில்லை, கிடுக்கிப் பிடி போடுகிறார்களே என்று ஜனவரி 24 ஆம் நாள் முதல் 'போலிங்' ஜனவரி 29 ஆம் நாள் இரண்டாம் நாள்





'போலிங்.' மகத்தான வெளியீடு; பஞ்சாயத்து தேர்தல் வந்தே தீரும் என்று அறிவித்தீர்கள் எல்லோரும் சொன்னார்கள், சார், இந்தக் கட்சியா தேர்தல் வைக்கும் என்று, நான் மனமாற நம்பித்தான், நானே கூட சேர்மனாக நிற்க நாமினேஷன் போட்டேன், இவ்வளவு செய்த பிறகும் நிறுத்துமா சர்க்கார் என்று? மனமார நம்பித்தான் கொடுத்தேன். ஆனால் என் எண்ணத்தைக்கூட, நீங்கள் முறியடித்துவிட்டீர்களே, உங்கள் பேரில் கொஞ்சம் நஞ்சம் வைத்திருந்த நம்பிக்கையும் கூட, இந்த முறை நடத்துவார்கள் என்று நினைத்திருந்ததைக்கூட, செயலாக்காமல் போய் விட்டீர்களே என்று நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். ஆனால் இவ்வளவு நடந்ததற்குப் பிறகும் என்ன நிலைமை ?

இன்றைக்கு வழக்கு மன்றத்திலே இருக்கிறது. இப்போது கூட கேட்டார்கள், நீங்கள்தான் வழக்கு மன்றத்திற்குப் போனீர்கள் என்று,' தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற 374 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இரண்டே இரண்டு நாளில் இன்னின்னார் சேர்மனாக நிற்பார்கள் என்று அறிவித்த கட்சி, தமிழ்நாட்டிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள் ? போடுகிறவர்கள் எல்லாம் போடுங்கள் என்றீர்கள், எனக்கு அப்போதுதான் சந்தேகம் வந்தது. இது நடக்காது, நாமும் இவ்வளவு நாட்களாகத் தேர்தல்களைப் பார்க்கிறோம். 4, 5 எலக்ஷனிலேகூட நானே நின்றிருக்கிறேன். எந்தக் கட்சியும் இன்னார் தான் வேட்பாளர் என்று அறிவிப்பார்களே தவிர, எவரிடம் 200 ரூபாயும் 2 பேர் பொறுப்பாளர்களாக போடுவதற்கு ஒரு ஆள் இருந்தால் நாமினேஷன் பைல் பண்ணலாம் என்று சொல்லும்போது இது வராதுபோல் இருக்கிறது, நமக்கு 200 ரூபாய்கள் நஷ்டம் என்று அப்போதுதான் நான் முடிவுக்கு வந்தேன். என்ன நடந்தது? என்ன நிலைமை?

வழக்குமன்றத்திற்குப் பலர் போனார்கள். ஏன் போனார்கள்? பெண்களுக்கு, அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்தீர்கள், வரவேற்கிறோம். நாங்கள் அதை மறுக்கவில்லை. ஆனால் எந்த முறையிலே நீங்கள் ஒதுக்கீடு செய்தீர்கள் என்றல்லவா மற்றவர்கள் போயிருக்கிறார்கள். கேட்டால், தி.மு.க. வக்கீல் ஜி. ராமசாமி ஆதரிக்கவில்லை என்று சொல்லுகிறீர்கள். ஜி. ராமசாமி அவர்கள் ஒரு வழக்கறிஞர் தி.மு.க. சார்பிலே இருக்கின்ற வழக்கறிஞர்கள் தலைமைக் கழகத்திலே இருக்கின்றவர்கள் எங்களுடைய கணபதி, இராதாகிருஷ்ணன், எஸ். வி. எல். மு ஆசியவர்தான். திரு ஜி. ராமசாமி அவர்கள் தமிழ்நாட்டிலே ஒரு பிரபலமான வக்கீல்; என்னுடைய சீனியர் என்று சொல்லிக்கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன். ஆனால் அந்த ஜி. ராமசாமியிடம் பலர் வருவார்கள், போவார்கள், அதற்காக அவர் வாதாடுகின்ற வக்கீல், டாக்டர் மாதிரி, அப்படி என்றால்

[திரு. துரைமுருகன்] [1982 பிப்ரவரி 2

எங்கள் வழக்குகளை முன்னால் எடுத்து நடத்தி இருக்கிறார்
என்பதற்காக அவர் தி.மு.க.காரர் என்று குற்றம் சாட்டி
தி.மு.க. பெரிய வக்கீல் ஸ்டே கேட்கிறார். சின்ன வக்கீல்
எதிர்க்கிறார் என்று......

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் துரை
முருகன் அவர்கள் இப்போது ஒரு செய்தியை கோடிட்டுக் காட்டிச்
சொன்னார்கள். இந்தியன் எக்ஸ்பிரசிலே பஞ்சாயத்துத் தேர்தல்
கள் எத்தனை தடவை ஒத்திவைக்கப்பட்டன, தனி அலுவலர்கள்
எத்தனை முறை போடப்பட்டார்கள் என்பதற்கான காரணங்
களை அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது என்று சொன்
னார்கள். அதே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கடந்த 6-ந்
தேதி அன்று யார் 'ஸ்டே' வாங்கினார்கள் என்பதைப் பற்றியும்
எழுதி இருக்கிறது. அதிலே ஜி. ராமசாமி என்கின்ற வழக்கறிஞர்
தான் தி.மு.க. வுக்காக அப்பியர் ஆனார் என்றும், இந்தியன்
எக்ஸ்பிரசில் வந்திருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்தான் பொதுத் தடை
வேண்டுமென்று கேட்டார் என்பதை விவரமாக புள்ளிவிவரங்
களை அவர் எடுத்துச் சொல்லி இருக்கிறார், அப்படிச் சொன்
னாலும் ஜி. ராமசாமி உங்களுக்காக வாதாடவில்லை என்று
சொல்வது, உண்மையிலேயே நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது
சாக்கு என்பதைப் போலத்தான் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்
கிறீர்களே. உண்மைகளை மறுக்க முடியாது. பொதுத் தடை
கேட்டவர்கள் தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை
இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்
பத்திரிகைச் செய்தியை சொல்லுகிறார். இந்தியன் எக்ஸ்பிரசிலே
மாத்திரம் அல்ல, வேறு எந்தப் பத்திரிகையிலே எழுதி இருந்தாலும்
நான் இப்போது இந்த அவைக்குத் தெளிவாக சொல்லிக்கொள்
கிறேன். தேர்தலை நடத்தவேண்டும் என்று எங்கள் தலைமைக்
கழகத்தின் சார்பிலே வாதாடியவர் என். நடராசன் அவர்கள்.
நடத்தவேண்டும் என்று ரிட் ஆப் மான்டமஸ் போட்டார். திரு
ஜி. ராமசாமி அவர்கள் எங்கள் கட்சியின் சார்பிலே அப்பியராக
வில்லை. நாங்கள் அவரை நியமிக்கவில்லை. ஆனால் எங்கள்
பல வழக்குகளை அவர் நடத்தி இருக்கிறார். முதலமைச்சருக்கு
மிகவும் வேண்டியவர் ஒருவர், ராகவாச்சாரி அவர்கள், அவர்
கூட போய் இருக்கிறார். உடனே முதலமைச்சருக்கும் அவருக்கும்
சம்பந்தம் என்று ஒத்துக்கொள்கிறீர்களா? ஆனால் ஒன்றை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்...............

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே நான் இந்தியன் எக்ஸ்பிரசில் வந்த வார்த்தையை
வேண்டுமானாலும் சரியாகச் சொல்லுகிறேன்.

"D. M. K. with its Counsel. G. Ramaswamy"

என்றே அந்த வார்த்தைகள் போடப்பட்டிருக்கின்றன. அதை
மறுக்கிறீர்களா?



1982 பிப்ரவரி 2]

திரு. என்.வி.என். சோமு : துணைத் தலைவர் அவர்களே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத்
தருகிறீர்கள். அன்றையதினம் முதிய வழக்கறிஞர் ஜி. ராமசாமி
அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆஜராகவில்லை
என்பதை வலியுறுத்தி அழுத்தம் திருத்தமாக எங்கள் கட்சியின்
சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு
உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்த என். நடராசன்
அவர்கள்தான் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பாக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் என்பதை மீண்டும்
தெரிவித்துக்கொள்கிறேன். அவைக்குத் தவறான தகவலை தர
வேண்டாமென்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20).

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இதிலே
பலர் ஸ்டே வாங்கி விட்டார்கள். ஸ்டே வாங்கிவிட்ட பிறகு,
என்ன நடந்தது? ஒருகால் உங்களுக்கு அதிலே கூட பயம்.
தேர்தல் நடத்தக் கூடாது என்ற உள்நோக்கம், பயம்
உங்களுக்கு இருக்கிறது என்பதற்காக சொல்கிறேன். ஒருக்
கால் கோர்ட்டில் அது எல்லாம் இல்லை, தேர்தல் நடக்
கும் என்று சொல்லி விட்டால் என்ன ஆவது என்பதற்காக,
2 ஆம் தேதி லாஸ்ட் டேட் சேர்மன் பதவிக்கு நாமினேஷன்
போடுவதற்கு. அது முடிந்த பிறகு, 3 ஆம் தேதி வில்லேஜ்
ஆபீசர்ஸ் நாமினேஷன் போடலாம் என்று போட்டீர்கள்.
அப்படியென்றால் என்ன அர்த்தம்? அவர்களும் போய் ரிட்
போடுவார்கள், நேற்றே இந்த உரிமை எங்களுக்குக் கொடுத்து
இருந்தால் நாங்களும் சேர்மனுக்கு நின்று இருப்போம், அந்தச்
சான்சைக் கெடுத்தீர்கள் என்று இரண்டாவது ரிட் போட்டு
அந்தத் தேர்தலை எப்படியும் நிறுத்தி விடவேண்டும் என்று
உள் நோக்கத்தோடு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அல்லவா?
எப்படி இந்த நிலைமை ஏற்பட்டது? நாம் யாரைத் கேட்டு
டி-லிமிடேஷன் ஆப் கான்ஸ்டிடியுன்சி பாராளுமன்றத்திற்கும்,
சட்டமன்றத்திற்கும் செய்கிறோம்? சர்வ கட்சியினரையும் கூட்டி
இந்தத் தொகுதியை அரிசனங்களுக்குக் கொடுக்கப் போகிறோம்,
இந்தத் தொகுதியை பெண்களுக்குக் கொடுக்கப் போகிறோம்
என்று சொல்கிறோம். இங்கே என்ன நடந்தது? அப்படிச்
சொன்னவுடனே 40,000 அப்ஜக்ஷன் பெட்டிஷன் வந்தன.
அதையெல்லாம் விசாரித்தீர்களா? அப்படி வந்ததையெல்லாம்
என்ன செய்தீர்கள்? உடனடியாக 3 நாட்களுக்குள் டிசைசல்
செய்தீர்கள். எப்படிச் செய்தீர்கள்? உடனடியாக ஏடு படிக்கிற
மாதிரி படித்து விட்டீர்களா? இந்தத் தொகுதி இன்னின்னாரு
ருக்கு ஒதுக்க வேண்டும் என்பதற்காக நாவலர் தலைமையில்
ஒரு குழு போட்டீர்கள். அவர்கள் என்ன செய்தார்கள்? அதை
அப்படியே போட்டு விட்டார்கள். இன்னின்ன தொகுதி இன்னின்
னாருக்கு ஒதுக்குவது என்று சொன்னால் அதற்கு ஒரு நியாயம்
இருக்க வேண்டாமா?

[திரு. துரைமுருகன்] [1982 பிப்ரவரி 2

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தொகுதியில் அண்ணா கிராமப் பஞ்சாயத்து யூனியன் என்பதில் அவியனூர் என்று ஒரு கிராமம். அந்த கிராமத்தில் நாமினேஷன் போடுவதற்குக் கூட ஒரு அரிசன் இல்லை. இருந்தாலும், அதை அரிசனங்களுக்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்த ஊரில் இருக்கிறவர்கள் கோர்ட்டுக்குப் போக மாட்டார்களா? அப்படிக் கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்று வந்தவர்களை திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தான் வேண்டாம் என்று சொல்லி தடுத்தார்கள். நாமினேஷன் போடுவதற்கு ஆள் இருந்தால் போடுவோம், அப்படியில்லையென்றால் விட்டு விடுவோம், நமக்கென்ன வந்தது, கோர்ட்டுக்குப் போக வேண்டாம் என்று தடுத்தார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மன்னிக்க வேண்டும். தவறான தகவல் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். உண்மை நிலையை சபை அறிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அண்ணா கிராமப் பஞ்சாயத்து யூனியனில் உள்ள அவியனூர் கிராமத்தில் 1971 ஆம் ஆண்டு சென்சஸ்படி அரிசனங்கள் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் அது செய்யப்பட்டு இருக்கிறது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் இவைகள் செய்யப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அங்கே ஒரு அரிசன் கூட இல்லை என்று அங்கே நேரில் போய் பார்த்தவரைப் போல் சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது வலியுறுத்திச் சொன்னது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டதாகையால் நான் இப்போது குறுக்கிட்டுப் பேச விரும்புகிறேன். அண்ணா கிராம ஒன்றியத்தில் உள்ள அவியனூர் கிராமத்தில் 1970 ஆம் ஆண்டிலிருந்து ஒரு அரிசன் கூட கிடையாது. ஆனால் அதை அரிசனங்களுக்கு ஒதுக்கிய காரணத்தால், அந்த கிராமத்து மக்கள் கலெக்டரிடமும், கமிஷனரிடமும் மனு கொடுத்தார்கள். எங்கள் ஊரிலே ஒரு அரிசன கூட இல்லையே, அதை அரிசனங்களுக்காக ஒதுக்கியிருக்கிறீர்களே, தவறு என்று முறையீடுகளைக் கொடுத்த பிறகும், அது ரிசர்வ் தான் என்று நோட்டிபிகேஷன் போட்டு, தண்டோரா போட்டு இருக்கிறார்கள். அவியனூர் கிராமத்தில் அரிசனங்கள் இல்லை என்பது இல்லை. அந்தக் காலனியை அழகுப் பெருமாள் குப்பம் பஞ்சாயத்தில் சேர்த்து இருக்கிறார்கள். ஆகவே, அவியனூர் கிராமத்தில் அரிசன் இல்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தவறான தகவல் கொடுக்கிறீர்கள். அவியனூர் கிராமத்தில் அரிசனங்கள் இருக்கிறார்களா இல்லையா என்பது தான் இங்கே கேள்வி. அந்தக் காலனி சேர்க்கப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு).



1982 பிப்ரவரி 2] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஒரு அரிசன் கூட இல்லை. அந்தப் பஞ்சாயத்தில் ஒரு அரிசன் ஓட்டர் கூடக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை நான் காட்டத் தயாராக இருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : நீங்கள் அப்புறம் கொண்டு வந்து காட்டுங்கள், சார். இப்போது எனக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள். ஆனால் இவ்வளவு பெரிய நிலைமையேற்பட்டதற்குப் பிறகு தேர்தலுக்குப் பயந்து போனது திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல, ஆளும் கட்சி தான் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். சரி, அதுதான் போனது போகட்டும். அந்த ரிட் பெட்டிஷன்களையாவது எக்ஸ்பெடைட் செய்யச் சொல்லி, டிஸ்போசல் கொடுக்கச் செய்து, தேர்தல் நடத்துவதற்கு இந்த அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா என்றால் கிடையாது. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவோம் என்கிறார்கள். டிபுடி ஸ்பீக்கர் சார், நீங்கள், வக்கீல். உங்களுக்குத் தெரியும். இப்போதுதான் ஒரு ஜட்ஜ் விசாரிக்கிறார். அது பெஞ்சுக்குப் போய் அப்புறம் தான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகும். அதற்குள்ளாக சுப்ரீம் கோர்ட் வரை போவோம் என்று சொல்வது, மக்கள் அப்படிப் பேசிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தானே தவிர வேறு அல்ல. இனிமேல் நீங்கள் தேர்தலை நடத்தப் போவது இல்லை. அப்படி நடத்தாத காரணத்தால் ஆங்காங்கு இருக்கின்ற கிராமங்கள் பஞ்சாயத்துக்கள் சீரழியப் போகின்றன. ஏனென்றால் நிர்வாகத்தை நடத்துவதற்கு, செம்மையாக நடத்துவதற்கு, மக்கள் ஆட்சி வர வேண்டும் என்கிற எண்ணம் கிஞ்சித்தும் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு விட்டீர்களா? கிராம மக்களை வாழ வைக்கிறோம் என்று சொன்னீர்கள். வாழ வைத்தீர்களா? பஞ்சாயத்துக்களை எல்லாம் கலைத்தீர்கள். இன்றைக்கு லைட் இல்லை; ரோடு இல்லை.

இன்னொரு பிரச்சினை. கிராம அதிகாரிகள் பதவிகளை எல்லாம் கலைத்தீர்கள். எல்லோரையும் வீட்டுக்குப் போகச் சொன்னீர்கள். அந்த வகையிலே 24,000 பேர்களை அனுப்பி விட்டீர்கள். அவர்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போனார்கள். எந்த கோர்ட்டுக்கு? நீங்கள் சொல்கின்ற சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். அங்கே வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நிலையிலே இருந்தாலும்—முதலமைச்சர் கூட அன்று அங்கே இருந்தார்—இது எங்களுடைய பிரிஸ்டிஜ் சம்பந்தப்பட்டது. வேண்டுமானால் நாங்கள் சம்பளம் கொடுக்கிறோம்; ஆனால் வேலை கொடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள் வேலையில்லாமல் சம்பளம் கொடுப்போம் என்று சொன்னீர்கப்

அதனால் என்ன நிலை ஏற்பட்டது? மாதம் ஒன்றுக்கு கௌரவச் சம்பளமாக 36 இலட்சம் ரூபாய் இந்த சர்க்கார் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஒரு துரும்பு கூட எடுத்துப் போடுவதில்லை. ஆனால் நீங்கள் 36 இலட்சம் ரூபாய் மாதந்தோறும் கௌரவச் சம்பளம் என்று கொடுக்கிறீர்கள்; அரசாங்க கஜானாவை காலியாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை உங்கள் மீது சுமத்துவதிலே என்ன தவறு இருக்கிறது?

இப்போதுதான் இ. அன்ட் எச். என்று ஒரு ஆய்வு திருச்சியிலே நடத்தினார்கள். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். குறுவை சாகுபடி செய்ய கடன் கிடைக்கவில்லை; விவசாயிகளுக்கு அடங்கல் கிடைக்கவில்லை; சிட்டா கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரைக் கேட்கலாம் என்றால் அவர்கள் 'ஊருக்கு ஒரு நாட்டியக்காரி யாருக்கு என்று ஆடுவாள்' என்ற நிலையில் இருக்கிறார்கள். மணியக்காரர் கிடையாது. பஞ்சாயத்தில் அவர்தான் வரி வசூல் செய்வார். அவர் வசூல் செய்தால் தான் பஞ்சாயத்துக்கு வருமானம் வரும். இப்போது அவரும் இல்லை. பஞ்சாயத்துக்கு வருமானமும் இல்லை; அதனால் பஞ்சாயத்து ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை; பொதுவில் உள்ள மரங்கள் அரோகரா; இப்படிப்பட்ட ஒரு குழப்பமான நிலை.

இந்தக் குழப்பமான நிலைமையில் இன்றைக்கு வில்லேஜ் ஆபீசர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் வேலையில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்று இன்னும் ஜட்ஜ்மென்ட் சொல்லவில்லை. கேஸ் நடக்கிறது. இதற்கிடையில் திடீர் என்று பப்ளிக் சர்விஸ் கமிஷனைக் கூப்பிட்டு, நீங்கள் கிராம அதிகாரிகளைத் தேர்ந்தெடுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ஏற்பாடுகளைச் செய்தார்கள், எல்லா ஊருக்கும் போனார்கள். எல்லாம் முடிந்து, கடைசியில் சுப்ரீம் கோர்ட்டில் இந்தச் சட்டம் செல்லாது, இந்தக் கிராம அதிகாரிகள்தான் பதவியில் இருப்பார்கள் என்று சொல்லிவிட்டால் இந்த சர்வீஸ் கமிஷனை நம்பி வந்தவன் கதி என்ன? ஐயோ என்று விட்டுவிட வேண்டியதுதானா?

இப்படி எதிலே எல்லாம் கைவிட்டிருக்கிறீர்கள்? பாரஸ்ட் ரேஞ்சர் தேர்வு செய்தீர்கள். அந்த ரேஞ்ச், இந்த ரேஞ்ச் என்று பிரித்து, ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு, அவர்களை அம்போ என்று விட்டு விட்டார்கள்.

அதே மாதிரி, 12,000 போலீசாரைத்தேர்ந்தெடுத்தீர்கள். அவர்களுடைய சர்டிபிகேட்டையும் வாங்கி வைத்துக் கொண்டார்கள். எத்தனையோ வருஷங்கள் ஓடிவிட்டன. அவர்களுடைய சர்டிபிகேட் கிடைக்கவில்லை. உடும்புப் பிடிக்கப் போய் உடும்பிடம் கை மாட்டிக் கொண்டது போல் ஆகிவிட்டது. இப்போது





உடும்பு வேண்டாம், கை வந்தால் போதும் என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். எங்கள் சர்டிபிகேட்டையாவது வாங்கிக் கொடுங்கள் சார், நாங்கள் வேறு வேலையாவது தேடிக் கொள்கிறோம் என்று சொல்லி அலைகிறார்கள். 12,000 போலீசார் கதி இப்படி ஆகிவிட்டது. அதைப் போல முழு நேர கிராம அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்து, பின்னால் அவர்களை நட்டாற்றிலே விட்டு விடப் போகிறீர்கள்.

ஆக இந்த சர்க்காருக்கு கொஞ்சம் கூட தெளிவு இல்லை.
குழப்பமே உருவான சர்க்காராக இருக்கிறது. சப்இன்ஸ்பெக்டர்
தேர்வு நடைபெற்றது. ஹைட், வெயிட், மார்க் எல்லாம் பார்த்
தார்கள். எஸ்.பி. வந்தார். ஓடு, குதி என்றார். எல்லாம் முடித்
தது. தேர்வு நடந்தது. அதன் பிறகு டி.ஐ.ஜி. கன்ட்ரோல்
இருக்கிறது. ஐ.ஜி. கன்ட்ரோல் இருக்கிறது, ஐ.ஜி. தேர்ந்
தெடுத்தவர்கள் விவரத்தைசொல்வார். இதுதான் எங்கள் ஆட்சி
யில் நடந்தது. உங்கள் காலத்திலும் முன்னாலே அப்படித்தான்
தேர்வு செய்யப்பட்டது. ஆனால் இப்போது புரட்சி. என்ன
புரட்சி? தேர்வு செய்யப்பட்டவர்கள் அம்போ என்று நிற்
கிறார்கள். அப்படித்தான் செய்வோம் என்று சொன்னால் செய்
யுங்கள். பின்னால் சர்வீஸ் கமிஷனுக்கு ரெஃபர் செய்தீர்கள்.
ஏன் என்று கேட்டோம். புரட்சி என்றீர்கள். என்ன புரட்சி
என்றோம் எஸ்.பி. ஓடு, தாண்டு, குதி என்று சொல்லிதேர்வு
செய்தது எல்லாம் 'கேன்சல்' என்றீர்கள். ஏன் கேன்சல் செய்
தீர்கள் என்றால் இதிலே லஞ்சம் இருக்கிறது என்கிறீர்கள்..
அப்படியானால் ஒவ்வொரு ஜில்லாவிலும் எஸ். பி. இருக்கிறார்.
அவர்கள் எல்லாம் லஞ்சம் வாங்கினார்கள், அவர்களுக்கு மேலே
இருக்கிற டி.ஐ.ஜி. லஞ்சம் வாங்கினார். ஐ.ஜி. இருக்கிறார்
மூன்று பேர் கமிட்டிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் லஞ்சம்.
வாங்கினார்கள் என்று பொருள். இப்படி ஒரு டிபார்ட்மென்ட்
லஞ்சம் வாங்குகிறது என்று இருந்தால் இப்படிப்பட்ட ஒரு
டிபார்ட்மென்டை வைத்திருக்கிற முதலமைச்சர் தார்மீக முறை
யில் இராஜினாமா செய்கிறேன் என்று சொல்லியிருக்க வேண்டும்
அப்படிச் செய்யவில்லை.

இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், இராணுவத்தை
வைத்து ஆள் எடுப்போம் என்கிறார்கள். அப்படி இராணு
வத்தை வைத்து தேர்வு செய்வதாக இருந்தால், போலீசாரை
நம்ப மாட்டீர்களா என்று கேட்டோம். அப்படியல்ல; இரா
ணுவ ஆலோசனையில் போலீசாரை வைத்து தேர்ந்தெடுப்
போம் என்று ஒரு மாற்றத்தைச் சொல்கிறீர்கள். இப்படி முன்
னுக்குப்பின் முரணான முறையில், ஒரு குழப்பமான நிலையில்
ஒவ்வொன்றையும் செய்கிறீர்கள்.

வின்ஸ்டன்ஸ்மித் ஹுமாயூன் வாழ்க்கையைப் பற்றி எழுதும்
போது குறிப்பிடுகிறான், ஹுமாயூன் கடைசி காலத்தில் படி
களில் இறங்கி வரும்போது தடுமாறி விழுந்து விடுகிறான்.

[திரு. துரைமுருகன்] [1982 பிப்ரவரி 2

அதனால் — அவன் வாழ்க்கை பூராவும் தடுமாறிக் கொண்டே இருந்தான் : தடுமாறிய வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் தடுமாறியே போய்விட்டான் '' என்று எழுதுகிறான். அதைப் போல உங்களுக்கும் எதிலும் தடுமாற்றம்தான்.

இந்த டி.ஜி.பி. என்ற ஒரு போஸ்ட். ஐ.ஜி. தான் பெரியவர் அவரை கம்பத்துக்கு வைத்து விட்டு, டி.ஜி.பி. போட்டார்கள். அப்துல்லாவும் போய்விட்டார். போஸ்ட் காலியாக இருக்கிறது: அப்போதே நிரப்பச் சொன்னோம். அதற்கு என்ன சொன்னார்கள்? அந்த பதவி வேண்டுமா வேண்டாமா என்று யோசிக்கிறோம் என்றார்கள்.

[பிற்பகல் 12-30]

யோசியுங்கள், அப்படி யோசித்து ஒரு திட்டம் சொன்னீர்கள். கடைசியிலே என்ன நிலைமை இன்று வரையில் போலீஸ் இலாக்காவிலே ஒரு டைரக்டர் ஜெனரல் போஸ்ட்க்கு தேர்ந்தெடுக்க ஒரு சர்க்காருக்கு அருகதை இருக்கின்றதா என்பதுதான் என்னுடைய கேள்வி. உங்களால் முடியாது. உங்களுக்கு அந்த திறமை போதாது. இன்றைக்கு போலீஸ் இலாக்கா (topless) ஆக இருக்கு. ஆனால் என்ன செய்கிறீர்கள்? நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஆளுகின்ற தன்மையை இழந்துகொண்டிருக்கிறீர்கள் ஆபீஸர்கள் இன்றைக்கு தங்களுடைய நிர்வாகத்தை நடத்தவில்லை. அமைச்சர்களின் கையிலே இந்த நாடு இல்லை. இந்த நாட்டில் அமைச்சர்கள் இன்றைக்கு பொம்மையாகக் கொலு வீற்றிருக்கிறார்கள். இவர்களைப் பார்க்கின்றபோது எனக்கு நவராத்திரி நான் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால் யாரிடத்திலே இந்த நாடு இருக்கிறது? இந்த நாடு யாரிடத்திலே இருக்கின்றது என்றால் போலீஸ்காரருடைய கையிலே இருக்கின்றது. கொஞ்சம் கொஞ்சமாக இந்த ஸ்டேட் போலீஸ் ஸ்டேட்டாக மாறிக்கொண்டு இருக்கின்றது. இதை நான் சொல்லவில்லை. உங்களுக்கே தெரியும். தமிழ்நாட்டிலே இருந்து வருகின்ற இண்டியன் எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகை அழகான ஆர்ட்டிக்கிள் எழுதி இருக்கின்றது. தமிழ்நாடு போலீஸ் ஸ்டேட் என்று அந்தப் பத்திரிகையிலே எழுதி இருக்கின்றது. எப்படி எப்படி எல்லாம் நடந்திருக்கின்றன என்பதற்கு அந்தப் பத்திரிக்கையிலே எவ்வளவோ உதாரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

INDIAN EXPRESS: 10.1.1982

Tamil Nadu is the only State in the Indian Union where you can be chargesheeted for Sedition (Sec. 124-A) were you to talk of "the overthrow of Police and landlords". I not even necessary that you say these words for the Police will tell the Magistrate that you said them, that they constitute treason and sedition, and you will be refused



1982 பிப்ரவரி 2] [திரு. துரைமுருகன்]

போலீஸ் நிர்வாகம் எப்படி இருக்கின்றது இந்தியாவிலே இருக்கின்ற போலீஸ் மாநிலம் தமிழ்நாடு என்று சொன்னால் இந்த இடத்திலே ஜனநாயகம் செத்துப்போய்விட்டது என்றுதான் பொருள். இந்த அரசாங்கத்தினை இயக்குகின்ற மூலதாரிகள் கையாலாகாமல் ஆகிவிட்டார்கள் என்றுதான் பொருள். அது மட்டுமல்ல. இதை யார் நடத்துகிறார்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்தப் பத்திரிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த நாட்டிலே பத்திரிகைச் சுதந்திரம் உண்டு. பேச்சுச் சுதந்திரம் உண்டு, எழுத்துச் சுதந்திரம் உண்டு. இவையெல்லாம் இந்தியாவின் அரசியல் சட்டத்திலே நமக்கு வகுத்துத்தரப்பட்ட அடிப்படை உரிமைகள்.

பத்திரிகைகள் நினைத்ததை எழுதக்கூடிய திறம் படைத்தவர்கள். ஆனால் இன்றைக்கு இந்தப் பத்திரிகைகளை யார் கண்காணிக்கிறார்கள்? இதை நான் சொல்லவில்லை. இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சொல்கிறது.

It is not strange at all to observe that a person may belong to any political party including the ruling AIADMK and still be at the receiving end of the violence.

என்று எழுதி இருக்கிறது.

Under the onslaught of the police, even senior IAS officers have learnt to shut their mouths.

இந்த அரசைப் பார்த்து அதாவது சீனியர் ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களைப் பார்த்துச் சொல்கிறது. புதிதாக இப்போதுதான் வந்திருக்கின்ற ஜூனியர் ஆபீஸர்களைப் பார்த்துச் சொல்லவில்லை; ஐந்தாறு சீனியர் செக்ரட்டரிஸ் அப்கிரேட் பண்ணி இருக்கிறீர்களே அவர்கள் கூட ஷட் தெயர் மௌத் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது வாயைக் கப் சிப் என்று மூடிக்கொள்கிறார்களாம் அதாவது இப்போது எப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது என்றால். '' இம் என்றால் சிறைவாசம், உம் என்றால் வனவாசம் '' என்று சொன்னானே பாரதி இந்த நூற்றாண்டிலே. அப்படி இதுவும் ஒரு வனவாசம்.

Journalitst who report inconveniently get messages threatening arrest or liquidation from the hated, ubiqtious Q Branch.

Q. Branch—க்கு அனுப்பிவிட்டேன் என்று சொல்கிறார், யார் என்று சொன்னால்,

Mr. MOHANDAS (Addl. I.G.) is konwn as the *de facto* news editor for polce stories in all dailies coming out of Madras. மோகன்தாஸ் என்ற அடிஷனல் ஐ.ஜி. என்ற நிலைமையிலே இருக்கின்ற ஒருவர் தான் டி பேக்டோ நியுஸ் எடிட்டர். அப்படியானால் இந்த நாட்டிலே பத்திரிகா தர்மம் இருக்கின்றதா?

ஜனநாயகம் இருக்கின்றதா? நேர்மை இருக்கின்றதா? நான் கேட்கிறேன். கொஞ்சநஞ்சம் இதயத்திலே ஜனநாயக உணர்வை பெற்றிருக்கின்றவர்களைக் கேட்கிறேன். பத்திரிகைக்காரர்களைப் பார்த்து கேட்கிறேன், இன்னும் நீங்கள் ஏடெடுத்து எழுத வேண்டுமா? உங்களுக்கு என்று ஒரு சுதந்திரமா?

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இன்னொரு பத்திரிகை கூட போட்டிருக்கின்றது. எம்.ஜி. ஆரின் பேச்சு முழுவதையும் போடவில்லை என்று சொன்னால் என்ன ஆகும் என்பதுபற்றி போடப்பட்டிருக்கின்றது. பேச்சு முழுவதையும் போடாவிட்டால் அபராதம் எல்லாம் போடுவார்கள் என்று அந்தப் பத்திரிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் உங்களுக்கு பத்திரிக்கை என்றாலே பிடிக்கவில்லை, உங்களுக்கு விளம்பரம் பக்கம் பக்கமாகப் போடவேண்டும், அப்போதுதான் பிடிக்கும். நக்ஸலைட் என்று எத்தனைபேர்களைச் சாகடித்திருக்கிறீர்கள்? நான் நக்ஸலைட் என்ற தீவிரவாதிகளுக்கு ஆதரவாகவோ அவர்களுக்காக வக்காலத்து வாங்கவோ இதைச் சொல்லவில்லை நக்ஸலைட்டுகள் புதுமையான பொதுவுடமைக்கொள்கைவாதிகள் அவர்கள் தத்துவத்திற்கு கையாளுகின்ற வழிமுறைகளை நான் வெறுக்கிறேன். அவர்கள் கொலையே செய்ததாக இருக்கட்டும் அதற்காக கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று சொல்வார்களே அதுபோன்ற ஒரு காட்டுமிராண்டித்தனமான செய்கை இந்த நாட்டிலே தேவையா? போலீஸை வைத்துக்கொண்டு எத்தனைபேரைச் சுட்டுக்கொன்றிருக்கிறீர்கள்? கிட்டத்தட்ட 30 பேர்களுக்கு மேல் சுட்டிருக்கிறீர்கள். காடுகளிலும் மலைகளிலும் சுட்டுக்கொன்றிருக்கிறீர்கள் குருவிகளைப் போல...

மனிதாபிமான உணர்வு இருக்கின்றவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், அங்கே ஒருவன் நக்ஸலைட் கூட்டத்திலே கலக்காமல் இருந்தால், அப்படி ஒரு இன்னோசன்ட் ஒரு அறியாதவன் உயிர்பலியாகி இருப்பானேயானால் அந்தச் சாவு உங்களைச் சும்மாவிடும் என்று எதிர்பார்க்கிறீர்களா? பல உயிர்கள் மடிந்திருக்கின்றன. நம்மாலே ஒரு இன்னோசன்ட் சாகிறான் என்று கேள்விப்பட்டால் இரவிலே உறக்கம் வருமா? எவ்வளவோ ஹியூமன் ரைட்ஸ் அசோசியேஷன்கள் எல்லாம் உங்களைத்கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அதிகாரவர்க்கம் உங்களைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆலவட்டம் சுற்றிக்கொண்டுருக்கின்றது. பயப்படுகின்ற பத்திரிகைகள் உங்கள் கையிலே இருக்கிறது. சிறைச்சாலை இருக்கிறது. நெடிய மதில் சுவர்கள் இருக்கிறது என்ற இறுமாப்பிலே நீங்கள் இன்றைக்கு இருக்கலாம். ஆனால் என்றாவது ஒருநாள் இந்த கொலைகளுக்கு காரணமாக நீங்கள் தண்டனை பெற்றே தீரவேண்டும். இது உலகத்தில் நியதியாகும். 30 பேர்களுக்கு மேலே சுட்டுக்கொன்றிருக்கிறீர்கள், இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்ன நடக்கும்? அரசியல்வாதிகளையும் கூட நீங்கள் இப்படி குற்றம்



சாட்டலாம். துரைமுருகனுக்கு நக்ஸலைட்களோடு தொடர்பு இருக்கிறது. ஆகவே அவனையும் சுடு என்று சொன்னால் உங்களை யார் கேட்க முடியும், ஆனால் அத்தோடு விட்டுவிடுவீர்களா நீங்கள் பத்திரிகைகளிலே உங்களைப் பற்றி ஒன்றும் குற்றமாகச் சொல்லிவிடக்கூடாது. சொன்னால்..............

(மணியடிக்கப்பெற்றது) நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் 1 மணி நேரம் பேசவேண்டும் என்று கேட்டு அனுமதி வாங்கியிருக்கிறேன். தயவுசெய்து என்னை பேச அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு ஒதுக்கப்பெற்ற நேரம் அரை மணி நேரம் தான். குறுக்கீடுகள் இருந்ததால் 5 நிமிடங்கள் உங்களுக்கு அதிகமாகவே கொடுத்தேன். ஆகவே சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. துரைமுருகன் : பத்திரிகைகள் உங்களை வாழ்த்த வேண்டும். புகழ வேண்டும். பண்பாடு பாடவேண்டும். அந்தாதி பாடவேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்கள். இல்லையென்றால் அந்த பத்திரிகைக் காரனைபிடித்து ஜெயிலில் அடைக்கிறீர்கள். இந்த பத்திரிகைகளுக்கு இப்போது என்ன வந்து விட்டது என்று புதிதாக ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள் ஐ.பி.சி. கிரிமினல் புரசீஜர் கோடிலே 292 ஆவது ஆக்டிலே ஒரு சட்டம், என்ன சட்டம். பத்திரிகைகள் எழுதுகின்ற செய்திகள் ஏதாவது இன்டீசன்டாக இருக்கிறதா? ஆபாசமாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அப்படி பார்க்க ஒரு சட்டம் அப்படிப்பட்ட செய்திகள் இருக்கிறது என்று சொல்லி, யாரை வேண்டுமானாலும், எந்தப் பத்திரிகைக்காரனையும் கைது பண்ணிக் கொண்டுபோய் எப்பொழுது வேண்டுமானாலும் ஜெயிலில் போடலாம். மாஜிஸ்ட்டிரேட் முன்னாலே கொண்டு போய் நிறுத்தி கஸ்டடியிலே வைக்கலாம். இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை யார் கையிலே கொடுத்திருக்கிறீர்கள் ?

பத்திரிகைகளிலே வரும் செய்திகள் இன்டீசன்டாக இருக்கிறதா என்றும், அநாகரிகமாக இருக்கிறதா என்றும், ஆபாசமாக இருக்கிறதா என்றும் கண்டு பிடிக்கிற அதிகாரம் நீதிமான் கையிலே இருக்கவேண்டும். ஆனால் யார் கையிலே கொடுத்திருக்கிறீர்கள். போலீஸ்காரர்களிடத்திலே கொடுத்திருக்கிறீர்கள். போலீஸ் இதில் என்ன செய்ய முடியும். பிடிக்காதவர்களை பிடித்துக் கொண்டு போய் உள்ளே தள்ளமுடியும்.

அந்துலே-ஐ-பற்றி பத்திரிகைகள் எழுதாத விஷயமாக ஆனால் அந்த மாநிலத்திலே கூட இந்த மாதிரி சட்டம் இல்லை. பட்நாயக் பற்றி எழுதாத ஏடுகள் உண்டா? அந்த இடத்திலேகூட இப்படிப்பட்ட சட்டம் கிடையாது. எனக்குத் தெரிந்து ஜியாவுடைய ஆட்சியிலேகூட கிடையாது. ஆனால் இங்கே மாண்புமிகு ஹண்டே அவர்களைப் பற்றி எழுதிவிட்டார்கள் என்பதற்க ஜெயிலிலே போட்டிருக்கிறார்கள். அவரைப் பற்றி தவறாக

எழுதிவிட்டார் என்று இவர்கள் சொல்கிறார்கள். உண்மைதான் எழுதினேன் என்று ஆற்காடு வீராசாமி சொல்கிறார். ஆனால் அப்படி எழுதிய ஆற்காடு வீராசாமியை கைது பண்ணியிருக்கிறார்கள். அவர் தம்பி சீனு கைது. கழக வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன் அவர்கள் கைது. கில்ஜி கைது. கேட்டால் அதிகாரிகளை பயப்படுத்துகிற வகையில் செய்திகளை வெளியிட்டு, அவர்களுடைய செயல்களை ஒடுக்கும் வகையில் செயல்படுபவர்களை தண்டிக்கத்தான் இந்தச் சட்டம் என்று சொல்கிறார்கள் அப்படி அதற்காகத்தான் இந்தச் சட்டம் என்று சொன்னால் நான் கேட்கிறேன், இது ஒரு போலீஸ் ஸ்டேட் என்று எழுதியிருக்கிறதே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை. அதன்மீது ஏன் இந்தச் சட்டம் பாயவில்லை. சரோஜினி கோயங்கா மீது பாய முடியுமா? கில்ஜி மீது பாயும். ஏன்? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தை இப்படி நசுக்குவதினாலோ, வாய் பூட்டு போடுவதினாலோ, திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்துவிடாது என்னுடைய அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் எழுதியதைப்போல, 'நாங்கள் அக்கினி பிரதேசங்கள்' எங்கள் கிட்டே நெருங்காதீர்கள், பொசுங்கிவிடுவீர்கள் என்பதைத்தான் நான் எடுத்துக்காட்ட, கடமைப்பட்டிருக்கிறேன். மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு போவைத் துணைத் தலைவர்: 1,2 மணிநேரம் தான் உங்களுக்கு ஒதுக்கப் பெற்றது. மேலும் 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு துரைமுருகன் : இன்னொரு முக்கியமாக பாயின்ட் அதைச் சொல்லிவிடுகிறேன். ஒரு ஆர்டினன்ஸ் கொண்டு வருகிறார்கள். எதற்கு ஏன், என்ன, பெயர் என்று பாருங்கள்.

An ordinance to provide for preventing detention of bootleggers drug-offenders, goodas, immoral traffic offenders and slum-grabbers for preventing their dangerous activities prejudicial to the maintenance of public order.

என்று ஒரு சட்டம் போட்டிருக்கிறார்கள். தயவுசெய்து சட்டம் படித்த நண்பர்களைக் கேட்கிறேன். இந்த ஆர்டினன்ஸின் செக்ஷன் 1லே என்ன விளக்கம் என்று படியுங்கள். நேஷனல் செக்யூரிட்டி ஆக்டை எடுத்து பக்கத்திலே வைத்துக்கொள்ளுங்கள். இரண்டையும் படித்துப் பாருங்கள். நமது மாண்புமிகு நாவலர் அவர்கள் சொல்வதைப் போலவரிக்கு வரி. எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்கு சொல், கருத்துக்கு கருத்து மாறாமல் அப்படியே இருக்கிறது. அப்பொழுது எதற்கு தனியாகச் இந்த சட்டம்? நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் இருக்கும்போது இந்த குண்டாஸ் தடுப்புச் சட்டம் எதற்கு அதிலே துன் இருக்கிறது விஷயம். நேஷனல் செக்யூரிட்டி ஆக்டின்படி கைதிதா





பண்ணினால், சென்டிரல் கவர்ன்மெண்ட் அவன் என்ன குற்றம் செய்தான்? ஏன் கைது செய்தீர்கள் என்று கேட்கும். அதற்கு பதில் இப்படி ஒரு ஆக்டை நீங்களே போட்டு வைத்துக் கொண்டால், அது உங்கள் பாக்கெட்டிலே இருக்கிற மாதிரி. யாரை வேண்டுமானாலும் கைது பண்ணலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இது ஜனநாயகத்துக்கு விரோதமான சட்டம் அல்ல என்று சொல்ல முடியாது. நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் இருக்கும்போது எதற்கு இந்த குண்டாஸ் சட்டம்? இந்த சட்டத்தினால் யாருக்கு நியாயம் கிடைக்கும். சாராயக்கடைகளைப் பிடிக்க என்று சொல்கிறீர்கள். எங்கே சாராய மாவீரன் கைது ஆனான்? ஆனால் எங்களை கைது சய்கிறீர்கள். இலங்கை ஹைற்-கமிஷனர் ஆபிஸ் முன்னாலே இந்திரா காங்கிரஸ்காரர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். காலையில் பிடித்து மாலையில் விடுகிறீர்கள், கேட்டால் அம்மா கடாட்சம் வேண்டும், பயம் என்கிறீர்கள். (குறுக்கீடு).

(பிற்பகல் 12-40.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரைமுருகனுக்குக் சொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. உட்கார வேண்டும.

திரு தி. அன்பழகன்: : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். ஏழை எளிய மக்களின் தேவைகளை, விருப்பங்களை நிறைவேற்றவும் அவர்களின் நிலைமையை, முன்னேற்றவும் அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளன. அத்திட்டங்களை விளக்கும் வகையில்தான் ஆளுநர் அவர்களின் உரை அமைந்துள்ளது.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் ஏதோ இந்த அரசு விளம்பரத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்துவரையில் விளம்பரத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. செய்தித் துறையை தங்கள் விளம்பரத் துறையாக வைத்துக் கொண்டிருந்தவர்கள் இன்று எங்களைப் பார்த்த விளம்பரத்தைத் தேடிக் கொள்கிறார்கள் என்று சொல்வது கசாப்புக் கடைக்காரன் அஹிம்சா வாதம் பேசுவது போல் இருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும். அவர்கள் பேசுகிறபோது தீவிரவாதிகள் பற்றிச் சொன்னார்கள். ஒன்று நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் இன்றைக்கு எந்தத் தீவிரவாதிகளுக்காக அவர்கள் வாதாடுகிறார்களோ,, அதே தீவிரவாதிகள் செயல்கள் திருப்பத்தூர்

பகுதிகளில் நடந்த நேரத்தில் அங்கே பாதிக்கப்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். அந்த நேரத்தில் அவர்கள் இந்த அரசைக் குறித்து ஒன்றைச் சொன்னார்கள். எம்.ஜி.ஆர். அரசால் அவர்களை அழிக்க முடியாது, அவர்களை அடக்குவதற்கு இந்த அரசுக்கு திராணி இல்லை தெம்பில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அன்றைக்கு இந்த அரசைப் பார்த்து அவர்களை அடக்க முடியவில்லை என்று குற்றச்சாட்டு சொன்னவர்கள் இன்றைக்கு அவர்கள் மீது நடவடிக்கை எடுத்த நேரத்தில் ஏன் இப்படிப் பேசுகிறார்கள் என்பது புரியவில்லை.

நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே தனி மனிதனுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மற்றவர்கள் உயிரை அழிக்கிற வகையில், கொள்ளை அடிக்கிற அளவில், அட்டகாசம் செய்வதை இந்த அரசு அடக்கி ஒடுக்கி அந்தப் பகுதி மக்களுக்கு மறு வாழ்வளித்திருப்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு நடந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் மாநாட்டினை நினைவு கூர்ந்து, இந்த ஆண்டும் தேசியக் கவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும் கொண்டாட திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள் ஆளுநர் அவர்கள். பேரறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15 ஆம் தேதி அன்று தமிழ் பல்கலைக் கழகம் தொடங்கப் பெற்று கோவையில் பாரதியார் பல்கலைக் கழகம் திறப்பது, திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு தமிழுக்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் எண்ணங்களை நிறைவேற்றுகிற வகையில், தமிழை ஆட்சி மொழியாக்க, தமிழுக்காக தமிழ் சமுதாயத்துக்காக பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியங்களை நிறைவேற்றுகிற வகையில் இந்த அரசு தன்னால் ஆன பணிகளை சிறப்பாகச்செய்து வருகின்றது. அந்தப் பணிகளில் ஒன்றுதான் நீதிமன்றங்களில் தீர்ப்புகள் ஆணைகள் தமிழில் வழங்கப்பட வேண்டும் என்ற அரசாணை.

அதேபோல் தன்னிறைவுத் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தை தமிழக அரசு நல்லமுறையில் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது என்பது மட்டுமல்லாமல் கிராமங்களில் வாழ்பவர்கள் நகரத்தில் வாழ்பவர்களைப் போன்று சமுதாய வாழ்விலும், பொருளாதார மேம்பாட்டிலும் உயர் நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் உருவானதுதான் இந்தத் தன்னிறைவுத் திட்டம். கிராமங்களை நகரங்களுக்குச் சமமாக உருவாக்கிக் காட்ட வேண்டும் என்ற முறையில் புரட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தி காட்டி வருகிறார்கள்.



கிராமப்புற வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சி என்பதை மனதிலே கொண்டு, அந்தத் திட்டம் இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளித்தல், இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள், சிறு பாலங்கள் அமைத்தல், [illegible]ரக மருந்தகங்கள், தாய் சேய் நல விடுதிகள், ஆதி திராவிட மக்களுக்கு மயானப் பாதைகள், அவர்களுக்கு வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்தல், சிறிய பாசனங்கள் மேம்பாடு செய்தல், சிறிய பாதைகளை அமைத்தல் போன்ற கிராம மக்களுக்குத் தேவையான பணிகளையெல்லாம் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இந்த அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. மற்ற மாநிலங்கள் எல்லாம் பார்த்து, இதைப் பின்பற்றக் கூடிய அளவுக்கு இந்த தன்னிகரில்லாத தன்னிறைவுத் திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 3 ஆண்டு கால கட்டத்திற்குள் இதை நிறைவேற்றுவதற்கு செயல்படுத்திக் கொண்டு வரும் புரட்சித் தலைவர் அவர்களின் சாதனையை இன்றைக்கு தமிழக மக்கள் மட்டுமல்ல—அனைவரும் பாராட்டி வருகின்ற நிலையிலே இருக்கிறார்கள்.

இரண்டு ஆண்டு காலத்தில் 219 [illegible]ராட்சி ஒன்றியங்களில் 136 கோடி ரூபாய் அளவில் நிலையான வேலைகளைச் செய்வதற்கு இந்த அரசு திட்டமிட்டு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. 3 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 271 கோடி ரூபாய் செலவு செய்து, அப்படி முடிக்கப்பட்ட திட்டங்களை, அந்தப் பணிகளை பராமரிப்பதற்கு, கண்காணிப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இதே திட்டத்தை பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் செயல்படுத்த இருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில், மக்களுக்கு போதிய அளவு கொடுப்பதற்கு தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்திய உணவுக் கழகத்தின் மூலம் இன்னும் அதிகமான அளவுக்கு ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு விரைவிலே உணவுப் பொருள்களான அரிசி, கோதுமை, எண்ணெய் போன்றவைகளை அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நியாய விலைக் கடைகளை தமிழகம் முழுவதும் 16,000 கடைகள் திறக்கப்படும் என்று சொன்ன நேரத்திலே, அப்படி திறக்க முடியுமா என்று அந்த நேரத்தில் கேட்டார்கள். அப்படித் திறந்ததற்குப் பிறகு, எப்படி நடத்தப் போகிறீர்கள் என்று சொன்னார்கள். ஆனால், சென்ற ஆண்டு தமிழகத்திலே வறட்சி நிலவிய நேரத்திலே, இந்த நியாய விலைக் கடைகள் எந்த அளவிற்கு அனைவரும்

பாராட்டுகின்ற அளவிற்கு மலிவான விலையிலே உணவுப் பண்டங்களை வழங்கி இந்த நாட்டிலே விலைவாசி உயராத அளவிற்கு மக்களுக்கு எப்படி உதவி செய்தது என்பதை யாரும் மறந்து விட முடியாது; மறுக்க முடியாது.

அதே போன்று; மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் இந்தியாவில் உற்பத்தித் திறனில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. அதே போல் மின் உபயோகிப்பதில் தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. மின் இணைப்பு வழங்குவதிலும் தமிழகம் இரண்டாவது நிலையிலே இருக்கிறது. அந்த அளவிலே முயற்சிகள் எடுத்துக் கொண்டு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தமிழகத்திலே மேலும் மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான சாதனங்களும் வசதிகளும் இல்லாத இந்த நேரத்தில் புதிதாக அனல் மின் நிலையங்களை அமைப்பதற்கு மாநில அரசு மத்திய அரசை கேட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசு நிதி உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் நீர் மின் நிலையத்திற்கும் அனல் மின் நிலையத்திற்கும் புதியதாக அமைக்கப்பட இருக்கும் திட்டங்களுக்கு விரைவிலே மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநில மின் வாரியம் இன்றைக்கு நிதி நிலைமை பற்றாமைக்கு ஆளாகியிருக்கிறது. குறைந்த அளவு மின் கட்டணம் வசூலிக்கும் மாநிலங்களில் தமிழகம் ஒன்றாக இருக்கின்ற காரணத்தினால் ஏழை மக்களுக்கு பயனளிக்கக் கூடியவகையில் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற காரணத்தினால், வேளாண்மைக்கு மின் வசதி அளிக்கின்ற காரணத்தினால் இந்த அரசு அதற்குப் போதிய பணம் கொடுத்து நிதி ஆதாரம் பெறச் செய்ய வேண்டும். மற்றொரு காரணம் மத்திய அரசு ரயில் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது; அதேபோல் நிலக்கரி, எண்ணெய் ஆகியவைகளின் விலையும் அதிகரித்திருக்கின்ற காரணத்தினால் மின் வாரியத்திற்குச் செலவு அதிகமாகியிருக்கிறது. ஆகவே இந்தக் காரணத்தினால் மத்திய திட்டக் குழுகூட மின் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறது. கட்டாயப்படுத்தியிருக்கிறது. ஆகவே அந்த வகையில் வாரியம் மின் கட்டணத்தை உயர்த்துவதன் மூலமாக வாரியத்திற்கு போதியவருவாய் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் அதன் மூலம் வேளாண்மை, தொழில், வாணிகம் போன்றவைகள் சிறப்பாக உயர்வதற்கும் ஏதுவாக இருக்கும்.

அதேபோல், தொழில் வளர்ச்சியில் புரட்சித் தலைவர் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கி தகுந்த வேலை வாய்ப்புகளை உண்





டாக்கிக் கொடுத்து, அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியைக் காண்பதே தமிழக அரசின் தொழிற் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். தமிழகத்தில் புதிய தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்கு அரசு பல சலுகைகளை அளித்துள்ளது. தமிழகத்தில் கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தொழிற் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

(பிற்பகல் 12-50)

சிப்காட்டின் மூலம் ஓசூர் ராணிப்பேட்டை பகுதிகளில் தொழில் இணையங்கள் ஏற்படுத்தியுள்ளதுபோல் தொழில் இணையங்களை மாவட்டந்தோறும் அமைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். நான் அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம்—வட ஆற்காடு மாவட்டம் தொழிற் துறையில் பின் தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் நாட்றாம்பள்ளி பகுதியில் ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் அமைக்க அரசு முன் வர வேண்டும். அதற்கு அந்தப் பகுதியில் ஏறத்தாழ 500 ஏக்கர் நிலப் பரப்பு இருக்கிறது. பக்கத்திலிருக்கிற பாலாற்றிலிருந்து தண்ணீர் வசதி பெற வாய்ப்பிருக்கிறது, சென்னை—பங்களூர் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகாமையில் அந்தப் பகுதி அமைந்திருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் அமைக்க வாய்ப்பிருக்கும் காரணத்தால் தமிழக அரசு புரட்சித் தலைவர் அரசு அங்கு ஒரு தொழில் இணையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசனத்துறையைப் பொறுத்தவரை எடுத்துக் கொண்டால், காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு தமிழகத்திற்குத் தர வேண்டிய தண்ணீருக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் போய் வீணாகிற உபரி தண்ணீரை தமிழகத்திற்குத் திருப்பி பாசனத்திற்குப் பயன்படும் அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர மத்திய அரசு நதிகளை தேசியமயமாக்க உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாற்றில் புல்லூர் அணைத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசுகையில் நாங்கள் தேர்தலைப் பார்த்துப் பயப்படுவதாகச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை 1977ல் மக்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்தது. அதற்குப் பிறகு ஆட்சி

அகற்றப்பட பிறகு கூட தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டவர் புரட்சித் தலைவர் அவர்கள்தான்—இந்த அரசு தான் என்பதை மீண்டும் நிரூபிக்கும் வகையில் ஆட்சி பீடத்தில் அமர்த்தி வைத்திருக்கிறார்கள். மக்கள் மனத்தில் தனி இடம் பெற்றவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மக்களைப் பார்த்துப் பயப்படுகிற நிலைமையில் நாங்கள் இல்லை. அப்படிப் பயப்படுபவர்கள் யார் என்பதைப் மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தேர்தல்களுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந் தாலும், தேர்தல் நடக்கிறபோது நிச்சயமாக யார் தேர்தலைக் கண்டு பயப்படுகிறார்கள் யார் ஆட்சி பீடத்தில் அமர்த்தப் படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

வறட்சிப் பணி தமிழகத்தில் சென்ற ஆண்டு நடைபெற்ற நேரத்தில் மிகச் சிறப்பாக அன்றைய தினம் நாட்டு மக்கள் அனைவராலும் பாராட்டப் பெற்றது. அந்த அளவுக்கு குடிநீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் குழாய் பம்புகள் போடப்பட்டு, உடனடியாகத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருப்பதை தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள்.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரை 1977ல் இருந்து இதுவரை ஏறத்தாழ 194 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. வட்டியைச் செலுத்து வதிலும் சலுகைகள் தரப்படுகின்றன. ஆகவே விவசாயப் பெருங்குடி மக்கள் பக்கத்தில் இருப்பது புரட்சித் தலைவர் அரசு என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரை இந்த ஆண்டு இந்த அளவுக்குச் சிறப்பாக வந்திருக்கிறது. வருகிற ஆண்டுகளில் இதைவிட முற்போக்கான திட்டங்களுடன் ஆளுநர் உரை வரும் என்ற நம்பிக்கை இருக் கிறது. இந்தியத் திருநாட்டில் மற்ற மாநிலங்கள் தமிழகத்திதைப் பின்பற்றும் அளவுக்கு மிகச் சீராகவும் சிறப்பாகவும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன்றன என்பதை நிரூபிக்கும் வகையில் புரட்சித் தலைவர் அரசு செயல்படுடுக் கொண்டிருக்கிறது என்று கூறி ஆளுநர் உரயில் எடுத்துக் கூறப்பட்டுள்ள திட்டங் களைவரவேற்றுப் பாராட்டிக் அமைகிறேன்.





(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

2—2—1982ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

| | |
|---|---|
| 3—2—1982 (புதன்கிழமை.) | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 4—2—1982 (வியாழக்கிழமை.)<br>5—2—1982 (வெள்ளிக்கிழமை.) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி. |
| 6—2—1982 (சனிக்கிழமை.) | |
| 7—2—1982 (ஞாயிற்றுக்கிழமை.) | விடுமுறை. |
| 8—2—1982 (திங்கட்கிழமை). | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி. |
| 9—2—1982 (செவ்வாய்க்கிழமை.) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சியும் பதிலுரையும். |
| 10—2—1982 (புதன்கிழமை)<br>11—2—1982 (வியாழக்கிழமை) | நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கை பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றி 2—2—1982 அன்று பேரவையில் வைக்கப் பெற்ற அறிக்கைமீது விவாதம். |
| 12—2—1982 (வெள்ளிக்கிழமை.) | திரு. எம். ஏ. முருகேசன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகள்மீது அரசு நடவடிக்கைகள்பற்றி 30—4—1981 அன்று பேரவையில் வைக்கப் பெற்ற அறிக்கைமீது விவாதம். |

13—2—1982 (சனிக்கிழமை.) — அரசினர் சட்ட முன்வடிவுகள்.

14—2—1982 (ஞாயிற்றுக்கிழமை.) — விடுமுறை.

15—2—1982 (திங்கட்கிழமை.) — அரசினர் சட்ட முன்வடிவுகள்.

16—2—1982 (செவ்வாய்க்கிழமை.) — அரசினர் சட்ட முன்வடிவுகள்.

17—2—1982 (புதன்கிழமை.)
18—2—1982 (வியாழக்கிழமை.) — தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீதும் 1980–81ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் விவாதம்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

## (5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆளுநர் உரையின்மீது எங்களுடைய கருத்துக்களை வழங்க விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே மத்திய சர்க்கார் மாநில அரசுக்கு 48·90 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வறட்சித் துயர் தணிப்புக்காக மாநில அரசு 55.24 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட முக்கால் பங்கிற்கு மேலாக முழுமையான அளவிற்கு என்று கூடச் சொல்லலாம், கிடைக்க வேண்டியது கிடைத்து இருப்பதாலே மாநில அரசு அதிலே பெருமை கொள்ளும் என்று நம்புகிறேன்.

ஆனால் அதே சமயத்திலே வறட்சித் துயர் தணிப்புப் பணி என்ற முறையில் இந்த அறிக்கையிலே இரண்டாவது பக்கத்திலே A Committee constituted with leaders from all Political parties to supervise the drough relief works proved very helpful. என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் மாநில அளவில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டதா அந்த கமிட்டி அறிக்கை கொடுத்திருக்கிறதா என்று தெரியவில்லை. வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் நடக்கிறபோது அவைகளை



மேற்பார்வையிட எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள் கமிட்டி பல்வேறு ஜில்லாக்களில் சரிவர நடைபெறவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அப்படி இருந்தும்கூட இப்படிப்பட்ட தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது ஒருவேளை அரசுக்கு சரியான தகவல் கிடைக்கவில்லையா என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆகவே இது குறித்து பதில் அளிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த அரசு வேலை நிறுத்தம் என்ற அளவிலே எடுத்த நடவடிக்கைகளுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உலகத்திலே உற்பத்திப் பெருக்கமும், சரியான விநியோகமும் வேண்டும் என்பதிலே எந்த அரசியல் கட்சிக்கும் அபிப்ராய பேதம் இருக்க முடியாது. வெளிநாடுகளைப் பார்த்தால், உதாரணமாக ஜப்பான் நாட்டிலே உள்ள தொழிலாளர்கள் ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்கிறபோது குறிப்பிட்ட வேலை நேரத்திற்கு மேலாக, ஒரு மணி நேரம் அரைமணி நேரம் அதிகமாக வேலை செய்து உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டும். ஊதிய உயர்வு வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்கள். உற்பத்தியைக் குறைக்காமல் உரிமைகளை நிலை நாட்டக் கூடிய முறை ஜப்பான் நாட்டிலே இருக்கின்றது. அந்த முறையினைப் போல் ஒரு நிலைமையை கையாளக் கூடிய முறையிலே நம்முடைய அரசியல்வாதிகளும், தொழிலாளர்களும் முன்வர வேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமை வராத வரையில் நாம் வறுமையைப் போக்க முடியாது. வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாது.

ஐ.என்.டி.யூ.சி., டி.எம்.கே. ஆகிய தொழிலாளர்களின் அமைப்புகள் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் அவர்களுடைய உறுதியைக் கொடுத்ததற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக உலக வங்கியிடம் இருந்து கடன் பெற்று கிராமங்களிலே 'பயிற்சி—பார்வையிடல் திட்டம்' கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையின் நான்காவது பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே இன்றுள்ள சூழ்நிலையில் தேர்தல்கள் அல்லாத காரணத்தினால் அங்கே பொது மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. கிராமங்களிலே பஞ்சாயத்து அமைப்புகள் இல்லாத காரணத்தினாலே அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். 1979ஆம் ஆண்டிலே இருந்து இந்த நிலைமையை நாம் பார்த்து வருகிறோம். இப்படிப்பட்ட அவல நிலை அன்றிலிருந்து இன்று வரையில் இருக்கிறது. இதற்கு அரசு மட்டும் காரணம் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அதிகாரிகளோடு அரசு கலந்தாலோசித்து இதற்காக தனியாக ஒரு கமிட்டியை அமைத்து

V 211, 31' 82

N83-2622

செலவழித்த பணத்திற்கு உண்மையிலே ரோடு போடப்பட்டதா, கட்டிடங்கள் கட்டப்பட்டனவா, கட்டப்பட்டது அவல நிலையில் இருக்கிறதா? இவைகளுக் கெல்லாம் எந்த அதிகாரி பொறுப்பு என்பதை யெல்லாம் நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும். அவ்வா றின்றி இதை விட்டுவிட்டால் நிச்சயமாக யாரோ செய்த குற்றத் திற்கு அரசாங்கம் குற்றவாளி என்ற நிலைமைதான் வரும். பொதுமக்களும் நம்பிக்கையை இழப்பார்கள். அந்த நிலைமைக்கு அரசாங்கம் செல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதற்காக என்று தனிக் குழுவை அமைத்து 1970ஆம் ஆண்டில பஞ்சாயத்து போர்டுகளில், பஞ்சாயத்து யூனியன்களில் எவ்வளவு நிதி இருந்தது கையிருப்பு எவ்வளவு இருந்தது, அவை ஒழுங்காகச் செலவு செய்யப்பட்டதா, இல்லையா என்பதைக் கண்டறிய வேண்டும்.

(பிற்பகல் 1·00.)

இங்கே உள்ள எம்.எல்.ஏ.க்களாக இருந்தாலும் கூட, அமைச்சர் பெருமக்களாக இருந்தாலும்கூட உண்மையான தகவல்களை ஆங்காங்கு கொடுப்பதில் அதிகாரிகள் அசட்டையாக இருக்கிறார்கள் என்பதை உணரத்தான் வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இன்றைய தினம் அவையிலே பேசும்பொழுது சகோதரர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்ன வாக்குவாதமும் அமைச்சர் சொன்ன வாக்கு வாதமும் உதாரணம் ஆகும். அண்ணா கிராமம் பஞ்சாயத்து யூனியனில் அவியனூர் என்ற ஊரில் அரிசன் இல்லை என்பதுபற்றி வாக்குவாதம் நடந்தது. நான் அந்த ஊர் உள்ள தென்னார்க்காடு மாவட்டத்தைதச் சேர்ந்தவன்.

1965ஆம் ஆண்டு அவியனூர், அழகுப் பெருமாள் குப்பம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இரண்டு பஞ்சாயத்து போர்டாக ஃபைபர்கேட் செய்யப்பட்டது. இந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்த திரு. தங்கவேலு என்பவர் அந்த இரண்டு பஞ்சாயத்து போர்டில் ஒன்றின் தலைவராக இருந்திருக்கிறார். 1965ஆம் ஆண்டு இரண்டாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு ஜனத் தொகை கணக்குப்படி கொடுத்த தகவல்களை அந்த அதிகாரிகள் உண்மையிலேயே சரியாகக் கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்பதை உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். வாக்குவாதத்திற் காக ஒரு அரிசன்கூட இல்லை என்று சொல்வதோ 1971ஆம் ஆண்டுக் கணக்குப்படி இருக்கிறார்கள் என்று சொல்வதோ இல்லாமல் 1965ஆம் ஆண்டு ஃபைபர்கேட் ஆகியிருப்பதால் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு ஒழுங்கான தகவலைக் கொடுத்தார் களா இல்லையா என்று நீங்கள் பார்த்துச் சொன்னால் ஒழிய வாக்குவாதத்திலே உண்டு என்பதும் இல்லை என்பதும் என்று சொல்லி இப்படிப் பேசுகின்ற நிலையிலே விட்டு விட்டோம் என்ற நிலை இருத்தல் கூடாது. அப்படி விட்டு விட்டால் தவறு



செய்யும் அதிகாரிகள் இந்த மாமன்றம் தக்க நடவடிக்கை எடுக்காது, தக்க நடவடிக்கை எடுக்கத் தகுதி இல்லை கேட்பதற்கு உரிமை இல்லை. அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்று நிர்வாக இயந்திரம் எண்ணுகின்ற அளவிற்கு அரசு விட்டு விடக் கூடாது.

உலக வங்கியிலிருந்து கடன் பெற்றிருக்கிறோம். பயிற்சியும் பார்வையும் என்று சொல்லியிருக்கிறோம். அந்தப் பயிற்சியை உண்மையிலேயே கிராமத்திற்குக் கொடுத்தார்களா திட்டத்திற்கு செலவழிக்கப்பட்டதாகக் கூறப்படும் பில் உண்மையான பில் தானா என்பதைப் பார்க்க வேண்டும். சாதாரணமாக கிராமத் தொண்டர் என்று சொல்லப்படுகின்ற கிராம சேவக் அவர்களும் கமிஷனரும் ஒத்துக் கொண்டு இந்த ஊரிலே இன்ன வேலை நடந்தது என்று சொல்லித் தருகின்ற பில்லை ஆடிட் செய்யும் தகுதி உறுப்பினருக்கோ பிரசிடெண்டுக்கோ மணியத் திற்கோ கிடையாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்பவர் அந்த ஊரைச் சேர்ந்தவர் ; கமிஷனர் குறிப்பிட்ட பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர் ; கிராம சேவக்கும் அந்த யூனியனைச் சேர்ந்தவர் கமிஷனர் தலைவர் ; பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் வேலை செய்பவர் ; கிராம தொண்டர் என்று சொல்லப்படுகிற கிராம சேவகர் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர். ஆகவே இந்த மூன்று பேரும் சேர்ந்து செய்தால் உண்மை யாருக்கும் தெரியாத நிலைமை இருக்கிறது. கணக்கைப் பார்க் கிறோம் பணத்தைச் செலவு செய்து அதற்கான பில் இருக் கிறது. ஆனால் அந்த வேலை நடந்ததா இல்லையா என்பது சந்தேகத்திலே இருக்கிறது. அப்படிப் பலயிடங்களிலே தமிழகத் திலே நடந்திருக்கிறது. எனவே இதுசம்பந்தமாக அரசாங்கம் ஒரு குழுவைப் போட்டு பொதுமக்களையும் அதிகாரிகளையும் விசாரித்தாலொழிய நீங்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள முடியாது. அதற்கான உதாரணம்தான் அண்ணா கிராமம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அவியனூர்பற்றிய நிலைமை. எனவே இதுபற்றி அரசாங்கம் உண்மைகளைத் தருவித்து நிலைமையை அறிய வேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், மாண்புமிகு அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். சகோதரர் திரு. ரமணி அவர்களும் இருக்கிறார்கள். அந்தப் பொருட்களை விநியோகம் செய்வதற்குக் கமிட்டி அமைத்தோம் என்றால் தென்னார்க்காடு மாவட்டத்திலேயும் கோயம்புத்தூர் மாவட் டத்திலேயும் இன்னும் சில மாவட்டங்களிலேயும் உணவுப் பொருட்கள் பங்கீட்டு முறையிலே என்ன தவறு இருக்கிறது கடைகளில் விநியோகம் செய்வதில் என்ன தவறு இருக்கிறது என்று பொதுமக்கள் சார்பாகச் சொல்லக் கூடியவற்றைக் கேட்கும்

நிலையில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் அல்லது உண்மையைச் சொல்லும் நிலையில் உள்ளவர்களையும் கேட்கக் கூடிய ஒரு கமிட்டி இருக்கிறது என்ற நிலைமை சரியாக இல்லை கமிட்டி என்பது இரண்டுக்கும் பொருந்தும். இதை அரசு கவனத்தோடு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் மேலும் 8 மாவட்டங்களில் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 35 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். 5 ஆண்டுகளுக்கு செலவிடப்படும் என்கிறார்கள். இப்பொழுது எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டது. எத்தனை மாவட்டங்களிலே என்ன நிலைமை என்பதை, உண்மையான நிலையை இப்பொழுது இல்லாவிட்டாலும், வருகின்ற பட்ஜெட்டில் சொன்னாலொழிய உலக வங்கிக் கடனை நாம் எந்த அளவு பயன்படுத்தி இருக்கிறோம் என்பதை நாம் பரிபூரணமாகப் புரிந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கும்.

பினாமி சம்பந்தமாக நம்முடைய அரசு மிகத் தெளிவாகச் செய்தது என்று அப்பொழுதும் சொன்னார்கள். நம்முடைய அமைச்சரவர்கள் நான் பலமுறைச் சந்தித்தபொழுது கூட, அதைப் பற்றி சட்ட வல்லுநர்களைக் கேளுங்கள். நாம் எங்காவது ஏமாந்துவிட்டால், இந்தச் சட்டம் வீணாகப் போய்விடும், கூடாது என்றெல்லாம் நம்முடைய ரெவின்யூ அமைச்சரிடம் பலமுறை நேரில் நான் சொன்னதுண்டு. அவர்களும் சொன்னார்கள், சட்டம் சரியாக இருக்கிறது, நிச்சயமாக நமக்கு வெற்றியைப் பெற்றுத் தரும். அதில் ஒன்றும் ஆட்சேபணை வராது என்று சொன்னார்கள். ஆனால், இந்தக் குறிப்பில் சொல்கிறார்கள், மத்திய அரசு அல்லது ஜனாதிபதி இதுவரை இசைவு தரவில்லை. நமக்கு ஒன்றும் தகவல் இல்லை, என்று. சரியான விவரம் கூடத் தரவில்லையென்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய தனிச் சிறப்புப் பிரதிநிதி டில்லியில் இருக்கிறார். அவர்கள் யாரையாவது அணுகினார்களா அல்லது சட்ட இலாகாவை அணுகினார்களா. நம்முடைய சட்டத்திலே என்னென்ன தவறுகள் இருக்கின்றன. ஒரு காலத்தில் தமிழகம்தான் ஜொலிக்கும், சட்ட நிர்வாகத்திற்கும் பெயர் பெற்றது இந்தியாவிலேயே என்று பண்டித ஜவகர்லால் நேரு அவர்களாலே சொல்லப்பட்ட மாநிலம் நம்முடைய மாநிலம். ஆனால் துரதிருஷ்டவசமாக நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற சட்டங்கள், நாம் நன்றாகச் செய்தாலும்கூட அந்தச் சட்டங்கள் கோர்ட்டார் மூலம், கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்கள் தெய்வ லோகத்திலிருந்து வந்தவர்கள் என்று எண்ணினாலும் நிச்சயமாக மனிதர்களுக்குத் தேவையானது வல்ல என்பதை எண்ணுவதற்கு நாம் பின் தங்கியிருக்கிறோமா அல்லது சட்ட வல்லுநர்கள் வேண்டுமென்று இப்படி செய்கிறார்களா? அல்லது அமைச்சர்களாக இருக்கிறவர்கள் சொல்வதைக் கேட்காமல் இருக்கிறார்களா? அல்லது நீங்களே நன்றாகச் செய்ய வேண்டுமென்று ஆர்வத்தில் மறந்துவிட்டீர்களா? இந்த



மூவரிலே யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, சட்டங்களைச் செய்வோம், கோர்ட்டாரின் இஷ்டப்படி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இதிலே யார் தவறு செய்தார்கள் என்பது பிரச்சினை அல்ல. மனதுதான் இல்லையே தவிர, தவறு யாரும் செய்யவில்லை. நல்ல மனது இருந்தால் அவர்களாகவே நிறைவேற்றி அனுப்பியிருக்க முடியும்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சரவர்கள் மனது இல்லை என்று சொன்னார்கள். அதைப் புரிந்து கொள்ள எனக்கு சக்தியில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஏனென்றால், மனம் என்பது மாறினால்தான் தீண்டாமை ஒழியும் என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால், மாறியதாகக் காணோம். ஆனால், சட்டம் வந்து நடவடிக்கை எடுத்த பிறகு ஓரளவாவது அந்தச் சக்கரம் சுழல ஆரம்பித்தது. ஆகவே, சட்டத்திலே நாம் என்ன தவறு செய்தோம். அல்லது, அவர்கள் ஏன் பதில் கொடுக்கவில்லையென்பதற்கு நேரிடையாக, நம்முடைய பிரதிநிதியை டில்லியில் இருப்பவர் அணுகி நாம் ஏதாவது செய்தோமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கவர்னர் உரை அச்சடித்த பிறகு, இந்தியப் பேரரசிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. கவர்னர் உரையில் பதில் வரவில்லையென்று போட்டிருந்தாலும், 30ஆம் தேதி எங்களுக்குப் பதில் வந்திருக்கிறது. 1ஆம் தேதி உரை இங்கே படிக்கப்பட்டிருக்கிறது. 30ஆம் தேதிக்கு முன்னாலே, உரை அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலேதான் அதில் விளக்கமாகப் போடவில்லை.

வந்த பதிலில் 9-வது ஷெடுயூலில் சேர்க்காமல் இருந்தால் செல்லாதே என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதனுடைய ஒரிஜினல்—பேரன்ட்—ஆக்ட், 1960-லே வந்தது. அதை 9-வது ஷெடுயூலில் சேர்த்திருக்கிறோம். இதையும் சேர்க்க வேண்டுமென்று கடிதம் எழுதி இருக்கிறோம்.

அடுத்து, பார்ட்டிஷனை இதில் சேர்த்திருக்கிறீர்களே, என்று எழுதியிருக்கிறார்கள். பார்ட்டிஷன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பார்ட்டிஷன் செல்லுபடியாகும் என்று இதிலே நாங்கள் போட்டிருப்பதற்குக் காரணம், அண்ணன்—தம்பி இருப்பார்கள், பார்ட்டிஷன் என்றால், யாருக்காவது எழுதி வைப்பது அல்ல. அது டிரான்சாக்ஷன். பார்ட்டிஷன் என்பது, தகப்பன் நிலத்தை அண்ணன் தம்பி பங்கு பிரித்துக் கொள்வது, உரிமையாக்கி கொள்வது. பார்ட்டிஷனை இதிலே நாம் சட்டப்படி செல்லுபடியாக்கியிருக்கிறோம். பார்ட்டிஷனை எப்படி சட்டப்படி செல்லுபடியாக்கியிருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். பார்ட்டிஷனைச் சட்டப்படி செல்லுபடியாக்க

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 பிப்ரவரி 2

வேண்டுமென்றுதான் நீங்கள் எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் அதை நன்றாகப் படித்து, அவர்தான் முதன் முதலிலே ஆதரித்தார்கள். மற்றவர்களும் ஆதரித்தார்கள்.

(பிற்பகல் 1–10)

ஆனால் பார்ட்டிஷன்களே இன்றைக்கு வேண்டாம் என்றால், அதிலே பல சங்கடங்கள் வரும் என்பது உங்களுக்குத் தெரியும். இன்னொன்றும் சொல்லி இருக்கிறார்கள். 20 ஆண்டுகள் கழித்து இன்றைக்கு அதை எப்படி நடைமுறைப் படுத்த முடியும் என்று சொல்லி இருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்ததுதானே. 20 ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்த தவறுகளை சீர்படுத்துவதற்காகத்தான் சட்ட முன் வடிவைக் கொண்டு வந்து இயற்றப்பட்டது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால்தான் நான ஓரே வரியில் சொல்லிவிட்டேன். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. மனமில்லாவிட்டால் மார்க்கம் இல்லை என்று நான் முதலிலேயே குறிப்பாகச் சொன்னேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மனமிருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்லி இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைப் பொருத்தவரையில் மிகத் தெளிவாக அன்றைக்கும் சொல்லி இருக்கிறோம். இன்றைக்கும் சொல்லுகிறோம். நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் அதை நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில் ஓட்டை, உடைசல் சட்டங்களைக் கொண்டு வந்துவிட்டு அதை மத்தியிலே இருக்கிற சர்க்கார் செயல்படுத்தவில்லை என்று எங்கள் மீது குற்றம் சாட்டி இருப்பது ஒரு புறம், அதே நேரத்தில் இப்போது அமைச்சர் சொல்வதைப் போல மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்வது ஒருபுறம்—எப்படி விசித்திரமான சூழ்நிலை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ஓட்டை, உடைசல் சட்டியிலே தண்ணீர் ஊற்றிப் பார்த்தால் தெரியும். சட்டியிலே தண்ணீரையே ஊற்றாமல், சட்டியையும் பார்க்காமல், சட்டியை எடுத்துப் பார்ப்பதற்கும் மனமில்லாமல் ஓட்டை என்று சொன்னால் அதை எப்படி ஏற்றுக்கொள்வது. நான் இன்னமும் தைரியமாகச் சொல்லுகிறேன். தமிழகத்தினுடைய சட்டத்துறை-அந்த இலாகாவிலே உள்ளவர்கள் எல்லோரையும் விட திறமைசாலிகள். அவர்களுடைய திறமையிலே இந்த அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது.



1982 பிப்ரவரி 2]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

திரு. ப. நெடுமாறன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். இது ஓட்டை, உடைசல் சட்டம் என்று. அந்த ஓட்டை, உடைசல் சட்டம் இந்த சட்டமன்றத்திலே வைக்கப்பட்டபோது நண்பர் சுந்தரராஜும் அவர் கட்சியினரும் இந்த சட்ட சபையில்தான் இருந்தார்கள். அவர்களும் ஆதரித்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த சட்டம். அப்போதே அவர்கள் திருத்தங்களைச் சொல்லி ஓட்டை-உடைசல்களை அடைத்து இருக்கலாம். ஆனால் மத்திய அரசாங்கம் வேண்டும் என்றே, நில பிரபுக்களுக்கு ஆதரவான நிலை எடுத்து, அந்தச் சட்டத்திற்கு அனுமதி மறுத்து இருக்கிறது என்பதுதான் உண்மை.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் அன்றைக்கு சட்டமன்றத்திலே காங்கிரஸ் கட்சி அதை ஆதரித்தது என்று சொன்னார்கள். நான் முதலிலேயே சொன்னேன். அன்றைக்கும் ஆதரித்தோம், இன்றைக்கும் ஆதரிப்போம், நாளைக்கு இந்தச் சட்டத்தைத் திருத்தி ஒழுங்காக சட்டமாகக் கொண்டு வந்தாலும் ஆதரிப்போம். அன்றைக்கும் நாங்கள் பல பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறோம். அவைக் குறிப்புகளைப் பார்த்தால் தெரியும். அன்றைக்கும் பல சட்டப் பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு நெடுமாறன் அவர்கள் மத்திய அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாக செயல்படுவதாக குற்றச்சாட்டை வைத்திருக்கிறார்கள். அவரும் எங்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்தவர்கள்தான். அன்றைக்கு எங்கள் காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்குத் தீவிரமாக நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று உத்தரவிட்டது மட்டுமல்ல, செயல்பட்டது என்பதையும், எங்கள் அருமைத் தலைவர் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 20 அம்சத் திட்டத்தின் மூலம் எவ்வளவு வேகமாக இந்த திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் புரிந்து இருப்பீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் சொன்னதிலே, நீண்ட காலத்திற்குப் பிறகு இந்தச் சட்டம் என்று சொன்னார்கள். மத்திய அமைச்சராக இருந்தாலும், மாநில அமைச்சராக இருந்தாலும் சரி, சீர்திருத்தச் சட்டம் என்று சொன் [illegible]ந்த பிறகு, இன்றைக்கு அந்தச் சட்டம் வந்த பிறகு, யார் முதலிலே விற்றார்களோ. யார் முதலிலே வாங்கினார்களோ அவர்களைக் குற்றவாளி என்ற நிலைமையிலே நாம் செய்தாலொழிய இந்தச் சட்டத்தை அமல் நடத்த முடியாது.

அதை மத்திய அரசுக்கு மாநில அரசு சொல்லியாகவேண்டும்.
நான் நமது பாரதப் பிரதமரை விரைவில் சந்திக்க இருக்
கிறேன். அப்போது இதைப் பற்றி முக்கியமாக சொல்
வேன் என்று உறுதியுடன் சொல்கிறேன். படித்தவர்கள்,
கெட்டிக்காரர்கள், சமுதாயத்திலே இன்டலிஜென்ட் கம்யூனிட்டி
என்று சொல்லுகிறவர்கள், சுரண்டுகின்ற கூட்டம், வாழவைக்க
வேண்டிய மக்களை வாழவைப்பதற்கு—அமைச்சர் அவர்கள்
சொல்வதைப்போல—மனமில்லாத ஒரு சிலர் செய்கின்ற சூழ்ச்
சிக்கு இந்த அரசாங்கம் இடம் கொடுக்கக்கூடாது. மத்திய அரசு
குறிப்பாக பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் மிக்க
துணிவோடு இருக்கிறார்கள். இந்த சட்டத்தை அமலாக்குவ
தற்கு, இப்போது இருக்கின்ற குறைபாடுகள் கூட பிரதமரின்
காதுக்குப் போகுமா என்ற அச்சம் எனக்கு இருக்கிறது என்
பதை உங்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.
அதைச் சொல்லவேண்டியவர்கள், ஆளுகின்ற அரசாங்கமாக
இருக்கின்ற நீங்கள் பிரதமரைச் சந்தித்து தெள்ளத் தெளிவாக
சொல்ல வேண்டும். 20 ஆண்டுகாலம் என்று சொல்லி ஏய்க்க
நினைப்பார்கள். 20 ஆண்டு காலமாக இருந்த எல்லோரையும்
குற்றவாளிகளாக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை.
சட்டம் என்று வருகிறது. அதை காங்கிரஸ் கட்சிதான்
கொண்டு வந்தது. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொண்டு
வந்தது. உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சட்டம்
கொண்டு வந்த நேரத்தில், அரசாங்கத்தை ஏமாற்றி, நிலக்
குவியல்களை விற்றவர் யார், வாங்கியவர் யார்—முதன்
முதலாக வாங்கிய பர்சேஸர். செல்லர் யார் என்பதைப்
பார்த்து; அவர்கள் இரண்டு பேர் மீதும் இந்தச் சட்டத்தைப்
பயன்படுத்தி நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத்
தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் அந்த நேரத்தில்
தான் உறவினர் பெயரில், வேலையாள் பெயரில், மிருகங்க
ளுக்கு வைத்துள்ள பெயரில் அந்த நிலங்களை எழுதி வைத்து
அந்தச் சட்டத்தில் இருந்து தப்பித்துக்கொண்டு இருக்கிறார்கள்.
அதற்குப் பிறகு இந்த இடைக்காலத்தில் ஏற்பட்ட பர்சேஸர்
அல்லது செல்லர் பற்றி நான் ஒன்றும் குறிப்பிட விரும்ப
வில்லை. ஆகவே, நான் இந்த 20 ஆண்டு காலத்தில் நடை
பெற்ற டிரான்சாக்ஷனைப் பற்றிச் சொல்லவில்லை என்பதை
தெரிவித்துக்கொண்டு, முதன் முதலில் யார் இந்தத் தவறை,
சட்டத்திற்குப் புறம்பானது என்று தெரிந்தே, சட்டத்தை
ஏமாற்றுவதற்காக செய்தார்களோ அவர்கள் பெயரில் நட
வடிக்கை எடுக்க வேண்டும். அது யாராக இருந்தாலும்,
எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க
வேண்டும் (குறுக்கீடு) இன்னும் கொஞ்ச நேரம் பேச வாய்ப்பு
அளியுங்கள்.

அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க நாங்கள் தயாராக
இருக்கிறோம் என்கிற எண்ணத்தை இந்த அரசாங்கம் மத்திய
அரசாங்கத்திற்குச் சொல்லவேண்டும். அப்படியில்லாமல்





மேலும் மேலும் அந்தத் தவறைச் செய்தவர்களை வளரவிட்டுக்
கொண்டுபோனால் அது சரியாக இருக்காது. எலெக்ஷன் பண்ட்
அவர்கள் கொடுப்பது நின்று விடுமோ என்று பயந்து எல்லா
அரசியல் கட்சிகளும் இருந்தால், உள்ளபடியே நான் தெரிவித்
துக்கொள்ளுகிறேன், அந்த ஏழை மக்களை ஏமாற்றிய அந்தப்
பாவத்திற்கு அரசாங்கம் ஆளாகநேரிடும் என்பதை நான்
இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் சொல்ல
விரும்புகிறேன். காவிரி தண்ணீர் சம்பந்தமாக இந்த அரசாங்
கம் எந்த நடவடிக்கை எடுக்கிறதோ அதற்கு காங்கிரஸ் ஸ்தா
பனம் நிச்சயமாக ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசுக்கு
நீங்களே எழுதி விட்டீர்கள்—அதாவது—மத்திய அரசாங்கம்
தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினை
யைத் தீர்க்க வேண்டும் என்று கூறிவிட்டீர்கள். காலம்
கடந்தாவது இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டதில் மகிழ்ச்சி.
ஒரு பிரிவு இல்லாத வலுவுள்ள மத்திய அரசால் தான் இந்தத்
தண்ணீர் விஷயங்கள், கனிப்பொருள்கள் பிரச்சினைகள் தீர்க்
கப்படமுடியும், நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்த முடியும்
என்று காலம் கடந்தாவது நீங்கள் உணர்ந்ததற்கு பாராட்டு
தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்களுடைய காங்கிரஸ் கட்சி
யின் சார்பில் இதற்கு ஒற்றுமைப்படுவோம் என்பதையும் நான்
இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

வெள்ளக்காலங்களில் தண்ணீர் வீணாகிச் சென்று விடுகிறது.
அதற்காக நான் பலகாலமாக ஒரு கருத்தைச் சொல்லிவருகிறேன்.
தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் வெள்ளச் சேதம் அடிக்கடி
ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க திருச்சி ஜில்லாவில் பொன்
னேரி என்று ஒரு ஏரி இருக்கிறது. அதன் பரப்பளவு சுமார் 50
ஏக்கருக்கு மேல் உள்ளது. கொள்ளிடம் ஆற்றில் வெள்ளக்காலத்
தில் வரும் அதிகப்படியான நீரை அந்த ஏரியில் தேக்கினால்,
தண்ணீர் வீணாவது தடுப்பதுடன், மேலும் பல ஏக்கர் நிலங்கள்
பாசனம் பெறும். அதைப்போலவே, சிதம்பரம் அருகில்
வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் கேட்கிறோம். ஆனால்,
அந்த ஏரியில் தூர் எடுத்தல் இதுவரையில் நடைபெறவில்லை.
அதிலே ஏகப்பட்ட பணம் செலவழிக்கப்படுகிறது. ஆகவே,
நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன், இந்த ஏரியில் சில்ட் கிளிய
ரன்ஸ் செய்தால் அது வெள்ளச்சேதத்தை தடுக்க உதவும் என்
பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சகோதரர் பிரபாகரன் அவர்கள்
பேசுகிறபோது சொன்னார்கள், ஆதிதிராவிட மக்களுக்காக
ஒதுக்கப்பட்ட பணம் வீணாக்கப்படவில்லை என்று சொன்னார்
கள். நான்தான் சொன்னேன், அப்படி ஒதுக்கப்பட்ட
பணம் வீணாக்கப்பட்டு இருக்கிறது என்று. ஆகவே, அதை

நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 1974, 1975, 1976 ஆம் ஆண்டுகளில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் வீணாக்கப்பட்டு இருக்கிறது என்று இந்த சட்டசபையிலேயே திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அமைச்சராக இருந்தபோது, சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே 1978 ஆம் ஆண்டிலும் திரு சௌந்தரபாண்டியன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது தெரிவித்து இருக்கிறார்கள். நான் அதைத்தான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆனால் ஏதோ பிற்படடோர் நலக்குழுத் தலைவர் சகோதரர் மல்லு, எம்.பி., அவர்கள் இங்கே வந்திருந்தபோது சொல்லியிருக்கிறார்கள், அந்த மாதிரி எதுவும் வீணாக்கப்படவில்லை என்று. நான் மீண்டும் இங்கே அதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த 18 மாதங்களில் நான் நடந்தது என்று சொல்லவில்லை. ஏற்கனவே இங்கே சட்டமன்றத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் சொன்னதை நான் இங்கே தெரிவித்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு பணம் ஒதுக்குகிறபோது ஷெட்யூல்ட காஸ்ட்டுக்கு என்று சொல்லுவது இல்லை. பின் தங்கியவர், மிகவும் பின் தங்கியவர் என்று சொல்லி பணம் ஒதுக்குகிறார்கள். பின் தங்கியவருக்கு என்று ஒதுக்கப்படும் பணம் ஆதிதிராவிட மக்களுக்குச் செலவிடுவதற்கு பதிலாக வேறு இனத்தவருக்கு அதைச் செலவழித்து இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

25,000 வீடுகள் கட்டுவோம் என்று சொன்னார்கள். இந்த 20 மாதத்தில் எவ்வளவு வீடுகள் கட்டினீர்கள் ? மத்திய அரசு 5,000 கொடுத்தார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு ஒரு வீட்டுக்கு 3,000 ரூபாய் என்று கொடுத்தால் இன்னும் அதிக வீடுகள் கட்டலாமே என்று சொல்லி அதை 3,000 ரூபாய் என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற விலைவாசியை கணக்கில் எடுக்கவேண்டாமா? அந்த ரூபாய் 3,000-ல் வீடு கட்டமுடியுமா அதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

இன்னொன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில நல்ல விஷயங்கள் செய்திருப்பது பற்றிப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அவர் பேசும் பல விஷயங்கள் அரசியல் சட்டத்திற்கு முரணானது நடைமுறைக்கு முரணானது என்று அவர் மனதுக்குத் தெரிந்தும் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ளாமல் இருக்கிறார்கள். எல்லா ஜாதியினரும் உதவி கேட்பார்கள், எல்லோரும் பணம் கேட்பார்கள். அவர்களுக்கும் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசியல் சாசனத்தை எழுதியவர்கள் புத்தியற்றவர்கள் அல்ல. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு என்னென்ன





செய்ய வேண்டுமென்று அரசியல் சாசனத்தில் சொன்னதற்கு பிறகும்கூட இப்படி வாக்குவாதம் செய்வது மிகவும் பாவமானது, அநீதி என்று தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் மன்னர்களுக்கு அரசாங்கத்தில் கொடுக்கிற உதவிப் பணம், மத்திய அரசாங்கத்தால் கொடுக்கிற பணத்தைத் தவிர அரிசன கல்லூரி மாணவர்களுக்கு மாநில சர்க்கார் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. ஆனால் காமராஜ் அவர்கள் காலத்தில் மத்திய சர்க்கார் கொடுக்கிற பணத்திற்கு மேலாக அதிகம் செலவாகும் பணத்தை அந்த மாணவர்களுக்கு மாநில சர்க்கார் கொடுத்தது. அது இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது.

கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். அமைச்சர் விஜயசாரதி அவர்கள் நல்ல இளைஞர். அவர்கள் கூட இளையபெருமாள் தவறாகச் சொல்லி விட்டார் என்று சொல்கிறார்கள். இதற்காக வருந்துகிறேன். அவர் இன்னும் ஒரு கமிட்டி கூட அமைக்கவில்லை ஸ்டேட் அரிசன் வெல்பேர் கமிட்டி அவர்களால் அமைக்க முடியவில்லை. டிஸ்டிரிக்ட் வெல்ஃபேர் கமிட்டி அமைக்க முடியவில்லை. ஒரு ஹைபவர் கமிட்டி அமைக்கப்பட்டு 2, 3 ஆண்டு ஆகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அந்தக் கமிட்டிக்கு தலைவர் ; சீஃப் செக்ரட்டரி அதில் இருக்கிறார்; அரிசன் டிபார்ட்மென்ட் செக்ரட்டரி அதில் மெம்பர் செக்ரட்டரி, இரண்டு வருடத்தில் ஒரு தடவைக்கூட அந்தக் கமிட்டி கூட வில்லை என்று சொல்லி நான் அக்டோபர் 2-ந் தேதி உண்ணாவிரதம் இருந்தேன். அதன்பிறகு நவம்பர் மாதம் கூடினார்கள். இரண்டு வருடம் கழித்து ஒருதடவை கூடினார்கள். கூடி என்ன முடிவு எடுத்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் இங்கே இருக்கிறார். 2,000 அரிசன சமூகத்திற்கு உத்தியோகம் கொடுப்பதாகச் சொன்னார்கள்; தேர்வு எல்லாம் நடந்தது. ஆனால் அவர்களுக்கு இன்னும் உத்தியோகம் கொடுக்கவில்லை. 18 சதம் என்ற அளவை நிறைவு செய்வதற்கு ஆள் இல்லை என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால் ஆதி திராவிடர்களுக்கு அதிகம் செய்வதாகச் சொல்லி ஒன்றும் நடைபெறாமல் இருப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் சட்டங்கள் செய்து இருக்கிறார்கள்; ஆனால் அமுல்படுத்தவில்லை; அதற்கு ஆள் இல்லை, இந்த அவலநிலை மாறவேண்டும்.

போலீசார் இன்றைக்கு அத்துமீறி நடக்கிறார்கள். சேலம் ஜில்லாவில் 30 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற ஒருவர் ஒரு ஏக்கர் வைத்திருக்கிற ஒரு அரிசனிடம் அந்த நிலத்தை விலைக்குக் கேட்டிருக்கிறார். அவர் கொடுக்க மறுத்ததால் அவருடைய

[திரு எல். இளையபெருமாள்] (1982 பிப்ரவரி 2

பிள்ளை கணேசனை தீயிட்டுக் கொளுத்திவிட்டார். இதுபற்றி போலீசாரிடம் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. முதலமைச்சருக்குத்தெரிவித்தபிறகு ஏதோ நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் அவர் இப்போது சென்னை பொதுமருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

அதைப்போலவே சங்கனாங்குளம் சம்பவத்திலும் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. முதலமைச்சரிடம் சொன்னபிறகு நீதி விசாரணை நடக்கிறது. இப்படியெல்லாம் நடக்கும்போது போலீசாரை நம்பிக்கொண்டிருந்தால் அது அரசாங்கத்திற்கு ஒரு பெரும் அபாயத்தை ஏற்படுத்தும்; கெட்ட பெயரை ஏற்படுத்தும். தவறு செய்கிறவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4 ஆம் நாள் காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### (6) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (ஆ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

*1. முன்னாள் சுகாதாரத் துறையின் 24—6—1950 ஆம் நாளிடப்பெற்ற 463 ஆம் எண் அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட சென்னை, செனாய் நகர்ப்பகுதி நகரமைப்பு திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1515 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*2. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அரசு அங்கீகாரம் அளிக்கப் பட்ட தனியார் பள்ளிகள் (முறைபடுத்துதல்) சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 2—5—1981 ஆம் தேதியிடப் பெற்ற கல்வித் துறையின் 748 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1974) 57 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1982 பிப்ரவரி 2]

*3. விற்பனைக்காக எண்ணெய் உற்பத்தி செய்வதற்கு எண்ணெய் - விதைகள் வாங்குவதன் மீது தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 4 அல்லது 7-ஏ-ன்கீழ் விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு 27—6—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 732 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

*4. 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ஆம் நாளிடப்பெற்ற சுகாதாரத் துறையின் 2297 ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட செனாய் நகர்ப்பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து 6—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 388 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

*5. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை) விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து 22—4—1981 ஆம் தேதியிடப் பெற்ற வருவாய்த்துறையின் 935 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961] 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

*6. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 20—7—1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 124 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*7. நாகப்பட்டினம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் (கிழக்குத் தஞ்சை மாவட்டக் கிளை) சொந்தமான 3233 எண் கொண்ட வண்டியினை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புடைய காரியங்களுக்காக முழுவதும் பயன்படுத்தும் வரையிலும் அவ்வண்டிக்கான வரி விதிப்பினை குறைப்பது குறித்து 30—5—1981 ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் (போக்குவரத்து 1) 1208 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு

[தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

8. 1978–79 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக ஆண்டறிக்கை (1948 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கும் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 54/1948 ) 75 (1)பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது).

@@9. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணிமுறை ஒழுங்கு நூலின் பாகம் -ல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் ஒழுங்கு முறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 7—2—1981 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்த துறையின் (பணியாளரமைப்பு-M ) 101 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

@@10. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரிய பணிமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 19—2—1981 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 117 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகளில் (மேம்படுத்துதல்). (மாற்றுதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.]

@@11. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள சில கிராமங்களை கிராமதான கிராமங்களாக அறிவிப்பது குறித்து 8—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 1253ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்க சட்டமுதல் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது.)

@@12. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதி விதகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 21—7—1981ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 127 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் ]தமிழ்நாடு சட்டம் 1/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

@@13. அறந்தாங்கி நகர உள்ளாட்சி திட்ட அமைப்பு பகுதியாக சில கிராமங்களை அறிவிப்பது குறித்து 4—10—1979 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின்



1871 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்ட அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35 1972 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

@@14. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் நோக்கத்திற்காக தென் ஆற்காடு மாவட்டத்தை அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து 12—1—1981 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 77 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

**15. தமிழ்நாடு 1962ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 27—6—1981 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் 1480 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. 1974–75 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வளர்ச்சி குழுவின் நிர்வாக அறிக்கை (தமிழ்) (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி குழு சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 18/1958) 11 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. 1975–76 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வளர்ச்சிக் குழுவின் நிர்வாக அறிக்கை (தமிழ்) (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சிக் குழுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1958) 11 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

18. 1976–77 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வளர்ச்சிக் குழுவின நிர்வாக அறிக்கை (தமிழ்) (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சிக் குழுச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 18/1958) 11 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. 1977–78 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வளர்ச்சிக் குழுவின் நிர்வாக அறிக்கை (தமிழ்) (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சிக் குழுச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 18/1958) 11 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

@@@20. பழவேற்காடு உள்ளூர் திட்ட அமைப்பு பகுதியாக சில வருவாய்க் கிராமங்களை அறிவிப்பது குறித்து 25—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 1855 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு

1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@@21. தமிழ்நாடு 1957ம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 23—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 168 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு திரைப்படச் (ஒழுங்குமுறை) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 9/1955 ) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

@@@.22. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 5—1—1981 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் 18ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

@@@ 23. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் 2664 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1955) 51 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

24. 1979–80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1980 ஆம் தேதி வரையிலான ஐந்தொகைக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) 1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (அ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@@@ 25 திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்திலுள்ள சில கிராமங்களை கிராமதான கிராமங்களாக அறிவிப்பது குறித்து 5—8—1981 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1398 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூமிதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@@@ 26. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம் அனுமதி) சீட்டு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 26—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற உள் துறையின் 2481 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





@@@@27. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தை திருத்தியமைப்பது குறித்து 11-8-1981 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறையின் 1744 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

@@@@ 28. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நன்னடத்தை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 21—1—1981 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 67 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@@@29. சென்னை அடையாற்றிலுள்ள காதுகேளாதோர், பார்வையற்றோருக்கான தூயலூயிஸ் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான சில வண்டிகளுக்குச் செலுத்தவேண்டிய வரியினை குறைப்பது குறித்து 3—8—1981 ஆம் தேதியிடப்பெற்ற உள் (போக்கு வரத்து—1) துறையின் 1819 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

@@@@30. வளர்ச்சித் துறையின் 17—5—1949 ஆம் தேதியன்று வெளியாகி 17—5—1949 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் உட்பிரிவு விதிகள் I-ன் 146–149 ஆம் பக்கங்களில் வெளியான அறிவிப்பில் காணும் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 5—6—1981 ஆம் தேதியிடப்பெற்ற வனமீனளத் துறையின் 673 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1949) 12 அ (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

@@@@ 31. தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊர்து மருத்துவமனை மற்றும் குழந்தைகளுக்கான இந்திரா இல்லம் ஆகியவற்றிற்குச் சொந்தமான TND 4981 எண் கொண்ட வண்டிக்குச் செலுத்த வேண்டிய வரியினைக்குறைப்பது குறித்து 25–6–1981 ஆம் தேதியிடப்பெற்ற உள் துறையின் 1425 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

@@@@ 32. திரு டி. கே. கபாலி, எம். எல். ஏ. அவர்களை தமிழ்நாடு குடிசைமாற்றுவாரியத்தின் தலைவராக 21–6–1981 ஆம் தேதியிலிருந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கச் செய்வது குறித்து 25—6—1981 ஆம் தேதியிடப்பெற்ற

வீட்டுவசதி-நகர்ப்புறப் வளர்ச்சித் துறையின் 471 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகளில் (மேம்பாடு, அகற்றுதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

@@@@ 33. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய வினியோக (தனி விதித் துறைகள்) விதிகளை இயற்றுவது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 15—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற 111 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@@@34. தமிழ்நாடு நகராட்சிப் பணிகள் (குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்கள் நீங்கலாக ஏனையவை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 30—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1205 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 5 ஆவது ஆண்டறிக்கை (ஆங்கிலம், தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*36. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 2—4—1981 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 748 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.]

*37. மாமல்லபுரம் நகரியம் மற்றும் கைலாசபுரம் பேருராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு சமையல் நிர்வாகச் சட்டம் எந்த நாளிலிருந்து செயலுக்குவரும் என்பது குறித்து 3—10—1981 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறையின் 1924 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு சமையல் நிர்வாகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



*38. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 19—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற வருவாய்த் துறையின் 1434 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58 1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

*39. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு தீர்பாய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 6—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் 1269 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

*40. வட ஆற்காடு மாவட்டம் நல்ல சமாரிட்டன் ஊரக வளர்ச்சித்திட்டத்திற்குச் சொந்தமான TNM 8203 எண் கொண்ட ஆம்புலன்ஸ் வண்டிக்கு செலுத்த வேண்டிய வரியினைக் குறைப்பது குறித்து 3—8—1981 ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் 1813 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

41. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில பண்ணைக் கழகத்தி செயல்முறை மீதான அரசின் மறு ஆய்வும் இரண்டாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் விவர அறிக்கையின் நகல்களும் மற்றும் 1976–77 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை வெளியிடுவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கான விளக்கம் கூறும் குறிப்பும் [1956 ஆம் ஆண்டிற்கான நிறுவனங்கள் சட்டத்தின் 619 பிரிவின் கீழ் (மத்தியச் சட்டம் 1/1956) பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*42. மாமல்லபுரம் மற்றும் பூஞ்சேரி கிராமத்தின் சில பகுதிகளை புதிய மாகாபலிபுர நகரத்திற்கான இடமாக அறிவிப்பது குறித்து 25—10—1978 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1454 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**43. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்திலுள்ள சில கிராமங்களை கிராமதான கிராமங்களாக அறிவிப்பது குறித்து 8—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி

உள்ளாட்சித் துறையின் 1250 ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூமிதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**44. சென்னை பெருநகர வளர்ச்சிப் பகுதிகளுக்கு மேம்பாட்டு கட்டணங்கள் விதிப்பதை நிர்ணயம் செய்வது குறித்து 22—9—1979 ஆம் தேதியிடப் பெற்ற வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1838 ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2), பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**45. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 15—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 59 ஆம் என், அரசாணை மற்றும் 3—5—1981 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் S R.G.A. 125 (8)/81 ஆம் என் குறிப்பாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**46. 1981 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி பிரிவு 111 கல்விப்பணி விதிகளை இயற்றுவது குறித்து 10—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1090 ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**47. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 23—9—1981 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 2167 ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

48. 1980–81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் [ஆங்கிலம் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

49. 1977–78 ஆம் ஆண்டிற்கான கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் (பூம்புகார்) ஐந்தாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம், தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





**50. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய விதிகளில் (சில்லறை விற்பனைக் கடைகள்) சில திருத்தங்கள் செய்வது குறித்து 14—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 104 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 34 (3) பிரிவின் கீழ பேரவை முன் வைக்கப் பெற்றது].

**51. 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 3 ஆம் நாளிடப் பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் SROA-125 (உ) 81 ஆம் எண் அறிக்கையில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 21—6—1981 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 65 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

**52. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 11(1) வணிக வரிகள்—சமய அறநிலையத் துறை 239 (b)/81-ஆம் எண். அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள துறையின் 923 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.].

***53. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் 1820 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

***54. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 3 ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் 1534 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1982 பிப்ரவரி 2

***55. 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 3 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் SRCA—125(ப)/81 ஆம் எண். அறிக்கையில் வெளியான 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 87 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 (54) (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

***56. தமிழ்நாடு 1964 ஆம் ஆண்டு சிட்பண்டு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1075-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சிட்பண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

****57. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் தேதியிடப் பெற்ற வருவாயத் துறையின் 1358 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****58. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார்வாகன விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 29 ஆம் தேதியிடப் பெற்ற உள் துறையின் 1770 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1937 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****59. சென்னையிலுள்ள சோவியத் ஐக்கிய சோசலிசக் குடியரசின் வர்த்தகப் பிரதிநிதித்துவ நிறுவனத்திற்குச் சொந்தமான TMR 5341, TMR 7391 மற்றும் TMR 7392 ஆகிய வண்டிகளுக்கு தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்கீழ் விதிக்கப் பெற வேண்டிய வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் தேதியிடப் பெற்ற உள் (போக்குவரத்து) துறையின் 1971 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு வாகன வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1982 பிப்ரவரி 2]

****60. 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் SROA/159 (c) 1981 ஆம் எண். அறிக்கையில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 264 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் /1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****61. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 225 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்ப [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****62. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31 ஆம் தேதியிடப் பெற்ற கல்வித் துறையின் 1620 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 19/1976) 54(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

****63. 1981 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி பிரிவு-I பணி விதிகளை இயற்றுவது குறித்து 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1160 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு 1971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

****64 1962-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் தேதியன்று உணவு வேளாண்மைத் துறையில் வெளியாகி 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II-ன் பிரிவு-1-ல் 693 முதல் 699-ஆம் பக்கங்களில் வெளியான II - 1 எண் 1741/1962-ஆம் எண். அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28 ஆம் தேதியிடப் பெற்ற வேளாண்மைத் துறையின் 1455 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

****65. 1959-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் I பக்கம் 169-187-இல் வெளியான உள்துறையின் 1957 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் தேதியிடப் பெற்ற SRO 1776 அரசாணை எண். அறிவிப்பில் வெளிவந்த தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வீரியம் நீக்கப்பட்ட சாராவி விதிகளில் சில சீர்திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்ததுறையின் 1981-ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் தேதியிடப் பெற்ற 28 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

66. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வடிசாலைகள் விதிகள் இயற்றுவது குறித்து மதுவிலக்கு ஆயத்துறையின் 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் தேதியிடப் பெற்ற 29 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

67. 1960 ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் I அ-பக்கங்கள் 297-313-இல் வெளியான ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் SRO 13-578/1960 ஆம் எண். அறிவிப்பில் வெளியிடப்பெற்ற ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1960-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 22 ஆம் தேதியிடப் பெற்ற 115 ஆம் எண். அரசாணையில் அனுமதிக்கப்பெற்ற சென்னை மாநகரம், மயிலாப்பூர், தேனாம்பேட்டை நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் தேதியிடப் பெற்ற 467-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

68. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்றுவாரிய பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25 ஆம் தேதியிடப் பெற்ற 133 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

69. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1981-ஆம் ஆண்டு ஜூலைத்





திங்கள் 24 ஆம் தேதியிடப் பெற்ற 609 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துல் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

70. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடிசை மாற்றுவாரியப் பணியாளர்களின் பணி அங்கீகாரச் சங்க விதிகளை இயற்றுவது குறித்து வீட்டு வசதி— நகர்ப்புற வளர்ச்சிக் துறையின் 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18 ஆம் தேதியிடப் பெற்ற 581 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

71. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நில சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களுக்கு இழப்பீடு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 ஆம் தேதியிடப் பெற்ற 2088 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நில சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

72. பொது சுகாதார துறையில் 1938 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் தேதியன்று தோன்றி 1938ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் IA பக்கங்கள் 731—733 இல் கண்ட முன்னாள் கல்வி— பொது சுகாதாரத் துறையின் 880 ஆம் எண். அறிவிப்பில் வெளியான 3928 ஆம் எண். அரசாணையில் அனுமதிக்கப்பட்ட லாயிட்ஸ் சாலைப் பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து, வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17 ஆம் தேதியிடப் பெற்ற 576 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

73. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டம் சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களின் நில கிராமங்களில் எந்தத் தேதியிலிருந்து செயலுக்கு வருமென்பதை குறிப்பிடுவது குறித்து வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27 ஆம் தேதியிடப் பெற்ற 151 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 44(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

74. 1967 ஆம் ஆண்டு ஊராட்சி நிர்வாகக் குறிப்பேட்டின் பாகம் I பத்தி 42 இல் சொல்லப்பட்டுள்ள ஊராட்சிகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நன்னடத்தை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 28 ஆம் தேதியிடப் பெற்ற 114 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

75. 1925 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29 ஆம் தேதியிடப் பெற்ற 1210 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1899) 75 A (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

76. மதுவிலக்கு—ஆயத்துறையில் 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் தேதியன்று தோன்றி 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 23-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III, பிரிவு I(A), பக்கங்கள் 66—206-ல் வெளியான SRO-A-159 (C) 81-ல் வெளியிடப் பெற்ற தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மது (உரிமம், அனுமதிச் சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்துறையின் 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ஆம் தேதியிடப் பெற்ற 245-ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

77. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981—82-ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1980—81-ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை (1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

78. தமிழ்நாடு கிடங்குக் கழகத்தின் 1980—81-ஆம் ஆண்டிற்கான 23-ஆவது ஆண்டறிக்கை (தணிக்கை அறிக்கை இதில் அடங்கும்) (ஆங்கிலத்தில்) (1962-ஆம் ஆண்டு கிடங்குக் கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

79. சிறு கடைகளில் வியாபாரம் செய்யும் சிறு வணிகர்கள், ஒரு முனை வரிக்குரிய பொருட்களை விற்பனை செய்பவர்கள், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 20-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) துணைப் பிரிவிற்கு பொருந்துகிற



பொருட்களை நடைபாதையில் வியாபாரம் செய்பவர்கள் ஆகியோருக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் தேதியிடப் பெற்ற 739-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

80. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் தேதியிடப் பெற்ற 446-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனத்தின் 1980—81-ஆம் ஆண்டிற்கான 7-ஆவது ஆண்டறிக்கை (தமிழிலும், ஆங்கிலத்திலும்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

82. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ஆம் தேதியிடப் பெற்ற 2437-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

83. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27-ஆம் தேதியிடப் பெற்ற 2520-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

84. 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் தேதி முதல் 1975 ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் தேதி வரையிலான காலத்தில் நடைபெற்ற அத்துமீறல்களை விசாரிப்பதற்காக நியமிக்கப் பெற்ற மாண்புமிகு முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி டபுள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு விசாரணைக் கமிஷனின் ஏழாவது இடைக்கால அறிக்கை (தமிழ்) [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1982 பிப்ரவரி 2

85. திருச்செந்தூர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான ஆய்வாளர் விடுதியில் இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த சரி பார்க்கும் அதிகாரி திரு. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் 26—11—1980 அன்று இறந்ததற்கான காரணங்களையும் சூழ்நிலைகளையும் கண்டறியவும் இம்மாதிரி சம்பவம் இனி நிகழாதிருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தக்க பரிந்துரைகள செய்யவும் நியமிக்கப்பட்ட மாண்புமிகு நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் விசாரணைக் கமிஷன் அறிக்கை (தமிழ்) [1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிப்விபுகள், ஏனைய தாள்கள்.

1. 1981ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1981).

2. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு துயர் தணிப்பு நிறுவனங்கள் (தனி விதித் துறைகள்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 11/1981).

3. 1981ஆம் ஆண்டு இந்திய தண்டனை சட்டக்கோவை, தண்டனை நடைமுறை சட்டக்கோவை (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1981).

4. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நகராட்சிகள் (நான்காவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 13/1981).

5. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) மூன்றாவது திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 14/1981).

6. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மூன்றாவது திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1981).

7. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஐந்தாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1981).

8. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கடன் நிவாரண (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 17/1981).



1982 பிப்ரவரி 2]

9. 1981ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 18/1981).

10. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 19/1981).

11. தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மதுவிலக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரக் குற்றவாளிகள், குடிசைப் பகுதி ஆக்கிரமிப்பாளர்கள், ஆகியோரின் அபாய நடவடிக்கைகளைத் தடுத்தல் அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண். 1/1982).

## இணைப்பு 1.

[41 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 9-கான விடையைக் காண்க.)

(அ) எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 1978–79, 1979–80ஆம் ஆண்டுகளில் கீழ்வருவனவாகும் :—

| | எண்ணெய் வித்துக்களின் வகைகள். | உற்பத்தி விவரம். 1978–79. (இலட்சம் டன்களில்.) | 1979–80. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | நிலக்கடலை .. .. .. | 11.40 | 12.00 |
| 2 | எள் .. .. .. .. | 0.90 | 0.67 |
| 3 | ஆமணக்கு .. .. .. | 0.06 | 0.05 |
| 4 | சூரியகாந்தி .. .. .. | 0.30 | 0.25 |
| | மொத்தம் .. | 12.66 | 12.97 |
| 5. | தென்னை (கோடி தேங்காய்) .. | 114 | 119 |

[1982 பிப்ரவரி 2

(ஆ) எண்ணெய் வித்துக்கள் முக்கியமாக நிலக்கடலை அதிக பரப்பளவில் பயிரிடும் பொருட்டும் இதன் வழியாக தாவர எண்ணெய் உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் புதிதாக எண்ணெய் வித்துத் துறை அரசால் நிறுவப்பட்டு நவம்பர் திங்கள் 1980 முதல் இயங்கி வருகிறது. இத்துறை தென்னை பயிரிடுதலையும் ஊக்கப்படுத்தும்.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் - கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன :—

1. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் (மாநிலத் திட்டம்).

2. எள் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் (மாநிலத் திட்டம்).

3 தீவிர எண்ணெய் வித்துக்கள் சாகுபடித் திட்டம் (மத்திய அரசு உதவியுடன் செயல்படும் திட்டம்).

4. நிலக்கடலை சாகுபடியை பாசன வசதியுள்ள புதிய பரப்புகளில் பயிர் செய்யும் திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்).

5. சூரியகாந்தி அபிவிருத்தித் திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்).

தென்னை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் சுமார் 9க்கும் மேற்பட்ட திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

தாவர எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் நிலக்கடலைப் பயிரிடுதலை ஊக்குவிக்கவும் தேசீய பால்வள வாரியத்தின் உதவியோடு தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்விணையகம் ஜனவரி திங்கள் 1981 முதல் இயங்கி வருகிறது. முதற் கட்டப் பணியாக தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் இவ்விணையத் திட்டம் செயல்படுத்தப்படும்.



1982 பிப்ரவரி 2]

59 ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.

## Address by Thiru SADIQ ALI, Governor of Tamil Nadu at the Joint Session of the Tamil Nadu Legislature on 1st February 1982.

Honourable Members of the Legislature,

At the outset, may I offer you a warm welmome to the first joint session of the legislature in 1982?

You will recall that when I addressed you last at the Joint Session of the Legislature, we were all in a state of high elation over the successful conduct and completion of the historic World Tamil Conference at Madurai. That Conference was eloquent testimony to our great love for Tamil and deep loyalty to our language. The enthusiastic year-long celebrations of the Bharathi Centenary in which we are participating this year is a tribute to the love of our language which ripens into love for our country. The songs of Bharathi which are imbued with a spirit of freedom, equality and fratermity have inspired in us the resolve to create a new society which will transcend caste and religious differences. The Tamil Nadu Government has decided to celebrate the Bharathi Centenary as the year of national integration and has commended this constructive suggestion to the Government of India also for its acceptance. It is a matter of considerable gratification to us that our State is in the forefront of organising the Bharathi Centenary Celebrations not only in our State from the lvel of Panchayat Union to the State Capital but also in the various States of our country and in countries abroad, thus paying a tribute to Bharathi and homage to the Bharathi of his dreams.

2. In my address last year, I had referred to the prevalence of drought conditions in certain pockets of the districts of Pudukkottai and North Arcot due to failure of monsoons. But in the course of the year, the drought conditions spread to 13 out of the 16 districts of Tamil Nadu Scarcity of drinking water and crip failure seriously affiected the urban and rural areas of the State. The Government launched a massive relief and rehabilitation programme to alleviate the sufferings of the masses in the drought affiected districts. A Central Team which visited certain districts of the State was convinced of the very difficult conditions obtaining in various parts of Tamil Nadu. On its recommendation, the Government of India approved an expenditure of Rs. 48.90 crores on drought relief.

The State Government till about the end of December 1981, had incurred an expenditure of Rs. 55.24 crores on drought relief operations. A Committee constituted with leaders from all political parties to supervise the drought relief works proved very helpful.

Hundreds of bore wells sunk at various places through different Government agencies ensured easy supply of drinking water in the drought affected district. They way in which the drought situation in the State was handled by the Government, is a matter of which it can legitimately be proud. Apart from providing immediate relief to the drought stricken people, the works executed added permanent assets to the State in the from of drinking water sources, improvements to roads, irrigation tanks, etc.

3. Even though the droughts persisted throughout a major portion of the year of 1981, the State Government ensured adequate availability of foodgrains through an effect public distribution system. The State Government has been requesting throughout this period for a greater allocation of foodgrains from the Government of India through the Food Corporation of India. There were many practical difficulties in even the allotted quantity of rice reaching us. The State Government has been requesting the Government of India for an allocation of about 10,800 tonnes of wheat per month for distribution through public distribution system. However, the allocation has been only if the order of 4,000 tonnes per months. Further the Government of India reduced the allocation of wheat, for manufacture of wheat products, to roller flour mills in the State from 65,000 tonnes to 30,000 tonnes.

4. The offtake of rice which was of the order of 25,000 tonnes in the month of January shot up to 79,000 tonnes per month subsequently. To meet the accelerated public demand, the State Government ordered procurement of foodgrains, not only from within the State but also from other States through open market purchases. The services of the co-operatives were also utilised for buying foodgrains. Owing to all these concerted moves, the Government was able to tide over the difficulties on the food front during the drought period.

5. Inspite of these difficult conditions, developmental works have been going on at a rapid rate in the State. While the approved Plan outlay for the current year is Rs 514 crores, it is expected to exceed Rs. 600 crores even after excluding the expenditure on drought works. The State Government has drawn up an ambitious



Plan programme to the tune of about Rs. 711 crores for the next financial year. The performance of the State Government in Plan implementation has been so commendable that the Union Planning Commission approved the outlay almost as proposed by the State Government.

6. Agriculture continues to receive special attention of the Government. In order to achieve early and sustained increase in agricultural production, the Training and Visit System has been introduced in eight districts with effect from 1st September 1981 and the remaining districts will be covered from 1st July 1982. This is a project assisted by World Bank for a duration of five years and costing about Rs.36 crores. The agricultural extension staff under the scheme will be given special training and they in turn, will provide upto date and systematic advice on farming practices to the agriculturists. The marketing of agricultural produce is being taken care of by increased construction of rural godowns and intergrated development of regulated markets. The Government has a proposal for starting integrated development of agricultural marketing with World Bank aid at a cost of Rs. 102 crores. The scheme involves upgrading of the existing regulated markets including storage godowns, opening of new regulated markets and markets for perishable goods and provision of warehousing and processing facilities. The project report is now pending with the Government of India.

7. With a view to co-ordinate the activities of the agricultural market committees, the Government has decided to give statutory status to the State Agricultural Marketing Board by amending the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. Encouragement has also been given for dairy development, poultry and other animal husbandry activities. In order to augment the production of edible oils and to stabilise prices, the Tamil Nadu Co-operative Oilseeds Growers' Federation has been started during this financial year with the assistance of the National Dairy Development Board. The intention is to step up oilseeds production mainly by increasing the area under irrigated oilseed crops. Further, large scale production and distribution of quality coconut seedlings are also being continued with a view to achieve a breakthrough in edible oil production. The Government has decided to distribute, free of cost, one cocount seedling each to the poor who are given house-site pattas.

8. The Government's efforts to reduce the debt burden of agriculturists have been continued during the current financial year. The Government had decided on waiver of normal and penal interest on short-term agricultural loans to small farmers, who repaid the short-term agricultural loans in full before 30th June 1981. The Government had also agreed to refund the normal and penal interest paid after 1st April 1980 on short-term loans. Further, the penal interest on short-term loans to othed farmers who repaid the principal in full with normal interest before 30th June 1981 was also to be waived. Though all these facilities were available only upto 30th June 1981, the Governmnet with a view to help the agriculturists, extended the period upto 31st December 1981. By the extension of these concessions, lakhs of farmers have benefited.

9. Over the last few years, the Government has introduced progressive land reform measures to help the agriculturists. In pursuance of this policy, the State Legislature had passed the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1980 and had sent it to the Government of India for the assent of the President. The intention of passing of this Bill was to unearth transfers of lands effected between 1st January 1958 and 6th April 1960 which were done with a view to circumvent the proposed legislation on land ceiling. It was felt that consequent on this Bill becoming an Act, surplus lands would be available for distribution among landless agricultural persons. Unfortunately, the Presidents's assent for this Bill has been withheld. The reasons for withholding the assent have not yet been communicated to the State. The State Government's aspirations to help numerous landless labourers by allotting these surplus lands have not been fulfilled as a result of the w ithholding of the assent to this Bill.

10. Under the scheme of updating registry started from 1st June 1979, a large portion of the work covering about 72,000 square kilometres still remains to be completed. As this scheme is beneficial to the agriculturists, in that they would correctly get to know their rights and would help them to get loans from financial institutions easily, the Government has decided to launch a crash programme to complete the scheme within two to three years.

11. This Government is deeply concerned over the steep rise in the prices of essential commodities required for the daily use of the people The problem of prices is interlinked with the general



economic policies of the country as a whole and it is the finding of economic experts that the solution to the problem of prices can essentially be found only by the Central Government. At the same time, the State Government is anxious to play its part in bringing down the prices. One aspect of the problem is that the cultivators should get a reasonable return which bears relation to the cost of cultivation. Another aspect of the problem is that the essential commodities should be available to the common man at reasonable prices. If these two interests are to be reconciled, it is imperative that intermediaries who indulge in commercial speculation are eliminated. Only under a system where all the producers come together in a co-operative set up, themselves undertake the responsibility of distribution and sale and share the profits that accrue, will we be able to ensure a situation, where the producer will not have to suffer a loss and the consumer will not have to undergo harassment. If we have to succeed in this, trade in essential commodities, which is largely in the hands of private dealers, should come under the co-operative fold. Endeavours will be made in the coming year to set up 'growers' co-operative sales societies to achieve these objectives.

12. The self-sufficiency scheme which is designed to help the rural population is under implementation for the past two years now. During the current financial year, works are in progress in 150 blocks, after sucessfully implementing the scheme in 69 blocks as a first phase during 1980-81. In these 219 blocks, assets worth Rs. 136 crores will be created by the end of this financial year. About 18,000 kms. of link roads, 25,000 houses for Adi-dravidars, 2,717 school buildings will be completed in these 219 blocks. The remaining 159 blocks will be covered during the next financial year. In view of the benefits to the people from this scheme, the Government has decided to implement the self-suffciency scheme in town panchayats and municipalities in the coming years. Perparatory steps have been taken in this regard.

13. Agricultural development is closely associated with power. The power position started improving from June 1981 consequent to a favourable monsoon and power cut was lifted on 25th June, 1981. Peak demand restrictions on L.T. urban industries, grouping restrictions on rural loads|agricultural consumers and peak hour restrictions on H.T. non-continuous process industries were removed from 1st August 1981. This is the first time when all these restric-

tions have been removed in toto; in previous years one restriction or other was always in force. The Storage position in the hydel reservoirs is fairly comfortable, as a result the prospects of hydel power generation are likely to be good. The power position during the next few months till the onset of south-west monsoon is expected to be better than that during the corresponding period of 1981.

14. Generation of hydro-electric power has been tapped almost to the full extent possible in Tamil Nadu. The scope for further increase is very limited. This has forced the State Government to go in for the costly process of power generation through thermal sources. These schemes are capital intensive and it will be very helpful if the Government of India gives financial assistance to the State for starting them as it will be very difficult for the State Government to finance from its own resources thermal projects on any big scale. The Government of India has indicated during the discussions in the Power Minister's Conference held in November last year, the acceptance in principle of the State starting new thermal schemes and also of expanding certain existing project. The setting up of a thermal station at North Madras (5 X 210 MW.), extension of Mettur Thermal Project (2 X 210 MW) and expansion of Tuticorin Project (1 x 210 MW. X 1 X 500 MW) are the schemes under consideration.

15. As mentioned earlier, the State Government has utilised almost all possible sources of hydel power and is also considering various schemes for thermal power generation. In view of the difficulties involved in transport of coal over long distances for the thermal plants, the State Government has suggested that a second atomic power station may be set up in Tamil Nadu. It has also suggested Kudankulam in Tirunelveli district as one of the suitable sites for setting up the plant. We hope that the committee set up by the Government of India to select the site will soon take a favourable decision. Government is examining possibilities of putting up an integrated power and desalination plant to provide potable water and utilise thermal energy released in the process to generate electricity.

16. The State Electricity Board is having very serious financial difficulties. This has been mainly due to the poor financial returns. Time and again the Union Planning Commission has been urging the State Government to revise electricity tariff which is one of the lowest in the country. The Planning Commission has emphasised



that unless the financial resources of the State Electricity Board are strengthened, modernisation of equipment, implementation of plan projects and maintenance of the existing installations and transmission lines would suffer very badly. Increased power generation is essential for development of Agriculture, Industry and Commerce. This can be done only if the resources of the Electricity Board are improved through higher returns, which in turn, can be achieved only by the revision of electricity tariff. The State Government has been assisting the Electricity Board through a heavy dose of financial assistance running to hundreds of crores or rupees in the last few years, to keep the activities of the Electricity Board at a reasonable level. But it will be impossible for the Government to continue the financial assistance indefinitely because it is bound to have serious adverse effects on implementation of plan programmes and other developmental activities. Particularly when the input cost is using regularly every year as a result of the Government of India increasing the railway freight and oil price, apart from imposing higher taxes on various commodities needed by the Electricity Board, the State Government is left with no alternative except to revise the existing low electricity tariff. The Government has decided to permit private industrialists to take up generation of power for their own consumption. The Government would also like to consider any proposal for generation of power by private enterpreneurs, if it can be done profitably.

17. The dispute relating to the sharing of Cauvery waters has still not been resolved. On the suggestion of the Government of India, bilateral talks have been held between Tamil Nadu and Karnataka on this issue. But unfortunately, the talks have not been conclusive. It is hoped that Government of India would use their good offices to find a fair and equatable solution to this long standing issue. Recently, the Government of India have decided to hold discussions to resolve this problem. The Government hopes that a final and equatable decision would be taken in this conference as a result of the discussions and that the quantity of water now used for irrigation in Tamil Nadu would be assured. The State Government will also continue to request the Government of India to act early on the recommendations of the Technical Committee constituted by them to examine the feasibility of diversion of surplus of waters of the west-flowing rivers in Kerala to provide irrigation facilities to Tamil Nadu.

18. While the inter-State river problems are pending settlement the State Government is doing its utmost to improve irrigation facilities within Tamil Nadu. Since the major portion of surface irrigation potential has been utilised the emphasis is now on modernisation of irrigation systems for which an outlay of Rs. 48.59 crores exists in the sixth plan. Around Rs. 12 crores are also expected to be spent on special minor irrigation programme and desilting-cum-reclamation schemes during the Sixth Plan period. While everything possible has been done to put the available water to maximum use, the State Government is exploring the possibilities of diverting to the dry areas of Pudukkottai and Ramanathapuram districts, the flood waters in certain seasons now flowing into the sea. Investigations have already been started by the Public Works Department in this regard.

19. For the rapid development of industries in the State, special programmes and incentives have been evolved recently to attract estabilshment of new industrial units in Tamil Nadu. The Industries Minister recently visited the States of Maharashtra and Gujarat for explaining to the entrepreneurs in those areas, about the availability of various incentives, skilled manpower, infrastructural facilities, etc, in Tamil Nadu. The Government has also announced special concessions to facilitate the growth of industries. The existing ceiling on interest-free sales tax loans to industries has been increased form Rs. 50 lakhs to Rs. 1 crore. Industrial complexes are being developed at Cuddalore, Pudukkottai, Manamadurai. Tuticorin and Gummudipoondi where new industrial units will enjoy the facility of exemption from power cut for the first five years. A subsidy is also being given for creation of new assets in the field of Electronics, Drugs and ancillary automobile industries. It is hoped that these attractive concessions would enthuse industrialists to start new ventures in Tamil Nadu.

20. In order to equip the educated persons better for employment, the Government has been implementing schemes giving importance to technical education. In the current financil year, an Engineering College has been established at Tirunelveli and Six Polytechnics have started functioning in various parts of the State. During the Bharathi Centenary celebrations, the Government has announced its decision to set up a Polytechnic for Women in Ettayapuram area in Tirunelveli district. These technical institutions would provide necessary infrastructure for industrial development in Tamil Nadu.



21. Apart from the importance given to technical education, the State Government is also encouraging general education. Legislations for constituting Bharatiar University at Coimbatore and Bharathidasan University at Tiruchirappaiil have been passed and the assent of the President has also been obtained for these Acts. Preliminary action for acquisition of land and for identifying the various requirements of the Universities has already been started. As Honourable members are aware, a Tamil University hae been inaugurated on the 15th of September, 1981 at Thanjavur. It is also proposed to start a Woment's University in Tamil Nadu. The Government is taking steps to start a University at Karaikudi as promised by Late Anna combining all the educational institutions there.

22. In consonance with Arignar Anna's two language formula, the Government has been taking active steps to establish Tamil as the official language and adopt the language in all the wings of the Government. In pursuit of this policy, the Government has ordered that from today all judgements, decrees and orders in Civil Courts will be written in Tamil.

23. The recent under-sea archaeological exploration conducted by the State Archaeological Department in collaboration with the National Institute of Oceanography off the coast of Kaveripoompattinam has yielded interesting results. The survey which extended upto Tranquebar (Taranganpadi) seems to suggest that there are buildings and ship wrecks at Poompuhar and Vanagiri areas, lying submerged under the sea. It is proposed to continue this survey.

24. The State Government will be launching from coming academic year, a massive screening programme to detect the incidence of leprosy among school—going children. At the time of admission to schools, children will be checked up for any incidence of this disease and suitable curative meansures will be taken.

25. In pursuance of the progressive labour policy of this Government, a number of legislative measures were introdoced for the benefit of the workers. The Minimum Wages (Tamil Nadu Amendment) Act, 1981 came into force on 1st Ortober 1981. The Tamil Nadu Payment of Subsistence Allowance Act, 1981 and the Tamil Nadu Industrial Establishments (Conferment of Permanent Status to Workmen) Act, 1981 came into force with effect from 1st January 1982. The Tamil Nadu Handloom Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Act,

1981 will also be brought into effect as soon as the rules are finalised. For the Industrial Disputes (Tamil Nadu Amendment) Bill, 1981, the President's assent is awaited. The State Government proposes to extend Employees' State Insurance Scheme to the districts of Dharamapuri and the Nilgiris and widen its coverage in some other areas.

26. For improving the socio-economic conditions of the Adi-Dravidars, the Government is implementing the Special Component Plan since 1980—81. During the last financial year, the size of the Plan was of the order of Rs. 71.64 crores and in the current year it is Rs. 83.04 crores and during the next financial year it will be Rs. 114.04 crores. About 1.67 lakhs of Adi Dravidar families will be covered during the next financial year. Under Special Central Assistance, income generating schemes for Adi-Dravidars are being implemented. During the last financial year, the sum earmarked was Rs. 9.56 crores while during the current financil year it is expected to be Rs. 10 crores. During 1982—83, the Special Central Assistance is likely to be of the order of Rs. 15 crores. Apart from socio-economic measures for improving the life-style of Adi-Dravidars, the Government also establishing special courts to try offences against Adi-Dravidars under the P.C.R Act. The Government is firmly resolved to improve the living conditions of the Adi-Dravidars in the State through various schemes as mentioned above.

27. Many schemes for the benefit of the Backward Classes are now under implementation in Tamil Nadu. Apart from educational concessions, measures have also been taken for their economic development. The Government has recently formed the Backward Clasess Economic Development Corporation to finance schemes and trade activities taken up by them. During last year, the Government had announced that preference would be given to widows in indigent circumstances for employment in medical institutions. Seats have also been reserved in professional and arts Colleges for them. A proposal to give suitable preference for admission in educational institutions and in employment to the children born of inter-caste marriages is now under consideration. During last year, which was the year of the physically handicapped, various schemes for the benefit of physically handicapped had been started. Certain specific posts in Government and Local Body institutions have been reserved for the physically handicapped persons. They have been



accorded suitable priority for sponsorship by the employment exchanges against State Government vacancies. Three per cent of vacancies in public services and educational institutions have been reserved for the physically handicapped. Though the year of the physically handicapped is over, schemes for their welfare will continue to be implemented.

28. With the intention of holding the elections to Panchayats early, the Government had made arrangements for conducting them by the end of January this year. After consulting leaders of all political parties, the Government had taken a policy decision to reserve the seats for Adi-Dravidars and women and a suitable Ordinance was promulgated. As a result of the stay granted by the High Court on certain Writ Petitions, the elections could not be held. As soon as the Court clearance is obtained, the Government is ready to conduct the elections.

29. The development Schemes implemented by this Government in the last few years contain many programes like expension of irrigation facilities, increasing the production of oilseeds, implementation of land ceiling laws and compilation of land records, implementation of programmes for development of Scheduled Castes and Scheduled Tribes, maximisation of power generation, augmentation of primary health care facilities, control of leprosy, implementation of programmes for the welfare of women and expansion of public distribution system all of which form part of the twenty point programme recently announced by the Prinme Minister of India. The State Government welcomes this twenty point programme which aims at improving the condition of the poorer and weaker sections of the Society. This Government will give all its support to the Government of India in the active implementation of this programme.

30. The law and order situation in the State has been satisfactory. The activities of extremists have been curbed and the anti-social elements have been kept under control. The Government has started various projects for the welfare of policemen. Construction of house for Policemen through the Police Housing Corporation is one of these projects. About 150 acres have been taken possession initially in Navalapattu village in Tiruchirappalli district, where about 700 houses will be constructed. Suitable lands in other parts of the State are also being located by the Police Housing Corporation for putting up additional houses for the Policemen. A new scheme has been introduced during pongal this year for Award of

[1982 பிப்ரவரி 2

the Chief Minister's Police Medals to Constables and Head Constables who have rendered meritorious services. About 1,500 Police Constables and Head Constables will benefit from this Schemes, which provides for the award of a medal and a monthly allowance.

31. As mentioned by me earlier, the State has gone through a trying period because of the severe drought during the last year But the situation is changing now, due to favourable monsoons which have helped in filling up the various tanks and reservoirs throughout the State, excepting a few isolated pockets. My Government has been doing its best through various socio economic policies to improve the living conditions of the people of the State.

32. I hope the deliberations of this House will be useful and constructive and constribute to the progress of the State. I wish you success in your endeavours.

Vanakkam

## இணைப்பு III.

(.............-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு ஆளுநர் திரு. சாதிக் அலி அவர்கள் தமிழ்நாடு சட்ட மன்றக் கூட்டு அவையில் 1982-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ம் நாள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

1982 ஆம் ஆண்டின் முதல் கூட்டு அவைக்கு உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

நான் சென்றமுறை சட்டமன்றக் கூட்டு அவையில் உங்கள் முன் உரையாற்றியபோது, வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் உலகத் தமிழ் மாநாடு, மதுரையில் வெற்றிகரமாக நடந்து நிறைவு பெற்றிருந்த பெருமிதத்தில் நாம் அனைவரும் திளைத்திருந்ததை நினைவு கூர்வீர்கள். தணியாத நம் தமிழ் ஆர்வத்திற்கும், மாறாக நம் மொழிப் பற்றிற்கும் சான்றாகத் திகழ்ந்தது அம் மாநாடு. நம் மொழிப் பற்று கனிந்து நாட்டுப் பற்றோடு இரண்டறக் கலப்பதை நிலைநிறுத்தும் வகையில் இந்த ஆண்டு, நாம் தேசியக் கவி சுப்பிரமணியபாரதியின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஆண்டு முழுவதும் ஆர்வமூட்டும் வகையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம். சுதந்திரம், சமத்துவம், உடன்பிறப்புணர்வு ஆகியவற்றை அடிநாதமாகக் கொண்டு பாரதியார் நமக்குப் படைத்துத் தந்த பாடல்கள்,



1982 பிப்ரவரி 2]

சாதி, சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட புதியதொரு சமுதாயத்தைப் படைக்கும் வீறார்ந்த உறுதியை நமக்கு ஊட்டுகின்றன. பாரதியார் நூற்றாண்டை நாட்டின் ஒருமைப்பாட்டின் ஆண்டாகக் கொண்டாடத் தமிழக அரசு முடிவு செய்து, ஆக்கபூர்வமான இந்த ஆலோசனையை மத்திய அரசின் முன்னும் வைத்துள்ளது. நம் மாநிலத்தில் ஊராட்சி ஒன்றிய மட்டத்திலிருந்து, தலைநகர் வரையிலும், நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும், கடல் கடந்து அயல் நாடுகளிலும், பாரதிக்கு விழா எடுத்து, அவர் கண்ட பாரதத்துக்கு அஞ்சலி செலுத்தும் பணியின் முன்னணியில் தமிழ்நாடு நிற்பது நம் அனைவருக்கும் மன நிறைவு அளிப்பதாகும்.

2. பருவ மழை பொய்த்ததன் காரணமாக, புதுக்கோட்டை, வடார்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் வறட்சி நிலை இருந்து வந்ததை எனது சென்ற ஆண்டு உரையில் குறிப்பிட்டேன். ஆனால், தமிழ் நாட்டில் மொத்தமுள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்களிலே வறட்சி நிலை அந்த ஆண்டில் நாளடைவில் பரவியது. குடி தண்ணீர் தட்டுப்பாடும் பயிர் விளைச்சல் குறைந்துபோனதும் இம்மாநில நகர்ப் பகுதிகளையும், கிராமப் பகுதிகளையும் பெரிதும் பாதித்தன. வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் மக்களின் துயரத்தைப் போக்கத் துயர் தணிப்பு-மறுவாழ்வு திட்டத்தைப் பெரிய அளவில் அரசு மேற்கொண்டது. இம்மாநிலத்தின் சில மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்த மத்திய அரசின் குழு, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவிவந்த மிகச் சிரமமான நிலைமைகளை நன்குணர்ந்து பரிந்துரை செய்ததன் பேரில், வறட்சித் துயர் தணிப்பிற்காக 48·90 கோடி ரூபாய் செலவிடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. வறட்சித் துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 1981 டிசம்பர் இறுதி வரை இம்மாநில அரசு 55.24 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. வறட்சித் துயர் தணிப்புப் பணிகளை மேற்பார்வையிட ஆங்காங்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் துயர் தணிப்புப் பணிகள் செம்மையாக நடக்கப் பெரிதும் உதவின. அரசின் பல்வேறு துறைகள் மூலம் பல இடங்களிலும் ஏராளமான ஆழ்துளைக் கிணறுகளை உருவாக்கியது, வறட்சிப் பாதிப்பு மாவட்டங்களில் குடி தண்ணீர் எளிதில் கிடைப்பதை உறுதிப்படுத்தியது. இம்மாநிலத்தில் இருந்த வறட்சி நிலையை இவ்வரசு நல்ல முறையில சமாளித்தது பற்றி இவ்வரசு பெருமை கொள்ள முடியும். வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகத் துயர் தணிப்பு அளித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட பணிகள், குடிநீர் ஆதாரங்கள், சாலைகள் மேம்பாடு, பாசன ஏரி, குளங்கள் முதலிய நிலையான சொத்துக்களையும் ஏற்படுத்தின.

3. 1981 ஆம் ஆண்டில் பெரும்பாலான பகுதியில் வறட்சி நிலை நீடித்ததென்றாலும் திறமையான பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம், உணவு தானியங்கள் போதிய அளவில் கிடைப்பதை மாநில அரசு உறுதி செய்தது. இந்திய உணவுக் கழகத்தின் மூலம் இன்னும் அதிக அளவில் உணவு தானியங்களை ஒதுக்கிக் கொடுக்குமாறு மத்திய அரசை இம்மாநில அரசு தொடர்ந்து வேண்டிக் கொண்டு வந்திருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவுகூட நமக்கு முழுவதும் வந்து சேர்வதில் நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. பொதுப்பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக திங்கள் ஒன்றுக்கு 10,800 டன் கோதுமையை ஒதுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டு வருகிறது. எனினும், மத்திய அரசு 4,000 டன் கோதுமையை மட்டும் ஒதுக்கி வருகிறது. மேலும் கோதுமைப் பொருட்களைத் தயாரிப்பதற்காக மாநிலத்தில் உள்ள உருளை மாவு ஆலைகளுக்கு ஒதுக்கும் கோதுமையின் அளவையும் மத்திய அரசு 65,000 டன்னிலிருந்து 30,000 டன்னாகக் குறைத்தது.

4. பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம் சனவரித் திங்களில், 25,000 டன் அரிசி மட்டுமே பொது மக்கள் வாங்கியிருக்க அதன் பின் இந்த அளவு, திங்கள் ஒன்றுக்கு 79,000 டன்னாய் உயர்ந்தது. பொது மக்களின் இத்தேவையை ஈடு செய்ய இம்மாநிலத்தில் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதுடன் மட்டுமின்றி, வெளி மாநிலங்களிலும் உணவு தானியங்களைப் பொதுச் சந்தையின் மூலமும் விலைக்கு வாங்க இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டது. உணவு தானியங்களை விலைக்கு வாங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. இவ்வாறு பற்பல நடவடிக்கைகளை ஒருமித்து எடுத்ததன் மூலம், வறட்சிக் காலத்தில் உணவு முறையில் இருந்த இடர்ப்பாடுகளை நீக்க இயன்றது.

5. இம்மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. நடப்பாண்டுக்கு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் 514 கோடி ரூபாய் அளவினதாக இருந்தபோதிலும், வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் நீங்கலாக 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படும் நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டுக்கு 711 கோடி ரூபாய் அளவிலான பெருந் திட்டத்தை இவ்வரசு தீட்டியுள்ளது. நடப்பாண்டுத் திட்டத்தை இம்மாநில அரசு போற்றிப் பாராட்டும் வகையில் நிறைவேற்றியுள்ள காரணத்தால், அடுத்த ஆண்டுக்கு என இம்மாநில அரசு தீட்டியுள்ள திட்டத்தைக் கிட்டத்தட்ட அது கேட்ட அளவுக்கு மத்திய திட்டக் குழு ஒப்புக்கொண்டுள்ளது.

6. இம்மாநில அரசு, வேளாண்மைக்குத் தொடர்ந்து உரிய சிறப்பிடத்தை அளித்து வருகிறது. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் விரைந்தும் தொடர்ந்தும் இருக்கச் செய்யும்



பொருட்டு, இம்மாநிலத்தில் எட்டு மாவட்டங்களில் "பயிற்சி-பார்வையிடல் திட்டம்" 1981 செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மாவட்டங்களில் இத்திட்டம் 1982 சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். இத்திட்டம் சுமார் 36 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியுடன் ஐந்து ஆண்டுகளில் செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் செயலாற்றும் வேளாண்மை விரிவாக்கப் பணியாளருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். சிறப்புப் பயிற்சி பெற்ற இப்பணியாளர், பண்ணை நடைமுறைகள் குறித்த புதிய, முறைப்படியான ஆலோசனைகளை உழவர்களுக்கு அளிப்பர். வேளாண்மை விளைபொருள் விற்பனைக்கு வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, கிராமக் கிடங்குகள் அதிக எண்ணிக்கையில் கட்டப்படுவதுடன், ஒழுங்குமுறை அங்காடிகளும் ஒருங்கிணைந்த வகையில் மேம்படுத்தப்படும். உலக வங்கியின் உதவியுடன் 102 கோடி ரூபாய் செலவில் வேளாண்மைப் பொருள் விற்பனையை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் திட்டம் ஒன்றை இவ்வரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குகள் உட்பட, இப்போதுள்ள ஒழுங்குமுறை அங்காடிகளின் தரத்தை உயர்த்துவது, விரைவில் அழுகும் பொருள்களுக்கு அங்காடிகள் ஏற்படுத்துவது, ஒழுங்குமுறை அங்காடிகளைப் புதிதாகத் தொடங்குவது, கிடங்கு வசதி, பதப்படுத்தும் வசதி அளிப்பது ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். திட்ட அறிக்கை இப்போது மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

7. வேளாண்மை விளைபொருள் விற்பனைக்குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக, தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தைத் திருத்தி, மாநில வேளாண்மைப் பொருள் விற்பனை வாரியத்தைச் சட்ட முறைமையானதாக அமைப்பதென மாநில அரசு முடிவு செய்துள்ளது. பால் பண்ணை வளர்ச்சி, கோழி வளர்ப்பு ஏனைய கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்பட்டுள்ளன. சமையல் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி, விலைகளை நிலைப்படுத்த, தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் இந்த நிதி ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. பாசனம் பெறும் எண்ணெய் வித்துப் பயிர்கள் விளைவிக்கப்படும் பரப்பளவைப் பெருக்குவதன் மூலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. சமையல் எண்ணெய் உற்பத்தியை மேலும் உயர்த்தும் பொருட்டு, சிறந்த வகைத் தென்னங்கன்றுகளைப் பெரும் அளவில் உற்பத்தி செய்வதும் வழங்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஏழை எளிய மக்களுக்கு வீட்டு

மனைப்பட்டா வழங்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங்கன்றை இலவசமாக வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

8. உழவர்களின் கடன் சுமையைக் குறைப்பதற்காக நடப்பு நிதி ஆண்டிலும் தொடர்ந்து அரசு முயற்சிகளை மேற்கொண்டது. குறுகிய காலக் கடன் வாங்கியுள்ள சிறு உழவர்கள் அக்கடன் முழுவதையும் 30—6—1981 தேதிக்குள் திருப்பிச் செலுத்திவிட்டால், அவர்கள் அக்கடனுக்குச் செலுத்த வேண்டிய சாதாரண வட்டியையும் அபராத வட்டியையும் செலுத்த வேண்டாமெனத் தள்ளிவிடுவது என்று அரசு முடிவு செய்தது. குறுகிய காலக் கடனுக்குரிய சாதாரண வட்டியையும் அபராத வட்டியையும 1—4—1980-க்குப் பின்னர் செலுத்தியிருந்தால் அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடவும் அரசு ஒப்புக்கொண்டது. பிற உழவர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய காலக் கடனுக்குரிய அபராத வட்டி அந்த உழவர்கள் கடன் தொகை முழுவதையும் சாதாரண வட்டியுடன் 30—6—1981-க்குள் திருப்பிச் செலுத்திவிட்டால் தள்ளுபடி செய்யப்படும். இவ்வசதிகள் அனைத்தும் 30—6—1981 வரைதான் இருக்குமென விதி இருந்தபோதிலும், உழவர்களுக்கு உதவும் பொருட்டு, இத்நாளை இவ்வரசு 31—12—1981 வரை நீட்டித்தது. இந்சலுகைகளினால், பல இலட்சக்கணக்கான உழவர்கள் பயன் பெற்றனர்.

9. கடந்த சில ஆண்டுகளாகவே, உழவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, முற்போக்குக் கருத்துள்ள நிலச் சீர்திருத்த சட்டங்களை இவ்வரசு கொண்டு வந்துள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில், இம் மாநிலச் சட்ட மன்றம் நிறைவேற்றிய தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட வரைவு குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நில உச்ச வரம்பு குறித்து முன்பு உத்தேசித்திருந்த சட்டத்தை ஏமாற்றும் பொருட்டு 1958 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நில உரிமை மாற்றங்களை வெளிப்படுத்துவதே இச்சட்ட வரைவின் நோக்கமாகும். இச்சட்ட வரைவு சட்டமாகி விட்டால், உபரியாகக் கிடைக்கும் நிலங்களை நிலமற்ற உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கலாமெனக் கருதப்பட்டது. ஆனால், நமது எண்ணத்திற்கு மாறாக, இச்சட்ட வரைவுக்குக் குடியரசுத் தலைவரின் இசைவு தரப்படவில்லை. அதற்கான காரணங்கள் மாநில அரசிற்கு இது வரையில் அறிவிக்கப்படவில்லை. சட்ட வரைவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், இந்த உபரி நிலங்களை நிலமற்ற உழவுத் தொழிலாளர் ஏராளமானவர்களுக்குப் பகிர்ந்தளித்து அவர்களுக்கு உதவி செய்யலாமென்ற இவ்வரசின் எண்ணம் ஈடேறவில்லை.





10. நிலப் பதிவேடுகளில் நில உரிமையாளர், குத்தகைதாரர் முதலிய விவரங்களை நாளது வரை எழுதிவைக்கும் திட்டம் 1979 ஜூன் 1 ஆம் தேதியன்று தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் 72,000 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள நிலம் குறித்த பெரும் பணி இன்னும் செய்து முடிக்கப்படாமல் உள்ளது. இந்தத் திட்டம் உழவர்களுக்குப பயன் விளைவிக்குமாதலால் அவர்கள் தங்கள் உரிமைகளைச் சரியாக அறிந்துகொள்ளவும் நிதி, உதவி நிறுவனங்களிடமிருந்து அவர்கள் எளிதில் கடன் பெறவும் உதவுமாதலால்- இத் திட்டத்தை இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிப்பதற்கான விரைவுத் திட்டம் ஒன்றை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

11. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப் படும் இன்றியமையாப் பொருட்களின் விலைவாசிகள் உயர்ந்துவரும் போக்கினைக் கண்டு இந்த அரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது. விலைவாசிப் பிரச்சினை நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுடன் பின்னிப்பிணைந்து நிற்பதால், இக்கொள்கைகளை வகுக்கும் உரிமை பெற்றிருக்கும் மத்திய அரசே விலைவாசிப் பிரச்சினைக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காண முடியும் என்பது பொருளாதார வல்லுநர்கள் கண்ட முடிவு. அதே சமயத்தில், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தனக்குரிய பங்கை ஏற்பதில் மாநில அரசும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது குறிப்பாக, விவசாயப் பெருமக்களுக்கு, சாகுபடிச் செலவுக்கு ஏற்ப, நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பது இப்பிரச்சினையின் ஒரு பகுதி. இன்றியமையாப் பொருட்கள் நயமான விலைக்குப் பொதுமக்களாகிய நுகர்வோருக்குக் கிடைக்க வேண்டும் என்பது இப் பிரச்சினையின் மறு பகுதி. இவ்விரு சாரார் நலனையும் ஒருங்கிணைக்க வர்த்தகக் சூதாட்டங்களில் ஈடுபடும் இடைத் தரகர்களை அகற்றுவது அவசியமாகும். உற்பத்தியாளர்கள் கூட்டுறவு அமைப்பில் ஒன்று கூடி, விநியோகப் பொறுப்பையும் விற்பனைப் பொறுப்பையும் தாங்களே ஏற்றுக்கொண்டு, அதில் கிடைக்கும் இலாபத்தையும் தங்களிடையே பகிர்ந்துகொள்ளும் ஒரு முறை உருவானால்தான், உற்பத்தியாளர்களுக்கு நட்டம் இல்லாத நிலையும், நுகர்வோருக்கு இன்னல் ஏற்படாத நிலையும் உருவாகும். இதில் வெற்றி காணவேண்டுமென்றால், பெரும்பாலும் தனியார் கையிலுள்ள இந்த இன்றியமையாப் பொருட்களின் வர்த்தகம், கூட்டுறவு அமைப்பின் வசம் வரவேண்டும். இந்த நோக்கத்தோடு, "உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை" அமைக்க வரும் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

12. கிராம மக்களுக்கு உதவும் தன்னிறைவுத் திட்டம் தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. 1980—81-ல் முதல் கட்டமாக 69 வளர்ச்சி வட்டா

ரங்களில் இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திய பின்னர், நடப்பு நிதி ஆண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த 219 வளர்ச்சி வட்டாரங்களில் இந்த நிதி ஆண்டு முடிவிற்குள் 136 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலையான சொத்துக்கள் ஏற்படுத்தப்படும். இந்த 219 வளர்ச்சி வட்டாரங்களில் 18,000 கி.மீ. இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும்; ஆதி திராவிடர்களுக்காக 25,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்; 2,717 பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். எஞ்சியுள்ள 159 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். இத் திட்டத்தினால் மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மையைக் கருத்தில் கொண்டு, பேரூராட்சிகளும் நகராட்சிகளும் தன்னிறைவு அடையும் வகையில் ஒரு திட்டத்தை வரும் ஆண்டுகளில் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆயத்த நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொண்டுள்ளது.

13. வேளாண்மை வளர்ச்சியில் மின் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பெரும் பங்கு உண்டு. சாதகமான பருவநிலை காரணமாக 1981 ஜூன் முதல் மின்விசை நிலைமை சீரடையத் தொடங்கி, 1981 ஜூன் 25 ஆம் நாளில் மின்வெட்டு நீக்கப்பட்டது. குறைந்த மின் அழுத்தத் தொழில்கள் மீதான உச்சத் தேவைக் கட்டுப்பாடுகள், கிராமப்புற மின்சுமை மீதான கட்டுப்பாடுகள், வேளாண்மைக்கு மின் விசையைப் பயன்படுத்துபவர்கள் தொடர்பான தொகுதிக் கட்டுப்பாடுகள், இருபத்து நான்கு மணி நேரமும் தொடர்ந்து செயல்பட வேண்டிய நிலை அல்லாத தொழில்களுக்கு உயரழுத்த மின்சாரத்தின் மீதான உச்ச நேரக் கட்டுப்பாடுகள் 1981 ஆகஸ்டு முதல் நாளிலிருந்து நீக்கப்பட்டன. இக்கட்டுப்பாடுகள் அனைத்தும் ஒரேயடியாக நீக்கப்பட்டமை இதுவே முதல்முறையாகும். முந்தைய ஆண்டுகளில் ஒன்று அல்லது பல கட்டுப்பாடுகள் செயலில் இருந்தன. புனல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு போதுமானதாக இருக்கிறது. இதனால் புனல் மின்விசை உற்பத்தி வாய்ப்புகள் போதிய அளவு திருப்திகரமாக இருக்கும். தென் மேற்குப் பருவமழை தொடங்கும் வரை அடுத்த சில மாதங்களுக்கு மின்விசை நிலைமை 1981 ஆம் ஆண்டு நிகரான கால அளவில் இருந்ததை விடச் சீராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. தமிழ்நாட்டில் அதிக அளவு புனல் மின்விசை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை மேலும் அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. அனல் மின் ஆதாரங்கள் மூலம் அதிகச் செலவில் மின்விசை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாநில அரசு தள்ளப்பட்டுள்ளது. இத்



திட்டங்களுக்கு அதிக மூலதனச் செலவு ஆகும். பெரிய அளவிலான அனல் மின் திட்டங்களுக்கு மாநில அரசு தனது நிதி ஆதாரங்களிலிருந்து செலவு செய்வது கடினமானதால், மாநில அரசு அனல் மின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்குமானால் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற மின் விசை அமைச்சர்கள் மாநாட்டில் நடந்த விவாதத்தில் மாநில அரசு புதிய அனல் மின் திட்டங்களைத் தொடங்கவும், தற்போதுள்ள திட்டங்கள் சிலவற்றை விரிவுபடுத்தவும் மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. வட சென்னையில் (5 × 210 மெ.வா.) அனல் மின் நிலையம் தொடங்குதல், மேட்டூரில் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்தல் (2 × 210 மெ.வா) தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்தல் (ஒரு 210 மெ.வா + ஒரு 500 மெ.வா. திறனுடன்) ஆகியவை பரிசீலனையில் உள்ளன.

15. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவாறு, புனல் மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கான எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தியுள்ளது; அனல் மின் சக்தி உற்பத்திக்கான பல்வேறு திட்டங்களையும் அரசு ஆராய்ந்து வருகிறது. அனல் மின் நிலையங்களுக்காக நீண்ட தொலைவிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவருவதில் உள்ள இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் இரண்டாவது அணு மின் நிலையத்தை நிறுவும்படி மத்திய அரசை இவ்வரசு கோரியுள்ளது. அணு மின் நிலையத்தை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களில் ஒன்றாக, திருநெல்வேலி மாவட்டத்தில் கூடன்குளத்தைத் தெரிந்தெடுத்து மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இடம் தேர்ந்தெடுக்க மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள குழு, விரைவில் தன் முடிவுகளை அறிவிக்கும் என்றும், அம்முடிவு நமக்கு ஆதரவாக இருக்குமென்றும் எதிர்பார்க்கின்றோம். கடல் நீரைக் குடி நீராக மாற்றுவதற்கும். அப்போது வெளிப்படும் வெப்ப சக்தியைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற நிலையத்தை அமைக்கும் உத்தேசமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

16. மாநில மின்வாரியம் கடுமையான நிதிப் பற்றாக்குறையில் உள்ளது. செய்த முதலீட்டிற்குக் குறைந்த அளவு வருவாய் கிடைப்பதாலேயே இந்த நிலை உள்ளது. நாட்டிலேயே குறைந்த அளவு மின் கட்டணம் வசூலிக்கும் மாநிலங்களில் ஒன்றான நமது மாநிலத்தில் மின் கட்டண விதங்களைத் திருத்தி அமைக்குமாறு மத்திய திட்டக் குழு பலமுறை மாநில அரசிடம் வலியுறுத்தி வந்துள்ளது. மாநில மின் வாரியத்தின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தினாலன்றி, சாதனத்தை நவீனப்படுத்தல், திட்டப் பணிகளைச் செயல்படுத்தல், தற்போதுள்ள மின் நிலையங்களையும் மின்விசை கொண்டு செல்லும் மின் கம்பித் தொடர்

நாட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு இச் சலுகைகள் ஊக்கம் அளிப்பவையாக இருக்குமென நம்புகிறோம்.

20. படித்த இளைஞர்களிடையே வேலை வாய்ப்புகளுக்கான தகுதிகளை மேலும் அதிகரிக்கச் செய்ய, தொழில் கல்விக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துத் திட்டங்களைச் செயலாக்கி வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பொறியியற் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும் ஆறு பல்தொழில் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. அண்மையில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாவில் பெண்களுக்கெனப் பல்தொழில் பயிற்சி நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தில், எட்டையபுரம் பகுதியில் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு, இப்பயிற்சி நிலையங்கள் பெரிதும் வழிகோலும்.

21. மாநில அரசு தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் பொதுக் கல்விக்கு ஊக்கமளித்து வருகிறது. கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகத்தையும் திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தையும் அமைப்பதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரது ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும் பல்கலைக் கழகங்களின் பல்வேறு தேவைகளைக் கண்டறிவதற்கும் தொடக்க நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூரில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று தமிழ் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தமிழ் நாட்டில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கவும் அரசு கருதியுள்ளது. காரைக்குடியில் உள்ள கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, அமரர் அண்ணா உறுதி அளித்தவாறு, பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

22. அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றி ஒவ்வொரு துறையிலும் நடைமுறையில் தமிழ் மொழியை முழுமையாகப் பயன்படுத்தவும் தமிழை ஆட்சி மொழியாக நிலைநாட்டவும், அரசு முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்தக் கொள்கையின் அடிப்படையில், இன்று முதல் எல்லா உரிமை இயல் நீதிமன்றங்களிலும் தீர்ப்புகளும் ஆணைகளும் தமிழில் வரையப்படவேண்டும் என்று அரசு பணித்துள்ளது.

23. கடல் சார்ந்த ஆய்வினை மேற்கொள்ளும் தேசிய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மாநிலத் தொல்பொருளியல் துறை காவிரிப்பூம்பட்டினத்திற்கு அப்பாலுள்ள கடலுக்கடியில் அண்மையில் நடத்திய தொல்பொருள் ஆய்வு பயனுள்ள முடிவுகளை அளித்துள்ளது. தரங்கம்பாடிவரை நடத்தப்பட்ட ஆய்



விலிருந்து பூம்புகார், வானகிரி பகுதியில் கடலுக்கடியில் கட்டிடங்களும், மூழ்கிப்போன கப்பல்களும் புதைந்து கிடக்கின்றன என்பதாகத் தெரியவருகிறது. இந்த ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

24. பள்ளிக் குழந்தைகளிடையே தொழு நோய் பரவியுள்ளதா என்று கண்டறிய, வரும் கல்வி ஆண்டிலிருந்து விரிவான சோதனைத் திட்டம் ஒன்றை அரசு தொடங்கும். குழந்தைகள் பள்ளிகளில் சேரும்போது அவர்களுக்கு அந்நோய் கண்டிருக்கிறதா என்று மருத்துவ சோதனை செய்வதுடன் சிகிச்சைக்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

25. இந்த அரசின் முற்போக்கான தொழிலாளர் நலக் கொள்கையை ஒட்டி, தொழிலாளர்களின் நன்மைக்காகப் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் 1—10—1981 முதல் செயலுக்கு வந்தது. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவுப்படி கொடுப்பதற்கான சட்டமும், தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களைப் பதவியில் நிலைப்படுத்தும்) சட்டமும் 1—1—1982 முதல் செயலுக்கு வந்தன. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்கள் (பணி நிலைமை, பல்வகை விதித்துறைகள்) சட்டம், அதன்கீழ் வகுக்கப்பட வேண்டிய விதிகள் முடிவு செய்யப்பட்டவுடன் செயலுக்குக் கொண்டு வரப்படும். 1981 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட வரைவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டத்தை தர்மபுரி, நீலகிரி மாவட்டங்களுக்கு நீட்டிக்கவும், வேறு சில பகுதிகளில் அதன் பயன்பாட்டை விரிவுபடுத்தவும் அரசு கருதியுள்ளது.

26. ஆதி திராவிடர்களின் சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்த 1980—81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்புக் கூறுகள் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் அளவு ரூ. 71.64 கோடியாக இருந்தது. நடப்பாண்டில் இது ரூ. 83.04 கோடியாக உள்ளது. அடுத்த நிதியாண்டில் இது ரூ. 114.04 கோடியாக இருக்கும். அடுத்த நிதியாண்டில் 1.67 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் ஆதி திராவிடர்களுக்கான வருவாய் பெருக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த நிதியாண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9.56 கோடியாகும். நடப்பாண்டில் இது ரூ. 10 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982—83 ஆம் ஆண்டில் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி ரூ. 15 கோடியாக இருக்கக்கூடும்.

உள்ளவர்கள் அல்லது குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிக அளவில் முதலீடு போட்டு நட்டத்தில் நடத்தக் கூடிய முறையில் ஐந்து நட்சத்திர ஓட்டல்களை நடத்துவது சாத்தியமில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அகில இந்தியாவிலிருந்தும் தமிழகத்திற்கு வருகின்ற விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் குறைந்த செலவில் தங்கக் கூடிய முறையிலே மத்திய சென்னை, தென் சென்னை, வட சென்னை ஆகிய இடங்களில் டார்மென்டரி போன்ற தங்குமிடங்கள் கட்டுவதற்கு சுற்றுலா வாரியம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்சசிக் கழகம் சென்னை நகரத்திலே 3 நட்சத்திர தகுதியுள்ள ஒரு விடுதி கட்ட வேண்டுமென்று அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை குறைந்த செலவிலே தங்குகின்ற வகையில் டார்மெண்டரி போன்ற அந்த தங்குமிடங்களைக் கட்ட வேண்டும் என்பது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் உள்ள திட்டமாகும்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, சுற்றுலா வாரியத்தின் சார்பில் நடத்தப்படுகிற தங்கும் விடுதிகள் எத்தனை ? அவைகள் எல்லாம் லாபகரமாக நடத்தப்படுகின்றனவா ? எனக்குத் தெரிந்தவரை சுற்றுலா வாரியம் நடத்துகின்ற தங்கும் விடுதிகள் லாபகரமாக நடப்பதாக அறிகிறேன். எனவே மீண்டும் அதைப் பரிசீலனை செய்து தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் ஐந்து நட்சத்திர ஓட்டல் கட்டுவதற்கு சுற்றுலா வாரியம் முன்வருமா ? தனியார்கள் தமிழகத்திலே எத்தனை ஐந்து நட்சத்திர ஓட்டல்களை நடத்துகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகவல்களைச் சேகரித்துத் தரலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்னையிலே அதைக் கட்டாவிட்டாலும் கூட—47 வெளி நாடுகளிலிருந்து வந்து 350 குழந்தைகள் கொடைக்கானலிலே உள்ள கான்வென்டிலே படிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?—அங்கேயோவது அப்படிப்பட்ட ஓட்டலைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(பதில் இல்லை)



(பதில் இல்லை)

**கோமுகி அணை கல்வராயன் மலைப் பகுதிகளைச் சுற்றுலாத்தலங்களாக மேம்படுத்தும் திட்டம்.**

*வினா எண்.—29 திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் கோமுகி அணையில் உள்ள பூங்காவையும் கல்வராயன் மலைப் பகுதியையும் சுற்றுலா பயணிகள் கவரும் வண்ணம் நவீனப் படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) கோமுகி அணையில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக விடுதி ஒன்றும் கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் பிச்சாவரம் மற்றும் கோமுகி அணை ஆகிய இரண்டு இடங்களும் மாவட்ட உலாத் தலங்களாக மேம்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் முதல் கட்டமாக பிச்சாவரத்தை மேம்படுத்தவும், பின்பு இரண்டாவது கட்டத்தில் கோமுகி அணையை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வராயன் மலைப்பகுதியை பற்றி சுற்றுலாத் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது கல்வராயன் மலைப்பகுதியை அடுத்த கோமுகி அணையை சுற்றுலாத் தலமாக்குவதற்கு இரண்டாவது கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள், அதற்காக நான் நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறேன். கோமுகி அணைப் பகுதயில் அகலமான பரப்பளவு உள்ள இடம் இருக்கிறது. அங்கே வருகின்றவர்கள் தங்குவதற்கு இப்போது பொதுப் பணித் துறையின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள இரண்டு அறைகள் கொண்ட கட்டடம் தான் தற்போது இருக்கிறது. அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியாக அங்கே நிரந்தரமான கட்டடம் எப்போது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். கல்வராயன் மலைப்பகுதி திட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே மலைவாழ் மக்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். மத்திய அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் சாலைகள் வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இயற்கை வளமுள்ள கல்வராயன் மலைப் பகுதியையும் சேர்த்து ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்துவதற்கு சுற்றுலாத் துறை முன்வருமா ?

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, நோக்கங்களை எடுத்துச் சொல்வதை தாங்கள் தவிர்க்கச் சொல்வது என்ற வகையில் நான் ஏற்றுக்கொள்கிறேன் நோக்கங்களைச் சொன்னால் நீதிமன்றத்திலே விவாதிக்கிற அடிப்படையில் போய்விடும் என்று தாங்கள் கருதலாம். ஆனால் நோக்கமே குறிப்பிடாமல் குழப்பத்தை ஏன் எடுத்துச் சொல்லக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தக் குழப்பத்தைத் தவிர்க்கத்தான் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்.

திரு. க. அன்பழகன் ; நீதிமன்றத்திலே குழப்பம் செய்ய போகிறார்கள் என்று தாங்கள் சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அப்படிச் சொல்லவில்லை. இருக்கும் அந்தக் குறைபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காகத்தான் அங்கே போயிருக்கிறார்கள் என்று சொன்னேன். ...

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, Government is responsible for creating a great amount of confusion among the people because of the changes in the Notification.

அதுவரையில் சொல்ல உரிமை உண்டு. இன்னார் நிற்பதற்காக இன்னாருக்கு வாய்ப்பு அளிப்பதற்காக என்று சொல்கிற போது மட்டும், மோட்டிவ் வரும் குற்றம் வருமே தவிர நோட்டிபிகேஷனில் குறைபாடு, அட்மினிஸ்ட்ரேடிவ் லாக்குனு என்ற முறையில் அல்லது குறைகள் என்ற முறையில் சொல்ல இடம் உண்டு. தாங்கள் நீண்ட நாள் துணைத் தலைவராக இருக்க வேண்டிய காரணத்தினால் அதை மறுபடியும் பரிசீலித்து இன்னொரு சந்தர்ப்பத்திலாவது அதைப்பற்றி தெளிவான விளக்கம் சொல்லக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

THIRU N. V. N. SOMU : I am not going into the facts of the case and I am not going into the merits of the case pending in the court.

நமது முதலமைச்சர் அவர்கள் நோக்கம் என்கிற அது வேறு இது வேறு என்று சொல்லுகிறார்கள். நேற்றைக்குக் கூட இங்கே ஒரு பிரச்னை வந்தது. சர்க்காரியா கமிஷன் குறித்து அந்தப் பிரச்னையில் குறுக்கிட்டுப் பேசுகிறபோது முதலமைச்சர்



அவர்கள் சொன்னார்கள் சாட்சிகளை அழைக்கவில்லை என்று. நான் தெளிவாகச்சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என் கையிலே வைத்திருக்கக்கூடிய இந்தப் புத்தகம் முதலமைச்சர் அவர்கள்—மன்னிக்கவும்—அன்றையதினம் 1972 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருந்த மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அளித்த இந்தக் கடிதம் அதிலே,

Thiru. M. G. RAMACHANDRAN, M.L.A., 156, Lloyds Road, Royapettah, Madras-14—November 4, 1972-ல்
To his Excellency Sri. V.V. Giri, President of Union of India, New Delhi.
—குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதுகிறார். புகார், ஊழல் பட்டியலில் சொல்கிறார்.

This petition is written by me with all responsibility and sense of duty.

பொறுப்புணர்ச்சியோடும், கடமையுணர்ச்சியோடும் இந்தப் புகார்ப்பட்டியல், ஊழல் பட்டியல் என்னால் எழுதப்பட்டது என்று 1972-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ம் தேதி இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

1976-ம் ஆண்டு, உங்களுக்குத் தெரியும். சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. அப்பொழுது சர்க்காரியா அவர்கள் யார் யார் அபிடவிட் தருகிறார்கள், அவர்களுக்குத் தெரிந்த குற்றச்சாட்டுகளை இந்தப் பட்டியலை அனுப்புகிறவர்கள் யார் யார் அனுப்புகிறார்கள் என்று கேட்டபோது நம்முடைய இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்றைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு அபிடவிட் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த அபிடவிட்டின் தேதி, 16—6—1976. அதில் அவர் சொல்கிறார்—

I most respectfully submit that it is absolutely true. I pray I be permitted to make a few submissions. The several instances cited were pieces of information furnished chiefly by C.P. Karnar, district organiser of AIADMK, Salem.

நான் இந்தப்பட்டியலில் கொடுத்துள்ள ஊழல்கள் எல்லாம் (குறுக்கீடு) நான் பேசி முடித்ததற்குப் பிறகு அவர்கள் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

I will conclude shortly, Sir.

அதிலே, இந்த ஊழல் புகார் பட்டியல் எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் சேலம் கண்ணன் கொடுத்ததே தவிர எனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டு மேலும் சொல்லுகிறார். . . . .

I have no personnel knowledge.

இந்த ஊழல்கள் பற்றி, புகார்கள் பற்றி எனக்கு தனிப்பட்ட முறையில் ஒன்றும் தெரியாது என்று 1976-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் தேதி கொடுத்த அபிடவிட்டில் சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார். . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அதை இப்போதும் அப்படியே ஒத்துக்கொள்கிறேன். எழுதியது என்னால்தான் என்பதை நான் இன்னமும் மறுக்கவில்லை. அதே சமயத்தில் பத்திரிகைகளுக்கும் நான் செய்தி வெளியிட்டிருக்கிறேன். இது எப்படி உங்களுக்குக் கிடைத்தது என்ற கேள்விக்கு பத்திரிக்கை நண்பர்களிடம் அன்றையதினமே நான் சொன்னேன் பல்வேறு இடங்களிலிருந்து எனக்குச் சேகரித்துத் தரப்பட்டிருக்கிறது. அவைகளை "நான் அனுப்புகிறேன் என்று. அதற்கு பொறுப்பேற்பு" என்ற காரணத்தால் யார் அளித்தது என்று சொல்வது என்னுடைய பொறுப்பு. ஏதோ யாரோ அனுப்பினார்கள் நான் அனுப்பிவிட்டேன் என்று சொல்வது பொறுப்பற்ற தன்மை அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். கண்ணன் அவர்கள் எனக்குக் கொடுத்ததை நான் அனுப்பினேன். அதைத்தான் இன்னமும் சொல்கிறேன். அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: 1972ம் ஆண்டு ஸென்ஸ் ஆப் ட்யூட்டி ஆன்ட் ரெஸ்பான்ஸிபிளிட்டி இவைகளையெல்லாம் 1976ம்-ஆண்டு சர்க்காரியா அபிடவிட் கேட்கின்றபோது

I have no personal knowledge

என்று சொல்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றி எனக்கு ஒன்றுமே. . . . . . . .

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, பேசியதற்குப்பதில் சொல்ல வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிட்டு அந்த வாய்ப்பை எனக்கும் தரவேண்டும், நீங்களும் எடுத்துக் கொள்ளவேண்டும். எனக்குத் தெரியாது என்பது வேறு, என்னால் எழுதப்பட்டது என்பது வேறு. அவைகளைப்பற்றி நான்தான் எழுதினேன் என்பதை இப்போதும் ஒத்துக்கொள்கிறேன். அப்படி எழுதியதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் யார் என்





பதை நான் சொல்லியிருக்கிறேன். யாரோ தந்தார்கள், எனக்குத் தெரியாது என்று சொல்லவில்லை. எனக்கு அதைக் கொடுத்தவர்கள் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அது தான் என்னுடைய பொறுப்பு.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தை, I have no personal knowledge என்பது அவர்களே கையொப்பமிட்டுச் சொல்லியிருக்கிற ஒரு தொடராகும்.

I have no personal knowledge என்பதன் மூலமாக சட்டத் துறையில் உள்ளவர்கள் கருதுகிற கருத்து முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தப் புகார்களையெல்லாம் வழங்கினாலும் கூட, அந்தப் புகார்களையெல்லாம் சொன்னாலும்கூட இவைகளை நான் நேரடியாக அறியமாட்டேன். I have no personal knowledge இவைகள் எனக்கு சொல்லப்பட்டதோ அல்லது என்னிடம் தரப்பட்டதோ இந்த ஒரு நண்பரால் என்ற கருத்துத்தான் ஆங்கிலத்தில் அதில் எழுதப்பட்டிருக்கிறது, அதில்தான் அவர்கள் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். அதிலிருந்து பெறப்படுவது கண்ணன் தந்தார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக தரப்பட்டிருக்கிறதே தவிர இதற்கு நான் பொறுப்பல்ல என்ற கருத்துத்தான்—இடம் பெற்றுள்ளது, I have no personal knowledge—இதுபற்றிய விவரங்களை நான் அறிந்து தருவது அல்ல, என் நம்பிக்கைக்கு உரிய ஒருவர் சொன்னார், ஆகவே தருகிறேன் என்ற கருத்துதான் அதில் வருகிறது.

[முற்பகல் 11-10]

முதலமைச்சரவர்களுடைய ராஜதந்திரத்தை நான் எப்போதும் குறைத்து மதிப்பிட்டதில்லை. நான் சொல்வது எந்த நீதிமன்றத்திலும் அவரவர்கள், அவரவர்களுடைய திறமை, அறிவாற்றல், அவர்களுக்கு இருக்கின்ற அனுபவம், எதை எப்படி அணுகுவது என்பதில் அவர்களுக்கு உரிமை உண்டு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அந்த உரிமை இல்லை என்று நான் கருத மாட்டேன். என்னை நீங்கள் நீதிமன்றத்தில் நிறுத்தினால், நானும் அப்படித்தான் என்னைப் பாதுகாத்து கொள்ள எனக்குரிய முறைப்படி நான் செயலாற்றுவேன். எனவே, தங்களுக்கு உரிமை இல்லை, ஏன் அப்படிச் சொன்னீர்கள் என்று கேட்பதற்கு எனக்கு உரிமையும் கிடையாது. நான்

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 5

அப்படி கேட்கவில்லை. முதலமைச்சர் அவர்களே பொறுப்பேற்றுக் கொள்வதாகச் சொல்லப்பட்ட ஒரு காலக்கட்டத்திலே இருந்து, இதற்கு நேரடியாக நான் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. எனக்கு தரப்பட்ட விஷயங்களைத் தங்களுக்கு தந்திருக்கிறேன், விசாரித்து நீங்கள் உண்மையை அறிந்து கொள்ளுங்கள் என்ற இடத்திலேதான் முதலமைச்சர் அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

அது குற்றம் என்று கருதுகிறவன் அல்ல. யார் மீதும் குற்றஞ்சாட்டி, அதைக் கடைசி வரையிலே நிலைநாட்டுவேன் என்று சொல்லவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதாகத் தான் சொல்லியிருக்கிறேன். ஆனால், முதலமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்ன காரணத்தினால், அவர்களே நேரடியாக பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை என்ற கருத்துத்தான் நீதி மன்றத்திலே இடம் பெற்றிருக்கிறது. அதைத் தாங்கள் மறுபடியும் பரிசீலனை செய்து அதை மாற்றிச் சொல்ல விரும்பினால் அதில் எழுதப்பட்டது என்னவோ அதுவரையில் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ராஜதந்திரம் இருக்கிறது என்று சொல்வதிலிருந்து, என்னைப் பாராட்டி, என்னைக் குற்றவாளியாக்க முயற்சிக்கின்ற ராஜதந்திரத்தை, திறமையை நான் ஏற்றுக்கொள்கிறேன். பாராட்டுவதன் மூலம் ஒருவனை குற்றவாளிக் கூண்டிலே நேரடியாக நிறுத்தி வைக்கலாம் என்று எண்ணினால், அது பேராசிரியர் செய்யக் கூடிய வேலை அல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நான் பத்திரிக்கைக்கு செய்திகளை வெளியிட்டிருக்கிறேன். அதைப் பற்றி திரும்பத் திரும்ப முன்பே பலமுறை சொல்லியிருக்கிறேன். எனக்குத் தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளை நான் அங்கு அனுப்பியிருக்கிறேன். அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். யார் கொடுத்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டியது. அவர்களை அங்கே சாட்சிக்கு அனுப்பவேண்டியது, அதைப்பற்றி என்னை அழைத்தால் எனக்குத் தெரிந்ததைச் சொல்ல வேண்டிய பொறுப்பை நான் என்றும் மறுத்தவன் அல்ல; பின்வாங்கியதும் இல்லை இப்போதும் அதே நிலைதான்.



1982 பிப்ரவரி 5]

**திரு. என். வி. என். சோமு :** துணைத் தலைவர் அவர்களே அப்போதே அவர்கள் பத்திரிக்கைகளிலே வந்த செய்திகளை வைத்துத்தான் நான் சொல்லியிருக்கிறேன் என்று சொல்லியிருந்தால், இவ்வளவு பிரச்சினையே கிடையாது......

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் பேசியதை தயவு செய்து கேட்டிருந்தால் நன்றாக இருக்கும். பத்திரிகைளில் வந்த செய்தி அல்ல. எனக்குத் தரப்பட்ட, நண்பர்களால் தரப்பட்ட அல்லது மற்றவர்களால் தரப்பட்டவை என்பதை கவனத்திலே வைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. என். வி. என். சோமு ;** என் கையிலே இருப்பது பத்திரிகைகள் அல்ல. இன்று இங்கே முதலமைச்சராகவும், அன்று சட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்தவர் அளித்த அறிக்கையிலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த விஷயம் பேசி முடித்தாகி விட்டது. அடுத்த விஷயத்திற்கு வாருங்கள். 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. அதிலே குறுக்கீட்டிற்கே 15 நிமிடங்கள் ஆகிவிட்டன; சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. என். வி. என். சோமு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் அவர்கள் உரையிலே கொள்கை அறிவிப்போ, ஆக்கபூர்வமான திட்டங்களோ எதுவும் இல்லை. நகரத்தின் மேம்பாடு இல்லை; நானிலத்தின் மேம்பாடு இல்லை. காவலர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை மேலெழுந்தவாரியாக தீர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, ஏதோ ஒரு சிலருக்கு அதிகரித்துவிட்டு, நகரத்திலே நிகழக்கூடிய குற்றங்கள், கொலை ஆகியவைகளைத் தடுப்பதற்குரிய அறிவிப்பு, இந்த ஆண்டு இந்த அரசு என்ன செய்யப்போகிறது என்பது எதுவும் இல்லை.

பாரதியார் விழா கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் பாரதியார் பாடிய பாட்டு ஒன்று நினைவுக்கு வருகிறது. ஜார்ஜ் சக்கரவர்த்தியின் ஆட்சி அங்கே கவிழும்போது,

''பொய்சூது தீமை யெல்லாம்
அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்துவளர்ந்
தோங்கினவே அந்த நாட்டில்.
உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை,
பிணிகள் பலவுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே யிறப்ப துண்டு.''

என்று பாரதியார் பாடிய அந்த பாட்டை எடுத்துக் காட்டி, இந்த ஆளுநர் உரையிலே ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் பிரபாகரன் அவர்கள் முன்மொழிந்த கருத்தை ஆதரித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விழைகிறேன்.

இந்த ஆண்டு பாரத நாட்டுக்கும் பாரத மக்களுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்கும் வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெளியேற்றுகின்ற உணர்வுகளை நமக்கெல்லாம் ஊட்டித் தந்த பாரதி அவர்களுடைய நூற்றாண்டு விழாவை தமிழகத்தில் சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் தமிழக அரசுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது பேசும்போது எதிர்க்கட்சியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள், அவர்களுடைய பாணியில் ஆடிப்பாடி ரொம்ப அழகாகப் பேசினார்கள். அப்படிப் பேசியபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் முதலமைச்சர் அவர்களும் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளாது என்று சொல்லிவிட்டு பாரதி நூற்றாண்டு விழாவை எட்டயபுரத்தில் கொண்டாடி முடித்த விழாவில் ஒரு புத்தகத்தை வெளியிட்டிருப்பதில் முதலமைச்சர் படத்தைப் போட்டிருக்கிறார்கள்; அதிலே பார்த்தீர்களா, எவ்வளவு அழகாக ஆசனத்தில்அமர்ந்திருக்கிறார் அவருடைய விளம்பரத்தைத் தந்திருக்கிறாரே என்று சுட்டிக் காட்டினார்.

நான் ஒன்றை மிகப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன். தயவு செய்து உங்களை நீங்கள் ஒரு கணம் பின்னால் திரும்பிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பணத்தைப் போட்டு விளம்பரப்படுத்தி கொள்ள வேண்டுமென்று எண்ணியது கிடையாது. இன்றைக்குப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அந்தப் படம் முதலமைச்சர் என்ற முறையில் அதிலே போடப் பட்டிருக்கிறதே தவிர, பாரதி நூற்றாண்டு விழாவிலே



அவருடைய படத்தைப் போட்டு விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டிய அவல நிலை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இன்றைக்கும் கிடையாது, என்றைக்கும் இருந்தது கிடையாது.

கடந்த காலத்தில் ஆட்சியை நடத்திய மாண்புமிகு முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் தன்னை எந்தெந்த வகையில் விளம்பரப்படுத்திக் கொண்டார்கள் என்பதைத் தயவு செய்து மறந்துவிடக் கூடாது. அன்றையதினம் முதல்வர் கலைஞருடைய பிறந்த நாள் விழாவுக்குஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவார்கள் கலைஞர் பிறந்த நாளில் கண்ணொளி வழங்கும் விழா ; கை ரிக்ஷா கொடுக்கும் விழா ; கலைஞர் பிறந்த நாளில் மறுவாழ்வுத் திட்ட விழா என்று அரசு விழாக்களை, அரசு செய்கிற காரியங் களை 'தன்னுடைய பிறந்த நாளில் இந்த நாட்டில் அறிமுகப் படுத்தியவர்தான் உங்களுடைய தலைவர் என்பதை மறந்துவிடக் கூடாது. அது போலல்ல, புரட்சித் தலவர் அவர்கள். புரட்சித் தலைவர் அவர்களை இந்த நாட்டு மக்கள் தங்கள் மனத்திலே என்றைக்குமே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் இன்றைக்கு மட்டுமல்ல, என்றைககுமே மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர். அவர்கள் முதல்வராக வந்த பிறகு, அவர்கள் இதற்கு முன்னால் சினிமா உலகத்தில் இருந்தார்கள், அதனால்தான் மக்கள் திரள் திரளாக வருகிறார்கள் என்று சொன்னீர்கள். அவர்கள் சினிமா உலகத்தை விட்டு விலகி நான்கு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது.

மாண்புமிகு துரை முருகன் அவர்கள் இன்னொன்றையும் கிண்டலாகப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் பிரபாகரன் பேசியதைக் கிண்டலாக சுட்டிக்காட்டினார். மகாத்மா காந்தியை இன்றைய தினம் புரட்சித் தலைவர் உருவத்தில் காண்கிறோம் என்று பிரபாகரன் அவர்கள் பேசினார்கள பிரபாகரன் அவர்கள் பேசும்போது ரொம்ப ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் என்று பேசினார்கள். நேற்றைய தினம் பேசிய இராசு அவர்கள் ஒன்றைக் கூறினார்கள்.

[முற்பகல் 11–20)

நான் ஒன்றைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காந்தியடிகளுடைய உருவத்தை புரட்சித் தலைவர் அவர்கள் முகத்திலே நாங்கள் காண்கிறோம் என்று நாங்கள் சொல்கிறோம். எங்களுக்கு அதிலே பெருமை இருக்கிறது. சொல்வதற்கு ஆதாரம் இருக்கிறது. நாட்டுக்கே அது நன்றாகத் தெரிகிறது நாங்கள் சொல்லலாம், நீங்கள் சொல்வீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் அப்படி எதிர்பார்த்தோமென்றால் நாங்கள் ஒன்றும் புரியாதவர்கள்.

இந்திய வரலாற்றிலேயே நீங்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது உலக உத்தமர் காந்தியடிகள் சுதந்திரம் பெறுவதற்காக வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார். அவர்கள் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார்கள். சுதந்திரப் பிதா என்று அழைக்கப்படும் காந்தியடிகள் டெல்லிப் பட்டணத்திலிருந்து தெற்கு நோக்கி வருகிறார் என்றால் காந்தி தாத்தா வருகிறார், காந்தி தாத்தா வருகிறார் என்று வீதிகளிலே மக்கள் காத்திருந்து வரவேற்ற காட்சியை மறந்து விடாதீர்கள். அதற்குப் பின்னாலே அவர்களுடைய கொள்கைகளை கடைப்பிடித்து நடந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அகில உலகிலும் ஒரு சமாதான தூதராகப் போற்றப்பட்டார். நேரு பிரான் வருகிறார் என்றால் மக்கள் தெருக்களிலே கூடி நின்று மாமா வருகிறார். மாமா வருகிறார், என்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் வரவேற்ற காட்சியை நீங்கள் மறந்து இருக்க முடியாது. நிச்சயமாக மறக்க மாட்டீர்கள்.

அந்த வரலாற்றிற்குப் பிறகு மூன்றெழுத்து, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். வருகிறார் என்றால் வீட்டிலிருக்கின்ற தாய்மார்கள் முதல் சாட்டிலே கழனியிலே பணியாற்றுகின்ற உழவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள் அனைவரும் வீதிகளிலே வந்து நின்று அந்த நல்ல உள்ளத்தைப் பார்க்கிற சூழ்நிலைதான் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது என்பதை மறந்து இருக்க மாட்டீர்கள். அப்படிப்பட்ட ஒரு வரலாற்றுச் சொந்தக்காரரர் புரட்சித் தலைவர் மீது ஏதோ பேச வேண்டும் என்பதற்காக வேறு வழியில்லை என்பதற்காக நீங்கள் உங்களை அறிமுகப்படுத்திக கொள்கிறீர்கள்; விளம்பரப் படுத்திக் கொள்கிறீர்கள் அன்றைய தினம் திரு துரை முருகன அவர்களும் நேற்றைய தினம் திரு. ஜே. எஸ். இராசு அவர்களும் பேசினார்கள், நிச்சயமாக அவர்கள் திருத்திக் கொள்ளவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்திலே நாட்டிலே எதுவுமே நடக்கவில்லை, தெருக்களிலே சாக்கடை ஓடிக் கொண்டிருக்கிறது, குடிநீர் கிடைக்கவில்லை, ரோடு வசதிகள் கிடையாது, மின் விளக்குகள் எரியவில்லை என்று சொன்னார்கள். நீங்களும் ஒன்றை ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தெரு வீதிகளிலே சாக்கடைகளை ஓடவிடாமல் ரோடு வசதிகள் ஏற்படுத்தி, மின் விளக்குகள் சரியாக எரிய விளக்குகளைப் போட்டுக் கொடுக்கின்ற நிலைமைகளை எல்லாம் ஒழுங்காகச் செய்து இருப்பீர்களானால் இப்போது இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வந்து இருக்காது.

திரு. ஜே. எஸ். இராசு : ஒரு கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது வீதிகளிலே சாக்கடை ஓடாமல் பார்த்தல், விளக்குகளை மாற்றியமைத்தல், சாலைகளைப் பழுது





பார்த்தல் இவைகள் எல்லாம் அடிக்கடி நடைபெறுகிற காரியங்கள். பெர்மனன்ட்டாகச் செய்து முடிக்கக்கூடிய காரியங்கள் அல்ல. அடிக்கடி நடைபெறக்கூடிய காரியங்கள். இதையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது என்று தவறாக கருதிக் கொண்டு பேசுவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு உறுப்பினர் நேற்றைய தினம் பேசுகின்றபோது முழுக்க முழுகக இந்த ஆட்சியிலே எதுவுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்களா. அதற்காகத்தான் நான் உழகள் காலத்திலே நீங்கள் செய்யத்தவறிவிட்டீர்கள் என்று எடுத்துச் சொன்னேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தன்னிறைவுத் திட்டம் நன்றாகச் செயல்படுத்தப்படுகிறது என்று ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் உணர்ந்திருக்கிறார்கள். மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த அரசால் கொடுக்கப்பட்ட தொகையோடு மாநில அரசும் தொகை போட்டுச் சேர்த்து அதற்காக சர்வகட்சிக் குழு அமைத்து அந்தக் குழுவினுடைய ஒத்துழைப்போடு தான ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம் என்பதை உணர்கிறீர்கள், நீங்களும் இடம் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் உண்மையை மறைக்கிறீர்கள், பொய்யான தகவலைச் சொல்கிறீர்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய திருவரும்பூர் தொகுதியிலே பொன்மலை நகராட்சி இருக்கிறது. பொன்னான மலை என்ற அழகிய பெயரைத்தாங்கிய நகராட்சி தான் அது. அந்தப் பொன்மலை நகராட்சிக்கு ஓராண்டுக்கு முன்பு வரையில், கிட்டத்தட்ட ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியான பிறகும் கூட, அந்தப் பகுதிக்குக் குடிக்கத் தண்ணிர் இல்லாமல் இருந்தது. ஆனால் புரட்சித் தலைவரவர்களின் அரசு செய்யும் சீரிய திட்டத்தின் அடிப்படையில் அந்த நகராட்சிக்கு உடனடியாக ஆழ் குழாய்க் கேணிகள் அமைத்து, ரொம்ப தூரத்திற்கு அப்பால் இருந்தாலும் பைப்பு மூலம் தண்ணீர் கொண்டு வந்து, வீதிக்கு வீதி குழாய்கள் மூலம் தண்ணீர் சப்ளை செய்வதற்கான தற்காலிக நடவடிக்கை கடந்த ஓராண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறது. போர்க்கால நடவடிக்கைகளைப்போல் என்னுடைய தொகுதியில் உள்ள ஐந்து பேரூராட்சிகளிலேயும், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் பத்து பன்னிரெண்டு ஆழ் குழாய்க் கேணிகளை அமைத்து தற்காலிகமாகக் குடி தண்ணீர்ப் பிரச்சினையைத்

தீர்க்கும் வண்ணம் திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்த அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டுச் செய்து தந்திருக்கிறது. உள்ளபடியே நான் எதிர்க்கட்சியிலே உள்ளவர்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன், உங்களுடைய தொகுதிகளிலே எந்த வேலையும் சுத்தமாக நடைபெறவில்லை என்ற குற்றச் சாட்டைச் சொல்லுகிறீர்களா ? தயவு செய்து அதை உணர்ந்து சொல்லுங்கள், உண்மையை மறைக்காதீர்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் தன்னிறைவுத் திட்டங்களைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், புரட்சித் தலைவரவர்களின் அரசு பேரூராட்சிகளும், நகராட்சிகளும் கூடத் தன்னிறைவு பெறக் கூடிய நல்ல திட்டத்தை வரும் ஆண்டுகளில் கொண்டு வரவிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே கூறியிருப்பதை உளப்பூர்வமாக வரவேற்று அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல், வேளாண்மைப் பொருட்களைப் பொறுத்த வரையில், உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இருக்கின்ற சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இதுகாறும் வேறு யாருமே கொண்டுவராத நல்ல திட்டத்தை, அதாவது உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை அமைக்க முயற்சியை மேற்கொள்ள இருப்பதோடு மட்டுமல்லாமல் அழுகும் பொருள்களைப் பாதுகாக்கும் முறையில் அங்காடிகளை அமைக்கும் திட்டத்தை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு நஷ்டம் வராத சூழ்நிலையை ஏற்படுத்தவும் புரட்சித் தலைவரவர்களின் அரசு வருகிற ஆண்டுகளில் உலக வங்கியின் உதவியுடன் 102 கோடி ரூபாய் செலவில் சீரிய திட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது. இந்தத் திட்டத்தை கொண்டுவரவிருப்பதை முன்னிட்டு விவசாய சங்கத் தலைவர் என்ற முறையில் நான் என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இங்கே பேசிய உறுப்பினர்கள்—எதிர்கட்சியிலே அங்கம் வகிப்பவர்கள் சில நேரங்களிலே இந்த அரசைக் குறை கூறிப் பேச வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பேசுகிறார்களே தவிர, இந்த அரசு கொண்டு வரும் சிறந்த எந்தவொரு நல்ல திட்டத்தையாவது அவர்கள் பாராட்டுகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், மதுரையிலே உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டியதையும், அதைத் தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சையிலே





துவக்கியதையும், அதைத் தொடர்ந்து திருச்சியிலே பாரதிதாசன் பல்கலைக் கழகம் துவங்க இருப்பதையும், அடுத்து கோயம்புத்தூரிலே பாரதியார் பல்கலைக் கழகம் துவங்க இருப்பதையும் அவர்கள் அறிவார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், தமிழ்மொழி மீது அக்கறை கொண்டிருக்கின்ற நீங்கள், உங்கள் காலத்திலே இது தெரியாமல் போன காரணத்தினாலேயோ என்னவோ அல்லது அதை நினைப்பதற்கு நேரம் கிடைக்காத காரணத்தினாலேயோ என்னவோ நான் அவர்களைப் பார்த்து மிக்க வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இப்படிப்பட்ட சூழ்நிலைகளை விட்டுவிட்ட நீங்கள் இன்றைக்கு நல்ல தியாகிகளின் பெயராலேயே வரலாற்றிலே இடம் பெற்றிருக்கின்றவர்களின் பெயராலே உருவாக்கப்பட்டிருக்கின்ற பல்கலைக் கழகங்கள், உலகத் தமிழ் மாநாடு ஆகியவைகளைப் பற்றிக் குறை பேசுவதால் உங்களுக்கு என்ன இலாபம் என்று கருதுகிறீர்கள் ? நிச்சயமாக அது உங்களுக்கு இலாபமாக இருக்காது ; நாட்டு மக்கள் மத்தியிலே நஷ்டமாகத்தான் இருக்கும் என்பதுதான் உங்களுக்குத் தீர்ப்பாகக் கிடைக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 11·30]

புரட்சித் தலைவரவர்களின் அரசு ஏற்பட்ட காலகட்டங்களில் தொழிலாளி வர்க்கமானாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, அல்லது தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் சரி, நடுத்தர மக்களாக இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் அருமையான திட்டங்களை அனுபவிக்கிறார்கள். இன்றைக்குக் கிராமப்புறங்களைப் பாருங்கள். கிராம மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், கிராமங்களில் என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ அவைகளை நீக்கும் பொழுது அந்த மக்கள் பெருமையோடு சொல்கிறார்கள், புரட்சித் தலைவர் அரசு கிராமங்களில் வாழும் எங்களைப் பார்க்கிறது, புரட்சித் தலைவர் அரசில் எங்களுக்கு நல்ல திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த ஒரு நிலையான கருத்தைத் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் ஏற்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், ஏற்றமிகு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற, ஏற்றமிகு திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அரசை நீங்கள் இழிவாகப் பேசுவதை விட்டுவிட்டு, தயவு செய்து கடந்த 7½ ஆண்டு காலத்தையும், நடந்து கொண்டிருக்கிற 4½ ஆண்டுக் காலத்தையும் நினைவிலே கொண்டு உங்களை நீங்கள் வழி நடத்திச் செல்ல வேண்டும். இந்தச் சட்டமன்றத்திலே சட்டம் படித்தவர்கள் நீங்கள் என்பதை நாங்கள் எல்லாம் உணர்கிறோம். ஆனால், நீங்கள்

பேசுவதைப் பார்த்தால், சட்டம் படித்தவர்களைப் போல் எங்களுக்குத் தெரியவில்லை. நிச்சயமாகச் சொல்கிறேன். நாங்கள் சட்டம் படிக்காதவர்கள். ஆனால், நாங்கள் பேசுகிறோம் புள்ளி விவரத்தை. சட்டம் படித்திருக்கின்ற நீங்கள் தாறுமாறாக, எதை, எதையோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, நீங்கள் எந்தத் துறையிலே எப்படி பேசினாலும், நிச்சயமாக, இரண்டாவது முறை இந்த நாட்டிலே மக்கள் அளித்த தீர்ப்பை மறந்து விடாமல், எதிர் காலத்தில் உங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையில் நடத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவை மாற்று தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இவ்வாண்டு பாரதியார் விழா கொண்டாடப்பட்டு, அந்த விழாவிலே நாம் எல்லோரும் பாரதியார் இந்திய தேசிய கவிஞர் ஆவார், உலக மகாகவி ஆவார், அவர் சுதந்திரக் கருத்தைத் தட்டி எழுப்பிய நன்னிகரில்லா பெரும் கவிஞர். ஆகவே, அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது மிகவும் சாலச் சிறந்தது என்று கூறிக் கொண்டு அவருடைய நூற்றாண்டு விழாவிலே சாதி, சமய, வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு புதியதொரு சமுதாயத்தைப் படைப்போம் என்ற உறுதியை முதலில் தெரிவித்துள்ளார்கள். அதை எல்லோரும் ஏற்று நடத்த இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். கடந்த ஆண்டிலே வறட்சி என்பது மிகவும் அதிகமாக இருந்தது. சென்ற ஆண்டு இருந்த கடுமையான வறட்சி இந்த ஆண்டு இல்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், பாலாற்றுக்கும் பண்ணையாற்றுக்கும் மத்தியில் போதுமான மழையின்மை காரணமாக, பச்சைமலை பகுதி மற்றும், தென்பகுதிகளில் தண்ணீரில்லையென்பதை இந்த அரசு உணர்ந்திருப்பது உண்மையானால், அங்குள்ள விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படும் நிவாரணம் பற்றி இந்த உரையில் சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்யாதது அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் துயரத்தைக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், வறட்சி நிவாரணப் பணிக்காக, மத்திய அரசு அளித்த தொகையானது ரூ. 48 கோடியே 90 இலட்சமாகும். மாநிலத்தில் துயர் தணிப்பு பணிகளுக்காகச் செலவு செய்தது ரூ. 55 கோடியே 24 இலட்சமாகும். வறட்சி நிவாரண வேலைகளைப் பொறுத்தமட்டில் சேலம் மாவட்டத்திலே,





எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. வேலைகள் ஓரளவு செம்மையாக நடந்தன. நிறைய கண்மாய்களுக்குத் தூர் எடுத்தல், குடிநீர்க் கிணறுகள் தோண்டுதல் முதலிய வேலைகள் செய்யப்பட்டன. ஆகவே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுகாவைப் பொறுத்தவரையில் வேலைகள் ஒழுங்காக நல்ல முறையிலே நடைபெற்றன. ஆகவே, துயர் தணிப்புப் பணிகளிலே அதிகமாக ஆழ்குழாய்க் கிணறுகளும், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும் ஆத்தூரிலே, ரூ. 17 இலட்சத்துக்கு ஒரு குடிநீர்த் திட்டமும் நிவாரண வேலையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதற்காக மிகவும் பெருமைப்படுகிறேன். ஆகவே, அந்த அளவிலே வறட்சிப் பணியானது நல்ல முறையிலே செயல்பட்டது.

மேலும், நெல்லுக்கும், கரும்புக்கும் நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று எதிர் பார்த்த விவசாயிகள் இன்று ஏமாற்றம் அடைந்துள்ளனர். அண்டை மாநிலங்களில் அளிக்கப்பட்ட ஊக்க போனஸ்கூட, தமிழகத்தில் அளிக்கப்படாதது வேதனையானது. ஆகவே, இது போன்ற பிரச்சனைகளையெல்லாம் இந்த அரசு கவனிக்க வேண்டும்.

மலை வாழ் மக்களுடைய நலன்களைக் காக்க என்று ஒரு தனி இலாகா அமைக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. நமது சமுதாயத்தில் இன்று கூட மிகப் பெரிய சுரண்டலுக்கு ஆளாகி, நலிந்து கிடக்கின்ற ஒரு இனம் இருக்கிறது என்று கூறினால், அது மலை வாழ் மக்களுடைய இனம்தான் என்று சொல்ல வேண்டும். அவர்களுக்கென்று அரசு அறிவிக்கின்ற சலுகைகள் இன்று, இடையிலே உள்ளவர்களாலே அனுபவிக்கப்படுகின்ற அவல நிலை உருவாகியிருப்பதற்கு இந்த அரசு பொறுப்பேற்க வேண்டும்.

மேலும், இந்தத் தன்னிறைவுத் திட்டம் என்பது கடந்த ஆண்டும அதற்கு முன்னாலும் 250 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தன்னிறைவுத் திட்டத்திலே, கிராமப்புற மக்களுக்கு வீடுகள் 25,000 கட்டித் தரப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், ஆதிதிராவிட மக்களுக்குக் குறித்த காலத்திலே பணம் கொடுக்கப்படாததால் அவர்கள் மிகவும் அவதிப்பட்டார்கள்.

கடந்த ஆகஸ்டு மாதத்திலே இருந்து டிசம்பர் மர்தம் வரையில், 6 மாதங்களாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணம் கொடுக்கப்படாமல், கட்டிய வீடுகள் அத்தனையும் மழையிலே இடிந்து போன அவலநிலையைப் பார்க்க நேர்ந்தது. இதுபோன்ற சூழ்நிலையில் அவர்களுக்கு உரிய தொகையைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

திரு. சி. பழனிமுத்து [1982 பிப்ரவரி 5

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 2,717 பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிப்பதாக கூறி இருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்கள் அனைத்தும் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளால் கட்டப் பட்டு உள்ளன. அதனால் அந்தப் பள்ளியில் கல்வி பயிலும் குழந்தைகள் உஷ்ணத்தினால் அவதிப்பட்டுக் கொண்டு இருக் கிறார்கள். எனவே அடுத்த ஆண்டிலே கட்டவிருக்கின்ற கட்டடங்களை ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளில் கட்டாமல் தார்சு (டெர்ரஸ்) கட்டிடங்களாக கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மின்சாரம் கடந்த டிசம்பர் மாதம் 20ந் தேதியி லிருந்து ஜனவரி மாதம் 10ஆம் தேதிவரையில் மின்சாரக் கட்டுப்பாடு இருந்த காரணத்தினால் விவசாயப் பயிர்களுக்கு மிகவும் சேதம் ஏற்பட்டது. இப்போது ஜனவரி மாதத்தி லிருந்து ஓரளவுக்கு மின்சாரம் ஒழுங்காக நல்ல முறையிலே, குருப்பிங் சிஸ்டம் முறையிலே விநியோகம் செய்கின்றார்கள். அதை நல்ல முறையிலே சீராக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மின்சாரம் முழு நேரமும் முழு அழுத்தத்துடன் வழங்கப்படுவதில்லை. அதன் காரணமாக பம்ப் செட்டுகளும், மோட்டார்களும் தீய்ந்து போகும் நிலை இருக்கின்றது. இதுபோன்ற நிலை இருப்பது விவசாயிகளுக்குப் பாதகமான சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே இதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலூகா தொழில் வளர்ச் யில் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். எனவே ஆத்தூர் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் புதிதாக பல பல்கலைக் கழகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகி றேன். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் அறிஞர் அண்ணா கல்லூரிக்கு அருகில் புதியதாக ஒரு அரசு பாலிடெக்னிக்கை நிறுவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு பெருமளவில் சலுகைகளைத் தந்து அவர்களை மேம்பாடடையச் செய்ய வேண்டும். மேலும் பின்தங்கிய மக்களுக்கும் பல சலுகைகளையும் செய்ய வேண்டும் வசதியற்ற நிலையில் உள்ள ஏழை எளிய மக்களை முன்னேற்றுவதற்கான வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 5] திரு. சி. பழனிமுத்து

அடுத்து ஊராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தொகுதி களை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்தார்களோ தெரிய வில்லை. என்னுடைய ஆத்தூர் தொகுதியைப் பொறுத்த வரையிலும் இருக்கின்ற 2 ஊராட்சி ஒன்றியங்களும் ஒன்று பெண்களுக்கும் மற்றொன்று அரிஜனங்களுக்கும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இதை எதிர்த்து ஒரு மனுகூட வரவில்லை. கிட்டத்தட்ட 6 இடங்களில் பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் மாறிமாறி ஒதுக்கு செய்திருக்கிறார்கள். எந்த அடிப்படையில் செய்தார்கள் என்று தெரியவில்லை. நான் கேட்டுக் கொள்ள விரும்புவது இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். பொதுவாக ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் வேலைகள் மிகவும் மந்தமாக நடைபெறுகின்றன. தற்போது பேரூராட்சி களில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்தான் தனி அதிகாரிகளாக இருக்கிறார்கள். அங்கே எந்த வேலையும் நடைபெறவில்லை. அந்த வேலைகள் உடனுக்குடன் நடைபெறுவதற்குத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11·40.]

தற்போது பாரதப் பிரதமர் அவர்கள் ஒரு 20 அம்சத் திட்டத்தைத் தந்து இருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டும். இப்போது கிராமப்புறங்களில் கல்வியின் தரம் மிகவும் தாழ்ந்து கிடக்கிறது. கல்வி அதிகாரிகளின் கண் காணிப்பு சரியாக இல்லை என்பதை இதற்குக் காரணம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர் நலன் காக்க மாவட்ட அளவில் ஒரு குழு அமைக்கப்படும் என்று கலவி அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். ஆனால் அது இந்த ஆளுநர் உரையில் இடம் பெற வில்லை. ஆகவே, அது நடைமுறைக்கு வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நியாயமான கூலி கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். சமுதாயத்தின் வறுமைக் கோட்டின்கீழ் உள்ளவர்கள் விவசாயிகள்தான். ஆகவே, அவர்களுடைய கூலி உயர்வுபற்றிய அறிவிப்பு இந்த கவர்னர் உரையில் இடம் பெற்று இருக்க வேண்டும், இந்த அரசு அதைச் செய்ய வில்லை. தஞ்சை நீங்கலாக உள்ள மற்ற மாவட்டங்களிலும் ஏற்கனவே அறிவித்துள்ள கூலி விகிதங்கள் அமல்படுத்த வேண்டுகிறேன். சாதாரண விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் அனைத்தும் படிப்படியாக ரத்து செய்யப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்து இருக்கிறார்கள். இருப்பினும், ஏற்கனவே அறிவித்த கடன் சலுகைகளை நிறைவேற்றுவதிலேயே குறைகள் இருப்பதாகச் சொல்லப்

படுகிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த விவசாயிகளுக்கு உண்மையாகவே சலுகைகள் அளிக்க இந்த அரசு முன்வர வேண்டும். அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியபோது, அதனைப் பரிசீலிக்க திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் ஒரு குழு போடப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரை என்ன, அறிக்கை என்ன என்பதைப்பற்றிய குறிப்பு ஆளுநர் உரையில் தரப்படவில்லை. அதை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள அரசு மருத்துவமனையில் தேவையிருந்தும் டாக்டர்கள் நியமனம் செய்யப்படவில்லை. 120 படுக்கைகள் கொண்ட ஆத்தூர் அரசு மருத்துவமனையில், 8 டாக்டர்கள் தான் இருக்கின்றனர். ஆனால் நாமக்கல்லில் உள்ள 70 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையில் 17 டாக்டர்கள் உள்ளனர். ஆகவே, போதுமான டாக்டர்கள் நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஒரே ஒரு பெண் டாக்டர் தான் ஆத்தூர் மருத்துவமனையில் இருக்கிறார். தினசரி 1,000 பெண் நோயாளிகள் வரும் அந்த மருத்துவமனைக்கு மேலும் ஒரு பெண் டாக்டரை நியமித்தால் நல்ல முறையில் வைத்திய வசதியை அளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த அரசு மருத்துவமனைக்குத் தேவையான டாக்டர்களை நியமனம் செய்யாமல், வேறுபட்ட கருத்துடன் மருத்துவர்களை நியமித்து வருகிறது என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கு இங்கே சீராக உள்ளது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடக்கின்ற அநீதியையும், அக்கிரமத்தையும் சொல்லி முடியாது. அவைகள் சொல்லத் தக்க அளவிற்கு இல்லை. அங்கேயெல்லாம் காவல்துறை அப்படிப்பட்ட காரியங்களுக்குத் தான் துணை போகிறார்கள். நியாயமான காரியங்களுக்கு துணை போகவில்லை. ஆகவே, காவல்துறையில் நல்ல முறையில் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்து, கவர்னர் உரையில் விவசாயத் தொழிலாளிக்கு எந்தவிதமான அறிவிப்பும் செய்யாததால் ஏமாற்றத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொல்லி, சட்டங்களை அமல்படுத்த போதிய கவனம் செலுத்த நிர்வாகம் தீவிரமாக இல்லை என்பதைச் சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பூ. மு. நரசிம்மன் :** மாண்புமிகு மாமன்றத்தின் மாற்றுத்தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி பிரபாகர்





அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது நான் வழிமொழிந்து என்னுடைய கருத்துக்களைப் பள்ளிப்பட்டு தொகுதியின் சார்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழ் நாட்டின் மாண்பினை திக்கெட்டிலும் பரப்புவதற்கு மதுரை மாநகரிலே தமிழ் மாநாடு நடத்தி அந்த மாநாட்டின் விளைவாக தமிழ் நாட்டின் மொழிப் பற்றை வெளியிட்டார்கள். அந்த ஒரு தீரச்செயலினை இந்த நாட்டிலே இருக்கின்றவர்கள்பாராட்டுகின்றார்கள் என்கிற நல்ல செய்தியை நாம் எல்லோரும் உணர்ந்து இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே பங்கேற்று, இந்திய நாட்டை அடிமைத் தலையிலிருந்து மீட்க தன்னைத் தியாகம் செய்து கொண்ட தியாகச் செம்மல்கள் பலருக்கு நாம் விழாக்களை எடுத்துக்கொண்டு வருகிறோம். இன்றைய தினம் இந்த ஆண்டை பாரதியார் நூற்றாண்டு விழாவாக கொண்டாடுவதற்கு ஒன்றிய மட்டத்திலிருந்து மாநில மட்டம் வரையில் இந்த ஆண்டு முழுவதும் பாரதியார் நூற்றாண்டு விழாவை மிகச் செம்மையாகவும், சீராகவும் கொண்டாடி வருவதைப் பார்த்த இந்த நாட்டிலே இருக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், தேசிய உணர்வைப் பெற்றவர்களும் பாராட்டுகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லியாகவேண்டும்.

அதைப்போன்று சென்ற ஆண்டிலே நம்முடைய தமிழகத்தை வறட்சி ஆட்கொண்ட நேரத்திலே போர்க் காலத்திலே எடுக்க வேண்டிய நடவடிக்கை போல் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அந்த வறட்சியை நம்முடைய முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் விரட்டி அடித்தார்கள் என்பதை இந்த நாட்டிலே நடைபெற்ற நல்ல காரியங்கள் வாயிலாக நாம் உணர்ந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ 50 கோடி ரூபாய்க்குமேல் செலவிட்டு, பல நல்ல காரியங்கள் இந்த வறட்சி நிவாரணப் பணியின்கீழ் செய்யப்பட்டிருப்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். எங்கு பார்த்தாலும் ஆழ்குழாய்க் கிணறுகளையும் நெடுஞ்சாலைகளையும் இந்த வறட்சி நிவாரணப் பணியின்கீழ் செய்திருக்கிறோம்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 300-க்கு மேற்பட்ட ஆழ்குழாய்க் கிணறுகளை இந்த வறட்சி நிவாரணப் பணியின்கீழ் செய்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

500-க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற ஒவ்வொரு இடத்திலும், என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியில், ஆழ்குழாய்க் கிணறுகளும், நெடுஞ்சாலைகளும், இணைப்புச் சாலைகளும் அமைத்திருக்கிறார்கள் என்பதை நோக்கும் போது அங்கே இருக்கின்ற பல்தரப்பட்ட மக்களும், பல இயக்கங்களையும் பல கட்சிகளையும் சேர்ந்த மக்களும் பாராட்டுகிறார்கள் என்பதை அன்றாடம் நான் அறிந்துவருகிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நனவாக்கும் வகையிலே இன்றைய தினம் தன்னிறைவுத் திட்டம் என்ற அரிய திட்டத்தை உலகத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவுக்கு, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டிலே செயல்படுத்தி, இந்தத் திட்டத்தின்கீழ் பல ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்து பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியிலும் ஏறத்தாழ 3 ஒன்றியங்களில்—பள்ளிப்பட்டு ஒன்றியம், ஆர். கே. பேட்டை ஒன்றியம், திருத்தணி ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்கள் அடங்கி இருக்கின்றன. அதில் இரண்டு ஒன்றியங்கள் தன்னிறைவுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆர். கே. பேட்டை ஒன்றியத்தை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளவில்லை. அதனால் அங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அந்த ஒன்றியத்தையும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். இதிலிருந்து எந்த அளவுக்கு அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு நன்மை அளிக்கின்ற திட்டமாக இந்த தன்னிறைவுத் திட்டம் இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை விவசாயிகளின் வாழ்க்கை வளம்பெற ஆற்றுப்பாசனம் முக்கிய கூறாக அமையும். அப்படிப்பட்ட ஆற்றுப்பாசன திட்டத்தை இந்த அரசு நல்ல முறையில் நிறைவேற்றி, தண்ணீரை பாதுகாத்து ஏழை எளிய விவசாயிகளுக்கு நல்ல நன்மைகளைச் செய்து வருகின்றது என்பதைத் தெரிவித்து, என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





என்னுடைய தொகுதியிலே பள்ளிப்பட்டில் ஏறத்தாழ 10 ஏரிகள், ஆர். கே. பேட்டையில் 7, 8 ஏரிகள் எப்போதும் நீர் நிரம்பாமலே இருக்கின்றன. கோடையிலே அந்த ஏரிகள் வற்றிவிடுகின்றன. அங்கே நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை இருக்கிறது பொன்னை என்ற ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டினால் அதிலிருந்து தண்ணீர் பாய்ச்சி, அங்கிருக்கின்ற ஏழை எளிய விவசாயிகள் வாழ்க்கை வளம்பெற வசதியாக இருக்கும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வரவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இரு மொழிக் கொள்கைக்கு ஏற்ப இன்றைய தினம் நீதிமன்றங்களிலே சொல்லப்படுகின்ற தீர்ப்புகளும் ஆணைகளும் தமிழிலே எழுதப்பட வேண்டுமென்ற ஒரு ஆணையை பிறப்பித்து, பிப்ரவரித் திங்கள் 1-ந் தேதி முதல் அந்த ஆணை அமுலுக்கு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை நிறைவேற்றிய நம்முடைய புரட்சித் தலைவர் அரசை நான் மனதார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-50]

அதேபோன்று ஏழை விசாயிகளுக்காக குறுகிய காலக் கடனை மேலும் நீட்டிக்கவேண்டும் என்று சென்ற ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் நீட்டித்திருப்பதை விவசாயிகள் எல்லாம் பாராட்டுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு இப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு நல்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமனியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையின்மீது நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைக் கூறலாம் என்று விரும்புகிறேன்.

“அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை”.

என்று வள்ளுவர் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். அந்த குறளுக்கொப்ப தர்மத்தின் தளநாயகன் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசு ஆற்றிய ஆற்ற இருக்கின்ற நல்ல பல பணிகளைப் பற்றிக் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் கூறிய கருத்துக்களை நான் வரவேற்கிறேன்.

[1982 பிப்ரவரி 4

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இருக்கிற நிதியாதாரங்களை வைத்து கோமுகி அணைப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அடிப்படை தேவைகளை உருவாக்குகின்ற முயற்சியில சுற்றுலாத் துறை ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பிச்சாவரம் பகுதியை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக்க வேண்டுமென்ற விருப்பத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் நடக்கும் இந்த அரசு அதற்கான முயற்சியில் எந்தெந்த வகைகளில் திட்டங்களைப் போட்டிருக்கிறது. எந்தெந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்காக எவ்வளவு தொகையைச் செலவிட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

(முற்பகல் 9-30.)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய விடையில் ஒரு பகுதியிலேயே பிச்சாவரத்தை முதல் கட்டத்தில் சுற்றுலாத் தலமாக மேம்படுத்துகின்ற திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம் என்று தெரிவித்திருக்கிறேன். அங்கே பல்வேறு விதமான திட்டங்கள் நிறைவேற்றுப்பட்டு வருகின்றன. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் மகிழத்தக்க வகையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற திட்டங்களைப்பற்றி விரிவாகச் சொல்ல இயலும்.

**தமிழக விவசாயிகள் சங்கம் அரசின் முன்வைத்த கோரிக்கைகள்**

*வினா எண். 30—**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகள் சங்கம் 9 அம்ச கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றுள் எந்தெந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) மற்றும் (ஆ): ஒரு விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*281-290ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



1982 பிப்ரவரி 4]

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவரவர்களே, இடு பொருட்களின் விலை இரண்டு மடங்காக ஏறியிருக்கின்ற நேரத்தில், நெல், கரும்பு போன்ற உற்பத்திப் பொருட்களின் விலை கட்டுப்படியானதாக இல்லை என்று இந்தியா பூராவிலும் கிளர்ச்சி நடக்கும் நேரத்தில் ஏற்கனவே பத்தாண்டுகளுக்கு முன்பிருந்தது போல் நெல்லின் விலையை 115 என்றும், கரும்பின் விலையை 150 என்றும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றியமைப்பதற்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளிக்காவிட்டாலும் அதை வலியுறுத்துவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, தொடர்ந்து நாம் விவசாய விளைபொருள்கள் விலை நிர்ணய ஆணைக் குழுவிடம் நம்முடைய கருத்தை வலியுறுத்தி வருகிறோம் மைய அரசினிடத்தில் தொடர்ந்து கூறிக் கொண்டு வருகிறோம். இனியும் தொடர்ந்து வலியுறுத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவரவர்களே, 60 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் இங்கே அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் வருமானமே இல்லாதவர்கள் அல்லது அனாதைகளாக இருப்பவர்கள் ஆகியவர்களுக்கு மட்டும் தான் அல்லது வாரிசே இல்லாதவர்களுக்கு மட்டும்தான் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்குவதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. இதைத் தளர்த்தி வருமானம் குறைவாக இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு—அவர்களுக்கு 60 வயது முடிந்திருந்தால் அவர்களுக்கும் கிடைக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை விரிவாக, பரவலாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அரசு அதைப்பற்றி ஆராயும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளின் கோரிக்கைகளின் ஒன்றான மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக அரசாங்கம் அறிவித்த சலுகைகளோடு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் கடன் சம்பந்தமான கோரிக்கைகள் இன்னும் தீர்க்கப்படாமல், வட்டி தள்ளுபடி சம்பந்தமான கோரிக்கைகள் அப்படியே இருக்கின்றன. அரசாங்கம் வைத்துள்ள விவர அறிக்கையில், உணவுப் பொருள்களை பொருத்த மட்டில் 1977 அக்டோபர் முதல் இந்திய நாடு முழுவதும் ஒரே மண்டலமாக்கப்பட்டு போக்குவரத்து தடைகள் முழுதும் நீக்கப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது ஒவ்வொரு தாலுக்காவிலேயும் செக்

நம்முடைய அரசு எப்போதும் தமிழர்மீதும் தமிழ் மொழியின்
மீதும் நிலையான பற்றினை வைத்துக் கொண்டிருக்கின்றது.
அதன் காரணமாகத்தான் மதுரையிலே உலகத் தமிழ் மாநாட்
டினை நடத்தியது. அதுமட்டுமல்ல. பாரதியார் பல்கலைக் கழ
கமும் பாரதிதாசன் பல்கலைக் கழகமும், காரைக்குடியிலே அமைய
இருக்கின்ற பல்கலைக் கழகமும் போன்ற பணிகள் தமிழக அரசி
னுடைய தமிழ் பற்றுக்குச் சான்றாக இருக்கின்றது. அடுத்து
வறட்சிப் தணிப்பு பணிகளுக்காக கிட்டத்தட்ட 55½ கோடி ரூபாய்
ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன்மூலம் நடைபெறுகின்ற பணிகள்
மூலம் தமிழகத்திலுள்ள கிராமங்களும் மற்ற பகுதிகளும் நல்ல
முறையில் வளர்வதற்கான வகையிலை தமிழக அரசு பணியாற்றிக்
கொண்டிருக்கின்றது.

அதேபோன்றே உணவுதானிய வினியோகத்தில் நல்ல பல
ஏற்பாடுகளை நம்முடைய மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்
சிறப்பாகச் செய்து இருக்கிறார்கள். இதற்கு முன்பிருந்த அரசின்
ஆட்சியின்போது பொது மக்கள் உணவுப் பண்டங்களைப் பெறு
வதில் பட்ட கஷ்டங்கள் பலப்பல. ஆனால் இப்பொது, சிறப்
பான திட்டங்களின் மூலம் நல்ல முறையில் தமிழக அரசு உணவு
தானியங்களை வினியோகம் செய்து வருகின்றது.

அடுத்து வளர்ச்சிப் பணிகளுக்கென 711 கோடி ரூபாய்க்கு
திட்டமிட்டு அந்தத் திட்டத்தின் மூலம் தமிழக மக்களுடைய
வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றி இந்த ஆளுநர் உரை
யிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன்.

அடுத்து வேளாண்மைத் துறையில் பயிற்சி-பார்வையிடல் திட்
டத்தையும் வேளாண்மைப் பொருள் விற்பனையை ஒருங்கிணைந்த
முறையிலே மேம்படுத்தும் திட்டத்தையும் உலக வங்கி உதவியுடன்
கிட்டத்தட்ட 102 கோடி ரூபாய் அளவில் நிறைவேற்ற திட்டங்
கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களினுடைய
பலன்களை முழுமையாகப் பெறுவதற்கு நம்முடைய தமிழக அரசு
பொதுமக்களை அழைத்திருக்கின்றது. அந்தப் பணிகளின் மூலம்
பல நன்மைகள் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

அடுத்து மாநில வேளாண்மைப் பொருள் விற்பனை வாரி
யத்தை சட்ட முறையானதாக ஆக்கவும் எண்ணெய் உற்பத்தி
யைப் பெருக்கவும் நம்முடைய தமிழக அரசு நல்ல திட்டங்களை
வகுத்து இருக்கின்றது.

உழவர்களின் கடன் சுமையைக் குறைப்பதற்காக கடந்த நிதி
ஆண்டிலே சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டங்களின் பலன்
கள் நல்ல முறையிலே ஏழை விவசாயிகளுக்கு சென்று சேர்கின்ற
வகையிலே கண்காணிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே
விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்ததாக நமது வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கொண்
வந்திருக்கின்ற நிலப்பதிவேடு சட்டத்தின்படி நிலப்பதிவேடுகளில்
நில உரிமையாளர் குத்தகைதாரர் முதலிய விவரங்களை எழுதி
வைக்கும் திட்டம் நல்லதொரு திட்டமாகும். முன்பு விவசாயி
களுக்குப் போதிய பலன்கள் முழுமையாக கிடைக்காத நிலைமகள்
இருந்துவந்தன. அந்தக் குறைபாடுகளை நீக்க நம்முடைய
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக
நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதுபோன்றதொரு திட்
டத்தினை நான் சார்ந்திருக்கின்ற காஞ்சிபுரம் தொகுதிக்கும்
விரிவு படுத்த வேண்டும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை
அமைச்சர் அவர்களிடம் இந்த நேரத்திலேகேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உலகத்திலேயே யாரும்செய்யாத சாதனையாகத்தன்
னிறைவுத் திட்டதின் மூலம் சாதாரண ஏழை கிராம மக்கள் நகர்
புறத்தில் உள்ளதுபோன்ற வசதியினைப்பெறுவதற்கான ஏற்பாடு
களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி செயல்
படுத்தி வருகிறார்கள் இதன்மூலம் ஏழையின் சிரிப்பில் இறை
வனைக்காண்கிறேன் என்ற பேரறிஞர் அண்ணாவின் பொன்
மொழி நிறைவேற்றப்படுவதாக நான் எண்ணி மகிழ்ச்சியடை
கிறேன்.

அடுத்து தமிழகத்தில் மிகச் சங்கடமான ஒரு சூழ்நிலை மின்
சக்தி உற்பத்தியைப் பொருத்தவரையில் இருந்து வருகின்றது.
கடந்த பல ஆண்டுகளாக அந்தத் துறை போதிய அளவுக்கு வள
ராத காரணத்தால் தேவைக்கேற்ற மின் உற்பத்தி கிடைக்க
வில்லை. மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக திட்டங்கள்
ஆளுநர் அவர்களது உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.
இந்தத் துறை மேலும் மேலும் வளர்கின்ற வகையிலே கூடுதல்
கவனம் செலுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களை
நான் இந்த நேரத்திலே விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கான அனைத்து
ஏற்பாடுகளையும் விரைந்து செய்து திட்டங்களைச் சிறப்பாக
உருவாக்கியுள்ளது. பஞ்சாப், அரியானா போன்ற மாவட்டங்
களில் தொழில்துறை அதிகமாக வளர்ந்து வருகின்றது.
அந்தந்த மாநிலங்களில் உள்ள தொழிற்சாலைகள் நல்ல முறையில்
இயங்குவதற்கு என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது
என்பதை நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள்
கண்டறிந்து அதுபோன்ற வசதி வாய்ப்புகளை நம்முடைய
தமிழகத்திலும் செய்து, நமது தமிழகத்தைதொழில் துறையில்
சிறந்து விளங்கச் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கை-
களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்களை நான்
வேண்டி கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின்
பெரு முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட காஞ்சிபுரம் ஜரிகைத்
தொழிற்பேட்டை அது எந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்டதோ,

அந்த நிலையிலேயே இருந்து வருகிறது. அந்தத் தொழிற் பேட்டையில் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அதற்குத் தேவையான வசதிகளை செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, காஞ்சிபுரம் பகுதியை பின் தங்கிய பகுதி யாக அறிவித்து, பின் தங்கிய பகுதிக்கு தேவையான அத்தனை வசதி வாய்ப்புகளையும் நிறைவேற்றி, இன்னும் பல தொழிற் சாலைகளை அங்கே உருவாக்கி அந்தப் பகுதியை மேன்மை படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டங்களையும். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும் என்று அவர்களை வேண்டி விரும்பி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் இரு மொழிக் கொள்கையை பின்பற்றி நம்முடைய தமிழக அரசு நீதி மன்றத்திலும் தமிழிலே யே ஆணைகள் பிறப்பிக்கப் படவேண்டும் என்று கூறிய கருத்தை பாராட்டி வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் ஓரே ஒரு கருத்தினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சிவில் ரூல்ஸ் ஆப் பிராக்டிஸ் என்ற ரூலிலே ஆங்கிலத்தில்தான் ஆணை பிறப்பிக்கப்படவேண்டும் என்று உள்ளது. தமிழ் ஆட்சி மொழி யாக வருவதை இது தடுக்கிறது. ஆகவே முதலிலே இதைத் திருத்தி சட்டதிருத்தம் கொண்டுவந்தால் தான் தமிழை ஆட்சி மொழியாக பின்பற்ற முடியும் என்ற வகையில் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களை அதை திருத்துவதற்கான நட வடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பண்டைத் தமிழர்களின் பண்பாட்டையும் நாகரீகத் தையும் அறிந்து அது பற்றி ஆய்வு மேற்கொள்வதற்காக தேசிய நிறுவனத்தில் ஓத்துழைப்புடன் நம்முடைய அரசு தொல் பொருள் இலாகா மூலம் கண்டு பிடிக்கும் கண்டு பிடிப்புகள் வரலாற்று வெளியீடுகள் ஆகியவைகள் நல்ல பணி என்கிற முறையில் வாழ்த்தி வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு அவைகளை தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள பலர் அறிந்துக் கொள்வ தற்கு வாய்ப்பாக அவர்களின் அறிக்கைகளை நூல்களாக வெளியி படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சுகாதார அமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் இன்டக்கிரேடட் ஹெல்த் ஸ்கீம் முறையை மனதாரப்பாராட்டு கிறேன். அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீராகவும் சிறப்பாகவும் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் எதிர்கட்சி





நண்பர்கள் பலர் பலவிதமான கருத்துக்களை அதன் மீது தெரி வித்தனர். அவர்களுக்கு ஒன்றை நான் கவனப்படுத்த விரும்பு கிறேன். அவர்கள் ஆண்ட காலத்திலே பலப்பல பத்திரிகைகள் எந்தவிதமான நிலைமையில அல்லலுற்றன பாடுபட்டன என்பதை அவர்கள் மறந்துவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அலையோசை, மக்கள் குரல் போன்ற பத்திரிகைகளின் காரியால யங்கள் தாக்கப்படவில்லையா? அது மட்டுமல்ல, வெளி மாநிலங் களிலுள்ள சட்டம் ஒழுங்கு நிலைமையை ஒப்பிடுங்கால், அவர்கள் எப்படி உயிருக்கு கூட பாதுகாப்பு இல்லாமல் அங்கு பரிதவிக்கிற நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை பார்த்தால், நம்முடைய தமிழகத்தில் நல்ல பாதுகாப்பு ஏற்பாடுகளோடு சட்டம் ஒழுங்கை அமைதியான முறையில் நிலைநாட்டுவதற்கு, நம்முடைய இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பது புரியும். ஆகவே நல்ல விஷயங்களை பாராட்ட மனம் இல்லாவிட்டாலும், குற்றங்குறைகளை மட்டும் சொல்லும் மனப்போக்கை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதைச் சொல்கின்ற நேரத்தில், வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழும்குடி'' என்று வள்ளுவன் கூறியதைப் போல, தமிழக மக்கள் எப்போதும் எங்கள் புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கு கட்டுப்பட்டு அவர்கள் காட்டிய வழியில் நின்று செயலாற்றுவார்கள் என்று சொல்லி எனக்குப் பேச வாய்ப்பளித்த மாற்றுத்தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே போன ஆளுநர் உரைக்குப் பின் தமிழக அரசியலில் ஜனநாயகத் திற்கு விரோதமாக ஒரு ஷிப்ட் ஏற்பட்டுள்ளதை, ஒரு நீக்கம் ஏற்பட்டுள்ளதை குறிப்பிட ஆளுநர் அவர்கள் விட்டு விட்டார் என்று. முதலிலே கூற விரும்புகிறேன் அதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை, சர்வா திகார எதிர்ப்பைக் கைவிட்டு இந்திராகாங்கிரஸீடன் அரசியல் உறவு கொண்டுள்ளது என்பது அந்த ஷிப்ட் இடையிலே ஏற் பட்டிருக்கிற ஒரு நீக்கம். திருப்பத்தூர் இடைத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எடுத்திருக்கக் கூடிய ஒரு நிலைமை, அந்தத் திசையில் ஒரு மைல் கல்லாக இருந்தது என்று கூற விரும்புகிறேன். இப்படி நான் சொன்னால், நம்மு டைய முதல்வர் அவர்கள் அதை நிச்சயமாக மறுத்தளிப்பார்.

[நண்பகல் 12-00]

செத்தவர்கள் இடத்தில் போட்டி போடக் கூடாது. ஏற்கனவே அந்த இடத்தில் ஜெயித்த கட்சிக்குத்தான் அதை விட்டுக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு கோட்பாட்டுக்கு உட்பட்

டுத்தான் அங்கே நாங்கள் ஆதரித்தோம் என்று அவர்கள் கூறுவார்கள். நான் கேட்க விரும்புவது ஒன்றுதான். அ.தி.மு.க.வின் தேர்தல் போட்டியின் துவக்க விழாவே செத்தவர் இடத்தில்தான் ஆரம்பித்தது, திண்டுக்கல்லில் நான் கேட்க விரும்புவது, தி.மு.க. உறுப்பினர் இருந்த திண்டுக்-கல்லில் தோன்றாத இந்தக் கோட்பாடு, ஸி.பி.ஐ. உறுப்பினர் திரு. முருகையன் அவர்கள் குத்தி கொலைசெய்யப்பட்டு செத்ததால் ஏற்பட்ட அந்த இடைத் தேர்தலில் தோன்றாத இந்தக் கோட்பாடு மார்க்ஸிஸ்ட் கட்சி உறுப்பினர் இறந்ததால் மதுரை கார்பரேஷனில் காலியான இடத்திற்குப் பொருந்தும் என்று திட்டவட்டமாகக் கூற மறுக்கும்போது, முதல்வர் அவர்கள் மறுக்கும்-போது இந்தக் கோட்பாடு எப்படி திருப்பத்தூர் இடைத் தேர்தலில் கராராகத் தோன்றியது என்பதுமட்டுமல்ல அமல்படுத்தப்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே இந்த வாதம் செல்லாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அ.தி.மு கவின் நிலைக்கு அதுஅல்ல உண்மைக் காரணம் என்பது எங்கள் கருத்து. திருமதி காந்தி அவர்கள் நம்பிக்கையைப் பெறுவதற்கு அ.தி.மு.க. ஆதரவு ஒரு குட்வில் ஜெஸ்ச்சர் ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக அது இருந்தது. இந்த முயற்சி வெற்றி கண்டால் கடந்த காலத்திலிருந்த அந்த அரசியல் உறவை மீண்டும் புதுப்பிப்பதற்கான முயற்சியாகவே இருந்தது. திருப்பத்தூரில்அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்று நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் பேச்சுக்களே இதற்கு சான்று.

தேர்தல் பிரச்சாரம் முடிந்து திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு திரும்புகிற வழியில் திருச்சியில் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். அப்படி பேட்டி கொடுத்த போது, மக்கள் குரல் 30–11–81 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறி இருப்பதாக வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருப்பதை மக்கள் குரலில் இருந்து கோட் செய்கிறேன். "திருப்பத்தூர் தேர்தலில் உறவு காரணமாக அண்ணா தி.மு.கழகத்திற்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையே ஒரு நல்லெண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இது இரண்டு கட்சிகளிடையே எதிர்காலத்தில் மதிப்பையும் நம்பிக்கையையும் பலப்படுத்த உதவும்."

மக்கள் குரல் பொதுவாக திரித்துக் கூறாது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஆகவே திருப்பத்தூரில் இந்திராகாங்கிரஸிக்கு அளித்த ஆதரவு வெறும் மரபுப் பிரச்சனை அல்ல. இரண்டு கட்சிகளுக்கிடையேயும் எதிர்காலத்தில் மதிப்பையும் நம்பிக்கையையும் பலப்படுத்த முதல்வர் அவர்கள் உபயோகித்த வார்த்தைகள்தான்





இது இரு கட்சிகளிடையே எதிர்காலத்தில் மதிப்பையும் நம்பிக்கையையும் பலப்படுத்த உதவும் என்பது. மாணபுமிகு முதல்அமைச்சர் அவர்கள் கூறலாம். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று முடிவு செய்வது எங்களது உரிமை அல்லவா என்று கேட்கலாம். ஒத்துக்கொள்கிறேன். உங்களுடைய கட்சி என்ன செய்ய வேண்டும் என்று முடிவு செய்யக் கூடிய உரிமை உங்களைச் சார்ந்ததுதான். ஆனால் மக்களுக்குக் கொடுத்த அரசியல் வாக்குறுதியை மீறுவது உங்களது உரிமை அல்ல என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச்சொல்ல விரும்புகிறேன். எங்களைப் பார்த்து நீங்கள் கூறலாம் எங்களிடம் 1980-ல் தொகுதி உடன்பாடு மட்டும்தான் செய்தோம் என்று சொல்லலாம். ஆனால் 1980–ல் நடந்த இரண்டு தேர்தல்களிலும் மக்களிடம் என்ன சொன்னீர்கள்? அதிலிருந்து தப்பிக்க முடியாதல்லவா.'

தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட சில நிவாரணங்களைப் பற்றி மட்டுமல்ல நான் குறிப்பிடுவது. ஒரு முக்கியமான அரசியல் உறுதியை ஒவ்வொரு கூட்டத்திலும் அ. தி. மு. க. தலைவர்கள் கூறியுள்ளார்கள். நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் ஒரு பொலிட்டிக்கல் அஷ்யூரன்ஸ், அரசியல் வாக்குறுதியை மக்களுக்குக் கொடுத்தார்கள். 1980—ல் நடந்த இரண்டு தேர்தல்களிலும் திருமதி காந்தி அவர்களைப் பற்றி மக்களிடம் என்ன கூறினார்கள் என்பது அண்ணா பத்திரிகையில் வந்திருக்கிறது. திருமதி காந்தி அவர்களைப் பற்றிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் நிர்ணயிப்பைப் பற்றி கோட் செய்கிறேன்.

"இந்திரா காந்தி ஆட்சிக்கு வந்தால் மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படும். இது ஒரு நிர்ணயிப்பு."

"மக்கள் ஓட்டளித்து ஆட்சியில் அமர்த்தினால் அந்த மக்களையே ஒரு கைபார்க்கலாம் என்று என்ற நோக்கத்தில் கை சின்னத்திற்கு ஓட்டு கேட்கிறார்கள். இது இன்னொரு நிர்ணயிப்பு."

"11 ஆண்டு பிரதமராக இருந்தவர் இந்திரா அவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடுள்ளன. இப்படிப்பட்டவர்களால் ஜனநாயகம் காக்கப்படமாட்டாது. இது இன்னொரு நிர்ணயிப்பு."

எல்லாவற்றிற்கும் மேலாகக்கூறினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். "நம்மை அடிமைகளாக ஒரு கட்சி குடும்பத்தலைவியின் அடிமைகளாக ஆக்க திருமதி இந்திரா திட்டமிடுகிறார்." ஆக இப்படி ஒரு கட்சி சர்வாதிகாரத்தை

எதிர்ப்பேன் என்றுஉறுதியளித்து ஒரு குடும்ப சர்வாதிகாரத்தை எதிர்ப்பேன், எச்சரிக்கையாக இருங்கள் என்று மக்களையும் எச்சரித்தார்கள்.

இதே நம்முடைய முதல்வர், திருப்பத்தூர் இடைத் தேர்தலுக்கு 10 நாட்களுக்கு முன்னால், திருமதி இந்திராகாந்திக்கு அனுப்பிய பிறந்தநாள் செய்தியில் என்ன கூறுகிறார்? வாழ்த்துச் செய்தி அனுப்புவதை நான் தவறு என்று சொல்லவில்லை. பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி அனுப்பலாம். ஆனால், அதிலுள்ள உள்ளடக்கத்தைப் பார்க்க வேண்டும். 1981-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ஆம் தேதிய அண்ணா நாளிதழில் வந்துள்ளதை நான் படிக்கிறேன்.

இந்திராகாந்தி அம்மையாருக்கு நமது முதல்வர் எழுதுகிறார். '' நமது நாட்டின் எதிர்காலத்தை சிறப்பாக அமைப்பதில் இன்றியமையாப் பணியினை ஆற்றியுள்ளீர்கள்.... நவ இந்தியாவை உருவாக்க வேண்டுமென்று நீங்கள் ஈடுபட்டிருக்கும் கடின முயற்சி வெற்றி பெற, சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டும் என்ற எண்ணம் ஈடேற, உங்கள் பின்னால் இந்திய மக்கள் அனைவரும் உறுதியாக இருக்கிறார்கள் '' என்று. நான் முதல்வரைக் கேட்கிறேன்? நவ இந்தியாவை உருவாக்கத்தான் திருமதி காந்தி உங்கள் சர்க்காரை டிஸ்மிஸ் செய்தார்களா? நான் கேட்கிறேன்? சமத்துவ சமுதாயம் படைக்கத்தான் பினாமி ஒழிப்புச் சட்டத்தை திருமதி காந்தி நிராகரித்தார்களா? அப்படி நிராகரித்துவிட்டு, அதை உங்களுக்கே திருப்பி அனுப்பினார்களா? இதுவா நவ இந்தியாவில் உருவாக்கும் சமத்துவ சமுதாயப் படைப்பு?

திருமதி காந்தியைப் பற்றி முதல்வர் செய்த எச்சரிக்கைகள் முழுக்க முழுக்க உண்மையாகிக் கொண்டிருக்கும்போது, அன்றைக்கு அவர் சொன்னது உண்மையாகிக் கொண்டு வருகின்ற நேரத்திலே, '' நவ இந்தியாவை உருவாக்குபவர் திருமதி காந்தி'' என்றும், '' சமத்துவ சமுதாயம் படைக்கக் கூடியவர் திருமதி காந்தி '' என்றும் கூறுவது சர்வாதிகார ஆட்சிக்குட்பட்டுக் குஞ்சம் கட்டுவதாகாதா? என்று நான் கேட்க விரும்புகிறேன். இருப்பினும்,

' Every cloud has its silver lining!

என்று கூறுவார்கள். ஒவ்வொரு மேகத்திற்கும் ஒரு வெள்ளிக் கோடு இருக்கிறது என்பதுபோல், இது இருக்கிறது.

அப்படி இருந்தாலும், சில அமைச்சர்களின் பேச்சுக்கள் நம்பிக்கை ஊட்டக்கூடிய அளவிற்கு அமைந்திருக்கிறது. சமீபத்தில் மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து கோவையில் பேசியதை நான்



கோட் பண்ண விரும்புகிறேன். 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் தேதி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளிவந்துள்ளதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். '' இந்திரா காங்கிரஸ் கட்சி, காங்கிரஸல்லாத அரசுகளை டிஸ்மிஸ் செய்வதாக பிளாக்மெயில் பண்ணுவதாகவும், அச்சுறுத்துவதாகவும் '' விவசாய அமைச்சர் திரு. காளிமுத்து கூறினார். இது ரொம்ப கரெக்ட். '' இந்தப் பார்வையை கைவிட வில்லையானால், அ.தி.மு.க. பதிலடி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகுமென எச்சரித்தார் '' என்பது அதைவிட கரெக்ட். அதேபோல், '' திராவிட பிணங்களைக் கொத்தித் தின்பதற்கு காத்து நிற்கும் கழுகுடன் இந்திரா காங்கிரஸ் கட்சியை ஒப்பிட்டார் ''—அதுவும் சரிதான். அதேபோல், '' ஊழலின் தூண்களை பாதுகாக்கும் இந்திரா காங்கிரசிற்கு, மற்றவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை கூறுவதற்கு தார்மீக உரிமை கிடையாது என்றார் கிடையாதுதான். அதுவும் கரெக்ட். '' டெல்லி, உத்திரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் அதன் ஆட்சி முறையை பார்த்த பின், அவர்களுக்கு தமிழகத்தில் சட்டம் அமைதி நிலையைப் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கு? அருகதை கிடையாது தான். அதேபோல், '' அ.தி.மு.க.வை சீனிலிருந்து அகற்றி, அதாவது சித்திரத்திலே இருந்து அகற்றி இந்திரா காங்கிரஸ் அதிகாரத்திற்கு வர முயற்சிக்கிறது '' என்றார். அதுவும் உண்மைதான். கடைசியாக ஒரு வேண்டுகோள். '' இதற்கு கருவியாக பயன்படாதீர்கள் என்று தி.மு. கழகத்தாரை அவர் கேட்டுக் கொண்டார் ''. மிக மிக அவசியமான வேண்டுகோள் இது........

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் திரு. காளிமுத்து அவர்கள் விட்ட வேண்டுகோளை, மிக அவசியமான வேண்டுகோள் என்று எடுத்துச் சொன்னார்கள். வேண்டுகோள் விடுக்கின்றவர்கள், அதற்கு முன்னாலே அந்த வேண்டுகோளிலே என்ன கருத்தைச் சொல்லப் போகிறார்களோ, அதற்கு ஏற்ப முன்னாலே நடந்திருக்க வேண்டும். தாங்கள் நடந்த போதெல்லாம் வேறுவிதமாக நடந்து கொண்டு, மற்றவர்களுக்கு அறிவுரை சொல்வதை மற்றவர்கள் எளிதாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை உமாநாத் அவர்கள் தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தே உணர்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** திரு. காளிமுத்து அவர்கள் விடுத்த வேண்டுகோளை நான் படித்துக் காட்டினேன். அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் அவரவர்களுடைய இஷ்டம் அவர் கூறியது, அ.தி.மு.க.வின் பிரீ-திருப்பத்தூர் பொசிஷன். திருப்பத்தூர் தேர்தலுக்கு முன்னாலே........

திரு. ப. நெடுமாறன் : பேராசிரியர் அவர்கள், அவர்கள் வேண்டுகோளை பின்பற்றி இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் பின்பற்றாததின் காரணமாக நீங்கள் பின்பற்றவில்லையா ? அல்லது நீங்களாகவே பின்பற்றலாம் என்று உமாநாத் அவர்கள் சொன்னாரே, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்

[பிற்பகல் 12–10]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அறிவுரை சொல்வதற்கே ஒரு தகுதி வேண்டுமென்ற அடிப்படையில்தான் வேண்டுகோளைப் பற்றிய விளக்கத்தைச் சொல்ல வேண்டும். சந்தேகம் கேட்பவர்கள் தங்களைப் பார்த்து சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக் கொண்டு பிறகு கேட்க வேண்டும். மாண்புமிகு உமாநாத் அவர்கள், அவர்கள் கட்சியின் அடிப்படையில் ஒரு கோணத்தில் கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதில் மறுப்பு இல்லை. ஆனால், அடுத்தவர்கள் கையைக் கொண்டு எங்கள் கண்களைக் குத்த முயற்சிக்கக் கூடாது—அந்த முயற்சி உமாநாத் அவர்களுக்கு இருக்காது என்று நம்புகிறேன். அந்தக் கருத்துக்கு நாங்கள் ஆட்பட வேண்டுமென்று இடையில் உமாநாத் அவர்கள் சொல்வார்களானால் அந்தக் கருத்துக்கு அவர்கள் சொந்தக்காரர்கள்தானா என்பதைத் தெரிந்து கொண்டு சொல்ல வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : எங்களுடைய பொசிஷன் எப்போதும் தெளிவாக இருக்கிறது. இந்த நாட்டைச் சர்வாதிகாரத்திற்கு இழுத்துச் செல்லக்கூடிய சர்வாதிகாரத்தை எதிர்க்க தி.மு.க. அ.தி.மு.க. தமிழ் நாட்டின் கோடிக் கணக்கான மக்கள் முன் வரவேண்டுமென்பதுதான் எங்களுடைய நிலையான பொசிஷன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : அதுமட்டுமல்ல; கனம் உமாநாத் அவர்கள் தங்களையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போக வேண்டுமென்று கேட்கிறார்களா ?

திரு. ரா. உமாநாத் : சர்வாதிகார சக்தியைத் தகர்பதற்கு எங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் ஏற்கெனவே அந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார். இந்த விவாதத்திற்குப்பதில் கூறும்போது கட்சியின் தலைவரான மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிர்ணயிப்பை ஊர்ஜிதம் செய்வார்கள் என்று நம்புகிறேன். அப்படிச் செய்வதுதான் நாட்டின் எதிர்காலத்திற்கும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்கும், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கும் உகந்ததாக இருக்குமென்று ஆழமாக நம்புகிறேன்.





கவர்னர் உரையில் புதிய கருத்துக்கள் எதுவும் இல்லை,
பழைய விஷயங்கள்தான் என்று சொன்னார்கள். எங்கள் கருத்து
—புதியதும் இருக்கின்றன ; பழையதும் இருக்கின்றன என்ப-
தாகும். ஆனால், புதியது சற்றுக் கோணலாக இருக்கிறது. மக்
களுடைய வாழ்க்கைத் தரத்தைக் கடுமையாகப் பாதிக்கும் பிரச்
சினைகளில் தங்களுடைய நிலையை நேராகக் கூற முடியாமல்
இநத அரசு தடுமாறுகிறது என்பது எங்களுடைய கருத்து. இன்று
எல்லாப் பகுதி மக்களையும் துன்பத் துயரத்திற்கு ஆளாக்கும்
பிரச்சினை விலைவாசி உயர்வு பிரச்சினை. இந்த விலைவாசிப் பிர
சினைக்கு மத்திய அரசுதான் பொறுப்பு என இந்த அரசு கூறிய
தாக நினைத்து மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் பதட்ட
மடைந்தார்கள். அவர்கள் பதட்டமடைய வேண்டாம். நம்
முடைய மாநில அரசு அப்படிச் சொல்லவில்லை.

கவர்னர் உரை என்ன கூறுகிறது ? " விலைவாசிப் பிரச்சினை நாட்டின் பொருளாதாரக் கொள்கையுடன் பின்னிப் பிணைந்து நிற்பதால், இக் கொள்கைகளை வகுக்கும் உரிமை பெற்றிருக்கும் மத்திய அரசே விலைவாசிப் பிரச்சினைக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காண முடியும் என்பது பொருளாதார வல்லுநர்கள் கண்ட முடிவு "—இந்தச் சர்க்கார் கண்ட முடிவு அல்ல ; பொருளாதார வல்லுநர்கள் கண்ட முடிவு என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் பதட்டப்பட வேண்டாம். நாங்கள் இந்த அரசைக் கேட்கிறோம். வல்லுநர்களின் கருத்தை யார் கேட்டார்கள் ? நாங்கள் கேட்கிறோம்—உங்கள் கருத்து என்ன? அதைச் சொல்லுங்கள். விலைவாசி உயர்வுக்கு இன்றைக்கு மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்பது உங்கள் கருத்து என்பதை நானறிவேன். ஆனால் அதை ஏன் சொல்லத் தயங்குகிறார்கள் ? Not this Gove nment. What is your position Why not you come out? Why not you asse t that point?

இந்திரா காங்கிரசுடன் உறவு கொள்வதில் கண் வைத்தால் இந்த உண்மைகளைச் சொல்ல முடியாத சங்கடங்கள் வரும். இந்த விஷயத்தில் மாநில அரசு மீது நான் ஒரு குற்றம் கூடச் சாட்டுவேன். திட்டம் போட்டு விலைகளை உயர்த்துவது என்பது மத்திய அரசின் கொள்கை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அந்தக் கொள்கையை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். இதைக் கூறும்போது பலருக்கும் ஆச்சரியமாக இருக்கும். சமீபத்தில் சர்வதேச நிதி நிறுவனத்திடம் மத்திய அரசு கடன் கேட்டபொழுது " அரசுக்கு வருவாய் திரட்ட நீங்கள் விலை நிர்ணயிக்கும் பொருள்

களுக்கு விலைகளை உயர்த்த வேண்டும்'' என ஒரு நிபந்தனையை விதித்தார்கள். அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு ஐ.எம்.எப்.-க்கு அன்றைய நிதியமைச்சர் எழுதுகிறார்—அச்சிடப்பட்ட போர்ஷனை மட்டும் படிக்கிறேன்—'' 1980–81-இல் உருக்கு விலையை 20 சதம் ஏற்றினோம்; நிலக்கரி விலையை 20–25 சதம் உயர்த்தினோம். இதன் மூலம் திட்ட காலத்தில் பத்து மிலியன் ரூபாய் வருவாய் கிடைக்கும்....1980–82-காலத்தில் அலுமினியம் விலையை 18–20 சதம் உயர்த்தினோம். சிமெண்டு விலையை 16 சதம் உயர்த்தினோம். இப்படி நெளிவு சுளிவாக விலை நிர்ணயிக்கும் கொள்கையைத் தொடர உத்தேசித்துள்ளோம்'' என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

Monitored price increase

அப்படிச் சொல்வதால் இன்னும் விலையை உயர்த்துவோம் என்ற அஷ்யூரன்ஸைக் கொடுக்கிறார்கள். நிலக்கரி விலையை உயர்த்துவோம் என்று சொல்கிறார்கள். விலைகளை உயர்த்துவோம் என்ற நிபந்தனையுடன் கூடிய ஐ.எம்.எப். கடனை— நீங்கள் இங்கே ஆளும் கட்சியாக, இருக்கிறவர்கள்— நாடாளுமன்றத்திலே ஆதரிப்பதன் மூலம் விலைவாசியை நீங்களே ஊக்குவிக்கிறீர்கள் என்று பொருள் ஆகாதா - டெல்லிக்குச் சென்றால் விலைவாசி உயர்வை ஆதரிப்பது, சென்னைக்கு வந்தால் விலைவாசி உயர்வை எதிர்ப்பது என்றால்,

Do not have double-faceted change of policy

என்றுதான் நான் சொல்வேன். இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் உறவைப் பலப்படுத்துவதில் கண் வைத்தால் இப்படிப்பட்ட சங்கடங்கள் வரத்தான் செய்யும்.

மின் துறையைப் பற்றி இங்கே ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கிறார்கள்.

மின்சாரக் கட்டண உயர்வைப் பற்றி கூறுகிறீர்கள். மத்திய அரசு ரயில், சரக்குக் கட்டணத்தை உயர்த்துவதனாலும், பெட்ரோல், டீசல் விலைகளை உயர்த்துவதனாலும் மின் கட்டணத்தை உயர்த்த நாங்கள் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டுள்ளோம் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் ரயில் சரக்குக் கட்டண உயர்வு, பெட்ரோல் விலை உயர்வுக் கொள்கையை உங்களுடைய பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் எதிர்க்க வேண்டுமல்லவா? இங்கே எதிர்க்கிற நீங்கள் அங்கே எதிர்க்க வேண்டும் அல்லவா? ஆனால் நேர்மாறாக ரயில் சரக்குக் கட்டண உயர்வு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு கொள்கையை ஆதரிக்கிறீர்கள்



தபால், தந்தி கட்டணம் ரயில் சரக்குக் கட்டணம் பெட்ரோல், டீசல் விலைகளை உயர்த்த வேண்டுமென ஐ.எம்.எப். நிபந்தனை போட்டது. இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டு நிதியமைச்சர் ஐ.எம்.எப்.-க்கு எழுதியுள்ளார். அதன்படி ரயில் கட்டணம் உயர்த்தப்பட்டாகிவிட்டது. தபால், தந்திக் கட்டணம் உயர்த்தப் பட்டு விட்டது. ரயில் சரக்குக் கட்டண உயர்வை பட்ஜெட்டிலே கொண்டுவர வேண்டியதை பைனான்ஷியல் ஸ்டேட்மெண்ட் ஆப் தி மினிஸ்டர் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு உறுப்பினர்கள் எல்லோரும் ரகளை பண்ணி பிறகு சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே கொண்டு வந்தார்கள். தபால் தந்திக் கட்டண உயர்வுக்கும் பட்ஜெட்டிலே கொண்டு வரவில்லை. பை என் எக்ஸிகியூட்டிவ் பியட் தான் கொண்டு வந்தார்கள். பட்ஜெட்டும் இல்லை ஒன்றும் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிபந்தனைகளுடன் ஐ.எம்.எப். கடனை நீங்கள் ஆதரித்திருக்கிறீர்கள். ஆகவே, ரயில்வே சரக்குக் கட்டண உயர்வை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். தபால் தந்தி கட்டண உயர்வை ஆதரிக்கிறீர்கள், பெட்ரோல் டீசல் விலை உயர்வுக் கொள்கையை ஆதரிக்கிறீர்கள் என்று பொருள்.

'' கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்றால் நடக்காது.

'Alliance with Indira-Congress and protection of people cannot go hand in hand'

இந்திரா காங்கிரஸுடன் அரசியல் உறவும் மக்கள் நலன் பாதுகாப்பும் இரண்டும் சேர்ந்து போக முடியாது என்பது எங்களுடையகருத்து. சர்வாதிகார சக்தியுடன் அரசியல் உறவு கொள்ள விரும்பினால் மக்கள் நலனை கைவிட வேண்டும். மக்கள் நலனை பாதுகாக்க விரும்பினால் சர்வாதிகார சக்தியை எதிர்த்து நிற்க வேண்டும். 'You cannot have both the ways

அடுத்து திருமதி காந்தியின் 20 அம்சத் திட்டத்தை வரவேற்பதாக கவர்னர் உரை கூறுகிறது. அது நலிந்த பிரிவினருக்கு உதவும் திட்டம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட விஷயத்தில் மாநில அரசின் நல்ல எண்ணத்தை நான் உணர்கிறேன். ஆனால் ஒரு உண்மையை நான் சொல்லியாக வேண்டும். இந்த 20 அம்சத் திட்டம் மக்கள் நன்மைக்காக, கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நம்புகிறீர்கள். ஆனால் இந்தத் திட்டம், 'is the biggest hoax and deception practiced on our people'

என்பதுதான் உண்மை. 20 அம்சத் திட்டம் என்பது இந்த ஆண்டின் பெரும் ஏமாற்று வித்தை, கண் துடைப்பு என்பது எங்களுடைய கருத்து. கவர்னர் உரையிலிருந்தே அதற்கான உதாரணத்தைக் காட்ட முடியும். நில உச்ச வரம்பை அமல் படுத்துவது என்பது நலிந்த பிரிவினருக்கான ஒரு அம்சம் அவர்கள் சொல்லியிருக்கிற 20 அம்சங்களில் அது ஒரு அம்சம். பினாமி நிலத்தைக் கைப்பற்றினால் தான் அதை அமல் படுத்த முடியும். ஆனால் பினாமி நிலத்தைக் கைப்பற்றும் சட்டத்தை நாம் நிறைவேற்றி அனுப்பினால் திருமதி காந்தி என்ன செய்கிறார். முதலில் ஊறுகாய் பானையில் போட்டு வைக்கிறார். பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து உப்பு அது இது எல்லாம் போட்டு ஏற்க மறுத்து அனுப்புகிறார்கள். 20 அம்சத் திட்டம் ஏமாற்று வித்தை என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும் நலிந்த பிரிவினருக்காக என மத்திய அரசு வடிக்கிற கண்ணீர் முதலைக் கண்ணீர் என்பதற்கு இதைவிட என்ன சான்று வேண்டும். கவர்னர் உரையிலே இருக்கின்ற இந்த சான்றைவிட அதற்கு வேறு என்ன சான்று வேண்டும் உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் கேட்கிறார்கள். சட்டத்திலே ஓட்டை உடைசல் இருக்கிறது, கோர்ட்டிலே நிற்காது என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். மத்திய அரசு இயற்றிய எத்தனை சட்டங்கள் கோர்ட்டிலே செல்லுபடியாகாமல் போய் இருக்கின்றன என்பது தெரியாதா ? 'How many Central Acts were struck down by the Court.'

(பிற்பகல் 12–20).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : சார், அப்படி ஏதாவது ஓட்டைகள் இருந்தால் பிறகு திருத்திக் கொள்கிறார்கள். அதைப் போன்று இந்த அரசும் திருத்திக் கொள்ளலாமே.

திரு. ரா. உமாநாத் : அதைப்போல நாங்களும் பாஸ் செய்துவிட்டு, ஓட்டை இருந்தால் பிறகு நாங்களும் திருத்திக் கொள்கிறோம். உங்களுக்கு மட்டும் தான் அந்த உரிமையா எங்களுக்கு அந்த உரிமை இல்லையா.

அதனால்தான் நான் சொல்ல விரும்புகிறேன், மைய அரசு இயற்றிய சட்டங்கள் பல, நீதிமன்றங்களில் செல்லுபடியாகாமல் போகவில்லையா. அதற்காக மைய அரசு சட்டங்களை இயற்றாமல் கையைக் கட்டி உட்கார்ந்ததா வாயைக் கட்டிக் கொண்டு இருந்தார்களா. இல்லையே. இயற்றித்தானே வருகிறார்கள். அப்படியிருக்க பினாமி ஒழிப்புச் சட்டத்தை பாஸ் செய்து அனுப்பினால் அதை அமல் நடத்த முடியாமல் ஏன் நிராகரித்தார்கள்.





இது சட்டப் பிரச்சினை அல்ல. பினாமி நிலத்தை வைத்து நிலப்பிரபுக்களைக் காப்பாற்ற, அவர்கள் சட்ட விரோதமாக வைத்த நிலத்தைக் காக்க அவர்களை மேலும் கொழுக்க வைக்க. இதுதான் இருபது அம்சத் திட்டம்.

ஊழலை ஒழிப்பது அரசாங்கத்தின் ஒரு பிரதான இலட்சியம் என்கிறீர்கள். ஆனால் ஊழல் செய்பவர்களுக்குப் பரிசளிப்பது தான் நான் கண்ட பலன். லேட்டஸ்ட்டாக நடந்ததைச் சொல்கிறேன். பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் நியமனம் அதற்கு லேட்டஸ்ட் உதாரணம். ஏனென்றால் எவ்வளவு பெரிய ஆட்களாக இருந்தாலும் நான் விடமாட்டேன். இப்பொழுது நியமனம் செய்யப்பட்டவர் திரு. மணிசுந்தரம். திரு. மணி சுந்தரம் மீது 1977 ஆம் ஆண்டிலேயே பெருங் குற்றச்சாட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அட்மிஷனில் ஊழல் ; தேர்வு எண் கொடுப்பதில் ஊழல் ; நிதி விஷயத்தில் ஊழல் ; நியமனங்களில் ஊழல், அதற்கான விவரங்களைப் பட்டியலாகக் கொடுத்திருக்கிறேன். சுமார் நான்காண்டுகள் ஊறுகாய்ப் பானையில் போட்டு வைத்து, இந்த மன்றத்தில் நானும் மற்ற உறுப்பினர்களும் விடாமல் வற்புறுத்திய பிறகு ஒரு குழு அந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரித்ததாக அறிகிறேன். எப்படி விசாரித்தார்கள் என்பது தெரியவில்லை. ஏன் என்றால் குற்றச்சாட்டுக்களைக் கொடுத்த என்னைக் கூப்பிட்டு, விசாரிக்கவே இல்லை. பெட்டிஷன் கொடுத்த என்னைக் கூப்பிடவில்லை ; பெட்டிஷன் கொடுத்த தோழர் நம்பியாரைக் கூப்பிட்டு விசாரிக்கவில்லை. அப்படி விசாரணை நடத்தியும் கூட, ஒரு பிரதான ஊழலில் திரு. மணிசுந்தரம் குற்றவாளி என அந்தக் கமிட்டி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. பார்ட்-டைம் பி.ஈ. பட்டப் படிப்பில், கல்லூரிக்கு 30 கிலோ மீட்டருக்குள் வசித்து செயல்படும் நண்பர்களுக்குத்தான் அட்மிஷன் என்பது கறாரான விதி. 30 கிலோ மீட்டருக்குள் வசித்து செயல் பட்டால்தான் அட்மிஷன் அதற்கு அப்பால் சென்று 31 கிலோ மீட்டர் என்று இருந்து விட்டால்கூட கிடையாது. அந்த விதியை மீறி, பீகார் மாநிலத்தில் உள்ள ஒரு நபருக்கு திரு. மணி சுந்தரம் சட்ட விரோதமாக அட்மிஷன் கொடுத்தார் என்பது கமிட்டியின் முடிவு. ஒருக்கால் பீகார் என்பது திருச்சியிலிருந்து 30 கிலோமீட்டர் தூரத்திற்குள் இருப்பதாக அவருடைய மேப்-இல் வருகிறதோ என்னவோ தெரியவில்லை.

அன்றைய மைய அமைச்சருடைய சொந்தக்காரர் என்பதற்காக, மைய அமைச்சர் ஒருவரைத் திருப்திப்படுத்த, சட்ட விரோதமாக அட்மிஷன் கொடுத்தார் என்பது கமிட்டியின் முடிவு. (குறுக்கீடு) யாராக இருந்தாலும் அது ஊழல்தானே, ஜனதாவாக இருந்தால் என்ன, காங்கிரஸாக இருந்தால் என்ன. யாராக இருந்தாலும் ஊழல் செய்தால் ஊழல்தானே.

கல்லூரிக்கு 30 கிலோ மீட்டருக்குள் உள்ள ஒரு தொழிற்சாலை நிர்வாகம், சம்பந்தப்பட்ட நபர், அங்கு வேலை செய்வதாக சான்றிதழ் கொடுத்தார்கள் என்றும், ஆகவேதான் அட்மிஷன் கொடுத்தேன் என்றும் திரு. மணிசுந்தரம் அவர்கள், சொன்னதை, உண்மை என்று ஏற்க கமிட்டி மறுத்தது. அந்தச் சான்றிதழ் கல்லூரி அலுவலகத்திலே இல்லை என்று கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

அட்மிஷன் கொடுக்கப்பட்ட பீகார் நபர் தங்கள் பேக்டரியில் வேலை செய்யவே இல்லை என்றும், தாங்கள் அப்படிப்பட்ட ஒரு நபருக்குச் சான்றிதழ் தரவில்லை எனவும் பேக்டரி நிர்வாகம் கூறுவதாக, கமிட்டி ரிக்கார்ட் செய்துள்ளது. ஆகவே, திரு. மணிசுந்தரம் பேரில், ஊழல் அட்மிஷன், விதி மீறல், ஃபேட்ரியாடிஸம், பொய் சொல்லுதல், பொய்ச் சான்றிதழ் ஏற்பாடு செய்வதில் பங்கு இருக்கிறதா என்ற சந்தேகம் போன்ற சீரியஸ் குற்றச்சாட்டுக்கள் ப்ரூவ் ஆகியிருக்கின்றன.

இப்படி ஊழல் செய்தவர்பேரில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் அமைத்த கமிட்டியின் மூலமாக இந்தக் குற்றச்சாட்டுகள் ப்ரூவ் ஆகியிருக்கிறது என்று இருக்கும்பொழுது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? ஆனால் அதற்குப் பதிலாக அவருக்குப் பதவி உயர்வு கொடுத்துள்ளீர்கள். வைஸ்-சான்சலர் பதவியைக் கொடுத்து இருக்கிறீர்கள். எதற்காக இன்னும் அதிக ஊழல் செய்வதற்காகவா பாரதிதாசன் பெயரைக் கெடுக்காதீர்கள் ஆகவே, அந்தத் துணை வேந்தரை உடனடியாக நீக்கிவிட்டு, அந்த ப்ரூவ்ட், சார்ஜ்-க்கு நிச்சயமாக ப்ரொசீடிங்க்ஸை ஆரம்பிக்க வேண்டும். குற்றச்சாட்டுக்களைக் கொடுத்த எங்களைக் கேட்பதற்காக மற்றொரு கமிட்டியை நியமித்து எவிடென்ஸ் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலத்துறை முற்போக்கானது என்று கவர்னர் உரையில் கூறப்பட்டுள்ளது. அதற்குச் சான்றாக சமீபத்தில் நிறைவேற்றிய சில சட்டங்கள் கூறப்பட்டுள்ளன. சட்டப் பட்டியலா முற்போக்கு தன்மையை நிர்ணயிப்பது. நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். சட்டப் பட்டியலா ஒரு கொள்கையை முற்போக்கானதா, இல்லையா என்பதே நிர்ணயிக்கிறது. சிவகாசியில் இல்லாத சட்டங்களா சட்டங்கள் இருந்தும் தொழிலாளர் நல இலாகா இருந்தும் சமீபத்தில் வெடி விபத்துக்கள், ஒன்றா ? இரண்டா ? ஒன்றின்பின் ஒன்றாக அங்கு நடந்தது நம் அனைவருக்கும் தெரியும். எத்தனை பெண்கள் விதவைகளானார்கள் எத்தனை குழந்தைகள் எரிக்கப்பட்டு, கரியாக்கப்பட்டார்கள் எத்தனை ஆண்கள் தங்கள் அன்பு மனைவியரை இழந்தார்கள்.





அரசின் தொழிலாளர் நலக்கொள்கை நூற்றுக்கணக்கான என் ஜி. ஓ.க்களைத் தெருவில் நிறுத்தும் கொள்கை, அரசுப் பணியாளர்கள் கணவன் மனைவியைப் பிரிக்கும் கொள்கை. சிவகாசியில் நரபலி வாங்கும் கொள்கை, விவசாயத் தொழிலாளர்களைச் சுட்டு வீழ்த்தும் கொள்கை. 'கூலி கேட்டான் அத்தான், குண்டடி பட்டு செத்தான்' என்ற உங்களுடைய இயக்கம் சார்பாக இருக்கிற அந்தக்கோஷம் மிக மிகப் பொருந்தக்கூடிய கொள்கைதான். இந்த அரசின் தொழிலாளர் கொள்கை என்று நான் சொல்ல விருப்புகிறேன்.

சிவகாசியில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கு ரூ. 25,000 நஷ்டஈடு கொடுப்பதற்குப் பதிலாக ரூ. 10,000 கொடுத்து, ஏமாற்றுவதற்கு டெப்புட்டி லேபர் கமிஷனர் முதலாளிகளுக்கு உறுதுணையாக நின்றார்கள் என்று எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலும், தினமணி பத்திரிக்கையிலும் செய்தி வந்துள்ளது. அந்த ரூ. 10,000-ஐயும் எந்த விசாரணையும் இல்லாமல் டிப்பென்டன்ட் அல்லாதவர்களுக்குக் கூடப் பிரித்துக் கொடுத்ததாக கூறியுள்ளது. ஆகவே இது சீரியசான விளைவுகள் இதற்கும் தொழிலாளர் கொள்கைக்கும் ஒன்றும் சம்மந்தம் இல்லையா ? இதெல்லாம் சரியான முற்போக்கான கொள்கை என்று சொல்வார்களா ?

அடுத்தபடியாக ஹவுசிங் ஸ்கீம்ஸ். இதில் ஒன்று நடந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். "Self Financing Scheme" என்று வீடு கட்டுவதற்கான ஒரு புதிய திட்டம் பத்திரிகைகளிலே அட்வர்டைஸ் செய்யப்பட்டது. 25சதவீதம் பணம் முதலில் கட்டியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் சீனியாரிட்டிபடி என்று நம்முடைய ஹவுசிங் போர்டிலே அட்வர்டைஸ் செய்யப்பட்டது. நம்முடைய கவர்ன்மென்ட் அட்வர்டைஸ்மென்டை நம்பி, அதில் பலபேர் சேர்ந்துவிட்டார்கள். இப்பொழுது அரசு ஒரு உத்தரவு போட்டதாகக் கேள்விப்பட்டேன். ஹவுசிங் போர்ட் இந்த ஸ்கீமைப் போடும்போது, தயாரிக்கும்போது, எங்களைக் கேட்காமல் தயார் செய்துவிட்டீர்கள். ஆகவே, உங்கள் ஸ்கீம் ரத்து, என்று உத்தரவு போட்டது. விளைவு என்ன ? சர்க்கார் அட்வர்டைஸ்மென்டாயிற்றே என்று நம்பி பணம் போட்ட மிடில் கிளாஸ் மக்கள் பலருக்குப் பெருத்த நஷ்டம். ஒரு விதவை தன்னுடைய ஜுவல்லை கடந்த காலத்தில், கணவன் இருந்தபோது, வாங்கி வைத்திருந்த தங்க நகைகளை விற்று, அந்த வீட்டுக்காகப் பணம் கட்டி, இப்பொழுது அந்தத் திட்டமே ரத்து என்கிறபொழுது, அங்கே நகையும் போயிற்று. இனிமேல் அந்தப் பணம் கிடைத்தாலுங்கூட அந்த நகை கிடைக்காது அல்லவா ? தங்கத்தினுடைய விலை ஏறிய

நிலையிலே நகைகளும் போயிற்று, வீடும் கிடைக்காமல் போயிற்று. அந்தப் பணத்திற்கு வட்டி கிடைத்திருக்கும் வங்கியிலே போட்டிருந்தால். அதுவும் இல்லாமல் போயிற்று. இற்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் 150 பேர்கள் 'By jus an exec tive fla '' அப்படி G vernment O der போட்டதன் மூலமாக, பாதிக்கப்படுகிறார்கள். இது என்ன கொள்கை என்று நமக்குத் தெரியவில்லை. பதில் கூறுகிற பொழுது விளக்கம் வேண்டும்.

போலீஸைப் பற்றி கூறுகிறபொழுது, கடந்த கவர்னர் உரைக்குப்பின் அராஜகம் வளர்ந்துள்ளது. போலீஸ் அராஜகம்; மக்கள் அராஜகம் அல்ல. 19 ஆம் தேதி அன்று நடந்த துப்பாக்கிச் சூடு அதற்கு எடுத்துக் காட்டு என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே விவரங்களைக் கூறி விட்டார்கள். இருந்தாலும், போலீஸ் அராஜகத்திற்கு // எடுத்துக் காட்டு என்ற முறையிலே கூறுகிறேன், சட்ட விரோதமான கூட்டமாம், கல் எறிந்தார்களாம், அடித்தார்களாம்; போலீசைத் தாக்கினார்களாம், பஸ்ஸை உடைத்தார்களாம், கலைக்கத் துரத்தினார்களாம், சுட்டார்களாம், செத்தார்களாம். இது அவர்கள் கதை, கட்டுக் கதை என்றுதான் சொல்ல விரும்புகிறேன். கட்சி வித்தியாசம் இந்தப் பிரச்னையில் யாரும் பார்க்கக் கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்கள் 3 பேர்கள் இறந்திருக்கக்கூடிய, சுட்டு வீழ்ந்திருக்கக்கூடிய விஷயம் இது. நான் கேட்கிறேன், துப்பாக்கிச் சூட்டை நடத்திய திருவெஞ்ஞானம் கிராமத்திற்கு முன் பிச்சகட்டளை என்ற ஒரு அரிசன கிராமம் இருக்கிறது. நான் அங்கே நேராகச் சென்று பார்த்தேன். முதலில் அந்த அரிசன கிராமத்திற்குள்ளேதான் போலீஸ் நுழைந்தது. அங்கே நுழைந்து படங்கள் கூட வைத்திருக்கிறேன் சட்டிப் பானைகளை உடைத்து, அலுமினியப் பாத்திரத்தை நசுக்கினார்களே, சட்டிப் பானை என்ன செய்தது. என்று நான் கேட்கிறேன். அது என்ன, சட்ட விரோதமாக Unlawful meeting கூடிற்றா why should they enter and break these vessels of poor Harijans' சட்டிப்பானை மட்டுமல்ல, அலுமினியப் பாத்திரம்.' ரொம்ப கஷ்டப்பட்டு, வருஷம் கணக்கில் சம்பாதித்த பித்தளை பாத்திரம், அதையும் நசுக்கிவிட்டார்கள். போலீஸ் மிருக வலிவை அங்கே காட்டினார்கள்.

[பிற்பகல் 12—30]

நான் கேட்கிறேன், ஒரு வீட்டிலே இருந்த டிரான்சிஸ்டர் என்ன செய்தது. அதைப் போட்டு உடைத்திருக்கிறார் போலீஸ், அந்த டிரான்சிஸ்டர் என்ன பாவம் செய்தது



பஸ்ஸின் டயரைக் கிழித்ததா? அதுமட்டுமல்ல, ஒரு வீட்டில் ஒரு மாணவனின் பேண்டை கிழித்து இருக்கிறார்கள். இரண்டு துண்டாக கிழித்திருக்கிறார்கள். அந்த விவசாயத் தோழர் தன்னுடைய மகன் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தோடு, வயலில் கஷ்டப்பட்டு உழைத்துத் தனது மகனுக்குத் தைத்து வைத்திருந்த பேண்ட் அதைக் கிழித்து இருக்கிறார்கள். ஒரு மாணவியின் சர்டிபிகேட். அது என்ன பாவம் செய்தது ? அந்த சர்டிபிகேட்டுகளை எல்லாம் வாங்கி வீசி எறிந்திருக்கிறார்கள். இன்னொரு வீட்டில் முதல்வர் படத்தை மாட்டி வைத்திருக்கிறார்கள். அந்த படத்தை லத்தியால் குத்தி உடைத்திருக்கிறார்கள். முதல்வர் என்ன செய்தார்? கல்லை எடுத்து எறிந்தாரா? போலீஸ் செய்த வேலை இது. இங்கே கூட்டமே இல்லை. பெண்கள்தான் இருந்தார்கள். வீட்டுக்குள்ளே நுழைந்து குத்தி இருக்கிறார்கள். அதோடு போயிற்றா என்றால், இன்னொரு படத்தைப் பார்த்தார்கள். சிவாஜி கணேசன் படம். அதையும் இடித்துக் குத்தி இருக்கிறார்கள். சிவாஜி கணேசன் என்ன காற்றைப் பிடுங்கி விட்டாரா? எதற்காக, இது. அதையும் குத்தி இருக்கிறார்கள். Downright Vandalism of the Police போலீசாருடைய வாண்ட லீசம் என்று நான் கூறுகிறேன். வன்முறையைக் கண்டிக்கும் நம்முடைய முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இது போலீஸ் வன்முறை அல்லவா இந்தப் போலீஸ் What is the sanction of law behind his violence வன்முறைக்குப் பின்னால் என்ன சட்ட அதிகாரம் இருக்கிறது. சொத்துக்களை நாசப்படுத்தக் கூடாது என்று நம்முடைய முதல்வர் கூறுகிறார். சரிதான். இந்த ஏழைகளின் சொத்துக்களை ஒரு வீடு விடவில்லை, அந்தத் தெருவிலே அவ்வளவும் டெஸ்டிராய்டு. இதற்கு என்ன சட்ட அத்தாரிட்டி என்று நான் கேட்கிறேன். ஆகவே மிராஸ்தார்கள் தங்களுடைய வஞ்சத்தைத் தீர்த்தார்கள். அதற்கு ஸ்தல போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் செல்வராஜ், சப் இன்ஸ்பெக்டர் நடராஜ் கருவியாக நிலப்பிரபுக்களுக்குக் காட்சி அளித்தார்கள். இதே வஞ்சம் தீர்க்கும் நோக்கம்தான், துப்பாக்கிப் பிரயோகம். அவர்களுக்கு இதற்குத் தைரியம் ஏது என்ற கொஸ்டியன் வரும்போது இந்த கவர்ன்மெண்டினுடைய ரோல் இங்கே வருகிறது. இவ்வளவு செய்தால் நம்மை சர்க்கார் கேட்காதா ? சட்டசபை கேட்காதா ? பின் ஏது இந்த தைரியம்.

ஏ. டி. எம். கே. சர்க்காரை டிஸ்மிஸ் செய்ததை ஆட்சேபித்து முதல்வர் ஒரு ஊர்வலம் நடத்தியபோது போலீஸ் தடியடிப்பிரயோகம் நடத்தியது. நமக்குத் தெரியும். துப்பாக்கிச் சூடு ஒரு ஸ்டேஷன் பக்கத்திலே நடத்தியது

நமக்குத் தெரியும். பொய் கேஸ்கள் போட்டதும் நமக்குத் தெரியும். ஆனால் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, போலீஸ் அறிக்கையை இங்கே சமர்ப்பித்தபோது, அந்த துப்பாக்கி சூடும், லத்தி சார்ஜீம், நியாயம் என்று போலீஸ் துறை சொல்லக் கூடிய அறிக்கையை முதல் அமைச்சர் இங்கே சமர்ப்பித்தார், படித்தார், கையெழுத்துப் போட்டார். போடுகிறபோது அவர் சொன்னார் நான் போலீஸ் அமைச்சர் என்ற முறையிலே, அதில் நான் கையெழுத்துப் போடவேண்டி இருக்கிறது என்று. ஆனால் இதிலே இருப்பது உண்மை அல்ல. நான் நம்புவது தான் உண்மை என்று சொன்னார். ஆகவே போலீஸ் என்ன நினைக்கிறது என்றால் நாங்கள் என்ன செய்தாலும், அவையில் முதல்வர் எங்கள் அறிக்கையைத்தான் வைப்பார். இந்தப் பொசிஷனை முதல்வர் எடுக்கிறபோது, போலீஸ் என்ன நினைக்கிறது. முதல்வர் நாங்கள் செய்தது தப்பு என்று நினைத்தாலும் நாங்கள் கொடுத்த வர்ஷனைத்தான் அங்கே வைப்பார். அதைத்தான் கேட்பார். அதிலே நாம் கதை ஜோடிக்கலாம் என்ற தைரியத்தில்தான் நீதி விசாரணை இன்றி உண்மையை எப்படி கண்டுபிடிப்பீர்கள் என்று நான் கேட்கிறேன். நான் முதல்வர் அவர்களை ஒன்று வேண்டு கிறேன். டிஸ்மிசலுக்குப் பிறகு அதை எதிர்த்து நீங்கள் ஊர்வலம் நடத்திய சம்பவத்தைப் பற்றி நீதி விசாரணை வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பொதுக் குழுவில் இயற்றிய தீர்மானம் என் கையில் இருக்கிறது. இது 3 பேர்கள் செத்த சம்பவம். 3 பேர்களும் அரிசனங்கள், 3 பேர்களும் விவசாயத் தொழிலாளிகள் சுடப்பட்ட சம்பவம். அதிலே நீதி விசாரணை நீங்கள் கேட்டது நியாயம் என்று வைத்துக் கொள்ளலாம். அதை நியாயம் என்கிறபோது 3 பேர்கள் உயிரைக் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த துப்பாக்கிப் பிரயோகம் சம்பவத்திலே நீதி விசாரணை கேட்டால் உங்களுக்கு இருக்கிற நியாயம் இறந்து இருக்கக் கூடிய இந்த தொழிலாளர்களுக்கு இருக்காதா, இருக்கக் கூடாதா? ஆகவே நாங்கள் மேலும் மேலும் வலியுறுத்து கிறோம்.

இந்தப் பின்னணியில்தான் எக்ஸ்பிரஸ் கட்டுரையைப் பார்க்கவேண்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம். ஏராளமான விவரங்கள் "Tamil Nadu's Police State" இரண்டு புல்ல் பக்கங்கள். பேர் போட்டு எழுதப்பட்டிருக்கிறது. ஏராளமான விவரங்கள் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. போலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் பெயர்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எப்படி சுட்டுக் கொல்லப் பட்டார்கள் என்ற விவரமும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. பத்திரிகைகளை எப்படி மிரட்டினார்கள். எந்த அதிகாரி மிரட்டினார் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.



இப்படிப் பத்திரிகைச் சுதந்திரம். மனிதனுடைய உயிர் சுதந்திரம், மனிதனுடைய சொத்துச் சுதந்திரம், எல்லா வற்றையும் மீறக்கூடிய பல சம்பவங்களைக் குறிப்பிட்டு பேர்களைக் கொடுத்து, பொறுப்பான அதிகாரிகள் பெயர் களைக் கொடுத்து விவரம் ஏராளமாக இரண்டு பக்கங்களில் இருக்கின்றன. அவற்றை லைட்டாக் It should not be bushed a side. இது சும்மா பத்திரிகையில் எழுதியதுதானே, என்று தள்ளிவிடக்கூடாது என்று முதல்வரைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டில், பகல்பூரில் பல ஆண்டுகளாக கண்ணைக் குத்தி, திருடர்களை அந்தக் குற்றத்தைச் செய்யாமல் இருப்ப தற்கான முறையில் போலீஸ்காரர்கள் செய்து வந்தார்கள். போலீஸ்காரர்கள் திருடன் என்று கருதக் கூடியவர்களைக்கூட அவன் திருடுவதிலிருந்து தடுப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்க வக்கு இல்லாத போலீஸ்காரர்கள் அவனுடைய கண்ணைப் பிடுங்கிவிட்டால் எப்படி திருடப்போவான் என்று எண்ணி கண்ணைப் பிடுங்கி வந்தார்கள். அந்தச் சம்பவத்தை வெளி உலகத்திற்குக் கொண்டு வந்தது பத்திரிகைகள் தான்.

அதன் பிறகு தான் அது சுப்ரீம் கோர்ட்டுக்கே போயிற்று. 32 ஆண்டு காலமாக பீகார் ஜெயிலில் அண்டர் டிரயலாக இருந்த நிலைமையையும், அதே மாதிரி 10 வருஷம், 15 வருஷம் விசாரணைக் கைதிகளாகவே பல கைதிகள் இருக்கிறார்கள் என்ற உண்மையையும் வெளிப்படுத்தியது பத்திரிகைதான். பத்திரிகை அப்படி எழுதுகிறது, இப்படி எழுதுகிறது என்று நாம் சொன்னாலும் பயங்கரமான உண்மைகளை இந்த நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, மனித சமுதாயத்திற்கே சொல்லும் அளவிற்கும், கோர்ட்டின் கான்சியன்சையே குலைக்கிற வகையில், தட்டி எழுப்புகின்ற வகையில் செய்திகளை வெளியிட்டது பத்திரிகைகள்தான்.

அப்படிப்பட்ட பத்திரிகை தான் இந்த மாதிரியான விவரங்களைத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இரண்டு பக்கத்திற்கு போட்டிருக்கிறார்கள். அதிலே பெயர்கள் எல்லாம் கொடுத்து இருக்கிறார்கள். எந்தெந்தச் சம்பவங்களில் யார் யார் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அதற்கு யார் பொறுப்பு என்றெல்லாம் பட்டியல் போட்டுக்கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பல்வேறு சம்பவங்களுக்கு தனியாக நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.

போஸ்டுகள் போடப்பட்டு போக்குவரத்திற்குத் தடைகள் செய்யப் பட்டிருக்கின்றன. இதனால் விவசாயிகளுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே அந்த நிலைமை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அடுத்து, இந்த விவர அறிக்கையில் 60 வயதுக்கு மேற்பட்ட எவ்வேலையும் செய்ய இயலாத ஆதரவற்ற விவசாய தொழிலாளர்களுக்குப் பயன்படும் வகையில் அத்தனை பேர்களுக்கும் பென்ஷன் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது இதுபோல அத்தனைபேர்களுக்கும் பென்ஷன் திட்டம் அமலாகவில்லை. குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்தில் 100 பேர் அல்லது 200 பேர் என்ற எண்ணிக்கையை நிர்ணயம் செய்து கொண்டுதான் கொடுக்கிறார்கள். அதைமாற்றித் தகுதி உள்ளஅத்தனை பேர்களுக்கும் பென்ஷன் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், மற்றக் கோரிக்கைகளைப்பற்றி விவாதிக்க விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவதற்குக் கூடிய விரைவில் ஏற்பாடு செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஏற்கனவே 9 அம்சக் கோரிக்கைகள் சம்பந்தமாக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் இந்த விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற பல பிரச்னைகளைப் பற்றிக் கலந்து பேசுவதற்காகத்தான் திரு. முனுஆதி அவர்கள் தலைமையில் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் வழியாக விவசாய சங்கங்கள் தங்கள் கருத்துக்களை அரசுக்குத் தெரிவிக்கும்பொழுது நிச்சயமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் மத்திய அரசினிடத்தில் இருக்கிறது. இங்கே விளைகின்ற நெல்லுக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, மாநில அரசானது மத்திய அரசாங்கத்திடமிருந்து அந்த அதிகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அதற்காகத்தான் அதிக அதிகாரம் கேட்கிறோம்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தமிழக விவசாய சங்கத்தினுடைய 9 அம்சக் கோரிக்கைகளில் விவசாயிகளுடைய கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய வேண்டுமென்பது ஒரு பிரதானமான கோரிக்கை. ஆனால், முதலமைச்சரவர்கள் சென்ற ஆண்டு சிறுவிவசாயிகளுடைய கடன்கள் படிப்



படியாக ரத்து செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு எவ்வளவு தொகை, எவ்வளவு பேருக்கு ரத்து செய்யப்படும். அது சம்பந்தமாக அமைச்சர் விரிவாக பதில் சொல்வாரா ?

**மாண்புமிகு திரு. கா காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயச் சங்கத்தினுடைய கோரிக்கைகளில், விவசாயத் தொழிலில் ஏற்படும் அபாயங்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு போல், அரசு அளித்திடும் சலுகையாக, பூச்சி மருந்து, ரசாயன உரங்கள் தெளிக்கும் பணியில் ஈடுபடுவோர், அரசுச் செலவில் குடிநீர்க் குழாய்கள் வைக்க, பள்ளம் தோண்டுவோர் அல்லது கிணறுகள் தோண்டுவோர், தென்னை, பனை மரங்கள் ......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 9 கோரிக்கைகளையும் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்க நேரம் இல்லை. கேள்வி எதுவோ அதை மட்டும் சுருக்கமாக கேட்கவேண்டும்.

**திரு இரா. கருப்பையா :** இம்மாதிரியான பணிகளில் ஈடுபடக் கூடிய நேரங்களில் இறப்பவர்களுக்கு நஷ்ட ஈடு அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாய காரியங்களில் ஈடுபடக்கூடிய நேரங்களில், இன்றைய தினம் கதிர் அடிக்கிறார்கள் டிராக்டர்கள் மூலமாகக் கரும்பு போன்ற விவசாயப் பொருள்களை ஏற்றிச் செல்கிறார்கள். இதன் மூலமாக அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழக்கக் கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, விவசாயப் பணிகளில் ஈடுபடுகின்ற நேரத்தில், தனிப்பட்ட நிலப் பிரபுகளிடத்திலே வேலை செய்யக் கூடிய நேரங்களிலே இம்மாதிரியான விபத்துக்கள் ஏற்பட்டாலும் அவர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதையும் சேர்த்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இந்த விவசாயத் தொழிலாளர் சம்பந்தமாகக் குறிப்பிட்டார்கள். பலன் கருதாமல் சமுதாயத்திற்கு உழைப்பவர்கள் விவசாயிகள். அவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு என்ன நிலைமைகள் இருந்தாலும், அது அவர்கள் ஓய்வு பெறுகின்ற வயதாக இருப்பதால், 'பென்ஷன்' என்ற முறையிலே, விவசாயத் தொழிலாளர்கள், உழைப்பவர்கள், 60 வயதுக்கு மேற்பட்டுள்ளவர்களுக்கு

கடைசியாக நேற்று நடைபெற்ற விவாதத்தில் நம்முடைய காங்கிரஸ்(ஐ) கட்சி உறுப்பினர் ஒருவர் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் பேசுகிறபோது—கம்யூனிஸ்ட் கட்சி மற்றவர்கள் தோளிலேயே ஏறிப்பழக்கம் என்றும், 19 ஆம் தேதி தோள் கிடைக்காததால் காங்கிரஸ் கட்சி மீது ஆத்திரம் என்றும் அதனால் மத்திய அரசை சாடுவதாகவும் கூறினார். அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறவிரும்புகிறேன்.

The b... i... on the other leg.

சமீபத்தில் காங்கிரஸ் (ஐ) தலைவர்கள் நம் மாநிலத்திற்கு வருகிறபோது திரும்பத் திரும்பச் சொன்னார்கள், 'நாங்கள் சொந்தக் காலில் நிற்போம்,' 'நாங்கள் சொந்தக் காலில் நிற்போம்' என்று சொன்னார்கள். திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் சொன்னார். நாங்கள் சொந்தக் காலில் நிற்போம். அதைப்போல், மூப்பனார் வந்தார். அவரும் சொன்னார்—நாங்கள் சொந்தக் காலில் நிற்போம். இவர்களை யார் சொந்தக் காலில் நிற்கவேண்டாம் என்று சொன்னார்கள். இவர்களை யாராவது கேட்டார்களா ? அவர்கள் திரும்பத் திரும்ப இதைச் சொன்னதால் எங்களுக்குச் சந்தேகம் வந்தது. ஒரு வேலை அவர்களுக்குக் கால் இருக்கிறதோ, இல்லையோ என்று. இந்த நேரத்தில் ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது, அதைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

ஒரு ஊரில் புதியதாக ஒரு சந்தை திறக்கப்பட்டது. அதற்கு வரி எதுவும் போடவில்லை. ஆனால் ஒரு பெரிய மீசை உடைய ஒரு ஆள் ஒரு கட்டிலைப் போட்டுக்கொண்டு அதன் வாசலில் உட்கார்ந்து கொண்டு, ஏழை விவசாயிகள் பொருள்களைக் கொண்டு வருகிறபோது சொன்னான் ' ஏய், உள்ளே இந்தச் சாமான்களை எடுத்துச்செல்லவேண்டும் என்றால், 50 பைசா கொடுத்துவிட்டுப் போ என்று. அந்த விவசாயிகள் கேட்டார்கள் வரி எதுவும் போடவில்லையே, நீ கேட்கிறாயே என்று கொடுக்கிறியா, இல்லையா, என்று மிரட்டினான். விவசாயிகள் பார்த்தார்கள். இவனுக்கு மீசை பெரியதாக இருக்கிறது, என்ன நடக்குமோ என்று பயந்து, உள்ளே போய்விட்டு, வெளியே வருகிறபோது 'கொடுக்கிறோம் என்றார்கள். அதெல்லாம் முடியாது 50 பைசாவை வைத்து விட்டு உள்ளே போ, இல்லையென்றால், நான் எழுந்திருச்சாத் தெரியும் என்று மிரட்டினான். அவர்களும் கொடுத்து விட்டுப் போனார்கள்.

இப்படிபல நாட்கள், பல விவசாயிகளிடம் அவன் எழுந்தால் தெரியும், என்று மிரட்டியே காசு வாங்கிக்கொண்டு வந்தான். ஆனால் ஒரு நவீன இளைஞன் அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது.





இவனுக்குக் கால் இருக்கிறதா இல்லையா என்று பார்த்துவிட வேண்டும் என்று, மாடர்ன் யூத் இல்லையா, அவனுக்கு இந்த ஐடியா வந்தது, நாம் மீறித்தான் பார்ப்போமே, மீறிப்போனால் என்ன நடக்கும், உதைப்பான், அவ்வளவு தானே என்று முடிவு செய்து, ஒரு வண்டியைக் கட்டிக்கொண்டு புறப்பட்டான், சந்தைக்குள்ளே நுழைகிறபோது அவனிடமும் இந்த மீசை 50 பைசா வை என்று சொன்னான். அவன் வைக்கவில்லை. அவன் கேட்டான், இங்கே தான் வரி போடவில்லையே உனக்கு ஏன் கொடுக்கவேண்டும்.

மீசை சொன்னான், உனக்குத் தனியாகச் சொல்லவேண்டுமா, 50 பைசா வை, இல்லேயென்றால் நான் எழுந்தால் என்ன நடக்கும் தெரியுமா ? என்றான். உடனே, இளைஞன் அதை மீறி உள்ளே சென்றான். இந்த மீசை எங்கே எழுந்திருக்கிறது. அவனுக்குத்தான் கால் கிடையாதே. இப்படிக் கால் இல்லாதவன் உட்கார்ந்து கொண்டு, வருகிறவர்களையெல்லாம் மிரட்டிப் பணம் சம்பாதித்துக்கொண்டு இருந்ததைப்போல், தி. மு. க. வையும், அ. தி மு. க. வையும் இந்திரா காங்கிரஸ் கட்சி பயமுறுத்திக்கொண்டு இருக்கிறதோ என்று சந்தேகம் வந்தது. இந்த பாச்சா ரொம்ப நாளைக்கு பலிக்காது, காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு நான் சொல்வேன், இந்த மிரட்டல் இனிமேல் பலிக்காது தனியாக நின்று பார் என்று எல்லோரும் சேர்ந்து உங்களைப் பார்த்து சொல்லும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அன்றைக்கு கால் இல்லாத உங்களை வைக்கவேண்டிய இடத்தில் தமிழக மக்கள் வைப்பார்கள் என்று சொல்லி, என் உரையை முடிக்கிறேன் ரொம்ப நன்றி துணைத் தலைவர் அவர்களே, என்று சொல்லி அமர்கிறேன்.

[பிற்பகல் 12-40]

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு கால் இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகத்தோடு ஒரு கதையைச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், ஊராட்சித் தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்தவுடன் நாங்கள் தனியாகப் போட்டியிடுகிறோம் என்று சொல்லி, காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை எல்லாத் தொகுதிகளுக்கும் அறிவித்தோம், தனியாகப் போட்டியிடும் சூழ்நிலைகளை ஏற்படுத்தி, தேர்தலை சந்திக்க நாங்கள் தயராக இருந்தோம். காங்கிரஸ் கட்சிக்கு கால் இருந்ததால்தான் தனித்து போட்டியிடுகிறோம் என்று பகிரங்கமாக அறிவித்தோம். ஆனால் உங்களுக்கு கால் இருக்கிறதா அல்லது இனிமேல் கால் இருக்குமா என்பதை நீங்கள் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அவ்வளவு தைரியமாகச் சொல்லக்கூடிய நீங்கள் திருப்பத்தூர் சட்டமன்ற உபதேர்தலில் எல்லோருமாக வந்து ஆதரவு தாருங்கள் என்று பலமுறை பத்திரிகை மூலம் நேரிலும் வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியம் என்ன ? இவ்வளவு தைரியமாக இருக்கிற நீங்கள் வேண்டுகோள் எதற்காக விடுத்தீர்கள் என்று காரணத்தைச் சொன்னால் நல்லது.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பாரதப் பிரதமரும், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவருமான திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திருப்பத்தூர் தொகுதி உபதேர்தலுக்கு வேட்பாளரை அறிவித்தபோது தமிழ்நாட்டிலே உள்ள கட்சிகளும் பொதுமக்களும் என்னுடைய வேட்பாளரை ஆதரிக்க வேண்டுமென்று பொதுவாக வேண்டுகோள் விடுத்தார்கள். அதை ஏற்று தமிழ்நாட்டில் இருக்கிற பெரும்பான்மையான கட்சிகள் எங்களை ஆதரித்தன. நீங்களும் ஒரு காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எங்களை ஆதரித்திக்கிறீர்கள். 1971-லே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அறிவித்த பல்வேறு முற்போக்குத்* திட்டங்களை எல்லாம் இன்றைக்கு இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆதரித்திருக்கிறார்கள். அதை மறந்துவிட்டு, இதைப்போன்று இன்றைக்கு பேசுகின்ற நீங்களே திரும்பவும் இந்திரா காந்தி வாழ்க என்று கோஷம் போடும் நிலைமை வரலாம்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பட்ட பிறகு இந்த நாட்டிலே முன்னுக்குப் பின் முரண் இல்லாமல் இந்திரா காந்தியின் ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்தே வந்திருக்கிறோம். பிரச்சனை என்னவென்றால், திருப்பத்தூர் உபதேர்தலில் இங்கே இருக்கக்கூடிய மற்ற கட்சிகள் ஆதரவு இல்லாமல் காங்கிரஸ் கட்சி தன்னுடைய கொள்கை அடிப்படையில் நின்று வெற்றிபெற்றது என்று கூற அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சி தனியாக வேட்பாளரை நிறுத்தியது. தனியாகத்தான் நாங்கள் பிரச்சாரம் செய்தோம். அண்ணா தி.மு.க. வினர் பல்வேறு வகைகளில் ஆதரவு கொடுத்தார்கள்: அது வேறு, எங்களோடு சேர்ந்துகொண்டு அவர்கள் ஆதரிக்கவில்லை. ஆகவே, நாங்கள் தனியாகவே நின்றோம் என்பதை மாண்புமிகு சங்கரய்யா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, அவர் தனியாகவே நின்றோம் என்றார். அப்படி என்றால் அவர்களுடைய கட்சி வேட்பாளர் முதலமைச்சரோடு ஒரே காரிலே ஏறிக்கொண்டு தொகுதி பூராவும் சுற்றி வந்தாரே அதற்கு காரணம் என்ன ? அதை விளக்குவாரா ?

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, அண்ணா தி. மு. க. காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தர முன்வந்தபோது, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் அந்த வேட்பாளருக்காக அந்தத் தொகுதி முழுவதும் சென்று வாக்கு கேட்கும்போது மரியாதை. காரணமாக, முதலமைச்சருக்கு இருக்கிற செல்வாக்குக் காரணமாக எங்கள் கட்சி வேட்பாளர் அவரோடு சேர்ந்து சென்றாரே தவிர வேறல்ல. முக்கியமான ஒரு கட்சித் தலைவர் வரும்போது அவரோடு செல்வது தவறு அல்ல ; அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறைதான். நீங்கள் கூட திரு. எம். ஜி. ஆர். அவர்களோடு பல்வேறு சந்தர்ப்பங்களில் சென்றிருக்கிறீர்கள். ஆகவே, இதில் தவறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, அப்படியானால் வெற்றிபெற்ற பின்னால், நன்றி தெரிவிக்கின்ற கூட்டத்திலே வெற்றிபெற்ற வேட்பாளர் அவர்களோடு சேர்ந்து பேசக்கூடாது என்று காங்கிரஸ் கட்சி ஏன் அறிவித்தது. காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்திலே எம். ஜி. ஆருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் வந்தபோது அப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு வரக்கூடாது என்று சொன்னதற்கான காரணத்தை விளக்க முடியுமா ?

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, அண்ணா தி.மு.க. எங்களுக்கு ஆதரவு கொடுத்தது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி. ஆர். அவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் நன்றி தெரிவித்திருக்கிறோம். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் எம். பி. சுப்பிரமணியம் அவர்களும், வெற்றிபெற்ற வேட்பாளர் அருணகிரி அவர்களும் நன்றி தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அண்ணா தி.மு.க. வினரும் நன்றி தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டபோது ஒரு துயரமான சம்பவம் நடைபெற்றுவிட்டதால் அவர்கள் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இல்லை என்றால் அந்தக் கூட்டத்திலே முதலமைச்சரும் நன்றி தெரிவித்திருப்பார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொல்வதைப்போல காங்கிரஸ் கட்சி செயற்குழுவில் தீர்மானம் போட வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. அங்கே என்ன நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஒரு யூகத்தின் அடிப்படையிலே அப்படிச் சொல்கிறார்கள். தயவு செய்து யூகத்தின் அடிப்படையிலே அப்படிப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே,...... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் விவாதம் போதும். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோபால் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் 1—2—1982-லே இந்தச் சபையிலே ஆற்றிய உரையின்மீது நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பினை ஆளும் கட்சி சார்பிலே உருவாக்கித் தந்த எனது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் என்றால் நான், தமிழ் இனத் தலைவன் நான் என்று தன்னைத்தானே விளம்பரப் படுத்திக் கொள்கிறவர்கள் எல்லாம் தமிழ் மொழியை இந்தி மொழிக்கு அடிமை ஆக்க நினைத்த நேரத்தில் தமிழ் இனத்தின் பெருமையையும், தமிழ் பண்பாட்டையும் வடக்கே ஆதிக்கம் செலுத்துகின்றவர்கள் அடக்க நினைத்த நேரத்திலே 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்று ஒவ்வொரு தமிழனையும் தட்டி எழுப்பி தமிழின மக்களிடத்திலே ஒரு உணர்வை உருவாக்கி மதுரையிலே தமிழ் மாநாடு கண்ட புரட்சித் தலைவரை வாழ்த்த மனம் இல்லாதவர்கள் தமிழராக இருக்க முடியாது. 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று தமிழ் இனத்தினுடைய பெருமையைப் பாடிய புதுமைக் கவிஞருக்கு, சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து சமதர்மம்காணத் துடித்த புரட்சிக் கவிஞன் பாரதிக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த நேரத்திலே புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்தாதவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது. அப்படிப்பட்ட தமிழர்களுக்கு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்த வாய்ப்பில்லாமல் போய்விட்டாலும் தமிழ் உணர்வு கொண்ட அத்தனை தமிழ் மக்களும் வாழ்த்த கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''.

என்னும் வள்ளுவரின் வாக்குக்கேற்ப வேளாண்மைக்குத் தொடர்ந்து உரிய சிறப்பைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்குகின்ற திட்டத்தை வகுத்து 36 கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களின் அரசை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறையினை விளம்பரத்திற்குப் பயன்படுத்தாமல் நெல்லுக்குத்,





புல்லுக்கும் தன்பெயரையும் தன் குடும்பத்தாரின் பெயரையும் வைக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் உழவர்களுக்கென சிறப்பான திட்டத்தை வகுத்து அவர்களுடைய வாழ்வு வளம் பெற பாடுபட்டு வரும் புரட்சித் தலைவர் அவர்களையும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்திலே பாராட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

'தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடினார் பாரதியார் அவர்கள். அந்த புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற இந்த நேத்ரதிலே ஏழை எளிய நிலமற்ற உழவர்களுக்கு உபரி நிலங்களைப் பகிர்ந்து அளிக்க முடியாத வகையில், சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் அவர்களின் இசைவு இல்லை என்று சொல்கின்ற மன வேதனையைத் தருகின்ற ஒரு செய்தியைக் கேள்விப்படுகின்றபோது அதற்கு யார் காரணம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த சட்டமன்றத்திலே நிலச்சீர்திருத்த மசோதா வந்து அது நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே அதற்கு உறுதுணையாக இருந்த மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த சட்டமன்றத்திலே நீங்கள் உறுதுணையாக இருந்தீர்கள், அப்படிப்பட்ட சட்டத்திற்கு இன்று இசைவு இல்லை என்று சொன்னால் தமிழக மக்களை மதிக்கின்ற வகையிலே, இந்த மன்றத்தின் உணர்வுகளை மதிக்கின்ற வகையிலே நீங்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்திலே வாதாடி மீண்டும் குடியரசுத் தலைவரிடத்திலே அந்த சட்டத்திற்கு இசைவு பெற்றுத் தருகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் இந்த நேரத்திலே இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50).

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 35 வருடங்கள் ஆயிற்று. ஏழை விதவைகளுக்கு மருத்துவத் துறையிலே முன்உரிமை அளிக்க வேண்டும் என்று யாராவது நினைத்திருக்கிறார்களா? ஊனம் உற்றோர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று எந்த அரசாவது நினைத்திருக்கிறதா ? கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய மக்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்று யாராவது நினைத்தது உண்டா - தன்னை விளம்பரப் படுத்திக் கொள்வது, அல்லது தன் பெயரால் அரசு விழாவை

நடத்திக் கொள்வது—இப்படிப்பட்ட அவர்களையெல்லாம்தான் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கல்வி நிறுவனங்களிலும், பொது நிறுவனங்களிலும் ஊனம் உற்றோர்களுக்கு 3 சதவீதம் இடம் ஒதுக்கியிருக்கிறது என்று நினைக்கிறபோது உண்மையான சுதந்திரத்தைக் காண, மகாத்மா காந்தியடிகளுக்குப் பின்னாலே, பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்குப் பின்னாலே, நம்முடைய தமிழகத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னாலே, அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிற ஒரு மாபெரும் தலைவர், இன்று தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கும் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்று சொல்வதிலே நான் பெருமைக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னலே பேசிய சிலர், அந்தந்தக் கட்சியின் சார்பிலே பேசுகிறபோது சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று பேசினார்கள். மதிப்பிற்குரிய அருமை நண்பர், வழக்கறிஞர் சோமு அவர்கள் பேசுகிறபோது, 1979 ஆம் ஆண்டுக்கு பின்னாலே, எந்தெந்த இடங்களிலே என்னென்ன குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பட்டியல் போடுவது போல சொன்னார்கள். அவருக்கு நான் மிகப்பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ எங்கோ சாலையில் தடம் புரண்டு பேருந்து மாறிவிட்டது. சாலையில் நடந்துக் கொண்டிருப்பவர்கள், அவர்கள் அறியாமல் எதிரே விபத்தில் மோதிக் கொண்டார்கள் என்பது போன்றநிகழ்ச்சிகளையெல்லாம் உள்ளடக்கி, இன்னின்ன குற்றங்கள் நடந்தது என்று சொல்லி, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்லி வருவதை விட, தமிழ் நாட்டிலே 1976க்கு முன்னலே நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பாருங்கள் என்று அவர்களை கேட்டுக் கொளகிறேன்.

தான் பெற்ற மகனை தந்தை தன்னுடைய மகன் என்று சொல்வதற்கு கூட உரிமை இல்லாத வகையில் அவரை பயமுறுத்தி பணியவைத்தது யாருடைய அரசு என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சுதந்திர நாட்டிலே தன்னுடைய மகனை தன் மகன் என்று சொல்வதற்குக் கூட உரிமையில்லாமல் அவரை அடக்கி ஒடுக்கி, மறுப்பு தெரிவிக்குமாறு செய்த சூழ்நிலையை உருவாக்கி சட்டம் ஒழுங்கு அமைதியை கெடுத்ததை விட, இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் கேவலமானவை அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே வகையிலே மாண்புமிகு உறுப்பினர், பெரியவர் உமாநாத் அவர்கள் பேசுகிறபோது, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தலில் கொடுத்த வாக்குறுதி





களை மீறி நடத்திருக்கிறார்கள் என்பதுபோலச் சொன்னார்கள். அவருக்கு மெத்த பணிவடைபோடு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது எல்லாம், குறிப்பாகவே சொன்னார்கள்., தெள்ளத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள், '' ஆண்டு கொண்டிருக்கிற மத்திய அரசை பலசத்துக் கொள்வது எங்களுடைய உரிமை அல்ல, அது நாங்கள் மக்களுக்கு அளித்த வாக்குறுதி அல்ல '' என்றுதான் அவர்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் உங்களுக்கு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் குறிப்பிட்டு நான் உங்களுக்கு சொல்ல விரும்புவது, இன்னும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை நீங்கள் முழுமையாகப் புரிந்துக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அவர்கள் பேசுகிறபோது, ஏதோ இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அடிமைப்பட்டு விட்டது போலவும், அவர்களுக்கு பயந்துக் கொண்டிருக்கிறது என்கிற நிலையிலேயும் அவர்கள் பேசினார்கள். 1977 ஆம் ஆண்டு உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்.

அந்த நேரத்தில் இந்திராகாந்தி அம்மையார் அவர்களை எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஆதரித்தார்கள். அதற்குப் பின்னால் நடந்த சட்டமன்றத் தேர்தலில் அவர்கள் கேட்ட ஸீட்களை நாங்கள் கொடுக்கவில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழகம் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'பூமி', இதை ஆளுகிற சக்தி வாய்ந்த தலைவர் எங்களுடைய இதய தெய்வம் தான் என்ற நிலைமையை உணர்த்தி தமிழகத்தில் தேர்தலைச் சந்தித்தார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இயக்கத்தை எதிர்த்து அன்று இங்கே தர்மத்தை நிலைநாட்டினோம். மீண்டும் ஆளும் கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இங்கே அமர்த்திக் காட்டிய பெருமை எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு என்பதை அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகிறபோது சில உறுப்பினர்கள் சொன்னார்கள் இந்த ஆளுநர் உரையில் எதுவும் இல்லை என்று. எங்களைப் பொறுத்த வரையில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் ஆளுநர் உரை என்பது ஒரு அழகிய பூந்தோட்டம். இது ஒரு சமதர்ம பூங்கா. இதில் பூத்துக் கிடக்கிற அழகு மலர்கள்போல் இது சமதர்மம் உணர்வை உருவாக்கிக் கொண்டிருக்கிற அத்தனை திட்டங்களையும் உட்கொண்டிருக்கின்றன என்று கூறி ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில விஷயங்களைச் சொல்ல முன்வருகிறேன். கவர்னர் அவர்கள் உரையில் புதிதாகச் சொல்லப்பட்டிருக்கிற கொள்கைகளில் மின் கட்டணத்தை அதிகப்படுத்துவதற்கும், அதே நேரத்தில் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக விவசாயிகளும் பொது மக்களும் நேரடியாக மோதககூடிய ஒரு கொள்கையை உருவாக்கி இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் எங்களால் சொல்லமுடியும். கடந்த ஆண்டுகளில் கவர்னர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களை அமல்படுத்திருயிருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் எங்களால் சொல்ல முடியும்.

வறட்சி பற்றி இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ரூ. 48.90 கோடி ஒதுக்கி இருப்பதாகவும் தமிழக அரசு ரூ. 55.24 கோடி செலவழித்திருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. தக்க முறையில் அது செலவு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில், வறட்சிப் பணிகளைப் பொறுத்த வரையில் வறட்சி அதிகமாக உள்ள வட ஆற்காடு மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் வறட்சிப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் சரிவர செலவழிக்கப்படவில்லையென்று நான் குற்றஞ்சாட்ட முடியும். பலயிடங்களில் குழாய்க் கிணறுகள், தூர் எடுக்கும் வேலைகள், போன்ற பல்வேறு காரியங்களில் அரசு தொகை ஒதுக்கியிருந்தாலும்கூட அவை முறையாகச் செலவழிக்கப்படாமல் இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். எனவே ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருப்பதில் பெருமை கொள்வதற்கு ஒன்றுமில்லை.

அதேபோல் மத்திய அரசு பொதுப் பங்கீட்டு முறைக்காக தமிழக அரசு 10,800 டன் கோதுமையை வழங்கவேண்டும் என்று கேட்டிருந்தும்கூட 4,000 டன்தான் ஒதுக்கியிருப்பதாகவும் அதே போல் உருளை மாவு ஆலைகளுக்கு ஒதுக்கப்படும் கோதுமை 65,000 டன் வேண்டுமென்று கேட்டும் 30,000 டன்தான் மத்திய அரசு கொடுத்திருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, காங்கிரஸ் அரசு உள்ள மாநிலங்கள், காங்கிரஸ் அரசு இல்லாத மாநிலங்கள் என்று வரும்போது ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பும் என்பதுபோல் மத்திய அரசு கொள்கைகளை, நடவடிக்கைகளை கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதை கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.





இந்த அறிக்கையில், விலைவாசி உயர்வுக்கு காரணம் மத்திய அரசுதான்., மத்திய அரசுதான் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் மாநில அரசுக்கும் பொறுப்பு உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசுதான் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஒத்துக் கொண்டிருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழக அரசு கடந்த 19ம் தேதி விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும்., வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும், மத்திய அரசு பிறப்பித்திருக்கக் கூடிய வேலைநீக்க அவரசச் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்ற பல பிரச்னைகளை வைத்து இந்தியா முழுவதும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்யப்பட்டபோது அந்த வேலைநிறுத்தத்தில பங்கு கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்களை மட்டுமல்ல, விவசாயிகளையும் போலீஸார் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்ககூடிய, மத்திய அரசை எதிர்த்து நடத்தக் கூடிய போராட்டத்தில் மாநில அரசு ஏன் இவ்வளவு கடுமையாக இருந்திருக்க வேண்டும் என்று கேட்கிறேன்.

(பிற்பகல் 1-00)

கோவை மாவட்டத்திலே 19ஆம் தேதி விலைவாசிகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று நடைபெற்ற போராட்டத்திலே, இன்னும் இதுபோன்ற பல்வேறு பிரச்னைகளுக்காக நடத்திய போராட்டத்திலே தொழிலாளர்கள் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். உருமாண்டம்பாளையம் என்ற கிராமத்தில் இரண்டு தோழர்கள் இராமகிருஷ்ணன், தவமணி என்பவர்களை துடியலூர் போலீசார் கைது செய்து, காவல் நிலையத்தில் வைத்து, அவர்கள் அணியும் உடைகளைக் கழற்றி, அவர்களை சிறுநீர் கழிக்கச் சொல்லி, அவர்களுடைய சிறுநீரை அவர்களே குடிக்கச் செய்யும் அளவிற்கு அங்குள்ள போலீசார்கள் கொடுமையான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. துடியலூர் போலீஸ் ஸ்டேஷனிலே இருக்கும் சப் இன்ஸ்பெக்டர், அந்த இரண்டு தோழர்களையும் சிறுநீர் குடிக்கச் செய்வதற்கு, சிகரெட்டைப் பிடித்து, முகத்தில் சூடு வைத்து, சிறுநீரைக் குடிக்க வேண்டும், இல்லாவிட்டால் கொன்று விடுவேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்களை பயமுறுத்தியிருக்கிறார். அதோடு, அவர்கள் முகத்தில் சூடு போட்டிருக்கிறார். அவர்கள் முகங்களில் சூடு வடுக்கள் இருக்கின்றன. அந்த அளவிற்கு கொடூரமாக நடத்தியிருக்கிறார்கள். என்.ஜி.ஜி.ஓ. காலனியிலுள்ள அந்தத் தோழர்களின் முகங்கள் இப்போது அம்மை வடுக்கள் போன்று காட்சியளிக்கின்றன.

[1982 பிப்ரவரி 5

அதேபோல், என்னுடைய அவினாசி தொகுதியிலும், அதேபோல் திருப்பூரிலும் பல்வேறு கொடூரங்கள் நடைபெற்றிருக்கின்றன. பெருமாள், ரங்கசாமி, நாசர் ஸேட், சக்திவேல் ஆகிய நால்வரை காவல் நிலையத்திலே வைத்து பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். இவர்கள் இரவு முழுவதும் காவல் நிலையத்திலேயே வைத்து பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. சிறுநீரகம் பாதிக்கக்கூடிய அளவுக்கு அங்கே போலீசாரின் அட்டூழியம் நடைபெற்றிருக்கிறது. அதேபோல் என்.ஜி.ஜி.ஓ. காலனியில் உள்ள தோழர்களையும் மிகக் கடுமையாக தாக்கியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நான் மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே மனு கொடுத்திருக்கிறேன். அது மட்டுமல்ல. மாவட்ட போலீஸ் அதிகாரியை நேரடியாகச் சந்தித்து, அவர்களுடைய உயிர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்றும், இப்படி மிருகத்தனமாக தாக்கிய அந்தப். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டும்கூட, இது வரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்திலே கடுமையான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தொழிலாளர்கள் நலனுக்காக இருக்கின்ற அரசு என்று சொல்லிக் கொள்ளுகின்ற அண்ணா தி.மு.க அரசு, கடந்த 19ஆம் தேதி மத்தியிலுள்ள காங்கிரஸ் கட்சி ஆட்சியினால் பொருளாதார வீக்கத்திற்குக் காரணம், விலைவாசி உயர்விற்குக் காரணம் என்று சொல்லி, அந்தப் போராட்டத்திலே பங்கெடுத்துக் கொண்ட நேரத்திலே, அங்குள்ள சி.டி.சி.யில் பணியாற்றும் 300 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்திருக்கிறார்கள். அதேபோல், சிந்தாமணியில் பணிபுரியும் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ததோடு ; பல தொழிலாளர்களுக்கு 8 நாள் சம்பளம் பிடித்தம் செய்திருக்கிறார்கள். இன்னும் பல்வேறு நடவடிக்கைகள் இந்த வேலைநிறுத்தம் காரணமாக அவர்கள்மீது எடுக்கப்பட்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் நிரந்தரமான போலீஸ் ஆட்சி நடக்கிறது என்ற குற்றச்சாட்டை என்னால் சொல்ல முடியும். அங்கே இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் காட்டுமிராண்டித்தனமாக, அங்குள்ள கம்யூனிஸ்ட் தோழர்களை தீவிர கம்யூனிஸ்ட்கள் என்று சொல்லி அவர்கள் மீது வழக்கு போடுகிறார்கள். அங்கிருக்கக்கூடிய விவசாயத் தோழர்களின் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாநில முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் பல்வேறு கால கட்டத்தில் அங்கே போகிறார்கள். இதுபற்றி சொல்லப்படுகிறது. ஆனால் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்கே



1982 பிப்ரவரி 5] [திரு. எம். ஆறுமுகம்]

இன்னும் போலீஸ் ராஜ்யம் தான் நடக்கிறது. எனவே, தமிழக சர்க்கார் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளை பொறுத்த மட்டில் எடுத்துக் கொண்டால் கோவை மாவட்டத்தில், அவினாசி தொகுதியில் தமிழ் நாடு ஸ்பின்னிங் மில் என்று ஒன்றிருக்கிறது. அது மூடிக் கிடக்கிறது. அதேபோல், கோவையில் ராதாகிருஷ்ணா மில், ராஜலட்சுமி மில், ஜெயலட்சுமி மில் போன்ற மூன்று மில்கள் மூடிக கிடக்கின்றன.

எனவே, தமிழக சர்க்கார் மூடிக் கிடக்கும் ஆலைகளை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பெரிய நாயக்கன் பாளையம் ஜோதி மில் ஆலை கடந்த ஆறுமாத காலமாக மூடிக் கிடக்கிறது. ஆயிரம் தொழிலாளர்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 3, 4, 5 ஆகிய மூன்று நாட்கள் 'தொழிலாளர்கள் வேலைக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் ; மூடியிருக்கும் ஆலையை உடனடியாகத் திறக்க வேண்டும், என்று உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், ஜோதி மில்ஸ், ராதா கிருஷ்ணா மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ் ஆகிய நான்கு ஆலைகளையும் தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஏற்று நடத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் பால் பண்ணை ஊழியர்களைப் பற்றிக் கடந்த சட்டமன்றக் கூட்டத்திலேயே 1,300 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஒத்தி வைப்புத் தீர்மானம் எல்லாம் கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அவர்களைத் திரும்பவேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஓராண்டுக்கு மேலாகவே 1,300 தொழிலாளர்களை வேலைக்கு எடுக்காமல் இருப்பதுதான் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொழிலாளர் நல அரசின் கொள்கையா என்று கேட்க விரும்புகிறேன். அந்த 1,300 தொழிலாளர்களும் பாத யாத்திரை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கவர்னர் உரையில் ஆதித் திராவிடர்களுக்கு லட்சக் கணக்கான பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் சந்தேகமாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கும் அரிசனங்கள் 20, 30 ஆண்டுகளாக ஓரே இடத்தில் குடியிருந்து வரக் கூடியவர்கள், நத்தத்தில் குடியிருப்பவர்கள், அப்படிக் குடியிருந்து வரக்கூடிய மக்களுக்கு

42 பேர்களுக்கு மத்திய அமைச்சர் தொகுதிக்கு வந்து பட்டா கொடுப்பதாக அறிவிக்கப்பட்டு பத்துப் பேருக்குக் கொடுத்தார்களே தவிர மீதிப் பேருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இருபது, முப்பது வருஷமாக ஒரே இடத்தில் குடியிருக்கும் அந்த அரிசன பழங்குடி மக்களுக்கு பட்டா வழங்காமல் இருப்பதால் அரசு வழங்கக்கூடிய சலுகை அடிப்படையில் ஏழை அரிசனங்கள் கடனைப் பெற்று வீடுகளைக் கட்ட முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு உடனடியாகப் பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை பஞ்சாலைகள் நிறைந்த பகுதியாக இருக்கும் நிலையில் எந்த நேரத்தில் மின்சாரம் வருகிறது, எந்த நேரத்தில் நிறுத்தப்படுகிறது என்பது தெரியாத நிலை இருந்து வருகிறது. விவசாயிகளுககு இரவு நேரத்தில்தான் மின்சாரம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு பகல் நேரத்தில் மின்சாரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரப் பகுதிகளில் இருக்கக்கூடிய தெரு விளக்குகள் எரிவதே இல்லை. பல்வேறு கால கட்டங்களில் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் இதுபற்றி எடுத்துச் சொல்லியும் கூட பயனின்றி இருட்டாக இருக்கக்கூடிய நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதோடு ஆர்டினரி பல்புகளுக்குப் பதிலாக டியூப் விளக்குகளாக மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் அவினாசி தொகுதி தொழில் வளர்ச்சி இல்லாத பகுதி, பாசன வளர்ச்சி இல்லாத பகுதி, இங்கே, பாண்டியாறு புன்னம்புழா திட்டம் வர இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர மாற்று அரசாங்கமான கேரள அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி உடனடியாகக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் அவினாசி பல்லடம் தாலுக்காக்கள் தொழில் வளர்ச்சியில் பின்னடைந்த தாலுக்காக்கள். அவினாசி பல்லடத்தை உடனடியாக பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து சிறுசிறு தொழிற் கூடங்களை ஏற்படுத்தவும், நூற்பாலை ஒன்றைத் தொடங்கவும் அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





கோவை கல்லூரி மாணவர்கள் 16 பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த பதினாறு மாணவர்களும் பரிட்சை எழுத முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 16 மாணவர்களும் பரிட்சை எழுத அனுமதிக்கப்பட்டு மீண்டும் கல்லூரியில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் தொடர் போராட்டம் உண்ணா விரதம் நடத்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அந்தப் பிரச்சினை சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விருதுநகர் கல்லூரி திருடர்களின் சிறைச்சாலை போல் காட்சியளிக்கும் வகையில் ரிசர்வ் போலீசைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1–10]

அங்கே இருக்கக்கூடிய மாணவர்கள் விடுதிச் சாப்பாட்டை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துப் போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே மாணவர்கள் 7 பேர்கள் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டு இருப்பதோடு மட்டுமல்லாமல் அங்கே லா அண்டு ஆர்டர் பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசாங்கம் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்று எடுத்துச் சொன்னேன். அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத அவலம் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தயவு செய்து மேட்டுப் பாளையத்திலிருந்து தண்ணீரை, அவினாசி, திருப்பூருக்குக் கொண்டு வரக் கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புஞ்சைப் புளியம்பட்டியிலிருகின்ற பம்பிங் ஸ்டேஷன் 24 மணி நேரமும் செயல்படவில்லை. 4 மணி நேரம் மட்டுமே வேலை செய்கிறது. அந்த பம்பிங் ஸ்டேஷன் 24 மணி நேரமும் வேலை செய்யக்கூடிய நடவடிக்கையை எடுக்க வேண்டும், அதன் மூலமாக அவினாசி, திருப்பூர் தொகுதிகளிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையிலே தமிழக சர்க்கார் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. அரசு திருப்பூர் தொகுதியிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பங்கு அளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் சுயேச்சையாக செயல் படுகின்ற உறுப்பினராக நான் இருந்து கொண்டிருக்கிறேன். எந்த அரசியல் மாச்சரியங்களுக்கும் அல்லது நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகாமல் பிரச்சினைகளை அவ்வப்போது நடுநிலைமையில் நின்று விமர்சனம் செய்து கான்ஷியன்ஸ் கீப்பர், மனச்சாட்சியின் பாதுகாவலர் என்ற அந்த அடிப்படையில் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, பணியாற்ற வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

அரசியல் சட்டத்தில் 6 மாதம் வரையில் சட்டமன்றத்தைக் கூட்டாமலே ஆட்சி நடத்துகின்றவர்கள் ஆட்சி நடத்தலாம் என்று இருந்தபோதிலும் கூட நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற பல சூழ்நிலைகள் திருப்பத்தூர் தேர்தலுக்குப் பிறகு அரசியலில் ஏற்பட்ட திருப்பம், பால் கமிஷன் அறிக்கை வெளியான நிலைமை, அண்மையிலே தஞ்சையிலே நடந்த துப்பாக்கிச் சூடு இப்படிப் பல காரணங்களுக்காக ஒரு மாதம் முன்பாகவே இந்த அவையைக் கூட்டி அவை உறுப்பினர்கள் விவாதம் நடத்துவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி அவை கூட்டப்படும் என்று அறிவிப்பு கிடைத்த உடனே நான் காலண்டரைப் புரட்டிப் பார்த்தேன். தைத் திங்கள் துன்மதி ஆண்டு 19 ஆம் நாள் அட்டமி திதி, பரணி நட்சத்திரம், சரியான யமகண்டத்திலே ஆளுநர் உரையாற்றுவார்கள் என்பதைப் பார்த்தவுடன் உள்ளபடியே மிகவும் ஆச்சரியமடைந்தேன். மூட நம்பிக்கை மூடப் பழக்க வழக்கங்கள் இவைகள் எல்லாம் தமிழகத்திலே ஒழித்துக் கட்டப்பட வேண்டுமென்று புரட்சித் தலைவர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவரைப் பாராட்டுகிற அதே நேரத்திலே காலையிலும் மாலையிலும் பத்திரிகைகளிலே ஒலிக்கின்ற ஒலிகள் புரட்சித் தலைவர் அவர்களை மூகாம்பிகை பக்தர் என்றும் ஜோசியம் பார்க்கிறார் என்றும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை ஆழ்வார் என்றும் வர்ணிக்கிறார்களே அது என்ன நியாயம் என்று நானும் சிந்தித்துக் கொண்டு இருந்தேன்.

அடுத்தபடியாக ஆளுநர் என்பது சம்பிரதாயமாக ஒருவரை வைத்து ஆளுங்கட்சியினுடைய அறிக்கையை படிக்கிறார்கள் என்று மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் பேசு





கின்றபோது சொன்னார்கள். ஆளுநர் உரை என்பது சம்பிரதாயமாக இருந்தபோதிலும்கூட ஆட்சி என்பது நிச்சயமாக தனிப்பட்ட ஒரு கட்சியைச் சேர்ந்ததல்ல. இரயில்வே கேட்—ஆண்டுக்கொரு முறை—லெவல் கிராசிங்கை மூடி விடுவார்கள் காரணம் என்னவென்றால் அது இரயில்வேக்குச் சொந்தமானது என்பதை நிலை நிறுத்துவதற்காகத்தான். அதைப்போல்தான் ஆளுநர் உரை என்பது ஆளுநர் அவர்கள் சபாநாயகர் இருக்கையில் இருந்து கொண்டு இந்த நாட்டை ஆள்வது அரசியல் சட்டமும் அசோகச் சக்கரமும் என்பதைக் காட்டுவதற்காகத்தான், ஆளுநர் உரை அவ்வப்போது எடுத்துக் கொடுக்கப்படுகின்றன. அங்கே மேதகு சாதிக் அலி அவர்கள் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்றால் அதிலே நாங்கள் பார்ப்பது இந்த நாட்டினுடைய அரசியல் சட்டத்தையும் அசோக சக்கரத்தையும்தானே ஒழிய தனிப்பட்டவர்கள் அல்ல. இதை நிலை நிறுத்துவதற்காகத்தான் ஆளுநர் உரை அவ்வப்போது சட்டமன்றக் கூட்டங்கள் நடக்கிறபோது உருவாக்கப்படுகின்றன.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்துகின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆளுநர் உரையை பகிஷ்கரித்தார்கள். ஆனால் அதே நிலைமை, அவர்களிலேயே ஒரு பிரிவினர் ஆளுங்கட்சியாக உட்கார்ந்திருக்கின்ற நேரத்தில் மறுபடியும் உருவாக்கப்பட்டு, இங்கே உள்ள எல்லோரையும் விட, திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் மட்டும்தான் பகிஷ்காரம் செய்தார்களேயொழிய மற்றவர்கள் பகிஷ்காரம் செய்யவில்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு நீங்கள் செய்தது சரியா? மாண்புமிகு நாவலர் அவர்களும் அந்தக் காலத்தில் பகிஷ்காரம் செய்தவர்களில் ஒருவர். ஆனால் இன்றைக்கு ஆளுகின்ற நிலைமையில் இருக்கிறார். எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பகிஷ்கரித்து விட்டார்கள். ஆகவே, நாம் காட்டுகின்ற மரியாதை அரசியல் சட்டத்திற்கும், அசோகச் சக்கரத்திற்கும் என்பதை தயவுசெய்து மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுநர் உரை சமயத்தில் வந்திருந்து, மரியாதையாக எழுந்து நின்று, தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு வெளிநடப்பு செய்தார்கள். அவர்களை உள்ளபடியே நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வழக்கமாக உள்ளது போலவே, சம்பிரதாயமாக உள்ளது போலவே இந்த ஆளுநர் உரை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கடந்த ஐந்து மாத காலத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள்

என்பதை "highlighting their achievements" என்று அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அதே நேரத்தில் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களின் குறைகளைப் பெரிதுபடுத்தி அவர்களின் நிறைகளைக் குறைத்துச் சொல்லி அவர்களுடைய ஆட்சியிலே மக்கள் படுகின்ற வேதனைகளைப் பெரிதுபடுத்திச் சொல்வதுதான் வழக்கம். இது ஜனநாயக முறையில் வழக்கமாக நடந்து வரும் விஷயம்தான்.

எப்பொழுதும்போல் வழக்கமாக ஆளுநர் அவர்கள் முதன் முதலாகச் சென்ற ஆண்டிலே உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி ஆரம்பித்தார்கள். இந்த ஆண்டிலே பாரதியின் நூற்றாண்டு விழாவைப்பற்றிப் பெரிதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆளுங் கட்சியைச்சேர்ந்தவர்கள், புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வராமல் போயிருந்தால் பாரதியைப்பற்றி இந்தநாடே மறந்துபோயிருக்கும் அல்லது யாருக்குமே தெரிந்திருக்காது என்ற முறையில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வராமல் இருந்திருந்து, பாரதி பிறக்காமல் இருந்திருந்தால் இராமநாதபுரம் மாவட்டமும், புதுக்கோட்டை மாவட்டமும் சகாரா பாலைவனமாக ஆகியிருக்கும் என்பது போன்று கூடச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம்விட ஆங்கில உரையிலே

'It is matter of considerable gratification to us that our State ts in the forefront of organising the Bharathi Centenary celebrations not only in our State from the level af Panchayat Union to the State Capital but also in the various States of our country and in countries abroad, thus paying a tribute to Bharathi and homage to the Bharat of his dreams.'

என்று இருக்கிறது. நாம் ஆர்கனைஸ் செய்யாமல் பஞ்சாபில் உள்ளவனும், மற்ற மாநிலங்களில் உள்ளவனுமா ஆர்கனைஸ் செய்வான். இது ஏதோ பெரிய சாதனையைப் போலச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பாரதியின் புகழை இந்த நாடு பூராவும், உலகம் பூராவும் பரப்ப அதை நாம் சிறப்பாக விழாவாகக் கொண்டாடுகிறோம். அதற்கான முயற்சியை எடுத்திருக்கிறோம், அது மனநிறைவைக் கொடுக்கிறது என்று அதைத் தமிழ்ப்படுத்தினால் வரும் என்று கருதுகிறேன். தமிழ் நாட்டில் பிறந்த தமிழ்க் கவிஞனுக்கு இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிற்குக் கனவு கண்ட கவிக்கு, வருங்காலத்தில் பாரதம் எப்படி இருக்க வேண்டுமென்று தன்னுடைய பாட்டால் சொல்லிய அந்த மகா கவிக்கு தமிழ்நாட்டில்





தமிழன் விழா எடுக்காமல், பஞ்சாபில் உள்ளவனும், வங்காளத்தில் உள்ளவனும், ஆந்திராவில் உள்ளவனுமா விழா எடுப்பான்? எனவே, இதிலே பெருமைப்பட என்ன இருக்கிறது? மற்ற மாநிலங்களின் தலைநகரங்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ நிச்சயமாக ஆங்காங்கே உள்ள தலைநகரங்களில் நர்த்தகியின் நடனம் இருக்கும், புரட்சித் தலைவரின் புகழ் உலகம் பூராவும் பரவி விடும் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறையிலே நாம் அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறோம் என்று இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்களிடத்தில் நேரிலேயே சொன்னேன். தன்னுடைய நிலத்தை விற்றுவிட்டு, பம்பு செட்டை விற்றுவிட்டு, வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் துயரப்படுகின்ற ஒரு ஏழை விவசாயியின் நிலைமையைக் கூட எடுத்துச் சொன்னேன். மின்சாரப் பற்றாக்குறை என்றாலும் கூட விவசாயிகளுக்குப் பயன்படும் அந்தப் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கிடைக்காத காரணத்தால் தொல்லைக்கு ஆளான அருணாசலக் கவுண்டர் என்ற விவசாயியையும் அவர்கள் முன் கொண்டுசென்று நிறுத்தினேன்.

[பிற்பகல் 1-20]

ஆனாலும் இன்னும் மனம் இறங்கவில்லை. விவசாயத்திற்காகப் பயன்பட வேண்டிய அந்த பம்ப் செட்டுகளுக்கு, ஏதோ சீனியாரிட்டி பிரகாரம் மின் இணைப்பு கொடுக்கப் போகிறார்களாம் எந்த ஆண்டிலே, அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்குமோ தெரியவில்லை. இதிலே நாம் விவசாயத்திற்காகப் பாடுபடுகிறோம். வேளாண்மையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வதிலே என்ன பெருமை என்று எனக்கே புரியவில்லை.

அடுத்தபடியாக, நீங்களே கொடுத்திருக்கிறீர்கள், ஜனவரி மாதத்திலே அரிசியின் ஆப் டேக் 25 ஆயிரம் டன்னிலிருந்து 79 ஆயிரம் டன்னாக உயர்ந்திருக்கின்றது என்று. 25,000 டன் அரிசி ஜனவரி மாதத்திலே பொது விநியோக முறை மூலமாக வழங்கப்பட்டது. திடீரென்று அது 79,000 டன்னுக்குத் தாவி விட்டது. என்ன, ஜனங்கள் ஒரு வேளை சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள் திடீரென்று 3 வேளை சாப்பிட ஆரம்பித்தார்களா அல்லது தமிழ்நாட்டிலே மக்கள் தொகை 3 மடங்கு பெருகி விட்டதா? 25,000-லிருந்து 79,000-க்கு உயரக் காரணம் என்ன?

வெளிமார்க்கெட்டிலே அரிசியினுடைய விலை எக்கச்சக்கமாக ஏறிவிட்டது. வேறு வழியில்லாமல், இந்த ரேஷன்கடைகளையே நம்பி, எல்லா மக்களும் அங்கே போக வேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. ஆகவே தான் 79,000 டன்.

அரசு பல முயற்சிகளை எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், எங்கு பார்த்தாலும் போராட்டம். சமீபத்திலே இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள்கூட, ஓட்டலிலே விலைவாசி ஏறிவிட்டது என்று போராட்டம் நடத்தினார்கள். அவர்களுக்குக் கிடைத்த பரிசு சிறைவாசம், அல்லது வேறொன்றும் இல்லை. அதற்கு என்ன நடவடிக்கை எடுத்து விட்டீர்கள்? எல்லோருமே வீட்டிலே சாப்பிட முடியாது. ஓட்டலை நம்பி சாப்பிடுகிறவர்கள் ஏராளமாகத் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள், குறிப்பாக நகரங்களிலே. அங்கே ஓட்டல்களுக்காவது, குறிப்பிட்ட விலையிலே, உங்கள் சிவில் சப்ளைஸ் மூலமாகப் பொருள்களை சப்ளை செய்கிறோம். இந்த விலைக்குத் தான் நீங்கள் தோசையையும், இட்டிலியையும், போண்டாவையும் விற்கவேண்டுமென்று ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கின்றதா இந்த அரசு என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே பலவிதமான கட்டுரைகள் வந்து கொண்டிருக்கின்றன. தம்பி துரைமுருகன் அவர்கள் கூட அழகாக எடுத்துப் படித்துக் காண்பித்தார்கள்- எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை ஒன்றும், இந்திரா காந்தியினுடைய சொந்தப் பத்திரிகை அல்ல. அவரைத் தீவிரமாக, முழு மூச்சுடன் எதிர்க்கின்ற பத்திரிகை என்பது உலகுக்கே, ஊருக்கே தெரிந்த விஷயம். ஆனால், அதே எக்ஸ்பிரஸ் பத்திரிகை,

"If any Cong-1 C.M., has mis-ruled a State the way M.G.R. has, the Opposition and the Press would have torn it to shreds"

என்று ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறது. அந்த அளவிற்கு இங்கே தமிழகத்திலே, ஆட்சி, சரியான முறையிலே இயங்கவில்லையென்பதைப் பற்றி, இந்திரா காந்திக்கு எதிரான பத்திரிகை, தமிழகத்தைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறது. நிச்சயமாக, அதிலே ஏதோ விஷயம் இருக்க வேண்டுமென்பது தெரிகிறது. அங்கே மராட்டிய மாநிலத்திலே ஒரே ஒரு அருண் சௌரி 'ஆர்ட்டிக்கில்' எழுதினார்கள். அவர் மிகச் சிறந்த ரைட்டர், எடிட்டர் கூட. ஆனால், இங்கே அவர் போன்ற அருண் சௌரிகள் இல்லை. ஒரு சாதாரண சுயேச்சை உறுப்பினர் சௌரி தான் இருக்கிறேன். (சிரிப்பு).





அடுத்தபடியாக, இந்த மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்திவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய பலன் என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதலிலே சொன்னார்கள், கள்ளச் சாராயம் குடித்து, விஷ மருந்துகளைக் குடித்து, மக்கள் ஏராளமாக, செத்து விடுகிறார்கள், அதற்காகத் திருத்த வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது மீண்டும் அவசரச் சட்டம் கொண்டு வருகிறார்கள். Boot leggers Preve ti n Act இதை எதற்காகத்தான் கொண்டு வருகிறார்களோ, எனக்கே புரியவில்லை. இன்று நிலைமைகள் என்னவென்று சொன்னால், கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத்திலே, சென்னை நகரத்திலே ஐம்பதே ஐம்பது கடைகள் தான் இருந்தன. இன்று 150 கடைகள் சட்டத்திற்குப் புறம்பாக, எங்கு திரும்பிப் பார்த்தாலும், இருக்கின்றன. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். 'பயில்வான் சாராயக் கடை', 'இதுதான் கள்ளுக்கடைக்கு வழி', 'இதோ சாராயக் கடை', 'பேமஸ் ஒயின்ஸ்', "வோல்கா ஒயின்ஸ்,, இப்படி ஒரு தெருவிலேயே 17 பலவிதமான சாராயக்கடைகள் உஸ்மான் ரோட்டிலே இருக்கின்றன. எந்த அடிப்படையிலே லைசன்ஸ்கள் வழங்கியிருக்கிறார்கள் அவர்களுக்கு என்று புரியவில்லை. நாம் போவது மினி பாண்டிச்சேரியா, அல்லது தமிழகத்திலே தியாகராயநகரிலே உள்ள உஸ்மான் சாலையா என்று கூட புரியவில்லை. வேண்டுமானால், இன்னும் 'கேமிங்' ஆக்டை அமென்ட் செய்து விடுங்கள், மதுச் சட்டத்தைப் போல். இம்மாரல் டிராஃபிக் ஆக்டையும் அமென்டு செய்து விடுங்கள். நாம் இருப்பது அமெரிக்காவில் உள்ள லாஸ் வேகஸ், லாஸ் ஏஞ்சல்ஸ் போல் தமிழ்நாடு விரைவிலே காட்சி அளிக்கும்.

சட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள், மதுக்கடைகளுக்கும், சாராயக் கடைகளுக்கும் பர்மிட் வழங்குகிற நேரத்தில் கடைகளுக்குப் பக்கத்திலே ஹாஸ்ப்பிட்டல்கள் இருக்கக்கூடாது கோயில்கள் இருக்கக்கூடாது, ஹாஸ்ட்டல்கள் இருக்கக் கூடாது, பள்ளிக்கூடங்கள் இருக்கக்கூடாது, என்று. நாம் லைசன்ஸ்கள் வழங்கியிருக்கிற அனைத்துக் கடைகளுக்கும் பக்கத்திலே இவைகள் எல்லாம் இருக்கின்றன. ஏன் இப்பொழுது கடைக்குப் பக்கத்திலே இருக்கிற ஒரு பள்ளிக்கூடத்திலே உள்ள ஒரு பையனுக்கு என்ன கணக்குப் போடுகிறார், கணக்கு ஆசிரியர். ஒருவன் ரூ. 100 எடுத்துக் கொண்டு சாராயக் கடைக்குள் நுழைகிறான் ஒரு லிட்டர் சாராயம் ரூ. 3 வீதம் 8 லிட்டர் சாராயம் வாங்கி குடித்து விட்டால், மிச்சம் அவன் பையிலே எவ்வளவு இருக்கும் என்று அவர் கேட்டால், பையன் சொல்கிறான், அவனிடத்திலே

பென்ஷன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா. அல்லது எதிர் காலத்திலே அவ்வாறு செய்ய அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூட அதற்குப் பதில் அளித்தேன். அரசு அதைப் பற்றி ஆராய இருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுது பயிர் பாதுகாப்புத் திட்டம் பல்வேறு காப்புறுதி நிறுவனங்களால் நடத்தப்படுவதாக அறிகிறேன். அதை அரசே எடுத்து குறைந்த பிரிமியத்தில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்பொழுது முன்னோடித் திட்டமாகத்தான் செயல்பட்டு வருகிறது. அதனுடைய பலன்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு எதிர்காலத்தில் நாம் செயல்படுத்துவோம்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் என்ற அடிப்படையிலும், தன்னிறைவுத் திட்டம் என்ற அடிப்படையிலும், அரசு கிராமப்புறங்களின் வளர்ச்சிக்குப் பாடுபடும்போது எல்லா விவசாயத் தொழிலாளர்களும் அந்தப் பணிகளில் ஈடுபடுகின்ற காரணத்தால், சிறு விவசாயிகள் பணியாட்கள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அப்படி பணியாட்களைப் பெற்றாலும், தன்னிறைவுத் திட்டத்திற்குக் கொடுக்கின்ற கூலிகளை விவசாயத் தொழிலாளர்கள் கேட்கிறார்கள். எனவே, சிறுவிவசாயிகளைப் பாதுகாக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பெரும்பாலும் சிறு விவசாயிகளுக்காகத்தான்.

### தேர்வு செய்யப்பட்ட விவசாய அலுவலர்கள்

* வினா எண். 31. திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) துணை விவசாய அலுவலர்கள் 1962 முதல் 1965 வரை தேர்வாணைக் குழுவின் (T.N.P.S.C.) மூலம் எத்தனை பேர் தேர்வு செய்யப்பட்டார்கள் ?



(ஆ) இவர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் ? மலைவாழ் மக்களைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்கள் ?

(இ) ஆணைக்குழு (T.N.P.S.C.) இல்லாமலேயே அலுவலகம் மூலம் நேரிடையாக உதவி விவசாய அதிகாரிகளாக 1965 முதல் 1970 வரை நியமிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் 177 பேர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். 1963 ஆம் ஆண்டு முதல் 1965 வரை தேர்வாணைக்குழு தேர்வு செய்யவில்லை.

(ஆ) இதில் 5 பேர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள், மலை வாழ் மக்களைச் சார்ந்தவர்கள் ஒருவருமில்லை.

(இ) 1965 முதல் 1970 வரை 39 உதவி வேளாண்மை அலுவலர்கள துணை வேளாண்மை அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 5 பேர்கள் என்றும், மலை வாழ் மக்களைச் சார்ந்தவர்கள் ஒருவருமில்லையென்றும் சொன்னார்கள். 18 சதவீதம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இருந்தும், தகுதியானவர்களுக்குத் தேர்வுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் இருந்தும், அவர்களுக்கு எந்தக் காரணத்தினால் ஒதுக்கப்பட்ட விகிதாச்சாரப்படி கொடுக்கவில்லை. அது மட்டுமல்ல, மினிமம் குவாலிஃபிகேஷன் என்ற முறையிலே பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் இன்டர்வியூக்கு அழைக்கப்பட்டும், மினிமம் குவாலிஃபிகேஷன் அவர்களுக்கு இருந்தும், ஏன் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லையென்ற காரணத்தை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1962-க்குப் பிறகு தேர்வாணைக்குழு இந்தத் தேர்விலே ஈடுபடவில்லை. விவசாயத் துறையே தன்னுடைய வேளாண்மைப்பணி சிறப்பு விதியின்கீழ் வேளாண்மை உதவியாளர்கள், துணை வேளாண்மை அலுவலர்களாக தேர்வாணைக்குழு இல்லாமலேயே, அலுவலகத்தில் பதவி உயர்வு செய்யப்படுகிறார்கள் என்கிற வகையில், அந்த விதிகள் திருத்தப்பட்ட காரணத்தினாலே, இத்தகைய சிக்கல் ஏற்பட்டிருக்கக் கூடும். இருந்தாலும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த விகிதாசாரத்தின்படி அவர்களுக்கு உரிய நியாயம் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

ஒன்றும் இருக்காது, தள்ளாடிக் கொண்டே வீட்டுக்கு வருவான். பையிலே 'ஜீரோ'. வீட்டிலே அவனைக் கொண்டு வந்து இறக்கிய ரிக்ஷாக்காரனுக்கு ரூ. 5 கொடுத்து, அவனை உள்ளே அழைத்துச் செல்வார்கள் என்று சொல்கிற அளவுக்குக் கணக்கு இருக்கிறது.

இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், நிச்சயமாக இந்த மதுவிலக்குச் சட்டத்தை திருத்தியதன் பலனை இன்றைக்குத் தமிழக மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன்' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். 15 ஆண்டுகளாக அவர்களை சிரிக்க வைத்து சிரிக்க வைத்துப் பார்க்கிறார்கள். ஆனால் ஏழை சிரிப்பதாகத் தெரியவில்லை. ஆகவே சாராயத்தை ஊற்றி, அப்போதாவது அவன் சிரிக்கிறானா என்று பார்க்கத்தான் இருக்கிறார்கள் என்றுதான். நான் எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக எனது தம்பி அம்பிகாபதி அவர்கள் நேற்றைய தினம் வெகு காரசாரமாக இன்னும் ஒரு மாதத்திற்குள்ளே மத்தியிலே ஆட்சி இருக்காது என்று ஆரூடம் சொல்வது போல சொல்லிவிட்டுப் போனார். 1969–70-லே எந்த அளவுக்கு அவர் அரசியலிலே வளர்ந்திருந்தார் என்று எனக்குத் தெரியாது. இப்போதுள்ள காங்கிரஸ் (இ) அன்றைக்கு இல்லை. அன்றைக்கு காங்கிரஸ் (ஜே) இருந்தது. அந்த காங்கிரஸ் (ஜே)க்கு தமிழகத்திலே நான் செயலாளராக இருந்தேன். அப்போது பம்பாய் மாநகரத்திலே மிகப் பெரிய கட் அவுட்டிலே 100 அடி உயரத்திலே தாயும் சேயும் உள்ள கட் அவுட், பிளிட்ஸ் பத்திரிகை வாசலிலே எழுதி வைத்திருந்தார்கள்.

"Your future is safe in the hands of Indira Gandhi as much as a child is in the arms of her mother"

நாட்டின் வருங்காலம் இந்திரா காந்தியின் கையிலே இருக்கிறது— தாயின்மடியிலே குழந்தை எவ்வளவு பத்திரமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு பத்திரமாக இருக்கிறது என்று முதன் முதலாக விளம்பரம் செய்தது பிளிட்ஸ் பத்திரிகை—அங்[illegible]கயுள்ள தலைமை அலுவலகத்தின் பத்திரிகை அது. பாவம், அம்பிகாபதி அவர்கள். தலை எங்கோ இருக்கிறது. தலை என்ன செய்யப்போகிறது. என்று அவருக்குத் தெரியாது. வால் மாத்திரம் ஆடுகின்றது காலம் அவர்களுக்கு பதில் சொல்லும் என்று அம்பிகாபதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. மு. அம்பிகாபதி : பிளிட்ஸ் எங்களுடைய கட்சிப் பத்திரிகை அல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். எங்கள் கட்சிப் பத்திரிகை 'நியு ஏஜ்' என்னும் ஆங்கிலப் பத்திரிகை.

டாக்டர் கே. சௌரிராஜன் : உங்கள் கட்சிக்கே அதிகார பூர்வமான ஒரே பத்திரிகை பிளிட்ஸ் அலுவலக வாசலிலே எழுதப்பட்ட வாசகம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைமைச் செயலகம் பம்பாயில் கிடையாது. டெல்லியிலே இருக்கிறது, அஜாய்பவன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : அடுத்து பால் கமிஷன் ரிப்போர்ட் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதன் முதலாக திருச்செந்தூரில் மரணம் சம்பவித்தவுடன் நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அது தற்கொலை என்று சொன்னார்கள். பின்பு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு கமிஷன் போட்டார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு வீட்டிலே ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்டபோது மருமகள் பிச்சை கிடையாது என்று சொன்னாளாம். இதை பார்த்துக்கொண்டிருந்த மாமியார் வேகமாக வந்து, பிச்சைக்காரனைப் பார்த்து அவள் என்ன இல்லை என்று சொல்வது, நான் சொல்கிறேன் பிச்சை கிடையாது என்று சொன்னாளாம். அதைப்போல அன்று முதலிலே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தற்கொலை என்று சொன்னார்கள். பின்னர் பால் கமிஷன் போட்டு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க தேவையில்லை; அறங்காவலர் குழுவை கலைக்கமாட்டேன் என்ற அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக குடிசைமாற்று வாரியத்தைப்பற்றி ஒரு வார்த்தை. சாதாரணமாக இன்று எங்கு போய்ப் பார்த்தாலும் சரி அது குடிசை மாற்று வாரியமாகத் தெரியவில்லை. குடிசையில் வாழ்வோருக்கு திடீரென்று லாட்டரி அடித்ததுபோல அவர்கள் பணம் சம்பாதித்துக்கொள்வதற்காக ஏற்பட்ட ஒரு வாரியமாக அது இருக்கிறது. யார், யாருக்கு அலாட் செய்யப்பட்டிருக்கிறதோ அவர்கள் யாருமே இல்லை. ஆனால் இன்றைக்கு 11,000, 12,000 பேர்களுக்கு இ.டபிள்யூ. எஸ். டெனமென்ட்ஸ் என்று சர்வசாதாரணமாக கைமாறிக்கொண்டிருக்கிறது. எங்களைப் போன்றவர்களும் அதற்குத் துணையாக இருக்கின்றோம். அப்துல் காதர், சுந்தரமூர்த்தி, அண்ணாத் தம்பி என்று எழுதிக்கொடுக்கின்ற துர்பாக்கியமான நிலையில் நாங்கள் இருக்கிறோம். அதே நேரத்தில் குடிசைமாற்று வாரியத்தின் உண்மை நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி உங்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வெங்கட்டராமன், துக்காராம் தெரு என்று போடப்

பட்ட ஒரு கடிதம் 22—1—82 காலை 10.00 மணி முதல் 1.30 மணி வரை வாரிய அலுவலகத்தில் ஆஜராக வேண்டுமென்றுபோடப் பட்டிருக்கிறது. 22-ந் தேதி வர வேண்டுமென்று சொல்லி எழுதப்பட்ட கடிதம் 29-ந்தேதி தபாலில் வருகிறது. இந்த இலட்சணத்தில்தான் இந்த குடிசைமாற்று வாரியம் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லி, எத்தனையோ குறைகள் இருந்தும் கூட இந்த அளவுக்கு ஆட்சி செய்கிற உங்களைப் பாராட்டி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 6—2—1982-ம் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*97. இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1979—80ஆம் ஆண்டிற்கான அறிக்கை (கமர்சியல்) (ஆங்கிலம்) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ்பேரவைமுன் வைக்கப்பெற்றது)

98. பூம்புகார் கப்பற் போக்குவரத்துக் கழகத்தின் 1980—81-ஆம் ஆண்டிற்கான 7-ஆம் ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாங்கள், எதுவுமில்லை.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

சனிக்கிழமை, 1982 பிப்ரவரி 6

தை 24, துன்மதி, திருவள்ளுவர் 2013.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“பகைஅகத்துச் சாவார் எளியர் அரியர்
அவைஅகத்து அஞ்சா தவர் ”.

போர் காலத்தில் சாவதற்குத் துணிந்தவர்கள் பலராக இருக்க லாம். ஆனால், அவையிலே அஞ்சாது பேசவல்லார் சிலரே ஆவர்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

'மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் தனிமையிடப்படி'

*வினா எண். 61—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்வாரியத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு 'தனிமையிடப் படி' வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : ஆம். தனிமை யிடப்படி ''தனிமையிடங்கள்'' என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங் களில் பணி புரியும் எல்லா மின்வாரிய ஊழியர்களுக்கும் அவர் களுடைய அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் ''தனிமை யிடப்படி'' வழங்கப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, குந்தா, கோவையாறு, சுருளியாறு போன்ற பகுதி களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு 1—11—1979 லிருந்து தனிமையிடப்படி' தரப்படுவதாகவும் அதற்கு முன்னால் 1—12—74 லிருந்து 31—10—79 வரையில் தரப்படவில்லை என்றும்

[1982 பிப்ரவரி 6

நான் அங்கு சென்றிருந்தபோது ஊழியர்கள் தெரிவித்தார்கள். அதையொட்டி எழுப்பப்பட்டது இந்த கேள்வி. இப்போது அங்கே அந்த தனிமையிடப்படி தரப்படுகிறதா என்பதையும் 1–12–74 முதல் 31–10–79 வரை தரப்படாமல் இருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிமையிடம் என்று அறிவிக்கப்பட்ட பிறகு அந்த 'தனிமையிடப்படி' வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குத் தரப்படவில்லை என்றால் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் அவை தனிமையிடம் என்று அறிவிக்கப் படாமல் இருந்திருக்கலாம்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, தனிமையிடம் என்று அறிவிக்கப்பட்ட பகுதி என்று, ஐசலேட்டட் ஏரியா என்று, அறிவிக்கப்பட்ட பகுதிதான் அது என்றும், ஆனால் அதற்கு முன்னால் 59 மாதங்களுக்கு அந்த தனிமையிடப்படி தரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது தெரிவித்திருக்கிற பதிலிலிருந்து ஒருகால் இப்போது தரப்பட்டாலும் தரப்படலாம். அப்படித் தரப்படாமல் இருந்தால் அதைத் தருவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எல்லோருக்கும் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய கருத்தை இப்போது இங்கே தெரிவிக்கிறார்கள். 1974 முதல் 1979 வரையில் குந்தா, கோதையாறு, சுருளியாறு பகுதிகளில் தரப்படவில்லை என்ற புதிய தகவலைச் சொல்கிறார்கள். அது பற்றி ஆராயப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவரவர்களே, இந்த தனிமையிடப்படி என்பது எந்தெந்த இடங்களில் கொடுக்கப்படுகிறது என்பதோடு எந்தெந்த தேதியிலிருந்து அது அமுலுக்கு வந்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்சார வாரியம் உருவானதிலிருந்து தனிமையிடப்படி அளிக்கப்படுகிறது. தனிமையிடங்கள் மொத்தம் 30 இருக்கின்றன. பல்வேறு பணிகள் ஆரம்பிக்கப்படுகிறபோது, மலைப்பகுதிகளாக இருந்தால், எளிதில் செல்ல முடியாமல் இருக்கும்போது அந்த இடங்கள் எல்லாம் தனிமையிடங்கள் என்று அறிவிக்கப்படுகின்றன.



1982 பிப்ரவரி 6]

மின்வாரியம் மூலம் பல்புகள், குழல் விளக்குகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

* வினா எண். 62—திரு. சு. முத்துக்கிருஷ்ணன், திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியம் தன்னுடைய சொந்த பொறுப்பிலே பல்புகள், டியூப் விளக்குகள் அமைக்கின்ற தொழிற்சாலையை ஆரம்பிக்குமா ?

(ஆ) ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய்க்கு மின்சார வாரியத்திற்கு பல்புகள், டியூப் விளக்குகள் வாங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அத்தகைய தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) சென்ற ஆண்டு ரூ. 25 லட்சம் மதிப்பிற்கும், இந்த ஆண்டு ரூ. 66 இலட்சம் மதிப்பிற்கும் பல்புகளும் குழல் விளக்குகளும் வாங்கப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, மின்சாரத் துறை அமைச்சரவர்கள் மின்சார வாரியத்தின் மூலம் பல்புகள், டியூபுகள் தயாரிக்க சொந்தத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு 77 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கும், இந்த ஆண்டு 66 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கும் பல்புகள், டியூபுகள் வாங்கப்பட்டதாகவும் கூறினார்கள். இப்படி இலட்சக் கணக்கில் நாம் வாங்கும்போது சொந்தத்தில் தொழிற்சாலை ஆரம்பித்தால் பலருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதால் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் ஒழுங்காக மின்சாரத்தை உற்பத்திச் செய்து, மனநிறைவு அளிக்கும் வகையில் அதை விநியோகித்தாலே போதும். இத்தகைய தொழிற்சாலைகள் ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கின்றன. ஆகவே, இதில் போய் மின்சார வாரியம் தலையிட வேண்டியதில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தால் வாங்கப்படும் பல்புகளில் அடிக்கடி பழுது ஏற்படுகின்றது. ஆனால் சில தனியார் கடைகளில் பல்புகளை வாங்கி உபயோகித்தால் அவை நீண்ட நாட்களுக்கு வருகின்றன, அவை ஃப்யூஸ் போவது இல்லை. என்று கூறுகிறார்கள். அது உண்மையா ? அப்படிப்பட்ட நல்ல பல்புகளை வாங்கிப் போடுகின்ற உத்தேசம் உண்டா ?

[1982 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவை எந்தத் தனியார் கடைகளில கிடைக்கின்றன என்ற விவரத்தைத் தந்தால் நாங்களும் வேண்டுமானால் அங்கேயே வாங்குகிறோம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, பல்புகளை எந்தக் கடையில் வாங்குவது என்பது பிரச்சினை அல்ல. மொட்டலாக இன்றைய நிலையில் இருக்கின்ற பல்புகளைப் பார்த்தால் பாலிலே தண்ணீர் ஊற்றுவது மாதிரி வீக்கஸ்ட் ஃபிலமண்ட் போட்டு செய்கின்றார்கள். மேலும் 40 வால்ட்ஸ் பல்புகளின் மீது 60 வாட்ஸ் பல்புகள் என்று எழுதி விற்கப்படுகின்றது. ஆகவே, இதெல்லாம் பிக்கஸ்ட் லாஸ். ஆகவே நாமே பல்பு பேக்டரி அமைக்கவில்லை என்று சொன்னால் கூட இந்த மாதிரி தரம் குறைந்த பல்புகளைத் தயாரிக்கின்றவர்களைப் பனிஷ் பண்ணக்கூடிய வகையிலே ஏதாவது சட்டம் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கப்படுமா அல்லது வேறு எந்த வகையிலே அவர்களை டீல் பண்ணுகிறார்கள் என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரத்தைப் பற்றி இங்கே பிரச்சினை எழுப்பி இருக்கிறார்கள். பொதுவாக தரமான பொருட்களை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய வேண்டியது இன்றியமையாதது. ஆனால் மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் யார் குறைந்த விலையில் தருகின்றார்களோ அவர்களிடத்திலே வாங்க வேண்டும் என்ற ஒரு வரைமுறை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, குறைந்த விலையில் வாங்குவதால் அதனுடைய தரமும் குறைந்துவிடுகின்றது. இந்த நிலையினை அரசு ஆராய்ந்து இப்போது மின்சார வாரியத்திற்கு என்ன சொல்லி இருக்கிறோம் என்றால் தரமான பல்புகளை உற்பத்தி செய்யக் கூடிய நிறுவனங்களின் பட்டியலைப் போட்டு அவர்களிடத்திலே மட்டும் டெண்டர் கோரி அதன் பிறகு பல்புகள் ஒழுங்காக எரிவதற்குரிய உத்தரவாதமும் பெறப்பட வேண்டும் என்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் மூலமாக பல்புகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவில்லை என்று சொன்னால் கூட நாம் குறைந்த விலையிலே பல்புகளை வாங்கவேண்டும் என்ற நிலையினைப் போக்கி மிக விலையுயர்ந்த பல்புகளை வாங்கினாலும் பரவாயில்லை என்று தரமான நீடித்து உழைக்கின்ற அளவிலே உள்ள பல்புகளைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் உற்பத்தி பண்ணுகின்ற பல்புகளை வாங்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதைத் தான் நான் சொன்னேன். இதுவரையிலே லோயஸ்ட் டெண்டர் என்ற முறையிலேதான் வாங்கிக் கொண்டிருந்தார்கள்.



1982 பிப்ரவரி 6]

அதாவது அந்த முறையிலே போனால் ஆடிட் அப்ஜக்ஷன் வராது என்பதற்காகத்தான் அப்படிச் செய்தார்கள். ஆனாலும் ஓரளவுக்குத் தரமான பல்புகளை உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனங்களிடம் இருந்து மட்டும் டெண்டர் அழைத்து அதிலே லோயஸ்ட் டெண்டர் கேட்பவர்களிடத்திலே வாங்கலாம் என்றும் அப்படி வாங்குவதால் ஆடிட் அப்ஜெக்ஷன் வராது. அதுவும் சட்டத்திற்கு ஏற்புடையதுதான். ஆகவே அந்த வகையிலே ஆலோசனை சொல்லி இருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது லோயஸ்ட் டெண்டர் கேட்பவர்களிடத்திலே வாங்கவில்லை என்று சொன்னால் ஆடிட் அப்ஜெக்ஷன் வரும் என்று சொன்னார்கள். அப்படி லோயஸ்ட் டெண்டர் கேட்பவர்களிடம் வாங்கப்படுகின்ற காரணத்தால் ஒரு பலமான காற்று அடித்தவுடன் அத்தனை பல்புகளும் எரிந்து ஃப்யூஸ் போய் விடுகின்றன என்ற நிலைமை அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே பணம் அதிகமாகக் கொடுத்தாகிலும் புதிய நல்ல தரமான பல்புகளை வாங்கிப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சாதாரணமாகக் கடையிலே நாம் எந்தப் பொருளை வாங்கினாலும் பார்த்து நல்ல தரமான பொருட்களைத்தான் வாங்குகிறோம். ஆனால் மின்சார வாரியத்திலே குறைந்த விலையில் உள்ள பொருட்களை வாங்குவது என்ற முறை ஏற்கெனவே கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இப்போது நாம் சொல்லி இருப்பது என்னவென்றால் லிமிட்டட் டெண்டர் சிஸ்டம் என்ற வகையில் ரெப்யூட்டட் ஃபர்ம்ஸ் என்ற வகையிலே இருக்கின்ற ஜெனரல் எலக்ட்ரிக்கல்ஸ், ஃபிலிப்ஸ் போன்ற நிறுவனங்களிடமிருந்து மட்டும் டெண்டர் வாங்கி அவர்களிலே யார் லோயஸ்ட் டெண்டர் கேட்கிறார்கள் என்று முடிவு செய்து வாங்கினால் அதை ஆடிட் அப்ஜெக்ட் செய்யாது என்று சொல்லி இருக்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் மின்சாரத்தை உற்பத்தி செய்து வினியோகித்தாலே போதும்; பல்பு செய்யக்கூடிய நிலைமையில் மாட்டிக் கொள்ள வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் மின்சார வாரியத்தால் அனுமதிக்கப்பட்டு பயன்படுத்தப்படக்கூடிய பல்புகள் இவை என்று முத்திரையிட்டு கொடுக்கப்படுமா? அப்படிச் செய்தால் இப்போதிருக்கின்ற சிக்கல் தீருவதற்கு வழி பிறக்கும். ஐ. எஸ். ஐ. முத்திரை என்று சொல்லப்படுவது போன்று மின்சார வாரியம் ஒரு முத்திரையிட்டுக் கொடுத்தால் பொதுமக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும். அடிக்கடி ஏற்படுகின்ற விபத்துக்கள் இல்லாமல் இருக்கும். ஆகவே அந்த வகையிலே செய்வதற்கு ஏதாவது யோசனை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 6

[ முற்பகல் 9.10 ]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே நமது மின்சார வாரியம் போடுகின்ற பல்புகள் அடிக்கடி பியூஸ் ஆகின்றன என்ற குற்றச்சாட்டு இப்பொழுது ஏற்கெனவே இருக்கிறது. இப்பொழுது நாம் சரியான பல்பு என்று சொல்லி முத்திரையிட்டு பொது மக்களுக்கு வினியோகித்தால், அவர்களும் இந்த விஷயத்தில் சேர்ந்து கொள்வார்கள். ஆகையினால் கவனமாக, தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற கடமைகளை மின்வாரியத்தினர் ஒழுங்காக நிறைவேற்றினால் போதும் என்று குறிப்பிட்டேன்.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தால் கொடுக்கப்படுகிற பல்புகள் சரியாக எரியவில்லை. தரமானதாக இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி எரியாத பல்புகளை மாற்றச் சொல்லி கேட்டால், அதற்குப் பொறுப்பு ஏற்பது மாநிலத் தலைமையா, நகராட்சித் தலைமையா, மாவட்டத் தலைமையா ஊராட்சித் தலைமையா என்று தெரியவில்லை. மின் வாரியத்தின் அலுவலகத்தில் கேட்டால், நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே பல்புகளை மாற்றிப் போடுவதற்கு வாங்குவதற்கான அனுமதி மாவட்டத் தலைமையிலா, ஊராட்சி பேரூராட்சித் தலைமையிலா எவ்வாறு வழங்கப்பட்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே ஒட்டு மொத்தமாக வாங்குகிற போது விலை குறையும். அந்த வகையில் மொத்தமாக மாநில மட்டத்தில்தான் பல்புகள் வாங்கப்படுகின்றன. அண்மையிலே இன்னொரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. பொதுவாக குண்டு பல்புகள் போடப்பட்டிருக்கின்ற இடங்களில் அடிக்கடி பியூஸ் ஆகிவிடுகிறது என்று புகார்கள் வருகிற காரணத்தினால், 4 அடி குழல் விளக்குகள் வேண்டும் என்று எல்லோரும் கேட்கிறார்கள். ஆகவே, எந்தெந்தப் பகுதியில், ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஒழுங்காக மின்சார கட்டணத்தைச் செலுத்திவருகிறார்களோ, அவர்களுக்கு இந்த 4 அடி குழல் விளக்குகள் போட்டு குண்டு விளக்குகளை அகற்ற உத்தரவு இடப்பட்டுள்ளது. அது மின்சார வாரியத்தின் செலவிலேயே போடப்படும்.

திரு. கே. சௌந்திரராஜன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், விளக்குகள் தரம் உள்ளதா என்று பார்த்து வாங்கப்படுகின்ற நேரத்தில் தரம் உள்ள கம்பெனியாக பார்த்து வாங்கவேண்டும் என்ற முறையில் டெண்டர்கள் கோரப்படுவதாக சொன்னார்கள். ஆனால் சில இடங்களில் குடிசைத் தொழிலாக இத்தகைய பல்புகள்



1982 பிப்ரவரி 6]

திரு. பெ. சு. திருவேங்கடம் : விவசாயிகள் போடுகிற மோட்டார்கள் தரம் குறைந்திருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது பெரும்பாலும் உண்மை. ஆனால் விவசாயிகள் அப்படி வேண்டுமென்று போடுகிற நிலைமை ஏற்படுவது இல்லை. பல கம்பனிகளிலிருந்து ட்யூப்ளிகேட் மோட்டார்கள் தயாரித்து விற்கிறார்கள். சரியான காயில்கள் இருப்பதில்லை. ஆகவே விவசாயிகளும் ஏமாறுகிறார்கள். மின்சாரத் துறை அதிகமாக மின்சாரம் செலவழிக்கும் நிலையும் ஏற்படுகிறது. ஆகவே இதைக் கண்டறிய மின்சார வாரியமோ அல்லது அரசாங்கமோ ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காகவே இந்தக் குழுவைப் போட்டிருக்கிறோம். உற்பத்தி செய்கிற தொழில் அதிபர்கள், வாங்கிப் பயன்படுத்துகிற விவசாயிகள், மின்சாரம் தருகிற மின்சார வாரியம் இவைகள் எல்லாம் சேர்ந்து எந்த வகையில் அதைச் சீர்திருத்தம் செய்யலாம் என்றிருக்கிறது. விவசாயிகள் ஒத்துழைப்பு இருந்தால்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும்.

திரு. மா. சின்னராசு : கோவையில்தான் பெரும்பாலான இந்த மோட்டார் பம்ப் செட்கள் தயாரிக்கப்படுகின்றன. அங்கே தரமான நல்ல கம்பெனிகளும் இருக்கின்றன. குடிசைத் தொழில் போல் சாதாரணமாக என்ஜினியரிங் பௌண்ட்ரீஸ் செயல்பட்டுவருகின்றன. இதிலுள்ள விலை வித்தியாசத்தினால் தரக்குறைவான மோட்டார்களை விவசாயிகள் வாங்கக் கூடிய நிலை ஏற்படுகிறது. இந்த விலை வித்தியாசத்திற்குக் காரணம் என்னவென்றால் நல்ல ஸ்டான்டேர்ட் மோட்டார் கம்பெனிகளுக்கு பிக் அயர்ன், நிலக்கரி போன்றவை கிடைப்பதில் தட்டுப்பாடு இருப்பதால் அதிக விலை கொடுத்து அவர்கள் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே இந்தப் பொருள்கள் குறைந்த விலையில், நியாயமான விலையில் கிடைக்கச் செய்து, ஓரளவிற்கு விலையைக் குறைக்க உதவி புரிந்தால் அவை குறைந்த விலையில் கிடைக்க வழி ஏற்படும். ஆகவே இந்த மூலப்பொருள்கள் எளிதாக, நியாய விலையில் கிடைக்க அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. அதாவது குறைந்த விலையைப் பார்த்து விட்டு விவசாயிகள் தரம் குறைந்த பம்ப் செட்களை வாங்கி விட்டு அதற்குப் பிறகு அதிக அளவிற்கு மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டிவருகிறது. தரம் வாய்ந்த பம்ப் செட்களை உற்பத்தி செய்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை தொழில் துறை மூலம் அரசாங்கம் எடுக்கலாம்.

திரு. கு. ரமணி : ஏற்கனவே அமைச்சர் அவர்கள் பதிலளித்த அந்த பல்ப் சமாசாரத்தில் நடக்கிறமாதிரி ப்ராட்தான் இதிலும் நடந்துகொண்டிருக்கிறது. மின்சார மோட்டார்கள்

தரமானதாக இல்லை. ஆகவே விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கவும் மின்சாரம் செலவழிவதைக் குறைப்பதற்கும் அது பற்றி ஆராய்வதற்கு ஒரு கமிட்டி போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—அரசே நடத்தி கொண்டுவரக்கூடிய என்ஜினியரிங் தொழில் இருப்பதால் அதன் மூலமே தரமான மோட்டார்கள் உற்பத்தி செய்வதற்கு மின்சார வாரியம் முன்னுக்கு வருமா? அதற்கு அரசு உதவி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தரத்தை வற்புறுத்துவதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றி முதலில் நாம் முடிவிற்கு வருவோம். அப்படி வற்புறுத்தியும் சரியாக இல்லை என்ற நிலைமை ஏற்பட்டால் நாமே ஆரம்பிக்கலாமா என்பதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. செ. செம்மலை : சில பேர்கள் அனுமதி அளிக்கப்பட்டுள்ள குறைந்த குதிரைத்திறன் உள்ள மோட்டார்களை வைக்காமல் அதிக குதிரைத்திறன் உள்ள மோட்டார்களை தவறான முறையில் வைப்பதால் அதிகப்படியான மின்சாரம் செலவாவதோடுகூட டிரான்ஸ்பார்மரில் அதிகமான அழுத்தம் ஏற்பட்டு பழுதடைந்து விடுகின்றன. ஆகவே அதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எவ்வப்போது புகார்கள் வருகின்றனவோ அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 9.20)

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கின்றபோது ஐ.எஸ்.ஐ. முத்திரைபோட்ட மோட்டார்களுக்கு கொடுப்பதாக அறிகிறேன். அப்படி ஐ.எஸ்.ஐ. முத்திரை போட்ட மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கின்றபோது, கர்நாடக மாநிலத்திலே குதிரை வேகத்திற்கு இவ்வளவு என்ற விகிதமிட்டு கட்டணம் வசூலிப்பதாக அறிகிறேன். தமிழகத்திலும் அந்த கட்டண வகையில் விகிதத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக தகவல் கொடுத்திருக்கிறார், ஐ.எஸ்.ஐ. முத்திரை போட்ட மோட்டார்களை மட்டும்தான் வாங்குகிறார்கள் என்று; அதுபற்றி நிச்சயமாக அரசு ஆராயும்.. கர்நாடக மாநிலத்திலே விவசாயிகளுக்கு எப்படி மின்கட்டணம் போடப்படுகின்றது என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது நாம் பின்பற்றக் கூடியதல்ல.



உற்பத்தி செய்யப்பட்டு, பிலிப்ஸ் போன்று வேறு பல புகழ் பெற்ற கம்பெனிகளின் பெயர்களை முத்திரையாக மேலே குத்தி விடுகிறார்கள் என்று சொல்கிறார்களே, இதை தவிர்க்க நீண்ட காலம் உழைக்கக் கூடிய தரமானவை என்ற அளவில் உத்தரவாதம் பெற்று தொடர்ந்து அந்தத் தரத்தைக் காப்பாற்றக்கூடிய நிலைமையில் உள்ள கம்பெனிகளிடமே நேரிடையாக உத்தரவாதம் பெற்று வாங்குவதற்கான முறையில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வகையில் இந்தப் பல்புகளை வாங்குவதற்கு டெண்டர்களை போட்டாலும் அடிஷனல் என்ஜினீயர் லெவலிலே 2,500 ரூபாய்தான் வாங்குவதற்கான அனுமதி இருக்கிறது. அதனால் மேற்கொண்டு வாங்க இயலாது என்று சொல்கிறார்களே, அதைத் தவிர்ப்பதற்கு அந்த அனுமதியை 5,000 ஆக உயர்த்தி கொடுக்க அரசு பரிசீலிக்குமா? அப்போதுதான் எரியாத பல்புகளை மாற்ற இயலும் என்ற வகையில், அரசு இதனை ஆராயுமா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

## விவசாயத்திற்காக பொருத்தப்பட்டுள்ள மின்சார மோட்டார்கள்.

*வினா எண் 63—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயிகள் பொருத்தியுள்ள மின்சார மோட்டார்கள் பெரும்பாலானவைகள் தரம் குறைந்தவைகளாக உள்ளதால் கூடுதல் மின்சாரம் செலவாகின்றது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்திக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்டு (ஆ) பம்பு செட்டுகளில் உள்ள குறைபாடுகளை கணிக்கவும், அவற்றை நிவர்த்தி செய்யவும், நிவர்த்தி செய்வதால் ஏற்படும் மின் சேமிப்பை அளவிடவும் தமிழ்நாடு மின்வாரியம் தற்போது ஒரு ஆய்வை மேற்கொண்டுள்ளது, இந்த ஆய்வின் முடிவு தெரிந்த பின்தான் உண்மை நிலை புரியும்.

[1982 பிப்ரவரி 6

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்காக உற்பத்தி செய்யப்படுகிற மின்சார பம்பு செட்டுகளைக் குறித்து கோயம்புத்தூரில் இருக்கும் பல்கலைக் கழகம் ஆய்வு நடத்தி, ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மோட்டார்கள் தரம் குறைந்துள்ளனவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். விவசாயிகள் உபயோகிக்கிற மின்சார பம்பு செட் மோட்டார்களுக்கும், குறைந்த பட்சம் 40 சதவீதம் மின்சாரம் தேவைப்படும் என்று அந்த ஆய்வில், பல்கலைக் கழகமே கூறுகிறது. சென்னை ஐ.எஸ்.எஸ். மார்க்குகள் அந்த மோட்டார்களில் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தரமான மோட்டார்களுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்ற வகையில் மின்சார வாரியத்திற்கு அரசு உத்தரவு இடுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சார மோட்டார்களை வாங்குவதிலிருந்து, அவைகளிலே தரமான பொருள்கள் (பாகங்கள்) போன்றவற்றை பொறுத்துவதினாலும் பல வகையில் மின்சாரத்தை நாம் மிச்சம் பிடிக்கலாம். அண்மையிலே குஜராத்தில் அது பற்றி ஒரு விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள். அதில் அவர்கள் கண்டது, சாதாரணமாக 100 சதவீதம் மின்சாரம் பயன்படுத்த வேண்டிய விவசாயி 150.லிருந்து 200 சதவீதம் இப்பொழுது மின்சாரத்தை பயன்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. அத்தோடு மட்டுமல்ல, சில முறைகள் மூலம் 20-லிருந்து 50 சதவீதம் வரையில் மின்சாரத்தை மிச்சப்படுத்தலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே விவசாயிகளுக்கும் இதன் மூலம் மின் கட்டணம் குறையும். மின்சார வாரியத்திற்கும் இதன் மூலம் மின்சாரம் மிச்சப்படும். நம் மாநிலத்தில் இதை எந்தெந்த வழிகளில் செய்யலாம் என்பதைப் பற்றி ஆராய ஏற்கெனவே ஒரு குழு போடப்பட்டு, அவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மின்சார மோட்டார்கள் தரம் குறைந்ததாக இருப்பது மட்டுமல்லாமல், மின்சாரம் முறையாகக் கொடுக்காததால் சிங்கிள் பேஸில் வரும்போது மோட்டார் கெட்டு விடுகிறது. ஆக, கிராமங்கள் நிரந்தரமாக அமாவாசையாக இருக்கிறது. இத்தகைய குறைகளைப் போக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா? அல்லது மின்சாரத் துறை அமைச்சர் பொறுப்பை.......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அமாவாசையில் யாரும் போய் பம்ப் செட்ஸ் போடுவதில்லை. ஆகவே அமாவாசைக்காக மின் இலாகாவை அம்பிகாபதி அவர்களிடம் கொடுக்க வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை. பொதுவாக மின்சாரம் விநியோகிப்பதில் எந்தளவிற்கு தரத்தை அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு மின்வாரியம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. என்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள்.



1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : குடியாத்தம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே அந்தத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த மாவட்டத்தில் வேறுபகுதியில் தேவை என்ற அவசியம் ஏற்பட்டால் அந்தத் தகவலை அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு : அமைச்சர் அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது—விளக்கத்திற்காகக் கேட்கிறேன். இப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகள் கட்டி ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன அல்லது தரப்பட்டிருக்கின்றன என்ற தகவலைத் தந்தார்கள். அந்தத் தொழிற்சாலைகள் தற்போது இயங்குகின்றனவா ? அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் திறந்து வைக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆத்தூர் பகுதிக்கும் சேலம் பகுதிக்கும் அண்மையில் சென்று வந்தார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் இராசு அவர்களும் தவறாக என்னைப் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவரும் நானும் கால் நூற்றாண்டுகளாகப் பழகி வருகிறோம். தலைவாசல் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி இராசாம்பாள் தலைமையில் 200 தொழிற்கூடங்கள் கடந்த நவம்பர் மாதம் ஆத்தூர் நகரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் தலைவரும் இங்கே இருக்கிறார், அவரையும் கேட்டுக் கொள்ளலாம். ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவரும் அதிலே கலந்து கொண்டார்கள். அவரிடத்திலும் விவரம் கேட்டுக் கொள்ளலாம். ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் முதலீட்டில் நாலாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டு பாராட்டினார்கள் அவர்கள் சாட்சிகளாக மன்றத்தில் இருக்கிறார்கள்.

## கப்பலூர் தொழிற் பேட்டை

* வினா எண். 65—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரைக்கு அருகில் உள்ள கப்பலூர் தொழிற்பேட்டையில் போதுமான இடம் இருந்தும் இன்னும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படாததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கப்பலூர் தொழிற்பேட்டைக்குக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 9 ஏக்கர் நிலம் திருமங்கலம் வட்டத்திலும் மீதமுள்ள நிலம்

மதுரை வட்டத்திலும் உள்ளது. திருமங்கலம் வட்டம் தொழிலில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டதால் அப்பகுதியில் தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்கள் மைய அரசால் வழங்கப்படும் 15 சதவீத மானியத் தொகை பெறுவதற்கு தகுதி உடையவர்களாக உள்ளனர். தொழிற்பேட்டையில் உள்ள மற்ற நிலங்களில் தொழில் தொடங்க முன் வரும் தொழில் முனைவோர்களும் இந்த மானியத் தொகையைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாகச் செய்யும் பொருட்டு மதுரை வட்டதிலுள்ள பிற நிலங்களையும் திருமங்கலம் வட்டத்தில் சேர்த்து அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் மைய அரசு இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஆதலால் தொழில் முனைவோர்கள் இத் தொழிற்பேட்டைக்கு வரத் தயக்கம் காட்டினர். ஆயினும் 17—12—1979 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 1789-ல் தமிழகத்தில் 24 வட்டங்களை மாநில அரசின் மானியத் தொகை பெறத் தகுதியான இடங்களாக அறிவித்ததன் காரணமாக இத் தொழிற்பேட்டையில் தொழில் துவங்க தொழில் முனைவோர்கள் முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : கப்பலூர் தொழிற்பேட்டை அமைக்க மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதே போல் தமிழகத்தில் மத்திய அரசு அனுமதி கிடைக்காததன் காரணமாக எவ்வளவு தொழில்கள் பாதிக்கப்பட்டு தேக்க நிலையில் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி கேட்பாளர்களானால் விவரம் அளிக்க முடியும்.

**மணிமுத்தாறு, பாபநாசம் ஆகிய இடங்களைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம்.**

*வினா எண். 66—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, பாபநாசம் போன்ற இடங்களைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) : தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசத்தை மாவட்ட உலாத்தலமாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மணிமுத்தாறைப் பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் தற்சமயம் இல்லை.





திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சார விநியோகத்தில் அடிக்கடி கோளாறு ஏற்பட்டு, திடீர் திடீரென்று மோட்டார்கள் பழுதடைகின்றன. ஆகவே, இம்மாதிரி ஆவதன் காரணமாக விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டமேற்படுகிறது. அதைத் தவிர்க்கும் முறையில் அரசாங்கமே விவசாயிகளின் நஷ்டத்தைத் தவிர்க்க, அந்த மோட்டார்களை பழுது பார்த்துத்தர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்காது.

**சேலம் மாவட்டத்தில் சிட்கோ மூலம் தீப்பெட்டி தொழிற்சாலைகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.**

* வினா எண். 64—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 'சிட்கோ' மூலமாக தீப்பெட்டி தொழிற்சாலைகள் கட்டிக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த பகுதிகளில் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) அண்ட் (ஆ) சேலம் மாவட்டத்தில் சிட்கோ மூலமாக கீழ்க்கண்ட 14 இடங்களில் ஆத்தூர், தலைவாசல் ஆகிய இரண்டு பகுதிகளில் 200 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டு, மற்றும் கீழ்க்கண்ட 13 இடங்களில் தொழிற்கூடங்கள் கடந்த நவம்பர் மாதம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. —

1. தெற்குக் காடு—1
2. தெற்குக் காடு—2
3. செல்லியம் பாளையம்
4. புது உதயம்பட்டி
5. கீரைப்பட்டி
6. வாழப்பாடி
7. மஞ்சினி
8. அரசலூர்
9. நாட்டுக்கோட்டை
10. பட்டுத்துறை
11. வடகுமரி
12. வடசென்னிமலை
13. கோனேரிப்பட்டி.

ஆகிய 13 இடங்களில் 200 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, கொடுக்கப்பட்டிருக்கின்றன.

[1982 பிப்ரவரி 6

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? இதனால் எத்தனை பேர் பலன் அடைய இருக்கிறார்கள்? என்ற விவரத்தையும், எத்தனை கால அளவிற்குள் இந்தத் திட்டம் முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த 200 தொழிற்கூடங்கள் வாயிலாக சேலத்தின், பின்தங்கிய அந்தப் பகுதியிலுள்ள நலிந்த மக்களுக்கு குறிப்பாக தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் 4,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் அதற்காக முதலீடு செய்து, கடந்த 80-வது ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் துவங்கிய 81-வது ஆண்டு நவம்பரோடு, 20 மாதங்களுக்குள்ளாக இந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான ஸ்பிளிண்டர், மற்றும் வேனீர் போன்ற ரசாயனப் பொருள்கள் தற்போது எங்கிருந்து வாங்கப்படுகின்றது ? தமிழகத்திலே தயாரிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொட்டாசியம் குளோரைட் ரசாயனம் தற்போது மதுரை மாவட்டத்தில் மேலூரில் பாண்டியன் கெமிக்கல் நிறுவனத்திடமிருந்தும், அதே போல் சேலம்,மேட்டூரில் இருக்கக்கூடிய மேட்டூர் கெமிக்கல்ஸ் நிறுவனம் ஆகிய இந்த இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் பெறப்படுகின்றது. இந்த ஆண்டு கூட்டுறவுத் துறையிலே கிழக்கு முகவை மாவட்டத்தில், குன்றக்குடி பகுதியில் 1½ கோடி ரூபாய் முதலீட்டில், இந்தத் திங்கள் இறுதி வாரத்தில் அது தொடங்கப்பட இருக்கிறது; அதற்கு அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அப்படி குன்றக்குடியில் துவங்கும் தொழிற்சாலையில் பொட்டாசியம் குளோரைட், தொழிற்சாலைகளுக்குத் தேவையானது ஓரளவுக்குக் கிடைக்கும் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், தலைவாசல் மற்றும் பல பகுதிகளில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் கட்டிக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதாகச் சொன்னார்கள். அதே போன்று வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் பகுதியில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?



1982 பிப்ரவரி 6]

[முற்பகல் 9.30]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்தை சுற்றுலா மையமாக ஏற்பாடு செய்வதற்கு திட்டமிடப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி. அந்த இடத்திலே படித்துறைகள் பூராவும் குலைந்துபோய் ஜனங்கள் இறங்கமுடியாமல் மோசமான நிலையில் இருப்பதால் அதை அரசாங்கம் கவனிப்பதோடு அந்தப் பகுதியிலே மீன் பிடிக்கக் கூடாது என்று தேவஸ்தானம் உத்திரவிட்டிருந்தும் கூட ஒரு மீன் கூட காண முடியாத நிலைமை இருப்பதால் அதைக் கண்காணிப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் எதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. மாவட்ட சுற்றுலாத்தலமாக பாபநாசம் பகுதி ஆக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். ஆனால் உறுப்பினர் அவர்கள் ஏதோ குறிப்பிட்ட குளத்தைப் பற்றியோ, ஓடையைப் பற்றியோ சொல்கிறார்கள். அதைப் பற்றி விவரமாகச் சொன்னால் பதில் தரலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பாபநாசம் பகுதியிலே உள்ள தாமிரபரணி ஆற்றிலே மீன்கள் பிடிக்கக் கூடாது என்று உத்திரவிடப்பட்டிருந்தாலும் கூட அங்கே இப்போது ஒரு மீன் கூட இல்லாத அளவுக்கு மீன்கள் எல்லாம் காலி செய்யப்பட்டு விட்டது. அதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைத் தடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ? பாபநாசம் பக்கத்திலே ஆற்றிற்கு இறங்குகிற படிகள் பாதுகாப்பில்லாத நிலையில் குலைந்துபோய் இருக்கின்றன. அதனால் ஜனங்கள் இறங்கும் போது தவறி விழுந்து சேதம் ஏற்படுகிறது. அதையும் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தாமிரபரணி ஆற்றிலே மீன்கள் காப்பாற்றப்படுவதும், படிகள் கட்டப்படுவதும் சுற்றுலாத்துறையினுடைய பொறுப்பிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, பாபநாசம் ஆறு மலையிலிருந்து இறங்குமிடத்தில் பாபநாசம் இருக்கிறது. அந்த இடத்தில் ஆறு இரண்டாகப் பிரிந்து சென்று சில பர்லாங்கு தூரம் ஓடி பிறகு ஒன்று சேர்கிறது. நடுவிலே இருக்கின்ற தீவு அழகான தீவு. அதிலே இதுவரை எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இல்லை. ஆனால் அண்மையிலே அங்கே நிறையப் பேர் ஆக்கிரமித்து உழுது பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீவை பூங்காவாக்கினால் அது அதிகமான அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடமாக இருக்கும். இந்த யோசனையை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 6

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, பாபநாசம் பகுதி என்பது பல சிறப்பு மிக்க ஆலயங்கள், அருவி மற்றும் பல குளங்கள் எல்லாம் கொண்டிருக்கின்ற பகுதியாக அமைந்திருக்கின்றது. பொதிகை மலையிலே அமைந்திருக்கின்ற காரணத்தினால் இது ஒரு மலைவாஸ்தலம் என்ற அந்தத் தகுதியையும் பெற்றிருக்கிறது. இப்போது மாவட்ட உலாத் தலமாக்கவும் அபிவிருத்தி செய்யவும் தேர்ந்து எடுக்கப்பட்டிருப்பது பழைய யானைப்பாடி என்ற இடமாகும். அங்கே அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற முறையில் திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பகுதியைப் பற்றியும் பரிசீலிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டுக்கொள்ளும்.

திருத்தணி, பூண்டி ஆகிய இடங்களைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

*வினா எண் 67—திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி, பூண்டி இரண்டையும் சுற்றுலா மையமாக ஆக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) பூண்டி நீர்த்தேக்கத்தை மாவட்ட உலாத்தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திருத்தணியில் சாலையோர தங்கும் விடுதி (Motel) ஒன்றை அமைக்கும் கருத்துரு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. சண்முகம்: பூண்டி நீர்த்தேக்கத்தை சுற்றுலா மையமாக்க ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திருத்தணியில் கன்னிகோயில் என்று இருக்கிறது. அதில் ஆறு சுனைகள் இருக்கின்றன. அந்த ஆறு நீரூற்றுகளில் ஊறுகின்ற நீர் சுவையாக இருப்பதால் அதை சுற்றுலா மையமாக்குவதால் அந்தப் பகுதியிலே உள்ள மக்களும் செங்கை மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள அந்த இடம் ஆறுபடைவீடு என்ற முறையிலே திருமுருகன் வீற்றிருக்கின்ற இடமாகவும் இருக்கின்ற காரணத்தினால் அதையும் சுற்றுலா மையமாக்க அடுத்த ஆண்டாவது அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்பை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மாவட்ட உலாத்தலமாக்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே முதலிலே பூண்டி நீர்த் தேக்கத்தை எடுப்பதாக இருக்கின்றது. அதற்குப் பிறகு பழவேற்காடு என்ற ஒரு புகழ்பெற்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஊரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை இரண்டும் முடிந்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற அந்த நீர்வீழ்ச்சி பகுதியைப்பற்றிப் பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருத்தணியும், பூண்டியும் சுற்றுலா மையமாக அறிவிக்கப்படும் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே போன்று, என்னுடைய தொகுதியான பழனி ஒரு நல்ல தலம்; சுற்றுலாத் தலமாக வளர்ந்து வரக்கூடியதாக இருப்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். அந்தக் கோயிலின் வருமானம் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாயாக வருகிறது. பக்கத்தில் இரண்டு அணைக்கட்டுகளும் இருக்கின்றன. கொடைக்கானல் என்ற மலைவாசஸ்தலம் பக்கத்தில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பழனியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முயற்சியெடுக்குமா என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்புகின்ற கேள்வி மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும், பழனி என்கிற அந்தப் பகுதி இப்பொழுது இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற நகரமாக விளங்கி வருகிறது. எந்த நகரத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்கின்ற திட்டம் எதுவுமில்லை. அப்படி அறிவித்து சுற்றுலாத் தலமாக மாற்ற முடியாது. பயணிகள் சென்று பயனடையும் வகையில் சில வசதிகளைச் செய்து தருவதற்காகத்தான் சுற்றுலாத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகிறது. ஆகவே, இப்பொழுதே இலட்சக்கணக்கான மக்கள் பக்தர்களாகப் பழனியிலே வந்து கூடுவதால் அதைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று அவசியமில்லை.

அமரர் ஜீவாவுக்கு நாகர்கோவிலில் சிலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 68—திரு. ரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் அமரர் ஜீவாவுக்குச் சிலை வைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம்.

[1982 பிப்ரவரி 4

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் இல்லாமலேயே, அலுவலகம் மூலம் செய்கிறோம் என்று சொன்னார்கள், அப்படி செய்கின்றபோது தகுதி உள்ள, குவாலிஃபிகேஷன் உள்ள உதவி அலுவலர்கள் அந்தத் துறையில் இருந்தும் அவர்கள் துறையினர்க்கு எழுதியும், அவர்களுக்குக் கொடுக்காமல் விடப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அப்படி விடப்பட்டவர்களுக்கு மீண்டும் கிடைக்க துறையினருக்கு எச்சரிக்கை செய்து, தகுதி இருந்தும், சீனியாரிட்டி இருந்தும் கொடுக்கப்படாதவர்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் உறுதி தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படி தகவல் இல்லை. இருந்தாலும் அது பற்றி விசாரித்து உரிய நியாயமான தகுதி இருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பார்களானால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. மூர்த்தி : தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீட்டுக்கு ஆட்கள் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் பதில் உரைக்கும்போது சொன்னார்கள். அப்படி இல்லை என்ற நேரத்திலே தாழ்த்தப்பட்ட வகுப்பிலே இருந்து—ஷெட்யூல் காஸ்ட்லே இருந்து—தகுதியானவர்களை அந்தப் பதவிக்கு அமர்த்த அரசு முன் வருமா, அதற்குண்டான ரெகுலேஷன்களை அரசு வரைமுறைப்படுத்துமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது குறித்து விதிகளை வைத்து நாம் ஆராய்ந்து பார்த்துதான் முடிவு செய்ய முடியும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வாணைக் குழுவின் மூலமாக எடுக்கப்படுகின்ற அபேட்சகர்கள் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு என்று இருவருக்கும் உள்ளே தனித் தனி விகிதாச்சாரம் நிர்ணயிக்கப்படவில்லை. அதன் காரணமாக மலைசாதி மக்கள் என்று தவறான சான்றுகளைப் பெற்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய இடங்களைக் கூட சிலர் பேர்கள் பெற்றுள்ள விவரம் அரசுக்கு வந்திருக்கின்றதா? அப்படியானால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படி எந்தத் தகவலும் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பி.எஸ்.ஸி. (அக்ரி) மற்றும் பி.இ. இவைகள் டெக்னிக்கல் குவாலிபிகேஷன்களாக இருப்பதால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பொருத்த வரையில் அதை முடிவு செய்வதற்கு அங்கே ஒன்றுமே இல்லை. ஏனெனில் அவர்கள் ஃபுல்லி குவாலிபைடு' ஆனவர்கள். எனவே ஒரு சீனியாரிட்டி பேசிசில் அவர்களை அப்பாயின்ட் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படித்தான் இப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது.

## தமிழகத்தில் கோதுமை பயிரிடுதல்

*வினா எண். 32—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழகத்தில் கோதுமை பயிரிடுவதில் அரசு என்னென்ன முயற்சிகள் கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தமிழகத்தில் சுமார் 1,500 ஹெக்டேர்களில் கோதுமை பயிரிடப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதியில் கோதுமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளாக பயிரிடப்படுகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 1,500 ஹெக்டார் நீலகிரி மாவட்டத்தில் இது பயிரிடப்படுவதாகச் சொன்னார்கள். நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் பயிரிடப்படுவதற்குக் காரணம், அங்கே இருக்கின்ற தண்ணுமை நிலை, குளிர்காற்று இருக்கிறது. அதேபோன்று குமரி மாவட்டத்தில் மேற்குப் பகுதியிலும், கோவை மாவட்டத்தில் சில பகுதிகளிலும், ஹோசூர் போன்ற பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. இப்போது கோதுமையை விட இன்றியமையாத சில விளை பொருள்களை நாம் விளைவிக்கின்ற நிலைமையிலேஇருக்கிறோம், ஆகவே நீலகிரி மாவட்டத்தில் இருப்பதே போதும் என்று கருதுகிறேன்.

[1982 பிப்ரவரி 6

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமரர் ஜீவாவின் சிலைக்கு அடியில் அவரது சமதர்மக் கருத்தான " காலுக்குச் செருப்பும் இல்லை, கால் வயிற்றுக் கூழும் இல்லை, பாழுக்கு உழைத்தே மடா" என்ற பாடல் வரிகள் பொறிக்கப்படுமா? அமரர் ஜீவாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது குடும்பத்தாருக்கு அரசு ஏதேனும் உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மூலக்கேள்வி சிலை வைப்பதைப்பற்றியது. குடும்பத்திற்கு உதவுவதுபற்றித் தனிக்கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரவர்கள் அதற்குப் பதில் அளிக்க இயலும். சிலையின் கீழே என்ன வாசகம் பொறிக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி அந்தச் சிலை நிறுவப்படும் பொழுது முடிவெடுத்து பொறிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமதர்மப் பூங்காவில் தமிழகக் கவிஞராக உலாவிய அமரர் ஜீவா சிலை திறப்பு, குமரி மாவட்டத்தைத் தமிழகத்துடன் இணைக்கப் போராடிய தியாகி நேசமணி பெயரில் போக்குவரத்துக் கழகம், குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைந்த வெள்ளி விழா ஆகிய மூன்றையும் சேர்த்து முப்பெரும் விழா நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே எடுத்திருக்கின்ற முடிவை மாண்புமிகு உறுப்பினரவர்கள் எப்படியோ தெரிந்து கொண்டு இங்கே வினாவாக எழுப்பியிருக்கிறார்கள். மறைந்த தலைவர் தோழர் ஜீவா அவர்களின் உருவச்சிலையைத் திறக்க மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் தேதி கேட்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி மறைந்த வீரர் நேசமணி அவர்களின் பெயரால் உருவாகியிருக்கின்ற போக்குவரத்துக் கழகத்தின் துவக்க விழாவையும், தமிழ் மாநிலம் அமைந்த வெள்ளி விழாவையும் ஒன்றாக இணைத்து மூன்று பெரும் விழாக்களாகக் கன்னியாகுமரி மாவட்டத்திலே நடத்த வேண்டுமென்பது அரசினுடைய திட்டம். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் பரவலாகவுள்ள வெற்றிலைக் கொடிக்கால் வாடல் நோய்.

*வினா எண் 69—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் 7 ஆண்டுகளாகக் கொடிக்கால் வாடல்நோய் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த விவசாயிகளுக்கு அரசு உதவித் தொகை அளிக்க உத்தேசித்துள்ளதா?



1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மதுரை மாவட்டத்தில் வெற்றிலை கொடிக்கால் வாடல் நோய் மற்ற பயிர்களில் உள்ளதுபோல் பரவலாக இருப்பதை அரசு அறியும்.

(ஆ) ஏனைய பயிர்களில் நோய்கள் காணப்படுவது போல் வெற்றிலை பயிரிலும் வாடல் நோய் காடப்படுவதால் தனித்து இப்பயிருக்கு உதவித் தொகை வழங்க உத்தேசம் இல்லை. இந்நோயைக் கட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வெற்றிலை கொடிக்கால் விவசாயிகளை மற்ற விவசாயிகளைப் போல் அரசு பாவிக்கவில்லை. அதன் காரணமாகச் சிறு விவசாயிகளுக்குத் தமிழக அரசு அளிக்கின்ற கடன் நிவாரணச் சலுகைகள் கொடிக்கால் விவசாயிகளுக்கு அளிக்கப்படவில்லை. அதிகாரிகள் அதை ஏற்க மறுக்கிறார்கள். ஆகவே சிறு விவசாயிகளுக்கு அரசாங்கம் அளித்துள்ள இந்த நிவாரணச் சலுகைகளை கொடிக்கால் விவசாயிகளுக்கும் அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அதுகுறித்து அரசு ஆராயும்.

[முற்பகல் 9-40]

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெற்றிலைக் கொடிக்கால் போடுவது மிகவும் சிரமமான வேலை. அது இப்பொழுது திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் மிகவும் குறைந்து கொண்டே வருகிறது. வெற்றிலையினுடைய விலைகூட மிக அதிகமான அளவிலே ஏறக்கூடிய காரணத்தால், கொடிக்கால் போடுபவர்களுக்கு அரசு ஏதாவது மானியத் தொகை வழங்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, ரூ. 5·22 இலட்சம் செலவில் 5 ஆண்டுகளில் வெற்றிலைப் பயிர் அபிவிருத்திக்கென ஒரு திட்டமும் வாடல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு திட்டமும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பூச்சிக் கொல்லி மருந்துகள் 50 சதவீத மானிய விலையில் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அது இப்பொழுது ஆய்வில் இருக்கிறது.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஒரு ஏக்கர் விவசாயம் செய்திலே 50 விவசாயிகள் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுகிறார்கள். அதுவும் மிகக் குறைந்த வருவாயோடு இருக்கக்கூடிய அதே நேரத்தில் மிக

அதிகமான நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவேதான் இந்த வாடல் நோயில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஏதாவது உதவித் தொகை கொடுப்பதற்கு மீண்டும் ஆலோசித்து முயற்சி செய்யுமா ? அவர்களைச் சிறு விவசாயிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உதவிகளுக்கு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு அளிக்கப்படக்கூடிய உதவித் தொகை பற்றி அரசு ஆராயும் என்பதனை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : ஒரு ஏக்கரிலே 20 பேர், 30 பேர் என்று குத்தகை எடுத்து விவசாயிகள் கொடிக்கால் விவசாயம் செய்கிறார்கள். ஆண்டுதோறும் நில உரிமையாளர்கள், விவசாயிகள் தங்களுடைய நிபந்தனைக்கு இணங்க மறுத்தால் அவர்களை மாற்றிவிட்டு, மற்றவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கிறார்கள். குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொடிக்கால் விவசாயிகளைக் கொண்டுவர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற சட்டச் சிக்கல்களை ஆராய்ந்து அப்படிக் கொண்டு வர வாய்ப்பிருந்தால், அரசு கொண்டு வரும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெற்றிலை கொடிக்கால் என்பது ஒரு பணப் பயிர்தான். ஆனாலுங்கூட அதிக மழை பெய்தாலும் நஷ்டம் ஏற்படுகிறது ; அதிக தண்ணீர் இல்லாமல் போனாலும் நஷ்டம் ஏற்பட்டுப் பாதியிலே இழந்து விடுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்குப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலமாகவே பலன் தரத்தக்க வகையில் ஏதாவது மாற்றுத் திட்டம் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது குறித்து அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. பா. மலை : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்தக் கொடிக்கால் பயிர் சோழவந்தானில் இருப்பதைப் போல், திருபுவனத்திலும் மிக அதிகமாக பயிரிடப்படுகிறது. அது வாடல் நோயால் மட்டுமல்லாது, புயல் வெள்ளங்களால் பாதிக்கப்பட்ட பொழுது, ஏற்கனவே 1977 ஆம் ஆண்டிலே அரசாங்கம் கருணையோடு அவைகளை பாவித்து அவர்களுக்கு சப்சிடி கொடுத்திருக்கிறார்கள். 1980-81 ஆம் ஆண்டிலே இயற்கையினாலே பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு இன்னும் அந்த நிவாரணம் கிடைக்கவில்லை.





அவர்கள் நிலமற்ற ஏழைகள். அவர்கள் 'மார்ஜினல் ஃபார்மர்ஸ், ஸ்மால் ஃபார்மர்ஸ்' என்கின்ற அளவுக்கு, அவர்களுடைய கடனை வஜா செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்திருந்தும் அது பற்றி ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது அரசு. ஆகவே, அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு வாடல் நோயால் மட்டுமல்லாது, இயற்கையினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கும் அரசாங்கம் சப்சிடி கொடுக்க அதாவது, நிதி உதவி தர முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, வெற்றிலை கொடிக்கால்களைப் பொறுத்தவரை, அதனுடைய உரிமையாளர்கள் குத்தகைக்கு விடுகிறார்கள். அதனாலேதான் நாம் அரசாங்கத்தினுடைய உதவி நேரடியாக அவர்களுக்குச் சென்று சேருவதற்கு எப்படிப்பட்ட வாய்ப்பு இருக்கிறது என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. அந்த வகையான ஆய்வை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை அரசு நிச்சயம் மேற்கொள்ளும்.

## தமிழகத்தில் கொக்கோ பயிரிடுதல்

*வினா எண் 70— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழகத்தில் கொக்கோ பயிரிடுவதற்கு ஏதேனும் ஊக்கம் தரப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் மலைப்பகுதி வளர்ச்சித் திட்டங்களின் கீழும், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் அயன மண்டல பழங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் கொக்கோ பயிருக்கு இடுபொருட்கள் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் கொக்கோ பயிரிடுவதற்கு சில மாவட்டங்களைக் குறிப்பிட்டு, அங்கு பயிரிடுவோரை ஊக்கப்படுத்துவதற்காக ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு தொகை தரப்படுகிறது ? மாவட்டவாரியாக ஊக்கத் தொகை தரப்படுகிறதா? அல்லது ஒட்டு மொத்தமாக ஊக்கத் தொகை தரப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்ததைப் போல், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், அயன மண்டல பழங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழும், அதனை உள்ளடக்கி இருக்கிற மாவட்டங்களில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது உற்பத்தி செய்யப்படும் கொக்கோவை இன்று மார்க்கட்டிங் செய்வதற்குச் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கன்னியாக்குமரி மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும் உள்ள விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இவைகளை வாங்கி வந்த காட்பரிஸ் கம்பெனியினர் இப்போது இதை வாங்கத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட நிலையில் ஏற்பட்டுள்ள இந்தச் சிக்கலை நீக்கி அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை அவர்களே மார்க்கட்டிங் செய்யக்கூடிய ஏற்பாட்டினை அரசு இலாகா செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை காரணமாக காட்பரிஸ் கம்பெனி 1979 ஆண்டுமுதல் இதைக் கொள் முதல் செய்வதை நிறுத்திவிட்டது. அதனாலே சில சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்தினால் அவர்களுக்கு ஏற்பட்ட சிரமத்தைப் போக்கி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கொக்கோ பயிரிடுபவர்கள் அனைவரையும் ஒன்றாக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சேர்த்து, அதன் மூலம் கொக்கோ விற்பனை செய்வது என்ற திட்டத்தை அரசு ஏற்படுத்தி உள்ளது.

**திரு. த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் கொக்கோ பரவலாகக் கிடைப்பதில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. இந்த கோக்கோ மருத்துவத் துறையில் மருந்து தயாரிப்பதற்குத் தேவையாக இருக்கின்ற காரணத்தினால் அவைகள் எளிதில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, ஏராளமாக உற்பத்தியாவதால் காட்பரிஸ் கம்பெனி கொள்முதல் செய்யவில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே அவைகள் எளிதில் கிடைக்கும் வாய்ப்பு ஏற்கனவே இருக்கின்றது.



**உரம் பூச்சி மருந்துகளின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை.**

* வினா எண். 71— **திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உரம், பூச்சி மருந்து போன்ற விவசாய இடு பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென்று மைய அரசை நம் மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் அவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(ஆ) பூச்சி மருந்துகளின் விலையைக் குறைக்க வேண்டுமென்று நம் அரசு மத்திய அரசு நடத்திவரும் கூட்டத் தொடரிலும் ஆலோசனைக் கூட்டங்களிலும் வலியுறுத்தி வருகின்றன. உரங்களைப் பொறுத்தவரை மைய அரசு 1980ஆம் ஆண்டில் ஜூன் மாதம் உர விலையை ஏற்றியபோது உர விற்பனையில் மானியங்கள் வழங்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளது. அதற்குத் தகுந்த பதில் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரம், பூச்சி மருந்துகள் போன்ற விவசாய இடுபொருட்களின் விலை சமீபத்தில் மிகப் பெரிய அளவுக்கு உயர்த்தப்பட்டது. இது சம்பந்தமாக, மத்திய அரசோடு நமது மாநில அரசு வெறும் கேட்டுக் கொண்டு மட்டும் உள்ளதா அல்லது எழுத்து பூர்வமாகக் கோரிக்கை வைக்கப் பட்டு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, கேட்டுக் கொண்டிருக்கிறது, எடுத்துக் கூறியிருக்கிறது. எழுத்து மூலமாகவும் தெரிவித்திருக்கிறது.

**திரு. ஏ. சி. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மிக அத்தியாவசியத் தேவையான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விலையை ஆண்டு தோறும் குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு அதை ஆண்டுதோறும் உயர்த்திக் கொண்டு வருகிறது. ஆனால நெல்லுக்கு விலையை உயர்த்தித் தர வேண்டும் என்றால் அதற்கு மறுத்துக் கொண்டு வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனக்கே உரிய பாணியில் மத்திய அரசை வற்புறுத்துவாரா ?

[1982 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த வேலைதான் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரம், பூச்சி மருந்து விலை ஏற்றம் சம்பந்தமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம், எழுதிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் தைரியம் வாய்ந்தவர். அவர் நெல்லுக்கு விலை கொடுக்காததைத் தட்டிக் கேட்பதற்கும், இந்தப் பூச்சி மருந்து விலையைக் குறைப்பதற்கும் இந்தச் சபையிலேயே ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்ற முயற்சி எடுப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, தெரிவிக்க வேண்டிய விதத்திலே எல்லாம் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசு கேட்கவில்லை என்றால் அதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. இல. பலராமன்: துணைத் தலைவர் அவர்களே, உரத்தின் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு என்று கருதினாலும், பூச்சி மருந்துகளின் விலையை மாநில அரசே கட்டுப்படுத்தலாம் என்ற நிலை இருக்கும்போது, அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு ஆர்வம் காட்டி, மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இரண்டையுமே மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது.

(முற்பகல் 9.50)

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்திலே உணவு உற்பத்தியை ஊக்குவிக்கவும், சிறு விவசாயிகளை ஊக்குவிக்கவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக இன்றைக்கு மத்திய அரசு சொல்லிக் கொண்டு இருக்கிறது. இந்தப் புதிய 20 அம்சத் திட்டத்தின் மூலமாவது சிறு விவசாயிகளுக்கு உரம், பூச்சிமருந்து போன்றவற்றை வாங்குவதற்கு ஏதாவது மானியம் கொடுக்கும் அம்சம் இருக்கிறதா? அப்படி இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஓரளவு நிலம் வைத்துள்ளவர்களுக்கு மண் சத்து, சாம்பல் சத்து, உரங்கள் வாங்குவதற்கு 33 1/3 மானியம் வழங்கப்படுகிறது. அதிலே பாதித் தொகையை மத்திய அரசு ஏற்கிறது. வேறு வகையான எந்தவிதமான உதவியும் இல்லை.



1982 பிப்ரவரி 6]

செங்கற்பட்டு நகரின் வழியே செல்லும் தேசிய நெடுஞ்சாலை.

*வினா எண் 72— திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகரின் வழியே செல்லும் (G. S. T. Road) தேசிய நெடுஞ்சாலை மிகக் குறுகலாக இருப்பதால் விபத்துக்களைத் தடுக்கும் வகையில் மாற்று வழிப் பாதை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் செங்கல்பட்டு நகரைச் சுற்றி புறச்சாலை அமைக்கும் பணியை தேசிய நெடுஞ்சாலை வேலைகள் ஆறாவது திட்டத்தின்கீழ் ஒப்பளிக்க மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் இப்பணிக்குத் தேசிய நெடுஞ்சாலை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் (1980—85) மத்திய அரசின் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலை மிகக் குறுகலாக இருப்பதால் தினந்தோறும் அங்கே போக்குவரத்து நெரிசல் காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன. இரவு நேரங்களில் அதிகமான லாரிப் போக்குவரத்து இருப்பதால் சில நேரங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்து விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை காரணமாக மீண்டும் வற்புறுத்தி, உடனடியாக மாற்றுப்பாதை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கும் இந்த நெடுஞ்சாலை மிகக் குறுகலான இடத்தில் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். மாற்றுப்பாதை கண்டிப்பாகப் போட வேண்டும் என்பதற்குத்தான் மத்திய அரசுக்கு அது பரிந்துரை செய்யப்பட்டது. ஆனாலும்கூட, இன்று மாநில அரசின் சார்பிலே வேறு ஒரு திட்டத்தை நாம் கொண்டு வர இருக்கிறோம். இங்கே சென்னையிலே இருந்து செங்கற்பட்டு வரையிலும் ஒரு 'எக்ஸ்பிரஸ் வே'—விரைவு வழிப்பாதை—அயல் நாடுகளில் இருப்பதைப் போல்—இங்கேயும் போடுவதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது. அந்தப் பாதை போடுவதன் மூலமாக இங்கே போக்குவரத்து நெரிசலைத் தடுக்க முடியும். அப்படிப்பட்ட திட்டத்தை நாம் இங்கே செயல்படுத்தினால் அது மற்ற மாநிலங்களுக்கும்கூட வழிகாட்டியாக அமையும். ஆகவே, அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[1982 பிப்ரவரி 6

திரு. ஆலூர்பு.கோ.ஜகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய தமிழக அரசே அதற்கான முயற்சிகளைச் செய்வதாக அறிவித்தார்கள். அதுபற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாற்றுப்பாதைக்கு எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிக்கு முன்னதாக நம்முடைய செங்கற்பட்டு நகரைச் சுற்றித் தனியாக பாதை போடும் உத்தேசம் தமிழக அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் இல்லை. ஆனாலும் அங்கே ஒரு ரயில்வே கேட் குறுக்கிடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அங்கே ஒரு பெரிய பாலத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அமைக்க வேண்டும். அப்படி அது அமைக்கப்படுகின்ற நேரத்தில் நாம் பாதிச் செலவை ஏற்க வேண்டும். மத்திய அரசு பாதிச் செலவை ஏற்க வேண்டும். அதற்காக ஒப்புதல் கேட்கப்பட்டு, இன்னும் கிடைக்கப் பெறாமல் இருக்கிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டிலே இருக்கும் அந்தக் குறுகிய பாதை சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்கும், தமிழகத்தின் பெரும்பகுதியான இடங்களுக்கும் செல்கிற ஒரே பாதையாக இருக்கிறது. அது மிகக் குறுகலாக இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் முன்பு குறிப்பிட்டது போல் அது பல நேரங்களில் பயணிகளுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறது. ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் அங்கே காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, மாற்றுப்பாதை அமைக்க உடனடியாக முடியவில்லை என்றாலும் அந்தப் பாதையை அகலமாக்கி அதன் மூலம்பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அகலமாக்க முடியாத நிலைமை அங்கே இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம், அது ஒரு 'ரெசிடென்சியல் ஏரியா.' அது போகின்ற இடங்களில் எல்லாம் கட்டிடங்கள் பக்கத்தில் இருக்கின்றன. சாலையை அகலமாக்க வேண்டுமானால் கட்டிடங்களை இடித்தால்தான் முடியும், இல்லையென்றால் முடியாது. ஆகவே, மாற்றுப்பாதை அமைக்கும் ஆய்வுகள் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.



1982 பிப்ரவரி 6]

ஆற்காடு நகராட்சியில் "குளு குளு" திரையரங்கம் மற்றும் "சமூகக் கூடம்" கட்டும் திட்டம்.

*வினா எண். 73—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகராட்சியில் "குளுகுளு" திரையரங்கம் ஒன்றும் "சமூகக்கூடம்" ஒன்றும் நிறுவ துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) அதற்கென குறிப்பிட்டுள்ள நிலத்தை அரசு ஆர்ஜிதம் செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) நகராட்சி தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : துணைத் தலைவரவர்களே., தமிழகத்திலுள்ள சுமார் 109 நகராட்சிகளுக்கும் 'குளுகுளு' திரையரங்கள் கட்ட உறுதியளித்திருக்கிறார்கள். அந்தவகையில் பின்தங்கிய நகராட்சிகளுக்கு நிரந்தரமான ஒரு வருமானம் கிடைக்க இருக்கிற காரணத்தால் அதை துரிதமாகச் செயல் படுத்த அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கிற 106 நகராட்சிகளிலும் சுமார் 100 திரையரங்குகளைக் கட்ட வேண்டுமென்று முடிவினை தமிழக அரசு கடந்த ஆண்டு எடுத்தது. அதற்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் போதுமான கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, மத்திய அரசுக்கு திட்டத்தை அனுப்பி வைத்தோம். ஆனால் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனாலும் நாம் மீண்டும், மீண்டும் மத்திய அரசைக் கேட்டு வருகிறோம். கண்டிப்பாக கொடுப்பார்கள் என்ற எண்ணத்தோடு இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவலரவர்களே, அப்படி மத்திய சர்க்கார் ஒப்புதல் அளிக்கும்போது ஒவ்வொரு நகராட்சிக்கும் அந்த குளுகுளு தியேட்டர் கட்டப்படுமா ? அதற்கான உத்தேச மதிப்பீடு எந்த அளவில் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1932 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஒரு ஏர் கண்டிஷன் தியேட்டர் கட்டுவதற்கு ஏறத்தாழ 25 இலட்சம் முதல் 30 இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, நகராட்சிகளின் வருவாயைப் பெருக்குவதற்கு குளுகுளு தியேட்டர் கட்டுவதுபற்றிச் சொன்னார்கள். அதைப் போன்று வருவாய்ப் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிற பேரூராட்சிகளிலும் வருவாயை பெருக்க இத்தகைய வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்ளே, மூலக்கேள்வி நகராட்சிகளைப் பற்றியது. பேரூராட்சிகளுக்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மத்திய அரசு குளுகுளு தியேட்டர் கட்டும் திட்டத்தை அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள். தமிழக அரசு நகராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் திரையரங்கு கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நகராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக பொருளாதார அடிப்படையில் எவை எவை பலவீனமாக இருக்கிறதோ (வீக்கர் முனிசிபாலிட்டீஸ்) அவைகளை நாம் எடுத்துக் கொள்ள இருக்கிறோம். ஆனாலும் எல்லா நகராட்சிகளையும் எடுத்துக் கொள்ளும் நிலைமை இல்லை. அதே நேரத்தில் தன்னிறைவுத் திட்டம் என்பது அடிப்படையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக உள்ள திட்டமே அல்லாமல் குளுகுளு திரையரங்குகள் கட்டுவதற்காக அல்ல.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டத்திலே காஞ்சிமாநகரையும் சேர்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.



1982 பிப்ரவரி 6]

ஊராட்சி எழுத்தர்கள் சங்க கோரிக்கைகள் மீது அரசு கொண்ட நடவடிக்கைகள்.

* வினா எண். 74—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஊராட்சி எழுத்தர்கள் சங்கம்-மாநில அமைப்பு, பாபநாசம், தஞ்சாவூர் மாவட்டம், அரசுக்கு 27–2–1981 தேதியிட்ட விண்ணப்பம் ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவரவர்களே, அந்த விவர அறிக்கையிலே எந்த கோரிக்கையும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்று அத்தனை கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி பகுதி நேர எழுத்தர் 37.50 ரூபாயை வைத்துக்கொண்டு இந்த விலைவாசி ஏற்றத்தில் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் ? 2, 3 ஊராட்சிகளில் அவர் வேலை பார்த்தாலும் 100 ரூபாய்க்குமேல் வருமானம் வராது. ஆகவே, அரசாங்கம் மறுபரிசீலனை செய்து அவர்கள் சம்பளத்தை உயர்த்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, ஊராட்சியில் பணிபுரியும் பகுதிநேர எழுத்தர்களின் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, சம்பளத்தை உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.

(முற்பகல் 10·00).

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி எழுத்தர்கள் சங்கம் முழு நேர வேலை தரும்படி 27–2–1981 அன்று அனுப்பி இருந்த கோரிக்கை மனுவின் மீது என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது ?

---

*544-545-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, விவர அறிக்கை அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூட குறைந்த பட்சக் கூலி 7 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த எழுத்தர்களுக்கு குறைந்தபட்சம் 37½ ரூபாய்தான் கூலியாகக் கிடைக்கின்றது. ஆகவே அவர்களுக்கு குறைந்தபட்சம் 200 ரூபாய் மாதாந்திரக் கூலியாகக் கிடைக்கின்ற வகையிலே உத்தரவாதம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதை மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கான ஆலோசனைக் குழுக்கள்.

* வினா எண். 75— திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி மன்றங்களில் ஆலோசனைக் குழுக்களை செயல்படுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கு ஏற்கனவே ஆலோசனைக்குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் எல்லாம் பெயர் அளவிலே தான் இருக்கின்றன. இந்தக் குழுக்களைக் கூட்ட வேண்டும் என்று நானும் பலமுறை அமைச்சரிடத்திலே முறையிட்டிருக்கிறேன். ஆனால் இது வரையில் இந்தக் குழுக்கள் கூட்டப்படுவதே கிடையாது. ஆகவே இவற்றைக் கூட்டுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : : தலைவரவர்களே, இந்த ஊராட்சி மன்ற ஆலோசனைக் குழுக்கள் ஒவ்வொரு மாதமும் கூடவேண்டும் என்றும் ஒவ்வொரு மாதமும் உறுப்பினர்கள் வழங்குகின்ற ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து எந்தெந்த ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது, எவை எவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கும் விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திலே இருந்து நாக்கீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எந்தெந்த ஊராட்சி மன்றங்கள் சரியாக நடைபெறவில்லையோ அவற்றின் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே குழுக்களை ஒழுங்காக நடத்தவேண்டும் என்பதுதான் அரசினுடைய ஆணை.





திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, அந்த மாதிரி குழுக்களைக் கூட்டாத ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றின் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்க முன் வரும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், போன்றவற்றிற்கு எல்லாம் தலைவர்கள் இல்லாத காரணத்தால் கிராமங்களில் மக்களெல்லாம் திக்கற்ற நிலையில் அநாதைகளாக இருக்கிறார்கள். இந்த நிலையில் மக்கள் குழுவும் சரியான முறையில் கூட்டப்படுவது கிடையாது. அந்தக் குழுவினை 2 மாதத்திற்கு ஒருமுறை அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறைதான் கூட்டுகிறார்கள். அதுபோன்று மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டமும் இரண்டு மாதம் மூன்று மாதத்திற்கு ஒரு முறைதான் கூட்டப்படுகின்றது ஆகவே ஆலோசனைக் குழுக்கள் எல்லாம் நல்லமுறையில் கூட்டப்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? கிராம ஜனநாயகம் வாழ-வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, திக்கற்ற நிலையில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் போன்றவைகளுக்கு எல்லாம் தேர்தலை நடத்தி உடனடியாக அவற்றிற்கு தலைவர்கள் வரவேண்டும் என்றுதான் தேர்தலை அறிவித்தோம். ஆனால் நிலைமை வேறுவிதமாக மாறிவிட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஆனாலும் இருக்கின்ற குழுக்களைக் கூட்ட வேண்டும் என்று அரசின் மூலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எந்தெந்த ஊராட்சி மன்றங்கள் அந்தக் குழுக்களை நடத்தவில்லையோ அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. அங்குசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆலோசனைக் குழுக்களிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குழுக் கூட்டங்களுக்கு வருவதே இல்லை என்று அந்தக் குழுவிலே இருந்து விலகி இருக்கிறார்கள். அப்படி அவர்கள விலகி இருக்கின்ற காரணத்தினால் அந்த இடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 6

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, கேள்வி நேரத்திலே சார்ஜ் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகளைத் தவிர்ப்பது நல்லது.

**திரு. ரா. கு. பெருமாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் ஆலோசனைக் குழுக்கள் ஒழுங்காகக் கூடுகின்றன. ஆனால் ஊராட்சிகளின் ஆலோசனைக் குழுக்கள்தான் கூடுவதில்லை. அவற்றையும் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. மா. சின்னராசு:** பேரவைத் தலைவரவர்களே, ஆலோசனைக் குழுக்களிலே பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இடம்பெற்றிருக்கின்றனர். எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதிலே கலந்துகொள்கிறார்களா ? அல்லது ஏதாவது அரசியல் கட்சிகள் அதிலே கலந்துகொள்ளக்கூடாது என்று முடிவு செய்திருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களையும் மக்கள் குழுவிலே போட வேண்டும் என்று அரசாங்கம் அனுமதி கொடுத்து அதன் மூலமாக 7 பேர் கொண்ட குழுவும், 12 பேர் கொண்ட குழுவும்அமைக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் குழுக்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று தலைமைக் கழகம் ஆணையிட்டதன் காரணமாக ஒரு சில இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் குழுவிற்கு வருவது இல்லை. ஒரு சில இடங்களில் வருகிறார்கள்.

**திரு. பாபு ஜனார்த்தனன்:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சபைக்கு தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். எங்களுடைய தலைமையிடம், கழக சட்டமன்ற உறுப்பினர்கள், இம்மாதிரி குழுக்களில் கலந்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையிலேதான் உத்தரவிட்டிருக்கிறார்கள். நாங்களும் கலந்துக் கொண்டு வருகிறோம். அமைச்சர் அவர்கள் அறியாமல் சொல்வதற்கு அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, நான் அறியாத குழந்தையல்ல. அறிந்துதான் சொல்கிறேன். ஏற்கெனவே இதுபற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்



1982 பிப்ரவரி 6]

திரிகையிலே — முரசொலியிலே வெளியிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்தக் குழுக்களில் எல்லாம் கலந்துக்கொள்வது இல்லை என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். வேண்டுமானால் ஆதாரத்தோடு நான் நிரூபிக்கத் தயார்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆங்காங்கே அமைக்கப்படுகிற குழுக்களுடைய தரத்தைப் பொறுத்து, அந்தக் குழுக்கள் முறையாக அமைக்கப்பட்டதாக தோன்றுமானால் எங்கள் உறுப்பினர்கள் கலந்துக் கொள்வார்கள். முறையாக இல்லாமல், யார் யாருக்கோ இடம் தருவதாக இருக்குமேயானால் கலந்துக் கொள்ள மாட்டார்கள்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தேர்தல்கள் நடத்த முயற்சித்தோம், தடைபட்டு விட்டது என்ற வகையில் சொன்னார்கள். அது பற்றி விவாதிக்க முடியாவிட்டாலும், அந்தக் குழுக்கள் முறையாக கூட்டப்படுவதில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா? 3, 4 மாதங்களுக்கு ஒருமுறை கூடுகிறார்கள். அதுவும் தவிர, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 60 லட்சத்திற்கு மேற்பட்ட தொகைகளை பணிகளுக்கு செலவழிக்கிறார்கள். அந்த வேலைகளை எல்லாம் இந்தக் குழுக்கள் பரிசிலித்து, அதன் மேல் நடவடிக்கை எடுக்க இந்த குழுக்களுக்கு அதிகாரம் வழங்க அரசு முன்வருமா?அத்தோடு, மாதம் ஒரு முறை ஊராட்சி மன்றங்களில், நகராட்சி மன்றங்களில் இந்தக் குழுக்களை தவறாமல் கூட்டுவதற்கு, அரசு குறிப்பிட்ட ஆணை பிறப்பிக்குமா என்று அறியவிரும்புகிறேன் -

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, அரசாங்கம் அவைகளை ஆலோசனை குழுக்களாக நடத்தத்தான் ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறது. ஆகவே, ஆலோசனைகளைத்தான் குழுக்கள் கூறமுடியுமே தவிர, அதிகாரங்களைச் செய்ய முடியாது. ஆலோசனைகளை மட்டுமே கூற அந்த குழுக்களுக்கு அதிகாரம் உண்டே தவிர, வேறு எந்த அதிகாரமும் கிடையாது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடைபெறும்வேலைகளை அவ்வப்போது கண்காணிக்கவும், தக்க நேரத்தில் அரசுக்கு அறிவுரை கூறவும் எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, ஆலோசனைக் குழுக்கள் மட்டும் தான் என்று சொன்னார்கள். ஆனால் அந்த ஆலோசனை குழுக்கள் ஆலோசனைகளைச் சொல்லியும், அதைக் கேட்காமல், உப கமிட்டி என்று ஒன்று தனியாக வைத்துக் கொண்டு, ஆலோசனைக் குழுக்கள் கூறிய ஆலோசனைகளை ஏற்காமல்,தனியாகக் குழுநடத்தி அதன் மூலம் ஏரா ள

மான பணத்தைச் செலவழித்திருக்கிறார்களே, அப்படிப்பட்ட யூனியன்கள் சம்பந்தமாக விவரங்கள் அரசுக்குத் தெரியுமா? அதற்குக் காரணமான அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, ஒரு சில புகார்கள் வந்திருக்கின்றன. ஆனால் நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதைப் போல, ஆலோசனைகள் கூறி, ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை இருந்தால் அவைகள் ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற விளக்கத்தை ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறோம். ஏனெனில் ஏற்றுக் கொள்ள முடியாத யோசனைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கலாம். ஆகவே, இவைகளை யெல்லாம் கவனத்தில் கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மக்கள் குழுக்களிலே, அரசியல் கட்சியைச் சேர்ந்த தரமான தலைவர்களும், பொறுப்புள்ளவர்களும் உறுப்பினர்களாகத்தான் இருக்கிறார்கள். அப்படி இருக்கும் இடங்களில் சில தரமான கட்சிகள் கூட நீண்ட நெடுங்காலமாக கலந்துக் கொள்ளாமல் ஒதுங்கியே இருக்கிறார்களே, அவர்களை நிரந்தரமாக நீக்குவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, ஒதுங்கியிருப்பவர்களை ஒதுக்குகிற சூழ்நிலையை உருவாக்குவோம்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் மாதம் ஒரு முறை இந்த குழுக்களின் கூட்டம் கூட்டப்படுகிறது என்று கூறியிருந்தாலும், கடந்த காலத்தில் அதுபோன்று கூட்டங்கள் கூட்டப்படவில்லை என்பதே அங்கத்தினர்களின் கருத்து. அது உண்மையும் கூட, ஆகவே, இனிமேலாவது மாதத்திற்கு ஒரு முறை இக்கூட்டங்களை கூட்ட அரசு உறுதியான ஆணையிடுமா, கூட்டம் கூடுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னாலேதான் அதற்கான அறிவிப்பு வருகிறதே அது அமைச்சருக்குத் தெரியுமா? அதைத் தீர்க்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இது குறித்து மீண்டும் ரிமைண்டர்ஸ் அனுப்ப நாம் தயாராக இருக்கின்றோம். இதில் சரியான நடவடிக்கைகள் இல்லை என்று சொன்னால், சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளையும் எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





[முற்பகல் 10-10.]

**திரு. டி. மணி :** நகராட்சி, ஊராட்சிகளில் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய குழுக்களின் யோசனைகளை காலாகாலத்தில் நிறைவேற்றுவதில்லை அல்லது அந்த யோசனைகள் எற்றுக்கொள்ளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு அல்லது குறைபாடு இருக்கின்றது. குறிப்பாக குழித்துறை நகராட்சியில் ஒரு ஆண்டுக்கு முன்னால் அனுப்பப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாய் கடன் பெறக்கூடிய கோரிக்கை இன்னும் எந்தவிதமான முடிவும் பெறாமல் இருக்கிறது. ஆகவே அந்த முடிவுகளை துரிதமாக ஏற்றுக் கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** குழித்துறையைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திருப்பாலைக் குடியிலுள்ள பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்கும் திட்டம்.**

*வினா எண். 76— **திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆர். எஸ். மங்களம் யூனியன் திருப்பாலைக்குடியில உள்ள பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக எடுத்து மாற்றியமைக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்தச் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**நடமாடும் மருத்துவக் குழு.**

*வினா எண். 77— **திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட நடமாடும் மருத்துவக்குழு ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைந்து செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் முகவை மாவட்டத்தில் இந்த திட்டம் புகுத்தப்படாததற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) முகவை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஏதுமில்லாததால் இத் திட்டத்தை புகுத்துவதற்கு இடமில்லை.

[1982 பிப்ரவரி 6

**திரு. வ. சத்தியமூர்த்தி :** முகவை மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி இல்லை என்று சொன்னார்கள். மதுரையில் உள்ள மருத்துவக் கல்லூரி மதுரை மா. வட்டத்திற்குச் சொந்தமா? அப்படி இல்லையெனில் மதுரையிலிருந்து செயல்பட்டு வருகிற நடமாடும் மருத்துவக் குழுவை அருகிலுள்ள முகவை மா. வட்டத்திற்கு பயன்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** முகவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆரம்ப சுகாதார நிலையங்களை நாம் விரிவுபடுத்த இருக்கிறோம். அதே நேரத்தில் இந்தத் திட்டம் மத்திய அரசால் நமக்கு தரப்பட்டிருக்கக்கூடிய திட்டமாகும். அப்படி மத்திய அரசு தருகிற நேரத்தில் 27 மாடல் க்ளினிக்ஸ் இருக்கவேண்டும் என்றும் ஒன்பது மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் மூன்று ஊர்திகள் நடமாடும் மருந்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் மூன்று வீதம் ஒவ்வொரு, ஊர்தியும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும்ஒதுக்கப்பட்டு 27 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்தத் திட்டம் மத்திய அரசு ஆணைப்படி அல்லது யோசனைப்படி செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆரம்பத்தில் அவர்கள்தான் பணம் கொடுத்தார்கள். ஊர்திகளும் அவர்கள்தான் கொடுத்தார்கள். நல்ல முறையில் எல்லா மருத்துவக் கல்லூரிக்கும் இது கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு ஊர்தி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை ஷிப்ட் முறையில் மாற்றி நான் ஏற்கெனவே சொன்னதுபோல் அருகாமையிலுள்ள மாவட்டங்களுக்கும் பயன்படுத்த அரசு முன்வருமா? இந்த ஊர்திகள், இவற்றில் 'வொயிட் எலிபென்ட்' வெள்ளை யானை ஊர்திகள் என்றிருப்பதாக, அதில் சிறப்புத்' தன்மை இருப்பதாக அதற்கு இப்படி பெயர் வைத்த பிரமுகர் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 1979-ம் ஆண்டில் இது நமக்கு தரப்பட்டிருக்கக்கூடியதொரு திட்டம். 1980-ல் தான் அந்த நடைமுறைப்படுத்தினோம். ரூ. 4·79 இலட்சம் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் ஒதுக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஊர்தியின் விலை ரூ. 8,50,000 ஆகும். வொயிட் எலிபென்ட் என்று ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால் அ... நிறைய பணம் செலவு செய்து பயன் உள்ளதாக இருக்கக்கூடிய திட்டமாக இல்லாமலிருந்தால் அதை வொயிட் எலிபென்ட் என்று சொல்வார்கள் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள சாலைகளில் பயன்படக்கூடிய ஊர்திகளாக இந்த ஊர்திகள் இல்லை, பெரிய ஊர்திகளாக இருக்கின்றன என்பதால் சிலவிடங்களில் வொயிட் எலிபென்ட் என்று அதற்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.



1982 பிப்ரவரி 6]

**திரு. எல். இளையபெருமாள் :** 27 ஊர்திகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பல ஊர்திகள் சரியான முறையில் இயங்கவில்லை. அவற்றிற்கு வேண்டிய போதுமான பெட்ரோல் கூட கொடுப்பதில்லை, பலவிடங்களில் அவைகள் நின்றிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? வருங்காலத்திலாவது இப்படிப்பட்ட அவல நிலை இல்லாமல் இருப்பதற்கு ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்த 27 ஊர்திகளில் 24 ஊர்திகள் தமிழக சர்க்கார் சார்பாக பணியாற்றுகின்றன. மூன்று ஊர்திகள் வேலூர் மெடிக்கல் காலேஜுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த ஊர்தியும் பெட்ரோல் இல்லாமல் நின்றுவிடவில்லை என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலுள்ள சங்கடம் எல்லாம் ஒரு மினி ஆப்பரேஷன் தியேட்டராக இருக்கவேண்டுமென்று முதலில் இதை ஆரம்பித்தார்கள். ஆனால் எந்த நோக்கத்தோடு இந்த ஊர்திகள் தரப்பட்டதோ—மினி ஆப்பரேஷன் தியேட்டர் என்ற முறையில் அந்த ஊர்திக்குள்ளேயே எல்லா வசதிகளும் உள்ளன. அதற்குப் பயன்படாமல் மருந்துகளையெல்லாம் ஒரு இடத்திற்குக் கொண்டுபோய்க் கொடுக்கக்கூடிய விதத்தில் பயன்படுகின்றன என்ற அந்தக் குறைபாடு இருக்கிறது. ஆனால் பெட்ரோல் இல்லாமல் எந்த ஊர்தியும் நின்றுவிடவில்லை.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, முகவை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி இல்லை என்று கூறினார்கள். அந்த மாவட்டத்தில் மக்கள் நலனைக் கருதியாவது, இந்த நடப்பு நிதி ஆண்டில் அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி, ஊர்தியைப் பற்றியது. மருத்துவக் கல்லூரியைப் பற்றி அல்ல.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஊர்தியைப் பற்றி பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் ஒரு ஊர்தி பழுதடைந்து, அதைப்பற்றி போன கூட்டத் தொடரில் கேட்டபோது, அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது அது பராமரிக்கப்படாமல் இருக்கிறது, இனிமேல் பராமரிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று இதே மன்றத்தில் சொன்னார்கள். மேலும், எனக்குக் கிடைத்துள்ள தகவலின்படி இப்போது அந்த ஊர்தியில் டயர்கள் எல்லாம் காலியாகி, யார் எடுத்தார்கள் என்று தெரியவில்லை—அதிலுள்ள பார்ட்டுகள் காலியாகி, ஒரு பெரிய முண்டமாக இப்போது அது இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையைத் தவிர்ப்பதற்கு, அதுகுறித்து நடவடிக்கை எடுக்க அரசு, அமைச்சர் முன் வருவார்களா ?

**திரு. குமரி அனந்தன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு மக்களுக்கு நமது பங்கீட்டுத் துறை மூலமாக அளிப்பதற்கு 10,800 டன்கள் கேட்கிறபோது, 4,000 டன்கள்தான் கொடுக்கப் படுகிறது. ஆலைகளுக்கு 65,000 டன்கள் வேண்டுமென்று கேட்டால் 30 ஆயிரம் டன்கள்தான் கொடுக்கிறது. ஆகவே, 41,800 டன்கள் நமக்குத் தேவையிருக்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை பல இடங்களுக்கு விஸ்தரிப்பது தேவை என்பதையும், இது விவசாயிகளுக்கு உற்சாகம் ஊட்டும் என்பதையும் உணர்ந்து, அதற்காக மானியம் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மத்திய அரசு கேட்டதைக் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் இங்கே விளைவிக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடக் கூடாது. உரிமையை மீண்டும் வற்புறுத்திக் கேட்க வேண்டுமே தவிர, மனம் உடைந்து விடக்கூடாது.

**திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 1,500 ஹெக்டேர் பரப்பளவில் கோதுமை பயிரிடப்படுகிறது என்று சொன்னார்கள். அந்த 1,500 ஹெக்டேர் பரப்பளவில் எந்த ரக கோதுமையைப் பயிரிடுகிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன். பஞ்சாபில் இருந்து இப்போது புதிதாக வந்து இருக்கக்கூடிய ஹைபிரிட் பயிரிடுகிறார்களா அல்லது பழைய சம்பா கோதுமையைப் பயிரிடுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, எச். டபிள்யூ. 517 என்கிற ரகம் பயிரிடப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதுமை பயிரிடுவதற்கு முடியாது என்றும், ஏனென்றால் இன்றியமையாத மற்ற பயிர்கள் அங்கே பயிரிடுவதற்கு திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். என்னென்ன மற்ற பயிர்கள் அங்கே போடுவதற்குத் திட்டமிடப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே. ஏற்கனவே செம்பனை, முந்திரி போன்றவை பற்றிச் சொல்லி இருக்கிறேன். இப்படித் தொடர்ந்து எல்லாப் பயிர்களையும் அந்தக் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிட வேண்டும் என்று விரும்பினால் பரப்பளவு போதாது,





**முதுகுளத்தூர் தொகுதியில் நிறைவேற்றப்பெற்றுவரும் நூறு குழாய் திட்டப்பணிகள்.**

*வினா எண். 33—**திரு. கே. தனுக்கோடித்தேவர் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) நூறு குழாய்த் திட்டம் முதுகுளத்தூர் தொகுதியில் துவங்க அரசு பரிசீலனை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே, வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் நூறு குழாய்த் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் முதுகுளத்தூர் தொகுதியும் அடங்கும். இத்தொகுதியைப் பொறுத்தவரை கமுதி வட்டத்தைச் சேர்ந்த புனவாசல் வல்லக்குளம்—2, அச்சங்குளம், காடனேரி, அலங்கார் பட்டணம், வல்லக்குளம்—3, வேப்பங்குறிச்சி, பெரியானைக்குளம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வறட்சிப்பகுதியாகிய முதுகுளத்தூர் தொகுதியும் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்று சொன்னார்கள். கிழக்கு இராமநாதபுரம் பகுதி ஆண்டு தோறும் இந்த தண்ணீர் இல்லை என்கிற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து கடலாடி வரையில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இது வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாகப் பாசனத்திற்காக அமைக்கப்படும் குழாய்த் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் கேட்க விரும்புகின்ற குழாய்த் திட்டம் பற்றி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடத்தில் பேசிக் கேட்க வேண்டும்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில், தற்போது கிட்டத்தட்ட 50 குழாய்கள் வரை அமைக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிவு அடையும் என்று சொல்ல முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் முடியும்.

[1982 பிப்ரவரி 6

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எந்த ஊர்தியைப் பற்றி பேசுகிறார் என்று தெரியவில்லை. இப்போது இங்கே எழுப்பப்பட்ட கேள்வி பெரிய ஊர்திகள், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 3 ஊர்திகள் இருக்கின்றன. ஸ்டான்லி மருத்துவமனையைப் பொறுத்த வரையில், புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒன்றிருக்கிறது. ரெட்ஹில்சில் ஒரு ஊர்தி இருக்கிறது; மீஞ்சூரில் ஒருஊர்தி இருக்கிறது. ஆகவே, அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஊர்திகள் இருக்கின்றனவே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, வேறு எதையோ கவனத்தில் கொண்டு இதைச் சொல்கிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி நான் சொல்லவில்லை. ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள ஊர்தியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே உள்ள ஊர்தியில் டயர்கள் எல்லாம் காலியாகி விட்டன.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உணர்ச்சிவசப்படுகிறார் என்று கருதுகிறேன். அவருக்கு நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் சொல்லக்கூடிய ஊர்திக்கும், இங்கே எழுப்பப்பட்ட கேள்விக்கும் சம்பந்தமில்லை. இது மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய ஊர்திகளைப் பற்றியது. எத்தனைக் கேள்விகளுக்கு வேண்டுமானாலும் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இது மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய ஊர்திகள் பற்றியது. அவைகள் பெரிய ஊர்திகள். அது ஓயிட் எலிபென்ட் என்று சொல்லக் கூடிய, பெரிய ஊர்தி. அதன் மதிப்பு 8.5 இலட்சம் ரூபாய். அதைப் பற்றித் தான் நான் பதில் சொன்னேன். ஆனால் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதன் காரணமாக—நான் நினைக்கின்றேன், வேறொரு சாதாரண ஊர்தியைப் பற்றிப் பேசுகிறார். அவர் எழுப்பிய அந்த ஊர்திக்கும், இந்த மெயின் கொஸ்டியனுக்கும் கனெக்ஷன் இல்லை. ஒருவேளை மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் சொல்லக்கூடிய ஊர்தி, இன்னொரு சாதாரண ஊர்தியாக இருக்குமானால், அது ரிப்பேர் செய்யப்பட்டு, இப்போது வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. செல்வராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எந்தத்துறையைச் சார்ந்த வண்டி என்று கேட்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். டென்டல் விங், அதாவது பல் மருத்துவத் துறையைச் சார்ந்த வண்டியைப் பற்றி திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொல்கிறார்



1982 பிப்ரவரி 6]

என்று கருதுகிறேன். அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அந்த பல் வைத்திய மருத்துவத் துறையில் உள்ள ஊர்தி பழுதடைந்து, 2, 3 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. அதைத் தான் திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொல்லுகிறார்கள். வேண்டுமென்றால், நாளைக்கே என்னுடன் வந்தால், அதைக் காண்பிக்க நான் தயாராக இருக்கிறேன்.

[முற்பகல் 10.20]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அதைத் தான் சொன்னேன். மூலக் கேள்வியில் எழுப்பப்பட்ட ஊர்திகளுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னேன். அதை ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அடுத்தபடியாக இன்னொரு ஊர்தி பற்றிச் சொன்னார்கள். பொன்னுரங்கம் அவர்கள் பொறுமையோடு கேட்க வேண்டும். அந்த ஊர்தியும் ரிப்பேர் செய்யப்பட்டு இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் தற்போது சொல்லுகின்ற ஊர்தி ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஊர்தி. அது ரிப்பேர் செய்யப்பட்டு இயங்கி வருகிறது என்பதை லேட்டஸ்ட் இன்பர்மேஷனாகத் தருகிறேன்.

**போக்குவரத்துக் கழக தொழிலாளிகளின் குழந்தைகளுக்கான இலவச பயணச் சீட்டுகள்.**

*வினா எண். 78—**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

போக்குவரத்து கழக தொழிலாளர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல பேருந்துகளில் இலவச பயணச் சீட்டு வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஆம். போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் குழந்தைகள் தங்கள் வீட்டிலிருந்து பள்ளி மற்றும் கல்லூரிக்குச் சென்று திரும்பி வர இலவச பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தச் சலுகை தொழிலாளர்களின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் கொடுக்கப்படும்.

**திரு. சி. சிவப்பிரகாசம் :** இந்தச் சலுகை எந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளது ? அதன் எண்ணிக்கை எவ்வளவு ? அதனால் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இந்த அரசு ஏற்பட்ட பின்பு 15—9—1977 முதல் இது கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு என்ற கணக்கு தற்போது இல்லை. தனிக் கேள்விபோட்டால் தகவல் தருகிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : இந்தச் சலுகையானது போக்குவரத்து நடத்துனர், ஓட்டுநராகப் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மட்டுமா அல்லது போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் அத்தனை தொழிலாளர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும்.

திரு. ப. நெடுமாறன் : சென்னை நகரத்தில் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற பஸ் பாஸ் சலுகை எல்லா ஊர்களிலும் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது தொழிலாளர்கள் குழந்தைகள் பற்றிய கேள்வி. மாணவர்களைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றி எடுத்துச் சொல்ல வசதியாக இருக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தொழிலாளர்களுடைய இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் பாஸ் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லாக் குழந்தைகளுக்கும் பாஸ் வழங்க அனுமதி வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நம்முடைய மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் இரண்டுக்கு மேல் வேண்டாமென்று கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு உறுதுணையாக இருக்கும் வகையில் இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்ற முறையில் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் கொடுப்பதாக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு தொழிலாளிக்கு மூன்று குழந்தைகள் இருந்து இரண்டு பிள்ளைகள் பாசிலும் ஒரு பிள்ளை டிக்கட் எடுத்துக் கொண்டும் போகவேண்டுமென்று சொன்னால் அந்த மூன்றாவது குழந்தைக்கு இன்ஃபிரியாரிடி காம்ப்ளக்ஸ் ஏற்படும். இந்தத் தகப்பனுக்குப் பிள்ளைதானா என்ற எண்ணம் அந்தப் பிள்ளைக்கு ஏற்பட்டுவிடுமாதலால் பிஞ்சு மனத்தில் உளைச்சல் ஏற்படுத்தும் போக்கைக் கைவிட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று குழந்தைகள் இருக்குமானால் என்று கேட்டார்கள். நாம் மாதா மாதம் அனுமதிச் சீட்டு தருகிறோம். ஒரு மாதம் ஒரு குழந்தைக்கும் இன்னொரு மாதம் இன்னொரு குழந்தைக்கும் அனுமதிச் சீட்டை எடுத்துக் கொண்டால் கருத்து வேறுபாடு வராது.



திரு. து. புருஷோத்தமன் : திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தில் பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்களுக்கு இலவசமாகப் போக அனுமதி வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களுடைய குழந்தைகளுடைய பக்கத்தில் இருந்து வேறு பக்கம் போயிருக்கிறார்கள். அதைப் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் அனுமதிக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். மற்றப் போக்குவரத்துக் கழகங்களில் விரிவு படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தேவகோட்டை—கன்னங்குடி நகரப் பேருந்துப் பணி.

*வினா எண். 79—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டை நகராட்சியிலிருந்து கன்னங்குடி வரைக்கும் நகரப் பேருந்து விட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை. எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) தேவகோட்டை—கன்னங்குடி வழி தடத்தில் இரண்டு பேருந்துகள் 14 தனி நடைகள் சென்றுகொண்டிருந்தன. 8—5—1981 முதல் தேவகோட்டை—கன்னங்குடிக்கு இடையே இரண்டு கூடுதல் தனி நடைகள் செல்ல பாண்டியன் போக்குவரத்து கழகத்தின் பேருந்துக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. புள்ளி விவர கணக்கின்படி பயணிகளின் விகிதாசாரம் குறைவாக இருப்பதால் தேவகோட்டை—கன்னங்குடி வழித் தடத்தில் நகரப் பேருந்து விடுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. ச. அங்குசாமி : கன்னங்குடி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் எல்லாம் போக்குவரத்து வசதியில்லாத இடங்களாக இருக்கின்றன. அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் கன்னங்குடிக்கு வந்து தான் போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போலவே மற்ற நகரங்களுக்கோ அல்லது பெரிய இடங்களுக்கோ செல்வது என்றால் கன்னங்குடிக்கு வந்துதான் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கன்னங்குடியிலே நகரப் பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே இரண்டு பேருந்துகள் 14 தனி நடைகள் போய்க் கொண்டிருக்கின்றன. அதற்கே தேவையான பயணிகள் இல்லை, ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் குறைந்த வருமானத்தை ஈட்டிக் கொண்டிருக்கின்றன ஆகவே முடியாது என்று சொன்னோம். இருந்தாலும் நகரப் பேருந்து வேண்டுமென்று குறிப்பாகச் சொல்கின்ற காரணத்தினால் மீண்டும் பரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: நகரப் பேருந்துகள் விடப்படுவதற்கு 30 கிலோ மீட்டர் என்ற வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் வேலூர்—குடியாத்தம், குடியாத்தம்—காட்பாடி என்ற இடங்கள் முப்பதரை கிலோ மீட்டர், 31 கிலோ மீட்டர் என்று இருப்பதால் நகரப் பேருந்துவிட முடியாது என்ற நிலை இருக்கிறது. அதை மாற்றி 35 கிலோ மீட்டர் வரையில் நகரப் பேருந்துகள் விடலாம் என்று கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே 25 கிலோ மீட்டர் என்று இருந்தது, அதற்காகத்தான் 30 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டது. இப்போது மீண்டும் அது 35 கிலோ மீட்டர் என்று ஆக்கப்பட வேண்டும் என்கிறீர்கள், அடுத்த ஆண்டு 40 கிலோ மீட்டர் என்று கேட்பீர்கள். இப்படி ஒவ்வொரு முறையும் அவை கூடுகிறபோது, இப்படி ஐந்து, ஐந்து என்று கூட்டிக் கொண்டே போனால் அது நடக்காத காரியம்.

திரு. ச. அங்குசாமி: கன்னங்குடிக்கு இரண்டு பேருந்துகளும் ரூட் பஸ்களாக சென்று கொண்டிருக்கின்றன. அதிலே அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதால் மக்கள் அதைக் கொடுத்து போகக் கூடிய பொருளாதார வசதி இல்லை. அதனால் தான் வருமானம் குறைவாக இருக்கிறது என்று போக்குவரத்து அதிகாரிகள் கணக்கு எடுத்து இருக்கிறார்கள். ஆகவே நகரப் பேருந்தை விட்டால் அதற்கு நல்ல கலெக்ஷன் கிடைக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே நகரப் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கனவே சொன்னேன். 14 தனி நடைகள் சென்று கொண்டிருக்கின்றன. நகரப் பேருந்து விடப்பட்டால் அது மட்டும் தான் ஓடும், 14 தனி நடைகள் நிறுத்தப்பட வேண்டியிருக்கும். ஆகவே இது பற்றி அரசு பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்.





## கோவை நகரத்தில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்கள்

*வினா எண். 80—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் போட்டு ஓட்டாமல் பிரயாணிகளிடம் அதிகக் கட்டணம் வசூலிப்பது பற்றி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆட்டோக்கள் கண்டிப்பாக மீட்டர் போட்டு ஓட்டி கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) மீட்டர் போடாத ஆட்டோ மற்றும் டாக்சிகள் ஓடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், பொது மக்களின் புகார்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்கள் மீதும் காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அதிகாரிகளினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஆட்டோரிக்ஷாக்களில் மீட்டர் போடாமல் ஓட அனுமதிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி தெளிவாக அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்வது நல்லது என்று கருதுகிறேன். சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கலெக்டர் அவர்களும் சேர்ந்து சம்பந்தப்பட்ட ஆட்டோ-ரிக்ஷா சொந்தக்காரர்களையும் தொழிலாளர்களையும் வைத்துப் பேசி எடுத்த முடிவுப்படி மீட்டர்கள் போட்டு ஓடாமல் பிரயாணிகளுக்கும் அவர்களுக்கும் சண்டை ஏற்பட்டு ஆட்டோரிக்ஷாவிலே பயந்து கொண்டு இறங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே திட்டவட்டமாக மீட்டர்கள் போட்டு மீட்டர்களில் உள்ள காசுபடிதான் வாங்க வேண்டுமென்று திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை கோவையிலே மட்டுமல்ல, சென்னையிலும் தமிழகத்தின் மற்ற இடங்களிலும் இருப்பதால் நான் இந்தப் பிரச்சினையைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். நான் வேதனையோடு சொல்கிறேன், நான் ஏற்கனவே இதே இடத்திலே பதில் சொல்கிறபோது சொல்லியிருக்கிறேன். அங்கே அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அத்தனை தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைப்புக் கொடுப்பார்

களானால் அதை நடைமுறைப்படுத்துவதிலே சிக்கல் இருக்காது. அதற்காக நீங்கள் நடவடிக்கை எடுத்தால் அரசாங்கம் நிம்மதியாக அதை செய்ய முடியும். தொழிற் சங்கங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்பதை மட்டும் நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த விஷயத்தைப் பற்றித் தொழிற்சங்கங்களின் மீது அமைச்சரவர்கள் அதன் பொறுப்பைச் சுமத்துவதில் பயன் இல்லை; அது உண்மை ஆகாது. தொழிற்சங்கத்தைப் பொறுத்த வரையில் நான் சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவன். எங்கள் தொழிற் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கும் ஆட்டோ ரிக்ஷா தொழிலாளிகள் மீட்டர் போடாவிட்டால் அவர்களைச் சங்கத்தில் வைத்து இருப்பதில்லை என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து இருக்கிறோம். மற்றச் சங்கங்களைப் பற்றி அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். இப்பொழுது இவர்களுக்குக் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு, தொழிலாளிகள் சாப்பிட வழியும், ஆட்டோ ரிக்ஷாவை வாடகைக்கு விடுபவர்களுக்கு வழியாகவும் இல்லை என்ற புகார் இருக்கிறது. அதைத் திருத்தி நியாயமான முறையில் கட்டணத்தைக் கொடுக்கும் முறையில், கட்டாயமாக மீட்டர் போட வேண்டுமென்று இந்த இரண்டையும் இணைத்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் இணைத்து நடவடிக்கை எடுக்க இப்பொழுதே அரசு தயாராக இருக்கிறது. ஆனால் அப்படி நடவடிக்கை எடுக்கும்பொழுது கட்டணத்தை உயர்த்தி விட்டார்களே என்று வரும்போது நீங்களும் அரசாங்கத்திற்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். நர்மே பேசி நடவடிக்கை எடுக்கலாம். கட்டணத்தை எவ்வளவு உயர்த்தலாம், எப்படி இருந்தால் கட்டுப்படியாகும் என்று சொல்லுங்கள். அதற்குப் பிறகு எல்லோரும் சேர்ந்து மக்களிடத்தில் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களும், டாக்சிகளும் மிகக் குறுகிய தூரத்திற்குக் கூப்பிட்டால் வருவதில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து ஹாஸ்டலுக்குக் கூப்பிட்டால் ஒருவரும் வரமாட்டேன் என்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்கள் குறுகிய தூரத்திற்கு வருவதில்லை என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் இதே கேள்வியைக்



கேட்டபொழுது பதில் சொன்னேன். யார் அவ்வாறு செய்தார்கள் என்று, குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினர்களாவது சொன்னால் நாங்கள் நடவடிக்கை எடுப்பதன் மூலம் மற்றவர்களும் பயப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### (அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக் கொள்வது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் 25—1—1982 ஆம் தேதியன்று 54-வது விதியின் கீழ் ஒரு நோட்டீஸ் கொடுத்திருந்தேன். ஆளுநர் ஆற்ற இருக்கின்ற உரையின் மேலே அதைப்பற்றி பேசுவதற்கான வாய்ப்பிருக்கிறது என்று 30—1—82 ஆம் தேதியன்றே ரிஜெக்ட் செய்திருக்கிறீர்கள். ஆளுநர் உரை 1—2—1982 ஆம் தேதியன்று நிகழ்த்தப்பட்டிருக்கிறது. எனவே, ஆளுநர் உரையில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று தெரிவதற்கு முன்னாலேயே இதை ரிஜெக்ட் செய்திருக்கிறீர்கள். ஆளுநர் உரையின்மீது பேசிய ஒரு உறுப்பினருக்கு இன்றைய தினம் 54-வது விதியின் கீழ் ஒரு இஷ்யூவை ரெய்ஸ் பண்ணுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். அதே இஷ்யூவை நான் ரெய்ஸ் செய்யும் நேரத்தில் அது ரிஜெக்ட் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த இஷ்யூ என்று சொன்னால் அதைப் பார்ப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, ஆளுநர் உரைமீது விவாதம் நடந்து கொண்டிருப்பதால் அட்ஜர்ன்மெண்ட் மோஷனையோ, கால் அட்டென்ஷனையோ எடுப்பதற்கில்லை என்று சொல்லப்படுகிறது. நான் 9 அட்ஜர்ன்மெண்ட் மோஷன்களைக் கொடுத்திருக்கிறேன். அதிலே ஒன்றுகூட எடுக்கப்படவில்லை. ஆனால் இரண்டு கால் அட்டென்ஷன்கள் வந்து இருக்கின்றன. கால் அட்டென்ஷனை விட அட்ஜர்ன்மெண்ட் மோஷன்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதை எடுக்கவில்லை. அதை எடுப்பீர்களா மாட்டீர்களா ?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய சபையினுடைய விதிகளின்படி The Governor's Address may be interrupted by an adjournment motion under Rule 55 என்றுதான் போடப்பட்டிருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எந்த விதியின் கீழ் அனுமதித்திருக்கிறீர்கள். ஆனால் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஏன் அனுமதிக்கவில்லை ?

திரு. ரா. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 27—7—1981 ஆம் தேதியன்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உங்களிடத்தில் கொடுத்தேன். அதை உடுக்குறியிட்ட வினாவாகப் போட்டீர்கள். இதைப் பற்றி நான் உங்களிடத்தில் என்னவென்று சொல்வது ?

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் எழுப்பியது சட்டப் பிரச்சினை. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆளுநர் உரையின்பொழுது கொடுக்கப்பட்டால் சபையின் அனுமதியோடு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள சபையின் விதிகளில் இடம் இல்லை. இருந்தாலும் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்க விதி இருந்தும், உங்கள் சௌகரியத்திற்காக கவன ஈர்ப்புகளை மட்டும் எடுத்துக்கொள்வது விதிகளுக்கு உட்பட்டு செய்யப்பட்ட காரியம்தானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய சௌகரியமே இல்லை. சபையிலே இருக்கிற நேரம்தான். நாளைக்கு எல்லாத் தலைவர்களும்.........

திரு. அ. ரகுமான்கான் : It is a question of ruling, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது பதில்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சபையிலே இருக்கிற நேரம் போதாமல் பல பேருக்குப் பேசுவதற்கு வாய்ப்பே இல்லை. இருக்கிற நேரத்திலே அனைத்தையும் எடுத்துக் கொண்டிருந்தால் முடியாது. ஆகவேதான், ஏற்கெனவே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கிற வரையில், ஒத்தி வைப்புத் தீர்மானமும் கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்துக் கொள்வதில்லை என்று மரபாக வைத்திருக்கிறோம். இப்பொழுது கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்திக் கொண்டே வந்தார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : கவன ஈர்ப்புத் தீர்மானம் விதிகளுக்குட்பட்டு நீங்கள் எடுக்கவே முடியாது. விதியை வாசித்துச் சொல்லுங்கள், நான் ஏற்றுக் கொள்கிறேன்.



MR. SPEAKER : I shall read Rule 13(1).

(1) Notwithstanding that a day has been allotted for discussion on the Governor's Address—

(*a*) a motion or motions for leave to introduce a Bill may be made and a Bill may be introduced on such day, and

(*b*) other business of a formal character may be transacted on such day before the House commences or continues the discussion on the Address.

(2) The discussion on the Address may be postponed in favour of a Government Bill or other Government Business on a motion being made in that behalf...........

திரு. அ. ரகுமான்கான் : என்ன அர்த்தம், சொல்லுங்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளி வைக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் மன்னித்துக் கொள்ள வேண்டும். இந்த விதிகளின்படி அரசுத் தரப்பில் மசோதாக்களை அமைச்சர்கள் சமர்ப்பிக்கலாம், அதற்காக ஆளுநர் உரை மீதான விவாதத்தை பிரேக் பண்ணலாம். அடுத்து, கவர்ன்மெண்ட் பிஸினஸ் சம்பந்தமாக, ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைக்கலாம். அட்ஜர்ன்மெண்ட் மோஷன் சம்பந்தமாகத் தள்ளி வைக்கலாம். அப்படித்தான் செய்ய முடியுமே தவிர, மற்றபடி ஆளுநர் உரை மீதான விவாதத்தை பிரேக் பண்ண முடியாது, இன்ட்டரப்ட் பண்ண முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று எல்லோரும் வற்புறுத்தியதாலே, நான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். எடுத்துக் கொள்ளக் கூடாது என்று எந்த விதியில் இருக்கிறது?

திரு. அ. ரகுமான்கான் : எடுத்துக் கொள்ள கூடாது என்று தான் இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : விதியிலே எடுக்கக் கூடாது என்று இருக்கிறதா என்றால் இல்லை. நேற்று நாங்கள் வலியுறுத்தினோம் முக்கியமானது என்று, அதனால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

[1982 பிப்ரவரி 6

திரு. அ. ரகுமான்கான் : இவைகளைத் தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், இவைகளை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒன்றைச் சொல்லி விடுகிறேன். L w c n b in r e ed on both id s அதிலே ஒன்றும் இல்லை. விதியில் கரெக்டாகவே இருக்கிறது.

Other business of a formal charecter may be transacted on such day before the House commences or continues the discussion on the Address.

திரு. துரைமுருகன் : சரி, பெரியவர்கள் செய்தால் பெருமாள் செய்தமாதிரி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியவர்கள் செய்தால் பெருமாள் செய்த மாதிரியெல்லாம் கிடையாது. இருக்கிற முறையே இதுதான். நேற்று துரைமுருகன் இவைகளை விதிகள் 74, 54-ன்கீழ் ஏன் எடுத்துக் கொள்ளவில்லை யென்று கேட்பது, பிறகு ரகுமான்கான் ஏன் எடுத்துக் கொள்ளப்பட்டது என்று கேட்பது, இந்த இரண்டுமே எனக்குப் புரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இதிலே சொல்லப்பட்டிருப்பதன் நோக்கமே, ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத் தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையிலே எல்லோரும் பேசுகிற நேரத்தைக் குறைத்துக் கொண்டால், நான் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கூட எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனக்கு ஒன்றும் இல்லை. சபையினுடைய நேரம் தான். 9 ஆம் தேதிக்குள்ளே, ஆளுநர் உரைக்கு......

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சபையினுடைய நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. சபாநாயகர் ஆப்சர்வேஷனை, தீர்ப்பாகப் பின்னால் கோட் செய்கிற அளவுக்கு இது வந்து விடக் கூடாது என்று தான் கேட்கிறேன். ஏனென்றால், ஒரு இம்பார்ட்டன்ட் மாட்டர் பற்றி அட்ஜர்ன்மென்ட் மோஷன் வந்தால்' அதை இந்தச் சமயத்தில் ரெயிஸ் பண்ணக்கூடாது என்று சொன்னால், அது டெசிஷனாக வந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, ஒவ்வொரு நாளும் எல்லாக் கட்சியினரும் பேசுகிறார்கள். (குறுக்கீடு) கட்சியினர் என்றால், எல்லோரும் சேர்ந்தது என்றுதான் அர்த்தம், எந்த உறுப்பினரும் பேசினாலும் அந்தக் கட்சிக்காரரர், அவரிடம் சொல்லி, அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினால் சரியாகப் போகும்.



1982 பிப்ரவரி 6] [பேரவைத் தலைவர்]

[முற்பகல் 10.40]

இதுவரை நடந்து வந்திருக்கின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே ஆளுநர் உரை நடக்கின்றபோது இதை எல்லாம் தள்ளி வைத்து நேரத்தை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்த மரபுதான் கடை பிடிக்கப்படுகிறது. எல்லாவற்றையும் வைத்துதுக் கொள்ள வேண்டும் என்றால், உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசினால்தான் முடியும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இவ்வளவுக்கும் காரணமாக இருந்தது நான் நேற்றைக்குத் தங்களிடம் வாதாடிப் பெற்றதுதான். ஆனால் என்னுடைய கால் அட்டன்ஷன் வரவில்லை. அதை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாதாடுவது என்பது எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டுமே தவிர, தனக்காகத்தான் என்பது மிகவும் தப்பான கருத்து. அவையினுடைய மரபுகளுக்காகத்தான் வாதாட வேண்டுமே தவிர, தனக்காகத் தான் என்று சொல்வது நல்லதல்ல.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, : 'F m l ch acte' என்ற பகுதியை நீங்கள் படித்தீர்கள். ஏனென்றால் நீங்கள் கொடுக்கக் கூடிய தீர்ப்பு இந்தச் சபையில் மேற்கொள்ளப்பட இருக்கிறது. ஆகையினால் தான், நான் இதைக் குறிப்பிடுகிறேன். F rm l ch acte என்று சொல்லுகிறபோது. அது மரபு வழிக்கு உட்பட்டதா? அல்லது 'F m l cha acte' என்று சொல்லக்கூடிய விதியின் கீழ் எவைகள் எல்லாம் அடங்கும். தனி நபர் தீர்மானம் அடங்குமா? அது பற்றி விளக்கங்களும் விவரங்களும் சரியாக இல்லை. oth busin s of f rm l c ac e என்று வருவதில் கவன ஈர்ப்புத் தீர்மானம் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்திவைப்புத் தீர்மானம், மற்ற ஏதாவது விஷேசமான திட ரென்று வருகின்ற பிரச்சினைகள் இவைகள் எல்லாம் இதிலே வரும் அவைகள் எல்லாம் என்னுடைய டிஸ்கிரிஷன்னில் இருக்கின்றன. இதற்கு ஒரு முக்கியத்துவம் கிடையாது.

(3) உரிமைப் பிரச்சினை.

எதிர்க்கட்சித் தலைவர் மீது அவையில் எழுப்ப அனுமதி வழங்குவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 246-வது விதியின் கீழ் திருவாளர்கள் செ. செம்மலை, மா. சின்னராஜ், ஜெ.சி.டி. பிரபாகரன், கே. குப்புசாமி, மி. வின்சன்ட், வேட

சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்தப் பிரச்சினையை எழுப்ப என் இசைவை ஏன் மறுக்கக் கூடாது என்பதைக் குறித்து, சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். எல்லா அறிவிப்புகளும் ஒரே பொருள் குறித்து இருப்பதால், ஒரு உறுப்பினர் மாத்திரம் விளக்கம் அளித்தால் போதுமானது என்று கருதுகிறேன். திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நீங்கள் அனவுன்ஸ் பண்ணும்போது அது என்ன உரிமைப் பிரசினை என்று சொல்ல வேண்டும் The House cannot be kept in absolute darkness.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதைப் பற்றி ஒரு நீண்ட கடிதம் வந்திருக்கிறது. 5, 6 பேர்கள் தனித்தனியாகக் கொடுத்திருக்கிறார்கள். அதை எல்லாம் படித்தால் நேரம் இருக்காது. எனவே, அது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன் : தலைவ்ர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் இப்போது அறிவித்த இந்த அறிவிப்பானது 246-வது விதியின் கீழ், உரிமைப் பிரச்சினையாக மேல்வாரியாகத் தங்களுக்குத் தோன்றினால்தான் இந்த அவையில் எழுப்பத் தாங்கள் அனுமதி அளிக்கலாம். எழுப்புவது என்பது2 வகைகள். ஒன்று தீர்மானமாகக் கொண்டு வருவது. அந்தக் கட்டம் இப்போது இல்லை. பலர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி அவையில் அவர்களது கருத்தைக் கேட்டு அதன் மீது தங்கள் முடிவைச் சொல்வதாக இருந்தால், அப்படி இந்த அவையிலே எழுப்பப் படுவதற்கு முன், இந்தப் பிரச்சினைப் பற்றி அவர்கள் தங்களுக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள். அவற்றைத் தாங்கள் படித்து அறிந்து இருக்கீறீர்கள். அப்படி அறிந்து இருக்கிறபோது, உரிமை மீறல் உள்ளதாகச் அச்செயல் மேலெழுந்தவாரியாக உங்களுக்குத் தோன்றினால்தான் அவற்றை இங்கே எழுப்பத் தாங்கள் அனுமதிக்கலாம். தீர்மானம் அல்ல நான் சொல்வது, தீர்மானம் கொண்டு வருகிற கட்டம் இப்போது இல்லை. ஆலோசானைக்கு வைப்பதற்குக் கூட, சபாநாயகர் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிற அறிவிப்புகளைப் பார்க்கிறபோது, மேலெழுந்தவாரியாக அதிலே ஒரு உரிமைச் பிரச்சினை இருக்கிறது என்று அவருக்குத் தோன்றினால்தான் அதை இந்த அவையிலே எழுப்பலாம் என்ற அளவுக்கு இதிலே உரிமைப் பிரச்சினை பற்றி அடிப்படையான கருத்து தெரிவிக்கக் பட்டிருக்கிறது.

நான் இதற்கு மேலே விளக்கம் சொல்வதாக இருந்தால் இந்த நேரத்தில் நான் தங்கள் மூலமாக பெறவேண்டிய விளக்கத்திற்கு அது இடையூறாக இருக்கும். எனவே அப்படி உரிமை மீறல் என்று தோன்றுவதற்குக் காரணமாக, சட்டமன்ற உறுப்பினர்





களுடைய உரிமை சட்டமன்றத்தினுடைய உரிமை, சட்டமன்ற நடைமுறைகளுக்கு மாறுபட்ட உரிமை மீறல் ஏதாவது தங்கள் கண்ணுக்கோ, காதுக்கோ புலப்பட்டு இருக்குமானால், அதுபற்றி எழுப்புவதற்கு, எழுப்பிய பின்னர் தாங்கள் முடிவு சொல்வதற்கு வாய்ப்பு உண்டே தவிர, அந்த நிலைமை இல்லாமல் ஏதோ 4 பேர்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள். ஆகவே அவற்றை எழுப்பி, அதற்குப் பின்னாலே தாங்கள் ஒரு முடிவு சொல்வது என்பது இந்த அவையில் ஒரு தவறான முன்மாதிரியை ஏற்படுத்தி விடுமோ என்று நான் சந்தேகப்படுகிறேன். எனவே உரிமை மீறல் என்று சொல்லிலே காணப்படுகிற கருத்து என்ன என்பதை, தாங்கள் ஆழ்ந்து எண்ணி, பிரைமாபேசி இருக்குமானால், எழுப்ப அனுமதியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தங்களுடைய ஆழ்ந்த கவனத்திற்கு இது சம்பந்தமாக சில விஷயங்களைக் கூறுகிறேன். இதன் மீது உரிமைப் பிரச்சினை என்று தாங்களே இங்கே அறிவித்து இருக்கிறீர்கள். ஆகவே, அதை இந்தச் சட்டமன்றம் அறிந்து இருக்கிறது. இது ஒரு அரசியல் பிரச்சினை. ஏற்கெனவே, இம்மாதிரியான கமிஷன் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சில நேரங்களில் வெளியிடப்பட்டு இருக்கின்றன. பரோஸ் காந்தி அவர்கள் முந்திரா கமிஷன் அறிக்கையை நேரு இருந்த காலத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள். அது பற்றி உரிமைப் பிரச்சினை வரவில்லை. வாஞ்சு கமிஷன் அறிக்கையை ஜோதிர்மாய் பாசு அவர்கள் வெளியிட்டார்கள். அது பற்றியும் உரிமைப் பிரச்சினை எதுவும் வரவில்லை. ஆகவே, அரசியல் ரீதியாக சந்திக்கப்பட வேண்டிய பிரச்னை இது. அரசாங்கத்திற்கு இதிலே ஏதாவது பிரச்னை இருக்கிறது என்று சொன்னால் அதை ஜனங்களிடத்தில் எடுத்துச் சொல்லி, தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையாகும். எதற்காக இதில் நான் குறுக்கிடுகிறேன் என்றால், இது எதிர்க்கட்சிகளின் உரிமையை பாதிக்கக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது. நாட்டின் தேவைக்காக, சமுதாயத்தின் தேவைக்காக தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையை அரசாங்கம் வெளியிடாமல் இருக்கின்றபோது, அதை வெளியிட வேண்டிய அவசியம் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டு, அந்த அடிப்படையில் அது வெளியிடப்படுகிறது (குறுக்கீடு). அப்படி வெளியிடுவதற்கான உரிமை எதிர்த்தரப்பினருக்கு இருக்கிறது என்ற காரணத்தால் இந்தப் பிரச்னையை ஆரம்பிக்காமலேயே முடித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு).

இதிலே பிரைமா பேசி இருக்கிறதா இல்லையா என்கிற அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் போகவில்லை. பால் கமிஷன் அறிக்கை வெளியிட்டது சம்பந்தமாக உரிமைப் பிரச்னை என்று தாங்கள் சொல்லிவிட்ட பிறகு, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அது முக்கியமான அரசியல் பிரச்னை, அதைப் பற்றி

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 6

நாம் இங்கே விவாதிக்க இருக்கிறோம். ஆகவே, அப்படி விவாதிக்கின்றபோது பல்வேறு கட்சிகளும், அரசாங்கமும் அதைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னையைப் பற்றி உரிமைப் பிரச்னை கொண்டு வருவது சரியானது அல்ல. ஆகவே, இதைக் கொண்டு வந்து இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதை வற்புறுத்தாமல், வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று தாங்கள் தெரிவிக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே, அதைப் பற்றி நிறையக் கடிதங்கள் வந்து இருக்கின்றன. ஆகவேதான் இதிலே உரிமைப் பிரச்னை இருக்கிறதா, இல்லையா என்பதைக் குறித்து கடிதங்களை எழுதியவர்களிடமிருந்தும், எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்தும் விளக்கங்களைப் பெறுவதற்காக இந்தப் பிரச்னையை அவை முன் வைத்து இருக்கிறேனே தவிர, வேறு அல்ல.

**திரு. மு. அம்பிகாபதி :** உரிமைப் பிரச்னை இருக்கிறதா இல்லையா என்பதை நீங்களே முடிவு செய்யலாமே ?

***டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் செம்மலை, சின்னராஜ், பிரபாகரன், குப்புசாமி, வின்சென்ட் மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர் தங்களுக்கு என் மீது உரிமைப் பிரச்னை குறித்து எழுதிய ஆறு கடிதங்களையும், எனக்கு அனுப்பி வைத்து, என்னுடைய பதிலைக் கேட்டீர்கள். நானும் அதற்கான பதிலை எழுதியிருக்கிறேன். அந்த ஆறு கடிதங்களையும், நான் எழுதியுள்ள பதில் கடிதத்தையும் தாங்கள் ஆய்ந்து பார்த்து அதற்குப் பிறகு, இதிலே பிரைமா பேசி கேஸ் இருக்கிறதா என்று எண்ணிப்பார்த்து, அதை எடுத்துக்கொள்ள இப்போது அனுமதித்து இருக்கிறீர்களா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு அனுப்பிய 6 கடிதங்களையும், அவற்றிற்கு நான் எழுதியுள்ள பதில் கடிதத்தையும் இங்கே படித்துக் காட்ட வேண்டும். இதற்கு முன்பு தாங்கள் இங்கே கடைப்பிடித்த மரபு, பத்திரிகைகள் மீதோ அல்லது வேறு நபர்கள் மீதோ உரிமைப் பிரச்னை வரும்போது, உரிமைப் பிரச்னை பற்றி கொடுத்துள்ள அறிவிப்பைப் படித்துவிட்டு, யார் மீது எழுப்பப்பட்டதோ அவர் அதற்கு விளக்கம் கொடுத்து எழுதியுள்ள பதில் கடிதத்தையும் படித்து விட்டு, அவையில் அப்பிரச்னையைப்பற்றி கருத்துச் சொல்லச் சொல்வீர்கள். இப்போது அந்த முறை கடைப்பிடிக்கப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆறு கடிதங்களையும் படிப்பது என்றால் அது அதிக நேரமாகும். அதைப்பற்றி அவர்கள் சுருக்கமாகச் சொன்னதற்குப் பிறகு, நீங்களும் சுருக்கமாகச் சொல்லலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** நான் தங்களிடத்தில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 6 கடிதங்களையும் என்னிடத்தில் அனுப்பினீர்கள். அதற்கு நான் தங்களுக்கு பதில் அளித்து இருக்கிறேன். அந்த 6 கடிதங்களையும், நான் எழுதிய பதிலையும் இந்த அவையில் வைக்க வேண்டாமா ? அப்படி அவற்றை வைத்த பிறகுதானே அதைப் பற்றி உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்க முடியும்.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்னை. ஒரு உறுப்பினரின் உரிமையை மட்டுமல்ல ஜனநாயகத்திலே எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலே அவர் ஆற்றிய கடமைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்த அவையில் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதைப்போல் அந்த 6 கடிதங்களையும், எதிர்கட்சித் தலைவர் அதற்கு எழுதிய பதில் கடிதத்தையும் இந்த அவையின் உறுப்பினர்களுக்கு தாங்கள் சர்க்குலேட் செய்தால், அதைப் பற்றி பின்னாலே உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆறு கடிதங்கள் வந்தன. அவை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு, அவர்களும் பதில் எழுதி இருக்கிறார்கள். பிரஸ் பற்றிய பிரச்னையாக இருந்தால், அவர்கள இங்கே விளக்கம் சொல்ல வாய்ப்பு இல்லை என்பதால் அவர்களுடைய பதிலை இங்கே படிப்பது ஒரு மரபாக இருக்கிறது. ஆனால், இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் இதை எழுப்பிய ஆளும் கட்சி உறுப்பினர்களும் இங்கே இருக்கிறார்கள் எதிர்க்கட்சித் தலைவரும் இருக்கிறார். அவர்கள் தங்கள் தங்கள் கருத்தை இங்கேயே எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவேதான் அறிவிப்பு கொடுத்தவருடைய விளக்கத்தை முதலில் கேட்கிறேன். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் பதில் கொடுக்கலாம். இதில் புதுமை ஒன்றும் இல்லை.

***திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தாங்கள் நடுநிலை உணர்வோடு ஒரு மத்தியஸ்த்தராக இருந்து, காரியம் ஆற்றுபவராக இருந்து, இரண்டுபேரும்பேசி, அதன் பிறகு முடிவு காணலாம் என்று சொல்கிறீர்கள். இங்கே தாங்கள் நடுநிலையாளர் மட்டுமல்ல. தாங்கள் அவைத் தலைவர் என்ற பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால், அவை உரிமை மீறல் என்று

வந்தால், அது எந்த வகையில் மீறப்பட்டிருந்தாலும் அதை அவைக்குக் கொண்டுவந்து, அதன் மூலம் மேலும் அவை உரிமை மீறல் எழாமல் தடுக்கின்ற பொறுப்பும் தங்களுக்கு இருக்கிறது. அதே நேரத்தில் அவை உரிமை மீறல் இல்லாமல் ஒரு கருத்து இங்கே தொடருமானால் அப்படிப்பட்ட கருத்து இங்கே வராமல் தடுக்கும் பொறுப்பும் தங்களுக்கு இருக்கிறது. ஆ வே, இரு தரப்பினரும் எழுதிய கடிதங்களைத் தாங்கள் படித்துப் பார்த்து, சொல்லப்பட்டிருக்கிற உண்மைகள் அடிப்படையில் ஏதாவது உரிமைமீறல் இருக்கிறது என்று தங்களுக்கு மேலெழுந்த வாரியாக-ஆழமாகக்கூட அல்ல—உத்தேசமாக மேலே இருக்கிற ஒருசில வரிகள் மூலமாக ஏதாவது உரிமை மீறல் இருக்கிறது என்று தோன்றுமானால் அதை சம்பந்தப்பட்டவர்கள் இங்கே எடுத்துச் சொல்ல, விளக்கம் அளிக்க அனுமதிப்பது நியாயமாக இருக்கும். ஆனால், உரிமை மீறல் என்று சொல்லக் காரணமே இல்லாத போது அதை தாங்கள் அனுமதித்து, அதுபற்றி இங்கே பேச வேண்டுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரிமை மீறல் பிரச்னை இருக்கிறது என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள் ; அதற்குப் பதில் கடிதமும் இருக்கிறது. இதிலே உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பதற்கான ஆதாரங்களை சம்பந்தப்பட்டவர்கள் இங்கே தெரிவிக்கலாம். (குறுக்கீடுகள்.)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பிரைமா பேசி கேஸ் இதிலே இருக்கிறதா, இல்லையா என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இதிலே ஒட்டெடுப்புக்கு இடமில்லை. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எப்போதுமே அவை உரிமை மீறல் பிரச்னையைப் பொறுத்தவரையில் அவை உரிமை மீறல் உண்டா, இல்லையா என்று இரண்டு பக்கமும் கேட்டுவிட்டு முடிவு செய்வதுதான் வழக்கம். (குறுக்கீடுகள்) அதனால்தான் எதிர்க்கட்சித் தலைவருக்கும் தகவலுக்காக அந்தக் கடிதங்களின் நகலை அனுப்பி வைத்தேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, தகவலுக்காக தாங்கள் எனக்கு அனுப்பவில்லை. ஆறு கடிதங்களையும் அனுப்பி, அதற்கு 29-ந் தேதிக்குள் பதில் அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். நான் 29-ந் தேதிக்குள் பதில் அனுப்பி இருக்கிறேன். ஆகவே, தாங்கள் தகவலுக்காக அனுப்பவில்லை.

**டாக்டர் கே. சமரசம் :** தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே, திரு. சங்கரய்யா, திரு. உமாநாத் போன்றவர்கள் உரிமைப் பிரச்னை எழுப்பி, அவைகளுக்கு இங்கே அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்





போன்று அரசாங்கத்தின் தஸ்தாவேஜை வெளியிட்டிருக்கிற இந்தப் பிரச்னையிலும் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள். நான் விளக்கம் பெறுவதற்காகத்தான் அனுமதி அளிக்கிறேன். இருதரப்பினரும் இங்கே இருக்கிறார்கள். இருதரப்பினரும் தங்களுடைய விளக்கத்தைச் சொல்லலாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** விளக்கத்திற்குப் பிறகு பிரைமா பேசி கேஸ் இல்லை என்றால் என்ன செய்வது ? இதிலே ஓட்டெடுப்பா நடத்த முடியும் ? பிரைமா பேசி கேஸ் இல்லை என்றால் Can you wipe out the damages caused? (குறுக்கீடு).

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** அரசாங்க தஸ்தாவேஜ் அரசாங்கத்திற்குத் தெரியாமல் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. அவையில் வைப்பதற்கு முன்னால் வெளிவந்தது அவை உரிமையை மீறியது இல்லையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற விதிமுறைகளின்படி பார்த்தால் 250 ஆவது விதியின்படி ஓர் உறுப்பினர், உரிமைப் பிரச்சினை ஒன்றை பேரவைத் தலைவரின் இசைவுடன் எழுப்பினால் பேரவைத் தலைவர் அப்பிரச்னையை பேரவைக்குப் படித்துக் காட்டி அவர் மேலும் விளக்கம் பெறுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்றபோது உரிமை மீறல் இருக்கின்றதா இல்லையா என்பதைத் தாங்கள் முடிவு செய்யலாம் ; அவ்வாறு தாங்கள் முடிவு செய்வதற்கு மேலும் விளக்கங்கள் தேவைப்படும் என்றால் அவரவர்களே விளக்கங்கள் கொடுப்பதற்கு அனுமதி அளித்து அவற்றைக் கேட்டதற்குப் பிறகு தாங்கள் முடிவு செய்யலாம். ஆகவே ஏற்கெனவே பல்வேறு தடவைகள் உரிமைப் பிரச்சினைகள் வந்த போது கூட இந்தமாதிரி முடிவு செய்திருக்கிறோம். அந்த மரபை ஒட்டித்தான் தாங்கள் இப்போதும் விளக்கம் பெற அனுமதித்து இருக்கிறீர்கள். ஆனால், இப்போது ஒருமித்த அளவிலே குழப்பம் ஏற்படுகின்ற அளவுக்கு இருப்பதால் அறிவிப்புக் கொடுத்துள்ள 6 பேர்களின் அறிவிப்பையும் படிக்க வேண்டி வரும். அவற்றுக்கு எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள விளக்கத்தையும் படித்ததற்குப் பிறகு மேலும் விளக்கங்கள் பெறத் தாங்கள் விரும்பினால் அதற்குத் தங்களுக்கு உரிமை இருக்கின்றது. அவ்வாறு அவரவர்களிடத்திலே விளக்கங்கள் பெற்று அதற்குப் பிறகு ப்ரைமா பேசி இருக்கின்றதா இல்லையா என்பதை முடிவு செய்கின்ற முழு உரிமையும் பேரவைத் தலைவர் என்ற முறையில் தங்களுக்கு இருக்கின்றது. இந்த முறையினைப் பின்பற்றினால் காலம் அதிமாகும் என்பதைத்தான் தாங்கள் குறிப்பிடுகிறீர்கள். அப்படித்

தான் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினால் அப்படித் தாங்கள் செய்வதற்கு எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்ன விதிக்கு முன்னால் இருக்கின்ற விதி 249-லே உள்ள கருத்தைத்தான் நான் முன்னரே வலியுறுத்தினேன். உரிமை மீறல் உள்ளதாகக் கூறப்பெறும் செயல் மிக அண்மையில் நடந்த பொருளைக் குறித்ததாக இருக்க வேண்டும். அதிலே எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், உரிமை மீறல் உள்ளதாக, அச்செயல் மேலெழுந்தவாரியாகவாவது தோன்ற வேண்டும். உரிமை மீறல் என்பது சட்டமன்ற உறுப்பினருடைய உரிமையையோ சட்டமன்ற நடவடிக்கையினுடைய உரிமையையோ, அல்லது சட்டமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட ஒரு உரிமையையோ சட்டமன்றம் எதிர்காலத்திலே பாதிப்பதற்கான உரிமையையோ மீறுவதாக இருந்தால் அது உரிமை மீறல் என்றாகலாம். எனவே, சட்டமன்ற உறுப்பினருடைய, சட்டமன்றப் பேரவையினுடைய எந்த உரிமையை மீறியதாகத்தாங்கள் கருதி அதை ஐயத்திற்குரிய பொருளாக் கொண்டு இந்த அவையிலே அவரவர்களே எடுத்துக் கூற அனுமதிக்கிறீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு இருக்கின்றது. இந்த அவையின் முன்புதான் அறிக்கைகள் வைக்கப்பட வேண்டும் என்பது திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுப்பி இருக்கின்ற பிரச்சினை. அது மீறப்பட்டதா இல்லையா என்பதற்கு பாராளுமன்றத் தீர்ப்புக்கள் இருக்கின்றன என்று அவர் வாதம் பண்ணுகிறார். ஆகவே, உரிமை மீறல் இருக்கின்றதா இல்லையா என்பதை முடிவு செய்வதற்குத்தான் விளக்கம் கொடுக்கச் சொன்னேன். பிறகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள், அவர்களும் விளக்கம் அளிக்கலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அந்த ஆறு அறிவிப்புக்களையும் அவற்றிற்கு நான் எழுதிய பதிலையும் இங்கே வைக்க வேண்டும் என்று கூறுவதற்குக் காரணமே 6 பேர்கள் எழுதிய கடிதங்களில் இந்த அவையைக் குறித்துத் தவறான தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. எனவே, அவைகளும் அவை உரிமையை மீறியனவகளாகும். எனவே, அந்தக் கடிதங்களும், அவைகளுக்கு நான் எழுப்பிய பதில் கடிதமும் இந்த அவையிலே வைக்கப்பட்டால்தான் யார் எப்படி எந்த வகையிலே அவை உரிமையை மீறி இருக்கிறார்கள் என்பதை விவாதிக்க இயலும்.

**THIRU K.S.G. HAJA SHAREEF :** I would suggest that all the papers relating to this episode should be circulated to all the Members, so that we can discuss the same in a fair manner. (குறுக்கீடுகள்—குழப்பம்)



(முற்பகல் 11—00)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற பிரிவிலேஜ் மோஷன்கள் வருகின்ற போது எல்லாம், பத்திரிகைகளுக்கு கடிதம் அனுப்புவது, அவர்களிடமிருந்து வந்த பதிலை அவையில் படிப்பது என்பது மரபு. ஏனெனில் அவர்கள் சட்டமன்றத்தின் உள்ளே வந்து பதில் சொல்ல முடியாது என்ற காரணத்தால்தான் அவர்களுக்கு விவரங்கள் அனுப்பி பதில் பெறுகிறோம். அவற்றின் மீது அவையில் விவாதித்து, தாங்கள் முடிவு எடுப்பது என்பது வழக்கம். ஆனால் நீங்கள் விதிகளின்படி சபையில் இப் பிரச்சினையை எழுப்ப அனுமதித்து விட்டீர்கள். சபையில் எழுப்புவதற்கு அனுமதித்ததற்கு பின்னாலே பிரைமா பேசி இருப்பதாக நீங்கள் ஏற்கனவே தீர்மானித்து விட்டீர்கள் என்று பொருள், (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொழில் அமைச்சர், அவர்கள் தயவு செய்து உட்கார வேண்டும். அவர்கள் துணை சபாநாயகராக இருந்திருக்கிறார்கள். என்னை நானே பார்த்துக் கொள்கிறேன். எனக்காக அவர் ஏதும் விளக்கம் கூற வேண்டாம் (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, தயவுசெய்து அனுமதிக்க வேண்டும். சபையிலே ஒரு பிரச்சினையை எடுத்துப் பேசுவதற்கு முதலில் உங்களுடைய கன்சன்ட் தேவை. மேட்டரை ரெய்ஸ் பண்ணலாம் என்று அனுமதித்து விட்டீர்கள். அதற்குப் பின்னாலே அதன் மீது பேசுவது அதில் சம்பந்தப்பட்டவர்கள் பிறகு பதில் சொல்வது, அதன் மேல் பிரிவிலேஜ் இருந்தால் பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். இதுதான் நடைமுறை. ஆகவே, தாங்கள் கன்சென்ட் கொடுத்தது நியாயமா என்று விவாதிப்பது சபையினுடைய மரபு அல்ல. அதற்கு ஏற்ற விதியும் கிடையாது. சபையில் விவாதிக்க தங்களுடைய அனுமதி வேண்டும். லெட்டரை வைத்து எழுப்ப அனுமதித்து விட்டீர்கள். பிரைமா-பேசி இருக்கிறதா இல்லையா என்பதை விவாதத்திற்குப் பின்னாலே நீங்கள் டிசைட் செய்ய வேண்டும். இருந்தால் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். அதைத் தீர்மானிக்க கன்சென்ட் கொடுத்ததற்குப், பிறகு, எப்படிக் கொடுத்தீர்கள் என்பது பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமோ, அர்த்தமோ இல்லை. மரபும் இல்லை, விதியும் இல்லை.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, இந்த விஷயத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இது அரசியல் ரீதியில் வெளியிலே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. இதை சபையிலே கொண்டு வருவது சரியல்ல. ஆகையினால் இதை இங்கே எடுக்கக் கூடாது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இதை நாங்கள் எதிர்க்கிறோம். (குறுக்கீடுகள்-குழப்பம்).

[1982 பிப்ரவரி 4

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல முறையில், பயன்உள்ள வகையில் செயல் பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை இன்னும் அதிக அளவில அமல்படுத்துவதற்கு, 100 குழாய்கள் எனபதோடு நிறுத்தி விடாமல், எந்த அளவிற்குத் தேவை இருக்கிறதோ அந்த அளவிற்கு அத்தகைய தேவைக்கேற்ற அளவிற்கு விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நிதி வசதியைப் பொறுத்து விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படும்.

## கொடைக்கானல் 'டம்டம்' பாறை அருகே ஏற்படும் சாலை விபத்துக்களைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 34—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானல் மலைப்பாதையில் 'டம்டம்' பாறை என்னுமிடத்தில் அடிக்கடி சாலை விபத்துக்கள் நடைபெறுகிறதா?

(ஆ) அதனைத் தடுக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவா ?

(இ) இதற்கு மாற்றுப்பாதையாக பூலத்தூர்-தும்மலப்பட்டி சாலை வேலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கி. மீ. 10/2—12/2 வரையுள்ள சாலையை அகலப் படுத்தும் பணி ஆண்டு 'பராமரிப்பு' நிதியிலிருந்து மேற்கொள்ளப் படும்.

(இ) இச் சாலையை மாற்றுப் பாதையாக அமைக்க செயற் குறிப்பு ஒன்றும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொம்பக்கரையில் இருந்து கொடைக்கானல் வரையில் புதிய தார் பாதை அமைக்க அரசு ஏற்பாடு செய்ய இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி பூலத்தூர் தும்மலப்பட்டி சாலை பற்றியதாகும் ஆகவே, தனிக்கேள்வி போடவும்.

## மாமுண்டி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 35—திரு. மே. அ. இராசகுமார் மற்றும் திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை நகரம் - விடத்தி லாம்பட்டி மாமுண்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

(இ) அதன் வேலை எப்பொது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். (ஆ) மற்றும் (இ) பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9·50)

திரு. மே. அ. இராசகுமார் : தலைவரவர்களே, நீண்ட காலமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இந்த அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நான் தொகுதி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை விரைவில் முடித்துத்தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். 2-2-1981-ல் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து ஒரு சர்க்குலர் அனுப்பியிருக்கி றார்கள். இந்தத் திட்டத்தை சென்னை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை தலைமைப் பொறியியலாளர் விரைவில் முடிக்க வேண்டுமென்று அதிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்ப

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் அவர்கள் பேசட்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 250 இல்—

When a member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of privilege ha been made out or not therein.

என்று இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்கு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தச் செய்தி என்ன என்பதைப் பற்றி படிக்க வேண்டும் என்று தெளிவாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. பிரைமா-பேசி இருக்கிறதா இல்லையா என் பதை டிசைட் பண்ண வேண்டியது என்பது அடுத்த கட்டம் என்ற காரணத்தால் தான் "..he Speake shall ie d the ma ter io the Hoi se." என்று இருக்கிறது. "..the Spe ke sh ll ead the decision to the Ho se" என்று இல்லை.

ப்ரிவிலேஜ் மோஷன் எழுப்பி இருக்கிறவர்களுடைய அந்த வாதங்களையும், கருத்துக்களையும் அவையில் படித்து எதிர் கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தையும் கேட்டு ப்ரைமா-பேஸி இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பாக அளிக்க வேண்டுவதுதான் விதியில் கண்டிருக் கிறது.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் 250 வது விதியைச் சொல்கிறபோது 249 வது விதியைப் படித்தால்தான் 250 ஐப் படிக்க முடியும். 249 வது விதியில் உள்ள கருத்துக்களை தங்கள் உள்ளத்தில் கொள்ளாமல் 250 வது விதிக்குப் போகவே தங்களுக்கு வாய்ப்பில்லை. I p ece es 2 0.. 249 வது விதியில் சபாநாயகர் தங்களுடைய மனதுக்குத் தெளிவாகத் தோன்றிய ஒரு உரிமை மீறல் கருத்தை ஏற்றுக் கொண்ட தற்குப் பின்னர் அவையில் எழுப்பச் சொல்லி மேலும் தெளிவு படுத்தலாம் என்பதற்குத்தான் 250 வது விதியே தவிர, 249 ஆவது விதியை மறந்து விட்டு 250 இல் அடி எடுத்து வைப்பது அவ்வளவு பொருத்தமல்ல. தாங்களே ஒரு முடிவிற்கு வந்து எழுப்ப வேண்டுமென்று கருதினால் எழுப்பலாம். 249 வது விதியில் திட்டவட்டமாக உள்ளது. உரிமை மீறல் உள்ளதாக அந்தச் செயல் மேலெழுந்தவாரியாக தோன்ற வேண்டும் என்ற கருத்து இருக்கிறது. உரிமை மீறல் என்ன என்பது தங்களுக்குத் தெரியும். அந்த உரிமை மீறலுக்கு சான்று இருக்குமானால் தாங்கள் அதற்குப் பின்னால் அதை எழுப்ப அனுமதிக்கலாம்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார் கள். 249 வது விதி உரிமைப் பிரச்சினை கொண்டு வருபவர் களுக்காக விதிக்கப்பட்டிருக்கிற விதி. 250 வது விதி பேரவைத் தலைவருக்காக விதிக்கப்பட்டிருக்கிற விதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாவலர் அவர்கள் 247 வது விதியையும் பார்த்தால் பரவாயில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 247 வது விதியில், 'ஓர் உறுப்பினர், பேரவைத் தலைவரின் இசைவுடன் ஓர் உறுப்பினருடைய அல்லது பேரவையினுடைய அல்லது பேர வைக் குழு ஒன்றினுடைய உரிமை மீறல் சம்பந்தப்பட்ட பிரச் சினை ஒன்றை எழுப்பலாம்' என்றிருக்கிறது.

249 வது விதிப்படி, கொண்டு வருகிறவர்கள் எதைக் கடைப் பிடிக்க வேண்டுமென்றால், 'உரிமைப் பிரச்சினை எழுப்பும் உரிமை பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டது.

உரிமை மீறல் உள்ளதாக கூறப் பெறும் செயல் மிக அண்மை யில் நடந்த பொருளைக் குறித்ததாக இருக்க வேண்டும்.

உரிமை மீறல் உள்ளதாக, அச்செயல் மேலெழுந்தவாரி யாகவே தோன்ற வேண்டும்.'

அப்படி உரிமைப் பிரச்சினையை கொண்டு வருகிறவர்களு டைய செயலுக்காக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை தாங்கள் படித்து காட்ட வேண்டும் பேர வைக்கு. அதற்குப் பிறகு தாங்கள் விளக்கம் பெற வேண்டுமென் றால் விளக்கம் பெற்ற பிறகு மேலெழுந்தவாரியாக உரிமை மீறப்பட்டதா இல்லையா என்று கவனிக்கலாம் என்றிருக்கிறது.

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 247 வது விதியைப் பார்க்கிறபோது 'ஓர் உறுப்பினர் பேரவைத் தலை வரின் இசைவுடன் ஓர் உறுப்பினருடைய அல்லது பேரவையி னுடைய அல்லது பேரவைக் குழு ஒன்றினுடைய உரிமை மீறல் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒன்றை எழுப்பலாம்.' என்றிருக் கிறது. இதில் பேரவையினுடைய உரிமை எப்போது மீறப் பட்டது? அல்லது பேரவை உறுப்பினருடைய உரிமை எப்போது தடுக்கப்பட்டது? அல்லது பேரவையில் உரிமைப் பிரச்சினை எழுவதாகக் கூறிப் பேரவையில் எழுப்பப்பட தீர்மானிக்கப்பட்ட எந்தக் கருத்து மீறப்பட்டது? ஏதாவது ஒரு அம்சத்திலாவது பேரவையில் ஏற்கனவே துவக்கப்பட்ட ஒரு கடமைக்கு குந்தகமான காரியத்தை யாரேனும் செய்திருக்கிறார் களா? அந்தப் பிரச்சினை சட்டமன்றத்திற்கு

உட்பட்டதாக இருந்திருக்குமானால் உரிமை மீறியதா என்ற பிரச்சினை பற்றி மீறியதா அல்லவா என்ற வாதம் எழுவது இயற்கை. இது சட்டமன்றத்தில் எழுப்பப்படாத, சட்டமன்றத்தில் தீர்மானிக்கப்படாத சட்டமன்றத்திற்குள் இதுவரை வராத ஒரு பிரச்சினையைப் பற்றி சட்டமன்றத்திற்குள்ளே, அந்தப் பிரச்சினைக்கான அறிக்கை வந்த தேதிக்கு முன்னால் நடைபெற்ற காரியங்கள் உரிமை மீறல் என்று சொல்லப்படுமானால் எந்த வகையில் சட்டமன்ற உரிமை பாதிக்கப்படுகிறது என்பதைத் தாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இதை மூன்று கட்டங்களாகப் பார்க்க வேண்டும். ஒன்று, உங்கள் அனுமதி பெறுவது, இரண்டாவதாக, ப்ரைமா பேசி இருக்கிறதா என்று முடிவு செய்வதற்கு விவாதிப்பது. மூன்றாவதாக குழுவிற்கு அனுப்புவது. இப்படி மூன்று கட்டங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். முதல் கட்டமாக நீங்கள் உங்கள் அனுமதியைக் கொடுத்து 247, 250 இன் கீழ் உங்களுக்குரிய அதிகாரத்தின் கீழ் எடுக்க அனுமதித்திருக்கிறீர்கள். இது முதல் கட்டம். அடுத்தாற்போல் ப்ரைமா பேசி இருக்கிறதா இல்லையா என்று விவாதித்து முடிவு செய்ய வேண்டும். விவாதத்திற்குப் பின்னால் உங்கள் முடிவு மூன்றாவது கட்டம். குழுவிற்குப் போவதா இல்லையா என்பது அடுத்த கட்டம். இது கன்ஸெண்ட் கொடுத்து எடுக்கப்பட்ட பிறகு கன்ஸெண்ட் கொடுத்தது முறையா தவறா என்று விவாதிப்பது தவறு. தாங்கள் அனுமதி கொடுத்து விட்டீர்கள்.

[முற்பகல் 11.10]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், இந்தப் பிரச்சினையை சபையிலே எழுப்புவதற்கு உறுப்பினர்களுக்கு எப்போது உரிமை வருகிறது என்றால், 249லே சொல்லியிருக்கின்ற இரண்டு கண்டிஷன்கள் புல்பில் பண்ண வேண்டும். (1) ரீசன்டாக நடந்த நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். (2) உரிமை மீறல் உள்ளதாக மேலெழுந்தவாரியாகத் தோன்ற வேண்டும். இந்த இரண்டு கண்டிஷன்களும் புல்பில் பண்ணினால்தான் உரிமை மீறல் பிரச்சினை ரெயிஸ் பண்ண உரிமை வருகிறது.

'Right to raise a question of privilege shall be subject to the following conditions' 'It must be a recent occurrence. There must be a prima facie case'. ஆக, இந்த இரண்டு கண்டிஷன்களும் புல்பில் பண்ணியிருக்க வேண்டும். தாங்கள் இதிலே பிரைமா பேசி இருக்கிறது என்று சொன்னதற்குப் பிறகுதான் இந்த உரிமை வருகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்வது சரியல்ல.





Section 249 is absolutely indeperdent of that Section250. காரணம், மன்ற உறுப்பினர்கள் பிரிவிலெஜ் மோஷன் எழுப்புகின்ற முறைகளை, நியதிகளைப் பற்றி 249 குறிப்பிடுகிறது. ஒரு உறுப்பினர் பிரைமா பேசி இருக்கிறதா, இல்லையா என்றெல்லாம் ஆய்ந்து, சட்ட நுணுக்கங்களை ஆய்ந்து, எழுப்புவதில்லை. பிரிவிலெஜ் மோஷன் எப்படி வருகிறது என்பதை அவர் கூறிய பிறகு, அதற்கான பதிலையும் கேட்டு, அவைத் தலைவர் அதைத் தீர்மானிக்க வேண்டும். பிரிவிலெஜ் மோஷன் ரெயிஸ் பண்ணுவதைப் பற்றி 247லே குறிப்பிடப்பட்டிருப்பது,

'Prima facie has to be decided strictly accoring to Section 250 and not to be read with Section 249'

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் சொல்வது தாங்கள் ஏற்கனவே பிரைமாஃபேசி இருப்பதாக கருதிய காரணத்தால் இந்த அவையில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சி. தாங்கள் ஏற்கனவே பிரைமாஃபேசி இருப்பதாக தங்கள் அறையிலே அதற்கான வேண்டுகோளை, அதற்கான அறிக்கையை படிக்கின்றபோது தாங்கள் தீர்மானிக்காவிட்டால், இந்த அவையில் எழுப்புகின்ற உரிமை யாருக்கும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ராஜ்ய சபாவில் இப்படி ஒரு பிரச்னை எழுந்துள்ளது. முன்னாள் நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்கு எதிராக உரிமைப்பிரச்சினை வந்தபோது, ராஜ்ய சபாவில் சேர்மன் இரண்டு சார்பிலும் உறுப்பினர்களைப் பேச அனுமதித்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டு, அதற்குப் பிறகு தன் தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். இந்த முறை ராஜ்ய சபாவில் ஒரு மரபாக கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் தான் நான் இப்போது இருதரப்பாரின் கருத்துக்களையும் கேட்டறிய அனுமதித்திருக்கிறேனே தவிர, வேறு அல்ல.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இரண்டு தரப்பிலும் கேட்டுக்கொண்டு முடிவு செய்யலாம் என்று குறிப்பிட்டீர்கள். அதற்கு உதவியாகத்தான் சொல்கிறேன். உரிமைப் பிரச்சினை என்ன என்பது பற்றி அந்த 6 உருப்பினர்களும் எழுதிய கடிதங்களும், தாங்கள் அவற்றை எனக்கு அனுப்பி, அவற்றுக்கான பதிலை 29 ஆம் தேதிக்குள் எழுதி அனுப்புங்கள் என்று சொல்லி, நானும் 29 ஆம் தேதிக்குள் அவற்றுக்கு பதில் அளித்து இருக்கிறேனே, அந்த பதிலும் இந்த அவையிலே வைக்கப்பட்டால், விவாதம் நடைபெறுகின்ற நேரத்தில் உறுப்பினர்களுக்கு அது பலன் அளிப்பதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட முக்கியமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு அதிகப்படியான அதிகாரம் விதி 255 இன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"Notwithstanding anything contained iu these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report.". என்றுகூட இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்........

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கனவே கேட்டுக்கொண்டபடி, இந்த 6 லெட்டர்களையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுதிய லெட்டரையும் இந்தச் சபை முன் வைக்க வேண்டும். சர்குலேட் பண்ண வேண்டும். பின்னர் அதைப்பற்றி யோசிக்கலாம் ; எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள்மீது உரிமைப் பிரச்சினை வருகின்ற போது, பத்திரிகை நிருபர்கள் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சட்ட மன்றத்தில் பதில் சொல்ல முடியாது என்ற காரணத்திற்காக, அவர்களுக்கு எழுதி விளக்கம் கேட்டு, அவர்களது விளக்கத்தை அவையில் படிப்பீர்கள்.

இங்கே உரிமைப் பிரச்சினையைக் கொடுத்துள்ள உறுப்பினர்களும் இருக்கிறார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இருக்கிறார்கள். இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கும் காரணத்தால் இந்தப் பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சொல்கிற அந்தக் கூற்றின் அடிப்படையில் பார்த்தால் ஏற்கனவே தாங்கள் பிரைமாஃபேசி இருப்பதாக முடிவு பண்ணியதாக ஆகிறது. அது உண்மைதானா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பிரைமா ஃபேசி இருக்கிறதா இல்லையா என்று முடிவு செய்ய, இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல கன்செண்ட் அளிக்கப்பட்டு விட்டது.

* திரு. க. அன்பழகன் : இந்த அவையினுடைய மேலான உரிமைகளைப் பற்றி எப்படியோ நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இந்த அவையின் உரிமை என்பது இந்த அவையிலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் தொடர்புடைய ஒன்று. எல்லா உறுப்பினர்களையும் ப துகாக்கும் மேலான இடத்தில் தாங்கள் இருக்கிறீர்கள். அடிப்படையாக உரிமை மீறல் என்று எழுப்பப்பட்ட பிரச்சினையின் முழு வடிவம் எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிந்திருக்கவேண்டும். அது ஒரு உரிமை. அது கூட ஒரு உரிமைப் பிரச்சினைதான். அந்த உரிமையைக்



காப்பாற்ற தங்களிடம் உரிமை மீறல் பற்றித் தரப்பட்டிருக்கிற ஆறு கடிதங்களையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் விளக்கக் கடிதத்தையும் அவையிலுள்ள எல்லா உறுப்பினர்களும் அறிந்து கொள்ள வாய்ப்பளித்தால் இந்த அவையின் உரிமையைப் பாதுகாக்க உறுதுணையாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : கடிதத்தில் பல குற்றச்சாட்டுகளைச் சொல்லலாம், விளக்கத்தைத் தரலாம். ஒருவர் எழுதிய கடிதத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இல்லை. பிரிவிலேஜ் மோஷன் ஒருவர் கொடுத்திருக்கிறார் என்றால் குறிப்பிட்ட போர்ஷனைமட்டுந்தான்படிக்க வேண்டுமென்று அனுமதிப்பதும் மரபாகும். ஆகவே, கடிதங்களை அப்படியே படிக்கவேண்டுமென்று சொல்லுவது சரியல்ல.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பிரைமா பேசி இருக்கிறதா என்பதை முடிவு செய்ய வேண்டிய முழு அதிகாரம் விதிகள் 250-லும்,255-லும் இருக்கின்றன ஆனால் பிரிவிலேஜ் மோஷன் எழுப்பியவர்கள் என்ன எழுப்பியிருக்கிறார்கள் என்பதை அவைக்குச் சொல்லிபிரைமா பேசி இருக்கிறதா 'the mode of taking a decision whether there is prima facie or not is purely left to the hon. Speaker அது எப்படி என்று இங்கு வரையறுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இரு சாரார்களின் கருத்துக்களையும் அவர்கள் கூறும் சட்ட நுணுக்கங்களையும் கேட்டு பிறகு பிரத்தியோகமாக சட்ட நுணுக்கங்கள், கன்வென்ஷன்ஸ் இண்டர்பிரட்டேஷன் ஆகியவற்றைப் பரிசீலித்து, பிரைமாஃபேசி இருக்கிறதா என்று பார்த்து பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்புவதா என்பது பற்றித்தாங்கள் முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறு பேர்களின் கடிதங்களையும் அவையில் வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆறு பேர்கள் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். நான் திரு. வி.பி. பாலசுப்பிரமணியத்தை மட்டும் பேச அனுமதி கொடுத்திருக்கிறேன். ஆகவே, அவருடைய கடிதத்தை முழுவதுமாகப் படித்துவிடுகிறேன். இந்தச் சபைக்கு அது தெரியவேண்டுமென்பதால் அதைப் படித்து விடுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தாங்கள் ஆறு கடிதங்கள் வந்திருக்கின்றன என்று சொல்லி ஒன்றை மாத்திரம் அவையில் எழுப்ப அனுமதித்திருக்கிறீர்கள். ஆனால் இந்த உரிமைப் பிரச்சினை பற்றி ஆறு கதடிங்களை எனக்கு அனுப்பி 'உங்களுடைய பதில் என்ன' என்று 29-ஆம் தேதிக்குள் அனுப்புங்கள்' என்று ஆணையிட்டீர்களோ அல்லது கேட்டுக் கொண்டீர்களோ—எனக்குத் தெரியாது, ஆனால் இந்த அவையின் தலைவரை மதிக்கின்ற மரியாதை மனப்பான்மையோடு உடனடியாக விளக்கம் எழுதினேன். அந்த ஆறு கடிதங்களுக்கும் உரிய

விளக்கம் என்னுடைய கடிதத்திலே இருக்கிறது. இப்போது ஒரு கடிதத்தை மட்டும் படித்தால் என்னுடைய கடிதத்திற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

ஆறு கடிதங்களும் இங்கே படிக்கப்படட்டும். அதற்குப் பிறகு என்னுடைய கடிதத்தை நான் இங்கே படிக்கிறேன். பிறகு அவை எந்த முடிவுக்கு வருகிறதோ வரட்டும்.

[முற்பகல் 11.20]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தங்களுக்குக் கடிதம் எழுதுகிற உறுப்பினர் எதை வேண்டுமானாலும் எழுதலாம் (குறுக்கீடு) அதிலே குற்றச்சாட்டுகள் இருக்கலாம், குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கலாம், ஆதாரம் இல்லாமல் இருக்கலாம். எனவே அதையெல்லாம் அப்படியே கடிதங்களாக இருந்தாலும் பதிலாக இருந்தாலும் மன்றத்திலே படிக்க வேண்டுமென்று எந்த விதியில் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆறு பேர்கள் எழுதிய கடிதங்களும் அவருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளிலே எல்லாவற்றையும் எழுதவில்லை, ஒரு பிரச்சினை பற்றித்தான் எழுதியிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிற 6 பேர்களும் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு தாங்களே படித்துக் காட்ட வேண்டும். விதி தெளிவாக இருக்கிறது.

" When a Member has with the consent of the Speaker raised House a matter of privilege, the Speaker shall read the matter to the and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein "

It is purely left to the Speaker's discretioned. என்று தாங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு விளக்கம் கேட்டு; அந்த விளக்கம் தங்களுக்குத் தரப்பட்டு அந்த விளக்கத்தையும் இங்கே படிக்கவேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது என்பதை அதை எழுப்பியிருக்கிற உறுப்பினர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் கூட படிக்க வேண்டியதில்லை. நீங்கள் படித்துக் காட்டலாம். நீங்கள் படித்துக் காட்டிய பிறகு அதிலே பிரைமா பேஸி இருக்கிறதா என்பதை முடிவு செய்யலாம். எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்பது கூட 250-இல்—உரிமை பாதிக்கப்பட்டது என்பதாக—சொல்லப்பட்டவருக்கு வாய்ப்புத்தர வேண்டும் என்பதுகூட இல்லை. உரிமைப் பிரச்சினையை யார் எழுப்பியிருக்கிறார்களோ அவர்கள் என்ன எழுப்பியிருக்கிறார்கள் என்பதை தாங்கள் அவைக்குப் படித்துக் காட்டிய பிறகு பிரைமா





பேஸி இருக்கிறதா என்பதை டிசைட் பண்ணுவதற்கு எந்த வழி வகையை வேண்டுமானாலும் தாங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

' It is purely left to your discretion '

பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் முடிவு செய்து உரிமைக் குழுவிற்கு அனுப்புவதோ இல்லையோ அதை தாங்கள் முடிவு செய்யவேண்டும். ஆனால் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புத் தரவேண்டும் என்பதுகூட இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தாங்கள்தான் அவைகளைப் படிக்கவேண்டுமே தவிர உறுப்பினர்கள் எழுதியதை அவர்களே படிக்கவேண்டுமென்ற முறை இந்த அவையிலே இதற்கு முன்னாலே இருந்தது கிடையாது.

***திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, நான் ஒரு தீர்ப்பினை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அவையிலே 9—5—1962 அன்று உறுப்பினராக இருந்த திரு. தென்னட்டி விஸ்வநாதம் ஒரு பிரச்சினையைபற்றி ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். அப்போது இங்கே சபாநாயகராக வீற்றிருந்த மதிப்பிற்குரிய திரு. சிவ சண்முகம் பிள்ளை பின்வரும் தீர்ப்பினைக் கொடுத்திருக்கிறார்கள்

' The House would remember that the hon. Member, Mr. Viswanatham has given notice of a motion on breach of privilege. I am going to explain the House the procedure that is to be followed regarding this; for, as there are many new mebers, I think it would be advisable on my part to explain the procedure to be followed in regard to these motions :

" The question of breach of privilege should be raised ' at the earliest ' opportunity and it is given precedence over the prearranged programme of public business. As far as the Speaker is concerned, he cannot decide the question of breach of privilege but he will have to say whether there is a *prima facie* case or not. As soon as the Speaker says that it is a *prima facie* case, either the Leader of the House or any other Member can move that the matter be referred to a Committee of Privileges. The House then debates on this Motion. In the Debate, the Members should not go into the merits of the case. On 30th June 1938, the Speaker of the House of Commons gave a ruling and it has become classical and is quoted in all the Legislatures of the World. For the benefit of the Members of this House, I shall repeat it here. The Speaker said .................

' It would not be in order (while debating) to deal with the merits of the case or to dcriticise the action of the various

persons concerned as that would be anticipating the work of the Committee which it was proposed to set up.'

If the House accepts the Motion, the matter is referred to the Committee of Privileges."

இவ்வாறு அன்றைக்குச் சபாநாயகராக இருந்தவர் தெளிவாக தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, பிரைமாபேசி கேஸ் இருக்கிறது என்று நீங்கள் திட்டவட்டமாக அறிவித்துவிட்ட பிறகுதான் இதைப்பற்றியவிவாதமோ பேச்சுக்களோ இந்த அவையிலே தொடரப்பட வேண்டுமென்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை உங்கள் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

• இன்னொன்று. 'Practice and Procedure of Parliament by M. N. Kaul and S. L. Shakdher' அவர்கள் எழுதி உள்ள நூலிலே அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்

'A member can ordinarily quote from a document that is treated by Government as secret or confidential, and which the Government have not disclosed in public interest. There is a possibility for such a document to be obtained through leakage or stealth or in an irregular manner, and there is no compulsion on the member to disclose the source from which a copy thereof has been obtained by him.'

என்று அதிலேயும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று சில உரிமைகள் உண்டு. முன்னால் பேசிய மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, பாராளுமன்றத்திலே ஆளுங்கட்சியிலே இருந்த பெரோஸ்காந்தி இரகசிய அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் அந்த உரிமை உண்டு; எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அந்த உரிமை உண்டு. அரசாங்க அறிக்கைகள், இரகசியம் என்று வைக்கப்பட்டிருந்தாலும் அதையும் அறிந்து பொது மக்களின் நலன் கருதி வெளியிடுவது சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமையாகும். இது உரிமை மீறிய பிரச்சினையாக வராது என்பதை இதற்கு முன்னால் பல்வேறு சான்றுகள் விளக்கியிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** A Member cannot go into the merits of the case. He is going into the merits of the case which goes contra to the judgment which the Hon. Speaker has already read. The Hon. Speaker may kindly take note of it. அவர்கள் தீர்ப்பை வெளியிட்டுவிட்டு மெரிட்டைப் பற்றிப் பேசக்கூடாது என்ற தீர்ப்பையும் வெளியிட்டதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள்.





**திரு க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, எங்களைப் போன்ற உறுப்பினர்கள் விவரங்களை முழுவதும் அறியாமல் m i s [illegible] -ஐ விவாதிக்க முடியாது. அது சபாநாயகர் அவர்கள் தீர்மானிக்க விளக்கப்பட வேண்டிய ஒன்று. சபாநாயகரவர்கள் மெரிட்டைப்பற்றிய அடிப்படைப் பிரச்னையைப்பற்றி ஆழ்ந்து பார்த்தால் பிரைமா பேசி இருந்தால் விளக்கங்கள் கொடுக்கச் சொல்ல முடியும். சபாநாயகரின் பொறுப்பு அவ்வளவு மேலான பொறுப்பு— அதைத்தான் சட்ட அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவனப்படுத்தியதற்காக எல்லோருக்கும் நன்றி. ஆறு பேர்கள் ஒரு உரிமைப்பிரச்சினை குறித்து எதிர்க்கட்சித் தலைவர்மீது கொடுத்திருக்கிறார்கள். திரு. பாலசுப்பிரமணியன் அவர்களைப் பேசுவதற்கு நான் அனுமதித்திருக்கிறேன். திரு. பாலசுப்பிரமணியன் அவர்களின் கடிதத்தை மட்டும் எடுத்துக்கொள்வதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மன்றமும் கருதிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. பாலசுப்பிரமணியன் அவர்களின் கடிதத்தை நான் படித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஆறு பேர்களில் ஒருவரைத் தான் பேசுவதற்கு நான் அனுமதித்திருக்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவரவர்களே, ஆறு பேர்கள் கொடுத்த நோட்டீசை எனக்கு அனுப்ப வேண்டிய காரணம் என்ன? ஆறுபேர்களின் நோட்டீஸ்களுக்கும் நான் பதில் எழுதியிருக்கிறேன். ஆறு பேர்கள் கொடுத்த நோட்டீஸ்களில் மூன்று அல்லது நான்கு நோட்டீஸ்களில் அவை உரிமை மீறல் இருக்கிறது. அதையும் வைத்துக்கொண்டு எனக்கு அதை நீங்கள் அனுப்பியிருக்கிறீர்கள்.

***டாக்டர் கே. சமரசம் :** விதிகளில் தெளிவாக இருக்கும் பொழுது........

***மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னை எழுப்புவதைப்பற்றி நம் பேரவை விதிகளில் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். உரிமைப் பிரச்னை எழுப்பும்பொழுது அதை எழுப்பும் உறுப்பினர்கள் தங்களிடத்தில் அந்தப் பிரச்னையைக் கடிதம் மூலமாகத் தருகிறார்கள்.

[முற்பகல் 11-30]

அவர் எந்தப் பிரச்னை வேண்டுமானாலும் தரலாம். அதை ஏற்றுக் கொள்வதா, கூடாதா என்று அறையிலேயே தாங்கள் தீர்மானிக்க வேண்டியுள்ளது. அப்படி தாங்கள் தீர்மானிக்கிறபொழுது, விதி 249-ன்படி அந்த இரண்டையும் பார்க்கிறீக்

கள். அண்மையில் நடந்த சம்பவமா என்பது ஒன்று. இன்னொன்று, மேலெழுந்த வாரியாக உரிமை மீறல் இருக்கிறதா என்பது. தாங்கள் மேலெழுந்தவாரியாக உரிமை மீறியிருக்கின்றார்கள் என்று முடிவெடுப்பது இல்லை. ஆனால், மேலெழுந்தவாரியாக உரிமை மீறலே இல்லை என்கிறபொழுது அதை வைத்து நிராகரித்து விடுகிறீர்கள. மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தக் கடிதத்தைத் தந்தாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்பதற்காக தரப்பட்டிருக்கிற அதிகாரம் 249-வது விதி. மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்கிற ஐயம் எழுகிறபொழுதுதான் இசைவு தருகிறீர்கள். 'கன்சென்ட்' மட்டும் தருகிறீர்கள், அ : விதி 247. உ. கள் அறையிலே வந்த பிறகு, மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருக்கிறதா, இல்லையா என்கிற ஐயம் எழுகிறபொழுது, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால் இசைவு தருகிறீர்கள். இசைவு தந்தவுடன் அந்தத் தீர்மானததைக் கொடுத்த உறுப்பினர் இந்தப் பேரவையிலே எழுப்புகிறார். அதை எழுப்புவதற்கு முன்பாக, அவர் என்ன கொடுத்திருக்கிறாரோ, அதைத் தாங்கள் படிக்க வேண்டும். அதுதான் 250-வது விதி. யாரை நீங்கள் இங்கே எழுப்ப அனுமதிக்கிறீர்களோ, அவர் கொடுத்ததை நீங்கள் படிக்கிறீர்கள். அது சம்பந்தமாக முடிவெடுக்க வேண்டியது தாங்களாக இருக்கிற காரணத்தால், நீங்கள் யாரிடத்தில் எந்தத் தகவல் வேண்டுமானாலும் பெறலாம். அதற்கு ஏதாவது 'பிரிசிடென்ட்ஸ்', முன் முடிவுகள் ஏதாவது இருந்தால் அதையும் தாங்கள் வைத்துக்கொள்ளலாம். அவையெல்லாம் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் ஏற்பட்டிருக்கிறதா, இல்லையா என்று பார்ப்பதற்காகத் தாங்கள் சேகரித்திருக்கிற தகவல்கள். அதனாலேதான் நம்முடைய சட்ட அமைச்சர் சொல்கிறபொழுதுகூடச் சொன்னார், அதைப்பற்றி முடிவெடுக்க வேண்டிய உரிமை தங்களுக்கிறது என்று. 'பிரைம ஃபாஸியை ஹவுசிலே முடிவெடுக்க வேண்டுமென்பது அல்ல. ஆகையினாலே எந்த உறுப்பினரைத் தாங்கள் எழுப்பச் சொல்லியிருக்கிறீர்களோ, அவரை நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். அதைத் தாங்களே படிப்பது முறை.

அதேபோல், தாங்கள் எதிர்கட்சித் தலைவரிடத்திலேயோ, இன்னும் பழைய தீர்ப்புகளிலோ உள்ளவற்றை, விவரங்களை எடுத்துக் கொண்டு, மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்று தீர்ப்பு சொல்வதற்குப் பயன்படுத்துவதற்கு தான் விதிகளிலே இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன்னபடி, 6 பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். 6 பேர்கள் கொடுத்திருப்பதில் ஒன்றை எடுத்துக் கொள்கிறேன். 5 தவிர்க்கப்பட்டிருக்கின்றன (குறுக்கீடு) தள்ளியாயிற்று. ஏனென்றால், முறைப்படுத்துகிற உரிமை, 312-வது விதிப்படி சபாநாயகருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஐந்திலே இல்லாதது, ஆறாவதிலே எப்படி வருகிறது சார் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை யாவும் ஒரு பொருள் குறித்தே இருப்பதனால் அவற்றில் நான் ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டேன். திரு. பாலசுப்பிரமணியம் கொடுத்துள்ள கடிதம் என்ன என்பதை வாசித்து விடுகிறேன்.

திரு. துரை முருகன் : நீங்கள், எதிர்க்கட்சித் தலைவருக்கு, ஐந்தோ, ஆறோ அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால், ஐந்தை ரிஜெக்ட் செய்திருக்கிறீர்கள். ஆனால், அவர் எழுதிய பதில் இந்த எல்லாவற்றுக்கும் தொகுத்து ஒரு பதிலாகத்தான் எழுதினேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, அவர் எழுதிய பதில் இதற்கு, இதற்கு என்று எழுதப்படவில்லை. ஆகவே, எந்த ஒன்றை எடுத்திருக்கிறீர்களோ, அதற்கும் சேர்த்துத்தான் அவர் பதில் எழுதியிருக்கிறார். எனவே, அவர் பதில், அதற்கு நோட்டீஸ் கொடுக்கும்போது (குறுக்கீடு) இதிலே ஒன்றும் சீக்ரெட் கிடையாது. ஏனென்றால், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் சொல்லியதுபோல், எதை வேண்டுமானாலும் தங்களிடத்திலே கொடுத்துவிட முடியாது. இது க்ஷேமலாபம் பற்றி எழுதுவது அல்ல. இது சபாநாயகருக்குக் கொடுப்பது. இந்தச் சட்டத்தின்படி, இந்த விதியின்படி என்று போட்டு, நோட்டீஸ் கொடுக்கிறேன். அதிலே இந்த கன்டென்ஷன் இருக்க வேண்டும். அதிலே வேறுவிதமான அலிகேஷன்ஸ் இருக்கக்கூடாது. எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. இது மாதிரியாக இருப்பதாலே, இவைகள் 6 கேஸ்களையும் சேர்த்துத்தான் அவர் பதில் அளித்திருக்கிறார். எனவே அதிலே பின்னிப் பிணைந்து இருக்கிற காரணத்தால், ஒன்றை மட்டும் எடுத்தால்கூட, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்த பதிலையும் படித்துவிடுங்கள். நீங்கள் முதலில் ஒன்றைச் சொல்ல வேண்டும். இதில் பிரைமா ஃபாஸி இருக்கிறது என்று என் மனசாட்சி ஒத்துக்கொள்கிறது, என்று. ஆகவே, இரண்டையும் படிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் படித்துவிடுகிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவருக்கு வேலையும் குறைகிறது அல்லவா ? 6 பேருக்குப் பதில் சொல்லாமல், ஒருவருக்கு மட்டும் சொன்னால் போதும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அ : களே, அவர்கள் கொடுத்த நோட்டிசிலே பிரைமாபேசி இருக்கிறது என்றால் எந்த சட்டத்திலே எங்களுக்கு பதில் எழுதச் சொன்னீர்கள். மாண்புமிகு

[திரு. துரைமுருகன்] [1982 பிப்ரவரி 6

தொழில் அமைச்சர் அவர்கள் பத்திரிக்கைக்காரர்கள் சபைக்கு வந்து பதில் சொல்ல முடியாது என்றார். ஆனால் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் சபைக்கு வரலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அவையின் உரிமை மீறல் பிரச்சினைப் பற்றி உறுப்பினர் ஒருவர் ஒரு பிரச்சினையை எழுப்பித் தங்களிடத்திலே அளிக்கும்போது அதை ஏற்றுக்கொள்ளவோ, தள்ளவோ கன்சன்ட் கொடுக்காமல் மறுக்கவோ தங்களுக்கு முழு உரிமை இருக்கிறது. எத்தனையோ அவை உரிமை மீறல் பிரச்சினைகளைக் கொண்டு வருகிறபோது, அவைக்குக் கொண்டு வராமல் தள்ளிவிடுவதற்கு தங்களுக்கு உரிமை உண்டு. அதற்கு முன்னால் விளக்கங்கள் பல கேட்பதற்கும் தங்களுக்கு உரிமை இருக்கிறது. விளக்கங்கள் கேட்டதற்குப் பிறகும் அந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வராமலேயே நிறுத்தி விடுவதற்கும் உரிமை இருக்கிறது (குறுக்கீடு) சட்டத்திலே இல்லை. அது பேரவைத் தலைவருடைய பொறுப்பு. 6 அவை உரிமை மீறல் பிரச்சினைகள் மட்டுமல்ல, 60 வந்தாலும் அவைகளைத் தள்ளிவிடும் முழுப் பொறுப்பும் உங்களுக்கு உண்டு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் எடுத்துக் கொள்வதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு. தாங்கள் தெளிவாக சொல்லியிருக்கிறீர்கள். 6-லே 5-ஐத் தள்ளிவிட்டேன் ஒன்றை எடுத்துக் கொண்டு விட்டேன் என்று. அதைத் தாங்கள் படித்துக் காட்ட வேண்டும். படித்துக் காட்டவேண்டும் என்பது, உரிமை மீறல் பிரச்சனையைப் பொறுத்தவரையில், எழுதிக் கொடுத்திருக்கின்ற பிரச்சினையை மட்டும் படிக்கவேண்டும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருப்பதன் காரணமாக, அதைப் பொறுத்து அவர்கள் சொல்லவேண்டிய முழு விளக்கத்தையும் சொல்ல அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களும் விளக்கம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அதை எல்லாம் கேட்டதற்குப் பிறகு அதிலே உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா, என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்யவேண்டிய பொறுப்பு தலைவராக இருக்கிற தங்களிடத்தில் இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்குக் குறுக்கே நான் வரவில்லை. ஆனால் எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு சந்தேகம். தங்களிடம் 6 பேர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் உரிமை மீறல் பிரச்சினை என்று. 6 பேர்களுடைய நோட்டீசையும் எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறீர்கள். அதில் ஒரே கடிதத்தில் 6 பேர்களுக்கும் சேர்த்து ஒரு பதிலை அவர் கொடுத்திருக்கிறார்கள். இப்போது 5 பேர்களுடைய நோட்டீசையும் தள்ளிவிட்டு ஒருவருடைய நோட்டீசை மட்டும் படிக்கச்சொல்வீர்களேயானால் எதிர்கட்சித் தலைவர் அவர்களின் பதில் 6 பேர்களுக்கும் சேர்த்து வருகிற நேரத்தில், மற்றவர்கள் கேட்பதற்கும், சரி, பத்திரிக்கையிலே செய்தி வருகிறபோதும் சரி குழப்பமாக இருக்காதா? இதிலே



1982 பிப்ரவரி 6] [திரு. நா. சுந்தரராஜ்]

தாங்கள் செய்திருக்க வேண்டிய காரியம், 6 பேர்கள் கொடுத்த நோட்டீசில் 5 பேர்களுடையதை தள்ளிவிட்டு ஒருவருடைய நோட்டீசை மட்டும் எதிர்கட்சித் தலைவருக்கு அனுப்பி இருப்பீர்களேயானால் அதற்கு முழுமையான பதில் உங்களுக்குக் கிடைத்திருக்கக் கூடும். (கூச்சல் குழப்பம்). ஆனால் 6 பேர்களுடைய நோட்டீசையும் அவருக்கு அனுப்பிவிட்டு, எதிர்கட்சித் தலைவர் 6 பேருக்கும் சேர்த்து பதில் சொல்லிவிட்டு, அவர் பதில் சொல்லக் கூடிய நேரத்தில் பல்வேறு வகையான சந்தேகங்கள் வரும். இவர் என்ன முன்னுக்குப் பின் முரணாக பதில் சொல்கிறார் என்று எங்களைப் போன்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டாம். முழுமையான 6 பேர்கள் கடிதத்தையும் வைத்து, எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய கடிதத்தையும் வைப்பீர்களேயானால், அதுதான் பொருத்தமாக இருக்கும் என்று எங்களுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இதுபற்றி நிறைய பேசியிருக்கிறோம். 6 பேர்கள் உரிமை மீறல் பிரச்சினை பற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அனைத்தும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். ஆகவே நான் ஒன்றை மட்டும் எடுத்து வரை முறைப்படுத்தி. திரு. பாலசுப்பிரமணியம் கொடுத்ததை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11·40)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, சட்டசபையின் விதிகளின் அடிப்படையிலேயே முரண்பாடுகள் வருகின்றன என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கப் பட்டது கடிதம் அல்ல, நோட்டீஸ், அந்த 6 நோட்டீசையும் முறைப்படி அவர்களுக்கு அனுப்பி வைத்து, 6 நோட்டீசுக்கும் விளக்கம் கேட்டு இருக்கிறீர்கள். இதிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுதிய பதில் ஆறு நோட்டீசுகளுக்கும் தான். ஆகவே, ஒரு நோட்டீசு மட்டும் இங்கே அனுமதிக்கப்பட்டு, அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய பதில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சொன்னால், உங்களிடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்து இருக்கும் விளக்கம் இருக்கிறது அல்லவா— அந்தவிளக்கம் அந்த ஒரு நோட்டீசுக்கு மட்டும் உட்படாது, அந்த ஆறு நோட்டீசுக்கும் மொத்தமாக அளிக்கப்பட்டுள்ள விளக்கமாக இருப்பதால்—அது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். 6 நோட்டீசுகளுக்கும் பதில் அளிப்பது என்பதை விட ஒரு நோட்டீசுக்குப் பதில் அளிப்பது என்பது சுலபமாக இருக்கும். ஆகவே, பதில் அளிக்க அவருக்குச் சந்தர்ப்பம் கொடுக்கின்றபோது, அதை விளக்கிச் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : அப்படியென்றால், விளக்கம் கேட்டபோதே ஒரு நோட்டீசுக்கு பதில் கேட்கப்பட்டு இருக்க வேண்டும். இப்போது கொடுக்கப்பட்டு இருக்கும் பதில் 1 நோட்டீசுக்கு மட்டுமல்ல ; ஆறு நோட்டீசுகளுக்கும் சேர்த்து இருக்கிறது என்பதால், 5 நோட்டீசுக்குத் தேவையில்லாத பதில் அதிலே இருக்கும். ஒரு நோட்டீசுக்குத்தான் பதில் தேவை என்றால், 5 நோட்டீசுக்குத் தேவையில்லாத பதில் அதிலே இருப்பது கூடாது. ஆகவே, 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் இங்கே உட்கார்ந்து இருக்கின்ற காரணத்தால், அவர் அதைப் பற்றி இங்கே பேசலாம். அதற்கு விளக்கம் அளிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் அளித்துக்கொண்டு இருக்க வேண்டாம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னை அறிவிப்புக் கொடுத்துள்ள ஆறு உறுப்பினர்களின் பெயர்களை தாங்கள் இங்கே அறிவித்தீர்கள். ஆறு பேரும் நோட்டீஸ் கொடுத்து இருக்கிறார்கள் என்று அறிவிப்பு செய்தீர்கள். அது எதைப் பற்றிய நோட்டீஸ் என்று மாண்புமிகு உறுபினர்கள் கேட்ட பின்னாலே. பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்டது சம்பந்தமாக என்று தாங்கள் இங்கே எடுத்துச் சொன்னீர்கள். அந்த 6 உறுப்பினர்களின் பெயரையும் அறிவித்து விட்டு இருப்பதால், அந்த 6 பேர் கொடுத்த நோட்டீசுகளையும் நான் அதற்கு பதில் அளித்த விளக்கக் கடிதத்தையும் இந்த அவைக்குத் தெரிவித்தால் தான் அது பற்றி விவாதிக்க நலமாக இருக்கும் என்பதை நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துகொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 6 பேர்கள் கொடுத்த நோட்டீசுகளுக்கும் விளக்கங்கள் தந்து இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். விளக்கங்கள் கேட்பது என்பதைப் பொறுத்தவரைக்கும் விதிகளில் இடம் இருக்கிறது. This is for the subjective satisfaction of the Hon. Speaker alone.

நீங்கள் அந்த விளக்கங்களைப் பெற்று இருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 6 நோட்டீசுகளுக்கும் ஒன்றாக விளக்கம் தந்து இருப்பதால், ஒன்றாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். நோட்டீசுகள் தனித்தனியாக கொடுத்து இருப்பதால், விளக்கங்களும் தனித்தனியாகத்தான் கொடுத்து இருக்க வேண்டும், எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அந்த விளக்கங்களைப் பெறுவதற்கு விதிகளில் இடம் இருக்கிறது. The Speaker should get satisfied as to the pirvilege motion and as to the reply given.





இரண்டையும் சேர்த்து நீங்கள் ஒரு முடிவுக்கு வருவதற்குத்தான் அந்த விளக்கத்தைப் பெறுகிறீர்கள். விளக்கம பெற்ற பிறகு நீங்கள் ஒன்றை ஏற்றுக்கொண்டு, மீதமுள்ள 5 நோட்டீசையும நிராகரிககிறீர்கள். அது பேரவைத் தலைவருக்கு இருக்கும்உரிமை அதன் பிறகு, அவையில் விதி 250-ன் கீழ் பிரச்னை எழுகிறபோது மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பொறுத்தவரைகும் எந்த ஒரு உறுப்பினர் பிரிவிலேஜ் மோஷன் எழுதுக்கொடுதது இருக்கிறாரோ, அந்தப் பிரச்னை குறித்து அவர் எழுதுக்கொடுத்ததைப் பேரவைத் தலைவர் அவையில் படிக்கவேண்டும். படித்த பிறகு பிரைமாபேசி இருக்கிறதா இல்லையா என்கிற முறையில் நீங்கள் எந்த முடிவை மேற்கொண்டாலும் அதை அவைக்குத் தெரிவிக்க வேண்டும். ஒரு உறுப்பினர் எழுதிய பிரச்னையை படித்த விட்ட பிறகு, எதுர்க்கட்சித் தலைவர் கொடுத்த விளக்கத்தையும் படிகக வேண்டும் என்று விது 250-ல் சொல்லப்படவில்லை.

"When a member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House"—not the reply received from the Opposition Leader.

என்பதை நான் தங்களிடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் பேச்சைக் கேட்டு நான் வியப்பு அடைகிறேன் 6 பேர் தனித்தனியாக நோட்டீசு கொடுத்து இருப்பதால், தனித் தனியாக விளக்கம் அளித்து இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். 6 பேரும் எனக்கு அதை அனுப்ப வில்லை. தவறிப்போய் உங்களுக்கு அனுப்பி விட்டார்கள். எனவே தான் ஆறையும் தொகுத்து எனக்கு அனுப்பினீர்கள். ஆறு நோட்டீசுகளும் தொகுத்து அனுப்பட்ட காரணத்தால், நானும் ஒரு தொகுப்பான விளக்கத்தை உங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். எனவே, அந்த ஆறு கடிதங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த 5 கடிதங்களையும் வெளியிடுவதற்கு ஏன் இவ்வளவு அச்சம் என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிடுவதற்கு ஒன்றும் அச்சமில்லை, பொதுவான பிரச்னை, ஆகவே, ஒன்றை எடுத்தால் போதும் என்று எண்ணினேன், ஆறையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது அல்ல என்னுடைய நோக்கம்.

திரு. துரைமுருகன் : அப்படியானால், ஆறையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது கூட 4, 5 பேர்கள் தீர்மானம் கொடுக்கிறார்கள் என்றால், ஒரே பொருள் பற்றி இருப்பதால் கட்சிக்கு ஒருவர் எடுத்துச் சொல்ல அனுமதிக்கிறேன். அதுதான் நடைமுறையில் இருக்கிறது.

[1982 பிப்ரவரி 6

**திரு. துரைமுருகன்:** ஒத்திவைப்புத் தீர்மானம் வேறு, இது வேறு. இந்தப் பிரச்சினையிலே ஒருவருக்கு அனுமதி அளிப்பதாக இருந்தால் மற்றவர்கள் பெயர்களை நீங்கள் சொல்லியிருக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 பேர்கள் தீர்மானம் கொடுத்தால் அந்த 10 பேர்களுடைய பெயர்களையும் சொல்லி விட்டு, அவர்களில் ஒருவரை பேச அனுமதிப்பதுதான் வழக்கம்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 6 பேர்கள் அல்ல, 7, 8 பேர்கள் கொடுத்திருந்தாலும் ஒருவர். பெயரை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கலாம். அது வேறு பிரச்சினை. ஆனால் 6 பேர்களுடைய நோட்டீசுக்கும் விளக்கம் கேட்டு, பதில் வாங்கியிருக்கிறீர்கள். அதுதான் இங்கே பிரச்சினை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல உங்களுக்கு வந்த கடிதங்களை நீங்கள் பெற்று, அதிலே பிரைமா பேசி இருக்கிறதா என்று பார்க்க அனுமதி தரவேண்டும். அந்த அனுமதியைக் கொடுப்பதற்கு முன் நீங்கள் ஏற்கெனவே சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்கள். நீங்கள் ஒரு முடிவுக்கு வருவதற்காக சில விவரங்களைப் பெற எடுத்த நடவடிக்கைகள் அவை. அதை வைத்து நீங்கள் ஒரு முடிவுக்கு வரலாம். அது அல்லாமல் யார், யார எழுதிய கடிதங்கள், என்ன பதில் என்று விளக்க வேண்டிய தேவையில்லை. ஒரே மாதிரியான சப்ஜெக்டாக இருப்பதால் அவர்களில் ஒருவரை அனுமதித்தால் போதும். அந்த பதில் நீங்கள் 'கன்செண்ட்' கொடுப்பதற்கு மேற்கொண்ட முயற்சி. 'கன்செண்ட்' கொடுப்பதற்காக வந்த கடிதங்களையும் பதிலையும் நீங்கள் படித்துப் பார்த்து, இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம் என்று திருப்தி அடைந்திருக்கிறீர்கள். அதனால் எடுத்துக் கொண்டீர்கள். ஆகவே, கடிதம் எழுதியவர்களில் ஒருவருக்கு நீங்கள் அனுமதி அளிக்கலாம். எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம் சொல்லலாம். இதில் வேறு பிரச்சினை ஒன்றும் இல்லை.

**Dr. K. SOWRIRAJAN:** Hon. Speaker, it is obvious that you are still in doubt wheher p ima - facie case cr not because you have not decided, you have brought it before the House. It is absolutely necessary that you snould hea. both the people who have raised the issue on the one side and those who have given the explanation on the other. Still, you are perfectly alright ti decide whether to allow it or not.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆறு நோட்டீஸ் என்று சொல்லும்போது இந்த அவையிலே உள்ள் பெரும்பாலான உறுப்பினர்களுக்கு அவைகளிலுள்ள விவர்ங்கள



1982 பிப்ரவரி 6] [திரு. க. அன்பழகன்]

தெரியாது. அந்த ஆறு பேர்களின் பெயர்களையும் இந்த அவையிலே சொல்லிவிட்ட காரணத்தால் அவர்கள் எந்த விதமான குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள் என்பதை அறிந்துகொள்கிற அவசியம் இந்த அவை உறுப்பினர்களுக்கு ஏற்படுகிறது. நான் உட்பட அந்த 6 நோட்டீஸ்களில் காணப்பட்ட விவரங்கள் ஒன்றுக்கொன்று ஒரே விதமான கருத்தாக இருக்கும் என்று எண்ணவியலாது.

It is not me e duplica ion of one no.ice by all other persons.

ஆகவே அவரவர்களும் வெவ்வேறு காரணங்களை எழுதித் தந்திருக்கலாம். அப்படி எழுதப்பட்ட நோட்டீஸ் அனைத்தும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்ட காரணத்தால், அவர்கள் தந்த விளக்கங்களில் பொதுவான பல கருத்துக்கள் இடம் பெற்றிருக்கக் கூடும். ஆனால் ஒரு நோட்டீசினுடைய கருத்து இன்னொரு நோட்டீசை மறுப்பதாக இருக்கக்கூடும். அடிப்படை ஆதாரம் அற்றதாக இருக்கக்கூடும். எனவே அந்த ஆறு நோட்டீஸ்களையும் அவைக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை தங்களுக்கு ஏன் ஏற்படுகிறது என்றால் ஆறு பேர்களுடைய பெயர்களையும் சொன்னீர்கள். அதில் பொதுவாக ஒன்றை, எடுத்துக் கொள்கிறேன் என்றும் சொன்னீர்கள்; பொதுவாக ஒன்றை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லும்போது 'தி சாய்ஸ்'— நீங்களாக இது என்று தீர்மானிக்கிறீர்கள்; நீங்களாக இன்னின்னது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தீமானிக்கிறீர்கள். ஆனால் ஏற்கனவே அறிவித்துவிட்ட காரணத்தால் ஒன்றுக்கொன்று மாறுபட்ட, வேறுபட்ட—ஒரே நோக்கத்தில், பேசப்பட்டாலும் கூட—அடிப்படையிலே சான்றுகள் வேறுபடுகின்ற நோட்டீஸ் அவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்தால்தான் இதிலே இருக்கிற முரண்பாடுகளைத் தெரிந்து கொண்டு இந்த உரிமைப் பிரச்சினை எழுவதே, உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்ப வேண்டுமென்ற நோக்கத்திற்காக வந்திருக்கிறதே தவிர, அடிப்படை இல்லாதது என்ற உண்மையை இந்த அவை உறுப்பினர்கள உணர முடியும். ஆகவே தாங்கள் அவை உறுப்பினர் களை

They should not be allowed to be ignorant as to what has reached he Speaker

சபாநாயகர் அவர்களிடத்திலே வந்து சேர்ந்த அடிப்படையான குற்றச்சாட்டுக்கள் எப்படிப்பட்டவை என்பதை இந்த அவை அறியாமல் இருக்க முடியாது. இந்த அவைக்கு தாங்கள் அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள, நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-50]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நான் சொன்னபடி என்ன உரிமை மீறல் இருக்கின்றது என்பதை அறிவதற்காக உறுப்பினருக்கு அனுமதி அளித்தேன். எதிர்க்கட்சித்

தலைவர் அவர்கள் பேசுகின்றபோது அதற்கான விளக்கத்தை அளித்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும். மற்றவைகளை வழக்கமான முறையிலே என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து விடலாம்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, தாங்கள் 6 கடிதங்களைப் பெற்று அந்தக் கடிதத்திற்கான விளக்கத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்தில் இருந்து பெற்றிருக்கிறீர்கள். அப்படிப் பெற்றதற்குப் பிறகு பிரைமா பேசி இருக்கின்றதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்ற உரிமை தங்களுக்கு இருக்கின்றது. ஆனால் அவ்வாறு விளக்கங்களை நீங்கள் பெற்றதற்குப் பிறகும் பிரைமா பேசி இருக்கின்றதா இல்லையா என்று நீங்கள் தீர்மானித்திருக்கிறீர்களா இல்லையா என்பதை இந்தச் சபையில் சொல்லிவிட்டு அதற்குப் பிறகு இதை எடுத்துக் கொண்டால் சரியாக இருக்கும். ஏனென்றால் தாங்கள் குழப்பத்தில் இருப்பதாக எனக்குத் தெரிகின்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே இரண்டு பிரச்சினைகள் வருகின்றன. ஒரே பொருள் குறித்து பல உறுப்பினர்கள் எழுப்புகின்றபோது அவர்களில் யாராவது ஒருவரைப் பேசப் அழைப்பதற்குத் தங்களுக்கு உரிமை உண்டு. அதைத் தாங்கள் செய்தீர்கள். எப்படி கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை வருகின்ற போது முடிவு செய்கிறீர்களோ அப்படிச் செய்தீர்கள். ஆகவே பொதுவாக ஒரே பிரச்சினையாக இருந்தால் தாங்கள் அவ்வாறு அழைப்பதற்கு உரிமை இருக்கின்றது.

இன்னொன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 6 பேர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் கடிதம் எழுதி இருக்கின்ற காரணத்தினால் அந்தக் கடிதம் இங்கே வருகின்றபோது பொருத்தமாக இராதே என்ற பிரச்சினை எழுப்பப் பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுதிய கடிதத்தைச் சட்டமன்றத்தில் வைக்க வேண்டும் என்று விதி இல்லை. உரிமைப் பிரச்சினையைத் தாங்கள் படிக்கிறீர்கள். தாங்கள் விருப்பப் பட்டால் உரிமைப் பிரச்சினை எழுப்பிய உறுப்பினரைத் தாங்கள் பேசச் சொல்லலாம். தங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் அவரைக் கூட பேசாமல் இருக்கச் சொல்லலாம். நீங்களேதான் முடிவு எடுக்க வேண்டும். ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பிய பதிலை இங்கே வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனாலே 6 பேர்கள் கொடுத்ததில் ஒருவர் கொடுத்ததை, மட்டும் ஏற்று, அவரை பேசச் சொல்வது பொருத்தம் இராது என்று சொல்வது சரியில்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, 6 பேர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அவற்றைப் படித்துப் பார்த்துவிட்டு அதிலே உங்களுக்குச் சரியாகப் படாததை



டாக்டர் மு. கருணாநிதி : ஆனால் நான் 6 நோட்டீஸ்களுக்கும் சேர்த்துத்தான் பதில் எழுதியிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது போல, 6 நோட்டீஸ்களில் ஐந்தை தள்ளி வைத்துவிட்டு ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்ளலாம் என்று தாங்கள் சொல்கிறபோது, 6 நோட்டீஸையும் முன்னதாகவே அனுப்பி வைத்து விட்டதன் காரணமாக, 6க்கும் சேர்த்து பதில் எழுதியிருப்பதாக அவர் கூறுகிறார். எனவே 5 ஐத் தள்ளி வைத்துவிட்டு, நீங்கள் எடுத்துக் கொண்ட அந்த ஒன்றை மட்டும் வைத்து அவருக்கு, பதில் கேட்டு அனுப்புங்கள். அவரிடமிருந்து அதற்கு பதில் வந்த பிறகு, இந்தப் பிரச்னையை எடுதது கொள்ளளாம். ஆகவே, இந்தப் பிரச்னையை அத்தோடு நிறுத்திக் கொள்லளாம்.

## (4) கவன ஈர்ப்புகள்.

### வேடசந்தூர் வட்டத்தில் வெங்காயப் பயிர் நோயினால் பாதிக்கப் பெற்றுள்ளது.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமனியன் : தலைவர் அவர்களே, " வேடசந்தூர் வட்டத்தில் வெங்காயப் பயிரில் கருஞ்சூரை என்னும் நோய் பரவியுள்ளதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த " அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாரை ஆகிய மூன்று பஞ்சாயத்து ஒன்றியங்கள் அடங்கிய வேடசந்தூர் வட்டத்தில் வெங்காயம் சுமார் 3,000 ஏக்கர் பரப்பில் சாகுபடியில் இருந்து வருகிறது. வெங்காயப் பயிர் சாகுபடி பரப்பை விரைவாக ஆய்வு செய்ததில், சுமார் 300 ஏக்கர் பரப்பில் " இலைப் புள்ளி நோய் " காணப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது. இது வேடசந்தூர் வட்ட வெங்காய சாகுபடிப் பரப்பில் சுமார் பத்து சதமாகும். தற்பொழுது இப்பயிர் சுமார் 60 நாட்கள் வயதுடையதாகும்.

திண்டுக்கல் தோட்டக்கலை உதவி இயக்குநர், வெங்காயப் பயிர் இலைப் புள்ளி நோயால் தாக்கப்பட்டுள்ளது பற்றி ஆய்வு செய்து விவரம் தெரிவித்துள்ளார். சுமார் 10 நாட்கள்

டையில் விரைவில் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லி ஓராண்டுக்காலம் ஆகிவிட்டது. அது இன்னும் பரிசீலனையில் இருப்பதால் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த விடத்திலாம்பட்டியில் மாமுண்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமென்றால் நகராட்சி சார்பிலேதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நகராட்சியின் நிதிநிலை சரியாக இல்லை. அந்த நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு 10,83,000 ரூபாய்தான் வருமானம் வருகிறது. அந்த பாலத்தை அமைக்க 10 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டும். ஆகவே, அவர்கள் அரசிடம் மானியம் கேட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்த வேலை எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்த மாமுண்டி ஆறு மணப்பாறை நகராட்சியை இரண்டாகப் பிளந்துவிடுகிறது. சிறு மழை பெய்தால்கூட மணப்பாறை நகராட்சி மக்கள் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் செல்ல முடியாமல் கஷ்டப்படுவதால நகராட்சியின் நிதியிலிருந்து அங்கே பாலம் கட்ட முடியாத காரணத்தால் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. ஆகவே அரசாங்கமே, நேரடியாக இந்தத் திட்டத்தை ஏற்று, நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அந்தப் பகுதிக்கு நானே நேரில் சென்று வந்திருக்கிறேன். ஆகவே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### பேரம்பாக்கம், மணவாளநகர் ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 36—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம், மணவாள நகர் ஊராட்சிகளுக்கு மேல் நிலைத்தொட்டி அமைத்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பேரம்பாக்கம் ஊராட்சிக்கு மேல்நிலைத் தொட்டி அமைக்கத் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஏற்கனவே குடிநீர் வினியோகம் செய்யப்பட்டுவருவதால் மணவாள நகர் ஊராட்சிக்கு மேல் நிலைத் தொட்டி புதிதாக அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) ஆழ்துளை கிணறு வேலை முடிந்து அதனுடைய கொடுதிறன் அறிந்து மதிப்பீடு தயாரித்து பேரம்பாக்கம் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆழ்துளை கிணறு பணி நடை பெற்று வருகின்றது.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அது எப்போது ஆரம்பிக்கப்படும்? அதன் மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, முடியும் தருவாயில் இருக்கிறது

### கம்போஸ்ட் உர விற்பனை

*வினா எண். 37—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல நகரசபைகளில் கம்போஸ்ட் உரம் விற்பனையாகாமல் தேங்கிக் கிடைக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அவற்றை உடனடியாக விற்பதற்கு அரசின் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டு கம்போஸ்ட் எரு விற்பனை குறைந்துள்ளது.

(ஆ) கம்போஸ்ட் உரத்தினை விற்பதற்கு 10 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு உரத்தினை வேகமாக விற்பனை செய்ய அறிவுரை வழங்கியும் உரத்தின் தரத்தினை உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டும் தேவையானதால் மொத்தமாக பொது ஏலத்தில் விடவும் தக்க அறிவுரைகள் நகராட்சி, நிர்வாக இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த கம்போஸ்ட் உரம் அதிக விலைக்கு விற்கப்படுவதால் வாங்க முடியவில்லை என்று விவசாயிகள் குறை கூறுகிறார்கள். ஆகவே விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

களை நீக்கி விட்டு, எந்த நோட்டீஸ்கள் சரி என்று தெரிகிறதோ அதை மட்டும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி இருக்கலாம். அதன் பிறகு அவர்களுடைய பெயரை மட்டும் இங்கே படித்திருக்கலாம். ஆனால் நீங்கள் என்ன சொன்னீர்கள் என்றால் 6 பேர்கள் எழுதியதையும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி அதன் பிறகு 6 பேர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி அவை அத்தனையையும் படிக்க நேரம் ஆகும் என்று சொல்லிவிட்டு அதற்குப் பிறகு இப்போது வந்து ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வேன் என்று சொல்ல முடியாது. இது ஹவுஸினுடைய ப்ராப்பர்ட்டியாக ஆகிவிட்டது. 6 பேர் எழுதிய கடிதமும், அதற்கு எதிர்க்கட்சித் தலைவரின் பதிலும் ஹவுஸினுடைய ப்ராப்பர்ட்டியாக ஆகிவிட்டது. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் உட்கார வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவரை முறைப்படுத்துவதற்காகத்தான் பாலசுப்பிரமணியன் அவர்களுடைய கடிதத்தை மட்டும் எடுத்துக் கொண்டேன். இப்போது பாலசுப்பிரமணியம் அவர்கள் என்ன எழுதி இருக்கிறார்கள் என்பதை சபைக்கு படிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே ஒருவருடைய கருத்துக்கு மட்டும் அவர் பதில் சொன்னால் போதும். (குறுக்கீடுகள்—குழப்பம்).

THIRU DURAI MURUGAN:— We will not allow it. It has become the prope.ty of the House. Tne Hon. speaker should read all the six.

MR. SPEAKER:— I have got certain discretionary powers. I want to regularise the procedure.

திரு. துரைமுருகன் : தயவு செய்து தாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. 6 பேர்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கு எதிராக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்று ஹவுசிலேயே சொல்லியிருக்கிறீர்கள். இப்போது அதில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதை நீங்கள் முதலிலேயே தீர்மானம் செய்து ஒன்றை மட்டும் எடுத்திருக்க வேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வேண்டுமானால் திரும்பவும் தாங்கள் வழக்கம்போல் விளக்கம் கேட்கிற முறையில் திரு. பால்சுப்பிரமணியின் அவர்களின் கடிதம் ஒன்றை மட்டும் எனக்கு விளக்கம் கேட்டு அனுப்பி வையுங்கள், அதற்கு நான் பதில் அனுப்பியபிறகு இந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமணியின் கடிதத்தை [illegible] தான் அனுப்பியிருக்கிறேன். [illegible]



தொடர்ந்து மழைபெய்ததாலும், மேகமூட்டமாக இருந்ததாலும், பயிர், இலைப்புள்ளி நோய் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது எனத் தெரிய வருகிறது. குறைந்த வெப்பமும் அதிக ஈரப்பசையும் இந்நோய் பரவ அனுகூலமாக இருந்துள்ளது. ஆரம்ப காலத்தில் இந்நோய் தாக்கிய பயிர்களில இலைகளின் மேல இலைப் புள்ளிகள தென்பட்டு பின்பு நோயின் கடுமையால் இலைகள் அனைத்துமே கருகிப் போய்விடும். தொடர்ந்த மழையாலும், மேகமூட்டத்தாலும் இந்நோயின் கடுமை சற்று அதிகமாக இருந்துள்ளது. இலைப்புள்ளிகளின் கடுமையினால் பயிர்கள் கருகிய நிலை ஏற்படும்.

பவிஸ்டின் 1 கிராம், டைதேன் எம். 45 ஒரு கிராம் அல்லது பைடோலான் 2.5 கிராம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து தெளிப்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

வட்டார அளவில் உள்ள இலாகா பணியாளர்கள் இந்நோய் பற்றிய விவரம் தெரிந்து பயிற்சி வழித் தொடர்பு பணியாளர் உதவி கொண்டு நோய் தடுப்பு முறைகளைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

பாதிக்கப்பட்ட சுமார் 300 ஏக்கர் பரப்பில் சேதம் சுமார் 15—20 சதம் இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமனியன் : தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே, "வெங்காயப் பயிர் சாகுபடி பரப்பை விரைவாக ஆய்வு செய்ததில், சுமார் 300 ஏக்கர் பரப்பில் 'இலைப் புள்ளி நோய்' காணப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது" என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலே 2,000 லிருந்து 2,500 ஏக்கர்கள் வரையில் இந்த நோய் வெங்காய சாகுபடியை பாதித்திருக்கிறது. வேடசந்தூர் வட்டத்தில் அனேகமாக வெங்காயப் பயிர் சாகுபடி செய்த அத்தனை விவசாயிகளும், இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு குறுகிய காலப்பயிராக இருக்கிற காரணத்தால், வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஏறத்தாழ 7, 8 மருந்துகள் பற்றி விவசாயிகளுக்குச் சொல்லியும்கூட அதை தடுப்பதற்கு முடியவில்லை. ஆகவே, குறுகிய காலப் பயிராக இருக்கிய காரணத்தால், இந்த நோயை வரும் முன் தடுக்கும் வகையில் அந்தப் பயிரை பாதுகாக்க ஏதாவது வழிகளில் அரசு முயற்சி செய்யுமா நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலேயே இந்த நோய்க்குரிய மருந்துகள் என்னென்ன தெளிக்கலாம் என்பது குறித்து கொடுக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் குறுகிய காலப் பயிராக இருக்கிற காரணத்தால், முதலிலேயே இந்த நோய் வருவதைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதை இந்தத் துறை ஆராயும்.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. வெங்காய சாகுபடியில் இந்த நோய் வந்துவிட்டால் அந்தப் பயிர் எதற்கும் பயன்படாது. ஆகையினால் அந்தப் பகுதியின் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு அரசு ஏதாவது சலுகைகள் அல்லது நிதி உதவிகள் வழங்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சாகுபடி பயிர்களுக்கு நோய் வருவதும், அதைத் தடுப்பதற்குகாக மருந்துகள் தெளிப்பதும் வழக்கமான ஒன்று. ஆகவே, இதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கென்று தனியாக உதவி செய்வது என்பது அரசால் இயலாது.

### (ஆ) சென்னை மாநகரில் கொசுத் தொல்லை அதிகரிப்பு

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே "சென்னை மாநகரில் கொசுத்தொல்லை அதிகரித்து உள்ளதால் அதனைக் தடுக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றைவைக்கிறேன். :

அறிக்கை.

எந்த ஒரு கொசுவும் உற்பத்தியாவதற்கும் வளர்வதற்கும் 7 முதல் 10 நாட்கள் தண்ணீர் தேங்கியிருந்தால் போதுமானது. மழைக் காலங்களில் தாழ்வான பகுதிகளிலும் குடிசைப் பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவது கொசுக்களின் வளர்ச்சிக்கு காரணமாகிறது. ஆறு இலட்சம் மக்களுக்கு முன்பு போடப்பட்ட சாக்கடைச் கழிவுநீர் குழாய்கள் தற்போது 6 மடங்குக்கு மேல் சென்னை நகரில் உள்ள மக்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இவைகள் அளவுக்கு மேல் பயன்படுத்தப் படுவதால் கழிவு நீர் சாலைகளில் நிரம்பிவிடுவதால் சாலை ஓரங்களில் உள்ள வடிகால் வாய்க்கால்களில் திருப்பிவிடப் படுகின்றன. இதனால் மக்களும் திருப்தியடைந்து விடுகிறார்கள். ஆனால் வடிகால்கள் வாய்க்கால்களில் மழைக்காலமாக இல்லாதபோதும் கழிவு நீர் தேங்கியுள்ளது. இங்கு கொசுக்கள்



வளர்ச்சியடைகின்றன. சென்னை நகரில் அடையாறு, கூவம் போன்ற இயற்கை நீரோட்டங்கள் செல்கின்றன. கடலை கடக்கும் இடத்தில் மணல் மேடுகளால் அடையாறு நீர் கடலில் கலக்காமல தேங்கிவிடுகின்றது. இதுவும் கொசு உற்பத்திக்கு வழிகோலுகிறது. கூவம் போன்ற மற்ற இயற்கை நீரோட்டங்களிலும் கழிவுநீர் பெரும் அளவில் கலந்து கொசு வளர்ச்சிக்குக் காரணமாகிறது. அடையாறு முகப்பிலுள்ள மண்மேடுகளை அகற்றி ஆற்றின் நீரோட்டம் கடலில் கலக்கும்படி செய்ய ஆவன செய்யப்பட வேண்டும். இயற்கை நீரோட்டங்களில் கழிவுநீர் கலக்காமல் இருக்கவும் பெரும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. சென்னை நகரின் எல்லையில் குடிநீர் வடிகால் வாரியம் 4 கழிவுநீர் புல் பண்ணைகளைப் பராமரித்து வருகிறது. இவைகளும் பெரும் அளவில் கொசுக்கள் உற்பத்ியாவதற்கும் வளர்வதற்கும் இருப்பிடமாக உள்ளன. இந்த நிலையைக் கட்டுக்குள் வைக்க, மேற்படி வாரியத்துக்கு சென்னை மாநகராட்சி ஒரு திட்டத்தைச் செயலாக்க அறிவுரைகள் வழங்கியுள்ளது. குடியிருப்புப்பகுதிகளில் பால்வியாபாரிகள் கொட்டகைகளை அமைத்து எருமைகளையும் பசுக்களையும் வளர்க்கிறார்கள். சுகாதாரக் குறைவாக உள்ள மேற்படி மாட்டுத் தொழுவ உடமையாளர்கள் மீது மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுப்பதுடன், கொசுஒழிப்பு மருந்துகளையும் தெளிக்கிறது. பொதுவாக சென்னை நகரில் கொசு ஒழிப்பின் நிமித்தம் இலட்சக்கணக்கான லிட்டர் கொசு ஒழிப்பு மருந்துகள் 1981–82ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆண்டில் கொசு ஒழிப்பிற்காக ரூ. 60,76,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மலேரியா நோய் தடுப்பிற்காக ரூ. 19,30,000 ஆனைக்கால் நோய்க்காக ரூ. 22,28,000-ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(நண்பகல் 12-00).

டாக்டர் கே. சௌரிராஜன் : இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்தப் பதில் திருப்தி அளிப்பதாக இல்லை. காரணம் Al mi g inc ease in mo quito m is nce என்று சொல்லப்பட்டிருக்கிறது. அபாயகரமான அளவிற்கு இன்று குறிப்பாக தென் சென்னையில் இந்தக் கொசுக்கள் தொல்லை உருவாகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். இவர்கள் கொடுத்துள்ள பதிலில் எப்போதும்போல் வழக்கமாக மலேரியா, பைலேரியா ஒழிப்பு வேலைகளைச் செய்கிறோம். இவ்வளவு ரூபாய் அதற்காகச் செலவு செய்கிறோம் என்று ஏதோ அதிகாரிகள் கொடுக்கிற ரிப்போர்ட்டைத்தான் இங்கே வைத்திருக்கிறார்களே தவிர இதுபற்றி தீவிரமாக சிந்தனைக்கு எடுத்துக் கொண்டுள்ளார்களா என்றால் நிச்சயமாக இதைப் பற்றி சிந்திக்கவில்லை என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சின்னக் கணக்கைச் சொல்கிறேன். மாம்பலத்தில் யாராவது ஒருவர் ஒரு இராத்திரியாவது என்னை கொசு கடிக்

வில்லை என்று சொல்ல முடியுமா ? ஒரு மனிதனை ஒரு நாளைக்கு ஒரு கொசு கடித்தால் ஒரு டிராப் ரத்தம் போய்விடுகிறது. ஒரு மனிதனை ஒரு நாள் ராத்திரி 20 கொசுக்கள் கடிக்கின்றன. இது தென் சென்னையில் உள்ள 12 இலட்சம் மக்களின் பிரச்சினை. ஒரு நாளைக்கு சராசரியாக ஒருவரை இருபது கொசுக்கள் இராத்திரி கடித்தால் 800 லிட்டர் இரத்தம் வீணாகப்போகிறது. 800 liters of blood are being wasted, being sucked by the mosquitoes alone from the people of South Madras.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இது ஒரு அபாயகரமான பிரச்சினை. கூவத்தில் இரத்த ஆறு ஓடும் என்று சொன்னார்கள், ஓடவில்லை. ஆனால் கொசுக்களை அடித்து கூவத்தில் விட்டால் இரத்த ஆறு நிச்சயமாக ஓடும். ஏனென்றால் அவ்வளவு இரத்தம் போகிறது கொசுக்களினால். அந்த இரத்தத்தின் மதிப்பு நாள் ஒன்றுக்கு ரூ. 32,000 ஆகும். ஒரு பாட்டில் இரத்தம் 32 ரூபாய் ஆகிறது, டாக்டர்கள் ஆப்பரேஷனுக்கு ரத்தம் வாங்கவேண்டுமென்றால். ஆக ஒரு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ரத்தம் கொசுக்களால் எடுத்துச் செல்லப்படுகிறது. முன்பு வழக்கமாக சென்னை மாநகராட்சியில் என்டாமலஜிஸ்ட்ஸ் இருந்தார்கள். அவர்கள் இந்த கொசு ஒழிப்புப் பணியை செய்து கொண்டிருந்தார்கள். இப்போது கொசு ஒழிப்பை அஸிஸ்டண்ட் ஹெல்த் ஆபீஸர்கள் (மலேரியா) செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குக் கொசுக்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. ஆகவே இந்த வேலையை மீண்டும் என்டாமலஜிஸ்ட்ஸ் கையில் கொடுக்கவேண்டும். இப்போது மலேரியா எராடிகேஷன் ஆபீஸர் இருக்கிறார்கள். இந்த வேலையை முன்பு இருந்ததுபோல் என்டாமலஜிஸ்ட்ஸ் கையில் கொடுப்பார்களா ? அப்படி மீண்டும் என்டாமலஜிஸ்ட்களை நியமிப்பார்களா ? (மணியடிக்கப்பட்டது) நிச்சயமாக ஒரு மாதத்திற்குள்ளாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், குடிநீர் வடிகால் அமைச்சர் அவர்கள் மூன்றுபேர்களும் ஒன்றாக இருந்து இதை ஒரு தீவிரமான பிரச்னையாகக் கருதி நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா ? கொடுங்கையூரிலுள்ள கழிவுநீர்ப் பண்ணை கொசு உற்பத்திப் பண்ணையாக இன்று இருந்துகொண்டிருக்கிறது, இந்தப் பிரச்னையை தீர்க்காவிட்டால் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களை கொசுக்கள் நல்வாழ்வுத் துறை என்று அடுத்த முறை கூப்பிடுவார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எனக்கும் அந்த அனுபவங்கள் உண்டு. நான் கூட அண்ணா நகரில்தான் குடியிருக்கிறேன். அங்கே கூட கொசுத்தொல்லை உண்டு. என் உடம்பில் பலயிடங்களிலும் இரத்தம் எடுக்கப்பட்டிருகிறது, கொசுக்கள் மூலமாக. ஆகவே இவற்றை ஒழிக்க வேண்டுமென்பதில் தீவிர நடவடிக்கைகள் இன்று





மாநகராட்சி மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன. இது சாதாரண முறையில் அல்ல. ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கொசுக்களை ஒழிப்பதற்காக மட்டும் செலவிடப்பட்டு வருகிறது. ஆனால் இவை ஒழிக்கப்பட்டுவிட்டதா என்றால் இல்லை. ஆகவே தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காகவும் புது முறைகளைக் கையாள வேண்டும் என்பதற்காகவும் மாநகராட்சி மூலம் புதுத் திட்டங்களைப் போட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நல்ல யோசனைகளைக்கூட ஏற்றுக்கொண்டு எவ்வளவு சீக்கிரம் நடைமுறைப் படுத்தப்படுமோ அவ்வளவு சீக்கிரம் நடைமுறைப்படுத்தப்படும்.

## (5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — விவாதம்— தொடர்ச்சி.

*திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் உரையின் மீது நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே முதல் பக்கத்திலே மகாகவி பாரதி விழாவைச் சிறப்பாக நடத்தியதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் கூட அதைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பாரதியின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்லுகிற அவர்கள், பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்கிறார்கள். குறிப்பாக எதிரொலி பத்திரிகை, கோவைப் பதிப்பு தினகரன் அலுவலகத்தைத் தாக்கியது. அரசாங்கம் செய்திகளை இத்தகைய பத்திரிகைகளுக்கு கொடுக்காமல் தடைசெய்வது, அதிகாரிகள் சுதந்திரமாக செயல்படுவதற்கு வாய்ப்பில்லாமல், அவர்களைத் தடைபடுத்துவது போன்ற பல செயதிகளை இந்த நேரத்திலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பாரதி விழா எடுக்கின்ற இந்த நேரத்திலே, பாரதியாரின் முழக்கமான விடுதலை, சுதந்திரம் போன்ற சொற்களுக்கு இங்கே இடமில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவு நாளன்று, அவர்கள் 'தீமைகளை விலக்கி, குடிப் பழக்கத்தை ஒழிப்போம்' என்று சபதம் எடுத்துச் கொள்கிறார்கள். ஆனால், எங்கு பார்த்தாலும் தமிழகம் எங்கும், பட்டி தொட்டிகளில் கிராமங்களில், சந்து பொந்துகளில் எல்லாம் கூட அரசாங்க சாராயக் கடைகளும், வழக்கமாக, மாமூலாக நடைபெறுகின்ற சாராயக் கடைகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, அண்ணாவின் எண்ணங்கள் நிறைவேற, கொள்கைகள் நிறைவேற

அதற்கான எந்த விதமானதிட்டங்களும் இந்த உரையிலே இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையிலே கிராமங்களிலே மின்சாரம் சரி யாக வழங்கப்படுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்திருக் கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் கிராமங் களிலே மின்சாரம் சரியாகக் கிடைப்பதில்லை. மின் தட்டுப்பாடு தமிழகத்திலே பெருவாரியாக, அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் மிக அதிகமாக மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே தொடர்ந்து 1, 2, 3, நாட்களுக்குக்கூட மின் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் மிகவும் விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய மாவட்டம். சென்ற ஆண்டுகூட வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டது. தமிழகத்திலே அப்படி பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும், தொடர்ந்து இந்த ஆண்டும் வட ஆற்காடு மாவட்டத்தில் சில வட்டங்கள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில பகுதிகளிலே மழை பெய்து, கிணறுகளிலே தண்ணீர் இருந்தாலும் கூட இந்த நேரத்திலே மோட்டார், பம்பு செட்டுகளுக்கு மின் சப்ளை சரியாக இல்லாத காரணத்தினால், விவசாயிகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

இங்கே இன்னொன்றையும் சொல்கிறேன். நேற்று கூட, இந்தச் சட்டமன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது. அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம் ஏற்படுவதற்கு, அதற்கான ஆராய்ச்சிகள் எல்லாம் செய்யப்படுவதாக இங்கே சொன்னார்கள் இருக்கிற மின் நிலையங்களை சீராக செம்மையாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்து, விவசாயத்திற்கு வழிவகை செய்ய வேண்டுமே தவிர, இனிமேல் அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம் ஏற்படுவதற்கு அரசாங்கம் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருப்பது நல்ல நல்ல என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

ஊராட்சித் தேர்தல், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களைப் பற்றியெல்லாம் விமர்சனம் செய்தார்கள். ஆளுங்கட்சிக்காரர் கள் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் நடப்பது பற்றியும், தன்னி றைவுப் பணிகள், உணவுக்கு வேலைத் திட்டம், வறட்சிப் பணிகள் போன்ற திட்டங்களைப் பற்றியெல்லாம், அவைகள் எப்படி நல்லவிதமாகச் செயல்படுகின்றன என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள்.

[பிற்பகல் 12.10)

அருமை நண்பர் இராசு அவர்கள் பேசும்போது செய்யாத வேலைகளுக்கெல்லாம் பில்கள் தயார் செய்யப்பட்டு பணம் தரப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பின





பாலசுப்பிரமணியம் அவர்கள் அந்த வேலைகளை அதிகாரிகளே தான் செய்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் வேலைகளை எல்லாம் அதிகாரி கள் செய்வதாகக் காட்டி ஆளுங்கட்சிக்காரர்கள் ஒப்பந்தக்காரர் களாக எல்லா வேலைகளையும் என்னுடைய தொகுதியிலேயே செய்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் தன் னிறைவுத் திட்ட வேலைகள் நடைபெற்றன. ஆண்டிப்பாளையம் என்ற கிராமத்தில் அரிசன காலனியே கிடையாது. அரிசனக் காலனியே இல்லாத அந்தக் கிராமத்தில் அரிசனக் காலனி இருப்ப தாகச் சொல்லி உணவுக்கு வேலை திட்டத்தின் கீழ் சாலை அமைக் கப்பட்டிருக்கிறது. இதே சாலைப்பணி தன்னிறைவுத் திட்டத் தின் கீழும் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழும் அமைக்கப் பட்டிருப்பதாக கணக்கு காட்டப்பட்டு இருக்கிறது.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் திருவானைமுக வலசை என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே ஒரே ஒரு ஏரிதான் இருக்கிறது. ஆனால் ஒரே ஏரியின் பெயரை இரண்டாகப் பிரித்து திருவானைமுக ஏரி என்றும், வலசை ஏரி என்றும் தன்னிறைவுத் திட்டத்திலும் வறட்சிப் பணித் திட்டத்திலும் பில்கள் தனித்தனி யாக பெறப்பட்டிருக்கின்றன. இப்படிச் சீர்கேடான நிலைமை கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமைகளையெல்லாம் போக்க வேண்டுமென்பதற் காகத்தான் உள்ளாட்சித் தேர்தல்களை எல்லாம் விரைவாக நடத்த வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 18 சத விகிதம் தாழ்த்தப்பட்டவர் களுக்கும் 15 சதவிகிதம் பெண்களுக்கும் ஒதுக்கியிருப்பதை, அந்த விகிதாச்சார முறையை எங்கள் கட்சி தலைவரும் ஏற்றுக் கொள்கிறார். உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று எங்கள் தலைவர் பல தடவை குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்று கூட வழக்கறிஞர் ஜி. ஆர். மூலமாக நாங்கள்தான் தடை வாங் கினோம் என்று உறுப்பினர் குறிப்பிட்டதற்கு, அப்படி இல்லை என்று மாண்புமிகு முதல்வர் பதில் அளித்திருக்கிறார்கள். கிராமங்களில் சீராக சாலை வசதி, தெரு விளக்கு வசதி, குடி தண்ணீர் வசதி போன்றவற்றை உடனடியாக மேற்கொள்ள உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும்.

கிராமங்களில் தேவையான குடி தண்ணீர் கிணறுகளில் தற் போது இருக்கின்றன. மேல்நிலை நீர்த் தேக்கங்கள் இருக்கிற இடங்களும் இருக்கின்றன. ஆனால் சீரான மின்சாரம் சப்ளை இல்லாத காரணத்தால் இந்த மேல்நிலை நீர்த்தேக்கங்கள் உபயோகமில்லாமல் இருக்கின்றன. சில இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க பம்ப் செட்டுகள் கூட நீண்ட நாட்களாகப் பழுது

[திரு. த. வேணுகோபால்] [1982 பிப்ரவரி 6

பார்க்கப்படாமல் இருக்கின்றன. உடனடியாகப் பழுது பார்க்க வேண்டுமென்றால் அதற்கென்று ஊராட்சி நிர்வாகம் இருந்தால் தான் சீராக செயல்பட முடியும்.

அடுத்து சட்டம் ஒழுங்கு நிலைமை திருப்திகரமாக உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது ஆளுநர் உரையில். இன்றைய நிலையில் தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் கொலை கொள்ளை நடக்கிறது. எங்கள் மாவட்டத்தில் வேலூர் அருகே, பஸ்ஸை நிறுத்தி வழிப்பறிக் கொள்ளை நடத்தியிருக்கிறார்கள். பரவலாக வீடுபுகுந்து கொள்ளை அடிக்கிறார்கள். தாய்மார்கள் சாலைகளில் தனியாக நடந்து போக முடியாத நிலைமை உங்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. தனியாகத் தாய்மார்கள் வெளியே சென்றால் வீட்டுக்குத் திரும்புவார்களா என்ற சந்தேகம் கூட உங்களுடைய ஆட்சிக்காலத்தில் இருக்கிறது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆக, சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டகாலமாக தீர்க்கப்படமுடியாத காவிரி நீர்ப் பிரச்சினை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒத்துழைப்போடு அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று சொல்லுகிறார்கள். நான் நீண்ட காலமாக இருக்கும் அந்தக் காவிரி நீர்ப் பிரச்சினைக்குள் போகவில்லை. என்னுடைய தொகுதியில் இருக்கும் சாத்தனூர் அணைப் பிரச்சினை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சாத்தனூர் அணையில் 5—1—1982 ஆம் தேதியன்று நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. இன்று வரையில் 15 ஆர். ஏ. கால்வாய், 10 ஆர். ஏ. கால்வாய், 11 ஆர். ஏ. கால்வாய் ஆகியவற்றில் தண்ணீர் வரவில்லை. அதன் காரணத்தினால் 12 ஆயிரம் ஏக்கர் நிலம் தண்ணீர் பெறாமல் பயிர் செய்யப்பட்ட நிலங்களில் உள்ள பயிர்கள் சாவி ஏற்பட்டு சேதம் ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப்பணித்துறை பொறியாளர், திருவண்ணாமலை துணை ஆட்சித் தலைவர் ஆகியவர்களிடத்திலே எல்லாம் கிராமத்திலே உள்ள பெரியவர்கள் சென்று முறையிட்டிருக்கிறார்கள். தண்ணீர் பாசனத்திற்கு திறந்துவிட்டு நீண்டகாலமாகியும் கூட இன்று வரை அந்தப் பகுதிக்கு தண்ணீர் வராமல் பயிர்களெல்லாம் சாவி ஏற்பட்டிருக்கிறது. உரிய அதிகாரிகள் பார்வையிட்டு அங்கே தண்ணீர் பாய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் தண்ணீர் தீர்வை, நிலத் தீர்வைகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பருவமழை இந்த ஆண்டிலே கூட வடாற்காடு மாவட்டத்திலே இல்லாத காரணத்தினால் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை, செய்யாறு, செங்கம், வந்தவாசி, போளூர் போன்ற பகுதிகளில் எல்லாம் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளை எல்லாம் பார்வையிட



1982 பிப்ரவரி 6] [திரு. த. வேணுகோபால்]

வேண்டும். இன்னும் சில கிராமங்களிலே குடிதண்ணீர் கூட இல்லாத நிலைமை இருக்கிறது. அவைகளையெல்லாம் பார்த்து உடனடியாக பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை இருப்பது பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நாங்கள் எல்லாம் பலமுறை எடுத்துச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் கூட கடுமையான வறட்சி இருக்கிறது என்று ஒத்துக் கொண்டும் கூட இன்னும் சில கிராமங்களிலே கடுமையான குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது.

சாத்தனூர் அணையின் மேல் மட்டக் கால்வாயை அமைத்துத் தரவேண்டுமென்று சொல்லி பல மனுக்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே அனுமதி கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்படக்கூடிய நேரத்திலே எங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதற்குப்பிறகு 1977 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆட்சி இருக்கிறது. பல முறைகள் அதைப்பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகவும் கேள்விகள் மூலமாகவும் கேட்டபோது —வேலைகள் செய்வதற்கு ஆய்வுகள் செய்யப்படுகின்றன, உடனடியாக முடிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இன்றைய தினம் வரையில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. இன்றைய தினம் சாத்தனூர் அணையின் கொள்ளளவிற்கு மேலாக உள்ள தண்ணீர் வீணாக ஆற்றிலே சென்று கொண்டிருக்கிறது. தண்ணீர் வீணாக ஆற்றிலே செல்வதைப் பயன்படுத்த கூடிய முறையிலே அந்தக் கால்வாயை அமைக்க நடவடிக்கை எடுத்தால் அதன் மூலம் பல கிராமங்கள் பயன் அடையும். திருவண்ணாமலையிலே குடிநீர்ப் பற்றாக்குறை போகும். சமுத்திரம் ஏரிக்கும் தண்ணீர் கிடைக்கும். நந்தன் கால்வாய்க்கும் தண்ணீர் கிடைக்கும்.

கடுமையான வறட்சி எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற காரணத்தினால் அதைக் கவனத்திலே கொண்டு கடன் வசூலில் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே கடனைக் கட்டவேண்டாமென்று சொல்லவில்லை. கடன் கட்டுவதற்கு நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம். கடுமையான வறட்சி இன்றைய தினம் பல மாவட்டங்களில் இருந்து கொண்டிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுகூட வட ஆற்காடு மாவட்டத்தில் கடுமையான வறட்சி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஏன் கடனை வசூலிப்பதற்கு இப்போது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்? விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை வசூலிப்பதற்கு காலத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம்.

[திரு. த. வேணுகோபால்] [1982 பிப்ரவரி 6

[பிற்பகல் 12.20]

காலத்தை நீட்டிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஏற்பட்டுள்ள கடன்களுக்கு மேலும் காலத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டும். வறட்சியைப் போக்கி, நல்ல நிலைமைகள் ஏற்பட்ட பிறகுதான் கடன் வசூல் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களிடத்தில் பல கோரிக்கைகளை நேரிலே சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் பரவலாக மாவட்டத்திலே சுற்றுப் பயணம் செய்து ஆங்காங்கு நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்து புரிந்து கொண்டு, அந்த நிலைமைகளை உணர்ந்து கடன் வசூல் செய்வதில் ஈடுபட வேண்டுமென்று நான் கூறிக் கொள்ள. விரும்புகிறேன்.

அரசு ஏற்கனவே பல உறுதிமொழிகளைத் தந்திருக்கிறது. வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு உதவிப் பணம், வயதானவர்களுக்கு அரிசி, கர்ப்பிணிபெண்களுக்கு உதவி போன்ற பல உறுதி மொழிகளையெல்லாம் நீங்கள் அள்ளித் தந்திருக்கிறீர்கள். இப்படி உறுதி மொழிகளை அள்ளித் தருவதிலே உகந்தவர்களாக இருக்கிறீர்களே தவிர அவற்றைச் செயலிலே செய்பவர்களாக இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலையிலே அரசு மருத்துவமனை இருக்கிறது. ஆனால் அங்கே உரிய மருத்துவ அதிகாரிகள் இல்லை. அங்கே உரிய மருத்துவ அதிகாரிகள் இருந்து பணி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய வடார்க்காடு மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே தொழிற்சாலை என்று ஒன்றுகூட இல்லை. எங்கள் மாவட்டத்திலே புதிதாகப் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய இரசாயன பொருள்களான உரம், யூரியா, பூச்சிக்கொல்லி மருந்து போன்றவைகளின் விலை ஏறியிருக்கிறது. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விவசாய விலைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. எனவே கரும்புக்கு டன் ஒன்றுக்கு 200 ரூபாயும், நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 180 ரூபாயும், இதுபோன்றே மணிலா போன்றவைகளுக்கு நல்ல விலையும் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மருத்துவமனையிலே பிரசவத்திற்காக ஒரு தாய் சேர்க்கப்பட்டார். அவரைப் பார்த்த டாக்டர் அவருக்குப் பிரசவம் ஆவதற்கு இன்னும் இரண்டு மூன்று மணி



1982 பிப்ரவரி 6] [திரு. க. வேணுகோபால்]

நேரம் ஆகும் என்று கூறியிருக்கிறார். ஆனால் அங்கே இருந்த மருத்துவச் சிகிச்சை பார்க்கும் பெண் செவிலியருக்கு பெண்ணின் உறவினர் கொடுக்கக்கூடும் என்று எதிர்பார்த்த உதவி தொகை கிடைக்கும் என்ற காரணத்திற்காக அவர்களுக்குப் பிரசவம் ஆக வேண்டிய இரண்டு மூன்று மணி நேரத்திற்கும் முன்னதாகவே அந்தத் தாய்க்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி உடனடியாகக் குழந்தை பிறக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்த காரணத்தினால் குழந்தை பிறப்பதற்கு முன்னாலேயே அந்தத் தாய் இறந்து விட்டார். தாயின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலி, மாங்கல்யம் ஆகியவற்றை செவிலியரும், உடன் இருந்த பணியாளரும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும், மாவட்ட சுகாதார அதிகாரி அவர்களிடத்திலேயும் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே, கிராம வளர்ச்சிக்ககாகவும், விவசாய வளர்ச்சிப் பணிகளுக்காகவும் ஆக்கபூர்வமான எந்தப் பணியும் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சிக்காரர்கள்மீது நாங்கள் பல குற்றச்சாட்டுக்களையெல்லாம் கூறுகிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் உண்மைகளைச் சொல்கிறோம். அந்த உண்மைகளை ஒத்துக் கொள்வதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். உண்மைகளை நிரூபிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் விவர்களே, தமிழகத்திலே தமிழக மக்களை திசை திருப்பிய திருப்பத் தூர் சட்டமன்றத் தொகுதியில் இருந்து உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கு வந்திருக்கிறேன். இங்கே வர எனக்கு வாக்களித்த என்னுடைய தொகுதி மக்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய பாரதப் பிரதமர் அனைத்துக் கட்சியினரும் எனக்கு ஆதரவு தர வேண்டுமென்று வேண்டிக் கொண்டதற்கிணங்க எனக்கு ஆதரவு தந்த அத்தனை பேருக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு, குறிப்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே குறிப்பாக, நம்முடைய முதல்வர் அவர்கள் 4 நாட்கள் அந்தத் தொகுதியிலேயே இருந்து, எனக்காகப் பாடுபட்டதற்கு, நன்றி உணர்வோடு, நான் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. இரா. அருணகிரி] [1982 பிப்ரவரி 6.

இங்கே என்னுடைய தொகுதி பிரச்னைகள் சம்பந்தமாக ஒருசிலவற்றை நான் கூற வேண்டுமானால், ஆளுநர் உரையிலே கூறி இருப்பதைப் போல், 20 அம்சத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்வதோடு நில்லாமல், அதை நல்லமுறையிலே செயல்படுத்தி, அந்தத் திட்டத்தின் முழு நோக்கத்தை ஏழை, எளிய மக்கள் எய்தும் வகையிலே, அவர்கள் பயனடையும் வகையிலே, அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும், அங்குள்ள அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பல மனுக்கள் கொடுத்தும் அந்தக் குறைபாடுகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே பல ஆண்டுகாலமாக இருந்து வருகின்றன. அதிலே இருக்கக்கூடிய பிரச்னைகள் எல்லாம், முன்பெல்லாம் அரசாங்கத்தாலே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால், ரூ. 3,000 மட்டும் கொடுக்கப்படுவதால், அதை வைத்துக் கொண்டு அவர்களால் நிச்சயமாக வீடு கட்ட முடியவில்லை. ஆகவே, கொடுக்கின்ற அளவைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருப்பத்தூர் தொதியானது, இந்திய சுதந்திரத்திற்குப் பாடுபட்ட மருதுபாண்டிய சகோதரர்கள் பிறந்த மண். அவர்கள் வீரத்திற்காக விளையாடிய மண். அந்த மண்ணிலே அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடம் இன்னும் குறிப்பாக இருக்கிறது. அந்த இடத்திலே ஒரு தேசிய சின்னத்தை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல், கட்ட பொம்மன் வாரிசுகளுக்குக் கொடுப்பதைப் போல், மருது பாண்டி வீரர்களுக்கும் அரசாங்கச் சலுகைகளையும் பணமும் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில் இங்கே பருவம் பொய்த்துவிட்ட காரணத்தால், சரியாக மழையில்லாத காரணத்தால் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்திருக்கக் கூடிய சலுகைகளை நீங்கள் நீட்டித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே நம்முடைய அரசாங்கத்தில் வேலை செய்யக் கூடிய அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அதற்குரிய திட்டங்கள் அரைகுறையாக இருக்கின்றன. சிங்கம்புனரி போன்ற இடங்களில், வீடுகளை நிரந்தரமாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சிங்கம்புனரி மருத்துவமனையைப் பொறுத்த வரையிலே ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள கட்டிடம் எந்தவிதமான பயனும் அளிக்காமல் நீண்ட நெடுங்



1982 பிப்ரவரி 6] [திரு. இரா. அருணகிரி]

காலமாகவே சும்மாவே இருந்து வருகிறது. அதைப் பயன்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நான் திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வந்ததற்கு இரண்டு நாட்களாக பிரச்னைகள் வந்தன. 'நீங்கள் சொந்தக் காலில் நிற்கின்றீர்களா, இல்லை, அடுத்தவர் காலில் நிற்கின்றீர்களா', என்றெல்லாம் இங்கே பிரச்சினைகள் வந்தன. நான் இந்த மாமன்றத்திற்குக் கூறிக் கொள்வதெல்லாம், நாங்கள் தனித்துத்தான் நின்றோம். ஆனால், மரபு வழியைக் காக்கின்ற கூட்டு முயற்சி மூலமாக நான் வெற்றி பெற்றேன் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் கூறிக் கொள்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மரபு வழியைக் காக்கின்ற ஒரு கூட்டு முயற்சியானது என்னை வெற்றி பெறச் செய்தது என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெரியார் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒன்று நீண்ட நெடுங்காலமாக அளவிடுதலிலேயே இருக்கிறதே ஒழிய, இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை. அந்த மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக, கிட்டத்தட்ட 10,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிட்டக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தப் பெரியார் மேம்பாட்டுத் திட்டத்தைச் சீக்கிரமாகச் செயல்படுத்தித் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, அங்கே பாலாறு என்கின்ற ஒரு காட்டாறு விவசாயிகளுக்குப் பயன்படாத நிலையிலே, அந்தத் தண்ணீர் மற்ற இடங்களுக்குச் செல்கிறதே ஒழிய விவசாயத்திற்குச் சரியாகப் பயன்படவில்லை. அது பயன்படுகின்ற வகையிலே ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டி, விவசாயத்திற்குப் பயன்படுகின்ற விதத்தில் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உங்களுடைய வேட்பாளருக்கு ஏதோ ஒரு உத்தரவு வந்திருக்கிறது, உங்கள் கட்சியிலேயிருந்து. அதனாலே தான் நீங்கள் கலந்து கொள்ளவில்லையென்ற சந்தேகத்தை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்கிறேன், எனக்கு எந்தவிதமான கட்டளையும் எங்கள் கட்சி இடவில்லை. நான் முதல்வர் அவர்களைக் கலந்ததன் மூலமாக ஒரு உறுதியினை இங்கே கூறிக் கொண்டு விடைபெறலாம் என்று கருதுகிறேன். நிச்சயமாக நானும் முதல்வர் அவர்களும் ஒன்றாக இணைந்து எனக்கு வாக்களித்த மக்களுக்கு என்னுடைய தொகுதியில் நன்றி அறிவிப்போம் என்ற உறுதியினை அளித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

[1982 பிப்ரவரி 6

*திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஆளுநர் உரையைப் பற்றிய விவாதத்திலே சில முக்கியமான கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னாலே எடுத்து வைக்க விரும்புகிறேன். தமிழகத்திலே சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சி நிலையைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே 16 மாவட்டங்களில், 13 மாவட்டங்களில் வறட்சி நிலவியது, அதைப் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஆளுநர் உரையிலே அதைப் பற்றிய முக்கியமான விவரங்கள் சொல்லப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழகம் என்றைக்கும் சந்தித்திராத அளவுக்கு மிகப் பெரிய வறட்சி, அநேகமாக மிகப் பெரும்பாலான மாவட்டங்களிலே வந்து விட்ட நிலையில், நம்முடைய தமிழக அரசு இந்த வறட்சி நிவாரணம் செய்வதற்காக எவ்வளவு தொகை செலவாகும் என்பதை மதிப்பிட்டது. சுமார் ரூ. 137 கோடி செலவாகும் என்று மதிப்பிட்டு மத்திய அரசுக்கு உதவி கோரியது. அதற்குப் பின்னாலே, மத்திய குழு பார்வையிட வந்தது. அந்தக் குழு வறட்சிப் பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு தனது பரிந்துரையைச் செய்தது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

நான்-பிளான் எக்ஸ்பெண்டிச்சர் மூலம் ரூ. 6.7 கோடியும் பிளான் எக்ஸ்பெண்டிச்சர் மூலம் ரூ. 54.84 கோடியும், ஆக மொத்தம் ரூ. 60.91 கோடி அளிக்க சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால் மத்திய அரசு கொடுத்த தொகை என்னவென்றால் வெறும் 43.90 கோடி ரூபாய்கள் மட்டுமே. நாம் 137 கோடி ரூபாய் கேட்டும் கூட, அவர்கள் அதிலே 3-ல் 1 பங்கு குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். அது ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டிப்படவில்லை.

[பிற்பகல் 12.30.]

அடுத்து, தமிழகத்திற்கு கோதுமை கொடுப்பதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 'மக்களுக்கு வழங்குவதற்காக திங்கள் ஒன்றுக்கு 10,800 டன் கோதுமையை ஒதுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டு வருகிறது. ஆனால் மத்திய அரசு 4,000 டன் கோதுமையை மட்டும் ஒதுக்கி வருகிறது. அதைப் போலவே, உருளை மாவு ஆலைகளுக்கு 65,000 டன் கோதுமை தேவை. ஆனால் வெறும் 30,000 டன் மட்டுமே ஒதுக்கியுள்ளது' என்ற குறிப்பையும் இங்கே ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கிறார்கள். ஏன் இந்த நிலை வந்தது என்பதை ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டி இருக்க வேண்டும். இந்தியாவிலேயே சென்ற ஆண்டு கோதுமை விளைச்சல் என்பது அமோகமாக இருந்திருக்கிறது. பற்றாக் குறையே இல்லை. அந்த அளவுக்கு அதிகமான விளைச்சல் இருந்திருக்கிறது. அதனை ஃபுட் கார்ப்



1982 பிப்ரவரி 6] திரு. ப. நெடுமாறன்

பரேஷன் ஆப் இண்டியா மூலமாகக் கொள்முதல் செய்து மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் அளிக்க வேண்டும். ஆனால் அவர்களாலே அதைச் சரிவர செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதுவே நமக்குக் கோதுமை கிடைக்காததற்கு மிகவும் முக்கியமான காரணம்.

கோதுமை விளைச்சல் அமோகமாக உள்ள பஞ்சாப், அரியானா மாநிலங்களில் என்ன நடந்தது என்பதை இந்த மன்றத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பஞ்சாப், அரியானா மாநிலங்களில் இருந்து ஃபுட் கார்ப்பரேஷன் கோதுமை கொள்முதல் செய்வதற்கு அந்த மாநில அரசுகளே அவர்களுக்கு ஒத்துழைப்புத் தரவில்லை.

20 சதவிகிதத்திற்கு மேலே நாங்கள் கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லிட்டார்கள். எஞ்சியதை சில தனிப்பட்ட வர்த்தகச் சூதாடிகள், பஞ்சாப், அரியானா மாநிலங்களுக்குச் சென்று ஏராளமான கோதுமையை விலைக்கு வாங்கிச் செல்ல, அந்த மாநில அரசுகளே அனுமதித்து இருக்கிறார்கள், இதன் விளைவாக இந்திய அரசாங்கத்தின் ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா என்ற நிறுவனம் திட்டமிட்டபடி கோதுமையைக் கொள்முதல் செய்ய முடியவில்லை. திட்டமிட்டபடி 95 லட்சம் டன் கொள் முதல் செய்திருக்க வேண்டும், ஆனால் முடியவில்லை. இதன் விளைவாக இந்தப் பிரச்சினையில் பிரதமர் அவர்கள் தலையிட்டு சொன்னபிறகு, பஞ்சாப் மாநிலம் ஏறத்தாழ 44 லட்சம் டன்னும், அரியானா மாநிலம் 17 லட்சம் டன்னும் தருவதற்கு ஒப்புக் கொண்டன. ஆனால் அவர்கள் கொடுக்கவில்லை. பிரதமர் உத்தரவிட்டும் கூட, அவர்கள் கொடுக்கவில்லை. இதன் விளைவாக தமிழகம் போன்ற கோதுமை பற்றாக்குறை மாநிலங்கள் தங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச கோதுமையை அவர்களாலே பெற முடியாத பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டது. இதற்குக் காரணம் என்ன? பஞ்சாப் அரசு பெரிய நிலப் பிரபுக்களுக்கு வர்த்தகச் சூதாடிகளுக்கு உதவி செய்வதற்காக அவர்களோடு சேர்ந்து நடத்திய சொள்ளையின் காரணமாக நமது தமிழகத்திற்குக் கோதுமை கிடைக்க வில்லை. இதையும் ஆளுநர் உரையில் சுட்டிக் காட்டி இருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யவில்லை.

அடுத்து, மின்சாரத் துறையைப் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. தமிழகம் மின்சாரப் பற்றக்குறை உள்ள மாநிலம். அண்டை மாநிலமான கருநாடகம் மின்சாரத்திலே தன்னிறைவு பெற்ற மாநிலம். இன்னொரு அண்டை மாநிலமாக உள்ள கேரள மாநிலமும் மின்சார உற்பத்தியிலே தன்னிறைவு பெற்று இருக்கிறது. கருநாடக மாநிலத்தில் மேலும் மின்சார உற்பத்தியைப் பெருக்க முடியும். அதற்கான வாய்ப்பும், வசதியும் அவர்களுக்கு இருக்கிறது.

'Karnataka can tap upto 6,500 K.W. of power from various rivers which flow into the State, whose installed capacity in

1979-80 is 1400 m.ws. என்று தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது 6,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அந்த மாநிலத்தில் வாய்ப்பு இருக்கிறது. இருப்பினும், 1,400 மெகாவாட் மின்சாரம் தான் இது வரையில் உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நிறைய உற்பத்தி செய்வதற்கான வழி வகைகள் இருந்தும்கூட, பற்றாக் குறை மாநிலமான தமிழகத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் அண்மையில் அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்தார்கள். அதைத்தான் இந்த நேரத்தில் நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த ஆண்டு சனவரி 1 ஆம் தேதி புத்தாண்டுச் செய்தியாக கருநாடக மாநில முதலமைச்சர் திரு. குண்டுராவ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கருநாடக மாநிலத்தின் எக்ஸ்பர்ட் கமிட்டி வகுத்த மேகதாது திட்டத்தை ஏற்றுக் கொண்டு கருநாடக மந்திரி சபை அங்கீகாரம் அளித்து விட்டது, அதைச் செயல் படுத்தப் போகிறது என்று அறிவித்தார்கள். அந்த மேகதாது என்கிற இடம் தமிழகத்தின் எல்லையில் இருக்கிறது. அங்கே மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிப்பதின் மூலம் 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்போகிறோம் என்று சொல்கிறார்கள். அதற்கு உலக வங்கி கடன் உதவியும் அளிக்கப்போகிறது என்கிற செய்தியையும் சொல்லியிருக்கிறார்கள். அந்த மாநிலம் மின் உற்பத்தியை அதிகரித்துக்கொள்வதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. அந்த மாநிலமும் வளம் பெறவேண்டும், உயர்வு பெறவேண்டும் என்பதில் நமக்கு எந்தவிதமான அபிப்பிராயபேதமும் இல்லை. ஆனால் தமிழகத்தின் தலையைத் தடவிதான் அந்த மாநிலம் தழைக்க வேண்டும் என்று சொன்னால், அது சரியில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டி இருக்க வேண்டும்.

மேகதாது தமிழகத்தின் எல்லைக்கு அந்தப் பக்கத்திலே கருநாடக எல்லையிலே இருக்கிறது. ஆனால், தமிழகத்தின் இந்தப் பக்கத்திலே ஹோகேனக்கல் இருக்கிறது. அந்த இடத்திலே ஹோகேனக்கல் மின்சார நிலையம் இமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகாலமாக நாம் திட்டமிட்டு வருகிறோம். அங்கே ஒரு மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிப்பதன் மூலம் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய நாம் திட்டமிட்டு வந்தோம். அந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் தமிழகத்தின் தொழில் வளம செழிக்கும் என்று நாம் பல்லாண்டு காலமாகக் கருதி வந்தோம். 1961 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திட்டத்தைப் பற்றி நாம் தொடர்ந்து பேசிக்கொண்டு வருகிறோம். ஆனால் அந்தத் திட்டத்திற்கு திட்டக் குழுவும், மத்திய அரசும் ஒப்புதல் கொடுக்கவில்லை. காரணம், கருநாடக மாநிலம் அதற்கு ஆட்சேபனை செய்கிறது என்று சொல்லி ஒப்புதல் கொடுக்க மறுத்தார்கள். ஆனால் இன்றைக்கு மேகதாது திட்டத்





திற்கு மத்திய அரசும், திட்டக் குழுவும் ஒப்புதல் வழங்கியிருக்கிறதா? அப்படி வழங்கியிருக்குமானால், அதற்கு தமிழக அரசு ஏதேனும் ஆட்சேபனை செய்து இருக்கிறதா? அப்படி ஆட்சேபனை செய்து இருந்தால், அதை மீறி அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அந்தத் திட்டத்தைத் தொடங்கப் போகிறார்களா? ஏனென்றால், 1982-ம் ஆண்டுக்குள்ளேயே இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்றும், விரைவில் அது முடிக்கப் பட்டு விடும் என்றும் திட்டவட்டமாக அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு நம்முடைய அரசு கண்டனம் தெரிவித்து இருக்கிறதா என்கிற வினாவைத்தான் நான் இந்த அவையில் எழுப்ப விரும்புகிறேன். ஆளுநர் உரையில் அது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதேபோல், இந்த ஹோகேனக்கல் திட்டத்திலே நம்முடைய மின்சார வாரியம மெத்தனமாக நடந்து கொண்டதோ என்கிற சந்தேகம் இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்சார வாரியத்திலே இருக்கின்ற 12 சீப் இன்ஜினியர்களிலே 6 பேர் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே, ஹோகேனக்கல் திட்டத்திலே அவர்கள் அக்கரை காட்டவில்லையோ என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. அதை நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டும் என்று இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.40]

அதைப்போல நெய்வேலி மின்சாரத் திட்டத்தை விஸ்தரிக்கும் முயற்சியிலே மத்திய அரசு எந்தவிதமான அக்கரையும் காட்டவில்லை. அதன் காரணத்தாலும் இங்கே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது.

கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் பெற தமிழக அரசும் கேரள அரசும் ஒரு ஒப்பந்தம் செய்து, அதன் அடிப்படையில் அவர்கள் மின்சாரம் தருவதும் நாம் பதிலுக்கு மாதம் ஒன்றுக்கு 300 டன் அலுமினியம் கொடுப்பதுமாக ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால் மத்திய அரசு தலையிட்டு அதை ரத்து செய்து விட்டது. அதற்கு தமிழக அரசு எந்தவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

இன்னொரு அபாயமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ஜனவரி 30-ந் தேதி மத்திய விசைத்துறைச் செயலாளர் சதிஷ்சந்திரா என்பவர் முக்கியமான ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு மின்சார உற்பத்தியையும் விநியோகத்தையும் மத்திய அரசு அமைப்பின்கீழ் கொண்டுவர இருக்கிறது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். மின்சார உற்பத்தி-விநியோகத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானால் நம்முடைய கதி என்ன? அதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதா அல்லது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறதா என்று ஆளுநர் உரையில் சொல்லப்படவில்லை.

மின்சார விநியோகத்தில் இந்தியாவிலே எல்லா மாநிலங்களுக்கும் முன்னணியில் இதுவரை தமிழ்நாடு இருந்து வந்திருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டில் 63,428 கிராமங்களுக்கு மின்சாரத்தை கொடுத்திருக்கிறோம். 8,87,227 பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம்.

இதை எப்படி நம்மாலே செய்ய முடிந்தது என்றால் மின்சார உற்பத்தியும் விநியோகமும் மாநில அரசின் பொறுப்பில் இருந்ததால், நம்முடைய கட்டுப்பாட்டில் இருந்ததால் செய்ய முடிந்தது. இதை மத்திய அரசு அல்லது மத்திய அரசைச் சேர்ந்த ஒரு அமைப்பு எடுத்துக் கொண்டால் நம்முடைய விஸ்தரிப்புத் திட்டங்கள் நிச்சயம் தடைப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் ஆளுநர் உரையில் அதுபற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை.

அடுத்தபடியாக காவிரி நீர் பற்றி ஆளுநர் உரையில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. காவேரி நதி நீர் பற்றிய பேச்சு வார்த்தை பல்லாண்டுகாலமாக நடைபெற்று வந்தும்கூட இதுவரையில் எந்த முடிவும் எட்டப்பட வில்லை. முடிவுக்கு வராமலிருப்பது யாருக்கு கஷ்டம்? பேச்சுவார்த்தையை இழுத்துக் கொண்டிருப்பதால் தமிழகத்திற்குத்தான் நஷ்டமே தவிர கர்நாடகத்திற்கு அல்ல. காரணம் அவர்கள் உற்பத்தியாகும் இடத்தில் இருக்கிறார்கள்; நாம் நதி ஓடி வருகின்ற இடத்தில் இருக்கிறோம். ஆகவே, நஷ்டம் நம்மைத்தான் சேரும். அவர்கள் கிருஷ்ணராஜசாகர் அணையில் நீர் நிறைந்து, வீணாக வழிந்தோடும் தண்ணீரைத்தான் பல்லாண்டுகாலமாக நமக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உரிய நேரத்திலே நமக்கு காவேரி நதி நீரை விடாத காரணத்தா தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலே எவ்வளவு நஷ்டம் ஆண்டுதோறும் ஏற்படுகிறது என்கிற ஒரு விபரத்தையும் இங்கே வைக்க விரும்புகிறேன்.

1976–77. ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 2.5 இலட்சம் ஏக்கரில் நெல் பயிரிட்முடியாத பாதகமான நிலைமை திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ஏற்பட்டது. அதனால் 4,11,000 டன் நெல் உற்பத்தி குறைந்தது; விவசாயிகளுக்கு 48 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பிளானிங் கமிஷன் அனுமதி இல்லாமல் கர்நாடக அரசு ஹேமாவதி, கபினி ஆறுகளிலே அணை கட்டியதை நம்முடைய அரசாங்கம் ஆட்சேபித்தது. ஆனால் மத்திய சர்க்கார் பேசாமல் இருந்ததால் அவர்கள் அணைகளை கட்டி முடித்தார்கள். அது மட்டுமல்ல. இன்றைக்கு மேகதாது என்ற இடத்தில் அணை கட்ட முயற்சி செய்கிறார்கள். காவிரி நதி நீர் பிரச்சனையில் தொடர்ந்து கர்நாடகம் தமிழகத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறது. அதனால் நம்முடைய மக்கள் நலன் பாதிக்கப்





படுகிறது. அதுபற்றி ஆளுநர் உரையில் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் கண்டனம் தெரிவிக்கப் படவில்லை.

அதைப்போல மேற்குத் திசையில் பாய்ந்தோடும் நதிகள் பற்றியும் இன்னும் திட்டவட்டமான ஒரு முடிவு வரவில்லை. அதுவும் வரன்முறை இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. கேரள மாநிலத்தில் ஓடுகின்ற பல்வேறு நதிகளில் மிஞ்சுகின்ற தண்ணீரின் ஒரு சிறு பகுதியை தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்தக் கோரிக்கையை அவர்கள் ஏற்பதாக இல்லை. கேரளத்தில் 1500 டி.எம்.சி. தண்ணீர் சர்பிளஸாக இருக்கிறது என்று மத்திய நீர் குழு (சென்ட்ரல் வாட்டர் கமிஷன்) சொல்லியிருக்கிறது. அதிலிருந்து 200 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்குக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாம் கேட்பது வெறும் 50 டி.எம்.சி. தண்ணீர்தான். அதைக்கூட கொடுக்க மறுக்கிறார்கள்.

ஆனால் அதேநேரத்தில் நாம் என்ன செய்கிறோம்? கேரளத்தில் ஓடுகிற பல ஆறுகள் சாலியாறு, பரதப்புழா, சாலக்குடி, பெரியாறு, போன்ற ஆறுகளின் 'கேச்மென்ட் ஏரியா' நம்முடைய தமிழ்நாட்டின் எல்லைக்குள் இருக்கிறது. அப்படி இருந்தும் நாம் அதை தடுக்கவில்லை. அணை கட்டி தண்ணீரை தேக்கி, நாமே வைத்துக்கொள்ளவில்லை. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகி கேரளத்தில் பாய்ந்து, அந்த மாநலத்தை வளம்கொழிக்கச் செய்கின்றன அந்த ஆறுகள். அதிலே நமக்கு மகிழ்ச்சிதான், வருத்தம் ஒன்றும் இல்லை. ஆனால் அவர்களுக்கு அந்த எண்ணம் இலலை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டின் எல்லையில் ஆளியாறு அணை கேச்மென்ட் ஏரியாவும், அணைக் கட்டும் அமைந்திருக்கிறது. இந்த அணையிலிருந்து பாய்கிற தண்ணீர் மூலம் பாலக்காடு, மல்லபுரம் மாவட்டங்கள் செழித்து வளம்பெறுகின்றன. நாம் அதற்கு இடையூறு எதுவும் செய்யவில்லை. ஒத்துழைப்பு கொடுக்கிறோம். நாம் இப்படி செய்தாலும்கூட நமக்கு அந்த மாநிலத்தில் வீணாகும் தண்ணீரின் ஒரு பகுதியை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவித்த பின்னாலும் அதைக் கொடுப்பதற்கான காரியங்களில் கேரளம் ஈடுபடவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து கிருஷ்ணா—பெண்ணையாறு திட்டம். கிருஷ்ணா பெண்ணையாறு திட்டத்தை இந்த அரசு அமுல் நடத்துவதாக அறிவித்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதிலே ஒரு சிறு திருத்தம். கிருஷ்ணா—பெண்ணையாறு திட்டம் 1981-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து

[1982 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதற்காகத்தான் பொது ஏலத்திலே விடுகிறார்கள். பொது ஏலம் வரும்போது எவ்வளவு குறைந்த விலைக்கு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னையில் உற்பத்தியாகக்கூடிய கழிவு மொத்தம் எவ்வளவு? அந்தக் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு அரசு என்னென்ன செயற்குறிப்புகளை வைத்திருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சென்னையிலே ஒரு நாளைக்கு 1,500 டன் கழிவு உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கின்றது. அவற்றை உரமாக மாற்றுவதற்கு தற்போது சைதாப்பேட்டை பகுதியில் ஒரு திட்டத்தை அமல் படுத்திக்கொண்டிருக்கிறோம். கம்போஸ்ட் ப்ளான்ட் என்ற வகையிலே ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கம்போஸ்ட் உரம் நகராட்சிகளில் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பதற்குக் காரணம் அதை வாங்கவேண்டிய விவசாயிகள் அந்தத் தொலைவில் இருந்து வரவேண்டி இருக்கின்றது. ஆகவே பெரிய நகராட்சிகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் 20 மைல் சுற்றளவுக்காவது 5, 6 இடங்களில் கம்போஸ்ட் உர டெப்போக்களை அமைத்தால் விவசாயிகள் சுலபமாகப் பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும். இந்த யோசனையை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யும்.

## தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துகொண்டோர் எண்ணிக்கை

*வினா எண். 38—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் வேலை கேட்டு பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இதுவரை எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது?



1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) 32,102 பேர்கள்.

(ஆ) 26,887 பேர்கள்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வேலை வாய்ப்பு பெற்றவர்களுக்கு ஊதியமாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ? செய்து முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை பற்றியும், அதற்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றியும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது போன்ற புள்ளி விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களைத் தருகிறேன்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பினை அளிக்கும் வகையில் இத்தகைய திட்டங்களை அரசு செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதற்கான தனித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பதிவு பெற்றவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியின்படி தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 32,102 பேர்கள் பதிவு செய்து கொண்டவர்கள், அவர்களில் 26,887 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இந்தக் கேள்வி கேட்கப்பட்டு இருப்பது 7-வது மாதத்தில். ஆகவே இந்த நான்கைந்து மாதங்களில் எல்லோருமே வேலை பெற்றிருப்பார்கள்.

பேசப்பட்டு வருகின்ற ஒன்று. அது இன்றைக்குத்தான் ஓரளவிற்கு செயல்படுவதற்கு தொடங்கியிருக்கிறது. அதுவும் சென்னை நகரத்திற்கு குடி தண்ணீர் மட்டுமே என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆந்திரா, அரசு 15 டி. எம். சி. தண்ணீர் மட்டும் கொடுக்கப்போவதாக சொல்லியிருக்கிறது. ஆகவே சென்னை நகரத்திற்கு குடிதண்ணீருக்கு மட்டுமே என்ற அளவில் இந்தத் திட்டம் வரையறுக்கப்பட்டிருப்பதை நாம் திருத்தியாக வேண்டும்.

கிருஷ்ணாவிலிருந்து பெண்ணையாருக்கு தண்ணீர் கொண்டு வந்து, பெண்ணையாறு தெற்குக் கால்வாய், சென்னை கால்வாய் ஆகிய இரண்டு கால்வாய்க்களின் மூலம் சென்னை நகருக்கு தண்ணீர் கொண்டு வந்து, மதுராந்தகம் ஏரி வரை அந்தக் கால்வாய்க்களை வெட்டுவது என்பதுதான் அந்தத் திட்டத்தின் ஒரிஜினல் ஆகும். ஆனால் இன்றைக்கு சென்னை நகருக்கு குடி தண்ணீரோடு அதை நிறுத்துவது என்பது செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கக் கூடிய விவசாயிகளை பெரிதும் பாதிக்கும். ஆந்திர மாநில எல்லை வரை அந்தக் கால்வாய் விவசாயக் கால்வாயாக வருகிறது. சித்தூர் மாவட்டத்தில் 6 இலட்சம் ஏக்கர்களுக்கு பாசன வசதி அதனால் கிடைக்கின்றது. ஆகவே, அந்தக் கால்வாயை இங்கேயும் பாசனக் கால்வாயாக அமைப்போமேயானால், செங்கல்பட்டு மாவட்டத்தில் 5 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். ஆகவே அதை குடி தண்ணீர் கால்வாயாக மட்டும் இல்லாமல், பாசனக் கால்வாயாகவும் மாற்றுவதற்கு மத்திய அரசாங்கத்திடம் நாம் போராடி அதற்கான உரிமையைப் பெற வேண்டும்.

ஏற்கெனவே 1961 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மத்திய கமிஷன் 15 டி. எம். சி. தண்ணீர் கிருஷ்ணா நதியிலிருந்து தமிழகத்திற்கு கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறது. அது மக்கள் சபையிலும் அறிவிக்கப்பட்டது. ஆனால் விவசாய காரியங்களுக்கும் அந்த நீர் வேண்டுமானால் மேலும் 55 டி. எம். சி. தேவைப்படும். ஆகவே, 70 டி. எம். சி. தண்ணீரை கிருஷ்ணா நதியிலிருந்து அளிக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை இந்த அரசாங்கம் வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சேது சமுத்திரம் திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றியும் ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. 1860 ஆம் ஆண்டிலிருந்து பேசப்பட்டு வந்த மிகப் பழமையான திட்டம். இந்தத் திட்டத்திற்கு பின்னாலே தோன்றிய சூயஸ் கால்வாய் திட்டம், பனாமா கால்வாய் திட்டம் போன்றவைகள் எல்லாம் வெட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் சேது சமுத்திரம் திட்டம் வருமேயானால் தமிழகத்தின் தென் மாவட்டங்கள் நிச்சயமாக வளம் பெறும். தொழில் ரீதியிலே செழிக்கக் கூடிய நல்ல வாய்ப்பும் இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி பல கமிட்டிகள் மத்திய அரசாங்கத்தினாலே அமைக்



கப்பட்டு விட்டன. அன்னியர் ஆட்சியிலிருந்த காலத்திலேயும் சரி, சுதந்திரம் பெற்ற பின்னாலும் சரி, பல கமிட்டிகள் அமைக்கப்பட்டு இது மீண்டும் மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதே தவிர, இந்தத் திட்டம் செயல்படத்தக்கதொரு நிலையில் இன்னமும் வரவில்லை. இந்தத் திட்டத்தின் மூலம் என்னென்ன லாபம் கிடைக்கும் என்பதை சர். இராமசாமி அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட கமிட்டி மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறது.

(பிற்பகல் 12—50)

இந்தத் திட்டத்தின் மூலம் மேற்குக் கடற்கரையிலிருந்து சென்னைக்குக் கப்பல்கள் போகிற தூரத்திலே 350 மைல்கள் குறையும். அதைப் போலவே ஒன்றரை நாளும் மிச்சமாகும். இதன் விளைவாக எரிபொருளும்ஏராளமாக மிச்சமாகும். இந்த சேது சமுத்திரம் திட்டம் ஒரு லாபகரமான திட்டமாகும். இதன் மூலம் 30 ஆண்டுகளில் 14 சதவீதம் வட்டி வரக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டம் லாபகரமானது என்பதும் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலே 80 சதவீதம அன்னியச் செலாவணியாகவே நமக்குக் கிடைக்கும். இதன் மூலம் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற குளச்சல் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி, நாகப்பட்டிணம், காரைக்கால், புதுச்சேரி, கடலூர் போன்ற துறைமுகங்கள் பெரிய வளர்ச்சியை அடையும். அதுமட்டுமல்ல இலங்கையிலே ஈழ நாட்டிலே தமிழர்கள் வாழ்கின்ற பகுதியில் இருக்கின்ற காங்கேசன் துறை மற்றும் துறைமுகங்கள் மற்றும் ராமேஸ்வரம் துறைமுகம் ஆகியவை இதனால் செழிப்படையும். இலங்கை நாட்டிற்கும், அங்கே வாழ்கின்ற தமிழர்களுக்கும் இதனால் லாபம் கிடைக்கும்.

ஆனால் இவ்வளவு லாபகரமான திட்டம் என்ன காரணத்தாலோ தமிழ்நாட்டிலே எத்தனையோ அரசாங்கங்கள் மாறி மாறி வந்து வற்புறுத்தியும் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது என்பதை குற்றச்சாட்டாக இந்த அவையின் முன்வைக்க விரும்புகின்றேன். இலங்கையிலே முன்பு ஆண்ட திருமதி பண்டார நாயக்கா அவர்கள் இந்த சேது சமுத்திரம் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் கொழும்பு துறைமுகத்தினுடைய முக்கியத்துவம் போய்விடும். ஆகவே இந்தத் திட்டத்தை அமல் நடத்தக் கூடாது என்று இந்திய அரசைக் கேட்டுக் கொண்டதன் காரணமாக இந்திய அரசு இந்தத் திட்டத்தில் அக்கறை காட்டாமல் இருப்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தினுடைய மிக முக்கியமான தேவை ப்ராட் கேஜ். அதாவது அகல இரயில் பாதை. சென்னைக்கு வடக்கே தான் அகல இரயில் பாதை இருக்கின்றதே தவிர சென்னைக்கு தெற்கே அகல இரயில் பாதை இல்லை. இதன் காரணமாக பல

தொழில் வளர்ச்சிகள் தடைபட்டுப் போய் இருக்கின்றன. திருச்சிக்குத் தெற்கே உள்ள இடங்களில் பெருந்தொழில் எதுவும் இல்லை. பெருந் தொழில்கள் வேண்டும் என்றால் அகல இரயில் பாதை இங்கே இல்லையே எப்படி ஆரம்பிப்பது என்று கேட்கிறார்கள். அகல இரயில் பாதை வேண்டும் என்றால் பெரிய தொழில்கள் இல்லையே, ஆகவே அகல இரயில் பாதை போட்டு என்ன பிரயோசனம் என்று சொல்கிறார்கள். அதாவது பைத்தியம் தீர்ந்தால்தான் கல்யாணம் ஆகும் என்று சொல்கிறார்கள். பிறகு கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தீரும் என்று சொல்கிறார்கள். இப்படி மாறி மாறிச் சொல்லி தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியில் மத்திய அரசு அக்கறை காட்டவில்லை. ஆகவே பிராட்கேஜ் இங்கே வரவில்லை. இப்போது ஒரு புதிய அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் வரை உள்ள பாதை ப்ராட் கேஜாக ஆகி இருக்கின்றது. கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலி வரையிலும் ப்ராட்கேஜ் போடப்படுகின்றது. திருநெல்வேலி உட்பட திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில் பகுதிகளை திருவனந்தபுரத்துடன் இணைத்து திருவனந்தபுரம் டிவிஷன் வருகின்றது. சேலத்திலே இருந்து திருப்பத்தூருக்கு ஒரு ப்ராட்கேஜ் போடுவதாக ஒரு திட்டம் அமலாகிக் கொண்டிருக்கின்றது. திருப்பத்தூர் சேலம் தொகுதிகளை இணைத்து பெங்களூருடன் சேர்த்து பெங்களூர் டிவிஷன் ஏற்படுத்துகிறார்கள். ஏற்கனவே கோவை, ஈரோடு பகுதிகள் இரயில்வே துறையின் உலவக்கோடு டிவிஷனிலே இணைக்கப்பட்டிருக்கின்றது. இப்படி டிவிஷன்கள் எல்லாம் அண்டை மாநிலங்களுக்குப் போய்விடுவதால் வேலை வாய்ப்பு போன்ற பிரச்சினைகளில் நம்முடைய மக்களுக்கு என்னென்ன நஷ்டங்கள் ஏற்படும், எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும் என்பதை எல்லாம் இந்த அரசு உணர்ந்து பார்த்து இதை மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

அடுத்து 20 அம்சத் திட்டத்திற்கு நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே வரவேற்பு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. 20 அம்சத் திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்துவதில் இந்த அரசு மத்திய அரசோடு ஒத்துழைக்கும் என்று திட்டவட்டமாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ரொம்ப சரி, மத்திய அரசோடு நீங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறீர்கள். ஆனால் நான் மேலே சொன்ன திட்டங்களிலே மத்திய அரசு உங்களுக்கு எந்த அளவுக்கு ஒத்துழைப்பு தருகின்றது. இந்தச் சட்டமன்றத்திலே எல்லாக் கட்சியினரும் உட்கார்ந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டத்திற்கு அங்கீகாரம் கொடுக்காமல் மத்திய அரசு திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றது.



இருபது அம்சத் திட்டத்தில் நான்காவது அம்சத் திட்டமாக நிலச் சீர்திருத்தத்தை அமல் நடத்தவேண்டும் என்று பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசும் அதைப் பிரசாரம் செய்கின்றது. நீங்களும் அந்தத் திட்டத்திற்கு ஆதரவு கொடுப்பதாக அறிவித்திருக்கின்றீர்கள். ஆனால் பினாமி ஒழிப்புச் சட்டத்திற்கு அங்கீகாரம் கொடுக்காமல் 1—2—1982-ல் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது. 11—8—1980-ல் இந்த மன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றது. அந்தச் சட்டம். ஒரு ஆண்டு ஐந்து மாதங்கள் கழிந்து இந்தச் சட்டம் சரியல்ல என்று மத்திய அரசு திருப்பி அனுப்புமேயானால் நாம் இந்த அவையில் ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பியதற்கு என்ன பொருள். நான் எல்லாத் தரப்பு உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஐந்து கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 234 பேர்கள் இங்கே வீற்றிருக்கிறோம். இந்த 234 பேர்களும் பல நாட்கள் உட்கார்ந்து விவாதித்து ஆலோசனை செய்து ஒரு சட்டத்தை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்புகிறோம். நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டத்தை விவாதித்து திருப்பினால் அவர்களும் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லலாம். ஆனால் மத்திய சட்டத்துறையில் உள்ள யாரோ சில அதிகாரிகள் கூடி இந்தச் சட்டத்தில் இது தவறு அது தவறு என்று சொல்லி வேண்டுமென்றே திருப்பிவிடுவார்களானால் இந்தச் சபையின் உரிமையை அது பறிப்பதாகாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். சட்டமன்றத்தின் மரியாதை போகாதா என்று அறிய விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்தில் எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றிய ஒரு சட்டத்தை, மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றி அனுப்பிய சட்டத்தை மத்திய அரசு திருப்பி அனுப்புகிறது. ஆனால் நீங்களோ ஆளுநர் உரையில் கூச்சமில்லாமல் மத்திய அரசுக்கு எல்லாவிதமான ஒத்துழைப்பும் அளிப்பதாகச் சொல்கிறீர்கள். இது எந்த வகையில் பொருந்தும். உங்களைப் பொறுத்த வரையில் நீங்கள் ஒரு தெளிவான முடிவுக்கு வந்தாகவேண்டும். மத்திய அரசின் தவறான கொள்கைகளுக்கு நீங்கள் துணை நிற்கப்போகிறீர்களா? அல்லது எதிர்த்து நிற்கப் போகிறீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன். 19-ம் தேதி நடைபெற்றது ஒரு வேலைநிறுத்தம். மத்திய அரசின் சில திட்டவட்டமான கொள்கைகளுக்கு எதிரான போராட்டம். தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் அதிலே ஆளும் கட்சியான அ.தி.மு.க. வும் பிரதான எதிர் கட்சியாகிய தி.மு.க.வும் மத்திய அரசை ஆதரிக்கின்ற நிலையை எடுத்தார்கள். அதன் விளைவு என்னவாயிற்று? அங்கே நாடாளுமன்றத்தில் தி.மு.க. வும், அ.தி.மு.கவும். போட்டிபோட்டுக்கொண்டு மத்திய அரசு எதைக் கொண்டு வந்தாலும் அவற்றை ஆதரிக்கின்ற நிலையை எடுக்கிறீர்கள். ஆனால் தமிழகத்தில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு போராடுவதாக அறிவிக்கிறீர்கள். இது எந்த வகையில் பொருத்தமானது என்று அறிய விரும்புகிறேன். ஒருவருக்கொருவர் நீங்கள் இரண்டு

பேரும் மாறி மாறி இந்திரா காங்கிரஸிடம் சரண் அடைந்திருக்கிறீர்கள் என்ற எண்ணம் மக்களிடையே பரவலாக ஏற்பட்டிருப்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சேது முத்திரத் திட்டமானாலும், ஹொகனக்கல் திட்டமானாலும், அகலப் பாதை திட்டமானாலும், கிருஷ்ணா நதித் திட்டமானாலும் ஆளும் கட்சியும் சரி பிரதான எதிர்காட்சியான தி.மு.க. வும் சரி இவற்றில் ஒன்றுபட்டு நின்று மத்திய அரசை எதிர்த்துப் பேராடி தமிழகத்துற்கு நன்மைகள் பெற்றுக் கொடுப்பார்களேயானால் அதை நாங்கள் அத்தனை பேர்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகத்தை தப் பாதிக்கிற பிரச்னைகளை, தமிழ்நாட்டில் எதிர்காலப் பிரச்சினைகளைப் பற்றி நீங்கள் அக்கறை காட்டவில்லை. ஆனால் இரண்டு பேர்களும் போட்டி போட்டுக்கொண்டு மத்திய அரசை ஆதரிக்கிற ஒரு நிலையை எடுத்திருப்பது வருந்துதற்குரியது. அரசியல் அபிப்பிராயங்கள் எது வேண்டுமானாலும் இருக்காலம். மத்திய அரசை முழுமூச்சாக எதிர்க்க வேண்டும் என்று நான் ஒரு நாளும் சொல்லவில்லை. ஏனெனில் மத்திய அரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான். ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும், அதில் சந்தேகமில்லை. அதை மறுக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டின் நலன்களைப் பாதிக்கிற பிரச்சினைகளில் கட்சி வேறுபாடு இல்லாமல் இந்தச் சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு நின்று தமிழ்நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும்.

இதே அவையில் மதிப்பிற்குரிய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது சென்னை நகரத்தை ஆந்திராவிற்கு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அது தமிழ்நாட்டுக்குத்தான் சொந்தம் என்று அதில் அவர்கள் பிடிவாதமாகச் சொன்னார்கள், சென்னை நகரம் ஆந்திராவிற்கும் தமிழ்நாட்டுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசு யோசனை கூறியது அப்படியானால் என் ராஜினாமாக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அப்போது ராஜாஜி அவர்கள் திட்டவட்டமாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டு மக்களின் நலன்களுக்கு எதிரான காரியத்தை செய்ய மாட்டேன். நான் பதவியை விட்டுப் போவதற்கு வேண்டுமானால் தயாராக இருக்கிறேன். என்று சொன்னார். தமிழக மக்களுக்கு எதிரான காரியத்தை செய்யமாட்டேன் என்று உறுதியாக நின்றதால்தான் சென்னை நகரம் தமிழ்நாட்டுக்கு கிடைத்தது.

(பிற்பகல் 1.00)

அதேபோல் தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய கட்சியின் ஒப்பற்றத் தலைவரான அன்றைய தினம் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் [illegible]





தெரிவித்த தட்சிண பிரதேசம் என்ற கருத்திற்கு பல கட்சிகள் தமிழகத்திலே எதிர்ப்பு தெரிவித்தன. காமராஜ் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்து கொண்டு, தன்னுடைய கட்சியின் மாபெரும் தலைவர், இந்த தேசத்தின் பிரதமர் அவ்வாறு கூறிய போது தமிழ்நாட்டில் உள்ள நிலைமையைப் பார்த்து, அதற்கான முறையிலே காமராஜ் அவர்கள் முடிவெடுத்து தட்சிணப் பிரதேசத்திற்கு எதிராக குரல் எழுப்பினார்கள். அதேபோல் நிலையை நீங்களும் எடுக்கவேண்டும்.

இங்கே இருக்கக்கூடிய ஆளுங் கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சியானாலும் சரி குறிப்பாக இந்திரா காங்கிரஸ் கட்சி நண்பர்களானாலும் சரி, அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தின் நலனை பாதிக்கின்ற பல பிரச்சினைகளில் நீங்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறீர்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியிடம் விசுவாசம் காட்டுவது என்பதும் அக்கட்சி செய்த தவறுகளுக்கு உடந்தையாக இருப்பது என்பதும் வேறு; அப்படிச் செய்வதன் மூலம் நீங்கள் தமிழ்நாட்டின் நலனுக்கு மாபெரும் துரோகம் செய்கிறீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது சரியல்ல. அந்தப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினரும், மற்ற கட்சிகளும் இருக்கிறோம். நாங்கள் எங்கள் சக்திக்கு உட்பட்ட வகையிலே இத்தகைய பிரச்சினைகளுக்கு போராடுகிறோம். எங்களைவிட உங்களுக்கு சக்தி இருக்கிறது. இந்திரா காங்கிரஸ்காரர்களுக்கு டெல்லியிலே அவர் கட்சி பொறுப்பேற்றிருக்கிறது. ஆளுங் கட்சியான அண்ணா தி.மு.க. வும் பிரதம எதிர்க்கட்சியான தி.மு.க. வும் இந்திரா காங்கிரசோடு நெருக்கமாக இருக்கிறார்கள். இந்திரா காந்தி அவர்களோடு நட்புறவோடு இருக்கிறார்கள். இந்த மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராடினால் இந்தத் தமிழ்நாட்டிற்கான திட்டங்களை நிச்சயமாக பெற்றுக்கொடுக்க முடியும். எங்களுக்குத் தான் அந்த சக்தி இல்லை; ஒப்புக்கொள்கிறேன். உங்களுக்கு அந்தச் சக்தி இருக்கிறது. எனவே, இந்தத் தமிழ்நாட்டிற்கு அதன் நலனுக்கு உகந்த திட்டங்களில் அக்கறை காட்டி, அவைகளை வற்புறுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இங்கே இறுதியாக ஒன்றை அ.தி.மு.க. நண்பர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு அரசியல் உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறீர்கள்: அது உங்கள் கட்சி விஷயம். அதற்குள் நான் தலையிட விரும்பவில்லை. ஆனாலும்கூட, அவர்களோடு நல்ல உறவு வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக பல பிரச்சினைகளிலே நீங்கள் வாய் மூடி மௌனிகளாக இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாட்டின் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு உதாரணத்தைச்

சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய கர்நாடக மாநில முதலமைச்சர் குண்டுராவ் அவர்கள் மூலமாக இந்திரா காங்கிரஸ் கட்சியோடு நீங்கள் நெருக்கமாக இருக்க விரும்புகிறீர்கள் என்பதை அறிந்ததன் காரணமாக, அவர் அந்த பலவீனத்தைப் புரிந்துகொண்டு, மேகதாது திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதன் விளைவாக, இன்றைக்கு தமிழகம் ஹொகனேகல் திட்டத்தை இழந்திருக்கிறது. இந்திரா காங்கிரஸ் கட்சியோடு நீங்கள் அரசியல்ரீதியாக உறவு வைத்துக் கொள்ள முயற்சிப்பதன் காரணமாக, தமிழ்நாட்டின் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே தி. மு. க. வைப் பொறுத்தவரையில், அண்மைக் காலத்தில் தமிழகத்தின் நலனை முற்றிலும் மறந்துபோய், டெல்லியிலே மத்திய அரசாங்கம் என்ன சட்டங்களைக் கொண்டுவந்தாலும், கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கின்ற போக்கைக் கடைப்பிடிக்கிறது. இந்த இரண்டு கட்சிகளும் இப்படி இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாட்டின் நலன் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, இந்த ஆளுநர் உரையிலே இவைகளைப் பற்றியெல்லாம் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதையும், எனவே ஆளுநர் அவர்கள் உரை எங்களுக்கு மன நிறைவு அளிக்கவில்லை என்பதையும் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருத்தங்கள் மொழியப் பெற்று, வழிமொழியப் பெறவேண்டும்.

திரு. செ. சிவசாமி இருக்கையில் இல்லாததால், திருத்தங்கள் மொழியப் பெறவில்லை. திரு. எஸ். இராசாராமன் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் அதனை மொழிவார்.

**திரு. எஸ் இராசாராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

Add at the end, the following:

"but regret to note that no mention is made about the action taken to quell lawlessness in this State."

**திரு. மு. சுந்தரம் :** நான் திருத்தத்தை வழி மொழிகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, ரா. கிருஷ்ணன் ஆகியவர்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள் திரு. டி. மணி அவைகளை மொழிவார்கள்.





**திரு. டி. மணி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்—

"இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) 19 ஆம் தேதி நடந்த வேலை நிறுத்தத்தில் தமிழகத்தில் கலந்து கொண்ட உழைக்கும் மக்கள் மீது அரசு அடக்கு முறை செய்து துப்பாக்கி பிரயோகம் நடத்தியது, மேலும், பழிவாங்கும் எண்ணத்துடன் தொழிலாளர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்து இருப்பது, மற்றும் போலீஸ் நடவடிக்கை பற்றி விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் நீதிபதியைக் கொண்டு விசாரணைக் குழு அமைக்க ஏற்பாடு செய்யவேண்டிய அவசியம் பற்றியும் ;

(2) கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கரும்புக்குப் போதுமான விலை நிர்ணயம் செய்யவேண்டிய அவசியம் பற்றியும் ;

(3) கைத்தறி நெசவாளர்கள் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட வேண்டிய விதிகள், பலமாதங்களாகியும் வகுக்கப்படாமல் இருப்பதைத் தவிர்த்து துரிதப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் ;

(4) தமிழகத்தில் பல பகுதிகளில் குறிப்பாக, குமரி மாவட்டத்தில் நடந்த வகுப்புவாத, மதக் கலவரங்களைப் பற்றியும்,

(5) கட்டிடத் தொழிலாளர்கள் பிரச்சினைபற்றியும் ; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. இரே. இராசமாணிக்கம் :** நான் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் எஸ். ப. நெடுமாறன், குமரி அனந்தன், சோ. அழகர்சாமி, ஆண்டித் தேவர், ஆர். உமாநாத் ஆகியவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். திரு. ப. நெடுமாறன் அதனை மொழிவார்கள்

**திரு. ப. நெடுமாறன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ளவும்.

"மத்திய அரசின் 'வேலை நிறுத்தத் தடைச் சட்டம், தேசியப் பாதுக்காப்புச் சட்டம், விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்து 19—1—1982 ஆம் தேதி நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க தமிழக அரசு கை

யாண்ட அடக்குமுறையின் விளைவாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் மரணமடைந்துள்ளது பற்றியும், பலர் படுகாயம் அடைந்தது பற்றியும், ஆயிரக் கணக்கானவர்கள் சிறை பிடிக்கப்பட்டது பற்றியும், இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களைக் குறித்து உயர்மட்ட நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தை யொட்டி தொழிற்சங்க அரசியல் ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்பது பற்றியும் கூட்டுறவுத் துறை, போக்குவரத்துத் துறை போன்றவற்றில் ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பழி வாங்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்பது பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு** இருக்கையில் இல்லாததால் திருத்தம் மொழியப் பெறவில்லை.

**திரு. சு. பாலன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :—

''இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :

''சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது''.

**திரு. துரைமுருகன் :** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :

''(1) திண்டிவனம் தொகுதியில் பருவ மழை பெயருக்குப் பெய்ததாலும், பயிர்கள் எல்லாம் கதிர் அளவுக்கு வந்து, நீர்த் தேக்கங்களில் தற்சமயம் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தினால், பயிர்கள் கருகி சாகும் நிலையில் உள்ளன. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவதால், எல்லா வரிகளும், அவர்களது கடன்களும் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

(2) கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு உத்தியோக வாய்ப்பு அளிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும்,



(3) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புகள் நிறுத்தப்பட்ட காரணத்தினால் சுமார் 4,000 மாணவர்கள் கல்வி பெறும் வாய்ப்பை இழந்திருக்கும் நிலையைப் பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது''.

**திரு. ஏ. சந்திரசேகரன் :** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**திரு. இல. பலராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :

(1) தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் இரண்டாவது சட்ட வரைவு தொடர்பாக குடியரசுத் தலைவர் அவர்கள் மறுத்ததற்கான காரணங்களுக்கான பதில் 30—1—1982 ஆம் தேதி மாநில அரசுக்குக் கிடைத்தும் கூட, இதற்கான பதில் குடியரசுத் தலைவரிடம் இருந்து வரவில்லை எனக் கூறியிருப்பதைத் பற்றியும் ;

(2) கிராமப்புற அபிவிருத்திக்கான திட்டங்கள் ஜனத்தொகைக்கு ஏற்ப திட்ட அபிவிருத்தித் திட்டம் பற்றியும் ;

(3) பஞ்சாயத்துக்களை அபிவிருத்தி செய்யவும், கிராமங்களுக்கு வளர்ச்சித் திட்டங்கள் செய்ய வேண்டி பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்த வேண்டிய அவசியம் பற்றியும் ;

(4) பாரதப் பிரதமர் இந்திரா அம்மையார் அறிவித்த 20 அம்சத் திட்டம் செயல்முறை பற்றி அறிவிப்பு செய்ய வேண்டிய அவசியம் பற்றியும் ;

(5) சிறு விவசாயிகளுக்கு நலம் பயக்கும் விவசாயக் கடன் ரத்து போன்ற சலுகை வழங்குவதாகக் கூறி வந்ததை செயல்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் ; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**திரு. ஏ. சந்திரசேகரன் :** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் பி. முகமது இஸ்மாயில், பொ. விஜயராகவன் ஆகியோர் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். திரு. பி. முகமது இஸ்மாயில் அதனை முன்மொழிவார்கள்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :

மத்திய அரசின் வேலை நிறுத்தத் தடைச் சட்டம் தேசியப் பாதுகாப்புச் சட்டம், விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்து 19—1—1982 ஆம் தேதி நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க தமிழக அரசு கையாண்ட அடக்குமுறையின் விளைவாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் மரணமடைந்து உள்ளது பற்றியும், பலர் படுகாயம் அடைந்தது பற்றியும், ஆயிரக்கணக்கானவர்கள் சிறை பிடிக்கப்பட்டது பற்றியும் இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களைக் குறித்து உயர்மட்ட நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பது பற்றியும் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தையொட்டித் தொழிற்சங்க அரசியல் ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்பது பற்றியும், கூட்டுறவுத் துறை, போக்குவரத்துத் துறை போன்றவற்றில் ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட பழி வாங்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டுமென்பது பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

திரு. பொ. விஜயராகவன் : நான் திருத்தத்தை வழி மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் உ. சுப்பிரமணியன், ஏ. சந்திரசேகரன் ஆகியோர் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஏ. சந்திரசேகரன் திருத்தத்தை முன்மொழிவார்.

திரு. ஏ. சந்திரசேகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :

தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள்—இரண்டாவது சட்ட வரைவு தொடர்பாகக் குடியரசுத் தலைவர் அவர்கள் மறுத்ததற்கான காரணங்களுக்கான பதில் 30—1—1982 ஆம் ஆண்டு மாநில அரசுக்குக் கிடைத்தும் கூட, இதற்கான பதில் குடியரசுத் தலைவரிடம் இருந்து வரவில்லை எனக் கூறியிருப்பது வருந்தத்தககது "

திரு இல. பலராமன் : நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.



*திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆளுநர் உரையின் மீது பேசுகிற நல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக முதலில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகளுக்கு ஒரு பாயிரமாக இருக்க வேண்டுமென்று இங்கே பேசிய அருமை நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே ஆளுநர் உரை இன்றைய தினம் தமிழ்நாட்டில் இருக்கிற நிலைமைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லுகிற அதே நேரத்தில் இந்த அரசு எப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அரசு அமைந்த பின்னால் நாட்டிலே வறட்சி நிலைமை உருவாகி அந்த வறட்சியில் நாடு என்னவாகும் என்று மக்கள் எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் வறட்சிப் பணி நிலைமைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து அரசாங்கம் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவின் சார்பாக நாடு பூராவிலும் பரவலாகச் சுற்றி வந்து ஆங்காங்கு தேவையான பணிகளைச் செய்வதில் ஈடுபட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி அந்தக் குழுக்கள் அமைக்கப் பட்ட நேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் எல்லாக் கட்சியினரையும் இணைத்து குழுக்கள் அமைக்கப்பட்டன என்பதும் அப்படிக் குழுக்கள் பணியாற்றுகிறபோது எந்தக் கட்சிக்கும் முக்கியத்துவம் இல்லாத அளவுக்கு அங்கு ஆட்சிப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் நடந்து கொண்டார்கள் என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பேசும்போது வறட்சி நிலை துயர் துடைக்கும் பணியானாலும் சரி, அதைப் போல் தன்னிறைவுத் திட்டமானாலும் சரி, வேறு எந்தத் திட்டமானாலும் சரி அந்த வேலைகள் ஆளும் கட்சிக்காரர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டன, ஆளும் கட்சிக் காரர்கள்தான் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்—எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரை ஆளும் கட்சிக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எங்கள் கழகத்தில் இருக்கிறது, எங்கள் தோழர்களிடத்தில் மனக் குமுறல் இருக்கிறது என்பதைச் சொல்லுகிற அதே நேரத்தில் எங்களுக்குத் தரப்படவில்லை என்ற கவலை எனக்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணிகள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டனவா அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டனவா என்பதற்காக எங்கள் மாவட்டத்தில் ஒரு விசாரணைக் குழு அமைத்தால் கூட அதிலே தெளிவாகக் கூறவும் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. சௌந்திரராசன்] [1982 பிப்ரவரி 6

(பிற்பகல் 1.10).

ஏன் நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் இன்றைய தினம் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள் எப்போது பார்த்தாலும், சட்டமன்றம் கூடுகிற நேரத்திலே எல்லாம் ஆளுங் கட்சிக்குத்தான் வேலைகள் தரப்படுகின்றன, அதற்கு அதிகாரிகள் அவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள், ஆளுங் கட்சி கான்ட்ராக்டர்கள் இயக்கம் என்பதைப் போல் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றைய தினம் பேசிய திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் ஏதோ பெரம்பலூர் தொகுதிக்கு வந்து பாருங்கள், வந்து பார்த்தால் தெரியும் என்று சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன், அந்தப் பகுதி சுண்ணாம்பு கலந்த நீர் உள்ள பகுதி, மழை பெய்கிற காலத்திலே கூட பூமிக்கடியில் தண்ணீர் கிடைக்காது என்பதை அந்த நண்பரே உணர்ந்திருக்கிறார். ஆனால் இங்கே பேசுகின்றபோது அங்கே வாருங்கள், பாலைவனமாக இருக்கிறது, மயான சாலையாக இருக்கிறது என்று அவர் எந்த இடத்திலே பேசுகிறோம் என்பதை எண்ணாமல், எதைப் பற்றிப் பேசுகிறோம் என்று எண்ணாமல் இங்கே பேசிய காட்சியைக் கண்டோம். பெரம்பலூர் பகுதியிலே பெரும் பகுதியிலே வேலைகள் தி. மு. க.வினரால் அங்கே இருக்கின்ற அதிகாரிகளை அவர்கள் உருட்டி மிரட்டி செய்திருக்கிறார்கள் என்று நான் தெளிவாகச் சொல்ல முடியும். மற்ற வேலைகளையும் தி.மு.க.விலே ஏற்கனவே அனுபவம் உள்ளவர்கள் தொடர்ந்து அந்த ஆட்சியிலே அனுபவத்தைப் பெற்றவர்கள் அவர்களுக்கே உரிய முறையிலே இன்றைய தினம் அந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள். அதிலே ஏமாந்து வரக்கூடியவர்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்களே தவிர முன்னேற்றக் கழகத்தவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது திரு. துரைமுருகன் அவர்கள் அமைச்சர்களைப் பார்த்து நவராத்திரி கொலு பொம்மைகளைப் போன்று இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அவர் மயிலாப்பூரிலே குடி இருந்த காரணத்தினாலோ என்னவோ அல்லது அடிக்கடி மயிலாப்பூருக்குப் போய் வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலோ என்னவோ பார்க்கிறவர்களை எல்லாம் கொலு பொம்மைகள் என்று சொல்கிறார். அமைச்சர்கள் என்ன செய்யத் தவறியிருக்கிறார்கள் என்று சொன்னால் பாராட்டியிருக்க முடியும். அதை விட்டுவிட்டு அலங்காரமாக ஏதாவது வார்த்தைகளைச் சொல்லவேண்டும் என்பதற்காக நூல் நிலையத்திற்கு போய் பக்கம் பக்கமாகப் புரட்டிப்பார்த்து அதை எடுத்து இங்கே அலங்காரமாக வார்த்தைகளைச் சொல்லக்கூடிய முறையிலே பேசியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ் துறை பற்றி பத்திரிகையிலே வந்ததைப்பற்றி சொன்னார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னாலே தினமணி



1982 பிப்ரவரி 6] [திரு. கே. சௌந்திரராசன்]

பத்திரிகையிலே உத்திரப் புரதேசத்திலும் பீகாரிலும் போலீஸ் நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது என்பதைப் போட்டு இருக்கிறார்கள். 3 நாட்களாக தொடர்ந்து அதைப்பற்றிய கட்டுரைகள் வந்துகொண்டிருக்கின்றன. மகாராட்டிராவிலே கள்ளச் சாராயக்காரர்களும் கள்ளக் கடத்தல்காரர்களும் பாம்பேயின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து விட்டார்கள் என்பதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை உருவாகாமல் தமிழக காவல் துறை எப்படி செயல்பட வேண்டுமோ அப்படி செயல்படுவதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது, அப்படி ஈடுபடுகிற நேரத்திலே பேசுவதன்மூலம் காவல் துறையின் முடக்கம் ஏற்படுத்திவிட்டால் அப்படிப்பட்டவைகளுக்கு வழிவகுத்துவிடலாம் என்ற எண்ணத்திலே பேசுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஏதோ அலங்கார வார்த்தைகளைப் பேசிவிட்டு அமர்ந்து விடலாம் என்று கருதினால் நாட்டுமக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அந்தக் காலத்திலே இங்கே எப்படி உரையாற்றிக் கொண்டிருந்தார்கள்? அன்றைய தினம் மத்திய சர்க்காரைப் பார்த்து கேள்விக் கணைகளைத் தொடுத்த உறுப்பினர்கள் இன்றைய தினம் எப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும். பினாமி நிலஒழிப்பு சட்டத்தைப்பற்றிச் ஒரு வார்த்தை அவர்கள் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தேன். கூறவில்லை. காங்கிரஸ் கட்சி தலைவராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்கள் பிரதம மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு நான் இந்தச் சட்டத்தை கொண்டுவந்து அவர்களுக்கு புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துச் சொல்லி இந்தச் சட்டத்திற்கு அனுமதி பெறுவதற்கு தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கின்ற அந்தத் துணிவுகூட தி.மு.க.வைச் சேர்ந்தவர்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

ஆளுநர் உரையிலே விலைவாசி உயர்வுக்கான காரணங்கள் எவை என்று ஆளுங்கட்சி தெளிவாக பொறுப்புணர்ச்சியோடு எடுத்துக்காட்டியிருக்கிறது. இங்கே பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு நெடுமாறன் மத்திய சர்க்காரை கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இதிலே பக்கத்திற்குப் பக்கம் எதை எடுத்தாலும் அந்த நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின் கட்டண உயர்வை மத்தியசர்க்கார் வற்புறுத்தியது என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

வறட்சியின்போது கூட சோதுமையை சரியான அளவு தரவில்லை என்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. காவிரி நீர்ப் பிரச்சினையிலே மத்திய அரசு சரியாக நடந்துகொள்ளவில்லையென்பது உரையிலே சொல்லப் பட்டிருக்கிறது. பத்திரிக்கைகளைப் பாரத்தால் வெகு விரைவிலே தபால் தந்தி மணி ஆர்டர் கட்டணங்கள் உயர்த்தப்பட இருக்கின்றன என்று. இப்படி விலைவாசியை உயர்த்துவதற்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களை மேலும் அழுத்துவதற்கும் தான் இது பயன்படும் என்பதை சுட்டிக்காட்டாமல் தி.மு.கவினர் திருச்செந்தூருக்குக் காவடி எப்படி தூக்குவது என்பதைப்பற்றித்தான் எண்ணுகிறார்களே தவிர இவைகளைப்பற்றி எல்லாம் கவலைப்படவில்லை.

இரயில்வே கட்டணம் விரைவில் உயர இருக்கிறது. அவ்வாறு உயர்ந்தால் நாட்டில் என்ன நிலைமை ஏற்படும்? வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் வாழ்வு எந்த அளவிற்குச் சூன்யம் ஆகும் என்பதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளைப்பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்காமல், ஆளுங்கட்சியின் மீது அலங்கார வார்த்தைகள் கொண்டு ஏதாவது சொல்லி விட்டுச் சென்று விடலாம், அது பத்திரிக்கையிலே பெரிய கட்டம் கட்டமாக வரும் என்று கருதிப் பேசுகிறார்கள். நிச்சயமாக அவர்களைப் பற்றி எடைபோடும் மக்கள் வெளியிலே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. இராசு அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். கிராமங்கள் மயானங்களாக இருக்கின்றன. மகாத்மா காந்தியோடு எப்படிப் புரட்சித் தலைவரை ஒப்பிட்டுப் பேசலாம், அதற்காக ஒரு தீசிஸ்கூட சப்மிட் செய்யலாம் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். உங்கள் தலைவரை முன்பு முஜிபூர் ரகுமானோடு ஒப்பிட்டுப் பேசினீர்களே, அந்த முகம் எங்கே போயிற்று என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே, தமிழ்நாட்டில் எதிர்காலத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், தமிழ்நாட்டின் வளத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இன்றைய தினம் தமிழகத்திலே ஆற்றப்படுகின்ற பணிகளைப்பற்றி நினைத்துப் பார்க்காமல். அலங்கார வார்த்தைகளைக்கொண்டு அடுக்கு மொழிகளைக் கொண்டு ஆளுநர் உரையை விமரிசித்து இருக்கிறார்கள் என்றும் இல்லாத அளவிற்கு இன்றைய தினம் கிராமப்புறங்கள் வளம் பெற்றுக் கொண்டிருக்கின்றன; பள்ளிக்கூடக் கட்டிடங்கள், சுகாதார வசதிகள், சாலை வசதிகள், தண்ணீர்த் திட்டங்கள் போன்ற இப்படிப்





பட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம்கிராமங்கள் ஒளிமயமான எதிர்காலத்தை அடைந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து ஆளுநர் உரையை ஒருமுகமாக, மனதார ஏற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். காலையில் இரண்டு மணி நேரம் சபையின் நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு மணி நேரம் அதிகமாக சபையை நீடிக்கின்ற யோசனை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து சொல்ல வேண்டும்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவையின் உதவித் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய தலைவர்கள் பேசியிருக்கின்ற கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து விவசாய சங்கங்களின் சார்பிலேயும், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நாட்டிலே உள்ள அத்தனை விவசாயிகளும் இன்றைக்கு நெல்லுக்கு குவிண்டாலுக்கு 150 ரூபாயும், கரும்புக்கு 250 ரூபாயும் வேண்டுமென்று மாபெரும் கிளர்ச்சியை நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய அந்தக் கோரிக்கைகள் மிகவும் நியாயம் ஆனவைகளாகும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு மிகவும் குறைந்த விலை கிடைக்கின்ற நேரத்திலே விவசாயிகள் வாங்கி உபயோகிக்கின்ற பொருட்களான உரம் போன்ற அனைத்துப் பொருட்களின் விலையும் உயர்ந்திருக்கின்ற சூழ்நிலைகளைப் பார்க்கிறோம். இது தவிர இயற்கையின் பாதிப்புக்களாலும் அவர்களுடைய விவசாயம் பாதிக்கப்படுகிறது. தண்ணீர் விடுகின்ற முறையில் இருக்கின்ற சிக்கல் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டு விவசாயிகள் மாபெரும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். எனவே, விவசாயிகளுக்கு நியாயமான விலையைக் கொடுப்பதற்கு அரசு முன் வர வேண்டும்.

இப்படிச் சொல்லும்பொழுது மத்திய அரசாங்கம் நெல்லுக்கு அதிக விலை கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் விவசாயிகளுக்கு எதிராக இருந்தாலும்கூட தமிழக அரசு தமிழ்நாட்டின் விவசாயிகளுடைய நலன்களைக் கருதி, மேற்கு வங்க அரசு கொடுப்பதைப் போல குவிண்டாலுக்கு 125 ரூபாய் கொடுக்கிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல் பூராவையும் அரசே கொள்முதல் செய்வதற்

[திரு. எம். செல்லமுத்து] [1982 பிப்ரவரி 6

குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை மார்க்கெட்டிற்குக்கொண்டு வரும் நேரத்தில் வியாபாரிகள் இஷ்டப்படி கொள்முதல் செய்து கோடவுனுக்கு எடுத்துச் சென்று, விலை ஏறியதும் வெளியிலே கொண்டு வருகிறார்கள். எனவே, விவசாய உற்பத்திப் பொருட்களின் இடைத்தரகர்கள் கொள்ளை அடிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம கட்டுப்படுத்துகின்ற முறையிலே விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு நியாயமான, கட்டுப்படியான விலைகளை அரசு உடனடியாகத் தந்தாக வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20.]

அதோடு இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ள விவசாயத் தொழிலாளிகளுக்கு, விவசாயத் தொழிலாளர் கூலிச் சட்டம் கொண்டு வந்திருந்தாலும், அந்தக் கூலிச் சட்டங்களை அமுல் நடத்துவதற்கு இன்றைகசு ஆட்சியிலிருக்கிற அதிகாரிகளும், அதற்குரிய அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவில்லை. குறிப்பாக, இன்றைக்குத் தமிழகத்திலே விவசாயத் தொழிலாளிகளுக்குக் கூலிச் சட்டம் இருக்கிறது. ஆனால், அந்தக் கூலிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக விவசாயத் தொழிலாளிகள் இயக்கம் நடத்தினால், அங்கே அரசு அதிகாரிகள் தலையிட்டு, இருக்கக்கூடிய சட்டத்தைக்கூட அமுல் நடத்தாமல், கூலியைக் குறைத்துக் கொடுக்கக்கூடிய காட்சியினைப் பார்த்தோம்.

சமீபத்திலே செங்கை மாவட்டத்தில் மதுராந்தகத்தில கூலியைக் குறைத்துக் கொடுப்பதற்கான ஒப்பந்தங்களை சப் கலெக்டரே முன்நின்று செய்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, தமிழகம் முழுவதும் அறுவடைக்கு எட்டில் ஒன்று என்று இருக்கிறது. அதைத் தஞ்சை மாவட்டத்திற்கு விஸ்தரிக்க வேண்டுமென்று பல தடவைகள் நாங்கள் அரசுக்குக் கோரிக்கைகள் வைத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன. அங்கு விவசாயக் கூலிகள் 1981 அக்டோபர், செப்டம்பர் மாதங்களிலே கோரிக்கைகள் வைத்து போராட்டங்கள் நடத்திய நேரத்திலே, தஞ்சை மாவட்டத்திலே நல்லெண்ணம் படைத்த விவசாயிகள், இந்த விவசாயக் கூலிகள் கேட்பது நியாயம் என்று அத்தனை பேரும் கொடுத்தார்கள். ஆனால், ஒரு சில மிராசுதார்கள் மறுத்தார்கள். முடவாசல் தாலுக்காவிலே, திவிலங்குடி, அரசலங்காடு போன்ற பகுதிகளிலே ஒருசில—இரண்டொரு மிராசுதாரர்கள் மறுத்த காரணத்தாலே, அந்த மிராசுதாரர்களுக்கும் திருத்துறைப் பூண்டி டி. எஸ். பி. சிவதாஸ் அவர்கள் பாதுகாப்பு அளித்து,



1982 பிப்ரவரி 6] [திரு. எம். செல்லமுத்து]

மிராசுதாரர் சொன்ன கூலியை வாங்கமாட்டேன் என்று மறுத்த காரணத்திற்காக விவசாயத் தொழிலாளர்களை ஏறத்தாழ 160க்குமேற்பட்ட தொழிலாளிகளைக் கைது செய்து, அவர்கள் மேல் கொலை செய்ய முயன்றதாகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, செக்ஷன் 307-ன்கீழ் அவர்களின் மீது வழக்கு போட்டு, நாங்கள் அவைகளை ஆட்சேபித்து உரிய அதிகாரிகளிடம் மேல் முறையிட்ட காரணத்தால், 307-ஐ மாற்றி, வேறு பல செக்ஷன்களைப் போட்டு, திருவாரூர் கோர்ட்டிலே வழக்குகள் நடைபெற்றன. அவர்களை ஜாமீனில் எடுக்க வந்த பின்னால், அதே போலீஸ் அதிகாரிகள் தலையிட்டு, 186 விவசாயத் தொழிலாளிகளின் மீது ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்து மிகப் பெரிய கொடுமைகளுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். ஆனால் திருத்துறைப்பூண்டி டி. எஸ். பி. பெரும் பள்ளியில் கூலி கேட்டாரகள் என்ற காரணத்ினால், அகிருந்து 18, 15 மைல்களுக்கு அப்பால் திருவாரூரில் உள்ள, எங்களுடைய கட்சி அலுவலர்களை, தொண்டர்களை எல்லாம் கைது செய்தார்கள். வடகரையிலே கைது செய்தார்கள். அவ்வளவு பேர்களையும் கைது செய்து அங்கே மிகப் பெரிய போலீஸ் அராஜகத்தையே அந்த டி. எஸ். பி. உருவாக்கினார்கள். இப்படித் தொடர்ந்து தஞ்சை மாவட்டத்திலே நிலச்சுவாந்தாரர்களுக்கு ஆதரவாக போலீஸார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் பின்னணியாக இந்தியா பூராவும் 19-ஆம் தேதி நடைபெற்ற வேலை நிறுத்தத்தை ஒட்டி மாயவரம் தாலுக்காவிலே., திருமெய்ஞ்ஞானம் கிராமத்திலே, குறிப்பாக மாயவரம் சாவடித்துறை ஆய்க்களா செல்வராஜ், செம்பனார்கோயில் எஸ். ஐ. நடராஜன் ஆகியோர் அங்கே திருமெய்ஞ்ஞானம், பிச்சக்கட்டளை— போன்ற கிராமங்களுக்குச் சென்று துப்பாக்கிச் சூட்டை அநியாயமாக நடத்தியிருக்கிறார்கள். அங்கே ரோடுக்கும் பிச்சக்கட்டளைக்கும் ஏறத்தாழ 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. காலையிலேயே பஸ்ஸை மறித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், 8½ மணிக்கு அங்கே அந்த விவசாயிகள் வாழக்கூடிய, குறிப்பாக, ஹரிசனங்கள் வாழக்கூடிய பகுதிகளுக்குச் சென்று, எங்கள் உப தலைவர் திரு. உமாநாத் குறிப்பிட்டதைப் போல், எவ்வளவு அக்கிரமம் நடத்த முடியுமோ, அவ்வளவு அக்கிரமம் செய்து இருக்கிறார்கள். இது குறித்து, சம்பந்தப்பட்ட எஸ். பி., டி. ஐ. ஜி., ஸ்தலத்திற்கு வந்த பிறகு, நாங்களும், அவர்களோடு சென்று அனைத்தையும் காட்டியிருக்கிறோம். அவர்கள் பார்த்தார்களே தவிர, நிவாரணம் அளிக்கவில்லை. அது மட்டுமல்ல, ஒரு ஆசிரியர் தன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதற்காக, பாங்கியிலிருந்து பணம் வாங்கி வந்து வைத்திருந்தார். அதைப் போலீசார் கொள்ளை அடித்துச் சென்றிருக்கிறார்கள்.

இப்படி தஞ்சை மாவட்டம் முழுவதும் எந்தப் பிரச்சினை வந்தாலும், தொழிலாளர்களுக்கு எதிராக, குறிப்பாக தாழ்த்தப் பட்ட மக்களுக்கு விரோதமாக, வீடு புகுந்து தாக்குவதும், சட்டிப்

பானைகளை உடைப்பதும், கொடுமைப் படுத்துவதும் இன்றைக்கு வாடிக்கையாகிவிட்ட ஒரு விஷயமாகும். ஏன் செய்தீர்கள் என்று கேட்டால், மேலே இருந்து உத்தரவு வந்திருக்கிறது நாங்கள் என்ன செய்ய முடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி போலீசை வைத்து அரசாங்கம் நடத்துகின்ற சூழ்நிலையை மாற்றியாகவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வீடு கட்டும் சொசைட்டியின் மூலம் பணம் 3,700 வழங்கப்படுகிறது. அந்தப் பணம் போதுமானதாக இல்லை. இன்றையத்தினம் ஒரு வீடு கட்ட வேண்டுமானால் ஏறத்தாழ 9,000 ரூபாய்கள் தேவைப்படும், இன்றைக்கு இருக்கின்ற விலைவாசியில் இதுவும் போதாது. கொடுக்கும் அந்தப் பணம் கூட மூன்று தவணைகளாகக் கொடுக்கப்படுகிறது. அந்த 3 தவணைகளிலும் பணத்தை முறையாகத் தருவதில்லை. இன்றைக்கு கட்டிய வீடுகள் அடிமட்டத்திலும்; மேல் மட்டத்திலும் மண் சாந்து பூசிவிடுகிறார்கள். காலாகாலத்தில் பணம் கொடுக்காமல் இருப்பதால் கிட்டத்தட்ட 150 வீடுகள் என் தொகுதியில் நாசமடைந்து இருக்கின்றன. அவைகளை உடனடியாகக் கட்ட பணம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்த 3,750 ரூபாய் என்றிருப்பதை இப்போது 4,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பணம் கிடைக்காமல் சங்கடம் இருக்குமானால், 'ஸ்டேஜ் பை ஸ்டேஜாக' அதைப் பற்றி புகார் கொடுத்தால் விசாரிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 4,000 ருபாப் எந்தத் தேதியிலிருந்து வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 3,000 ரூபாயாக இருந்ததை 3,750 ஆக உயர்த்தி, பின்பு 4,000 ரூபாயாக உயர்த்துகின்ற கோப்பில் 10, 15 நாட்களுக்கு முன்னால் கையெழுத்து போட்டேன்.

திரு. எம். செல்லமுத்து : அதுவும் போதாது. இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது மிகவும் சிறப்பான திட்டம். அதிகாரிகளும், காண்ட்ராக்டர்களும் அங்கே இருக்கின்ற இன்ஜினியர்களும் சிறப்பாக செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனாலும் அவைகளிலே பல முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேசிய வேலை





வாய்ப்புத் திட்டத்தின் கீழ் குளங்கள் வெட்டப்படுவதாகவும் பராமரிக்கப்படுவதாகவும் சொன்னார்கள் கீவளூர் ஒன்றியத்திலே 40 குளங்கள் வெட்டப்பட்டிருப்பதாகத்தகவல்இருக்கிறதே. தவிர, குறிப்பாக வடகரை கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே ஒரு குளம் வெட்டினார்கள். அதிலே 1,900 ரூபாய்கள் தான் விவாசயிகள் வாங்கி வைத்திருந்தார்கள். ஆனால் 3,000 ரூபாய்க்கு வெட்டப்பட்டதாக அங்கே கணக்கிருக்கிறது. இது குறித்து டி. டி. யிடம் சொல்லியும் இது வரை நடவடிக்கை இல்லை. இப்படி ஏராளமான முறைகேடுகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, கொடுத்திருக்கக் கூடிய காலமும் போதுமான தாக இலலை, அந்த வேலையையும் சுறுசுறுப்பாக ஆக்க வேண்டும். உடனடியாக முடிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் இன்ஜினியர்கள் ஸ்தலத்தைப் பார்க்காமல் இருக்கக்கூடிய இடத்திலேயே இருந்து சாங்ஷன் செய்து விடுகிறார்கள். அதனால் ஏராளமான குறைபாடுகள் இருக்கின்னறன. இவகளை நிவர்த்தி செய்யக் கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதி திருவாரூரில் ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது: அந்த மிகப் பெரிய மருத்துவமனைக் கட்டடங்கள் அன்றைய தினம் ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே கட்டப்பட்டன. ஆனால் அந்த ஆஸ்பத்திரியில் போதுமான மருந்துகளோ, கருவிகளோ இல்லை. அந்த ஆஸ்பத்திரிக்கு வந்து போகக்கூடிய மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எதைக் கேட்டாலும், கருவி இல்லை மருந்து இல்லை என்று சொல்கிறார்கள். அந்தக் குறையை உடனடியாக போக்கவேண்டும். அந்த 'ஆஸ்பத்திரியினுடைய குறைகளை பற்றி டி. எம். ஓ. மூலமாக நல்வாழ்வு துறை அமைச்சருக்கு எழுதியும் கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

அதேபோல திருவாரூர் தொகுதியிலே 2, 3 பாலங்கள் கட்டப்படவேண்டும். அந்தத் திருவாரூர் தொகுதியையே இரண்டாகப் பிரிக்கின்ற வெட்டாற்றில் 2 பாலங்கள் கட்டவேண்டும் என்று அதிகாரிகளுக்கு மனுப்போட்டும் டி. டி. சி. ல் பேசியும், வெட்டுப் பிரேரணைக் கொடுத்தும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தத் தொகுதி மக்களுக்கு குறிப்பாக கீவளூர் ஒன்றியத்தில் ஓர்குடி என்ற ஊரிலிருந்து ஒரு பாலம் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஒன்றியத்தின் வட பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் தங்களுடைய தலைநகருக்கு வரவேண்டும் என்றால் 24 மைல்கள் சுற்றிக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இந்த 3 பாலங்களையும் கட்டிக் கொடுத்து அந்த மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சாரப் பல்புகளைப் பற்றிச் சொன்னார்கள். நாங்கள் விசாரிக்கின்றபோது, மின்சாரப் பல்புகள் தரமாக இல்லை. 3 நாட்கள் எரிந்தால் பின்பு எரியாது என்று சொல்லுகிறார்கள்

[1982 பிப்ரவரி 4

வறட்சிப் பகுதிகளில் கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டிகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 39—திரு. எம். கே. ராஜமாணிக்கம், திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கான குடிதண்ணீர் தொட்டிகளைக் கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்துள்ளது ?

(இ) எத்தனை தண்ணீர் தொட்டிகளைக் கட்ட உள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): ஒரு தண்ணீர் தொட்டிக்கு ரூ. 1,500 வீதம் 600 தொட்டிகள்கட்ட ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கோடை காலங்களில் எல்லா இடங்களிலும் கால்நடைகளுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால் எல்லா பஞ்சாயத்துக்களிலும் கால்நடைகளுக்கு குடிநீர் தொட்டி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 600 தொட்டிகள். 432 தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு தண்ணீர் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் தண்ணீர் தொட்டிகள் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்படி தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தொட்டிகள் எங்கெங்கு கட்டப்படுகின்றன ? திருவையாறுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 66 தண்ணீர் தொட்டிகள் கட்டுவதற்கு 99,000 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. திருவையாறு தொகுதியிலே தண்ணீர்த் தொட்டிகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.



1982 பிப்ரவரி 4]

கொருக்கை கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 40—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் கொருக்கை கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 3·79 இலட்சம் செலவில் திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள கொருக்கை கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம், 1981–82-ம் பிரிவுத் திட்டங்களின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டு, அமுலாக்கப்பட்டு வருகின்றது.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் கால்நடைகள் எண்ணிக்கையில் எந்த அளவுக்கு அதிகரித்திருக்கின்றது அல்லது கால்நடைகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருக்கின்றதா ?

[முற்பகல் 10·00]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் எண்ணிக்கை விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

எல்லாப் பகுதி மக்களுக்கும் விளக்குகள் எரிவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று கேட்டால் அதற்குப் போதுமான ஆட்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படி மக்களுக்கு ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளை சிறப்பாக ஆற்றுகின்ற நடவடிக்கைகளை செய்து, குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.30].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*திரு. பி. முகமது இஸ்மாயில்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நாங்கள் கொடுத்து இருக்கின்ற திருத்தத்தை வலியுறுத்தி சில கருத்துக்களை இப்போது இந்த மன்றத்திலே வைக்க ஆசைப்படுகிறேன். கடந்த சனவரி 19 ஆம் தேதி நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது அதைச் சந்திப்பதற்காக சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி நான் தெரிவிக்க விரும்புகிறேன். வேலை நிறுத்தத்தைச் சந்திப்பதற்காக தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எங்களுக்கு வியப்பைத் தந்தது. காரணம் எப்போதும் நலிந்தவர்களுக்காகப் பாடுபடும் சர்க்கார் என்று சொல்லிக் கொண்டு இருக்கிற சர்க்கார் 19 ஆம் தேதி நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு நேரடியாக இல்லாமல் இருந்தாலும், மறைமுகமாக ஆதரவு தருவதற்கு பதிலாக, அந்த வேலை நிறுத்தம் முழுமையாக வெற்றிகரமாக நடக்கக் கூடாது என்பதற்கு மத்திய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை விட அதிகமான கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, அதனை நாங்கள் கண்டிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களுடைய அணுகுமுறையைப் பார்க்கிற போது, மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை விட, இந்திரா காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநில சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை விட அதிகக் கடுமையான அளவிற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். சர்க்கார் அளித்த கருத்துக்களைத் தவறான முறையில் புரிந்து கொண்ட போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் காரணமாக தஞ்சாவூர் மாவட்டத்திலும், ஏனைய பல பகுதிகளிலும் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டு, 3 நபர்கள் பலியிடப்பட்டு இருக்கிறார்கள். பலர் காயம் அடைந்து இருக்கிறார்கள். பல நூற்றுக்கணக்கான பேர்கள் காராகிரகத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். பலருக்கு எதிராக இன்றைய தினம் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இந்த நடவடிக்கை





களைப் பார்க்கிற போது இங்கே ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் சர்க்கார், மத்தியில் ஆட்சி செய்கிற அரசை விட அரசுக்கு அதிக விஸ்வாசத்தைக் காட்டுகிறார்களோ என்று தோன்றுகிறது. ஆங்கிலத்தில் சொல்வார்கள். M e loyal ha h King இன்றைய தினம் தமிழக சர்க்கார் நடைமுறைப் யைப் பார்க்கிற போது, அவர்கள் M re loy ! han the Q een என்பதை நிருபித்துக் காட்டுவதாக இருக்கிறது என்பதைக் காண எங்களுக்கு வியப்பாக இருக்கிறது.

எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் 19 ஆம் தேதி நடைபெற்ற வேலை நிறுத்த தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக சில உயிர்கள் பலியிடப்பட்டு இருக்கின்றன. அந்த நடவடிக்கைகளின் தொடர்பாக பலர் காயம் அடைந்து இருக்கிறார்கள். அதைப் பற்றி விசாரணை செய்வதற்கு டிப்பார்ட்மென்ட்டல் என்கொயரி ஆர்டர் செய்து இருப்பதாகச் செய்திகள் வந்து இருக்கின்றன. இது போதாது. காவல் துறையின் தவறுகள் எங்கே எப்படி நடந்தது என்பதைக் கண்டு பிடிக்கும் வகையில் ஒரு "ஜுடிசியல் என்கொயரி" வேண்டும் என்று வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல், கூட்டுறவு நிறுவனங்களிலே, போக்குவரத்துத் துறையிலே வேலை பார்க்கின்றவர்களுக்கு, அவர்கள் முறைப்படி நோட்டீஸ் வழங்கி, அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தும் கூட, 8 தினங்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட மாட்டாது என்று கூறுகின்ற செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. பழி வாங்கும் நடவடிக்கைகளில் இந்தச் சர்க்கார் இறங்காது என்று நாங்கள் எண்ணுகிறோம் இறங்கக் கூடாது என்று இந்தச் சர்க்காரை நாங்கள் வேண்டுகிறோம்.

இந்த பந்த், இந்த வேலை நிறுத்தம் நடைபெகின்ற நேரத்தில், இந்த வேலை நிறுத்தத்திற்குத் தொடர்பு இல்லாத நபர்கள் கூட கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். திருச்சி மாவட்ட ஜனதா கட்சித் தலைவர், செயலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத் தலைவரும், மற்றும் பல தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தத்திற்கு எத்தகைய தொடர்பும் இல்லாத தோழர்கள், வேலை நிறுத்தம் நடைபெறுவதற்கு முன்பே அனாவசியமாக சர்க்காரால் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு எதிராக பலவிதமான வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும் அறிகிறேன். அந்த வழக்குகளை அரசு உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, அங்கே போலீஸ் நிலையத்தில் அவர்களை வைத்து இருந்தபோது அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்து தராமல் இருந்த காரணத்தால் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கும் நிலையை சர்க்கார் ஏற்படுத்தி இருக்கிறது என்கிற தகவலும் எனக்கு வந்து கொண்டு இருக்கிறது. எனவே இத்தகைய அடக்குமுறைகளை அண்ணா தி.மு.க. சர்க்கார் நிச்சயமாக மேற்கொள்ளக் கூடாது என்ற கருத்தை வழங்க விரும்புகிறோம்.

உள்ளாட்சித் தேர்தல் பற்றி இங்கே ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் கருத்து மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. உள்ளாட்சித் தேர்தல் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது என்று சொன்னார்கள். ஏன் தடை செய்யப்பட்டது என்ற காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தச் சர்க்கார் கொண்டு வந்த திட்டத்தில் அரிசனங்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதாகச் சொன்னார்கள். சில அடிப்படை நியதிகளை மேற்கொண்டு இப்படிச் செய்திருந்தால் நீதிமன்றத்தில் வழக்கு வந்திருக்காது. எனவே, வழக்கு முடிந்து உள்ளாட்சித் தேர்தல் நடப்பதற்கு முன்னால் தேர்தல் நடத்த முடியாமல் இருப்பதற்கான அடிப்படை குறைகளை நிவர்த்தி செய்வது, தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று, நான், இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்,

இப்போது இட ஒதுக்கீடு செய்திருப்பது கூட 1971 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை அடிப்படையில் என்று அறிகிறோம். 1981 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கு எடுக்கப்பட்டு, ஏற்கனவே முடிந்து விட்டது. அந்த அடிப்படையில் புதிய வாக்காளர்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்; தயாரிக்கப்பட்டிருக்கும் என்று கருதுகிறோம். எனவே, 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குபடி இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சித் தேர்தலுக்கு நீதிமன்றத்தில் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் தேர்தலை நடத்துகின்ற ஆசை ஆளும் கட்சிக்கு இருந்தால் நகராட்சித் தேர்தலையும் மாநகராட்சித் தேர்தலையும் நடத்த எந்தவிதமான தடையும் இல்லை; எனவே நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மக்கள் குறைகளை அரசு அல்லது அந்தந்த அமைப்புகள் கவனிக்காமல் இருக்கின்றன. அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் வாய்ப்பும் இல்லை. அந்த நிலையை மாற்றுவதற்கு





நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் மக்கள் பிரதிநிதிகள் இடம்பெற, இந்த அமைப்புகளுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை நிறுத்தத்தை அடக்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் இந்த சர்க்கார் சட்டம், ஒழுங்கு நிலை நிறுத்தப்படுவதில் என்ன நிலையை மேற்கொள்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சில காலம் சட்டம், ஒழுங்கு சரியாக இருந்தது என்று நான் பாராட்டியிக்கின்றேன் ஆனால் இன்றைக்கு பத்திரிகை செய்தியைக் பார்த்தால் கொள்ளை, கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்கின்ற செய்தி நமக்கு எட்டிக் கொண்டிருக்கிறது.

[பிற்பகல் 1!.40.]

அடுத்து கொள்கைகளைப் பொறுத்தவரையில் அது வடபுலத்திலே இருக்கின்ற பிரச்சினை என்றுதான் நாமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தோம். அங்கே இது இயல்பாகி விட்டது. ஏனென்றால் ஆளுகின்ற பொறுப்பிலே உள்ளவர்களுக்கும் கொள்ளைக் கூட்டத்திற்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் கூட பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளை நாம் பார்க்கிறோம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆளுகின்ற கட்சியில் இருப்பவர்கள் நல்லவர்கள் என்று நாம் நம்புகிறோம். எனவே அவர்களுக்கும் கொள்ளைக் கூட்டத்தினருக்கும் இடையே நிச்சயமாகத் தொடர்பு இருக்க முடியாது. எனவே இத்தகைய சம்பவங்கள் வடபுலத்தில் இருந்துதான் தென்னகத்திற்கு வந்திருக்கின்றன. இந்த நிலைமையினை மாற்றுவதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சட்டம் ஒழுங்கு நிலைமையைப் பாதுக்காக்க வேண்டிய அரசாங்கம் சிறிய போராட்டங்களை அடக்குவதிலேதான் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தற்போது மாணவர்கள் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. சிறிய விஷயங்களை பூதாகாரமாக மாற்றுவது அரசின் இயல்பாகி விட்டது. 9 மாணவர்கள் தங்களுடைய எதிர்ப்புக்களைத் தெரிவித்து கோரிக்கைகளை வைப்பதற்காக அடையாள உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். 12 மணியிலிருந்து 6 மணி வரையில் அவர்கள் அடையாள உண்ணாவிரதம் இருந்தால் அதனால் அரசாங்கத்திற்கு எத்தகைய தீங்கும் ஏற்படாது. அதனால் சட்டம் ஒழுங்கு நிச்சயமாகப் பாதிக்கப்படாத ஆனால் அவர்களைத் தேவையில்லாமல் கைது செய்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக இப்போது

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1982 பிப்ரவரி 6

அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஒன்றாக இணைந்து போராடுகின்ற நிலைமை ஏற்பட்டு அது தொடர் கதையாக ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களை அழைத்துப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அழைத்துப் பேசாமல் இந்த சர்க்கார் பாராமுகமாக இருந்து அதனைப் பெரிய பிரச்னையாக ஆக்குவதற்கு முயற்சிக்கின்றது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இன்னும் சில தினங்களில் கால்நடை ஆய்வாளர்கள் முக்காடு போட்டுக் கொண்டு ஊர்வலம் வரப் போவதாக செய்தி வந்திருக்கின்றது. அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்களுடைய பிரச்சினைக்காக அவர்கள் அமைச்சரைச் சந்தித்து பேசினால் முதலமைச்சரைச் சந்தித்துச் சொல்லுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு முதலமைச்சரைப் பார்க்கின்ற வாய்ப்பே கிடைப்பதில்லை என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையை அரசாங்கம் பெரிதுபடுத்தாமல் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.........(மணியடிக்கப் பெற்றது)......தயவு செய்து இன்னும் ஐந்து நிமிடங்கள் எனக்குத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக நான் பேசுகின்றபோது அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே, இப்போது சற்று அதிகமாக நேரம் தர வேண்டும் என்று துணைத் தலைவர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே ஆளுநர் உரையிலே தேவையற்ற முறையில் மொழிப் பிரச்சினைபற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்ற என்று நான் அஞ்சுகிறேன். சிவில் நீதிமன்றங்களில் 1ஆம் தேதி முதல் தமிழ் அமலுக்கு வரும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். தமிழுக்கு இந்தி மொழியாலோ அல்லது வேறு எந்த மொழியாலே ஆபத்து ஏற்பட்டால் அதற்கு நீங்கள் சில நிலைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அச்சுறுத்தி இருக்கிறீர்கள். அண்ணா சமாதியின் முன்பு இருந்து கூட பிரமாணம் எடுத்ததாகச் செய்தி வந்திருக்கின்றது. இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்று நேரு முதல் இருந்து வருகின்ற அத்தனை பிரதமர்களும் உறுதி தந்திருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது ஏன் இந்தப் பிரச்சினையை இப்போது எழுப்ப வேண்டும். ஆளும் கட்சியினர் தாங்கள் இழந்து வருகின்ற அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்காகக் கையாளுகின்ற ஒரு முறையாகத்தான் இது கையாளப்பட்டு வருகின்றது என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.



1982 பிப்ரவரி 6] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

ஆனால் மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்தி மொழி திணிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கூற வில்லை. ஆனால் அதே நேரத்தில் தானே முன் வந்து இந்தி படிக்க முன் வருகின்றவர்களுக்கு வாய்ப்பு வேண்டும் என்று சொல்கிறபோது அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்ற கடமை சர்க்காருக்கு உண்டு. இங்கே போதிய அளவில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வசதியற்ற நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. இந்த மாநிலத்தின் மக்கள் வேறு பல மாநிலங்களுக்காவது சென்று வேலை தேடிக் கொள்வதற்கு இந்திமொழி அவர்களுக்கு துணையாக இருக்கும் என்றால் அதை நிச்சயமாகச் செய்து தர இந்த அரசு கடமைப்பட்டு இருக்கின்றது. நம்முடைய மாநிலத்திலே வேலை வாய்ப்பற்ற நிலைமை மிகப் பயங்கரமாக இருக்கின்றது. இங்கே சென்ற ஆண்டு மட்டும் வேலை தேடி பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 4,87,503 என்று புள்ளி விவரங்களில சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்களில் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டவர்கள் 51,350 பேர்கள் தான். எனவே பதிவு செய்தவர்களில் ஏறத்தாழ 10-ல் ஒரு பகுதி பேர்களுக்குக் கூட வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர முடியவில்லை என்பதை இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். ஒட்டு மொத்தமாக வேலைவாய்ப்பகத்திலே பதிவு செய்திருப்பவர்களின் எண்ணிக்கை 11,43,049 என்று சொல்லப்படுகின்றது. ஆனால் வேலையிடங்கள் காலியாக இருப்பது 27;813 என்றுதான் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. ஆகவே இருக்கின்ற தேவையில் ஏறத்தாழ 15-ல் ஒரு பகுதியினருக்குக் கூட வேலை வாய்ப்பு தரக்கூடிய நிலமை இங்கே இல்லை. ஆகவே இங்குள்ள மக்களுக்கு வேறு ஏதேனும் ஒரு மொழி தெரிந்தால் அவர்களுக்கு மற்ற மாநிலங்களில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றால் அதற்காக அந்த மொழியினை பயில்வதற்குச் சந்தர்ப்பம் வேண்டும் என்று கேட்டால் அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்ற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். (மணியடிக்கப் பெற்றது)

கடைசியாக எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற சில பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த நவம்பர் மாதம் ஒன்றாம் தேதி, குமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு சேர்த்ததற்காக விழா கொண்டாடப்பட்டது. அப்போது சில தியாகிகளுக்கு உதவி செய்வதாக சில உறுதிமொழிகள் தரப்பட்டிருக்கின்றன. அந்தப் போராட்ட காலத்தில் உயிரிழந்த 13 பேர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்க இருப்பதாக உறுதிமொழி தரப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பத்தாயிரம் ரூபாய் இன்னும் வழங்கப்படவில்லை. 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற சர்ட்டிஃபிகேட் மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே உடனடியாக அந்தத் தொகை அவர்களுக்குச் சென்று சேர்வதற்கு வழிமுறைகளைச் செய்ய

வேண்டும். உயிர் இழந்தவர்கள் 13 பேர்களாக இருக்கையில் காலிழந்தவர்கள் கையிழந்தவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களுக்கும் அரசு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி, முழுமையாக கவர்னர் உரையை ஆராய்கிறபோது எங்களுக்கு அது திருப்தி யளிக்கவில்லை என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கவர்னர் உரை மீது, நன்றி தெரிவிக்கும் பொறுப்பில் நான் சார்ந்திருக்கிற காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பாக உரை நிகழ்த்துகிறேன்.

கவர்னர் உரையில் சொல்லப்பட்டுள்ளதைப் போல இன்று தமிழக அரசு பாரதியார் விழாவினை நல்ல முறையில் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த நல்ல நேரத்தில் தமிழக அரசின் கவனத்திற்கு நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாரதி விழாவிற்கு மணி மண்டபம் கட்டும் பொருட்டு, நெல்லையிலே ஒரு பாரதியார் சிலை நல்ல முறையில் அமைக்கப்பட்டு, இப்போது அது நன்கு பராமரிக்கப்படாமல் இருக்கிறது என்கிற நிலைமை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதே நேரத்தில் அந்தச் சிலையை பராமரிக்க வேண்டும். எப்படி என்றால், பக்கத்திலே காம்பவுண்ட் சுவர்கள் இடிபட்டு போய் விழுந்த காரணத்தினால், பாரதியாரின் சிலைக்கு பக்கத்திலே தண்ணீர் தேங்கியிருக்கிறது. எச்சில் இலைகள் சுற்றிலும் காணப்படுகின்றன. இவைகளையெல்லாம் அகற்றி சுற்றுப்புறத்தை சுத்தம் செய்து, பாரதியாரின் சிலையையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அந்தச் சிலைக்கு ஏதாவது ஒரு நல்ல நிகழ்ச்சி நேரங்களில் நாங்கள் சென்று ஆரம் இட வேண்டும் என்று நினைத்தால் கூட, அவ்வாறு ஆரம் இடுவதற்கான வசதி வாய்ப்பு அங்கே இல்லாமல் இ க்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து கரண்ட் பிரச்னையைப் பற்றி இதிலே சொல்லியிருக்கிறார்கள். அதை எடுத்துக் கொள்வோமேயானால், என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் புத்தந்துறை, விஜயராமபுரம், சாத்தான் குளம், பேய்குளம் போன்ற பகுதிகளில் பம்பு செட்டுகள் போடப்பட்டு, அவைகள் 7 ஆண்டுகளாக கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. மணலமாதா கோவில் என்ற இடத்தில் ஒரு நிகழ்ச்சியில், நானும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொள்வதற்காக சென்றிருந்தபோது, அங்கு எறிந்த விளக்குகள் எல்லாம்





ஏதோ மெழுகு வர்த்தி விளக்குகள் எரிவதுபோல் ஒளியை வீசின. நாங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு, அந்த விளக்குகள் நல்ல முறையில் எரிய வேண்டும் என்று எடுத்துச் சொன்னோம். அதற்குப் பிறகும் பலமுறை அந்தப் பகுதியில் விளக்குகள் பவர் குறைவாக இருப்பதை நாங்களும் திருப்பி திருப்பி எடுத்துச் சொல்லியும், இதுவரையில் அதற்கு எந்தவிதமான தீர்வுகளும் காணப் பெறவில்லை.

அடுத்து குடிநீர் பிரச்னை. குடிநீர் வடிகால் வாரியத்தினால் கிராமங்களில் போடப்பட்டுள்ள குடிநீர் தொட்டிகள் நல்ல முறையில் இயங்குவதேயில்லை. அங்கே போடப்பட்டுள்ள ஆழ் துளை குழாய்களின் மூலம் எந்தவிதமான நன்மையும் மக்களுக்கு கிடைக்கவில்லை. இவைகளை அரசுக்கு நான் பலமுறை சொல்லியும், குடிநீர் வடிகால் வாரியம் நல்ல முறையில் செயல்படவில்லை.

அடுத்து நியாயவிலைக் கடைகள். இந்தக் கடைகள் மூலம் மக்களுக்கு வழங்கப்படுகிற உணவுப் பொருள்களில் கோதுமையை எந்தவிதமான நியாய விலைக்கடைகளிலும் கொடுக்கப்படுவதே இல்லை. கொடுக்கப்படும் மற்ற பொருள்களும் நல்ல முறையிலே மக்களுக்கு கிடைப்பதில்லை.

அடுத்து மணிமுத்தாறு பாசனத்தில் பல ஏக்கர்கள் நிலம் இன்றைக்கு விவசாயம் செய்யப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அணையில் 94 அடி வரை தண்ணீர் இருந்தாலும், 2 தண்ணீர் தட்டுப்பாடு உள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைப்பதேயில்லை. அங்கே 1 ரீச், 2 ரீச், 3 ரீச், 4 ரீச் என்று பல பிரிவுகள் இருக்கின்றன. 3-வது, 4-வது ரீச்களிலே, இரண்டு தண்ணீர் தட்டுப்பாடு உள்ள 6ı0 ஏக்கர் நிலங்களில் பாசனம் செய்யப்பட்டிருக்கிறது. 1-வது ரீச்சிலும், 2-வது ரீச்சிலும் உள்ள நிலங்களில் இப்பொழுது நஞ்சையை நட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே உள்ள தண்ணீரை இங்கே திருப்பி பாசனத்தை நல்ல முறையில் செயல்படுத்தினால், சுமார் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் நெல் பயிராகி நல்ல அதிக அளவில் மகசூல் கிடைக்க வாய்ப்பு இருக்கும். ஆனால் அப்படிச் செய்யாமல் மேற்கேயே தண்ணீரை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அதை கிழக்கே விட வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என் தொகுதியைப் பொறுத்தவரையில் சாத்தான் குளம் தொகுதியில் 25 பஞ்சாயத்துக்களும், ஆழ்வார் திருநகரியில் 12 பஞ்சாயத்துக்களும் கருங்குளத்தில் 15 பஞ்சாயத்துக்களும் நிலத்தடி நீரை நம்பியே வாழ வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. அங்கே ஒரு பாசனக் கால் வெட்டி, கருங்குளத்திற்கு மேல் பகுதியில் ஒரு மடைமை தாம்பிரபரணி ஆற்றிலிருந்து கொண்டு போய், சுமார் 2½ மைல் நீளம் உள்ள கருமேனி ஆற்றில்

தண்ணீரை விடுவோமேயனால் மழைக்காலங்களில் தாம்பிரபரணி ஆற்றிலிருந்து கழிவு தண்ணீர் போய், அந்தக் கருமேனி ஆற்றிலிருந்து பாயக்கூடிய குளங்கள் நிறைந்து அங்குள்ள மக்களுக்கு பாசனம் கிடைக்கும். ஆடு மாடுகளுக்கு குடிக்க குளிப்பாட்ட நிலங்களிலே நிலத்தடி நீர் உயர்வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1–50].

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. பத்து ஏக்கர் நிலம் வைத்திருக்கிற விவசாயிகளுக்குக் கூட எல்.ஐ.ஸி. யில் பணியாற்றக்கூடிய கடைநிலை ஊழியர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஊதியம் கிடைக்கவில்லை. ஆகவே மத்திய அரசு பூச்சி மருந்துகள், உரம் போன்றவற்றிற்கு மானியம் கொடுக்காவிட்டாலும் இந்த அரசு விவசாயிகளுக்கு மானியம் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்று கவர்னர் உரை மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இன்று உலகத் தமிழ் மாநாடானாலும் சரி, பாரதி நூற்றாண்டு விழவானாலும் சரி அவை குறித்து நன்றி செலுத்திப் பேசியவர்களும், அவற்றிக்கு எதிர்ப்பு கூறியவர்களும் இங்கே உள்ளார்கள். அவர்கள் எந்தெந்த முறையில் கூறினார்கள் என்பதை அவை அறிய விட்டுவிட்டு, தலைவர் அவர்கள் மணியடித்து விடுவார்களோ என்ற பயத்தால் எனக்கு சிறிது நேரம் நீட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை துவக்குகிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் துரை முருகன் அவர்கள் இங்கே புரட்சி, புரட்சி, புரட்சி என்று ஐந்தாறு புரட்சிகளைச் சொல்லி அதற்கு விளக்கம் தந்தார்கள். மற்றவற்றை விடுத்துவிட்டு அதற்கு மட்டும் விளக்கம் கூற விரும்புகிறேன். நான் கிராமங்கள் அதிகமாக உள்ள தொகுதியிலிருந்து வந்தவன். அதேபோல் அண்ணன் துரை முருகன் அவர்களும் அப்படி வந்தவர்கள்தான். கிராமங்கள் நாம் முன்னால் பார்த்ததைவிட இப்போது எப்படி இருக்கின்றன என்று பார்க்கிறபோது பால் உற்பத்தியாளர் சங்கம், ஆடு வளர்ப்போர் சங்கம், விவசாயிகள் சங்கம், பாய் நெய்பவர்கள் சங்கம் என்று பல்வேறு தொழில்களுக்கு பல்வேறு சங்கங்கள் அமைக்கப்பட்டு கிராம மக்கள் நல்லமுறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் வறுமைக்கோட்டிற்குக்



கீழே இருந்த மக்கள் அடிமைகளாக வாழ்ந்தது போய் பணக்காரர்களிடம் கடன் பெற்று அவர்களுக்கு கொத்தடிமைகளாக இருந்த நிலை போய் இன்று அரசால் தரப்படுகிற கடன்களையும், மானியங்களையும் வைத்துக்கொண்டு வாழ்வில் தன்னிறைவு பெற்று தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றி வருகிறார்கள். இதை ஒரு புரட்சி என்று எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர புரட்சி அல்ல என்று கூறக்கூடாது.

ஒரு ஆடு வளர்க்கவேண்டுமென்றால் பணக்காரர்களிடம் கடன் பெற்று அந்த ஆடை வாங்கினால் வாங்கிய அந்தத் தொழிலாளி அவருக்கு கொத்தடிமையாகவே ஆகி விடுகிறான். ஆனால் இப்போது அந்த நிலை மாறி சர்க்காரிலிருந்து கடன் பெற்று, மானியம் பெற்று ஆடுகள் வாங்கி அவற்றை வைத்துக்கொண்டு தன் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறான். அதனால் அந்த சமுதாயம் பொருளாதாரத் துறையில் நிறைவு பெறுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் கொத்தடிமைகளாக இருந்த நிலை மாறி இப்போது சுதந்திர குடும்பங்களாக திகழ்கின்றன என்றால் இது ஒரு புரட்சி அல்லவா ?

இதுவரையில் கூட்டுறவுச் சங்கங்களில் பண வசதி படைத்தவர்கள், அதிகமான அளவிற்கு பட்டா நிலங்கள் உடையவர்கள் தான், பெரிய விவசாயிகள்தான் கடன் பெறும் நிலை இருந்தது. ஆனால் இப்போது அந்த நிலை மாறி சிறிய விவசாயிகளும் கடன் பெற்று மானியம் பெற்று, பூச்சிக்கொல்லி மருந்து, விதைகள் போன்றவற்றிற்கு கடனும் மானியம் பெற்று உற்பத்தியைப்பெருக்கி பயன் பெறவில்லையா? இது ஒரு புரட்சி அல்லவா? இதை நன்கு சிந்திக்க வேண்டும். அண்ணன் துரை முருகன் அவர்கள் மனப்பூர்வமாக இந்தக் குற்றச்சாட்டுகளை வைக்கவில்லை எதிர் வரிசையில் உள்ளவர்கள் பாராட்டக்கூடாது என்பதற்காகத் தான் இப்படிப்பட்ட கருத்துக்களைக் கூறுகிறார்கள். உணர்வு பூர்வமாக அவர்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். இதுவும் ஒரு புரட்சி தான் என்று எடுத்துக்கொள்ள வேண்டும் ஏழை எளியமக்கள் பல தரப்புகளில் கடன் மானியம் பெற்று பலன் அடைந்திருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. விவசாயிகள் விதைகளுக்கு, கருவிகளுக்கு, ஆடு வாங்குவதற்கு இப்படி பலவற்றிற்கும் கடனாகவும் மானியமாகவும் பெற்று பயன் அடைந்து வருகிறார்கள். இதற்கு முன்னால் இப்படி இருந்ததில்லை.

இன்னும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். விவசாய சங்கங்களிலே வசதிபடைத்தவர்கள், பணக்காரர்கள் லோன் பெற்றது போய், இன்றைக்கு கூலி விவசாயிகள், ½ ஏக்கர், அதற்கு மேலும் 5 ஏக்கர்களுக்கு குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அதிகமாகக் கடன் கொடுத்து, அவர்களுக்கு மானிய விலையிலே

[சே. குப்புசாமி] [1982 பிப்ரவரி 6

பூச்சி மருந்துகள், கருவிகள், உழவு மாடுகள் வாங்கிக் கொடுத்து, இத்தகைய விவசாயிகளின் மேம்பாட்டிற்கு இந்த அரசு திட்டமிட்டு செயல்பட்டுக்கொண்டு வருவது புரட்சிகரமான திட்டம் என்பதை நான் இந்தச் சபைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, நெசவுத் தொழிலாளர்கள், பாய் முடைவோர் போன்ற அனைத்துத் தொழிலாளர்களும் இன்று கடன் வசதி பெற்று வருகின்றார்கள். அதோடு மானியமும் பெறுகிறார்கள். இந்த முறையில் இந்த அரசு, இதற்கு முன்னாலே இருந்த எந்த அரசுகளும் செய்யாத புரட்சிகரமான காரியத்தைச் செய்துகொண்டு வருகிறது. இதையெல்லாம் சற்று ஆராய்ந்து பார்ப்பார்களானால், இவைகள் எல்லாம் புரட்சிகரமான திட்டம் என்பதை ஒப்புக்கொள்வார்கள். எனவே, இது ஒரு புரட்சிகரமான திட்டம் என்பதைச் சொல்ல விழைகிறேன்.

அது மட்டுமல்ல, மக்கள் தலைவர் என்று பெயர் வைத்தார்கள். புரட்சித் தலைவர் என்று பெயர் வைத்தார்கள். ஆனால், இன்று புரட்சித் தலைவர் பெயரை புரட்சி, புரட்சி என்று அவர்கள் கிண்டல் செய்கிறார்கள். காரணம், அவர்கள் எதிர் வரிசையிலே இருக்கின்ற காரணத்தினாலே அப்படிச் சொல்கிறார்களே தவிர, வேறு அல்ல. அவற்றை யெல்லாம் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, புரட்சிகரமான திட்டங்களை இன்றைக்கு நடத்தி வருகிறார்கள். அவைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டாலும், இல்லாவிட்டாலும், இந்த நாட்டு மக்கள் புரட்சித் தலைவர் அவர்களின் புரட்சித் திட்டங்களை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதை கூறிக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம். நன்றி.

திரு. பொ. உத்திராபதி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன் நமது ஆளுநர் உரையில், சென்ற ஆண்டு விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி என்ற பெயரால், லட்சக்கணக்கான ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், மத்திய அரசாங்கம் விவசாயக் கடனை தள்ளுபடி செய்யக்கூடாது என்று கட்டளை போட்டார்கள். இதனால், அதையும் மீறி தமிழக அரசு 5 ஏக்கர்களுக்கு கீழே உள்ள விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி என்று உத்தரவிட்டது. தஞ்சாவூர், திருச்சிக்கும், அல்லது திருச்சிக்கும், திருநெல்வேலிக்கும் இது எந்த அளவுக்கு பொருந்துமென்றால், அது சரி வராது. எனவே, தமிழகம் முழுவதும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அடிப்படையில் கடன் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.



1982 பிப்ரவரி 6] [திரு. பொ. உத்திராபதி]

அதேபோல், தன்னிறைவுத் திட்டம் மூலம் இன்றைய தினம் கிராமங்களில் சாலைகள், போக்குவரத்து எல்லாம் வசதி செய்யப்படுகிறது. ஆனால், இந்தத் தன்னிறைவுத் திட்டம் யாருக்காக செய்யப்படுகிறது என்றால், அதிகாரிகளுக்கும், காண்ட்ராக்டர்களுக்காகவும் தான் இந்தத் திட்டம் பயன்படுகிறதே தவிர, மக்களுக்குப் பயனளிக்கவில்லை என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல், பட்டா, போட்டுக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். பட்டா கொடுத்தால், அதோடு தென்னம் பிள்ளை ஒன்றும் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், பட்டா எந்த அளவுக்கு தமிழகம் முழுவதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்பதைப் பார்த்து, எதிர்காலத்தில் எல்லோருக்கும் பட்டா கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு பஞ்சாயத்து தேர்தல் கோர்ட்டிலே இருக்கிறது. நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனால், தேர்தல் இல்லாத காரணத்தினால், தமிழகத்திலே ஏற்படக்கூடிய குடி தண்ணீர், மின்சாரம், சாலை போக்குவரத்து போன்ற எல்லாக் காரியங்களும் இன்றைக்கு முடங்கிக் கிடக்கின்றன. இன்றைக்கு பஞ்சாயத்து தேர்தல் கிராமங்களிலே நடைபெறாததன் காரணமாக, இப்படிப் பட்டப் வேலைகள் எல்லாம் அங்கே நடைபெறாமல், முடமாக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, விரைவில் அரசு இந்த கோர்ட்டில் இருக்கக்கூடிய பிரச்சினையைத் தீர்த்து, பஞ்சாயத்து தேர்தலைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அதேபோல், பினாமி நிலம் 58 முதல் 60 வரைக்கும் இருக்கக்கூடிய பினாமி நிலங்களை எடுக்க வேண்டுமென்று தமிழக அரசு சட்டம் போட்டது. ஆனால், மத்திய சர்க்கார் இன்றைக்கு அதை நிராகரித்திருக்கிறது. இத்தகைய நிலைமை இன்றைக்கு தமிழக அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது: இன்றைக்கு தமிழக மக்களுக்கு அவமானம் ஏற்பட்டிருக்கிறது அதேபோல், கடந்த 19-ஆம் தேதி நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் நடந்தபோது தஞ்சை மாவட்டத்தில் நடந்த போலீஸ் அக்கிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல தஞ்சை மாவட்டத்தில் ரெட்டசுழி என்ற இடத்தில் ஞானசேகரன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டதற்குப் பிறகு நாலாம் சேத்தி கிராமத்தில் போலீஸ் புகுந்து, அரிசன மக்கள் வீடுகளில் எல்லாம் புகுந்து அங்கிருக்கக்கூடிய சாதாரண மண் பாண்டங்களை யெல்லாம், மற்றப் பொருள்களை எல்லாம் உடைத்துப் போட்டார்கள் இன்றைக்கு 66 பேர்கள்மீது வழக்கு போட்டு, நீதி மன்றத்திலே ஜாமீன்கூட கிடைக்க முடியாத அவலநிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்

அதேபோல், திருத்துறைப்பூண்டி பகுதியில், ஒரு மாதர் சங்கத்தைச் சார்ந்த 60 வயதான சுந்தரம்பாள் அவர்களை அடித்து சேற்றில் புரட்டி, அவர்களின் இடுப்பு எலும்பு உடைகின்ற நிலைக்கு திருத்துறைப்பூண்டியிலே நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது, இப்போது அந்த அம்மையார் அங்குள்ள மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள்

[பிற்பகல் 2-00]

அதே போல் வட்டார விவசாயச் சங்கச் செயலாளர் சிவஞானம் மண்டை பிளக்கப்பட்டு 13 நாட்கள் மருத்துவ மனையில் இருந்து சிகிச்சை பெற்றார்கள். விவசாயத் தொழிலாளி குருநாதன் அடிபட்டு நாகை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார் வேதாரண்யம் இளைஞர் மன்றச் செயலாளர் நாகராஜன் அடிக்கப்பட்டு மண்டை பிளக்கப்பட்டார். வேலூர் பாலத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் காவல் துறையை வைத்துக் கொண்டு பெண் போலீசாரை இறக்கி விவசாயத் தொழிலாளியை ஓட ஓட அடித்து விரட்டி சிரித்துக் கொண்டிருந்தார்கள் அது எந்த அளவுக்கு போலீசின் கவுரவத்தைப் பாதுகாப்பதாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். வேலை நிறுத்தம் முடிந்த பிறகு 20-ம் தேதி எஸ். பி. ரெவின்யூ அதிகாரிகள் சேர்ந்து கொண்டு திருப்பத்தூரில் சிவப்புத் துண்டு, சட்டை போட்டவர்கள் அத்தனை பேரையும் அடித்ததோடு கட்சி அலுவலகத்தில் புகுந்து செயலாளர் பக்கிரிசாமி மற்றும் 20 பேரையும் அடித்து கைது செய்திருக்கிறார்கள். இன்றைக்கு ஆளக்கூடிய ஆட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியா அல்லது போலீஸ் ஆட்சியா என்று மக்கள் சந்தேகப்படக்கூடிய அளவுக்கு தஞ்சை மாவட்டத்தில் போலீஸ் அட்டகாசம் இன்றைக்கு அதிகரித்திருக்கிறது. அதை விசாரிக்கவேண்டும்.

அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியும் தஞ்சை மாவட்டத்தில் வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்திரா காந்தி படம் போட்டு நறின் கூறிய நோட்டீஸ் என்னிடம் இருக்கிறது. போக்குவரத்து பஸ் எண். 8052 பேருந்தில் காங்கிரஸ் கட்சி நண்பர்களும், இளைஞர் காங்கிரஸ் கட்சி நண்பர்களும் அந்த பஸ்ஸிலே சவுக்குக் கட்டை, ஆயுதங்களை எடுத்து கொண்டு போலீஸ் ஒத்துழைப்போடு திருத்துறைப்பூண்டி பகுதி முழுமையிலும் அராஜகத்தை தூண்டி காங்கிரஸ் காரர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள்.

நான் ஆளும் கட்சியைக் கேட்டுக் கொள்கிறேன்—திருமதி இந்திரா காங்கிரஸ் ஆட்சி பினாமி சட்டத்தை அவர்கள் மறுக்கிறார்கள். விலைவாசி உயர்வுக்கு இவர்கள் காரணமாக இருக்கிறார்கள் வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்படவில்லை; தமிழக அரசாங்கம் எடுக்கக்கூடிய நல்ல திட்டத்தை எல்லாம் நிராகரிக்கக்கூடிய திருமதி இந்திரா காங்கிரஸ் கட்சியை இங்கே ஆளும் கட்சி ஆதரிப்பது சரிதானா? அதே போன்று பிரதான





எதிர்க்கட்சியானது டில்லியிலே உட்கார்ந்து கொண்டு தேசப் பாதுகாப்பு என்ற பெயரால் தொழிலாளர் விரோதச் சட்டத்தை கொண்டு வந்த போது திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்தில் ஆதரிக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம் இருக்கிறது. இன்றைக்கு ஆளும் கட்சியும் பிரதான எதிர்க் கட்சியும் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக இருக்கக் கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தருவதைக் கண்டித்து விடைபெறுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பேசுகிறபோது இந்திரா காங்கிரஸ் இளைஞர்களும் மற்றவர்களும் போலிசாருடன் சேர்ந்து கொண்டு வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்ன குற்றச்சாட்டைப் பற்றி அரசு விசாரித்து தங்களுடைய பதிலிலே விளக்கம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறு நாள் 8—2—1982ஆம் தேதி காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

## 6. பேரவையின் முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் ஏதுமில்லை

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

18. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 21—1—1981 முதல் 15—5—1981 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

இணைப்பு.

எண் 441 ம பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா 74 க்க-ன விடையைக் காண்க.

விவர அறிக்கை.

| சங்கக் கோரிக்கைகள். | அரசு எடுத்த நடவடிக்கை/இறுதி முடிவு. |
|---|---|
| 1. பகுதி நேரம் என்பதனை மாற்றி தொகுதி எழுத்தர் என்ற நிலைக்கு உயர்த்தி தற்போது வேலை பார்த்து வரும் அனைவரையும் வயது வரம்பு, கல்வித் தகுதி பாராது அனுபவத்தை அடிப்படையாக வைத்து தக்க பணிப்பாதுகாப்பு அளிக்க. | ஊராட்சி எழுத்தர்கள் பகுதி நேர எழுத்தர்கள் ஆவர். இவர்களுக்கு மக்கட் தொகையின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே இவர்கள் கோரிக்கை ஏற்க இயலாது. |
| 2. ஊதிய உயர்வு அளிக்க வேண்டும். | பகுதி நேர எழுத்தர்களின் ஊதியம் உயர்ந்த பட்சம் மாதம் ரூ. 90 ஆகவும் குறைந்த பட்சம் ரூ. 37·50 ஆகவும் 1—9—1981 முதல் அமுலுக்கு கொண்டுவர 29—7—1981 ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1350 இல் உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது. ஒரு பகுதி நேர எழுத்தர் மூன்று அல்லது நான்கு ஊராட்சிகளில் பணி புரிவார். ஆகையால் சராசரியாக ரூ. 200 முதல் ரூ. 300 வரை ஊதியம் பெறுவார். மேற்படி உத்திரவுப்படி மாத ஊதியம் ரூ. 300-க்கு மேல் பெற கூடாது. |
| 3. ஊதியம் மாதந்தோறும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பட்டுவாடா செய்யப்பட்டு, பின்னால் சம்பந்தப்பட்ட ஊராட்சி நிதிகளிலிருந்து பிடித்துக் கொள்ளச் செய்தல். | பகுதி நேர எழுத்தர்கள் ஊராட்சிகளில் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஊதியம் ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. ஆகையால் மாற்றம் தேவையில்லை. |
| 4. எல்லா அரசு ஊழியர்களுக்கும் கிடைத்து வரும் விழா முன்பணம், பயணப்படி, பஞ்சப்படி, தினப்படி கிடைப்பது போல் செய்ய. | இவர்கள் பகுதி நேர ஊழியர்கள், எனவே நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகையினை இவர்களுக்கு வழங்க இயலாது |
| 5. தகுதியுள்ளோர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி இவைகளில் ஏற்படும் காலியிடங்களில் பணியில் அமர்த்தவும் தக்க முன்னுரிமையும் வேண்டுதல். | ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் பதவிக்குத் தகுதியுள்ள ஊராட்சி பகுதி நேர எழுத்தர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான கருத்துரு அரசு பரிசீலனையில் உள்ளது. |

D
V211,31 N82
N83-2652
122217

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District)
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 80, Amman Sannathi, Madurai 1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

---

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

ஆதி திராவிடர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்த, சமூக பொருளாதார நடவடிக்கைகள் எடுப்பதோடு, ஆதி திராவிடர்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களை, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்க தனி நீதிமன்றங்களை அரசு ஏற்படுத்தி வருகிறது. இம் மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர்களின் வாழ்க்கை நிலையை மேற் சொன்ன பல்வேறு திட்டங்கள் மூலம் மேம்படுத்துவதென அரசு உறுதி கொண்டுள்ளது.

27. பிற்தங்கிய வகுப்பினர் நலனுக்காகத் தற்போது தமிழ் நாட்டில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கல்வி வசதி பெறுவதில் பல சலுகைகளை அளிப்பதுடன் அந்த வகுப்பினர் பொருளாதார வகையிலும் முன்னேற்றம் காணவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வகுப்பினர் மேற்கொள்ளும் வணிகம், தொழில் போன்ற திட்டங்களுக்கு நிதி உதவி செய்ய, பிற்தங்கிய வகுப்பினர் பொருளாதார முன்னேற்றக் கழகம் ஒன்றை அரசு அண்மையில் நிறுவியுள்ளது. ஆதரவற்ற ஏழை விதவைகளுக்கு மருத்துவ நிலையங்களில் வேலைக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென அரசு சென்ற ஆண்டு அறிவித்தது. தொழில் கல்லூரிகளிலும் கலைக் கல்லூரிகளிலும் அவர்களுக்காக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் மக்களுக்கு வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்களிலும் முன்னுரிமை அளிக்கும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்ற ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டாகக் கருதப்பட்டு அவர்களுக்குப் பல புதிய திட்டங்கள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. அரசு நிறுவனங்களிலும் உள்ளாட்சி நிறுவனங்களிலும் சில குறிப்பிட்ட பதவிகளை ஊனமுற்றோர்க்கென ஒதுக்கியுள்ளது. அரசுப் பணிகளிலுள்ள காலி இடங்களுக்கு வேலை வாய்ப்பகம் மூலம் ஆட்களை அனுப்பும்போது, ஊனமுற்றோருக்குத் தகுந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி நிலையங்களிலும் பொது நிறுவனங்களிலும் ஊனமுற்றோர்க்கு 3 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் ஆண்டு முடிவுற்ற போதிலும் அவர்களின் நலனுக்கான திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும்.

28. ஊராட்சித் தேர்தல்களை விரைவில் நடத்துவதில் முனைப்பான ஆர்வம் கொண்டுள்ள இந்த அரசு இவ்வாண்டில் சனவரித் திங்கள் இறுதியில் இத்தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து, அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு ஏற்ப, ஆதி திராவிடர்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய இந்த அரசு கொள்கை முடிவு எடுத்து அதற்கு வகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்தது. இட ஒதுக்கீடுகள் பற்றி சில பிரச்சினைகளை எழுப்பி, நீதி மன்றங்களில்



வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதையொட்டி, நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடை ஆணைக்கேற்ப, தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற அனுமதி கிடைத்தவுடன் இத்தேர்தல்களை நடத்த அரசு ஆயத்தமாக உள்ளது.

29. பாரதப் பிரதமர் அண்மையில் அறிவித்த இருபது அம்சத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள பாசன வசதிகளை விரிவாக்குதல், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குதல், நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்தல், நிலப் பதிவேடுகளைச் சீராக்குதல், ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுதல், தன்னிறைவுத் திட்டத்தில் குடிநீர் வழங்குதல், மின் உற்பத்தியைப் பெருக்குதல், பொது சுகாதார வசதிகளை விரிவாக்குதல், மகளிர் நலனுக்கான திட்டங்களைச் செயலாக்குதல், பொது விநியோக அமைப்பை விரிவாக்குதல் போன்ற பல அம்சங்கள் ஏற்கெனவே இவ்வரசு சில ஆண்டுகளாகச் செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன என்பது நமக்கு மன நிறைவு அளிக்கக் கூடியது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவரும் நலிந்தோரும் வாழ்வும் வளமும் பெற்று உய்யும் வகை செய்ய வகுக்கப்பட்டுள்ள இந்த இருபது அம்சத் திட்டத்தைத் தமிழக அரசு உளமார வரவேற்கிறது. இத்திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்துவதில், இவ் அரசு மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கும்.

30. இம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை பொதுவாகச் சீராக உள்ளது. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சமூக விரோத சக்திகள் அடக்கப்பட்டுள்ளன. காவலர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது. காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது இத் திட்டங்களில் ஒன்றாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டு கிராமத்தில் முதற் கட்டத்தில் 150 ஏக்கர் நிலத்தில் சுமார் 700 வீடுகள் கட்டப்படும். காவலர்களுக்கு இன்னும் கூடுதலாக வீடுகள் கட்டிக் கொடுக்க, காவலர் வீட்டு வசதிக் கழகம் இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் தகுந்த நிலங்களைக் கண்டறிந்து வருகிறது. இம்மாநிலத்தில் பணிபுரியும் காவலர், தலைமைக் காவலர்களின் நற்பணிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் முதலமைச்சர் காவலர் விருது என்ற புதியதொரு திட்டம் இவ்வாண்டு பொங்கல் திருநாளின்போது கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி அவர்களுக்குப் பதக்கம் அளிப்பதோடு மாதாந்திரப்படியும் அளிக்கப்படும். இதனால், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1,500 காவலர்களும், தலைமைக் காவலர்களும் பயனடைவர்.

31. முதலில் நான் தெரிவித்தபடி, இம்மாநிலம் கடும் வறட்சியாலும், அதன் பின்னர், ஏற்பட்ட இடர்ப்பாடுகள், இன்னல்கள் ஆகியவற்றாலும், நிலவிய சோதனையான கால கட்டத்தைக் கடந்து வந்துள்ளது. நல்ல பருவ மழையால் இப்போது நிலைமை

[1982 பிப்ரவரி 4

## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் பிரிவிலேஜ் நான் கொடுத்திருக்கிறேன். அது என்ன என்று சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் மட்டுமல்ல, நிறைய உறுப்பினர்கள் பிரிவிலேஜ் மேட்டர் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை இனிமேல்தான் நான் பரிசீலிக்க வேண்டும். அவற்றை எடுத்துக் கொள்ளும்போது, உங்களுடைய பிரச்சினையும் எடுத்துக் கொள்ளப்படும்.

### (ஆ) கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, விடுதியிலிருந்து இன்றைக்கு சட்டசபைக்கு வரும்போது எங்களோடு சில பார்வையாளர்களும் வந்தார்கள். அவர்களை கோட்டைப் பகுதிக்குள் எங்கேயும் இருக்க விடாமல் தடுத்து வெளியே அனுப்பியிருக்கிறார்கள் போல் இருக்கிறது. அவர்களுக்கு பாஸ் வாங்கிக் கொண்டு வந்து பார்த்தால் எங்கே தேடினாலும் அவர்கள் இல்லை. இது ஏதோ புது ஏற்பாடு, விசேஷ ஏற்பாடு போல தோன்றுகிறது. எங்கு பார்த்தாலும் போலீஸ் தலைகள். இது என்ன புதிதாக இருக்கிறதே என்று உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சபாநாயகர் அவர்களே, தாங்கள் பாராளுமன்றத்திலே பல ஆண்டுக்காலம் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அங்கேயுள்ள நடைமுறை, நடவடிக்கைகள் எல்லாம் உங்களுக்கும் தெரியும் எங்களுக்கும் தெரியும். ஆனால் இங்கே போலீசை வைத்துக் கொண்டு சட்டமன்றம் நடக்கிறது. முதல்நாள் சட்டசபை கூட்டத்திற்காக ஆட்டோ ரிக்ஷா வைத்துக் கொண்டு நான் வந்தபோது, சப்-இன்ஸ்பெக்டர் என்னை கேட்டிலேயே நிறுத்தி இறக்கிவிட்டார். நான் எம். எல்.ஏ. என்று சொல்கிறேன். அப்போது கூட ஆட்டோவை அனுமதிக்காமல் அங்கேயே நிறுத்தி விட்டார். நான் ஆட்டோவிலே வரக் கூடாதா? சட்டமன்றத்தை வேறு இடத்திலே வேண்டுமானால் வைத்து நடத்துங்கள்; நாங்கள் வருகிறோம். இங்கே ஆட்டோ, டாக்சி வரக் கூடாது என்று சொன்னால் எப்படி? போலீசாருடைய கெடுபிடி தாங்க முடியாமல் இருக்கிறது.



1982 பிப்ரவரி 4]

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, பந்தோபஸ்து சம்பந்தமாக போலீஸ் வைத்திருப்பதாக இருந்தால் சரி. ஆனால் இடைஞ்சல்கள் ஏற்படுவதாக கம்ப்ளெயின்ட்ஸ் வருகின்றன. சாதாரணமாகஎப்போதும்போல் இருக்கிற பாதுகாப்பு அரேஞ்மென்ட்ஸ் என்றால் பரவாயில்லை. ஆனால் இப்படி விசேஷ போலீஸ் ஏற்பாடு செய்தது பற்றி உங்களுக்கும் தெரியவில்லை. ஏனென்றால் நீங்கள் இந்தப் பிரச்சினைகள் எழுந்தபிறகு தான் இது பற்றி கன்சல்ட் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கும் தெரியவில்லை என்று தெரிகிறது. நாங்கள் போலீசுக்கு சப்-ஆர்டினேட்ஸ் இல்லை. எங்களை அவர்கள் தடை செய்யக் கூடாது என்பது ஒன்று. உங்களைக் கேட்காமல் எந்த ஏற்பாடுகளையும் அவர்கள் செய்யக் கூடாது என்பது மற்றொன்று. எனினும் இப்படி நடந்திருக்கிறது என்றால் இதில் சீரியஸ் பிரிவிலேஜ் இருக்கிறது. We will have to move a privilege motion against the Officers concerned. It is a serious matter. We are not subordinate to the Police here. We are the supreme body

**திரு. அ. ரகுமான்கான் :** சார், வி ஆர் ரெய்ஸிங் பிரிவிலேஜ்.

**திரு. துரைமுருகன் :** உறுப்பினர்கள் ஆட்டோ ரிக்ஷாவிலே வரக் கூடாது என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆட்டோ, டாக்சிகள் உள்ளே வருவதனால் சத்தம் அதிகமாக உள்ளது; மேலவை நடக்கும்போது இடையூறாக உள்ளது என்ற வகையில் அவற்றை உள்ளே அந்தப் பக்கம் அனுமதிக்கக் கூடாது என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. (குறுக்கீடுகள்—குழப்பம்).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** ஆட்டோ ரிக்ஷாவிலே வரக் கூடாது, டாக்சியிலே வரக்கூடாது என்று சொன்னால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனியாக கார் அனுப்புங்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலவை உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சீப் செகரட்டரியை கன்ஸீடர் செய்து முடிவு எடுத்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது (குறுக்கீடுகள்).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** எப்போதுமே இந்தப் பக்கம் ஆட்டோ ரிக்ஷாவை அலவ் செய்வதில்லை. செக்ரட்டேரியட்டை சுற்றித்தான் வந்து கொண்டிருக்கின்றன.

[1982 பிப்ரவரி 4

THIRU R. UMANATH : The Chief Secretary has no business to interfere so far as our Assembly is concerned.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆட்டோ ரிக்ஷா வரு வதற்கு நம் துறையிலிருந்து எந்தத் தடையும் போடப்பட வில்லை. இதைப் பற்றி யாரும் இதுவரை என் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. நேற்று முன் தினம் கூட அவை நடந்த போது இது என் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இப்போதுதான் திரு. கிருஷ்ணன் என் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. நா. சுந்தரராஜ் : எப்போதும்போல் நடப்பதாகத் தான் சொல்கிறீர்கள். எப்போதும்போல் இப்போது மக்கள் இல்லை, இப்போது எங்கும் காவல்துறை அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு வாசலிலும் பத்து பதினைந்து காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு யார் யார் சட்டமன்ற உறுப்பினர்கள் என்பது தெரியவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்திற்கு வருவதற்கு பாது காப்பு இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன் றத்திற்கு வர முடியாது தடுக்கப்படுவார்களானால்—சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதை இல்லை என்றால் தலைவருக்கும் மரியாதை இல்லை. அதைக் கவனிக்க வேண்டும்.

திரு. சு. பாலன் : சௌக்கிதார்கள் அப்புறப்படுத்தப்பட்டு இப்போது போலீஸ்காரர்களிடம் அப்பணி ஒப்படைக்கப்பட் டிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின் றன. ஆக சட்டசபையை போலீஸ்காரர்கள் கைப்பற்றியிருக் கிறார்களா ? நாளை பார்த்தால் இராணுவம் கூட வரும்போல் இருக்கிறதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டசபைக்குள்ளே வரும் பாதைகளில் எங்கும் காவல் துறை அதிகாரிகள் இல்லை. (குறுக்கீடு) அரசாங்கத் தரப்பிலிருந்து ஏதாவது ஏற்பாடு இருந் தால் அவர்கள் சொல்வார்கள். மாமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாப் பாதுகாப்பும் அளிக்கப்படும்.

(முற்பகல் 10–10 மணி)

திரு. அ. ரகுமான்கான் : அங்கிருந்து போலீஸ் வெளியேற வேண்டும். அப்போதுதான் நாம் சுதந்திரமாக செயல்பட முடியும். இல்லாவிட்டால் சட்டசபையை போலீஸ் கைப்பற்றிய தாகப் பொருள்.



1982 பிப்ரவரி 4]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, ராஜ்ய சபா காம்பவுண்டுக்குள், லோக் சபா காம்பவுண்டுக்குள் இப்படி போலீஸ் கிடையாது. இங்கே மட்டும் ஏன் 500 போலீஸ் அதி காரிகள் இருக்கிறார்கள்....

திரு. துரைமுருகன் : சட்டமன்றம் உங்கள் கையிலே அல்லவா இருக்க வேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றம் என் கையில் தான் இருக்கிறது.

திரு. துரைமுருகன் : எல்லாவற்றிற்கும் எழுந்து பதில் சொல்லும் அமைச்சர்கள், இதற்கு மட்டும் ஏன் எழுந்து பதில் சொல்லவில்லை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எடுத்துச் சொல்லியது போன்று, இப்போதுதான் இந்தப் பிரச்சினை இங்கே எழுப்பப் பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்ததைப் போன்ற பாதுகாப்பை அதே மரியாதையை அளிக்க வேண்டுமென்பது தான் அரசாங் கத்தின் நோக்கம். ஏற்கனவே, எந்த அளவுக்கு உறுப்பினர்களுக்கு பாதுகாப்பும், மரியாதையும் அளிக்கப்பட்டதோ அந்த அளவு தொடர்ந்து அளிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும். அப்படி ஏதாவது அதற்கிடையில் நடந்திருக்கு மானால், அவைத் தலைவராகிய தாங்கள் அதற்கான நட வடிக்கையை எடுத்துக் கொள்ளலாம். அதுபற்றிய விவரமான தகவல் எங்களுக்கு வரவில்லை. ஆகவே, பிரச்சினையை இங்கே சொல்லியதன் காரணமாக, அதுபற்றி விசாரித்து தாங்கள் நட வடிக்கை எடுக்கலாம். அந்த நடவடிக்கையை அரசுக்குக் கொடுத் தால், அதற்கேற்ப இந்த நிலைமைகளை, ஐயப்பாடுகளை, அதன் தன்மைகளை ஆராய்ந்து, மன்ற உறுப்பினர்களின் உரிமை கள் பாதிக்கப்படாத அளவுக்கு இந்த அரசு அதிலே கவனம் செலுத்தும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தாங்கள் தெரிவித்தீர்கள். பொதுவாக, சட்டமன்றம் என்று சொல்லுகின்றபோது, சட்டமன்ற வளாகம் முழுவதும் தங்களின் மேலாட்சிக்கு உட்பட்ட ஒன்றாக இருக்கிறது. எனவே, சட்ட மன்ற வளாகம் என்கின்றபோது, சட்டமன்றம் கூடுகின்ற இடம், அதைச் சுற்றிலுமுள்ள இடங்கள், அதற்கு வந்து போகின்ற இடங்கள், அதற்கான அலுவலகங்கள் உள்ள இடங்கள், 'விசிட் டர்கள்' என்று சொல்லப்படுகின்றவர்கள் வந்து போகக்கூடிய இடங்கள், அதற்கான பாதைகள் ஆகிய இந்த இடங்கள் எல்லாம் தங்கள் பொறுப்பிற்குள் வருகின்ற காரணத்தினால், சட்டமன்ற

வளாகத்திற்குள், அந்தப் பகுதிக்குள் காவல்துறை நேரடியாக வருகின்ற நிலைமை ஏற்படுமானால், ஏதாவது ஒரு வகையிலே உறுப்பினர்களின் உரிமை பாதிக்கும்படி நேரிட்டாலும், அது நம்முடைய உரிமைகளை பாதிக்கின்ற காரணத்தினாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற விடுதியிலிருந்தோ அல்லது தங்கள் இல்லங்களிலிருந்தோ வண்டிகளிலோ அல்லது எப்படியோ வருகின்ற நேரத்திலே, தடுக்க நேரிட்டால் அது அவர்களுடைய உரிமைகளை பெருமளவுக்கு பாதிக்கக்கூடிய ஒரு காரியமாகும். எனவே, சட்டமன்ற வளாகத்திற்குள், அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குள் காவல் துறை நடமாட்டம் கூடாது என்பதைத் தாங்கள் இந்த அவையின் மூலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, இது விஷயமாக அவை முன்னவர் அவர்கள் சொன்ன பிறகு. நிலைமை இன்னும் சீரியஸ் பிரச்சினையாக ஆகியிருக்கிறது. ஏனென்று சொன்னால், நார்மல் கன்ட்ரோல், நார்மல் அரேன்ஜ்மென்ட் செய்வதிலே யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால், எக்ஸ்டரா--ஆர்டினரி புரவிஷன் என்ற முறையில் செய்யப்பட்டிருக்கிறது என்பதை எல்லாக்கட்சி உறுப்பினர்களும் ஏகமனதாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது அது ஒரு பாக்ட், உண்மை. ஆனால் அந்த எக்ஸ்ட்ரா - ஆர்டினரி புரவிஷன் என்ற முறையில், செய்திருப்பது உங்களுக்கும் தெரியாது என்று தெரிகிறது. அரசாங்கத்திற்கும் தெரியாதது என்று அவை முன்னவர் அவர்கள் சொல்லியதிலிருந்து தெரிகிறது. அப்போது யார்தான் அதைச் செய்தார்கள்? அது ஒரு சீரியஸ் கொஸ்டியன்.

இதற்கு முன்னாலே, இந்த அவையினுடைய புரசீடிங்சை வேவு செய்தது சம்பந்தமாக பிரச்சினை எழுப்பப்பட்டது உங்களுக்குத் தெரியும். அப்போது அரசாங்கத்திற்கும் தங்களுக்கும் தெரியாது என்றும், அதிகாரி தப்பு செய்தார் என்று சொல்லி அபாலஜி வாங்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. இனிமேல் நடக்காது என்றும் சொல்லப்பட்டது. உங்களுக்கும் தெரியாமல், அரசாங்கத்திற்கும் தெரியாமல். எக்ஸ்டிரா--ஆரிடினரி புரவிஷன்ஸ் என்ற முறையில் குறிப்பாக 4-ஆவது கேட்டில், ஜனங்கள் 'விசிட்டர்ஸ்' உட்காரக்கூடிய இடம் அப்படியே அகற்றப்பட்டிருக்கிறது.

"who is con rolling he Ho se". Th is a seriou question.

ஆகவே, அந்த கொஸ்டியன் சம்மந்தமாக எல்லா பார்டிகளையும் கன்சல்ட் செய்து, ஒரு சீரியஸ் என்கொயரி நடத்த வேண்டும்.



யாருக்கும் தெரியாமல் போலீஸ் போர்ஸ் தன்னிச்சையாக, ஏதேச்சாதிகாரமாக நடந்து கொண்டிருந்தால் இது இரண்டாவது மேஜர் போலீஸ் எரர் என்ற வகையில், லெஜிஸ்லேட்டரைத் தடுக்க என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி சீரியசாக என்குயரி நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்தவரையிலும், இதனுடைய பகுதி, வளாகம் ஆகியவற்றில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தங்களுடைய ஆணையின்பேரில் ''வாச் அண்டு வார்டு'' என்ற முறையில் செய்யப்பட்ட ஏற்பாடுதான் இப்போதும் இருப்பதாக நினைக்கிறேன். ஆனால் இதற்கும் மீறி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்சொன்னது போல் இருக்குமானால், இந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் முறையில் இந்த உணர்வுகளைத் தாங்கள் கருத்தில் கொண்டு அதற்கேற்ற நடவடிக்கைகளைப் பேரவைத் தலைவர் என்ற முறையில் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னவர் அவர்களும் மற்றும் எதிர்க்கட்சி தலைவர்களும், உறுப்பினர்களும் இதுபற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். வாச் அண்டு வார்டைப் பொறுத்தவரை என்னுடைய அனுமதிக்கு உட்பட்டு சட்டமன்றத்தில் பாதுகாப்புக்காக இருக்கிறார்கள். வாயிலுக்கு வெளியே என்ன நடக்கிறது என்பது என்னுடைய பொறுப்பில் இல்லாத விவகாரம். ஆட்டோரிக்ஷாக்களைப் பொறுத்தவரை சத்தம் அதிகமாக இருப்பதால் உள்ளே வருவது தவிர்க்கப்பட வேண்டுமென்று மேலவையில் கூறிய கருத்திற்கேற்ப தடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால் சட்டமன்றத்தின் கிழக்குப்புறம் வாடகை வாகனங்கள் வருவது தடைப்படுத்தப்பட்டிருக்கலாம். இதைப் பற்றி இன்றுதான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இனிமேல் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான ஏற்பாட்டை அரசோடு கலந்து செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பத்திரிக்கைக் குறிப்பு பற்றிச் சொன்னார்கள். 4—2—1982 அன்று தினமணி பத்திரிக்கையில் 'சென்னை, பிப்ரவரி 3'' என்ற தேதியிட்டு ,'தலைமைச் செயலகத்தில் காவல் அதிகரிப்பு என்ற தலைப்பில். . . . . . . . . . . . . . . . . தலைமைச் செயலகத்திலும் இதுபோல தலைமைச் செயலக வளாகத்தில் அமைந்

துள்ள பத்து மாடிக் கட்டிடத்திலும் ஒவ்வொரு மாடியிலும் ரிசர்வ் போலீசார் காக்கி உடையணிந்து காவலுக்கு நிற்கிறார்கள். தலைமைச் செயலகத்தில் நுழைவதற்கு அனுமதி சீட்டு முறை என்ற ஏற்பாடு ஏட்டளவில் இருந்துவந்தது. நடைமுறையில் எவர் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் செல்லலாம் என்பது தான் உண்மை நிலையாக இருந்தது. இதை மாற்றியமைக்கவும் கட்டுக்காவலை அதிகப்படுத்தவும் ரிசர்வ் போலீசார் காவலுக்கு நிறுத்தி வைக்சப்பட்டுள்ளனர். இதுவரை இப்பணியைப் பார்த்துவந்த கடைநிலை ஊழியர்களான செளக்கிதார்கள் பல்வேறு துறைகளில் கடைநிலை ஊழியர்களாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று தினமணிப் பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது.

இது ஏற்கனவே நடைபெற்ற பல்வேறு சம்பவங்களை ஒட்டி இப்படிப்பட்ட காவல் அதிகப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. காலையில் எதிர்க்கட்சி தலைவர் அறையின் பக்கத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு நிறைய போலீசார் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். தங்களுக்கும் தெரியாமல் அரசுக்கும் தெரியாமல் இப்படிப் பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்குமானால் அவை தவிர்க்கப்படும் என்று சொன்னால் மட்டும் போதாது, அப்படிப்பட்ட ஏற்பாடுகளைத் தங்களுக்கோ அவை முன்னவருக்கோ தெரிவிக்காமல் செய்திருந்தால் அந்த அதிகாரிகள் மீது நடவக்கை எடுப்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இரர்மச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கே தெரியும். முதலமைச்ர் அலுவலத்திற்குள்ளே புகுந்து எப்பேர்ப்பட்ட சேதங்கள் விளைவிக்கப்பட்டன, இதே சட்ட மன்றத்தில் அப்போது என்ன எழுப்பப்பட்டது, காவல் துறை சரியாகச் செயல்படவில்லை என்று சொன்னார்கள்; முதலமைச்சர் அறையைத் தாக்கலாமா என்று கேட்டார்கள். இந்த மாதிரி சம்பவங்கள் நடக்காதவாறு சாவல்துறை மூலம் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும்போது காவலர்கள் ஏன் போடப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

(முற்பகல் 10–20)

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தினுடைய பாதுகாப்பைப் பற்றிப் பிரச்சினை இல்லை. அமைச்சர் திரு. இராமச்சந்திரன் குறிப்பிட்டத்தைபோல் ஏற்கனவே நடைபெற்றுவிட்ட......



முதலமைச்சர் அறையிலேயே ஒருவன் நுழைந்தான் என்பதைப் பற்றிய செய்திகளையெல்லாம் வைத்து இப்போது போடப்பட்டிருக்கிற அந்தக் காவலைப்பற்றி யாரும் குறை சொல்லவில்லை. தலைமைச் செயலகம் என்பது வேறு. அவைத் தலைவருடைய ஆளுகைக்குட்பட்ட சட்டமன்ற வளாகம் என்பது வேறு. இதிலே அத்துமீறி காவல் அதிகப்படுத்தப்பட்டிருப்பது பற்றித்தான் இப்போது பிரச்சினை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரையில் என்ன என்ன பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பது பற்றி இப்போது பிரச்சினையில்லை. இந்தப் பேரவை வளாகத்தைப் பொறுத்தவரையிலும் இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படாமலும் தங்களுடைய அதிகாரங்கள் மீறப்படாமலும் நடைபெறவேண்டும். அப்படி ஏதாவது மீறப்பட்டோ அல்லது மாறப்பட்டோ நடைபெற்றிருக்குமானால் அதைத் தாங்கள் விசாரித்து தேவைப் பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத்தான் இந்த பேரவை வளாகத்தைப் பொறுத்தவரையில் எல்லோரும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நானும் அதைத்தான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தாங்கள் அதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையினுடைய வளாகத்தைப் பொறுத்தவரையிலும் முடிவு எடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஆனால், செகரட்டேரியேட் மற்றவைகளைப்பற்றி முடிவு எடுப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன, நான் தலையிடவும் முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள்:

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ,** தலைவர் அவர்களே, ஓரே ஒரு விளக்கம். தாங்கள் அளித்த தீர்ப்பில், தலைமைச் செயலகம் வேறு சட்டமன்ற வளாகம் வேறு என்ற வகையில் நாம் இங்கே பேசி முடித்தோம். நமக்கு குழப்பம் வரக்கூடாது அல்லவா. சட்டப்பேரவை அமைப்பெல்லை என்பதில் தலைமைச் செயலகம் முழுக்க சேர்த்துத் தரப்பட்டு இருக்கிறது நம்முடைய விதிகளின்படி.

முதலமைச்சர் அறைக்குள் வெளி ஆள் ஒருவர் புகுந்து சேதம் விளைவித்திருக்கிறார் என்றால் இதுபோல் நடவாதிருக்க காவல் கண்காணிப்பை முறைப்படுத்தக்கூடாதா ? (குறுக்கீடு) நாளைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டால் யார் பாதுகாப்புக் கொடுப்பது ?

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள், அவை முன்னவர் அவர்கள் கொடுத்ததற்கு முரண்பாடான ஸ்டேட்மெண்டைக் கொடுத்திருக்கிறார்கள். முன்னவரவர்கள் சொன்னார்கள், ஆர்டினரி அரேஞ்ஜ்மெண்ட்ஸ்தான் இங்கே இருக்கிறது ; எக்ஸ்ட்ரார்டினரி அரேஞ்ஜ்மெண்ட்ஸ் இருந்தால் நீங்கள் விசாரித்துச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் சொல்கிறார்கள், அன்றைக்கு முதலமைச்சர் அறையைத் தாக்கினார்கள், அன்றைக்குச் சரியாக செக்யூரிட்டி செய்யவில்லை என்று நீங்கள் தாக்கினீர்கள் ; இன்றைக்கு அடிஷனல் அரேஞ்ஜ்மெண்ட் பண்ணும்பொழுதும் தாக்குகிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். இதை அரேஞ்ஜ் செய்தது சர்க்காரா ? அப்படியென்றால் அது அவை முன்னவரவாகளுக்குத் தெரியாமல் போயிற்றே.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதாக மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே பேசுகின்றபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏற்கனவே இருந்த பணியாட்களை வெளியிலே நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகக் காவல் துறையினரைப் போட்டிருக்கிறார்கள், ஏன் என்ற அந்த விவ்ரத்தைக் கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொன்னேன். ஏனென்றால் ஏற்கனவே இருந்தவர்கள் சரியாகப் பாதுகாப்பு தராததால் முதலமைச்சர் அலுவலகம் தாக்கப்பட்டது என்பதை இங்கே உள்ள அனைவரும் அறிவோம். அந்த நிலைமை இருக்கக்கூடாது என்பதை இந்த மன்றத்தில் பேசும்பொழுது எடுத்துச் சொன்னார்கள். இதையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டுதான் பாதுகாப்பு தர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அவைகளெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே இருந்தவர்கள் அவரவர்கள் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலைச் சொன்னேனே தவிர, அவர்கள் ஏதோ முன்னவர்களுக்கும் எனக்கும் ஏதோ முரண்பாடு என்று சொன்னார்கள். முரண்பாடு அவர்களுடைய ஸ்டேட்மெண்டிலே தான் இருக்கிறது, ஆரம்பத்திலேயிருந்து ஒழுங்காகப் படித்தால் தெரியும். எங்கள் அலுவலகம் தாக்கப்படும்பொழுது பாதுகாப்புத் தரவில்லை என்பது ; பாதுகாப்பு தரப்பட்டால் நாங்கள் வருவதைத் தடுக்கிறோம் என்பது இதுதான் முறையா -

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே வேண்டுமானாலும் இது குறித்து ஒரு மணி நேரம் பேசலாம். அவையின் நேரத்தை இதற்காக இப்பொழுது எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அலுவல் ஆய்வுக் குழுவிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். நான் எல்லோருடைய கருத்தையும் கேட்டறிந்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன். எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம்.



டாக்டர் மு. கருணாநிதி : அவையிலே வெளிப்படையாகப் பேசப்பட்ட ஒன்றுக்கு அவை அலுவல் ஆய்வுக் குழுவிலே தனியாகப் பேசுவது அவ்வளவு சரியாக இருக்காது. அவை முன்னால் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருப்பது மின்சாரத்துறை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—தலைமைச் செயலகம் தங்களுடைய வளாகத்திற்கு உட்பட்டதுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் தங்களுடைய அனுமதியோடு இந்தக் காவல் துறையினர் அதிகரிப்பு நீடிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் பேரவைத் தலைவரவர்களே, தலைமைச் செயலகத்திற்கு நீங்கள் பாதுகாப்பு போட்டுக்கொள்ளலாம் ; ஆனால் இந்த வளாகத்திற்கு மட்டும் தான் நீங்கள் பொறுப்பு என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்களே, அது என்னவாயிற்று - . . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, உங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரிகிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இது உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைமைச் செயலகம் ஒரு பெரிய கோட்டைக்குள் இருக்கிறது ; எல்லா அலுவலகங்களும் உள்ளே இருக்கின்றன. எல்லாவற்றையும் பாதுகாப்பது காவல்துறையின் பொறுப்பு. அந்தக் கடமையை அவர்கள் செய்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த விதமான அவக்கேடும் வந்து விடாத தன்மையிலே பாதுகாப்பு அளிக்க வேண்டியதுதான். அவர்களுடைய உரிமைகள் எந்தவிதமான சங்கடத்திற்கும் உள்ளாகாமல் பாதுகாக்க வேண்டியது என்னுடைய கடமை. அந்த வகையிலே இந்தச் சுற்று வளாகம் ஒழுங்காகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. கோட்டைக்குள் 10 மாடிக் கட்டிடம் இருக்கிறது; கோட்டை இருக்கிறது ; எல்லாவற்றையும் நான் பாதுகாக்க முடியாது ; அது மரபு அல்ல. ஆனால் காவல்துறையினர் அவர்கள் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அதையும் இதையும் இணைத்துக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : அசெம்பிளி பிரிமிஸஸ் என்பதைப் பொறுத்த வரையில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் சொன்னது கரெக்ட். அசெம்பிளி பிரிமிஸஸ் என்பது புதிய ரூல் அமென்ட்மென்ட்படி அந்த பில்டிங் தலைமைச் செயலகம். புதுச் செயலகம் உள்பட அந்த பிரிமிசஸ்தான். அந்த பிரிமிசஸ் பூராவுக்கும் நீங்கள்தான் கன்ட்ரோல். என்ன போலீஸ் செக்யூரிட்டி செய்தாலும் தங்களைக் கேட்காமல் செய்யக்கூடாது ; உங்களுடைய உத்தரவின்பேரில்தான் நடக்க வேண்டும்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிமிஸஸ் என்பது உறுப்பினர்களுக்குள்ள உரிமை அளவிலே தவிர, செக்யூரிட்டி அளவிலே, காவல்துறை அளவிலே அல்ல.

திரு. ரா. உமாநாத் : பிரெமிஸ்ஸுக்குள்ளே செக்யூரிட்டி என்பதும் உங்கள் கன்ட்ரோலில்தான். அசெம்பிளி பிரிமிஸஸ் என்பதற்கு டெஃபனிஷன் என்ன கொடுத்திருந்தாலும் நீங்கள் தான் பொறுப்பு. . . . . . . (குறுக்கீடுகள்—குழப்பம்).

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் ஒரு கோப்பு காணாமல் போய்விட்டால் நீங்கள்தான் பொறுப்பா, உமாநாத் அவர்கள் செல்கிறாரே நீங்கள்தான் பொறுப்பு என்று.

திரு. ரா. உமாநாத் : அசெம்பிளி பிரெமிஸஸ் என்று ரூல்சிலே இருக்கிறது. அதற்குள்ளே ப்ரொடெக்ட் செய்வது உங்களுடைய பொறுப்பு. whatever definition is there, that is a what I am saying.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாக்கின்ற வகையிலே. காவல் காப்பது என்பது தனிப்பட்ட முறையிலேதான் வரும். சட்டமன்றத்திற்குள்ளே வருவதைத்தான் நான் பார்த்துக் கொள்ள முடியுமேதவிர, 'என்ட்டையர் ஏரியா' என் கையிலேதான் இருக்கிறது என்பது தவறான எண்ணம்.

திரு. ரா. உமாநாத் : அசெம்பிளி பிரெமிஸஸ் பொறுத்த வரைக்கும், —ஏனென்றால் இது ஒரு சீரியஸ் மாட்டர். நீங்கள் ஒரு முடிவு சொன்னால் அதன்படி போகலாம்—சட்டப் பேரவையினுடைய பிரமிஸஸ், வளாகம் என்பதற்கு ரூல்ஸிலே என்ன டெஃபனிஷன் இருக்கிறதோ, அதற்குள்ளே சட்டமன்ற உறுப்பினர்களைத் தடுப்பது என்பது சரியா . அந்த பிரெமிஸஸ் உங்களுடைய அட்மினிஸ்டிரேடிவ் கன்ட்ரோலில்தான் இருக்



கிறது, அதனுடைய செக்யூரிட்டி எல்லாம் சேர்த்து.. ஆகவே, உங்களை கேட்காமல் அரேஞ்மென்ட் பண்ணக் கூடாது அரேஞ்மென்ட் பண்ணக் கூடாது என்ற பிரச்னை அல்ல. என்ன அரேஞ்மென்ட் என்பதை, உங்களைக் கேட்டு, நீங்கள் அனுமதித்துத்தான் உங்கள் பிரெமிஸஸுக்குள் நடக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சட்டமன்றம், சட்டமன்றத்தைச் சுற்றியிருக்கின்ற பகுதி, உங்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட பகுதி. அதிலே, சட்டமன்றப் பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது உங்களுடைய கடமை. ஆனால், அங்கே எத்தனை காவலர்கள் நிறுத்தப்பட வேண்டும், யார், யாரெல்லாம் நிற்க வேண்டும், இவையெல்லாம் எந்த அதிகாரத்திலேயும் சபைத் தலைவருக்கு இல்லை. உறுப்பினர்களது உரிமைகள் பாதிக்கப் படுகிறபொழுது அதைக் கண்டறிந்து பாதுகாக்க வேண்டியது தங்களுடைய கடமை. எதை எடுத்தாலும் (குறுக்கீடுகள்)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : உங்களுக்கு அதிகாரம் இல்லையா ? 5,000 போலீஸ் வேண்டுமென்றால், நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : என்னைப் பேச விடுங்கள். நான் பேசியதற்கு பிறகு, நீங்கள் பேசுங்கள். வராண்டா, வெளிப்பகுதி இங்கெல்லாம் எத்தனை ரிசர்வ் போலீஸ் இருக்கிறார்கள் ? அல்லது எத்தனை பேர் இருக்கலாம் என்பதையெல்லாம் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டு வெளியே போடுவதில்லை. அளவுக்கு அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது, உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படுகின்றது. உரிமை காப்பாற்றப்பட வேண்டும், உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், அதுதான் தலைவருடைய கடமையே தவிர, ஏதோ தலைவரைக் கேட்டுக் கொண்டு போலீசை வெளியே நிறுத்தவில்லை. ஆனால், எத்தனை பேரைப் போடுவது என்பதை பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொண்டு போடுவது என்பது விதிகளிலும் இல்லை மரபும் இல்லை, வழக்கத்திலும் இல்லை, சட்டத்திலும் இல்லை.. வெளியே தடுக்கப்படுகிறார்கள், உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படக்கூடிய அளவுக்குக் கடுமையாக, அந்த அளவுக்குக் கடுமையாக இருக்கிறது என்றால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வரலாம், நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம், அதைத் தவிர்க்க . . . . (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை மிக விரிவாகவும், விளக்கமாகவும் இங்கே பேசப்பட்டு, ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு, அவையினர் அத்தனை பேரும் ஏற்றுக் கொண்

டிருக்கிறார்கள். இப்பொழுது நமக்கு முன்னால் இருக்கிற முக்கியமான பிரச்னை, இந்தப் பேரவையினுடைய உறுப்பினர்களுடைய எந்த உரிமையும் பாதிக்கப்படக்கூடாது என்பதும், தங்களுக்கிருக்கின்ற அதிகாரங்கள் எந்த வகையிலேயும் மீறப்படக் கூடாதுஎன்பதும்தான். அப்படி மீறப்பட்டிருக்கிற நிலைமைகளும், உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகிற நிலமைகளும் ஏற்பட்டிருக்குமேயானால், தாங்கள் ஆராய்ந்து பார்த்து அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் இல்லை. விதிகளைப்பற்றி விளக்குகின்ற போது, இருக்கிற விதிமுறைகள் சரியாக இல்லாவிட்டால், அவற்றை மாற்றலாமா, திருத்தலாமா என்பதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாமே தவிர, இப்பொழுதே அதற்கு முழு விளக்கங்களும் சொன்னால், எந்த முடிவும் ஏற்படாது. உறுப்பினர்களுடைய உரிமைகள் முழுவதும் காப்பாற்றப்பட வேண்டும் . தங்களுடைய அதிகாரம் எந்த வகையிலும் மீறப்படக் கூடாது. அப்படி மீறப்பட்ட சூழ்நிலை, உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்ட நிலை ஏற்பட்டிருக்குமானால், அதை ஆராய்ந்தறிந்து, அதற்கேற்ப என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை எடுப்பேன் என்று தாங்கள் உறுதி அளித்திருக்கிறீர்கள். அந்த முடிவினை ஏற்றுக்கொண்டு இந்தப் பிரச்னையை இதோடு விட்டு விடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையினுடைய உரிமைகளைப் பொறுத்தவரைக்கும், பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை நான் எடுப்பேன் என்பதை மட்டும் நான் உறுதியாகக் கூறுகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் மாறுபாட்டுக்காகவோ, எதிர்வாதத்திற்காகவோ பேச விரும்பவில்லை. தாங்கள் சொல்லுகிறபோது ஒரு கருத்தை விட்டு விட்டீர்களோ அல்லது அலட்சியப்படுத்தினீர்களோ என்று கருதி அதற்காக நான் சொல்ல விரும்புகிறேன். இந்த விவாதம் வந்த காரணத்தினால் — செகரட்டேரியட் சட்டமன்றம், சட்டமன்ற வளாகம் என்று வாதம் வந்த காரணத்தால் — சபாநாயகர் அவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகிறபோது முழு உரிமையோடு இயங்க முடியாது என்ற கருத்து இங்கே பேசப்பட்டது. அப்படிப்பட்ட கருத்து இந்த அவையில் பேசப்படக்கூடிய ஒன்றல்ல. காரணம் என்னவென்றால் செகரட்டேரியட்டினுடைய சீப் செகரட்டிரியாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அந்த செரட்டேரியட் உட்பட சட்டமன்ற வளாகம் என்று குறிப்பிடப்படுவதற்கு ஒரே ஒரு காரணம் 'Ulimate Authority' தங்களுக்கு உட்பட்டு சில ஏற்பாடுகளை யாரும் செய்யலாம். சீஃப் செகரட்டரி அல்லது செகரட்டேரியட்டிலே உள்ளவர்கள், தங்களிடத்திலே



சொல்லிவிட்டு நம்முடைய சட்டமன்றத்தினுடைய நடைமுறைகளுக்கு எந்தவிதமான குறையும் ஏற்படாத வகையில் அவர்களுடைய பாதுகாப்பிற்காக வேறு எந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அவர்கள் செய்துகொள்வதையும் நாம் தடுப்பதில்லை. ஆனால் அப்படி செய்கின்ற அந்த ஏற்பாடுகள் எந்தக் குறையையும் ஏற்படுத்தாமல் இருப்பதற்காக 'Ulimate Authority' என்ற முறையில் தங்களுடைய மேற்பார்வைக்குக் கீழே அவை செய்யப்படுவதாக இருக்கவேண்டிய காரணத்தினால், எதைச் செய்வதாக இருந்தாலும் செக்ரடேரியட்டில் பாதுகாப்புக்காக தீவிர நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற கூடம் இவைகளுக்கு குந்தகம் இல்லாமல் இருப்பதற்கு, தங்களுக்கு அறிவித்துவிட்டு செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்த முழு உரிமை தரப்பட்டிருக்கிறது. எனவே உறுப்பினர்கள் பாதுகாப்பு என்று மட்டுமல்லாமல், சட்டமன்றத்தினுடைய பெருமையை (dignity) அந்த பெருமைக்கும் கண்ணியத்திற்கும் மகிழ்ச்சி தருகிற வகையில், தங்களுக்குத் தரப்பட வேண்டிய நியாயமான அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு செயல்படும்படியாகச் செய்யவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

## (இ) பால்கமிஷன் அறிக்கை .. ஆங்கிலப் படிவம்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நேற்றைக்கு முன்தினம் நீதிபதி பால் கமிஷன் அறிக்கையை வைத்தார்கள். ஆங்கிலத்திலே இருக்கின்ற அதனுடைய தமிழ் மொழிபெயர்ப்பு உறுப்பினர்களுக்கு எல்லாம் தரப்பட்டது. சில நேரங்களிலே, தமிழிலே உள்ள லீகல் டெர்ம்ஸ் உறுப்பினர்களுக்குப் புரியாவிட்டால் ரெபரன்ஸுக்காக ஆங்கில காப்பியைப் பார்ப்பது வழக்கம்.

நான் போய் நம்முடைய செரட்டரியிடத்திலே ஆங்கில காப்பி இருக்கிறதா என்று கேட்டேன். அவர்கள் ஆங்கில காப்பியைக் கொடுத்து இருக்கிறார்கள். தமிழிலே இணைப்பு, அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது, அரசின் கருத்து என்ன என்பதைப் பற்றி ஒரு அனெக்ஷர் கொடுத்திருக்கிறார்கள். அது ஆங்கிலத்திலே இல்லை. தங்களுடைய செயலாளர் அது ஆங்கிலத்திலே இல்லை என்று தெரிவித்தார்கள். பிறகு அது தேவை என்று எழுதி எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே கடிதம் எழுதி எனக்கு ஒரு ஆங்கில காப்பி ரெபரன்ஸுக்காக வேண்டுமென்று கேட்டார்கள். ஆங்கிலத்தில் அது இல்லை என்று

தெரிவித்தார்கள். சீப் செகரட்டரி திரு திரவியம் அவர்களிடம் நான் கன்சல்ட் செய்தேன், அவர்கள் இல்லை என்றார்கள். சர்க்கார் எப்போதும் ஆங்கிலத்திலே எழுதித்தான் தமிழிலே போடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கமிஷன் அறிக்கையின் காப்பி கொடுக்கப்பட்டிருக்கிறதே.

திரு. துரைமுருகன் : பாலோ அப் ஆக்ஷன் எடுத்ததுபற்றிய ஜி.ஓ. ஆங்கிலத்திலே இல்லை. தமிழிலே தான் இருக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பால் கமிஷன் அறிக்கை தமிழிலும், ஆங்கிலத்திலும் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அதையொட்டி அரசாங்க சார்பில் தரப்பட்டுள்ள அறிக்கை ஆங்கிலத்திலே தரப்படவில்லை. தமிழிலே மாத்திரம் தரப்பட்டிருக்கிறது. அதுவும் ஆங்கிலத்திலே தரப்படவேண்டும் என்பது தான் கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களிடத்திலே வந்தது பூராவும் தமிழிலே தான் வந்தது. வந்ததைக் கொடுத்திருக்கிறோம். ஆங்கிலத்திலே வேண்டுமானால் அரசினிடத்திலே கேட்டு வாங்கித் தருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பால் கமிஷன் அறிக்கை தமிழிலும், ஆங்கிலத்திலும் இரண்டிலும் வைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் வைப்பதுதான் வழக்கமாக இருந்துகொண்டு இருக்கிறது. தமிழிலே கிடைத்திருக்கிறது, ஆங்கிலம் கிடைக்கவில்லை, என்று மன்ற உறுப்பினர்கள் கூறுவதன் காரணமாக இந்த விவாதம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக ஆங்கிலத்திலும் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு). அரசாங்கம் அளித்த மெமோரண்டம் தமிழிலே தரப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலே வேண்டும் என்கிறார்கள், ஆங்கிலம் வேண்டும் என்று உறுப்பினர்கள் கோருவதன் காரணமாக இந்த விவாதம் எடுத்துக்கொள்வதற்கு உள்ளாக ஆங்கிலத்திலும், தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,



## அறிக்கை அளித்தல்

### (அ) உரிமைக் குழு

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, 'இந்து' ஆங்கில நாளேடுக்கு 'சட்டமன்ற செயலகம்' என்ற தலைப்பில் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் எழுதிய கடிதம் குறித்து அவர் மீதும் அதனைப் பிரசுரித்ததற்காக 'இந்து' நாளேடு மீதும் எழுப்பப்பெற்றுள்ள உரிமைமீறல் பிரச்னை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்

### [ஆ] பொது நிறுவனங்கள் குழு

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்—

(அ) 1971–72ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கைபற்றிய பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பனிரெண்டாவது அறிக்கை.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1960–61ஆம் ஆண்டு முதல் 1965–66ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான பொது நிறுவனங்கள் குழு (1974–75)அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை.

(இ) 1973–74ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத்துறைகள் பற்றிய அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதினான்காவது அறிக்கை,

[4] ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும்படியான தீர்மானத்தின் மீது மார்க்ஸிஸ்ட் கட்சியின் சார்பில்சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையைத் துவக்கும்போது எங்களுடைய கட்சியினுடைய சட்டசபைக் குழுத் தலைவர் தோழர் சங்கரய்யா அவர்கள் சில நடவடிக்கைகள் தமிழகத்திலே நடைபெற்றது குறித்தும், 19–ம் தேதி நடைபெற்ற நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடைபெற்ற நேரத்தில் போலீசார் அத்து மீறி செயல்பட்ட கொடுமை, அடக்குமுறை நடைபெற்றது பற்றி எங்களுடைய கண்டனத்தை தெரிவிக்கும் முகத்தால் வெளிநடப்பு செய்தது உங்களுக்குத் தெரியும். ஆனால் ஆளுநர் உரிமையில் பல்வேறு விஷயங்களைப்பற்றிச் சொல்லி இருந்த போதிலும், தமிழகத்திலே இருக்கும்படியான உழைப்பாளி மக்கள் விவசாயத் தோழர்கள் உட்பட இன்னும் பலதரப்பட்ட தொழிலாளிகள் பல்லாயிரக் கணக்கில், லட்சக்கணக்கில் பங்கு பெற்று நடைபெற்ற ஒரு உரிமைப்பிரச்சனை போராட்டத்தின் மீது கடுமையான அடக்குமுறை கையாளப்பட்டதும், அது சம்பந்தமாக நடைபெற்றுள்ள துப்பாக்கிச்சூடு உட்பட நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி, தங்களுடைய சார்பில் ஒரு சாதாரண வருத்தத்தைக்கூட தெரிவிக்காமல் ஆளுநர் உரிமையில் எந்தவிதமான ஒரு வார்த்தை கூட அதைப் பற்றிச் சொல்லாமல் அவருடைய உரை இருக்கிறது என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அன்றைக்குக் கையாளப்பட்டு இருக்கும்படியான அடக்குமுறை பயங்கரமான அடக்குமுறை. தொழிலாளர் வர்க்கத்திற்கும், ஏழை எளிய மக்களுக்கும் , பின்தங்கிய மக்களுக்கும், பலவீனமான மக்களுக்கும் நியாயம் வழங்குவதற்காக அரசாட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லும்படியான இந்த அரசு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தது சரிதானா என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

[முற்பகல் 10–40]

தமிழகம் முழுவதிலும் 5000–க்கும் மேற்பட்ட பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த வேலை நிறுத்தத்தை உடைக்கவேண்டும்என்பதற்காக, அதிலே கோவை மாவட்டத்தில் மட்டும் 1,000 பேர்களுக்கு மேல் பிரிவெண்டிவ் அரெஸ்ட் என்ற முறையில் அந்த வேலைநிறுத்தத்தை உடைக்க வேண்டும் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்கள். திருச்சி சிம்கோமீட்டர் நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அமைதியாக வேலை



நிறுத்தம் செய்தார்கள். அந்தத் தொழிலாளர்களை தொழிற்சாலைக்கு உள்ளேயும், தொழிற்சாலைக்கு வெளியேயும் அடித்து சித்தரவதை செய்து இருக்கிறார்கள். பலபேர் பயங்கரமான முறையில் அடிப்பட்டார்கள். அதிலே பெண் தொழிலாளர்கள் பலர் அடிபட்டு இருக்கிறார்கள். தஞ்சையில் துப்பாக்கிப் பிரயோகமே நடத்தினார்கள். போக்குவரத்தைத் தடுத்தார்கள் என்று. ஆனால் ஓடுகின்றபஸ்ஸிலிருந்து கொண்டே போலீசார் சுட்டார்கள் என்கிற செய்திகள் கூட வந்து இருக்கின்றன. அதிலே 3 பேர் இறந்து இருக்கிறார்கள். போலீஸ் படை எங்கு பார்த்தாலும் குவிக்கப்பட்டு இருந்தது. எமர்ஜென்சி நேரத்தில் 1975ஆம் ஆண்டில் அன்றைக்கு இருந்த தமிழகப் போலீஸ் மட்டுமல்ல, மத்திய ரிசர்வ் போலீசும் எங்கே பார்த்தாலும் தெருத்தெருவாக நின்று கொண்டு ஜனங்கள் தெருவில் இறங்கி நடக்கவே அஞ்சுகின்ற அளவிற்கு நிலைமைகள் இருந்தன. ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களோ, அல்லது ஒரு தொழிற்சங்கமோ அல்லது அதுபோன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையுடைய ஸ்தாபனங்களோ தன்னிச்சையாக இயங்க முடியாமல் பயமுறுத்தப்பட்டு வந்தன. அன்றைய எமர்ஜென்ஸி காலத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடந்தது. பாலீஸ்படை ஆங்காங்கு குவிக்கப்பட்டிருந்தது. அதையும் தாண்டித்தான் தொழிலாளர் வர்க்கம் போராடி வெற்றிபெற்றது.

ஆனால் கடந்த மாதம் 19–ம் தேதி நடைபெற்ற அடக்குமுறை எமர்ஜென்சி காலத்தில் இருந்ததைவிட மிஞ்சிவிட்டது. தஞ்சை மாவட்டத்தில் 3பேர் இறந்தது மட்டுமல்ல, 50 பேர்களுக்கு மேல் காயம் ஏற்பட்டு அவர்கள் ஆஸ்பிடலுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். பல நூற்றுக் கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான அடக்குமுறை இருந்தது. ஆயிரக்கணக்கான பேர்கள் பிரிவெண்டிவ் அரெஸ்ட் செய்யப்பட்ட பின்பும், நூற்றுக்கணக்கான பேர்கள் கைது செய்யப்பட்ட பின்பும், அந்த வேலை நிறுத்தம் நல்ல முறையில் நடைபெற்றது. இப்படி ஆயிரக்கணக்கான பேர்களை போலீசைக்கொண்டு கைது செய்யச் சொல்லி ஒரு வேலைநிறுத்தத்தை உடைப்பதற்காக இந்த அரசு செயல்படுகிறது என்று சொன்னால், இது ஜனநாயக உரிமைக்கு ஒத்த ஒரு செயல்தானா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்த்தது உண்டா என்று நான் கேட்க விரும்புகிறேன். மேலும் தொழிலாளர் வர்க்கம் இப்படிப்பட்ட போராட்டங்களை நடத்துவதில் என்ன குற்றத்தை இந்த அரசு கண்டது என்பதை அவர்கள் சொல்லியாகவேண்டும்.

தமிழக அரசையோ, மத்திய அரசையோ கவிழ்ப்பதற்காக நடந்து இருக்கும்படியான ஒரு புரட்சி அல்ல அது. அப்படிப்பட்ட ஒரு நோக்கத்தோடு நடத்தப்பட்ட ஒரு போராட்டம் அல்ல. இந்தியா பூராவும் நடந்த அந்தப் போராட்டம் மிக முக்கியமான

[திரு. கு. ரமணி] [1982 பிப்ரவரி 4

ஒரு போராட்டம். சுதந்திரம் பெற்று 34 வருஷம் ஆகிவிட்டது. இதுவரைக்கும் இப்படி வெற்றிகரமான ஒரு போராட்டம் நடத்தப்பெற்றது இல்லை. அப்படி நடத்தப்பட்ட ஒரு போராட்டம் மத்திய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கோ அல்லது அந்த அதிகாரத்தைக்கைப்பற்றவோ நடைபெற்ற ஒரு போராட்டம் அல்ல. மனிதனின் சர்வசாதாரணமான உரிமைகளுக்காக நடைபெற்ற ஒரு போராட்டம் அது. அவருடைய கோரிக்கைக்களுக்கு அரசு காது கேளாத நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக கண்டித்து நடத்தப்பட்ட ஒரு போராட்டம் அது. தொழிலாளர் வர்க்கம் வேறு எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை. ஒரு நாள் கண்டன வேலை நிறுத்தம்தான் செய்தார்கள். அதுவும் மிகுந்த நியாயமான முறையில்தான் நடத்தினார்கள். சட்டபூர்வமான முறையில் அந்தப் போராட்டம் நடத்தப்பெற்றது என்பதை நான் அறுதியிட்டுக் கூறவிரும்புகிறேன்.

தொழில் தகராறு சட்டத்தின் கீழ் ஒரு நாள் கண்டன வேலை நிறுத்தம் நடத்தப்போகிறோம் என்று முறைப்படி நோட்டீஸ் கொடுத்து, சட்டபூர்வமாக நடத்தப்பட்ட ஒரு போராட்டம் ஆகும். எந்த ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தையோ அல்லது தனிப்பட்ட பிரச்சனைகளை முன் வைத்தோ அல்லது வேறு எந்தப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கோ நடத்தப்பட்ட போராட்டம் அல்ல. ஒரு நாள் கண்டன வேலைநிறுத்தம் தானே தவிர, அது ஒரு குறிப்பிட்ட கோரிக்கைகளையோ அல்லது சலுகைகளையோ வலியுறுத்தியோ அல்லது எந்த ஒரு நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்கள் பிரச்சனைகளுக்காகவோ இந்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நிர்பந்தப்படுத்தி நடத்தப்பட்ட ஒரு போராட்டம் அல்ல. பொதுக் கோரிக்கை அவர்களுடையது. அதிலும் முக்கியமாக விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தால் தயாரித்துக் கொடுக்கப்பட்ட ஒரு பிரசஙகம்தான் ஆளுநர் பிரசங்கம்.

இந்த பிரசங்க அறிக்கையில் 11—வது பாராவில் என்ன சொல்லியிருக்கிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதுதான இந்தப் போராட்டத்தினுடைய ஒரு முக்கியமான கோரிக்கை. அது தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல. எஙகளுக்கு கொஞ்சம் சம்பள உயர்வு வேண்டும், போனஸை உயர்த்த வேண்டும், கிராக்கிப்படி வேண்டும் என்பவைப்போன்ற சொந்தக் கோரிக்கைகளுக்காக அல்ல; விவசாயிகள், பொதுமக்கள், பாட்டாளிகள், உழைக்கின்ற வர்க்கத்தினர் பாடுபட்டு சம்பளமோ கூலியோ வாங்கி ஜீவனம் நடத்துகின்ற அத்தனை பேர்களுடைய நன்மைக்காக அந்த மக்கள் எட்டிப்பிடிக்க முடியாத



1982 பிப்ரவரி 4] [திரு. கு. ரமணி]

அளவுக்கு இன்றைக்கு உச்சகட்டத்திற்குச் சென்றிருக்கின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்தப்பட்ட போராட்டம். அடக்கு முறைச் சட்டங்களை ரத்து செய்ய வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. தொழிலாளர்களுக்குப் பாதகங்கள் ஏற்பட்டால், அவர்களுக்கு தவறு இழைக்கப்பட்டால், அநீதி இழைக்கப்பட்டால் அதை எதிர்த்து குரல் எழுப்பி, மக்களுடைய ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கவேண்டுமென்று ஒற்றுமையுடன் குரல் கொடுக்க உரிமை இருக்கிறது. அந்த உரிமைதான் கூட்டம் நடத்தும் உரிமை. குரல் எழுப்பிப் போராடும் இதர உரிமைகள், அதற்குக் குழி பறிக்கக்கூடிய முறையில் ஸ்டிரைக் தடைச்சட்டம் வந்திருக்கிறது. தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால் அடக்குமுறைச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது மத்திய அரசால். நாடுபூராவும் இருக்கக்கூடிய உழைப்பாளிகள் மட்டுமல்ல, வியாபாரிகள், சாதாரண மக்கள் அனைவருக்குமே பாதகம் விளைவிக்கும் அடக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்ய வேண்டும்; ஜனநாயக உரிமையை பாதுகாக்க வேண்டுமென்பது அடுத்த கோரிக்கை.

விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். உபயோகிப்போருக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்க வேண்டும். அதற்காக நாடு முழுவதுமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பிரமாண்டமான கிளர்ச்சிக்கு சட்டப்படி கோரிக்கை விடப்பட்டது. அந்தக் கிளர்ச்சி தமிழ்நாட்டில் மட்டும் அல்ல; இந்தியத் துணைக்கண்டம் பூராவிலும் நடந்தது. உப்பு முதல் கற்பூரம் வரையில் அத்தகைய பொருள்களுக்கும் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு விலைவா உயர்ந்துவிட்டது. உற்பத்திச் செய்கின்றவர்களுக்கு விலை நிர்ணயம் செய்ய உரிமை இல்லை. வர்த்தக சூதாட்டக்காரர்களும், கள்ள மார்க்கட்காரர்களும், கொள்ளை இலாபம் அடிப்பவர்களும், பெரும் பணக்காரர்களும்தான் விவசாயி உற்பத்திச் செய்கின்ற பொருள்களுக்கு என்ன விலை கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கிறார்கள். அந்த நிலை தவறு; நியாயம் கிடைக்க வேண்டுமென்று கோரிக்கை விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மிக முக்கியமான 2, 3 கோரிக்கைகளுக்காகத்தான் அன்றையதினம் வேலை நிறுத்தம் நடைபெற்றது

மத்திய சர்க்கார் இந்தக் கிளர்ச்சியை எப்படியாவது ஒடுக்கியே தீருவது என்று முடிவெடுத்திருந்தார்கள். அந்த முடிவை நிறைவேற்றுவதுதான் இந்த அரசின் கடமையா? அந்த முடிவு எங்களுக்கும் சம்மதம் என்ற முறையிலே இங்கும் கடுமையான அடக்குமுறைகளை செயல்படுத்த இந்த அரசு முன் வரலாமா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். சரித்திரத்தில்

மாறி வருகிறது. சில பகுதிகள் தவிர, இம்மாநிலத்தின் மற்ற எல்லா பகுதிகளிலும் உள்ள பல்வேறு ஏரிகள், நீர்த் தேக்கங்கள் நிரம்புவதற்கு இது பெரிதும் உதவியுள்ளது. மேலும், இம்மாநில மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த, பல்வேறு சமூக, பொருளாதாரக் கொள்கைகள் மூலம் என்னுடைய அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது.

32. இச்சட்டமன்றத்தில் நடைபெறும் விவாதம் சிறந்த பயன் தருவதாகவும், ஆக்கபூர்வமானதாகவும், நம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையும் என்று நம்புகிறேன். உங்களது முயற்சிகளில் வெற்றியடைய வாழ்த்துகிறேன். வணக்கம்

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

---

**வியாழக்கிழமை, 1982 பிப்ரவரி 4.**

**தை 22, துன்மதி, திருவள்ளுவர் 2013.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**
''வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை''

எப்போதும் தன்னை வியந்து கொண்டாடாதே. நன்மை தராத செயல்களை மனத்தாலும் விரும்பாதொழிக.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தமிழ்நாடு மின்வாரியம் மேற்கொண்டு வரும் மின் திட்டங்கள்

***வினா எண் 21—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது மேற்கொண்டு வரும் அனல், புனல் மின் திட்டங்கள் அன்றி வேறு வகை மின் திட்டங்கள் ஏதேனும் மேற்கொள்ளும் திட்டம் அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆம்.

**திரு. இரா . தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று திரும்பியதும் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் பிரான்ஸ், நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் கடல் அலையில் இருந்து மின்சாரம் எடுக்கப்படுவதாகவும், பிரிட்டனில் ராட்சத காற்றாடிகள் மூலம் பெறப்படுவதாகவும் கூறி இருந்தார்கள், அந்த முறை தமிழ்நாட்டிலும் பின்பற்றப்படுமா ?

[திரு. கு. ரமணி] [1982 பிப்ரவரி 4

இது முக்கியமானது. இது முதன்முதலாக நடந்த பெரும் போராட்டம். அகில இந்திய ரீதியில் 8 மைய தொழில் சங்கங்கள் சேர்ந்து எடுத்த ஒரு முடிவு. 8 தொழிற் சங்கங்களும் மாற்றுக்கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் இந்தப் பிரச்சனையில் ஒன்றுபட்டு அகில இந்திய ரீதியில் கிளர்ச்சி நடத்த வேண்டுமென்ற முடிவை எடுத்தார்கள். பல்வேறு சங்கங்கள், அரசு ஊழியர்கள் உட்பட அந்த முடிவை ஏற்றுக் கொண்டார்கள். 40-க்கு மேற்பட்ட சம்மேளனங்கள் அந்த முடிவை ஏற்றுக் கொண்டார்கள். அத்தனை பேர்களும் சேர்த்து ஏகோபித்து எடுத்த இந்த முடிவுக்கு முக்கியமான காரணம், இது நாட்டு மக்கள் பிரச்சினை, உழைப்பாளிகள் பிரச்சனை. ஆகவே, நாட்டில் எப்போதுமே ஏற்படாத ஒரு ஒற்றுமை இந்தப் பிரச்சனையிலே ஏற்பட்டது. தங்களுடைய சுயநலத்திற்காக இந்த ஒற்றுமையை ஏற்படுத்தவில்லை. இந்த ஒற்றுமை உழைப்பாளி மக்களுடைய ஒற்றுமை, விவசாய மக்களுடைத் ஒற்றுமை.

இதற்கு முன்னாலே இப்படிப்பட்ட ஒரு ஒற்றுமை இந்த நாட்டிலே ஏற்படவில்லையா என்று கேட்டால் ஒரு காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தின்போது இந்த நாட்டு மக்கள் அனைவரும் 'சுதந்திரம் நம்முடைய பிறப்புரிமை அது கிடைக்காமல் எந்த உரிமையையும் பெறமுடியாது' என்று போராடிய நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு ஒற்றுமையைப் பார்த்திருக்கிறோம். அதன் பிறகு அப்படிப்பட்ட ஒரு ஒற்றுமையை இப்போதுதான் பார்த்தோம். வர்த்தக சூதாயகளின், கள்ளமார்க்கெட்காரரர்களின், உழைப்பாளி வர்த்தகத்தை சுரண்டுகின்றவர்களின், மக்கள் விரோதப்போக்தக் கண்டிக்கும் வகையிலே ஏற்படுத்தப்பட்ட இப்படிப்பகரு ஒரு ஒற்றுமையை இந்த தமிழக சர்க்கார் வரவேற்றிமத வேண்டும். இந்த ஒற்றுமை பிற்காலத்தில் இந்த அரசுக்கும் பாதுகாப்பாக அமையக்கூடியதாக இருக்கும். ஆகவே இதைப் வரவேற்றிருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறிவிட்டது இந்த சர்க்கார்.

மத்திய சர்க்காருக்கு நம்பிக்கையாக நீங்கள் இருக்கிறீர்கள். அவர்களுடைய மனதுக்கு ஒரு சந்தோஷத்தை ஏற்படுத்த வேண்டும், அவர்கள் சொல்வதை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்படிப்பட்ட அடக்குமுறை நடவடிக்கையை எடுத்து, வளர்ந்துவருகின்ற இடதுசாரி ஜனநாயக சக்திகளை ஒடுக்க முற்படுவது பெரும் தவறு, ஆளும்கட்சி தடம் தவறிப் போகிறது என்பதை வருத்தத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.



1982 பிப்ரவரி 4] [திரு. கு. ரமணி]

இந்த வேலை நிறுத்தத்தில் நடந்துள்ள இன்னொரு விஷயத்தையும் பார்க்க வேண்டும். சட்டப்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டு நடத்தப்பட்ட போராட்டம் இது. இந்தப் போர்ராட்டத்தை நடத்த இந்த நாட்டிலே உரிமை இல்லையா ? உங்களுக்குத் தைரியம் இருந்தால் இல்லை என்று சொல்லுங்கள். அந்த உரிமை இல்லை என்று சொன்னால், இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை நடத்தும்போது சும்மா இருப்பீர்களா? அந்தச் சட்டம், இந்தச் சட்டம், பாதுகாப்புச் சட்டம் எல்லாம் பாய்ந்திருக்கும் அல்லவா ? தடைச்சட்டம் வந்திருக்கும் அல்லவா? எந்தவிதமான ஸ்டிரைக்கும் தமிழ்நாட்டில் நடக்கத் கூடாது என்று இந்த அரசு சொல்லியிருக்கும் அல்லவா ? அப்படிப் பட்ட நடவடிக்கை எதுவும் வரவில்லையே !

[முற்பகல் 10—50]

ஆகவே நாங்கள் நோட்டீஸ் கொடுத்து ஸ்ட்ரைக் செய்தோம். ஆனால் நீங்கள் அந்த ஸ்ட்ரைக்கை சட்ட விரோதம் என்று சொல்லவில்லை. மத்திய அரசினை ஆண்டுகொண்டிருக்கின்ற திருமதி இந்திரா காந்தி அம்மையார் உட்பட பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகப்படுத்தமாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் அப்படிச் சட்டத்தைப் பிரயோகிக்காமல் அதன்படி தடை எதுவும் செய்யாமல் போலீஸ் மட்டும் அனுப்பி சட்டபூர்வமான வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு பிரச்சாரத்தினைச் செய்து நடவடிக்கைகளை எடுத்து தாக்குதல்களையும் நடத்தினால் அதற்கு அர்த்தம் என்ன ? அநியாயமாக மக்களின் உரிமையின் மீது கை வைப்பது என்றுதான் அதற்கு அர்த்தம். ஆகவே அந்த வகையிலேதான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து அனைத்து அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டிருக்கும்படியான விஷயம் இது. மத்தியிலே ஆளும் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைத் தவிர அவர்களோடு சேர்ந்துள்ள தொழிற்சங்க ஸ்தாபனமான ஐ.என்.டி.யூ.சி.யைத் தவிர, இந்த சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய பிரதான எதிர்க்கட்சியைத் தவிர மற்றுள்ள எதிர்க்கட்சிகளும் பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய எல்லா எதிர்க்கட்சிகளும் ஒப்புக்கொண்ட விஷயம்தான் இது. இங்குள்ள பிரதான எதிர்க்கட்சியினர் இதை எதிர்த்தார்கள். அவர்கள் எதிர்காலத்தில் தான் இதனை உணர்வார்கள். ஆகவே பாராளுமன்றத்திலுள்ள அத்தனை எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டு நின்று இந்தப் போராட்டத்திற்கு ஆதரவளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தப் போராட்டத்தின் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருப்பது கொஞ்சம் கூட நியாயம் இல்லை. அதற்காக ஒரு வருத்தம் தெரிவிக்கக்கூட

[திரு. கு. ரமணி] [1982 பிப்ரவரி 4

ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக ஆயிரக்கணக்கானபேர் பழிவாங்கப்படக்கூடிய நடவடிக்கை தொடர்ந்து வருகின்றது.

அது மட்டுமல்ல; இந்தப் போராட்டத்தை உடைப்பதற்கு போலீஸின் அடக்குமுறைகள் மட்டுமல்ல. இந்த நாட்டினுடைய ரேடியோ அமைப்பு எவ்வளவு கேவலமான முறையிலே பயன்படுத்தப்பட்டது என்பது வருத்தத்திற்குரிய விஷயம். இன்னும் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அது விளங்கியது.

நடத்தப்பட இருந்த ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு 10 நாட்களுக்கு முன்பிருந்தே வேலை நிறுத்தம் பிசுபிசுக்கும், எந்தத் தொழிலாளியும் வேலை நிறுத்தத்திற்கு வரவில்லை என்றெல்லாம் ரேடியோவிலே பிரச்சாரம் செய்யப்பட்டதே, உழைப்பாளிகள் சட்டபூர்வமாக நடத்தக்கூடிய ஒரு போராட்டத்திற்கு எதிராக மிக மோசமான முறையிலே பிரசாரம் செய்யப்பட்டதே. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய 45 சதவீதம் மக்களின் ஓட்டுகளைப் பெற்றுக்கொண்டு மத்தியிலே அதிகாரம் செலுத்தக்கூடிய மத்திய அரசு, ரேடியோ ஸ்தாபனம் இந்த நாட்டினுடைய பொதுச் சொத்து. அது 55 சதவீதம் மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றதே, அந்த உரிமை அவர்களுக்கு உண்டா என்பதைச் சொல்லவேண்டும்.

அதுமட்டுமல்ல. அந்த நிலையினை ஆதரித்து நம்முடைய அரசும் நடவடிக்கைகள் எடுக்கலாமா என்பதை யோசிக்க வேண்டும். ஸ்ட்ரைக் அறிவித்தபிறகு கடைசிவரையில் முதலமைச்சர் அவர்கள் வாயைத் திறக்கவே இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இடதுசாரி ஜனநாயக சக்திகளின் உணர்வுகளை உணர்ந்திருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் கடைசியில் அவர்களும் வாய் திறந்தார். அவர் என்ன சொன்னார் தெரியுமா? ''இதுவரையில் நடைபெறாத முறையில் முதன்முதலாக இப்படி ஒரு நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம், பந்த் என்ற முயற்சியில், அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் ஈடுபட்டு பொது மக்களின் நலனுக்குப் பாதகம் ஏற்படுத்துவதை நாட்டு வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள யாரும் ஆதரிக்க மாட்டார்கள்'' என்று சொல்லி இருக்கிறார். நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம், இதுவரையிலும் யாரும் கண்டிராத பொது வேலை நிறுத்தம் நாட்டுக்கு எதிரானது என்று சொல்லக்கூடிய இந்த முடிவுக்கு முதலமைச்சர் அவர்கள் எப்படி வந்தார்கள் என்பதுதான் புரியவில்லை. அப்படியானால் வேறு பிரச்சினைகளுக்கு அவர் பதில் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது, நாட்டிலே



1982 பிப்ரவரி 4] [திரு. கு. ரமணி]

இருக்கின்ற மக்கள் பட்டினி கிடந்து தவிக்கிறார்கள். வாழ முடியாத நிலைமையில் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ''இந்த பந்துக்கு அறை கூவல் விடுத்திருப்பவர்கள் விலைவாசி உயர்வை எதிர்த்துத் இதை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அதிகமான பொருள் உற்பத்தி செய்வதன் மூலமும், உற்பத்தி செய்த பொருள்களை தேவையான இடங்களுக்கு விரைவில் எடுத்துச் சென்று வினியோகிப்பதன் மூலமும்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். வேலை நிறுத்தத்தால் இதெல்லாம் பாதிக்கும், எனவே, பந்த் நடத்துகிறவர்கள் தங்களது நடவடிக்கைகளால் நாட்டில் விலைவாசி உயர்வுக்கு வழி கோலுகிறார்களே யொழிய விலைவாசியைக் குறைப்பதற்கு எந்த வகையிலும் உதவுகிறார்கள் என்று சொல்ல முடியாது'' என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். தொழிலாளர் வர்க்கம் ஒரு வேலை நிறுத்தம் செய்வதினால் மட்டும்தான் உற்பத்தி பாதிக்கப்படுமா?

நாம் இந்த மாமன்றத்திலேயே முன்பு ஒரு முறை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். (மணியடிக்கப் பெற்றது) தயவுசெய்து இன்னும் கொஞ்ச நேரம் அனுமதியளிக்க வேண்டுகிறேன். இலங்கை வாழ் தமிழர்கள் உரிமைகள் பறிக்கப்பட்ட காலத்தில், தமிழகம் முழுவதும் அதை கண்டிக்கின்ற வகையில் ஒரு நாள் வேலை நிறுத்தம் நடைபெற வேண்டும் என்று சொல்லி இந்த அவையிலேயே தீர்மானத்தை நிறைவேற்றியதோடு, வேலை நிறுத்தமும் பந்தும் முழுமையாக நடைபெற்றது. அப்படி நடந்தது ஒன்று வரவேற்கத் தக்கது. மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற காலங்களில் எதேச்சாதிகாரத்திற்கு எதிராக, இனிமேலும், எப்பொழுது நடத்த வேண்டிய ஒன்று,—அது வேறு ஆனாலும் நான் கேட்க விரும்புவது, அப்படி நடந்த முழுமையான வேலை நிறுத்தத்தினால், உற்பத்தி பாதிக்கப்பட்டதா இல்லையா. விலைவாசி எத்தனை பெர்சன்ட் அதன் காரணமாக ஏறியிருக்கிறது என்று புள்ளி விவரம் தர முடியுமா? அதை முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டாமா?

இந்தியாவிலே சுதந்திரப் போராட்ட காலத்தில் எத்தனையோ வேலை நிறுத்தங்கள் நடந்திருக்கின்றன. அவைகளினால் எல்லாம் உற்பத்தி பாதிக்கப்பட்டதா? அப்படி பாதிக்கப்பட்டது என்று சொன்னால், சுதந்திரத்தைப் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றியும் மக்கள் போராட்டத்தில் தத்துவத்தைப் பற்றியும், நீங்கள் சரியாக புரிந்திருக்க வில்லை என்று பொருள். உண்மை என்னவென்றால் இப்பொழுது இருக்கக்கூடிய மத்திய சர்க்காருடன் கூட்டு சேர்ந்துக் கொள்வது என்று நீங்கள் முயற்சித்த உடனேயே—உங்களுடைய

அந்தத் தீர்மானம் நடக்குமா நடக்காதா என்பது வேறு விஷயம்—இதுபோன்ற குழப்பம் உங்களுக்கு வருவது சகஜம் தான். அந்தத் தீர்மானத்தின் விளைவுதான் இது. அதனால் தான் இப்படி யெல்லாம் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் முதல்வர் அவர்கள் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஆனால் ஒரு வேலை நிறுத்தத்தினால் உற்பத்தி கெட்டு விடாது. இன்னொன்று கேட்க விரும்புகிறேன். தொழிலாள மக்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை பதுக்கி வைக்கிற கள்ள மார்க்கெட்டுகாரர்களால் தானே விலைவாசி உயர்வு அதிகப் படுகிறது. இதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் அதை யாராவது தடுக்கமுடிந்ததா தடுக்க முடியாது இனிமேலும் தடுக்க முடியுமா என்பதே கூட சந்தேகம்தான்.

அதேபோல் நம் நாட்டில் உணவு தானியங்கள் 13 கோடி டன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்தி லும் உணவுப் பஞ்சம் இல்லை. உணவுப் பொருள்களை வெளி நாட்டுக்கும் ஏற்றுமதி செய்கிறோம். அந்த வகையில் உற்த்தி நிலைமையை உயர்த்தியிருக்கிறார்கள் இந்த 34 வருஷத்தி தில், யார் உயர்த்தினார்கள்? உழைப்பாளி மக்கள் உயர்த்தி யிருக்கிறார்கள். இந்த 34 வருஷமாக போராட்டமே இல்லையா நாட்டில்? போராட்டமும், உற்பத்தி பெருக்கமும் இரண்டும் இணைந்து சேர்ந்தே நடந்து வந்திருக்கிறது. அப்படியிருக்கை யில் இது மாதிரி பேசலாமா? இதுபோல் நீங்கள் பேசக்கூடாது. இப்படிப்பட்ட முறையில் பிரச்சினையை இழிவுபடுத்துவதுசரி யல்ல. கடுமையான சர்வாதிகாரத்தை எதிர்க்கும்போது முதல்வர் அவர்களின் அரசு, மக்களோடு இணைந்து நிற்க வேண்டும்.

தொழிலாள வர்க்கத்தின் இந்த ஒரு நாள் போராட்டத்தைக் கண்டு அஞ்சுவதினால்தான் மத்திய அரசாங்கம் அதற்குத் தடை போட்டு உடைக்க உத்தரவிட்டது என்று கேட்கிறேன். ஆகவே தான் சொல்கிறேன் நமது முதல்வர் அவர்களுடைய இந்த அர சாங்கம் அந்தப் பாதையிலே செல்லக்கூடாது.ஜனநாயக சக்தி யின் பாதையிலே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்றாவது ஒரு நாள் ந்த இடதுசாரி ஜனநாயகப் பாதையில் தான் அவர்கள் திரும்ப வேண்டியிருக்கும். ஆனால் அதற்குள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்து, தப்பான பிரச்சாரங்களுக்கு இடம் கொடுப்பது முறையல்ல என்று தான், நான் நமது முதல்வர் அவர்களின் சிந்தனைக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். (மணி யடிக்கப் பெற்றது)



இன்னும் கொஞ்சம் தான், தயவுசெய்து அனுமதிக்க வேண் டும். தலைவர் அவர்களே, தஞ்சையில் இந்தப் போராட்டம் நடந்தபோது, எத்தனைபேர்கள் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டார்கள். துப்பாக்கி பிரயோகம் நடந்தது. அடி தடி கலவரம் நடந்தது. இதற்கு எல்லாம், நீதி விசாரணை வேண்டும் என்று தானே அவர்கள் கேட்கிறார்கள். ஒரு நீதி பதியை அமர்த்தி விசாரணை செய்தால் என்ன தப்பு? அதற்கு பதிலாக டிபார்ட்மெண்டல் என்குயரி, என்ற கண்துடைப்பு எதற்கு? காலம் காலமாக நடந்து வருவதுதானே? ஆகவே, தஞ்சையில் நடைபெற்ற கொலை பாதகத்திற்கு, துப்பாக்கிச் சூட்டிற்கு நீதிவிசாரணை நடத்தியதாக வேண்டும். உண்மை யிலேயே அதிகார துஷ்பிரயோகத்தினால், பலாத்காரமாக போலீசார் துப்பாக்கிகளையும், தடியடிகளையும் உபயோகித்தார்களா இல்லையா என்பது நாட்டு மக்களுக்கு, நீதி விசாரணை மூலம் தெரிவித்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி தொழிலாளர்களை பழி வாங்கும் நடவடிக்கை களிலும் அரசு ஈடுபட்டிருக்கிறது அந்த முயற்சிகளும் கைவிடப் பட வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கும் படியான போக்கு வரத்துக் கழகங்களில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் சுமார் 700 பேர்களுக்கு சார்ஜ் மெமோ கொடுத்திருக்கிறார்கள். இன்னொரு போக்குவரத்து கழகத்தில் 8 நாள் சம்பளம் பிடித்தம் செய்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் தண்டனைகள். இன்னும் சில தண்டனைகளும் வழங் கப்பட்டிருக்கின்றன. அனேகமாக தனியார் துறைகளிலே கூட இதற்கு தண்டனை எதுவும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு தெரியும் அவைகள் எல்லாம் சரியல்ல என்று. அப்படிப்பட்ட தண்டனைகள் வழங்குவது பழிவாங்கும் நடவடிக்கைகளாக அரசு நிறுவனங்களில் நடைபெறுகிறது. அவை அத்தனையும் வாபஸ் வாங்க வேண்டும். கைது செய்யப்பட்ட தொழிலாளர்களில் சிலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் பாக்கி உள்ளவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் மீது போடப்பட்ட கேஸ்கள் அத்தனையும் முழுவதையும் வாபஸ் வாங்க வேண்டும்.

(முற்பகல் 11—00)

எந்தவிதமான தண்டனையும் இருக்கக்கூடாது. ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வதற்குக்கூட, அந்த அடிப்படை உரிமை யைக் கூட . . . . . as a Citizen of India, the fundamental right enshrined in the constitution
நீங்கள் தரத் தயாராக இல்லை என்றுதான் அர்த்தம். அந்த நிலையில் இந்த அரசு இருக்கக்கூடாது. தொழிலாளர்கள் மேல் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எல்லாம் வாபஸ் பெறப்பட வேண்டும். பழிவாங்கல் இருக்கக்கூடாது; அத்தனை பேர்களை யும் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கு. ரமணி] [1982 பிப்ரவரி 4

கடைசியாக ஒன்றை மட்டும் றிவிட்டு முடித்துக் கொள்கிறேன். அந்த வேலை நிறுத்தம் பிசுபிசுத்துப்போய் விட்டது. என்று சொன்னார்கள். அதற்கு எல்லோருக்கும் நன்றி. யார் எல்லாம் அந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு கருங்காலி வேலை செய்தார்களோ, யார் யார் எல்லாம் ஊர்களைச் சுற்றி கடைகளை மூட வேண்டாம் என்று சொன்னார்களோ, அவர்களுக்கெல்லாம் நன்றி. என்ன பாரம்பரியம்? இது? இப்படிப் பட்ட ஒரு பாரம்பரியத்தை நாட்டில் வைத்திருக்கலாமா? வேலை நிறுத்தத்தை உடைப்பவர்களுக்கு ஊக்கபோனஸ் இன்றிருப்பது, நாம் கேட்பது, உழைப்பாளி மக்களுக்காக உள்ள நீதி முறை. நிலச்சுவாந்தாரர்களுக்கான நீதி முறை அல்ல. ஏகபோக முதலாளிகளுக்கான நீதிமுறை அல்ல. தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் பரிபூர்ண வேலை நிறுத்தம் செய்தனர். என்ஜினியரிங் தொழிலாளர்கள் பரிபூரண வேலை நிறுத்தம் செய்தனர். வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் தொழிலாளர்களும் பீடித் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். 40,000 பேர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். திருப்பூரிலுள்ள 15,000 பனியன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். முனிசிபல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பல சங்கங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவற்றில் உள்ளவர்கள் 20,000-க்குமேல் பல நிர்பந்தங்களுக்கும் இடையே வேறைநிறுத்தம் செய்தது ஆச்சர்யகரமான விஷயமாகும். பி. அன்ட். சி. மில்ஸ் உட்பட அத்தனை மில்களில் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். தனியார் துறை போக்குவரத்தில் உள்ளவர்களும் தொழிலாளர் வர்க்கத்திற்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். ஆட்டோ ரிக்ஷாக்காரரர்கள் ஓடவில்லை. லாரிகள் ஓடுவதை நிறுத்தினார்கள். டாக்சிகளை நிறுத்தினார்கள் (மணியடிக்கப்பட்டது) வேலை நிறுத்தம் பூர்ண வெற்றி அடைந்தது, பிசுபிசுக்கவில்லை. ஆக, தொழிலாளர்கள் மேல் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் பிப்ரவரி மாதம் முதல் தேதி அன்று சட்டப் பேரவை, மேலவை கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றியதற்கு நன்றி செலுத்தக் கூடிய வகையில் மாண்புமிகு உறுப் திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து ஆளும் கட்சி சார்பில் நான் என் உணர்வுகளை இந்த மன்றத்தில் பகிர்ந்து கொள்வதில் பெருமைப்



1982 பிப்ரவரி 4] [டாக்டர் கே. சமரசம்]

படுகிறேன். பேசிய பிரதான எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய சிலர் சில கேள்விகளை எழுப்பி விட்டு சொன்ன கருத்துக்களுக்கு ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்கள் பதில் சொல்ல வேண்டியது அவசியமாகும்.

இந்திய துணைக் கண்டத்தில் தமிழ்நாட்டில்தான் பிப்ரவரி முதல் தேதி ஆளுநர் அவர்களால் அளிக்கப்பட்ட உரையில் உள்ள பல்வேறு அம்சங்கள்தான் மிகவும் சிறப்பானவை என்பதை எல்லா மாநிலங்களும் மத்திய அரசில் இருக்கக்கூடிய பலரும் கூட ஏற்றுக் கொள்ளத் தக்கவகையில் தேவையான நேரத்தில் தேவையான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்ற பெருமையை தமிழ்நாட்டிற்கு அளித்திருக்கிறது. இங்கே ஒருவர் சொன்னார்' இது என்ன ஆர்டினன்ஸ் சர்க்காரா அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரா என்று கேட்டார். அதற்கு என் பதில். ஆர்டினன்ஸ் இல்லாத அரசாங்கம் இல்லை. அரசாங்கத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் பொது மக்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆக, பொதுமக்கள், ஆர்டினன்ஸ் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஒரு முக்கோண அமைப்பாகும்.

நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதுவரை நடைபெற்ற சட்டப் பேரவை நாட்களையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற பேரவை நாட்களையும் பார்க்கிறபோது மிக அதிக அளவில் கேள்விகள் கேட்பதற்கும் அவற்றிற்கு பதில் சொல்வதற்கும், விவாதங்களை எழுப்புவதற்கும் எதிர்கட்சிகளுக்கு ஏராளமான வாய்ப்புகளை கொடுத்திருக்கிறோம். 1967 ஆம் ஆண்டு முதல் 1971 வரை ஒன்பது முறை கூடி 199 நாட்கள்தான் அவையை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள்ளாக ஆறு முறை கூடி 179 நாட்களுக்கு மேலாக இங்கே பிரச்சினைகளை நாம் அலசி இருக்கிறோம். எதிர்கட்சி வாதங்களையெல்லாம் கேட்டு பரிசீலித்து நல்லதொரு ஆரோக்கியமான ஜனநாயகத்தை நடத்தி வருவதோடு நல்லதொரு ஜனநாயக அரசுக்கு இலக்கணமாக நாம் திகழ்ந்து வருகிறோம்.

அது மட்டுமல்ல. 1952–57 வரை 314 நாட்கள் கூட்டம் நடந்திருக்கிறது; 1957–62 வரை 305 நாட்கள் கூட்டம் நடந்திருக்கிறது. 1962–67 வரை 252 நாட்கள்தான் கூட்டம் நடந்திருக்கிறது. ஆனால், முழுமையடையாத மிகக் குறுகிய இரண்டு ஆண்டு காலத்திலே 179 நாட்கள் நடத்தி, அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் நாங்கள் கேட்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்றேன்.

[டாக்டர், கே. சமரசம்] [1982 பிப்ரவரி 4

அடுத்து, இன்னொன்றையும் சொன்னார்கள். மின்சார இலாகாவை முதலாளிகள் கைப்பற்றப் போகிறார்கள் என்று சொன்னார்கள். எனது பணிவான கேள்வி. மின் உற்பத்திக் செலவிற்கு ஏற்ப வசூல் இல்லை. பெரிய தொழிற்சலைகளுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தைக் கொடுக்கிறோம் அதுவும் முழுமையாக வசூலிக்க முடியவில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, பணக்காரர்களுக்கு ஜால்ரா அடிக்கிறார்கள் இதே இடத்தில் பேசியவர்கள், வெளி மாநிலத்தில் அதிக விலைக்கு வாங்கி, குறைந்த விலைக்குக் கொடுப்பதால் ஏற்படக்கூடிய நஷ்டம் தமிழகத்திலே எவ்வளவோ மின் நெருக்கடி ஏற்பட்ட போதும், அவ்வளவு நெருக்கடிகளையும் தாங்கிக் கொண்டு மொத்தமாக பாண்டிச்சேரிக்கு அந்த நெருக்கடியைத் தராமல் மின் சலுகை வழங்கியது அ.தி.மு.க. அரசு என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல. மின் துறையில் லயின் லாஸ் 23 சதவிகிதம் இருக்கிறது. அதைக் குறைப்பதற்கு வழி என்ன என்று பார்க்கிறோம். ஆனால், மின்துறை பூர்த்தி விழா கொண்டாடியவர்கள், கம்பங்களை நட்டு, கம்பிகளை நீட்டிக் கொடுத்தும் அது மக்களுக்குப் போய்ச் சேராமல் தடுத்தார்கள் என்பதையும், அதனால் ஏற்பட்ட குறைகள் ஆயிரம் ஆயிரம் என்பதைச் சொல்ல முடியும். அதே நேரத்தில், மின் உற்பத்தி நிலையத்தைக் கூட ஏலம் போட்டவர்கள், இங்கே பலப் பிரச்னைகளை கிளப்பினார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய கம்பெனிக்கு தேவையான மின்சக்தியைக் கொடுக்க வேண்டுமா ? வேண்டாமா அதற்கு முடியவில்லை என்று சொல்லும்போது நாங்களே அதைத் தயாரித்துக் கொள்ளுகிறோம் என்று சொன்னால், அதை அனுமதிக்க வேண்டுமா ? வேண்டாமா ?

உற்பத்திக்கும், தொழிலாளர்களுக்கும், அரசு வருவாய்க்கும், மின்கட்டண வசூலுக்கும், வழியற்ற நிலைமை இருக்கலாமா? இதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டாமா ? அது மட்டுமல்ல. அரசு, அந்நிய மாநிலத்திலிருந்து வாங்கும் விலையைவிட குறைவாக, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்து கொடுக்க யாரேனும் முன்வந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாமா ? வேண்டாமா ? கடல் நீரை உப்பு நீராக மாற்றும்போது ஏற்படும் வெப்பத்தாலேயே மின் உற்பத்தியைச் செய்ய முடியும் என்ற நிலையில் அந்த முயற்சியைச் செய்கிறோம் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளலாமா ? வேண்டாமா ? இந்தத் தமிழகத்தில் தொழில்வளம் பெற, தொழிலாளர் நிம்மதி பெற, உற்பத்தி பாதிக்காமல் இருக்க, தமிழகத்தின் சுய தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்ள, மின் வாரியம் நட்டத்திலே இருந்து மீள ஏழைகளுக்கு மேலும் உதவிட இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால், அதை, எதிர்ப்பது ஜனநாயகத்தின் கொள்கையா ? என்பதை நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்,



1982 பிப்ரவரி 4] [டாக்டர் கே சமரசம்]

அதுமட்டுமல்ல, இன்னொரு கருத்தையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். 2½ கோடி பேர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னீர்களே, அப்படி கொடுத்தீர்களா என்று கேட்டார்கள் ? உண்மையிலேயே, இந்தியத் துணைக் கண்டத்திலே, தன்னிறைவுத் திட்டத்தைப் போட்டு, அதன் மூலமாக தமிழ்நாட்டிலே வறட்சி நிலைமை ஏற்பட்டபோது நான் பிறந்து—காணாத வறட்சி தமிழகத்தில் அண்ணா தி. மு. க. அரசு ஏற்பட்ட காலத்தில் அந்த வறட்சியை பொது மக்கள் அறியாதவாறு, காப்பாற்றிய அரசு அண்ணா தி. மு. க. அரசு. அந்த அடிப்படையில் வறட்சி மீட்புப் பணித் திட்டம், தன்னிறைவுத்திட்டம், துயர் தணிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களைப் போட்டு, நம் வாழ்வில் வறட்சியைப் போக்க நிரந்தரமான பல வேலைகளைசெய்து, அதன்மூலம் ஏரி, குளம், கிணறு, ஆழ் கிணறு' விரிவானகால்வாய், நடைபாதை, கட்டிடங்கள் இப்படி பல காரியங்களைச் செய்து எதிர்காலத்தில் வறட்சி வராமல் தடுக்கின்ற வகையிலும் பல நல்ல காரியங்களைச் செய்து, அதனால் பலன் பெற்றவர்கள் ஏராளமானவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் 'சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது மட்டுமல்ல. ஒட்டு மொத்தமாக தமிழ் நாட்டில் இந்தத் திட்டத்தினால் அதிகமாக, நல்ல முறையில் வாழ்வு பெற்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட காரியங்கள் கான்ட்ராக்டிற்கு விட்டபோது 63 சதவிகிதம் மொத்தமாக திராவிடமுன்னேற்றக் கழகத்தினரும், அதன் ஆதரவாளர்களும் பலன் பெற்றிருக்கிறார்கள். மற்ற கட்சிகளும், கட்சி அல்லாதவர்களும் பெற்ற பலன் 37 சத விகிதம் அதன் கணக்கு கிடைத்திருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில், முழுப் பயனையும் கண்டவர்கள் குறை சொல்வது கண்டு, நான் உண்மையிலேயே வேதனைப்படுகிறேன்.

(முற்பகல் 11.10)

*திரு. துரை முருகன் : வறட்சிக் காலப் பணிகளுக்கான காண்டிராக்டுகள் 63 சத விகிதம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் மீதி 37 சத விகிதம் தான் மற்றக் கட்சியைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்] இது பத்திரிகையில் பெரிதாக வரும். எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு 63 சத விகிதம் அளவுக்கு வறட்சிப் பணி வேலைகளுக்கான காண்டிராக்ட் கொடுக்கப்பட்டது என்பதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறாரா ? பட்டியல் கொடுக்கத் தயாரா ?

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் விரும்பினால் எந்த நேரத்திலும் வேண்டுமானாலும் அந்த விவரங்களைக் கொண்டு வந்து தரத் தயாராக இருக்கிறேன்.

[1982 பிப்ரவரி 4

திரு. ஆர். மணிமாறன் ; துணைத் தலைவர் அவர்களே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த போது வறட்சி நிலைமை ஏற்பட்ட சமயத்தில், மத்திய அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒதுக்கப்பட்ட தொகை சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்பதை எடுத்துச் சொல்லி இன்னொன்றும் சொன்னார்கள்—முழுமையாக அவர்களுடைய கட்சிக்காரர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது என்ற குற்றச் சாட்டை மாண்புமிகு சி.எஸ். அவர்கள் எடுத்துச் சொன்னதை வாசர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே' இப்போது நடந்த வறட்சி நிவாரணப் டணிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்தவர்களுக்கு 63 சதவீதம்பேருக்கு காண்டிராக்ட் வேலைகள் கொடுக்கப்பட்டது, மீதி காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சி போன்ற கட்சிகளைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது, மெஜாரிடி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்ற தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் அளிக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வறட்சிப் பணிகளைச் சரியாகச் செய்யவில்லை என்று மத்தியில் இருந்த ஒரு அமைச்சர் சொன்னதாகச் சொன்னார்கள். மத்திய அமைச்சர் சொல்லி விட்டதால் அது வேத வாக்கா ? அப்போதே அதை நாங்கள் மறுத்திருக்கிறோம். அவர் அன்றைக்குச் சொன்னது தவறான வாதம் என்று சொல்லியிருக்கிறோம்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லாததால் அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : அதற்கான ஆதாரத்தை இந்த அவையில் கொண்டு வந்து தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. துரை முருகன் : நண்பர் ரகுமான்கான் அவர்கள் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது முதலமைச்சர் அவர்கள் ''ரகுமான்கான் அவர்கள் கையில் ஆதாரம் இல்லாமல் பேச மாட்டார்கள்'' என்று பேசினார்கள். ஆகவே, ஆதாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆதாரம் வரும் வரை அந்தப் பகுதி அவைக் குறிப்பில் ஏறாது.



1982 பிப்ரவரி 4]

டாக்டர் கே. சமரசம் : நான் சொன்னதற்கு பொறுப் பேற்றுக் கொள்ள நான் தயார். நான் தனிப்பட்ட ஒருவர் மேல் குற்றம் சொல்லவில்லை. நான் சொல்லுவது தவறு என்றால் அதை மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இந்த முறையில் நீங்கள் எவ்வளவோ சொல்லியிருக்கிறீர்கள்

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் சமரசம் அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்லு கிறபோது நம்முடைய மாண்புமிகு மணிமாறன் அவர்கள் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது வறட்சி நிவாரணப் பணிகளில் தவறுகள் நடைபெற்றன என்று மத்திய அமைச்சர் கோடிட்டுக் காட்டவில்லையா என்று கேட்டார்கள். உங்கள் மூலம் நான் அருமை நண்பர் மணிமாறன் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்—

* * *

அதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இது தேவை யில்லாத ஒன்று. இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் கே. சமரசம் : பஞ்சாயத்துத் தேர்தலை ஒத்தி வைத்தது பற்றிக் கருத்துக்களைச் சொன்னார்கள். ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை அறிவித்து விட்ட தாகச் சொன்னார்கள்........

திரு. துரை முருகன் : குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல் லக் கூடாது என்றால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே அதை நீக்கிவிட்டேன்.

திரு. துரை முருகன் : நீக்குவது தங்கள் உரிமை, நான் அதை மறுக்கவில்லை. ஒரு குற்றச்சாட்டுச் சொன்னபோது அதற்கு கவுண்டர் குற்றச்சாட்டு சொன்னார். இதை எடுத்து விட்டீர்கள். எடுத்தால் இரண்டையும் எடுக்கவேண்டும்......

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் கமிஷன் பற்றிய விவாதத்தை விவகாரத்தை இங்கே எடுத்துப் பேசினார்கள். நான் சொல்வது ஆளுங்கட்சியின் சார்பில் இந்தக் கட்சியினுடைய சார்பில், மத்திய அரசால் போடப்பட்ட கமிஷனை கரம் நீட்டி

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பட்டது.

நாங்கள் வரவேற்றிருக்கிறோமே தவிர கமிஷன் போட்டவுடனே ஓடி ஒளிந்துகொள்ளவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : நீங்கள் வரவேற்கிறீர்கள், ஆனால், எங்கள் மீது புகார் கொடுத்தீர்கள் சர்க்காரியாவுக்கு. சாட்சிக்கு வா என்று கூப்பிட்டார். கால் பிடரிபட ஓடிய கோழைகள் நீங்களே தவிர நாங்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர் மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, போட்ட சர்க்காரியா கமிஷனை பகிரங்கமாக வாபஸ் வாங்க வேண்டுமென்று ஜார்ஜ் பெர்னான்டஸிற்கு முன்னாலே பணிவோடு கேட்டவர்கள் நாங்கள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது முறையல்ல. தயவு செய்து எல்லோரும் அமருங்கள். நான் அனுமதிக்காமல் பேசுவது முறையல்ல.

திரு. துரை முருகன் : தங்களுடைய அனுமதியோடு தான் பேசுகிறேன். ஒரே ஒரு வார்த்தை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேவையில்லாத பிரச்சினை.

திரு. துரை முருகன் : தேவையில்லாத பிரச்சினையை கிளப்பியது அவர். நாங்கள் ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; முடிந்த பிரச்சினை, அதோடு விட்டுவிடுங்கள்.

திரு. துரை முருகன் : திரு. மணிமாறன் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள், திரு. ரகுமான்கான் அதற்கு பதில் சொன்னார்கள். திரு. ரகுமான்கான் சொன்னதை நீக்கிவிட்டு திரு. மணிமாறன் சொன்னதை வைத்துக்கொள்வது என்றால் என்ன நியாயம் ·

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மணிமாறன் சொன்னது குற்றச்சாட்டு அல்ல. எமோஷனலாகச் சொன்னார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நானும் குற்றச்சாட்டு சொல்லவில்லை





மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் சொன்னதற்கு மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் பதில் அளித்தார். அதற்குப் பிறகு மணிமாறன் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு திரு. இரகுமான்கான் அவர்களும் பதில் அளித்து இருக்கிறார்கள். ஆகவே, அதோடு வைத்துக்கொள்வீர்களானால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு பக்கமும் வாய்ப்பு கேட்டார்கள். கொடுத்தாகிவிட்டது. மீண்டும் வாய்ப்புக் கொடுத்தால் அவையின் நேரம்தான் வீணாகும். டாக்டர் கே. சமரசம் பேச்சைத் தொடரலாம் (குறுக்கீடு).

டாக்டர் கே. சமரசம் : எப்போதும் எந்த இடத்திலும் குற்றச்சாட்டு சொல்வது எனது வேடிக்கை குணமும் அல்ல, வாடிக்கையும் அல்ல என்பதை எதிர்க்கட்சியினர் அறிவார்கள். இந்தப் பிரச்சினைக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக. இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஒரு பதிலை கூறும்பொழுது சர்க்காரியா கமிஷனில் விவாதிப்பதற்கோ அல்லது சாட்சி சொல்லவதற்கோ அழைக்கப்பட்டபோது பயந்து ஓடிவிட்ட கோழை என்று சொன்னார்கள். அது உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் முதலிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்காரியா அவர்களிடம் கேட்ட பொழுது, "எனக்குத் தேவைப்பட்டால் யார் வேண்டுமோ அவர்களை நான் அழைப்பேனே தவிர, நீங்கள் வற்புறுத்துவதற்காக நான் எதுவும் உத்திரவாதம் தர முடியாது," என்ற பதில்தான் சர்க்காரியா அவர்களிடமிருந்து கிடைத்ததே தவிர, சர்க்காரியா அவர்கள் சாட்சி சொல்ல அழைத்து நாங்கள் வர மாட்டோம் என்று சொன்ன வரலாறு இல்லை என்பதைத் தயவுசெய்து நினைவில் வைத்துக் கொண்டால் கோழையா, வீரனா என்ற பிரச்சினையெல்லாம் எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–20)

திரு. துரை முருகன் : தலைவரவர்களே. . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரச்சினை முடிந்து விட்டது.

திரு. துரை முருகன் : முதலமைச்சரவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். முதலில் இந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. ஆனால், அதற்குப் பிறகு முதலமைச்சர் இந்தப் பிரச்சினையை மீண்டும் துவக்கி இருப்பதால் நான் பதில் சொல்லாமல் இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; உறுப்பினரவர்கள் சொன்னதற்கு முதலமைச்சரவர்கள் கிளாரிபை செய்திருக்கிறார்கள். அத்துடன் விவகாரம் முடிந்து விட்டது.

திரு. துரை முருகன் : முதலமைச்சர் சொல்லியதற்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பளிக்காத காரணத்தால் உங்கள் தீர்ப்பைக் கண்டித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன். (குறுக்கீடு).

(திரு. துரைமுருகன் வெளிநடப்புச் செய்தார்.)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இப்பொழுதுதான் உள்ளே வந்தீர்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் கேட்டுக்கொண்டிருந்தேன். முதலமைச்சரவர்களுக்கு அனுமதி தந்துவிட்டு, எங்கள் கட்சி உறுப்பினர் சொல்வதைத் தடுப்பதன் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

*டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவரவர்களே, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதாகச் சொல்லி, பின்னர் அதை நடத்துவதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பயப்படுகிறது என்று சொல்கிறார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த ஆறு மாதத்திலேயே திண்டுக்கல் இடைத்தேர்தலில் வெற்றி பெற்று விட்டது ; திராவிட முன்னேற்றக் கழகம் படுதோல்வி அடைந்தது.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஆளுங்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக மாறியது : அப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆளுங் கட்சியானது.

பின்னர், நடைபெற்ற மதுரை மாநகராட்சித் தேர்தலிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிவாகை சூடியது திராவிட முன்னேற்றக் கழகம் திவால் ஆனது.



மீண்டும் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வி அடைந்தது ; 48ஆக இருந்த அவர்களின் எண்ணிக்கை 38 ஆக ஆகியது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய வெற்றியைப் படைத்தது.

அதுமட்டுமல்லாமல் 1981 ஆம் ஆண்டில் திருப்பத்தூரில் நடந்த தேர்தலில் ஒரு திருகுவலியைக் கண்டார்கள்.

அவர்கள் சொல்கிறார்கள், உள்ளாட்சித் தேர்தலைக் கண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பயந்து போய் இப்படிச் செய்து விட்டார்கள் என்று. இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் சொன்னார், நாங்கள் வேட்பாளர் பட்டியலைப் போட்டுவிட்டோம் என்று. திருடியவனே திருடன் திருடன் என்று கூவிக்கொண்டு ஓடி திருட்டுத்தனத்திலிருந்து தப்பித்துக் கொள்வதைப்போன்ற இராஜ தந்திரம்தானே தவிர இது வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர்களைக் கடைசிக் கட்டத்தில் அறிவிக்கிறது என்ற கருத்து இருக்கிறது. நாங்கள் எப்பொழுதுமே சூதாட்டம் ஆடக் கூடியவர்கள் அல்ல. எங்கள் புரட்சித் தலைவரவர்கள் சதுரங்க ஆட்டத்தில் எந்தக் காயை எப்பொழுது நகர்த்த வேண்டுமென்று பார்த்துச் செய்யக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள். அவர்கள் இதுவரையில் வெற்றியைத் தவிர, வேறு எதையும் படைத்தவர்கள் அல்ல ; எனவே, அவர்கள் பயந்து விட்டார்கள் என்று சொல்வது அப்படிச் சொல்லக்கூடியவர்களின் பலவீனமே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர்வர்கள் எந்த விஷயத்திலும் தான் கல்லாத கலை இந்த நாட்டில் இல்லாத கலை என்று நினைக்கக்கூடியவர்கள். ஆனால், அது இந்த நாட்டில் செல்லாத கலையானது என்று சொன்னவர் புரட்சித் தலைவரவர்களின் நடவடிக்கைகளால் இங்கேதான் அவர்கள் அவுட்.

எதிர்க் கட்சிக்காரர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் உள்ளாட்சித் தேர்தலில் ஒதுக்கீடு தேவையா, இல்லையா, தேவை என்று சொன்னால் எந்த வகையிலே செய்ய வேண்டும். இருக்கிற எல்லா எதிர்க் கட்சிகளுக்கும், தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சுதந்திரா, சோஷலிஸ்ட், சுயேச்சை; ஜனதா, வேறு ஏதாவது கட்சி இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும், நீங்கள் அனைவரும் சேர்ந்து, பெண்களுக்கு இந்தத் தொகுதி, ஆண்களுக்கு இந்தத் தொகுதி, அரிசனங்களுக்கு இந்தத் தொகுதி, என்று ஒதுக்கிட்டு பட்டியல் போட்டுக் கொடுத்தால், அ.இ.அ.தி.மு.க. வாய் திறக்

[டாக்டர் கே. சமரசம்] [1982 பிப்ரவரி 4

காமலிருந்து அப்படியே ஏற்றுக் கொண்டு, அரசாங்கத்திடம் முறையிட்டு தேர்தலை உடனே நடத்தத் தயார். இந்தச் சவாலை ஏற்பதற்கு நீங்கள் தயாரா ?

அ.இ.அ.தி.மு.க. தேர்தலைக் கண்டு பயப்படவில்லை. எதிர்க் கட்சிகள் நல்ல எதிர்க்கட்சிகளாக இருந்து, திடமான எதிர்க்கட்சிகளாக இருந்து, உள்ளாட்சித் தேர்தல் நடக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்களாக இருந்து, ஒன்று சேர்ந்து இதைச் செய்யட்டுமே. நாங்கள் ஏதோ ஒன்றியங்களைப் பிரித்துக் கொடுப்பதிலே வெற்றிபெற கூடிய ஒன்றியங்களைப் பிரித்து கொண்டோம். தோல்வி பெறுவோம் என்ற தொகுதியை அரிசனங்களுக்கும் பெண்களுக்கும் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். அவர்களைக் கேட்கிறேன். நீங்கள் எல்லாம் ஒற்றுமையாகயிருந்து நீங்களே தயாரித்துக் கொடுங்கள் அ இ அ தி மு.க. வரவில்லை எந்த எந்த ஒன்றியம் அரிசனங்களுக்கு, எந்த எந்த ஒன்றியம் பெண்களுக்கு, என்று நீங்களே தயாரித்துக் கொடுங்கள். அதை அரசாங்கத்திடம் முறையிட்டு வழக்குமன்றத்திற்குக் கூட உங்களோடு சேர்ந்து வருவோம். தேர்தலை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே உங்களிடத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் (குறுக்கீடுகள்).

நான் பேசி முடித்துவிடுகிறேன், பிறகு பதில் சொல்லட்டும் அடுத்தபடியாக இங்கே ஒன்றைச் சொன்னார்கள். இங்கே பாரதிக்கு விழாவா அல்லது இவர்களுக்கு விழாவா என்று கேட்டார்கள். ''தமிழரசு'' லே போட்ட ஒரு காலண்டரைக் காட்டி இங்கே பேசினார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அ.இ.அ.தி.மு.க. அரசு ஏற்பட்ட பிறகுதான் உலகத் தமிழ் மாநாடு என்றும், தமிழ் பல்கலைக் கழகம் என்றும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் என்றும் ஆரம்பித்து இயல் இசை நாடகத்திற்கெல்லாம் பெருமை சேர்த்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தேசிய தலைவர்களுக்கெல்லாம் நல்ல வாய்ப்பும் வசதியும் கொடுத்தும் யார் யார் எந்த எந்த நேரத்திலே தியாகம் செய்தார்களோ அவர்களுக்கெல்லாம் உதவி செய்யக்கூடிய நிலையை உருவாக்கியும் கட்சி பேதமற்ற நிலையில் ஜாதி பேத மற்ற நிலையில் எல்லோரும் நல்ல முறையிலே வாழக்கூடிய முறையிலே உழைப்பவர்களையெல்லாம் உயர்ந்தவர்களையெல் லாம் இந்த நாட்டுக்குச் சேவை செய்தவர்களையெல்லோம் இந்த அ.இ.அ.தி.மு.க. அரசு பாராட்டுகிறது என்று சொல்லிக்கொள்வ தோடு அதற்கேற்ப நடந்து கொள்கிற அரசு இது ஒன்று தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 4] டாக்டர் கே. சமரசம்

முத்தமிழ்ச் சங்கம் நடந்ததை நாம் பார்த்ததில்லை. ஆனால். இன்று நேரில் பார்க்கக்கூடிய அளவு துவக்கியிருக்கக்கூடியவர் புரட்சித் தலைவர்தானே தவிர வேறு எந்தத் தமிழனும் இல்லையென்பதை நான் சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

அது மட்டுமல்ல அரசுப் பணத்திலே பிறந்த நாள் விழா அங்கங்கே கொண்டாடினார்கள் உண்டியல் வைத்தார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். உலகத் தமிழ் மாநாடு நடத்தினார்கள். உலகத் தமிழ் மாநாடு நடத்தி ஒரு பெரிய புத்தகத்தை வெளியிட்டார். ரூபாய் 50 நட்டத்திலே அந்தப் புத்தகம் வெளியிட்டார்கள். அதில் எங்காவது புரட்சித் தலைவர் போட்டோ இருக்கிறதா ? ஒரு நாட்டினுடைய முதலமைச்சர் உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். இவ்வளவு பெரிய புத்தகத்தைப் போட்டிருக்கிறார். எங்கேயாவது தன்னுடைய படத்தைப் போட்டிருக்கிறாரா ? அது மட்டுமல்ல, காதி கிராப்ட் விளம்பரங்களில் எல்லாம் பாரதிதான். போஸ்ட்டர்கள் எல்லாம் பாரதிதான். இந்த ஒரு வெளியீட்டிலே தமிழரசிலே—வருடத்திற்கு ஒரு முறை அந்தந்த முதலமைச்சர் படத்தைப் போடுவது என்பது மாமூலான வழக்கம். ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் பிறந்த நாட்களுக்கெல்லாம் போடுவார். ஆனால் அப்படிப் பட்டவர்கள் இது என்ன பாரதிக்கு விழாவா? இவர்களுக்கு விழாவா என்று கேட்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலையில் யாரோ கட்டிய கட்டிடத்தைப் புதுப்பித்து படம் ஒட்டி திறப்பு விழா நடத்தி நிரந்தரப் பொய் சாட்சிகளாக—கி.மு காலத்திற்கும் முன்னதுபோல கருங்கல் வெட்டுகளில் சித்தரித்துக் கொண்டவர்களுக்கு இதைப் பற்றி பேசுவதற்கு என்ன தகுதி என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக போலீஸ். இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே இருக்கிற போலீஸ்தான் சாலச் சிறந்தது என்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு கொள்ளைக் கோஷ்டி வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட கோஷ்ட்டியை அவர்களை பீகாரிலே கண்டுபிடித்தது தமிழ்நாடு அரசு போலீஸ்தான் மறக்க முடியுமா ? சேலத்திலே சைதன்யன் என்ற ஒரு சின்ன பையன். அவனை கோயம்புத்தூருக்குக் கொண்டுபோய் வைத்துக் கொண்டு ரூபாய் 4 இலட்சம் கொடுத்தால்தான் விடுவேன் என்று சொன்னார்கள். போலீஸ் மிகத் திறமையாக ரூபாய் 4 இலட்சத்தையும் கைப்பற்றியது. அவனைக் கடத்தியவர்களை எல்லாம் அரெஸ்ட் செய்தார்கள். இவையெல்லாம் பெருமையில்லையா ?

அது மட்டுமல்ல சைதாப்பேட்டை சேத்துப்பட்டு பட்டினப் பாக்கம் போன்ற இடங்களில் நடைபெற்ற கொலைகளை எல்லாம் கண்டு பிடித்தது தமிழ் நாடு அரசு போலீஸ்தான். அந்த

டாக்டர் கே. சமரசம் [1982 பிப்ரவரி 4

போலீஸ் இவ்வளவு செய்திருப்பதற்குக் காரணம் அவர்களுக்குத் தேவையான அவர்களது நியாயமான உணர்வுகளைப் புரிந்து கொண்டு அரசு அளித்த சலுகைகள்தான் இந்தியாவில் தமிழ் நாட்டு போலீஸ் ஓகோ என்று சாலச் சிறந்ததாக இருக்கிறது.

அது மட்டுமல்ல! இந்திரா அம்மையார் கூடச் சொன்னார்கள் தமிழ் நாடு நல்ல நிலையிலே இருக்கிறது என்று. "அதிகமாகப் பாராட்டினால் ஆர்வம் குறையும்" என்றுதான் சொன்னார்கள்.

[முற்பகல் 11–30]

அவ்வளவுதானே தவிர மற்றபடி நல்லது தொடர்ந்து செய்யட்டும் என்று சொல்லிப் போனார்கள். கொடுமையான மாமியார் மத்திய அரசு என்ற நிலைமை மாறி மாமியார் மெச்சிய மருமகள் என்ற அளவுக்கு அண்ணா தி.மு.க. அரசு தமிழ்நாடு அரசு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். யார் என்ன சொன்னாலும் என்ன பேசினாலும்

We are judged by our deeds, not by our words.

நம்முடைய வார்த்தைகளைப் பார்த்து நமக்கு மதிப்பில்லை நாம் நடந்து கொள்கின்ற செய்கையும் நடவடிக்கையும்தான் நமக்கு மதிப்பளிக்கிறது. அந்த வகையில் பிரதான எதிர்க்கட்சி வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்துள்ள ஆளுநர் உரை தீர்மானம் மிக மிக வரவேற்கக் கூடியது என்று வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு மு அம்பிகாபதி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரை என்பது வழக்கமாக சட்டமன்றத்திலே ஆண்டுக்கு ஒரு முறை ஆளுநரால் படிக்கப்படுவது. இதிலே 32 அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதிலே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் வழிகள் கூட இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. விலைவாசி உயர்வு என்பதை ஒப்புக் கொண்டு அதற்கு முழுப் பொறுப்பும் மத்திய அரசாங்கம் தான் என்பதையும் சொல்லி அந்த கட்டுப்படுத்துவதற்கான வழிகளையும் இதிலே சொல்லி இருக்கிறார்



1982 பிப்ரவரி 4] திரு. மு. அம்பிகாபதி

கள். பாரதியினுடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது பற்றியும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாரதியினுடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதை விட பாரதியார் சொன்னதை நாம் நிறைவேற்றினோம் என்று சொன்னால் இந்த தேசத்திலுள்ள மக்கள் பயன் பெறுவார்கள். மத்தியிலே இருக்கிறவர்களும் கொண்டாடுகிறார்கள். நீங்களும் கொண்டாடுகிறீர்கள். பாரதியார் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றான். நாம் வந்தனை செய்ய வேண்டாம் நிந்தனை செய்யாமல் இருந்தால் போதும் மத்தியிலே ஆட்சியிலே இருப்பவர்கள் விவசாயிகளின் விளைப் பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை நிச்சயமாகக் கொடுக்க மாட்டோம். கேட்டால் அவர்களை * * என்கின்ற தெளிவான கொள்கையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். * * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே மத்திய அரசைப் பற்றி இப்படிப் பேசலாமா என்பதைப் பற்றி நீங்கள் முடிவு தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வுக்கு மத்திய அரசாங்கம் ஒரு காரணம் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு முன்னாலேயே இன்னொரு உறுப்பினர் பேசும்போது கூட இங்கே இருந்து யாரும் சொல்லவில்லையே என்று விட்டுவிட்டேன். இப்போது நீங்கள் மத்திய அரசைப் பற்றிப் பேசியது பாராளுமன்றத்திலே பேச வேண்டும். அதை அங்கே பேசிக் கொள்ளலாம். இங்கே பேச வேண்டியதில்லை. அங்கே பேச வேண்டிய பிரச்சினையை இங்கே பேசுவது ஏற்புடையதல்ல.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே எல்லாவிதமான அதிகாரங்களும் படைத்தது மத்திய அரசு. நம்முடைய வாழ்விலே நடக்கின்ற எல்லாச் சம்பவங்களுக்கும் நம்மை பாதிக்கின்ற *சட்ட திட்டங்கள் எல்லாம் மத்திய அரசு தான் போடுகிறது. அதை இந்த மாநில அரசு மூலமாக மத்திய அரசைக் கேட்கலாம், பேசலாம். பேசக்கூடாது என்பதோ விமர்சனம் செய்யக் கூடாது என்பதோ எந்த விதிகளிலும் கிடையாது. அதை பேசக் கூடாது என்றால் ஒன்றுமே பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மத்திய அரசின் கொள்கையை வேண்டுமானால் நீங்கள் பேசலாம்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம் தவிர அணு மின் நிலையம் அமைப்பதற்காகவும் மத்திய அரசை மாநில அரசு கேட்டு வருகின்றது. அதுமட்டுமல்ல. மாகடல் வெப்ப மாற்றத்திற்கான ஆய்வுகள் அதாவது ஓஷன் தெர்மல் எனர்ஜி கன்வர்ஷன் மற்றும் கோபார் கேஸ் ப்ளான்ட்ஸ் போன்ற இவைகளை எல்லாம் மத்திய அரசின் கீழ் உள்ள கமிஷன் பார் அடிஷனல் எனர்ஜி அதாவது கூடுதல் சக்தி ஆதாரக் குழு ஆய்ந்து இப்படிப்பட்ட புதிய முறைகளை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது பற்றி மத்திய அரசு ஆலோசித்து வருகின்றது. நம்முடைய ஆலோசனைகளையும் அவர்களுக்கு அனுப்பியுள்ளோம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணுமின் நிலைமையம் அமைக்கப்பட இருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். அவ்வாறு அமைக்கப்படும் போது அதனைத் தஞ்சை மாவட்டத்தில் அமைக்க ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அது பற்றி எல்லாம் அணுக்குழு என்ற நியுக்ளியர் எனர்ஜி கமிஷன் தான் ஆய்ந்து முடிவு செய்ய முடியும். அவர்கள் பல்வேறு சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு செய்கிறார்கள். தமிழகத்தில் கல்பாக்கத்தில் அணுமின் நிலையம் அமைந்து வருகின்றது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடங்குளம் அதற்கு ஏற்ற இடம் என்று சொல்கிறார்கள். இன்னும் பல்வேறு இடங்களையும் ஆய்ந்து வருகிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, மின்சார வாரியம் அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம் இவைகளோடு மட்டும் அல்லாமல் புதிதாக அணு மின் நிலையத்தைத் துவக்கப் போவதாகச் சொன்னார்கள். புனல் மின் திட்டமான ஒகேனக்கல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத் தமிழ் நாட்டின் தேவை ஓரளவுக்குத் பூர்த்தி செய்யப்படும் என்று சொல்லப்படுகின்றதே. ஆகவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நம்முடைய தமிழக அரசு அண்மையிலுள்ள கர்நாடக மாநில அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி அதற்கான முயற்சிகளைச் செய்யுமா ? அதற்கு மத்திய அரசு ஏதாவது முட்டுக்கட்டை போடக் கூடிய நிலைமை இருக்கின்றதா ? அப்படியானால் அதை முறியடித்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் இந்த அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரையில் அதை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். தேசிய நீர்மின் உற்பத்தி நிறுவனம் அதாவது நேஷனல் ஹைட்ரோ எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் மூலமாக அதை நிறுவ வேண்டும் என்று விரும்புகிறார்கள். கர்நாடக மாநில அரசு அந்தத் திட்டத்தைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டது. ஆனால் இப்போது ஏனோ அதை விட்டு விட்டு வேறு ஒரு திட்டம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இரண்டு மாநிலங்களும் சேர்ந்து ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றினால் இரண்டு மாநிலங்களுக்கும் உள்ள பற்றாக்குறை தீரும்.



**திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் மின் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியன்று கர்நாடக மாநிலத்தின் முதல் அமைச்சர் மேகதாதுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார்கள். ஆகவே அந்த வேலை தொடங்கப்படும் என்றும் அறிவித்து விட்டார்கள். அது ஆரம்பிக்கப்படுமேயானால் அங்கிருந்து 15, 20 மைல் தொலைவில் உள்ள ஒகேனக்கல் திட்டத்தை எந்தக் காலத்திலும் ஆரம்பிக்க முடியாமல் போகக் கூடிய அபாயம் இருப்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கின்றதா ? அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது இந்த அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த அபாயத்தை அரசு உணர்ந்திருக்கின்றது. எனவே பாரதப் பிரதமர் அவர்களுக்கு நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே கடிதத்தின் மூலம் அதற்கான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். கர்நாடக மாநில முதல்வருக்கும் அது பற்றிய எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் இன்று கவலை அளிக்கக்கூடிய வகையிலே மின் தட்டுப்பாடு தமிழகத்தில் இருக்கின்றது. ஆகவே தற்போது ஆய்வில் இருக்கக்கூடிய திட்டங்கள் தவிர குறுகியகால அளவில் தமிழகத்தில் அமலாக்கப் படக்கூடிய திட்டங்கள் ஏதாவது தமிழக அரசின் கையில் இருக்கின்றதா என்று அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ;** தலைவர் அவர்களே, சாதாரணமாக மின் உற்பத்தி திட்டங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவ்தற்கு குறைந்தது 5 ஆண்டுகள் ஆகும். ஏற்கனவே திட்டமிடாத நிலைமையினால் தான் நாம் இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே, இப்பொழுது ஏராளமான நிதி ஒதுக்கத்தை மின் உற்பத்தித் திட்டங்களுக்கென நாம் ஒதுக்கியிருக்கிற காரணத்தினாலே விரைவில் இந்தத் தட்டுப்பாடு நீங்கும் என எதிர் பார்க்கிறோம். பொதுவாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் புனல் மின் திட்டங்களுக்கான வாய்ப்பு குறைந்து விட்ட காரணத்தால், அனல் மின் திட்டங்களை அதிக அளவில் போட்டிருக்கிறோம்,

[1982 பிப்ரவரி 4

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையைப் பற்றியோ, நடைமுறைகளைப்பற்றியோ, கொள்கை ரீதியாக விமர்சனம் செய்தால் அதை இந்த அவையில் ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். மத்திய அரசாங்கமும் தயாராக இருக்கிறது. ஆனால், மத்திய அரசாங்கம் விலைவாசி உயர்வைப் பற்றிக் கேட்டால் நாங்கள் * * * * எங்களுடைய தெளிவான கொள்கை என்று சொல்வதன் மூலமாக மத்திய அரசாங்கத்தின் கொள்கையை விமர்சனம் செய்வதற்குப் பதிலாக அதனை அருவருப்பான வகையிலே நாட்டு மக்கள் மத்தியிலே சித்தரித்துக் கொண்டிருக்கின்ற வகையிலே இங்கே உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அது அவைக் குறிப்பில் இருந்து எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அவருக்கு அருவருப்பாக இருப்பது எங்களுக்கு சுவையாக இருக்கும். எங்களுக்கு சுவையாக இருப்பது அவர்களுக்கு அருவருப்பாக இருக்கும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிப்பட்ட விமர்சனத்திற்கு இடம்கிடையாது. அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருக்கக்கூடாது.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் அறிக்கையிலே இந்த விலைவாசிக் கொள்கை நாடு தழுவிய கொள்கை என்றும், அது இந்திய சர்க்காருடைய கொள்கையைப் பொருத்துத்தான் அமைகின்றது என்றும் வாசகங்கள் இதிலே வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே தான் உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் இவ்வளவு டன் அரிசி கேட்டால் இவ்வளவுதான் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக சிரமம் ஏற்படுகிறது என்று இந்த அறிக்கையில் வந்திருக்கின்றது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். கொள்கை அடிப்படையில் பேசலாம். தனிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டியது இல்லை.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற நடைமுறைகளுக்கு ஒவ்வாத வார்த்தைகள் என்று சொன்னால் அவற்றை நீக்குவதற்கு தங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அதற்குட்பட்டு, எங்களுடைய கருத்துக்களை, அரசியல் விமர்சனங்களை நான் இங்கே எடுத்துச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? அரசியல் ரீதியான விமர்சனங்களை நாங்கள் சொன்னால் அதற்கு அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டமன்றத்துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியது, அவர்களை விமர்சனம் செய்ய வேண்டாம் என்று அல்ல * * * என்பது போன்ற கொள்கைகளை மத்திய அரசு வைத்துக்கொண்டுள்ளது என்று சொன்னால் அது சரியானதுதானா என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன.

திரு. என். வி. என். சோமு: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, இங்கே சற்றுமுன் ஒரு பிரச்னை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது சம்பந்தமாக இப்போது பேச வேண்டாம். அது முடிந்துவிட்ட ஒரு பிரச்சினை. அதற்காக வெளிநடப்பு கூட செய்து விட்டு, உள்ளே வந்தாகிவிட்டது. இப்போது அந்தப் பிரச்னையை மீண்டும் கிளப்ப வேண்டாம். (குறுக்கீடுகள்).

திரு. என். வி. என். சோமு * * ]குறுக்கீடுகள்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சோமு பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்) ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் போது, இப்படி இடையே முறையில்லாமல், நினைத்த நேரத்தில் எழுந்து பேசக் கூடாது. இது நல்ல நடைமுறை அல்ல. சட்டமன்றம் முறையாக நடக்க ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்).

திரு. துரை முருகன்: ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்கக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சோமு அவர்களுக்கு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அனுமதிக்கப்பட்டது. ஆனால், அவர் முடிந்து போன ஒரு பிரச்னையை மீண்டும் எழுப்பியதால்தான் அனுமதி மறுக்கப்பட்டது. திரு. மு. அம்பிகாபதி தொடர்ந்து பேசுவார்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் கொள்கையின் விளைவாகத்தான் இன்றைக்கு விலைவாசி உயர்ந்து இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது. (குறுக்கீடு).

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சோமு அவர்கள் இப்போது பேச முடியாது. அவர் எழுப்ப முயலும் பிரச்னைக்கு ஏற்கெனவே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

THIRU DURAI MURUGAN : I accept ,what you say, But we are an a point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி நடந்து கொள்வது சரியான முறையல்ல. ஏற்கெனவே பாயிண்ட் ஆப் ஆர்டர் அனுமதித்தாகி விட்டது முடிந்து போன பிரச்னையை மீண்டும் எழுப்புவது சரியானதல்ல.

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பிய திரு. சோமு என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டுவிட்டு முடிவு சொல்லுங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறையில் இருந்துகொண்டு எல்லாவற்றையும் கேட்டுவிட்டேன். உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறபோது இப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது சரியல்ல. திரு. அம்பிகாபதி இப்போது பேசுவார்.

(முற்பகல் 11–40)

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மத்திய அரசினுடைய கொள்கையால் ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வு இன்றைக்கு மக்களை கடுமையாகப் பாதித்திருக்கின்றது. அதைச் சுட்டிக் காட்ட போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டது. வேலை நிறுத்தத் தடை சட்டம் நமது. தொழிலாளர்கள் உரிமையைப் பறிக்கிறது என்பதற்காக நவம்பர் 23-ந் தேதி டில்லியிலே நடைபெற்ற மிகப் பிரமாண்டமான தொழிலாளர்கள் பேரணியில் ஜனவரி 19-ந் தேதி இந்தியா முழுவதும் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்த வேண்டும் என்று மைய சங்கங்கள் அறிவித்தன. அந்த வேலை நிறுத்தத்தை உடைக்கின்ற முயற்சியிலே இருக்கிற அரசு அதிகாரத்தை எவ்வளவு தூரம் தவறாகப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்தினார்கள். இன்றைக்கு பாரதி விழாவை நடத்துகின்றவர்கள் தொழிலாளர்களுக்கு வந்தனை செய்வோம் என்று மேடையிலே முழங்கிவிட்டு, ஜனவரி 19-ந் தேதி கடுமையான அடக்குமுறைகளை அவிழ்த்து விட்டார்கள் இந்தியா முழுவதும்.



வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்களுடைய பிறப்புரிமை அந்த உரிமையைப் பறிப்பதற்கு மத்திய அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. பாராளுமன்றத்திலே அண்ணா தி.மு.க. வும், தி.மு.க. வும் இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். அதை எதிர்த்து தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்றால், இங்கே என்ன குறைந்துவிடும் - உற்பத்தி குறைந்துவிடுமா - அல்லது போய் சேரவேண்டிய சரக்கு போய்ச் சேராமல் போய்விடுமா - ஏன் அந்த போராட்டத்தைத் தடுக்க நடவடிக்கை எடுத்தார்கள்

ஜனவரி 19-ந் தேதி தஞ்சையில் மட்டும் பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டார்கள். தடுப்பு நடவடிக்கை என்ற பெயரால் 2,759 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். குறிப்பிட்ட செக்‌ஷன்படி 1,158 பேர் கைது செய்யப்பட்டார்கள். அங்கே கைது செய்யப்பட்டது மட்டுமல்ல. ஜனவரி 19-ந் தேதி காலை மன்னார்குடியில் இரட்டப்பள்ளி கிராமத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. பிச்சைக்கண்ணு, ஞானசேகரன்— இருவருக்கும் துப்பாககிச் சூடு பட்டது. தஞ்சை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட ஞானசேகரன் 23-ந் தேதி இரவு 11-30 மணிக்கு மரணம் அடைந்தார். பிச்சைக்கண்ணு இன்னும் சீரியஸ் கண்டிஷனில் கவலைக்கிடமாக இருந்து கொண்டிருக்கிறார். ஞானசேகரன் வயிற்றில் துப்பாக்கிச் சூடு பட்டது. பிச்சைக்கண்ணுக்கு கனனத்தில குண்டு பாய்ந்தது.

மாயூரம் தாலுகாவில், மாயூரத்திலிருந்து திருமய்ஞானம் என்ற இடம் 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. காவல் துறையினர் அங்கே மக்களை நோக்கி பலமுறை சுட்டார்கள். நூற்றுக்கணக்கான தென்னை மரங்களை துப்பாக்கிக் குண்டுகள் துளைத்தன. 14 பேர்கள் குண்டடி பட்டார்கள். அந்த 14 பேர்களில் நாகூரான் என்பவர் அரைகுறை உயிரோடு இருக்கும்போது போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்டார். அஞ்சன் என்பவர் அடித்து ஆற்றிலே வீசப்பட்டு கொல்லப்பட்டார். ஆக தஞ்சை யாவட்டத்தில் குண்டு பாய்ந்து 3 பேர் இறந்து இருக்கிறார்கள். இப்படி நடைபெற்றிருக்கிற சம்பவத்திற்கு நீதி விசாரணை வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்துக் கட்சிகளும் கூறி இருக்கின்றன. இந்தக் தமிழ சம்பவத்திற்கு அரசு நீதி விசாரணை நடத்த உத்திரவிட வேண்டும்

அதுமட்டுமல்ல, இரண்டு, 3 நாட்களாக கிராமங்களில் புகுந்து கோடாரி, அரிவாள போன்ற ஆயுதங்களை எல்லாம் போலீசார் பறித்துச் சென்றிருக்கின்றார்கள். திருமய்ஞானத்தில் பிச்சைக் கட்டளை என்ற ஊரில் வீடு புகுந்து பானை, சட்டிகளை எல்லாம் உடைத்து நொறுக்கியிருக்கிறார்கள். பெண்கள் தாக்கப்பட்டிருக்கி

றார்கள். அங்கே அம்மை வார்த்த பிள்ளையின்மேல் காவல் துறையினர் வெந்நீரை ஊற்றியிருக்கிறார்கள். போலீசார் அங்கே போகும்போது அம்மைப் போட்டிருக்கிறது, போகாதீர்கள் என்று தடுத்திருக்கிறார்கள். அதையும் மீறி அங்கே போய் வெந்நீரை ஊற்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான சம்பவங்கள் மாயூரம் தாலுகாவில் ஜனவரி 9-ந் தேதி நடந்து இருக்கிறது.

இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளுக்கு என்ன காரணம் - அங்கே பேருந்து கொளுத்தப்பட்டதா - இரண்டு பேருந்துகளுக்கு கண்ணாடி உடைந்தது போன்ற ஏதோ சேதம் என்று சொன்னார்கள். அதைத்தவிர, வேறு ஏதாவது சம்பவம் உண்டா - இந்திரா காந்தி அம்மையார் கைது செய்யப்பட்டபோது இந்தியா முழுவதும் இரயில் நிறுத்தப் போராட்டம் நடக்கவில்லையா - விமானம் கடத்தப்படவில்லையா - விமானத்தைக் கடத்தியவர்கள் எம். எல். ஏ. க்களாக இல்லையா - திராவிட முன்னேறக் கழகத்திலிருந்து இப்போதைய முதலமைச்சர் விலக்கப்பட்ட போது பேருந்துகள் கொளுத்தப்படவில்லையா கலைஞர் கருணாநிதி கைதானபோது பேருந்துக்கள் கொளுத்தப் படவில்லையா - ஆனால், தொழிலாளர் தோழர்கள் பொறுப்புடையவர்கள். தொழிலாளி எதையும் உருவாக்குகிறவன்; அவன் உடைக்க மாட்டான். தமிழ்நாட்டில் ஒன்றிரண்டு சம்பவங்கள் நடைபெற்றதற்குக் காரணம் இங்கே இளைஞர் காங்கிரஸ் விடுத்த அறிக்கைதான் என்பதைத் தெளிவாகச் சொல்கிறேன்.

THIRU K.S. G. HAJA SHEREEF - What the hon. Member is saying is abolutely not correct He must withdraw it The Chair should see that this does not find a place in the proceedings

**திரு. மு. அம்பிகாபதி** அப்படியானால் விமானம் கடத்தப் படவில்லை என்று சொல்கிறீர்களா :

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். உறுப்பினர்கள் தங்களுக்குள் நேரடியாக விவாதத்தை வைத்துக்கொள்ளக் கூடாது.

**திரு. மு. அம்பிகாபதி :** பேரவைத் தலைவர் அவர்களே நடைபெற்றிருக்கக்கூடிய சம்பவத்திற்குக் காரணமே காங்கிரஸ் கட்சி வெளியிட்ட அறிக்கைதான்.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசுகின்றபோது இரண்டு பேருந்துகள் எரிக்கப்பட்டதற்குக் காரணம் இளைஞர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வெளியிட்ட அறிக்கைதான் என்று சொல்





கிறார்கள். இது தவறான ஒரு குற்றச்சாட்டு. உண்மைக்குப் புறம்பான செய்தியாக இங்கே சொல்லப்படுகின்றது. ஆகவே அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் கைது செய்யப்பட்டபோது கன்னியாகுமரி மாவட்டத்திலே பேருந்திலே குண்டுவைத்து 10 பேர் சாகவில்லையா - ஆனால், இப்போது நடைபெற்ற இந்த வேலை நிறுத்தத்திலே குண்டு வீசப்பட்டதா ?

முன்பு, இந்திராகாந்தி அம்மையார் கைது செய்யப்பட்டவுடன் விமானம் கடத்தப்பட்டது என்பது உண்மையா இல்லையா ? (குறுக்கீடுகள்—குழப்பம்).

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே பஸ் எரித்தவர்கள் இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறினார்கள். ஆனால், நடைபெற்ற வழக்கில் நீதிமன்றம் அவர்கள் குற்றவாளி இல்லை என்று வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போகிற போக்கில் எதையாவது பேசுவது நல்லதல்ல.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவரவர்களே, இந்திராகாந்தி அவர்கள் கைது செய்யப்பட்டபோது அந்தச் சம்பவங்கள் நடந்ததா இல்லையா இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள் என்று நான் சொல்லவில்லையே (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பொதுவான கருத்துக்களை மட்டும் சொல்லி தம் பேச்சை சீக்கிரம் முடித்துக் கொண்டால் நல்லது.

**திரு. கே. எம். தங்கமணி :** தலைவரவர்களே, இந்திரா காங்கிரஸார்தான் செய்தார்கள் என்று சொல்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிச் சொல்லவில்லை என்றுதான் அவர்கள் சொல்லிவிட்டார்களே, மேலும் அவர்கள் என்ன சொன்னார் என்பது பற்றி நான் அவைக் குறிப்பைப் பார்த்து பிறகு சொல்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவரவர்களே, இலங்கையிலே தமிழர்கள் தாக்கப்பட்டபோது நாம் எல்லோருமாகச் சேர்ந்து ஒருநாள் வேலை நிறுத்தம் செய்யவில்லையா? அதேபோன்று இங்குள்ள தொழிலாளர்களுக்காக ஒருநாள் அமைதியாக பந்த் நடத்தினால் என்ன தவறு ? விலைவாசி உயர்கிறது, எனவே

[திரு. மு. அம்பிகாபதி] [1982 பிப்ரவரி 4

விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டு ஒருநாள் வேலை நிறுத்தம் செய்வதில் என்ன தவறு - கரும்பு விவசாயிகள் நெல்லுக்கும், கரும்புக்கும் போதிய விலை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டு 1 ஆம் தேதி சென்னை கடற்கரையிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் செண்ட்ரல் கவர்ன்மெண்ட்டுக்கு இருக்கின்றதா இல்லையா ஆகவே, தொழிலாளர்கள் இன்றைய தினம் உள்ள பிரச்சினைகளை வைத்துப் போராடினால் உங்களுக்கு ஏன் ஆத்திரம் வருகின்றது. அதற்காக விவசாயத் தொழிலாளர்களை ஏன் சுட்டுக் கொல்லவேண்டும். ஒருவருக்கு வாயிலே குண்டு பாய்ந்திருக்கின்றது. இன்னொருவருக்கு கண்ணிலே குண்டு பாய்ந்திருக்கின்றது விலைவாசியைக் கட்டுப்படுத்து என்று சொன்னால் அவர்களுடைய வாயைப் பார்த்துச் சுடு என்று போலீஸ்காரர்களுக்கு உத்தரவு போட்டீர்களா - அதுபற்றிகூட ஒரு போலீஸ் அதிகாரி அறிக்கை விட்டிருக்கிறார். ஏழை அப்பாவிகளை கம்யூனிஸ்டுகள் தூண்டி விடுகிறார்கள் என்று. நாங்கள் யாரையும் தூண்டிவிடவில்லை. 40 ஆண்டு காலமாக அவர்கள் இடைவிடாமல் போராடி துப்பாக்கிச் சூடுபட்டு உரமேறியிருக்கிறார்கள். விஷம் கொடுத்து கொல்லப்பட்டு இரண்டு பேர்கள் இறந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் சேலம் சிறையிலே அடிபட்டு அல்லல்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் உயிரை ஈந்து, உதிரம் சிந்தி வளர்த்திருக்கிற இயக்கம் இது. அந்த தொழிலாளிகளா அப்பாவிகள் ? அவர்கள் அப்பாவிகள் அல்ல. துப்பாக்கிச்சூட்டிற்கு எதிராக நெஞ்சை நிமிர்த்திக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களா அப்பாவிகள் - ஆனால், ஒரு போலீஸ் அதிகாரி அறிக்கை விடுகிறார்—'' அப்பாவிகளை தூண்டிவிட்டு கம்யூனிஸ்ட்காரர்கள் இந்த போராட்டத்தை நடத்துகிறார்கள் என்று ''. இதற்குத்தான் நீதி விசாரணை செய்ய உத்தரவு இட வேண்டும் என்று கேட்கிறோம்.

[முற்பகல் 11–50]

நல்லநேரம் என்ற படத்தில் என்று நினைக்கிறேன். நமது முதல்வர் அவர்கள் பாடியிருக்கிறார். '' வலிமை உள்ளவன் வைத்தது எல்லாம் சட்டம் ஆகாது தம்பி ; பிறர் வாழ நினைப்பவன் எண்ணுவதெல்லாம் சட்டம் ஆகணும் தம்பி ''—என்று நமது மேலவைத் துணைத் தலைவர் மாண்புமிகு புலமைப்பித்தன் அவர்கள் இயற்றி, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாடியிருக்கிறார். உங்களிடம் வலிமை இருக்கிறது. மெஜாரிட்டி இருக்கிறது. அப்படி மெஜாரிட்டி இருப்பதினால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்து, மத்திய சர்க்கார் தொழிலாளர்களுக்கு விரோதமாக சட்டம் கொண்டு வருவதை ஆதரிக்கிறீர்கள் என்றால் அது முறையல்ல—வலிமை உள்ளவன் வைத்தது எல்லாம் சட்டம் ஆகாது.



1982 பிப்ரவரி 4] [திரு மு அம்பிகாபதி]

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்களை சிறை செய்ய வேண்டும் என்று சொல்லி, மத்திய சர்க்கார் சட்டம் போடுகிறார்கள். இந்தத் தொழிலாள விரோதச் சட்டத்தை நீங்கள் ஆதரிப்பதா - ஒன்று மட்டும் சொல்கிறேன். தொழிலாளர்களை விரோதித்துக் கொண்டு எப்படிப்பட்ட ஆட்சியானாலும் நிலைத்து வாழ முடியாது. 8 மத்தியச் சங்கங்கள் 42 கிளைச் சங்கங்கள்—சமமேளனங்கள், சென்ட்ரல் கவர்ன்மெண்ட் நிறுவனங்கள், போஸ்ட்டல் டிபார்ட்மென்ட் இவைகள் எல்லாம் சேர்ந்து வேலை நிறுத்தம் என்று அறிவிக்கிறார்கள். அவர்களைப் பிடித்து சிறையில் தள்ளுவதா - வேண்டுமானால் பி. எம். ஜி. பேரில் ஆக்ஷன் எடுக்கட்டுமே. இந்தியாவில் இருக்கும் அத்தனை தபால் நிறுவனங்களும் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தால் அப்போது தெரியும், நாடே எந்த வகையில் ஸ்தம்பித்துப்போய் விடும் என்று.... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் குறுக்கீடுகள் வராத அளவில் பேசுவதில் வல்லவர். அவர் அப்படி பேசாததினால் நான் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி**: தலைவர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறேன். சுருக்கமாகவே முடித்துக் கொள்கிறேன். அடுத்து, இந்தப் போராட்டத்தைக் குறித்து, வானொலியை எப்படி பயனபடுத்தினார்கள் தெரியுமா - அகில இந்திய வானொலியாக அல்ல அகில இந்திரா வானொலியாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். '' என்ன கண்ணுசாமி இந்தப் போராட்டம் எப்படி நடந்தது. அதெல்லாம் ஒன்றும் இல்லை பொன்னுசாமி போராட்டம் பிசுபிசுத்துவிட்டது.'' இந்த ரீதியில் வானொலியில் உரையாடல்கள். போராட்டம் பிசுபிசுத்து விட்டதாம். நான் சொல்கிறேன், ஜனவரி 19 ஆம் தேதியன்று மக்களே போக்குவரத்தில் பயணம் செய்வதை நிராகரித்து விட்டார்கள் என்று. தைரியம் இருந்தால் ஜனவரி 19 ஆம் தேதி போக்குவரத்துக் கழகங்களில் என்ன வசூல் என்பதைச் சொல்ல முடியுமா - 18-ஆம் தேதி என்ன வசூல், 20 ஆம் தேதி என்ன வசூல், 19 ஆம் தேதி என்ன வசூல் என்று புள்ளி விவரம் காட்ட முடியுமா - ஆனால் வானொலியில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சங்கங்கள் போராட்டத்திலிருந்து வாபஸ் வாங்கிவிட்டது என்று அறிவிப்பு. ஏன் எங்களைக் கூப்பிட்டு வானொலியில் பேசச் சொல்வதுதானே, எதற்காக இந்தப் போராட்டம் என்பது குறித்து. இப்படிப்பட்ட மத்திய அரசுக்கு ஏழைகளின் காவலனாக, தொழிலாளர்களின் தோழனாக இருக்க வேண்டிய மாநில அரசு எப்படி துணை நிற்கலாம் - நண்பர் சமரசம் அவர்கள் பேசும்போது மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே உள்ள உறவு மாமியார் மருமகள் உறவு என்று சொன்னார்கள்,

[திரு. மு. அம்பிகாபதி] [1982 பிப்ரவரி 4

நாங்கள் மாமியார்-மருமகள் போன்று இருக்கிறோம் என்றார்கள். நீங்கள் மாமியார்-மருமகள் உறவு கொண்டாடவா உங்களை தமிழக மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்? காங்கிரஸ் கட்சிக்கு மாறாக ஆல்ட்டர்நேட்டிவாக அவர்களை நிராகரித்து, உங்களை ஆட்சிக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் வேறு ஆல்ட்டர்நேடிவ் இல்லை என்பதால்தான். Nuisance is better than nonsense என்கிற வகையில் இருக்கட்டுமே என்றுதான். இல்லையென்றால், இங்கே உட்கார்ந்திருக்கும் நண்பர்கள் அங்கே உட்கார்ந்திருப்பார்கள். நீங்கள் இங்கே வந்திருப்பீர்கள். (குறுக்கீடுகள்). [மணியடிக்கப் பெற்றது.]

இதுதான் லாஸ்ட் பாயின்ட். முடித்துக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் இந்த மாநில அரசாங்கத்தின் மீது கமிஷன் போட்டிருக்கிறது. திரு. அச்சுதமேனன் அவர்கள் கேரளாவில் 8 வருட காலமாக முதல்வராக இருந்தார். அவர்மீது இந்திரா காங்கிரஸ் கமிஷன் போட்டு பார்க்கட்டுமே. ஆனால், முடியாது. தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை இன்றைக்கு நீங்கள் நிறைவேற்றாததினால்தான், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களுக்கு எதிரான கொள்கையை எடுத்திருப்பதால்தான், தமிழக மக்கள், இந்தக் கமிஷனை எதிர்க்கவில்லை.

கடைசியாக, விவசாயிகளும் நுகர்வோர்களும் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் அமைப்பதாம். விலைவாசியை குறைப்பதற்குரிய திட்டமா இது? கொள்முதல் செய்வதற்கும், வினியோகிப்பதற்கும் மத்திய அரசாங்கம் இரண்டுக்குமே கட்டுபடியாகக்கூடிய விலையை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய வேண்டும். புரொக்கியூர்மென்ட் அண்ட் டிஸ்டிரிப்பியூஷன்—இதை அரசாங்கமே பார்த்துக் கொள்ள வேண்டும். இவை இரண்டையும் செய்யவில்லை என்றால் கவர்ன்மெண்ட் எதற்கு இருக்கிறது? மத்திய அரசு எதற்கு இருக்கிறது. மாநில அரசு எதற்கு இருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள விவசாயிகளுக்குக் கொடுக்க மனம் வரும். ஆனால், தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்குக் கொடுக்க மனம் இல்லாமல் ஆந்திராவிலிருந்து வாங்கி வந்து கொடுப்பார்கள். ஏன் அவர்கள் வழி போகிறீர்கள்? மத்திய சர்க்கார் நிலைக்கும் என்ற நம்பிக்கை கிடையாது. சீக்கிரத்தில் அதுவே போகப் போகிறது. (மணி அடிக்கப் பெற்றது).

*திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைமீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் என்கருத்துக்களை எடுத்து கூற விரும்புகின்றேன். எதிர்கட்சியைச் சார்ந்த அருமை



1982 பிப்ரவரி 4] [திரு. வே. இரா. ஜெயராமன்]

நண்பர் திரு. துரை முருகன் அவர்கள் இந்த அரசை தகுதியற்ற அரசு என்று கூறினார்கள். அவர்களுக்கு பதிலளிக்கின்ற முறையில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.
the most efficiently administered State, of all States in India is Tamil Nadu
என்ற வகையில் தமிழக அரசு சீரோடும் சிறப்போடும் பணியாற்றிவருவதோடு நல்ல பல திட்டங்களை ஆளுநர் அவர்கள் உரை மூலம் இன்றைய தினம் அறிவித்திருக்கிறது. தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடைபெற்று வருகிறது என்பதற்கு ஆதாரம். தமிழகத்தில் கடந்த காலத்தில் நிலவிய வறட்சி நிலைமையின் போது ரூபாய் 55·24 கோடி அளவில் அடிப்படை வசதிகளை செய்து நிரந்தரமான முதலீடுகளை ஏற்படுத்துகின்ற வகையில் திட்டங்களை தீட்டியிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் - தலைமை)

உணவுப் பங்கீட்டில் தமிழக அரசு கேட்டுக் கொண்ட ஒதுக்கீட்டுக்குக் குறைவாக 10,800 டன் கோதுமை கேட்டதற்கு மாறாக 4,000 டன் குறைத்துக் கொடுத்த போதும் அதிகரித்துள்ள அரிசித் தேவையை பொதுச் சந்தையில் கொள்முதல் செய்து உணவு நிலையை சீராக வைத்துக் கொண்டு தமிழகத்தில் பட்டினிச் சாவு இல்லாத ஒரு நிலையை தோற்றுவித்திருக்கிறது.

இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு 514 கோடி ரூபாயிலிருந்து 600 கோடி அளவிற்கு எட்டியிருப்பதும் அடுத்த நிதி ஆண்டுக்கு 711 கோடி ரூபாய் அளவில் திட்டமிட்டிருப்பதும் நமது அரசின் நிர்வாகத் திறமையைக் காட்டுகிறது.

வேளாண்மை துறையைப் பொறுத்த வரையில் சீராக படிப்படியாக முன்னேற்றம் கண்டுள்ளது. பயிற்சி—பார்வையிடல் திட்டத்திற்கு 36 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியுடன் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்றும் கூறியிருக்கிறார்கள். உலக வங்கியின் உதவியுடன் 102 கோடி ரூபாய் செலவில் வேளாண்மைப் பொருள் விற்பனையை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் திட்டம் ஒன்றையும் இவ்வரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. அதோடு கூட, பால் பெருக்கு திட்டம், கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி இணையம் ஆகியவை சிறந்த பணிகளாக அமைகின்றன.

வருவாய்த் துறையைப் பொறுத்த வரையில் நில உடைமைகளை இன்றைய நிலைக்கு ஏற்புடைத்த ஆவணங்களை ஏற்படுத்துகின்ற பணி ஏழை எளிய விவசாயிகளுக்கு செய்யப்படுகிற மிகப் பெரிய காரியமாகும்.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1982 பிப்ரவரி 4

இடைத்தரகர்களை ஒழிப்பதன் மூலம் ஏற்புடைத்த விலைகளை உற்பத்தியாளர்களும் நுகர்வோர்களும் பெறுகின்ற வகையில் அத்தியாவசியப் பண்டங்களை கூட்டுறவுத் துறை மூலம் பகிர்ந்தளித்து விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியில் அரசு தன்னை ஆட்படுத்திக் கொண்டிருக்கின்றது.

திரும்பப் பெற இயலா முதலீடுகள் என்று எதிர்கட்சியினரால் கூறப்பட்ட புரட்சித் தலைவர் அவர்களது தன்னிறைவுத் திட்டம் இன்று தமிழக கிராமங்களில் அடிப்படை மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டுள்ளவர்கள் அதை கண் குளிரப் பார்ப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

புதிய அனல் மின் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு கொள்கை அளவில் தன் இசைவைத் தெரிவித்துள்ளதும், நெல்லை மாவட்டத்தில் கூடங்குளத்தில் புதிய அணு மின்நிலையம் அமைக்க இருப்பதும் மின்துறை எதிர்கால தேவையினை கருத்திற்கொண்டு செயல்படுவதைக் குறிப்பதாகும்.

மத்திய அரசு தன் பட்ஜட்டுக்கு முன்னதாக நிலக்கரி, எண்ணெய், ரெயில்வே கட்டணம் இவற்றினை உயர்த்தி தமிழக மின்வாரியத்திற்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது இருப்பினும் தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே மிகக் குறைந்த அளவில் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மத்திய அரசு அமைத்துள்ள தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரைகள் மீது தக்க நடவடிக்கை எடுத்து மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரை தமிழகத்திற்கு திருப்பி விடவும் காவிரி நீர்ப் பங்கீட்டில் நியாயமான முடிவுகளை எடுப்பதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும்.

தமிழக அரசின் நீர்ப் பாசனத்துறை சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசன நவீனப்படுத்துகிற திட்டங்களுக்கு 48·59 கோடியும், பாசன சிறப்புத் திட்டம், தூர் வாருதல் போன்ற திட்டங்களுக்கு 12 கோடி ரூபாய் செலவு செய்யப்பட இருப்பதும், வரண்ட புதுக்கோட்டை, முகவை மாவட்டங்களுக்கு வெள்ளக் காலங்களில் ஏற்படுகிற வெள்ளப் பெருக்க நீரை கொண்டு செல்வதற்குரிய ஆய்வுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதும் குறித்து அத்துறையைப் பாராட்டுகிறேன்.

]நண்பகல் - 12-00]

தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, தொழில் நுட்பக் கல்வி, உரிமை இயல் நீதி மன்றங்களில் தமிழ், அரசின் முற்போக்கான தொழிலாளர் நலக்கொள்கை, ஆதிதிராவிடர்



1982 பிப்ரவரி 4] [திரு. வே. இரா. ஜெயராமன்]

களின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்த 83·04 கோடி, அதில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்புத் திட்டங்கள், மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த திட்டங்கள் அனைத்தும் பாரதப் பிரதமர் கூறியுள்ள புதிய 20 அம்சத் திட்டங்களை உள்ளடக்கி உள்ளமை, தமிழக அரசிற்கும் மத்திய அரசிற்குமுள்ள ஒற்றுமை உணர்வுகளையும், மாநில மத்திய சுமுக உறவுகளையும் வெளிப்படுத்துகின்ற ஒன்றாக இந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

அடுத்து, எனது தேனி தொகுதியினைப் பொறுத்து அரசினது ஆய்விலுள்ள தேனி, சின்னமனூர், நகராட்சிகளின் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறும், தேனி அரசினர் மருத்துவமனையில் 50 படுக்கையிலிருந்து 100 படுக்கை வசதி செய்து கொடுக்குமாறும், வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக ஈ.எஸ்.ஐ. தொழிலாளர் நல ஈட்டுறுதி வசதிகளை நீடித்துக்கொடுப்பதற்கும், அரண்மனைபுதூர் அருகே பெரியாற்றின் குறுக்கே அமைந்துள்ள குறுகிய நிலையிலுள்ள பாலத்தை அகலப்படுத்திக் கொடுக்குமாறும் வேண்டுகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்து, பழனிசெட்டிபட்டியிலுள்ள உப மின் நிலையத்தை 230 கிலோ வாட் நிலையமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும், அதேபோல், பெரியாரில் மழைக் காலங்களில் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்க நீரை லோயர் கேம்ப் வைரவன் அணையிலிருந்து மேற்கு மலை அடிவாரத்தில் ஒரு சம மட்டக் கால்வாயினை பெரியகுளம் வரை ஏற்படுத்திக் கொடுத்து, அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான புஞ்சை நிலங்கள் பயனடையும் வகையில், அரசின் ஆய்விலுள்ள 18 ஆம் வாய்க்கால் திட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பெரியார் அணை தமிழக அரசால் மராமத்து செய்யப்பட்டுள்ளது. அதன் முழுக் கொள்ளளவான 152 அடி உயரம் வரை நீரைத் தேக்கி வைப்பதற்கு, புதிய ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பொதுப் பணித்துறை சில திட்டங்களை அரசின் ஆய்வுக்கு அனுப்பியுள்ளது. அந்த அணைக்கட்டுத் திட்டத்திற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உத்தமபாளையம் வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுகிறேன். மதுரை மாவட்டத்தில் நில உச்ச வரம்புச்சட்டத்திலிருந்து பல நில உடைமையாளர்கள் தப்பித்துள்ளனர். அவர்களைக் கண்டுபிடித்து, அந்த நிலங்களை எல்லாம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று வேண்டுகிறேன். இப்படி பல நல்ல திட்டங்கள் ஆளுநர் அவர்கள் உரையிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தும்

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1982 பிப்ரவரி 4

இதிலே ஒன்றுமில்லை என்று கூறுகின்றவர்கள் கண்களில் ஒளியில்லை என்று கூறி, ஆளுநர் அவர்கள் உரையை வரவேற்கிறேன். வணக்கம். நன்றி.

*திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில இன்றியமையாத கருத்துக்களைத் தெரிவிக்கக் நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்கு முன்பாக இந்த மன்றத்திற்கு நான் ஒன்றை கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, வறட்சி நிவாரணப் பணிகளைக் குறித்து அன்றைய மத்திய அமைச்சர் குற்றச்சாட்டைச் சொல்லி, அதைப்பற்றி இங்கே அருமை நண்பர் மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மணிமாறன் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்—அப்படியானால், மத்திய அரசு உங்கள் மாநில அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி கமிஷன் அமைத்திருக்கிறதே. இதை நீங்கள் மறந்து விட்டீர்களா? ஆம் எனில், அந்தக் கமிஷனின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மற்றொன்று, சர்க்காரியா கமிஷனை நியமித்த போது, அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நான் இதை வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால், எங்கள் தூய்மையை வெளிப்படுத்துவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்று சொல்லி அதை வரவேற்றார்கள். ஆனால், வேடிக்கை என்னவென்றால், கொடுக்கப்பட்ட புகார்களுக்கு "அபிடவிட்" தருமாறு கமிஷன் புகார் கொடுத்தவர்களைக் கேட்ட நேரத்தில், எனக்கு ஒன்றும் தெரியாது, சேலம் வக்கீல் கண்ணன் என்பவர் சொன்னார்கள் என்று தெரிவித்ததோடு மட்டுமல்ல, ஆங்கிலத்திலே I have no knowledge about the charges என்று அன்றைய எதிர்க் கட்சித் தலைவரும், இன்றைய முதல் அமைச்சருமாக இருக்கிற மாண்புமிகு எம். ஜி. ஆர். தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதையும் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். வேறு ஒரு குற்றச்சாட்டையும் சொன்னார்கள். கமிஷனை திராவிட முன்னேற்றக் கழகம் நிராகரித்தது, பயந்துவிட்டது என்கிற மாதிரி சொன்னார்கள்.

ஆனால் அன்றைக்கு எல்லா சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கமிஷனை திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டுக் கொண்டது. அந்த நியாயமான கோரிக்கையை, உரிமையை கமிஷன் முற்றிலும் நிராகரித்த



1982 பிப்ரவரி 4] [திரு ஜே. எஸ். இராசு]

காரணத்தால் நாங்கள் கமிஷனைப் புறக்கணித்தோம். இந்த வரலாற்றை நாடும் மக்களும் நிச்சயமாக நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெளிவாக்க விரும்புகிறேன்.

அடுத்து, இந்த கவர்னர் உரையைப் பற்றிப் பேசிய அருமை நண்பர் சமரசம் அவர்கள் சில அருமையான கணக்குகளை எல்லாம் எடுத்து வைத்தார்கள். அவருடைய பெயரே சமரசம்—ஆனால் சமரசமான விவாதத்திற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவர் என்றைக்கும் பேசியதாக எனக்கு நினைவு இல்லை. என்றாலும் கூட அவர் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்.

63 சதவீதம் வறட்சி நிவாரப் பணிகளை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்து நடத்தினார்கள். பலன் பெற்றார்கள் என்று கூறினார். நானும் ஒரு கணக்கு வைத்திருக்கிறேன்— இந்த வறட்சி நிவாரணப் பணி, தன்னிறைவுத் திட்டப் பணி, வேலைக்கு அரிசி தரும் திட்டம் ஆகிய அனைத்துப் பணிகளும்— 63 சதவிகிதம் அல்ல நூற்றுக்கு நூறு இந்த நாட்டை ஆளுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிற அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் ஏற்று பலன் பெற்றிருக்கிறார்கள் என்ற ஒரு கணக்கை நான் சொல்லுகிறேன்.

63 விழுக்காடு தி.மு.க. தோழர்கள் பெற்றார்கள் என்று சொன்னதற்கு சான்றுகள் கேட்டபோது பின்னர் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னதுபோல், இன்றைக்கு நான் சொன்னதற்குச் சான்றுகள் கேட்டால் நானும் சான்றுகளை அவர் தந்த அடுத்தநொடியில் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் இராசு அவர்கள் தன்னிறைவு வேலை வாய்ப்புத் திட்டம் அனைத்தும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப் பட்டது என்று சொன்னார்கள். வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தை முழுக்க முழுக்க அரசாங்க அதிகாரிகள் தான் செய்கிறார்கள், காண்டிராக்ட் விடுகிற முறை இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. அதிகாரிகள் செய்வது என்று சொன்னால், அந்த அதிகாரிகள் அ.இ.அ.தி.மு.க. வினருக்கு அதைக் கொடுத்தார்கள் என்பது என்னுடைய பகிரங்கமான குற்றச்சாட்டு.

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 பிப்ரவரி 4

அடுத்து, ஆளுநர் உரை மீது விவாதத்தைத் துவக்கி வைத்து அருமை நண்பர் பிரபாகரன் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். போன ஆண்டு கவர்னர் உரையின் போது உலகத் தமிழ் மாநாட்டின் பெருமைகளை ஆளுநர் பெருமான் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டார்கள். போன ஆண்டு அ.இ.அ.தி.மு.க. அரசு தப்பித்துக் கொள்ள உலகத் தமிழ் மாநாட்டை நாடியது, தமிழை நாடியது. கொடுத்து வைத்தவர்கள்—இந்த ஆண்டு பாரதியார் நூற்றாண்டு விழா கிடைத்திருக்கிறது. அடுத்த ஆண்டு திரு. வி.க. வோ. மறைமலைகள். அடிகளோ,—ஆட்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டிருப்பார்கள் பிரபாகரன் அவர்கள் பேசும்போது பாரதியாரின் வீர வரிகளை எல்லாம் அழகாகக் குறிப்பிட்டு பாரதியாரின் பெருமைகளை எலலாம் புகழ்ந்து பேசினார்கள். யார் யாருக்கோ பாரதி விழாவில் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கும் போது, திரு. பிரபாகரனுக்கு அந்த விழாவில் வாய்ப்புக் கிடைக்காமல் போய் விட்டது என்பதற்காக உள்ளபடியே வருத்தப்படுகிறேன். வருகிற விழாக்களிலாவது அவருக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புகிறேன். பாரதியாரைப் பற்றிப் பேசும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். அவர் ஒரு பெரிய கவிஞர்— சாபமே கொடுக்கும் கவிஞர்.

''தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்'.

என்றார். வறுமையில் வாடுகிறவர்களுக்கு ஒரு ரூபாய் தருகிறோம் என்று சென்ற பட்ஜட்டில் அறிவித்தார்கள். அதிலே பலன் பெற்றவர்கள் எவ்வளவு பேர் என்ற கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லவில்லை. சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவில்லையே, ஏன் என்று பாரதியார் உங்களைக் கேட்பார்.

''சாதிகள் இல்லையடி பாப்பா ........
பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே.........''

என்ற அந்தக் கருத்துக்கு உயிரூட்டுகின்ற வகையில் ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது கலைஞர் அவர்கள் அனைத்து சாதியினரும், அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை நிறைவேற்றி அது இன்று உச்ச நீதி மன்றத்தில் முடங்கிக் கிடக்கிறது. அந்த அருமையான சட்டம் மீண்டும் வரவேண்டுமென்ற எண்ணம் அண்ணாவின் பெயரால் ஆட்சிக்கு வந்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற உங்களுக்கு ஏற்படவில்லையே என்று பாரதியார் உங்கள் மீது பாய்வார்.

(பிற்பகல் 12–10).

ஆகவே பெரிய மனிதர்களைப்பற்றிப் பேசும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று நான் நம்முடைய திரு. பிரபாகரனை உரிமையோடு கேட்டுக் கொள்வதற்கு



1982 பிப்ரவரி 4] [திரு. ஜே. எஸ். இராசு]

விரும்புகிறேன். அவர்கள் அன்றைக்கு ஒரு அரிய பெரிய கருத்தைச் சொன்னார்கள். எல்லாவற்றையும் விட அது தான் சிறந்தது. கிராமத்தில் வாழ்கிற மக்கள் மாண்புமிகு எம். ஜி. ஆர். முகத்தில் மகாத்மா காந்தியைக் காண்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே அன்று மாலை நான் பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்ற எனது நண்பர்களோடு பேராசிரியர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது திரு. பிரபாகரனுடைய கருத்தை அவர்கள் மத்தியிலே வைத்தேன். அது ஒரு நல்ல ஆராய்ச்சிக்குரிய கருத்து. பி.எச்டி. செய்யலாம், எம்.பில்-க்குக் கூட தீசிஸ் சப்மிட் பண்ணலாம். அதுவும் காந்தியாரை தலைவராகவே ஏற்றுக் கொண்டிருக்கின்ற மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரிவினர்கள் கூட அதைப் பற்றி செமினார் நடத்தலாம் நாட்டிலே. ஏனெனில் ஒரு அருமையான தத்துவம் அது. இதுவரை யாரும் அதைச் சொல்லவில்லை. எம்.ஜி.ஆர். யார் முகத்திலே காந்தியார் தெரிவது என்பது ஒரு முக்கியமான ஆராய்ச்சிதான். எனவே ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புநோக்கிப் பார்க்கக் கூடிய அளவுக்கு அது ஒரு நல்ல தீசிஸ்—அத்தகைய தலைப்பை நண்பர் திரு. பிரபாகரன் தந்திருக்கிறார். அதற்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் கிராமம் இன்றைக்கு எப்படி இருக்கிறது எம்.ஜி.ஆர். முகத்திலே மகாத்மா காந்தியார் தோன்றுவது இருக்கட்டும். ஆனால் காந்தியடிகள் கனவு கண்டாரே கிராம ராஜ்யம் அது இருக்கிறதா இன்றைக்கு

மதிப்பிற்குரிய ஆளுங்கட்சி தரப்பினர்கள் இன்றைக்கு முடிவு எடுத்திருப்பதாக அறிகிறேன். அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட கால்நடைப்பயணம் போவதாக. தயவுசெய்து மதுரையிலிருந்து நீங்கள் திருச்செந்தூருக்குப் போக வேண்டாம். பாத யாத்திரை என்னுடைய பெரம்பலூர் தொகுதிக்கு வாருங்கள். கிராமங்கள் எப்படி இருக்கின்றன. என்று பாருங்கள் மகாத்மா காந்தியை எம்.ஜி.ஆர். முகத்திலே பார்ப்பதாகச் சொல்லப்படுகிற கிராம மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாடு முழுவதும் சுற்றிப் பாருங்கள்.

வீதியைக் காவல் செய்கிற விளக்கில்லாத கம்பங்கள், பழுது பட்ட பாதைகள், சேறும் சகதியுமாகக் காட்சிதரும் வீதிகள், குறுக்குச் சந்துகள், பழுதாகிப் போன பம்பு செட்டுகள், பழுது பார்க்கப்படாமல் பல மாதங்களாக உள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் பயன் படுத்தப்படாமல் இருக்கின்ற காட்சிகள், ரிப்பேராகி விட்டால், செப்பனிடக் கூடப் போட முடியாத ஒரு சூழ்நிலை, பஞ்சாயத்துக்களைக் கலைத்து விட்டதால் தங்களுடைய குறைகளை யாரிடம் சொல்வது என்று கூட தெரியாது கிராமத்து மக்கள் கவலைப்படுகிற காட்சி,

பஞ்சாயத்துக்களிலே இருக்கின்ற பம்பு செட்டுகள் வேறு பல கருவிகளை பழுது செய்யாமலேயே கிராம சேவகர்களும், ஆணையர்களும், பணத்தைப் பில் போட்டு பங்கிட்டு எடுத்துக் கொள்கிற ஓர் அவலம், ஊராட்சி ஒன்றியங்கள் இல்லாத காரணத்தினால் கிராமங்கள் இன்றைக்கு மயானம் போல் காட்சி தருகின்றன அந்த அளவுக்குக் கிராமங்கள் இன்று வளர்ச்சியின்றி தேக்கம் அடைந்திருக்கின்றன. அதோடு கிராம அதிகாரிகளை நீங்கள் ஒழித்து விட்டீர்கள். கிராம அதிகாரிகள் இல்லாத காரணத்தினால்—நான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்—இந்தத் தமிழக ஆட்சியில் ஜனன மரண கணக்கே கூட சரியாக வைக்கப் படவில்லை. நான் சொல்கிறேன் என்பதற்காக நீங்கள் கண்டிக்க வேண்டாம், எதிர்க்க வேண்டாம். மனதிலே கையை வைத்துச் சொல்ல வேண்டும், கிராம அதிகாரிகள் ஒழிக்கப்பட்ட பிறகு தமிழ் நாட்டிலே எத்தனை பேர்கள் பிறந்தார்கள், எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற கணக்கு உண்டா ? நிச்சயமாக இல்லை. இல்லை என்பது தாலுகாவிலே மாவட்டத்திலே செகரடேரியட்டிலே உள்ள அனைவருக்கும் தெரியும். இன்றைக்கு யார் அந்தப் பொறுப்பைச் செய்கிறார்கள். 2 சி பட்டா மரம் மாயமாய் மறைந்து போன காட்சியை இன்றைக்கு கிராமங்களிலே பார்க்கலாம். ஒரு பட்டா மரத்தைக் கூட காண முடியாது. சமூக விரோதிகள், 2 சி பட்டா மரங்களாக கரியாக்கி விட்டார்கள், விவசாயிகள் கன்ட மனுக்களுக்காக மாணவர்கள் தங்களுடைய உதவித்தொகை விண்ணப்பங்களுக்கு கையெழுத்து வாங்குவதற்காக சிட்டா அடங்கல் வாங்குவதற்காக அடிப்படை பணியாளர்கள் கணக்குப் பிள்ளை, முன்சீப் இல்லாத காரணத்தினால் அங்கே இருக்கின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமோ, டெபுடி தாசில்தாரிடமோ, தாசில்தாரிடமோ குறைந்தது 25 ரூபாய் முதல் கூடினால் 50 ரூபாய் வரை தந்தால் தான் கையெழுத்துப் பெறக் கூடிய ஒரு அவலம் இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. இது நாள் தோறும் தமிழகத்து ஆபீஸ்களிலே நடை பெறுகிற கொடுமை. இதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடிக்கிணறு தோண்டுவதற்கு நீங்கள் பணம் கொடுத்தீர்கள். நான் வரவேற்கிறேன். ஆனால் 1,500 ரூபாய் முதல் தவணையை பெறுவதற்காக 1,000 ரூபாய் லஞ்சமாக அழுது விட்டு தானைப்பெற முடியாது. கண்ணீர் விட்டு கதறுகின்ற காட்சியை தமிழ்நாட்டு வீதிகளிலே பார்க்கலாம். 3 ஆண்டுகளாக பம்பு செட்டுகளை வாங்கி வைத்தும், மின் இணைப்புக் கிடைக்காத காரணத்தால் திருச்சி மின் கட்டப் பகுதியிலே 3000-க்கும் அதிகமான பம்ப் செட்டுகள் வீணே கிடக்கின்றன-திண்ணைகளில் புரட்சித் தலைவர் ஆட்சியிலே ஒருக்கால் திண்ணையிலே பம்பு செட்டுகள் தண்ணீர் இறைக்கும் போல் இருக்கிறது, ஆண்டுகளாக





தூங்குகின்றன திண்ணைகளிலே. இன்றைக்கு கம்பி இல்லை கம்பம் இல்லை, ஏன் என்று கேட்டால் கம்பி இல்லை சீனாவுக்கு எழுதியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள், மின் வாரியத்தினர். சீனாவிலிருந்து கரண்டே கூட கொண்டு வந்தாலும் கொண்டு வருவீர்கள் நீங்கள். என்று கம்பி வாங்குவது? என்றுகம்பம் செய்ய இரும்பு உங்களுக்கு கிடைப்பது? இன்னும் ஐந்தாண்டுகள் ஆனாலும் கூட தமிழ்நாட்டில் உள்ள பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு உங்களால் விவசாயிகளுக்குத் தர முடியாது. ஆனால் வாக்குறுதிகளை வாரி வழங்குவதில் மட்டும் முன்னணியில் இருந்தீர்கள். 30 நாட்களில், 15 நாட்களில் பம்பு செட்டுகளுக்கான சர்வீஸ் கொடுக்கப் படும், பம்பு செட்டுகளை வாங்குங்கள் என்று அறிக்கை தந்திருக்கிறீர்கள் ; டாம் டாம் போட்டீர்கள் ; ஒவ்வொரு விவசாயிக்கும் சுற்றறிக்கை, நோட்டீஸ் அனுப்பியிருக்கிறீர்கள். இப்படி அனுப்புவதில் குறி இருந்ததே தவிர, அதை எட்டுவதற்கான குறி இருந்தது இல்லை.

இவ்வளவையும் தெரிந்து கொண்டிருக்கின்றவர்கள், மகாத்மா காந்தியின் உருவத்தை எம்.ஜி.ஆர். முகத்தில் பார்க்கிறார்கள் என்று சொல்வதைப் பார்த்தால், உள்ளபடியே அண்ணா அவர்கள் ஒரு முறை பார்லிமெண்டிலே சொன்னதைப்போல It is rather pity ரொம்பவும் பரிதாபப் படக்கூடிய, விநோதமான ஒரு காரியம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் கால்நடைப் பயணம் போவதாக அறிவித்தார்—நீதி கேட்டு! அதைப் பற்றிக் கூட நாவலர் அவர்கள் திருச்சியிலே சொல்லியிருக்கிறார்கள். கருணாநிதிக்கு வேறு வேலை இல்லை ; ஆகவே அவர் கால்நடைப் பயணம் போகிறார் ; போகட்டுமே, காலுக்கு வலிவு கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதை ஏற்றுக் கொண்டு, அடுத்த நாள் பேப்பரைப் பார்த்தால் நம்முடைய முதல்வரவர்களும் கால் நடைப் பயணம் போகிறார் என்று செய்தி வருகிறது. நாவலர் அவர்களுடைய கருத்து 24 மணி நேரத்திற்குக் கூட அந்தக் கட்சியிலே மதிக்கப்படவில்லை. நான் நாவலர் அவர்களோடு நன்கு பழகியவன் ; இன்றைக்கும் அவர்கள் மீது எனக்கு மதிப்பு உண்டு. எனவே, நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். உங்களுடைய வாதத்திற்கு நம்முடைய முதல்வரவர்கள், உங்களுடைய தலைவர் மதிப்பு தரவில்லையே என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நாவலர் அவர்களின் கிண்டல் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் பொருந்தும், ஏனென்றால் அவர்களுடைய காலுக்கும் வலிவு கூடும். அரண்மனையான் கத்தி இரு புறமும் பாயும் என்பார்களே, அதைப் போல இரண்டு

பக்கத்திலும் அது அப்ளை ஆயிற்து. நாவலர் பெரியவர், அந்த வார்த்தைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அண்ணா பெயரால் ஆட்சி நடத்துகிறீர்கள். ஜனநாயக ஆட்சியில் திறமையற்றவர்கள் கூட செங்கோல் ஏந்தலாம், நம்முடைய மாண்புமிகு தமிழக அரசு அமைந்திருப்பதைப் போல ஆனால் பொறுப்புணர்ச்சியும், செயல் ஆற்றும் ஆர்வமும் இருந்தால் திறமையுள்ளவர்கள் ஆகலாம். என்று 28—8—1955 இல் அண்ணா அவர்கள் திராவிட நாடு பத்திரிகையில் தலையங்கம்* எழுதியிருக்கிறார்கள். அந்த இலக்கணத்தின்படி , ஆளுடைமை, ஆட்சிப் பொறுப்பு, ஆட்சித் திறன் ஆகியவைகள் இருக்கிறதா உங்களுக்கு என்று பார்க்கும் பொழுது நான் மற்ற அமைச்சர்களைப்பற்றிப் பேச விரும்பவில்லை ; மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு இருக்கிறதா என்று பொது வாழ்க்கையிலே ஆராயக் கூடியவன் என்ற முறையிலேயும், நான் ஒரு வரலாற்று மாணவன் என்ற முறையிலேயும் பார்க்க வேண்டியவனாக இருக்கிறேன்.

அரசாங்க ஊழியர்களை நன்றாக உங்களால் வைத்துக் கொள்ள முடிகிறதா? இன்றைக்குப் போர்க்கால வேகத்தில் காரியங்கள்நடைபெறுகின்றன என்று கிளிப் பிள்ளையைப் போல் சொல்கிறார்கள். எப்படி வரும் போர்க்கால வேகம் ?

போலீசில் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள் ; போலீஸ் அதிகாரிகள் இலஞ்சம் வாங்குகிறார்கள் ; சாராயம் காய்ச்சுபவர்களுக்குப் போலீஸ் அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் ; போலீஸ் நினைத்தால் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும். இது போலீசைப் பற்றி முதலமைச்சர் கொடுக்கின்ற ஸ்டேட்மெண்ட் — சர்டிபிகேட்.

ஆஸ்பத்திரியிலுள்ள மருந்துகளை டாக்டர்கள் விற்று விடுகிறார்கள் ; அரசு மருத்துவமனைகளில் 90 சதவீதம் மருந்துகள் திருட்டுப் போகின்றன ; பத்து சதவீதம் கூட நோயாளிகளுக்குக் கிடைக்கிறதா என்பது சந்தேகம். மீதி 90 சதவீதம் திருட்டுத்தனமாக வெளியே விற்கப்படுகிறது. இதை விட ஒரு கூடுதல் சர்டிபிகேட்.

* * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் குறிப்புகள், குறுக்கீடுகள் அனைத்தையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



திரு. ஜே. எஸ். இராசு : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, எல்லா அமைச்சர்களும் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். தங்களது ஆட்சியைப் பற்றி. கொஞ்சநஞ்சசர்டிபிகேட் அல்ல. நான் அப்படி உண்மைக்கு மாறான கருத்துக்களைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அத்துடன் மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். செக்கரட்டேரியட்டில் தலைமைச் செயலகத்தில் ஒரு உத்தரவு போட்டால், அதை நிறைவேற்றக்கூடிய அதிகாரிகளுக்கு 6 மாதம் கழித்துத்தான் அவை செல்கின்றன' என்று சொல்லியிருக்கிறார். அது கூட இல்லையென்று ஆகிவிடுமா· அல்லவே. எனக்குத் தெரியாமலே தலைமைச் செயலகத்தில் பைல்கள் திருத்தப்படுகின்றன என்று மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். சொல்லியிருக்கிறார். இல்லையென்று சொல்வீர்களா. அதோடு , மட்டுமல்ல, இதை பார்த்து· மனம் புழுங்கிய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு பக்தவச்சலம் ஒன்றை சொல்லியிருக்கிறார், நானும் முதலமைச்சராக இருந்திருக்கிறேன். இப்படி அதிகாரிகளைப் பொது மக்கள் மத்தியிலே காட்டிக் கொடுத்து, வீதிக்கு இழுத்து, தங்களுடைய சகாக்களையும், அதிகாரிகளையும் இவ்வளவு மோசமாகப் பேசுகின்ற ஒரு முதலமைச்சரை நான் பார்த்ததில்லை. அது உண்மையாக இருக்குமானால், அதை சீர் செய்து கொள்ள வேண்டுமே தவிர, இப்படி பொது மக்கள் மதநியிலே அதிகாரிகளைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று மாண்புமிகு பக்தவச்சலம் பேசி இருக்கிறார். அது வரவேற்க வேண்டிய கருத்து. இன்றைக்குப் புயல் வேகத்திலே, போர்க்கால · நடவடிக்கை போல், தமிழ்நாடு அரசாங்கத்தில் காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொல்கிறீர்களே, அதிகாரிகளைப் பகைத்துக் கொண்டு, அதிகாரிகளை மோசமாகப் பேசிக் கொண்டு இருந்தால், எப்படி அவர்கள் புயல் வேகத்தில் வேலை செய்வார்கள்· போர்க்கால நடவடிக்கைகள் எடுப்பார்கள்· வறட்சிப் பணிகள் என்றால் போர்க்கால நடவடிக்கைகள் என்கிறீர்கள். நீங்கள் லேட்டாக ஆரம்பித்தீர்கள் 3, 4 மாதங்களுக்குள் ரூ. 50 கோடி செலவு செய்தாக வேண்டும். ஏன் அப்படி அந்தப் பணத்தைச் சும்மா வைத்திருக்கிறாய் · ஏதோ ஒன்று, மேலே இருந்து, உத்தரவு போகிறது. 'டார்கெட்டை அச்சீவ்' செய், 'குவிக்', ஏதோ ஒன்று, பில்லைப் போடு, செக்கை வெட்டு, முடிந்து போயிற்று. போர்க்கால நடவடிக்கைகள் என்றால், நல்ல டைம் கொடுத்து செய்தீர்களா · நான், திருச்சி மாவட்ட மன்றக் கூட்டத்திலே, பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜோடு சேர்ந்ய அக்லட' கருப்பையா அவர்களும் இருந்தார்கள். கடுலேரித்திதுன்வு சொன்னேன். ஊழல் ஏற்படும், தடண்ண செய்து

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூருக்கு அருகில் உள்ள குலசேகரப் பட்டிணம் கடற்கரையோரத்தில், கடலிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதாவது அரசு பரிசிலனை செய்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள விஞ்ஞானத் தொழில் நுட்ப இலாகா ஐ.ஐ.டி. சென்னை; பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் உறுப்பினர் கள் அடங்கிய ஒரு குழு ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஒரு மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஓஷன் எனர்ஜி திட்டம். ஒன்று லட்சத் தீவிலும், மற்றொன்று குலசேகர பட்டணத்திலும் ஏற்பாடு செய்யலாம் என்று அதற்கான விவரங்களைச் சேகரித்து வருகிறார்கள்.

## மேல்மணி முத்தாறு நீர்மின் திட்டம்

*வினா எண். 22—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பலகோடி ரூபாய் செலவில் மேல்மணிமுத்தாறு நீர் மின் திட்டம் செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்?

(உ) எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்-

(ஆ) மத்திய மின் அதிகாரக் குழுவின் அறிவுரையின் பேரில் இத்திட்டத்திற்கான திருத்திய திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(இ) ஆய்வுப்பணிகள் முடிந்த பிறகு இத்திட்டத்தின் மதிப்பீடு தெரியவரும்.

(ஈ) 45 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும்.

(உ) ஆய்வுப்பணிகள் முடிந்து, மத்திய அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் வேலை துவங்கும்,





திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மேல் மணிமுத்தாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அந்தப் பக்கத்தில் சிங்கவால் குரங்குகள் இருப்பதனால் தடை ஏதோ இருப்பதாக வன இலாகா தடை செய்திருந்ததே, தற்போது அதற்கு வன இலாகா சம்மதத்தை அளித்திருக்கிறதா? இந்தத் திட்டத்தை விரைவாக முடிப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க எண்ணி உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வனத் துறையினர் இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளைச் செய்வதற்குத் தங்கள் ஒப்புதலை அளித்துள்ளனர். அதன் பேரில் எஞ்சிய ஆய்வுப் பணிகளை இப்பொழுது மின்சார வாரியம் மேற்கொண்டு வருகிறது.

## தமிழகத்திற்குக் கேரள அரசால் வழங்கப்படும் மின்சாரம்

*வினா எண். 23—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்குக் கேரள அரசு தற்பொழுது கொடுக்கும் மின்சாரத்தின் அளவை அதிகரித்துக் கொடுக்கும் வாய்ப்பு உள்ளதா?

(ஆ) தற்பொழுது நாளொன்றுக்கு எவ்வளவு யூனிட் மின்சாரம் கேரள அரசு தமிழக அரசுக்குக் கொடுக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தற்பொழுது கேரள மின்வாரியம் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நாளொன்றுக்குச் சராசரியாக 3 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்கி வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து நாம் பெறும் மின்சாரத்தின் விலையை அதிகரிக்க வேண்டும் என்று கேரளத்தில் அமைந்துள்ள புதிய அரசு கேட்டுள்ளதா? அப்படியானால், கேரள அரசிலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையும் கர்நாடகத்திலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையும் எந்த வகையில் வித்தியாசப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

[திரு. ஜே. இராசு] [1982 பிப்ரவரி 4

குறைந்த கால அவகாசத்திலாவது டெண்டர் கொடுங்கள், என்று கெஞ்சினோமே, தர மறுத்து விட்டார்கள். எல்லாம் ஆஃபர்' தான். ஆனால், முதலமைச்சர் எதிர்க்கட்சியில் இருந்தபோது, என்ன சொன்னார் 'ஆஃபர்' ஓர்க் கிடையாது. காண்ட்ராக்ட் மூலமாகத்தான் விடுவேன். டெண்டர் மூலமாகத் தான் விடுவேன். யாருககும் ஆஃபர் ஓர்க் தர முடியாது என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார். பழைய பத்திரிகைகளைப் படித்துப் பாருங்கள், மறந்து விடாதீர்கள். ஆனால் இப்பொழுது நடைபெற்றது என்ன - பெரும்பாலான வேலைகள், கோடிக்ககணக்கான ரூபாய் வேலைகள், ஆஃபர் ஓர்க்காகத் தரப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12.30]

ஊழலே கிடையாது, எங்கள் ஆட்சியிலே ஊழல் என்று அவர்கள் கேட்டார்கள். நான் ஒரு ஊழலைச் சொல்கிறேன், கற்பனையானது அல்ல. சொல்லப்படுகிறது, நம்பப்படுகிறது, பேசப்படுகிறது, தெரியப்படுகிறது, அறியப்படுகிறது என்று நீங்கள் சொன்னதுபோல் அல்ல. வரகூர் தொகுதி, நண்பர் பெருமாள் இருக்கிற தொகுதி. எனக்கு ரொம்ப வேண்டியவர். அங்கு சிறுவயலூர் என்று ஒரு கிராமம். அங்கு ஆதிமூல ரெட்டியார் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு பரம்பரை குட்டை இருக்கிறது. அந்தக் குட்டையையும் சேர்த்து, வறட்சி நிவாரணத்திலே தூர் எடுப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ரூ. 3 ஆயிரத்துக்கு ஜெனரல் கன்கரபல் வாங்கி விட்டார்கள். அதை அறிந்த ஆதிமூல ரெட்டியாருடைய பேரன் பஞ்சாயத்து கமிஷனரிடம் சென்று, அது எங்கள் குட்டை, எங்கள் பாட்டன் சம்பாதித்தது. பரம்பரை குட்டை, அது எங்கள் கண்ட்ரோலில் இருக்கிறது. அதை நீங்கள் வெட்டுவதற்கு இருப்பதாக அறிகிறேன். வெட்டி விட்டு குட்டையையும் எங்களுடையது அல்ல என்று சொல்லிவிடுவீர்கள், ஆகவே, அதைச் சேர்க்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டார். அதைப் பார்த்த ஆணையாளர், அது உண்மைதான் என்று, அந்த வேலையை நீக்கி விட்டார். அதற்குப் பிறகு, சில மாதங்களுக்குப் பின் அதே குட்டையை வெட்டியதாக, ரூ. 5,522-க்கு வெட்டியதாக, வெட்டாத குட்டையை, எட்டிப்பார்க்காத குட்டையை, தொடாத குட்டையை பார்வையிலே படாத குட்டையை, வெட்டியதாக கணக்கில் சேர்த்து விட்டார்கள். சும்மா சொல்லக்கூடாது. ஏ. டி. எம். கே. அல்லது, அ.தி.மு.க. காண்ட்ராக்ட் எடுப்பவர்களுடைய வெட்டு இருக்கிறதே, அது சரியான வெட்டு. குட்டையை வெட்டுகிறார்களோ என்னவோ, செக்கை கரெக்ட்டாக வெட்டுவதற்காக, ரூ. 6,522-க்கு செக் போடத் தயாராகி விட்டார்கள். பில்



1982 பிப்ரவரி 4] [திரு. ஜே. எஸ். இராசு]

போட்டாகிவிட்டது. அந்தத் தருணத்திலே என்னைப் போன்றவர்கள் விழிப்பாக இருந்த காரணத்தால், எம். புக் உட்பட நான் தாண்டிக்கிறேன், பெயர் குறித்து. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னோம். அவர் நடவடிக்கை எடுத்தார். நடவடிக்கையினுடைய விளைவு என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால், நடவடிக்கை எடுத்தார். ஆனால், சொன்னால்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சொன்னது ஒன்று. ஆனால் வெளியே தெரியாதது நாட்டுக்குத் தெரியாதது பல. இப்படிப்பட்ட ஊழல் பல வறட்சி நிவாரணத்திலே நடைபெற்றிருக்கிறது. மன்னிக்க வேண்டுகிறேன், சொன்னால் உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். பல தகவல்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கூட வராமல் போய்விடும். வேலைக்கு அரிசித் திட்டத்தில் ஒரு வேலையைச் செய்திருக்கிறார்கள், 20 நாள் கழித்து தன்னிறைவு திட்டத்திலே அதே வேலை செய்திருக்கிறார்கள், பிறகு வறட்சி நிவாரணத்திலே அதே வேலை செய்திருக்கிறார்கள். ஓரே குளம், ஓரே குட்டை, 3 முறை வேலைசெய்ததாக (குறுக்கீடு) நான் சொல்வதற்கு நான் முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன், சான்றுகளைத் தரத் தயாராக இருக்கிறேன். முக்கியமான சான்றுகளைத் தருகிறேன். கவர்னர் உரையிலே எண்ணிக்கையை அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். வேலையின் தரம் என்ன? ஆனால் ரூ. 20,000-க்கு வேலை நடைபெற்றிருக்கிறதென்றால், அந்த மதிப்புள்ள வேலை நடைபெற்றிருக்கிறதென்று உங்களால் நிரூபிக்க முடியுமா - ரூ. 20,000 மதிப்புள்ள பணி செம்மையாக நடைபெற்றிருக்கிறதா?

அடுத்து, காவிரி நீர் பிரச்சினை பற்றி இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நான் சொல்லி விளக்க விரும்புகிறேன். ஏற்கனவே கலைஞர் ஆண்டபோது இன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். பொது மக்கள் மத்தியில் குற்றச்சாட்டுகளை வைத்தார். காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சினையில் தமிழக முதல்வர் கலைஞர் தமிழ்நாட்டு மக்களைக் காட்டிக் கொடுத்து விட்டார். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நல்ல முறையில் அவர் புதுப்பிக்க மறுத்து விட்டார். துரோகம் இழைத்து விட்டார் என்று சொன்னார். எனக்கு நினைவு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு எம்.ஜி.ஆர். அப்போது ஒரு முறை ரஷ்யாவிற்கோ, அமெரிக்காவிற்கோ போய்த் திரும்பினார். உடனே புறப்பட்டு பெங்களூர் சென்றார். பத்திரிகைகள் எல்லாம் எழுதின. பயணக் களைப் பற்றிக் கூட கவலைப்படாத எம்.ஜி.ஆர். உடனே போனார் பெங்களூருக்கு. (மணியடிக்கப்பட்டது) (குறுக்கீடு).

நம்முடைய மாண்புமிகு எம்.ஜி.ஆர். பெங்களூருக்குச் சென்றார். அர்ஸைப் பார்த்தார். திரும்பி வந்து என்ன சொன்னார். நான் தண்ணீர் பற்றிப் பேசினேன். கருநாடக முதல்வர் அர்ஸ் சொல்கிறார். இந்தக் கருணாநிதி தமிழ்நாட்டுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும் என்று சரியாகக் கூட கேட்க

[திரு. ஜே. எஸ். இராசு] [1982 பிப்ரவரி 4

வில்லை என்று அர்ஸ் சொல்லுகிறார் என்று எம்.ஜி.ஆர். சொன்னார். இன்றைக்கு என்ன குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த அறிக்கையின் பிரகாரம் என்ன தெரிகிறது. அந்தக் காலத்திலே கலைஞர் அரசு தமிழ்நாட்டு மக்களின் உரிமைகள் பறிபோக விடக் கூடாது என்பதற்காகத்தான் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அன்றைக்கும் வலியுறுத்தினோம். ஆனால், இன்றைக்கு மத்தியிலே கூட்டிய கூட்டத்திலும் ஜனதா ஆட்சி நடத்திய கூட்டத்திலும் தமிழ்நாடு சார்பாக என்ன சொல்லப்பட்டு இருக்கிறது? கழக ஆட்சிக் காலத்தில் அன்றைய முதல்வர் கலைஞர் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தினாரோ—அதே அடிப்படையில் தானே அ.தி.மு.க. ஆட்சியும் வற்புறுத்தியது . . (மணியடிக்கப்பட்டது).

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்ல அனுமதி அளித்த தங்களுக்கு நன்றி கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டாண்டுகளில் நாட்டில் இயற்கையால் ஏற்பட்ட இடர்பாடுகளையும், ஒரு சில எதிர்க்கட்சிகளால் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட இடர்பாடுகளையும் கடந்து புரட்சித் தலைவருடைய தலைமையிலான இந்த அரசு பல்வேறு நல்ல காரியங்களை ஆற்றி வந்து இருக்கிறது. இந்த ஆட்சியை நிலை குலைய செய்ய வேண்டும் என்ற அவர்களுடைய எண்ணம் தோற்றுப் போய் இந்த ஆட்சி நிலையாக இருப்பதற்குக் காரணம் நல்ல அச்சாணியை மையமாகக் கொண்டு சக்கரம் சுழன்று வருவதைப் போல் நாட்டு மக்களுடைய நலனை மையமாக வைத்து புரட்சித் தலைவர் அரசு திட்டங்கள் தீட்டுவதும் அதைச் செயலாற்றி வருவதும் தான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும், இன்றைய தினம் பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆட்சிக்கு முட்டுக் கட்டைப் போடுவதும், மக்களை திசை திருப்புகின்ற காரியங்களிலே ஈடுபட்டு வருவதும் அவர்களுக்கும் நல்லதல்ல, மக்களுக்கும் நல்லதல்ல என்பதை இந்த நேரத்தில் தெளிவாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு அவர்களுடைய போக்கை மக்கள் அலட்சியப் படுத்தி அவர்களை மறந்து இருக்கிறார்கள் என்று வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாமே தவிர இந்தச் செயல்கள் நீடிக்குமானால் நிச்சயமாக மக்கள் அவர்களை மன்னிக்க மாட்டார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏதோ தாங்கள் நாட்டிலே செயலாற்றி வருவதாகக் காட்டிக் கொள்வதற்காக அல்லது விளம்பரம் தேடிக் கொள்ள பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தங்களுடைய எதிர்ப்புக்களைத் தெரிவித்து



1982 பிப்ரவரி 4] [திரு. செ. செம்மலை]

வருகிறதே தவிர ஆளும் கட்சிக்கு ஆக்க பூர்வமான ஆலோசனைகளையோ அல்லது நல்ல யோசனைகளையோ செய்கிற அந்தக் கடமைகளில் இருந்து தவறியிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையை அவர்கள் புறக்கணித்த அந்தக் காரியத்தில் இருந்து அவர்கள் தங்களுடைய கடமையில் இருந்து தவறி இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களிடம் அறிஞர் அவர்கள் சொன்ன கடமை, கண்ணியம், இருக்கிறதோ என்னமோ இது போன்ற காரியங்களை ஆற்றுவதில் அவர்கள் ஒரே கட்டுப்பாடோடு இருக்கிறார்கள் என்பதை மட்டும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே இது போன்ற ஆரவார அரசியலுக்கும் இது போன்ற அர்த்தமற்ற காரியங்களுக்கும் இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற மற்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் துணை போக மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு இராசு அவர்கள் சொல்லும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பிரபாகரன் அவர்கள் சொன்ன கருத்தை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மகாத்மா அவர்களோடு ஒப்பிட்டதாகச் சொல்லி, இங்கே ஒரு கருத்தை எடுத்து வைத்தார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இங்கே ஒருவரைப் பார்த்து நீங்கள் எருமையை விடப் பொறுமையானவர் என்று சொல்கிறபோது அப்படி சொல்லியிருக்கிறீர்களே அவனுக்கு எங்கே வால், எங்கே கொம்பு என்று கேட்பதைப்போல் அவருடைய பேச்சு இருந்தது. நான் அவருக்கு பதிலாக வைக்க விரும்புவது உங்களுடைய தலைவரை அன்றைக்கு முஜிபுர் ரகுமானோடு ஒப்பிட்டுப் பார்த்தீர்களே அதுபோலத்தான் இன்றைக்குப் புரட்சித் தலைவரை, அவருடைய பெயரை செயல்களை மகாத்மாவோடு அவருடைய கொள்கை அவர்களுடைய நினைவுகளோடு நாங்கள் ஒப்பிட்டுப் பேசுவது எங்களுடைய கடமை என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 12-30.)

இன்றைக்கு இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிற ஆளுநர் உரை சொல்லப் போனால், 'ஒரு ப்ளு பிரின்டைப் போன்று' இருக்கிறது. 'ப்ளு பிரின்டைப்' பார்க்கிறபோது ஏதோ பேப்பரில் கோடுகள் இருப்பது போல் தெரிந்தாலும், அதன் அடிப்படையில் கட்டிடங்களை எழுப்புகின்றபோது தான் அதனுடைய நோக்கம் வெளிப்படும். அதைப் போலத்தான் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டு இருக்கிற திட்டங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு, இன்றைக்கு இந்த அரசாங்கம் திட்டங்களை தீட்டி நல்ல முறையில் செயலாற்றி வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திட்டங்களை அரசு தீட்டினால் மட்டும் போதாது. அந்தத் திட்டங்களின் பலன்கள் ஏழைகளின் குடிசைகளுக்குள் போய்ச் சேர வேண்டும் என்பது இந்த அரசின் திட்டமாகும். அந்தக் கருத்தை மையமாகக் கொண்டு தான், காந்தியடிகள் இராம ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று அன்றைய தினம் சொன்னார். மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று சொன்னார். எனவே அந்த உத்தமர் கனவை புரட்சித் தலைவரின் ஆட்சி நனவாக்கிக் கொண்டு வருகிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, தன்னிறைவுத்திட்டத்தின் மூலமாக இந்த ஆட்சி ஏழை எளிய மக்களுக்குச் செய்து வருகிற பணி மிகவும் போற்றத்தக்கதாகும். ஏழை எளிய மக்கள் ஒவ்வொருவருக்கும் பயன்தரத்தக்க அளவிலே இன்றைக்கு அரசாங்கம் வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டம் நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில் இது வரையில் 4 லட்சத்து 11 ஆயிரம் குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியில் 4 லட்சத்து 11 ஆயிரம் ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்து இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல் போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொள்வோமானால், கடந்த 1½ ஆண்டுக் காலத்தில் 1,200 பேருந்துகள் துவங்கப்பட்டுள்ளன. அதைப் பயன்படுத்துகின்ற கிராம மக்கள் 1,200 கிராமங்களில் உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதனால் பயன்படும் மக்கள் தொகை கிட்டத்தட்ட 15 இலட்சம் பேர். அதைப் போலவே பல்வேறு திட்டங்களை என்னாலே சொல்ல முடியும். அதைப்போலவே, ஒவ்வொரு குடியிருப்புக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி போன்ற நல்ல திட்டங்களை இந்த அரசு செய்து வருகிறது. இதன் பயனாக அதனுடைய பலன்கள் ஒவ்வொரு குடிமக்களுக்கும் சென்றடைகிறது என்பதை மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே, கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தன்னிறைவுத் திட்டத்தால் மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மையைக் கருத்தில் கொண்டு, பேரூராட்சிகளும், நகராட்சிகளும் தன்னிறைவு அடையும் வகையில் "தன்னிறைவுத் திட்டம்" செயல்படுத்தப்படும் என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் இன்றைக்கு குறிப்பிட்ட பஞ்சயத்து யூனியன்களில் இந்தத்





திட்டம் செயல்படுத்தப்படுவதுபோல் இல்லாமல், ஏக காலத்தில் எல்லா பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரித்து, ஆண்டுக்கு சில பணிகள் என்று எடுத்துக் கொண்டு செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மையைப் பொறுத்த மட்டில் உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் நல்ல முறையில் பயன்படுகின்ற முறையில் 102 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் உணவுத் தானியப் பகிர்ந்தீட்டைப் பொறுத்த வரையில் இந்த அரசு கடைப்பிடிக்கிற கொள்கை பாராட்டத் தக்கதாகும். சொல்வார்களே, "மாவுக்குத் தகுந்த பணியாரம்" என்று, அதைப்போல இன்றைக்கு மத்திய அரசு வழங்குகிற உணவுப் பொருட்களின் அடிப்படையில் இன்றைக்கு மிகவும் சிரான முறையில் உணவுத் தானிய விநியோகம் நடைபெறுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ மத்திய அரசு நிறைய கொடுப்பது போலவும் அதை எடுத்துக் கொண்டு வந்து இங்கே விநியோகம் செய்யவில்லை என்று மத்திய அமைச்சர் ஒருவர் சொன்னதாகவும் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் இதுவரை மறுப்பு தெரிவிக்கவில்லை என்றும் சொன்னார்கள். உள்ளபடியே அவர் பத்திரிகைகளைப் படித்தாரா என்று தெரியவில்லை. மாண்புமிகு நாவலர் அவர்கள் பத்திரிகை பேட்டியிலே தெளிவாகச்சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு ஒப்புக்கொண்ட அளவைவிட குறைவாகத் தருகிறார்கள்; அப்படிக் கொடுக்கப்பட்ட அரிசியையும் எடுத்து வருவதற்கு இரயில் வாகன் கொடுப்பதில்லை; முறைப்படி அவர்கள் கொடுத்தால் இன்னும் நல்ல முறையில் விநியோகம் செய்ய முடியும் என்று பல முறை பேட்டியில் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை மத்திய அரசிடம் வற்புறுத்தி மேலும் உணவுத் தானியங்களைப் பெற்று, நல்ல முறையில் விநியோகத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு ஏழை எளிய மக்களிடம் குடும்பக்கார்டு இல்லை. அத்தியாவசியப் பொருட்களை அவர்கள் எல்லாம் பெறுகின்ற வகையில் அவர்களுக்கும் எவ்வளவு விரைவில் குடும்பக் கார்டு கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுத்து, உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இப்போது உணவுப் பங்கீடுக் கடைகளில் கூட்டம் அதிகமாக இருப்பதால் பல சிரமங்கள் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்ற அளவில் கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதிய அனல் மின் திட்டங்களைத் தொடங்கவும், தொடங்கப்பட்டுள்ள திட்டங்களை விரிவாக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மின்சார வாரியம் ஈடுபட்டிருப்பது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் மின்சார உற்பத்தியில் உபரி மாநிலமாக போய்க் கொண்டிருக்கிற ஒரு நிலையை மேதகு ஆளுநர் உரையில் கூறியிருக்கிறார்கள். ஆனால், கடந்த நான்கு நாட்களுக்கு முன்னால் மத்திய அரசைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் மின்சார உற்பத்தி மற்றும் விநியோகத்தை மைய அமைப்பில் கொண்டுவருவதாகச் சொல்லியிருக்கிறார். நேற்றைக்கு முன்தினம் என்னுடைய கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லும் போது மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைப் பத்திரிகையில் படித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையாக இருந்தால், நாம் ஏழை எளிய மக்களுக்கு மின்சார விநியோகத்தில் அளிக்கும் சலுகைகள் பாதிக்கப்படும். ஆகவே, நம்முடைய அரசின் நிலையைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, அப்படிப்பட்ட அமைப்பைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனத்தைப் பொறுத்த மட்டில் புரட்சித் தலைவரவர்கள் பாசனத்திற்கு முன்னுரிமை கொடுத்து, செயல் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள்.

" வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும் "

என்று ஔவையார் சொன்னதைப் போல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பாசனத் திட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்றுகின்ற அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்தத் திட்டங்களின் அடிப்படையில் என்னுடைய தொகுதியில் ஓமலூரில் பூலா ஏரி என்று ஒரு ஏரி இருக்கிறது; அதில் உபரியாக உள்ள நீரை மற்ற ஏரிகளுக்குத் திருப்பிவிடுகின்ற செயல்முறை அரசின் பரிசீலனையில் உள்ளது; இந்த ஆண்டே அத்திட்டத்தை வேகமாக முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல தொப்பையாற்றில் உபரி நீர் வீணாகி காவிரியில் போய் கலக்கின்ற அந்தத் நீரை திருப்பி விட்டால் பக்கத்தில் உள்ள 10, 12 ஏரிகள் நிரம்பி அந்தக் கிராமங்கள் பயன்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





தொழில் துறையைப் பொறுத்தமட்டில் இந்த மாநிலம் தொழில மயமாக பல சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் என்னுடைய தொகுதியில் மேச்சேரி தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு அந்தப் பகுதியில் தொழில் வளம் ஏற்பட மேச்சேரி மையமாக இருக்கிற காரணத்தினால் அந்த இடத்தில் பாலிடெக்னிக் ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் தாரமங்கலம், மேச்சேரி போன்ற பகுதிகளில் கிடைக்கின்ற " சோடியம் சிலிக்கேட் ", " கால்ஷியம் " " சோப்ஸ்டோன் " போன்ற மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, தொழில்களைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பல தொழில்களை அந்தப் பகுதிகளில் ஆரம்பிப்பதன் மூலம் அங்குள்ள ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து, அந்த மக்கள் நல்வாழ்வு வாழவும் வழி ஏற்படும் என்ற வகையிலே அங்கே நிறைய தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று என் தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியாகிய தாரமங்கலத்திற்கு, அருகே ஒரு துணை நூற்பாலை வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையினை இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.40]

அடுத்து குறிப்பாக, ஆதி திராவிட மக்களுக்கென நல்ல முறையிலே திட்டங்கள் தீட்டப்பட்டு இந்த அரசு செயலாற்றி வருவதை யாரும் மறந்துவிட முடியாது. அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு 114.04 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அதனால் 1.67 இலட்சம் ஆதிதிராவிட மக்கள் பலன் அடைந்ததாகவும் குறிப்பு சொல்லப்பட்டிருப்பது உள்ளபடியே பாராட்டுவதற்குரியது. ஆதி திராவிட மக்களுக்காக இந்த அரசு காட்டி வருகின்ற அக்கறையைக் காட்டுகிறது. மற்றும் இதுபோன்ற நல்ல பல திட்டங்களைப் பற்றியும் கூறியுள்ள ஆளுநர் உரையை நான் வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ரா. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன்.

[திரு ரா. பெரியசாமி] [1982 பிப்ரவரி 4

சுப்பிரமணிய பாரதியாருக்கு விழா எடுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினைப் பாராட்ட வேண்டும். இந்த நாட்டிற்காக இந்த தேசத்திற்காக தமிழ் மண்ணுக்காகப் பாடுபட்ட, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களில் ஒருவா சுப்பிரமணிய பாரதியார் அவர்கள். அவரை எல்லா கட்சியினரும் போற்றவேண்டும். இந்த நாடே போற்றவேண்டும் அண்ணல் காந்தி, நேரு, சுபாஷ் சந்திரபோஸ், வ.உ.சி. திருப்பூர் குமரன் இவர்களை எல்லாம் தட்டி எழுப்பிய பெருமை சுப்பிரமணிய பாரதியாரைச் சேர்ந்தது. அவரை மறக்காமல் இந்த அரசு வருஷம் பூராவும் கொண்டாடவேண்டும் என்று முடிவு செய்திருப்பதைப் பாராட்டவேண்டும். நானும் பாராட்டுகிறேன், எங்கள் கட்சியும் பாராட்டுகிறது.

அடுத்து வறட்சி நிவாரண வேலைகள் பல நடந்துகொண்டிருந்தன. அவை முடிந்துவிட்டது. மத்திய அரசு கொடுத்தது 49 கோடி ரூபாய். நீங்கள் செலவு செய்தது 55 கோடி ரூபாய். ஆனால் என்னுடைய தொட்டியம் தொகுதியிலே தாத்தய்யங்கார் பட்டி பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட கூழாஞ்சேரி பஞ்சாயத்திலே பாண்டவ நதி என்று ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தக் காலத்திலே பாண்டவர்கள் அந்தப் பக்கத்திலே வந்தார்களோ என்னவோ, அதற்குப் பெயர் பாண்டவநதி என்று இருக்கின்றது. அந்த நதி பற்றி 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாளன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் சபாநாயகரிடம் கொடுத்தேன். அதனை உடுக்குறியிட்ட வினாவாகப் போட்டு அனுப்பினார்கள். ஆனால் ஒரு வருஷம் ஆகிவிட்டது இதுவரை பதில் இல்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் கொடுத்தால் 7 நாள் அல்ல 15 நாட்களுக்குள் பதில் வரவேண்டும். உண்டா இல்லையா என்ற பதில் வரவேண்டும். ஆனால் இன்னும் பதில் வரவில்லை. இது என்ன நியாயம், இது அதிகாரிகளுடைய தவறா அல்லது அரசாங்கத்தினுடைய தவறா அல்லது சபாநாயகருடைய தவறா நிலைமை இப்படி இருந்தால் என்ன அர்த்தம் என்ன காரணம் மத்திய அரசிடம் 49 கோடி ரூபாய் வாங்கிக் கொண்டு என்னுடைய தொகுதியிலே மட்டும் செய்யவில்லையே. காங்கிரஸ்காரர் என்பதற்காகச் செய்யவில்லையா. அது சம்பந்தமாக எல்லோரிடத்திலும் மனு கொடுத்துவிட்டேன். முதலமைச்சர், சம்பந்தப்பட்ட அமைச்சர், மாவட்ட ஆட்சி தலைவர் ஆகிய எல்லோரிடத்திலும் எடுத்துக் கூறிவிட்டேன். வேலை நடக்கவில்லை.

தமிழ்நாட்டில் வேலைகள் எப்போது நடக்கும் என்றால் வறட்சி இருந்தால் நடக்கும் அல்லது வெள்ளப் பெருக்கெடுத்து ஓடினால் வேலை நடக்கும். இவற்றிலே நடக்கவில்லை என்றால் வேறு எப்போதுதான் நடக்கப்போகிறது அங்கே பாதிக்கப்பட்டவர்கள் 30 விவசாயக் குடும்பத்தினர். 30 கேணி பாதிக்கப்பட்டிருக்கின்றது. 300 ஏக்கர் நிலம் எல்லாம் பாழடைந்து



1982 பிப்ரவரி 4] [திரு. ரா. பெரியசாமி]

விட்டது அதனை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று பல மனுக்கள் கொடுத்தோம். இதுவரை செய்யவில்லை. ஆகவே உடனடியாக இந்த அரசு அல்லது சபாநாயகர் தலையிட்டு இந்த வேலையைச் செய்துக் கொடுத்தால் நல்லது. நாட்டுக்கும் நல்லது என்னுடைய தொகுதிக்கும் நல்லது. ஆகவே இந்த வேலையை உடனடியாகச் செய்ய ஆவன செய்து உத்தரவிடுமாறு பணிவோடும் அன்போடும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சாரத்தைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களில் 100—க்கு 75 பேர் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். எங்கள் கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். "பானை நிறைய சோறு இருந்தும் ஏனடா மகனே பட்டினி" என்று தாய் சொல்வார்களாம், அதுபோல இந்த முறை நல்ல மழை இருந்தும் மின்சாரம் இல்லை. தட்டுப்பாடு. இப்பொழுது கிணறு நிறைய தண்ணீர் இருக்கிறது. ஆறு, குளங்கள் நிறைய தண்ணீர் இருக்கிறது. ஆனாலும் மின்சாரத்தை ஒரு நாளைக்கு 2 மணி நேரம் கூட விவசாயத்திற்கு என்று பம்பு செட்டுகள் ஓட கொடுப்பதில்லை. ஆபிசில் கேட்டால் டி. ஈ. யைப் போய் கேளுங்கள் என்கிறார்கள். டி. ஈ.யைப் போய் கேட்டால் எஸ். ஈ.யைப் போய் கேளுங்கள் என்கிறார். அவரிடம் சென்றால் இதற்கு நான் என்ன செய்ய முடியும். டைம் பிக்ஸ் செய்கிற வேலை எல்லாம் அரசாங்கம் தான் செய்ய முடியும் என்று சொல்லி விடுகிறார். விவசாய நிலங்கள் காய்கிறது என்று நாட்டு மக்கள் கூட்டாகச் சேர்ந்து மின்சாரம் கேட்கிற நிலைமை. என்னுடைய தொகுதி நிலங்களை, விவசாய அமைச்சரானாலும் சரி, மின்சாரத் துறை அமைச்சரானாலும் சரி, யார் வந்தாலும் அழைத்துப்போய் காட்டுகிறேன். வறட்சியின் போது தண்ணீர் இல்லை என்று சொன்னால் சரி, மழை வந்து, தண்ணீர் கிடைத்த பிறகும் மின்சார தட்டுப்பாடு என்றால் இதற்கு அரசுதான் பொறுப்பு.

எங்கே போனாலும், விவசாயத்திற்குதான் முதலிடம் என்று பேசுகிறார்கள். எலக்‌ஷனின் போது விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்கிறார்கள். ஆனால் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்காமல் அந்த முதுகெலும்பையே முறித்து கட்டுப்போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம் ? எப்பொழுது மின்சாரம் கிடைக்கும் என்பது கூட விவசாயிக்குத் தெரியவில்லையே. ஒரு நாளைக்கு இத்தனை மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படும் என்று உறுதியாக சொல்லிவிட வேண்டாமா ? 4 மணி நேரம் தான் கொடுக்க முடியும் என்று சொன்னால் கூட, அந்த 4 மணி நேரத்திற்குள் விவசாயிகள் சென்று பம்பு செட்டு போட்டு தண்ணீரைப் பாய்ச்சி கொள்வார்களே. ஆகவே, இவைகளையெல்லாம் அரசாங்கம் மனதில் கொண்டு, இத்தனை மணி நேரம் மின்சாரம் இன்னின்ன இடத்

[திரு ரா. பெரியசாமி] [1982 பிப்ரவரி 4

தில் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று, அன்போடும் பிரியத்தோடும், நேசத்தோடும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப் பிரச்னை குடிநீர் வடிகால் வாரியம். நான் 1958-லேயிருந்து பஞ்சாயத்து போர்டு தலைவராக இருக்கிறேன். இப்போது உங்களால் போடப்பட்டு கலைக்கப்பட்ட போர்டிலும் நான் தலைவராக இருந்தேன். அன்றிலிருந்து இன்று வரை, எந்த இடத்தில் தண்ணீர் வரவில்லை என்றாலும், அது பஞ்சாயத்து யூனியன் போட்ட டேங்காக இருந்தால் புகார் செய்தால் உடனடியாக தண்ணீர் கிடைத்து விடும். அதுவும் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் தெரிவித்தால். 3 நாட்களுக்குள் குறிபபிட்ட டாங்க் ரிப்பேராக இருந்தால் ரிப்பேர் செய்யப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு விடும். ஆனால் இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தினால் போடப்பட்டிருக்கும் டாங்குகளில் தண்ணீர் வரவில்லை என்றால் என்ன செய்வது என்றே தெரியவில்லை. வாரியத்திடம் போய் கேட்டால், என்னென்னமோ சொல்கிறார்கள். பைப்புகள் எடுக்க கும்பகோணம் போக வேண்டும் என்கிறார்கள் இல்லையென்றால் கனெக்‌ஷன் கிடைக்க கோயம்பத்தூர் செல்லவேண்டும் என்று சொல்கிறார்கள். என்ன செய்தாலும் எங்கு சென்றாலும், குடிநீர் வடிகால் வாரியத்தினால் போடப்பெற்ற டாங்குகளிலிருந்து தண்ணீரே கிடைப்பதில்லை என்ன காரணம் என்றும் புரியவில்லை...... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, எந்த ஊரில் இப்படிப்பட்ட குறை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அரசு நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். இப்படி ஒட்டு மொத்தமாகச் சொன்னால் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் உறுப்பினர் அவர்கள் இடத்தை குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் நலம்.

திரு. ரா. பெரியசாமி : என்னுடைய தொட்டியம் தொகுதியிலேயே நிறைய இடங்களில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் வருவார்களேயானால் அழைத்துப்போய் அந்த டாங்குகளை காண்பிக்க தயாராக இருக்கிறேன். தொட்டியம் நகரப் பஞ்சாயத்திலேயே, பஞ்சாயத்துக்கள் இருந்தபோது போடப்பட்ட மோட்டார் டாங்குகள் எல்லாம் நல்ல முறையில் ஒடுகிறது. தண்ணீர் கிடைக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் போட்ட டாங்குகளிலிருந்து மோட்டார்களிலிருந்து 3 வருஷமாக தண்ணீர் இல்லை. மோட்டார் ஓடவில்லை.

அதேபோல திருவஞ்சநாதர் மலையிலே, காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் கொடுக்கிறோம் என்று சொல்லி டாங்க் ஒன்றைப் போட்டார்கள். 3 நாட்கள் தான் தண்ணீர் வந்தது அதற்குப் பிறகு வரவேயில்லை. அமைச்சர் வந்தால் அந்த



1982 பிப்ரவரி 4] [திரு. ரா. பெரியசாமி]

மக்களை நேரில் சந்தித்து விவரம் அறியலாம். குடிநீர் வாரியத்திடம் கேட்டால் கோயம்புத்தூருக்குப் போய் பம்பு வாங்க வேண்டும் என்று சொகிறார்கள். அதேபோல எம். களத்தூர் கோனப்பம்பட்டி, கா.பேட்டை யூனியன்கள்,அளகா பஞ்சாயத்து விலவம்பட்டு, போன்ற இடங்களில் உள்ள டாங்குகள் எல்லாம் குடிநீர் வடிகால் வாரியம் போட்ட டாங்குகள் எல்லாம் வேலை செய்வே இல்லை. இதுபோல் 40 ஊர்கள் கூட கொடுக்க முடியும் குடிநீர் வடிகால் வாரியம் டாங்குகள் சம்பந்தமாக, நேரம் இல்லாததால் 4 தான் கொடுத்திருக்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையிலே தொழில் வளர்ச்சி குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர் ஒருவர் கூட மிகப் பெருமையாகப் பேசினார். தொழில் வளர்ச்சியிலே 190 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலேயே காங்கிரஸ் காலத்தில் போடாத திட்டங்களா ? நெய்வேலியிலே நிலக்கரிச் சுரங்கம் துப்பாக்கித் தொழிற்சாலை, இன்னும் எத்தனையோ தொழிற்சாலைகள் கட்டி, எத்தனை ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் எத்தனை ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு காவிரி ஆற்றிலிருந்து நீர்ப்பாசனமும் செய்ய வழி செய்திருந்தார்கள். இவ்வளவும் 190 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலேயே செய்தார்கள்.

[பிற்பகல் 12-50]

அடுத்தாற் போல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூபாய் 600 கோடியில் நின்றது. இப்போது ஆயிரம் கோடியைத் தாண்டிவிட்டார்கள். இந்தத் தொழில் வளர்ச்சியால் எந்தச் விவசாயக் குடும்பங்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்கிறேன். எனக்கு முன்னால் பேசி உறுப்பினர்கள் சொன்னார்கள், ஔவை சொன்னதாக. வரப்பு உயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் என்று அவர்கள் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். விவசாயத் தொழிலை நீங்கள் முடக்கி விட்டீர்கள். என்ன பெரிய தொழில் வளர்ச்சியை சாதித்து விட்டீர்கள், ஒரு தொழிலும் இல்லை. சாராயத் தொழில் வேண்டுமானால் கொடுத்திருக்கலாம், வேறு ஒன்றுமில்லை. (மணியடிக்கப்பட்டது).

அடுத்து, பஞ்சாயத்து தேர்தல்கள். காங்கிரஸ்தான் சென்னை காபப்பரேஷன் தேர்தலை நடத்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கூட நடத்தவில்லை. நீங்களும் நடத்தவில்லை. இப்போது பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் காலி. அவர்கள் ஒன்று கலைத்தால் நாமும் ஒன்றைக் கலைக்கலாம் என்று பஞ்சாயத்துக்களையெல்லாம் கலைத்து

விட்டீர்கள். ஒரு பஞ்சாயத்திலாவது ஒரு விளக்காவது எரிகிறதா? இது அமைசசர்களுக்கு தெரியுமோ தெரியாதோ, சட்டமன்றத்தில் நாங்கள் சொல்வது உண்மையா இல்லையா என்று வந்து பார்ப்பதில்லை. எந்தப் பஞ்சாயத்திலாவது விளக்குகள் எரிகின்றனவா என்று வந்து பாருங்கள். மகாதேவி ஹரிஜனத் தெருவில் 27 சந்துகள் உள்ளன. 67 விளக்குகள் உள்ளன, அதில் மூன்றுதான் எரிகின்றன. மேட்டுப்பாளயத்திலும் இதே கதிதான். விளக்குகள் எரியாததைப் பற்றி ஏன் உறுப்பினர்கள் சொல்லமாட்டேன் என்கிறார்களோ, தெரியவில்லை. பயத்தாலோ என்னவோ தெரியவில்லை.

தொழுதூரில் ஒரு தொழுநோய் ஆஸ்பத்திரி இருந்தது. அதை காங்கிரஸ் காலத்தில் நேரு அவர்கள் வந்து திறந்தார்கள். இன்று அது சரியாகச் செயல்படாமல் இருக்கிறது. அதுபற்றி ஒரு கவன ஈர்ப்புத்தீர்மானம்கூடக் கொடுத்திருந்தேன். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அது நல்லமுறையில் செயல்பட்டால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்றாக இருக்கும்.

வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. அம்பிகாபதி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்.

திரு. இரா. கருப்பையா : வலது கம்யூனிஸ்ட் கட்சி என்று ஒரு கட்சி இல்லை.

திரு. ரா. பெரியசாமி : திரு. அம்பிகாபதி அவர்கள் சொன்னார்கள், அவர்களுக்கு எப்போதுமே யார் தோள் மேலாவது ஏறித்தான் பழக்கம். அக்கா வீட்டை விட்டு விட்டால் தங்கச்சி வீடு. தங்கச்சி வீட்டை விட்டுவிட்டால் அக்கா வீடு. இப்படி அக்கா வீடு அல்லது தங்கச்சி வீடு என்று போகிறதுதான் அவர்கள் பழக்கம். அவர்கள் திருமதி இந்திரா காந்தி அம்மையாரைப்பற்றிக் குறை கூறுகிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? வேலை நிறுத்தம் பிசுபிசுத்துப் போய்விட்டதால் அப்படிச் சொல்கிறார்கள். தொழிலாளர்கள் போராட்டத்தில் யார் முதுகும் கிடைக்கவில்லை. ஆகவே, பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களைக் குறை சொல்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் முகத்தைக் காட்டி வந்தீர்கள். புரட்சித் தலைவரை விட்டால் கருணாநிதி, கருணாநிதியை விட்டால் நாங்கள், இதுவே பழக்கம். (குறுக்கீடு) இளைஞர் காஙகிரஸ் 19-ம் தேதி அறிக்கை விட்டதால் பஸ் கொளுத்தப்பட்டது என்று சொல்கிறார்கள், இது என்ன நியாயம்? இளைஞர் காங்கிரஸ் என்ன செய்தார்கள்? தி.மு.க.-வை விட்டால் அ.தி.மு.க., அ.தி.மு.க.-வை விட்டால் தி.மு.க. இரண்டும் விட்டால் நாங்கள், இதுவே பிழைப்பு உங்களுக்கு.





திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் மறுக்கவில்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா தி.மு.க.-வை விட்டால் தி.மு.க., தி.மு.க.-வை விட்டால் அண்ணா தி.மு.க. என்று சொன்னார்கள். உண்மைதான். அதே போல், காங்கிரஸ் கட்சி திருப்பத்தூர் தேர்தலிலே இந்த இரண்டு கட்சிகளையும் அணுகி , வாக்குகளைக் கேட்டார்களே, அது எந்தக் கொள்கை என்று நான் கேட்கிறேன்? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மேற்கொண்டு இந்தப் பிரச்னையில் விவாதம் வேண்டாம். இத்துடன் விட்டு விடுங்கள். திரு. துரைராஜ்.

*திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றக்கூட்டு அவையில் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் அன்று தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும்முகத்தான், அதை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க நான் முன்வருகிறேன்.

கடந்த ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை உலகம் போற்றும் வகையில் சிறப்புற நடத்தி, தமிழ்நாட்டிற்கு ஒரு பெரிய பெருமையைத் தேடித் தந்த புரட்சித் தலைவர் ஆட்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று, கடந்த டிசம்பர்த் திங்களில் உலகம் போற்றும்அளவில் பாரதியார் நூற்றாண்டு விழாவினை எடுத்து நெல்லை மாவட்டத்தைக் குலுங்கவைத்த அந்த நிகழ்ச்சிக்காக புரட்சித் தலைவர் அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த ஆண்டு இந்தத் தமிழக வரலாறு காணாத அளவுக்கு, ஏற்பட்ட வறட்சியை மத்திய அரசின் துணைகொண்டு சமாளித்ததை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் மழை பெய்து செழிப்பு ஏற்பட்டாலும், தென் மாவட்டங்களில் சில பகுதிகளில், குறிப்பாக சங்கரன்கோவில் வட்டத்திலே இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததன் காரணமாக கடந்த ஆண்டைக் காட்டிலும் இன்றையதினம் வறட்சியால் கடுமையாகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை நாஙகள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்தபோது, அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தோம். அவர்களும், நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சங்கரன்கோவில் வட்டத்தைப் பற்றியும், நெல்லை மாவட்டத்தைப் பற்றியும் வறட்சி நிலைமை குறித்து

[திரு. பி. துரைராஜ்] [1982 பிப்ரவரி 4]

அறிக்கை அனுப்பும்படி சொன்னதற்கு ஏற்ப, அதற்குரிய ஆய்வு
அறிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்
கையை அரசாங்கமானது நல்ல முறையில், விரைவில் பரிசீலனை
செய்து, வறட்சி நிவாரணப் பணிகளை அந்த மாவட்டத்தில்
செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று அன்புடன் புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சியைக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன்கோவில் வட்டம் அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்
படுகின்ற வட்டமாகும். அதற்கு ஆற்றுப் பாசனம் கிடையாது.
ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு
நிரந்தரமாகப் பாசன வசதியைச் செய்துதர வேண்டும். குறிப்
பாக, கேரள மாநிலத்திலேயிருந்து கடலில் போய் வீணாக
விழக்கூடிய தண்ணீரை, இங்கே தமிழகத்திற்குக் கொண்டு வரு
வதற்கான முயற்சி செய்யப்படுவதாக ஆளுநர் உரையிலே
குறிப்பிட்டிருக்கிறார்கள். மீண்டும் தொடர்ந்து அந்த முயற்சி
யிலே ஈடுபட்டு, அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு நிரந்தர
பாசன வசதி கிடைக்க வழிவகை செய்யப்படும் என்று சொன்ன
தற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முயற்சி
யில் அரசாங்கம் தீவிரமாக இருந்து, அந்த ஆற்றுப் பாசனத்தைப்
பெற்று, சங்கரன்கோவில், கோவில்பட்டி ஆகிய பகுதிகளுக்கு
நிரந்தர நீர்ப்பாசன வசதி பெற்றுத் தர வேண்டுமென்று புரட்
சித் தலைவர் ஆட்சியைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நெல்லை மாவட்டத்தில் சிவகிரி வட்டாரத்தில் ஒரு
நீர்த்தேக்கம் இருக்கிறது. அங்கே உள்ள உள்ளாறு நீர்த்தேக்கத
திட்டம் அரசின் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு—அது ஒரு
சிறந்த திட்டம் என்று நிபுணர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு
—அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே,
அந்த உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்தைப் புரட்சித் தலைவர்
ஆட்சியிலே ஏற்று, அதைக் கட்டுவதற்கு விரைவிலே உத்திரவு
அனுப்ப வேண்டுமென்றும், அந்த நீர்த்தேக்கத் திட்டத்தை விரை
விலே கட்டி முடிக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே
விரும்பி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த
அணைக்கட்டுத் திட்டம் நிறைவேறுமானால் சங்கரன்கோயில்,
வாசுதேவநல்லூர், குருவிகுளம் ஆகிய பகுதிகள் நீர்ப்பாசன வசதி
பெற்று விவசாயிகளுடைய குறைகள் நீக்கப்படும் என்று தெரிவித்
துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-00.)

தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டிருக்
கிறது. பெண்களுக்காகத் தனியாகப் பெண்கள் பல்கலைக் கழகம்
ஏற்படுத்தப்பட இருக்கிறது. அதற்காகத் தமிழக அரசை மன
மாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழை ஆட்சி



1982 பிப்ரவரி 4] [திரு. பி. துரைராஜ்]

மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள தமிழக அரசு இன்றைக்குத்
தமிழகத்தில் உரிமை இயல் நீதிமன்றங்களில் விசாரணையும்
தீர்ப்பும் தமிழ் மொழியில் நடைபெறவேண்டுமென்று உத்தர
விட்டிருப்பதை வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் நலனில் அக்கறை செலுத்தி வருகிற
இந்த அரசு வருகிற நிதியாண்டில் 114 கோடி ரூபாய் செல
வழிக்கத் திட்டமிட்டிருப்பதற்காக நன்றி செலுத்தக்
கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை இந்த அரசு
விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்திலும்
இல்லாத அளவுக்கு, தாழ்த்தப்பட்ட மக்கள் ஊராட்சி ஒன்றியத்
தேர்தல்களில் போட்டியிட்டு பெருந்தலைவர்களாக, வர
வேண்டுமென்ற கோரிக்கை இதற்கு முன்னால் பல கட்சிகளாலும்
மறுக்கப்பட்டபோதிலும் இன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சி
இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சிகளிலும்
அவர்கள் தலைவர்களாக வரவேண்டுமென்பதற்காக 18 சத
விகிதம் ஒதுக்கியதற்காகத் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பில்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நடந்து முடிந்த தேர்தலில்
புரட்சித் தலைவர் தாய்க்குலத்திற்குக் கொடுத்த வாக்குறுதியின்
அடிப்படையில் தேர்தலில் பெண்கள் பங்கு பெற வேண்டுமென்ற
அடிப்படையில் 15 சதவிகிதம் பெண்களுக்காக ஒதுக்கியது
இந்தியத் துணைக் கண்டத்திலேயே இல்லாத ஒன்றாகும். இவை
எல்லாம் சீராக நடைபெறும் என்று நினைத்துக் கொண்டிருந்த
நேரத்தில் ஊராட்சித் தேர்தல்களுக்குத் தடை வந்தது குறித்து
மிக்க வேதனைப்படுகிறேன். அந்தத் தடைகளை உடைத்
தெறிந்து விரைவாக, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்
களை நடத்தி அந்த வாய்ப்புகளை நல்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனுக்காகப்பரிந்து பேச மாநில
மாவட்ட அரிசன ஆலோசனைக் குழுவை புரட்சித் தலைவர்
அவர்கள் விரைவில் அறிவித்து அந்த மக்களுக்கு வாய்ப்புக்
கொடுக்க வேண்டும்.

தீண்டாமை சம்பந்தமான வழக்குகளை வெகு விரைவில்
விசாரித்து தீர்ப்புக் கூற தமிழகத்தின் தனி நீதிமன்றங்கள்
ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைக் காணும்போது உள்ளபடியே
காந்தியார் கண்ட கனவு நனவாகிறது. தீண்டாமை ஒழிப்பில்
இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதை எண்ணி நன்றி

[திரு. பி. துரைராஜ்] [1982 பிப்ரவரி 4

செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அரிசனங்களுக்கு இழைக்கப்படக்கூடிய கொடுமைகளைக் களைய இந்த அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் நகரங்களில் இருக்கக்கூடிய மக்கள் பெறக்கூடிய வசதிகளைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தன்னிறைவுத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்தி வருவதற்காகப் புரட்சித் தலைவர் ஆட்சியை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இப்படிப் பட்ட நல்ல காரியங்களை எல்லாம் செய்து, காந்தியடிகள் கண்ட கிராம ராஜ்யத்தைப் பேரறிஞர் அண்ணா வழியில் செயல்படுத்தி வரும் இந்த ஆட்சியைப் பாராட்டி, வரவேற்று, தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆளுநர் அவர்கள் உரையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது பற்றிச் சிறப்பாகச் சொல்லியிருந்தார்கள். இன்றைய ஆளுநர் உரையில் பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது பற்றிச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்றபடி நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு இந்த உரை இல்லையென்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சிப் பணிகள், தன்னிறைவுத் திட்டங்கள் போன்றவற்றிற்குப் பலகோடி ரூபாய்கள் செலவழித்து இருப்பது, பேரூராட்சி மன்றங்களுக்கு நகராட்சி மன்றங்களுக்குத் தன்னிறைவுத் திட்டங்களைச் செயல்படுத்த முன் வந்திருப்பது, விவசாயிகளின் கடன்களுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்தது, தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைத்தது, பெண்களுக்காக ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க இருப்பது போன்ற சில நல்ல விவரங்கள் இதிலே இருந்தாலும்கூட விட்டுப்போன சில குறைகளைச் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டிற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது பற்றி இந்த உரையில் எந்தவிதமான தகவலும் இல்லை. சென்னையிலே போக்குவரத்து வசதிக்காக கடற்கரையிலிருந்து, லஸ் முனைவரையிலே 60 கோடி ரூபாய் செலவில்



1982 பிப்ரவரி 4] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

போடப்பட்ட மாஸ் ரேபிட் டிரான்ஸ்போர்ட் சிஸ்டம்பற்றி மத்திய அரசிடம் கலந்து பேசியது என்ன என்பதைப் பற்றி இதிலே குறிப்பிடப்படவில்லை.

1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19 ஆம் நாளன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினைப்பற்றி ஒரு வருத்தம்கூட இந்த ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்படவில்லை. பொதுவாக அதிகாரிகள் இன்றைக்கு உண்மைக்கு மாறாகச் சொல்லி கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு நடந்தது பற்றி அதிகாரிகளிடம் தகவல் கேட்டால், பொதுமக்கள் சும்மா இருந்தார்கள், நாங்கள் வேண்டுமென்றே சுட்டோம் என்றா அவர்கள் சொல்வார்கள்? அவர்கள் தங்களுக்குச் சாதகமாகத் தங்களுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் அறிக்கை அளிப்பார்களே தவிர நியாயமான அறிக்கைகள் வராது. வேலை நிறுத்தத்தின்போது நடந்த துப்பாக்கிச் சூடாக இருந்தாலும் மற்றும் போலீஸ் ஸ்டேஷன்களிலே நடந்த மரணங்களாக இருந்தாலும் அதற்கு நீதி விசாரணை நடத்துவதுதான் நியாயம் என்பதை காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக ஆங்காங்கே அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டன என்று இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் எங்கும் அப்படிப்பட்ட குழுக்கள் போட்டதாகத் தெரியவில்லை. அரசு வறட்சிப் பணிகளை நல்ல எண்ணத்துடன் செயல்படுத்த விரும்பி பல கோடி ரூபாய்கள் அதற்காகச் செலவிட்டாலும்கூட அதிகாரிகளால் சரியாகச் செலவழிக்கப்பட்டதா என்பதை எண்ணிப் பார்க்கிறபோது இல்லை என்றுதான் சொல்லியாக வேண்டும். ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டது உண்மைதான். ஆனால் அந்த அடி பம்புகள் வேலை செய்கின்றனவா என்றால் இல்லை என்ற உண்மையைச் சொல்லித்தானாக வேண்டும்.

பொதுப் பங்கீட்டு முறை அவசியமாக இருக்கிறது என்று சொல்கிறபோது ஒரு கார்டுக்கு 2 கிலோ வீதம் கொடுக்கக்கூடிய அரிசியை வைத்து பொது மக்கள் வாழ்ந்துவிட முடியாது. வெளி மார்க்கெட்டிலேதான் அரிசியை வாங்கி வாழ்க்கையை நடத்த வேண்டி இருக்கிறது. ஆனால் இன்றைக்கு 50 சதவீதம் லெவி என்ற நிலையால் சிறு விவசாயிகளும், வியாபாரிகளும் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல துண்டுப் பிரசுரங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வந்திருப்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். சைக்கிளில் ஒருவர் ஒரு மூட்டை நெல்லைக் கொண்டு வந்தால் அதை வைத்து அந்தக் குடும்பத்தினர் அவித்து புழுங்கலாக்கி அரிசியாக விற்று அதில் கிடைக்கிற வருமானத்தை

[திரு. ஆர் நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1982 பிப்ரவரி 4

வைத்து வாழ்க்கையை ஓட்ட வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. ஆனால் ஒரு மூடை நெல்லை அதற்காக ஒருவன் கொண்டு வந்தால் அதிகாரிகள் அதைப் பறிமுதல் செய்து விடுகிறார்கள். அப்படிச் செய்வதால் அவன் அரிசி வியாபாரத்தை விட்டுவிட்டு திருட்டுத் தொழிலையோ, கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலையோ செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆளாகிறான். உணவுப் பங்கீட்டு முறைக்காக இத்தனை ஆயிரம் டன் கொள்முதல் செய்ய வேண்டுமென்று இங்கிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த ஆணையை வைத்துக் கொண்டு அந்தந்த வட்டார ஆட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு இத்தனை ஆயிரம் டன்கள் கொள்முதல் செய்தாக வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். வட்டார ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொரு வியாபாரியும் இத்தனை டன் தர வேண்டுமென்ற முறையிலே கட்டாயப் படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. 10 டன் ஒரு லோடு என்றால் அதைக் கொண்டு போய்க் கொடுப்பதிலே 6 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. 200 டன் கொடுக்க வேண்டுமென்றால் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்படுகிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. இதை எந்த வியாபாரியால் தாங்க முடியும்? இதற்காக மாற்றுத் திட்டங்கள் கொடுக்கிற நேரத்திலே அரசு அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. பொதுப் பங்கீட்டு முறைக்கு ஏராளமான அரிசி தேவை. மடாலயங்களிலே உணவு தானியங்களை அவர்கள் பகிரங்கமாக ஏலத்திற்கு விடுகிறார்கள். அதிக விலைக்கு விற்கிறார்கள். அதை அரசுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏன் சொல்லக் கூடாது. 10 ஏக்கருக்குள் நிலம் வைத்து இருப்பவரை விட்டுவிட்டு பத்து ஏக்கர்களுக்கு மேல், 300 ஏக்கர், 400 ஏக்கர்கள் என்று பலபேர்கள் அறக்கட்டளைகள் என்று, வைத்திருக்கின்ற நிலப் பிரபுக்களிடமிருந்து பினாமி பெயர்களால் வைத்திருக்கின்ற நிலங்களிலும் விளைகின்ற நெல்லை அரசுக்குத்தான் அளிக்க வேண்டுமென்று ஏன் உத்தரவு போடக்கூடாது என்று கேட்கிறேன். அப்படிச் செய்யாததால் சாதாரண சிறு விவசாயிகளும், வியாபாரிகளும் மிகவும் கஷ்டப்படும் நிலைமைகள் ஏற்படுகின்றன; அரிசியின் விலையும் அதிகமாக ஏறுகின்ற சூழ்நிலையும் இருக்கிறது.

(பிற்பகல் 1–10).

தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது சிறப்பான திட்டம்தான் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத காரணத்தால் தன்னிறைவுத் திட்டத்தால் அதிக இலாபம் அடைந்தவர்கள் காண்ட்ராக்ட்காரர்களும், அதிகாரிகளும்தான் என்றால் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவர்கள் வைத்ததே வரிசை, சட்டம் என்ற ரீதியில் நடக்கிறதே தவிர, முழுமையாக அந்தப் பணிகள் நடைபெறவில்லை.



1982 பிப்ரவரி 4] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

சிமெண்ட் வெளி மார்க்கெட்டில் ஒரு மூட்டை 85 ரூபாய்க்குக் கிடைக்கிறது. தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட சிமெண்ட் லோடு லோடாக வெளி மார்க்கெட்டிற்கு அனுப்பப் படுவது இந்த அரசுக்குத் தெரிந்திருந்தும் அதைச் சரியாகக் கவனிக்கவில்லை. 100 மூட்டை, 200 மூட்டை என்று வெளியே சென்று பதுக்கல்காரர்கள அதை 85 ரூபாய்க்குப் பகிரங்கமாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவவரர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு குற்றச்சாட்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடைபெறுவதாகக் கூறினார்கள். தயவு செய்து அது சம்பந்தமான விவரங்கள் இருந்து எங்களுக்குக் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். விவரங்கள் ஏதாவது இருந்தால் தயவு செய்து தெரிவிக்கும்படி மீண்டும் நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இலஞ்சம் கொடுப்பவன் யாரும், சாட்சியை வைத்துக் கொண்டு கொடுப்பதில்லை. அதேபோன்று அந்தந்தப் பகுதிகளில் உள்ள முக்கியமானவர்கள் சிலர் பதுக்கி வைத்திருக்கின்ற சிமெண்ட் எப்படிப் பகிங்கரமாக விற்பனைக்கு வருகிறது என்பதை அதிகாரிகள் உணர வேண்டும். இன்றைக்கு அதிகாரிகள் எவ்வளவு மோசமாக இருக்கிறார்கள், அரசுக்குத் தவறான தகவல்களைத் தருகிறார்கள் என்பதற்காகத்தான் நான் சொல்ல வந்தேன்.

அரசு அதிகாரிகளின் மெத்தனப் போக்கிற்கு இன்னொரு உதாரணத்தையும் சொல்ல விரும்புகிறேன். நமது மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரவர்கள் இங்கே இருப்பதால் அதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய கீழப்பாரூர் என்ற ஊரிலே பெரிய குளத்திலே கருவேல மரம் 1966ஆம் ஆண்டில் போடப்பட்டது. அது பின்னர் 1979 ல் வெட்டப்பட்டது. அந்த ஏலத் தொகை எவ்வளவு, அந்தத் தொகை பஞ்சாயத்திற்குத் திரும்பச் செலுத்தப் பட்டு விட்டதா என்று சென்ற ஆண்டு நான் கேள்வி கேட்டேன். ஆனால், இதுவரையில் எனக்குப் பதில் வரவில்லை. நான், மற்றவர்களிடமிருந்து அறிந்த விவரத்தின்படி 1,26,900 ரூபாய்க்கு ஏலத்திற்குப் போய் இருப்பதாக இப்பொழுது எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. 1979-லே விடப்பட்ட அந்தப் பணம் இதுவரையில் பஞ்சாயத்திற்கு வரவில்லை. இப்பொழுது 1982 ஆம் ஆண்டில் புதிதாக கருவேல மரங்களைப் போடுவதற்காக வனத்துறை அதிகாரிகள் வந்த பொழுது ஊர்க்காரர்கள்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் . தலைவர் அவர்களே, கர்நாடகத்திலிருந்து நாம் மின்சாரம் வாங்குவது இல்லை. சொல்லப்போனால், கர்நாடகமும் நாமும் கேரளத்திலிருந்து தான் மின்சாரத்தை வாங்குகிறோம். கேரளத்திலிருந்து நாம் வாங்கும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 28 பைசா ஆகிறது. ஆனால் 3 ஆண்டுகளுக்கு முன்னால் இது 18 பைசா என்று இருந்தது. ஒரு 5 ஆண்டுகளுக்கு முன்னால் இது யூனிட்டுக்கு 12 பைசா என்று கூட இருந்தது. அதற்கு இப்போது நாம் 28 பைசா வீதம் கொடுத்து வருகிறோம். அதிகரிக்க வேண்டும் என்று கேரள அரசு கேட்பதாகக் கர்நாடக அரசோடு பேசுகிறபோது விவரங்கள் வந்திருக்கின்றன. நாம் இன்னும் இதுபற்றி கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நிலக்கரிப் பற்றாக்குறையினால் அவ்வப்போது மின் உற்பத்தியில் தடங்கல் ஏற்படுவதால் நிலக்கரிச் சுரங்கத்தில் பங்கு கேட்கும் உத்தேசம் தமிழகத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரிய கேள்வியை தனிக் கேள்வியாகப் போடும்படி உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து கொடுக்கப்படும் மின்சாரத்தை நாம் எடுத்துக் கொண்டு வருவதற்குக் கூட சரியாக லைன்கள் இல்லை என்று சொல்கிறார்களே அது வாஸ்தவமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு கொடுத்தாலும் எடுத்துக் கொள்வதற்கு லைன்கள் இருக்கின்றன.

(முற்பகல் 9-10)

## நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கும் திட்டம்

*வினா எண். 24—திரு. கே. கல்லன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது தொடங்கப்படும்?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) : நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலத்தில் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் வழங்கியுள்ள நிலப்பரப்பில், ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க சிட்கோ தீர்மானித்துள்ளது. அதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான கட்டிட வேலைகள் அக்டோபர் மாதம் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் முதற் கட்டமாக 10 சிறு தொழிற்கூடங்களும் 10 சின்னஞ் சிறிய தொழிற்கூடங்களும் (Tiny Sheds) நடப்பாண்டில் கட்டப்படும்.

திரு. கே. கல்லன் : இந்தத் தொழிற்கூடங்களை அலாட் செய்யும்போது அங்கே பரம்பரையாக வாழக் கூடிய மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் முன் உரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதற்கென ஒரு தனிக் கமிட்டி இருக்கிறது. அப்படிப்பட்ட நண்பர்கள் விண்ணப்பிப்பார்களேயானால் தகுதி உள்ளவர்களாக இருந்தால் முன் உரிமை அளிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : அப்படிப்பட்டவர்கள் கேட்டால் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதற்கு முன்னால் அமைக்கப்பட்ட தொழிற்கூடங்களுக்குக் கூட கேட்டிருந்தும் கொடுக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இப்படிப்பட்டதொரு அவல நிலை இருப்பதால் ஆரம்பக் கட்டத்திலேயே மலைவாழ் மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அல்லது பின்தங்கிய மக்களுக்கு ஒரு சதவீதம் கொடுக்க வேண்டும் என்று அந்தக் கமிட்டியாருக்கு முன் அறிவிப்புக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனப்படுத்தினால் அது கவனமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ரமணி : நீலகிரி தொழில் வளர்ச்சி மிகவும் குறைவாக உள்ள இடம். அங்கே ஏராளமான தொழில் அற்றவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொழிற் கூடங்களில் என்னென்ன விதமான தொழில்களை அமைக்கிறார்கள் ? பத்து தொழிற் கூடங்கள் அமைப்பதாகச் சொன்னார்கள். அதில் என்ஜினியரிங் தொழில்கள் போன்ற தொழில்கள் அல்லாமல் மரங்களைக் கொண்டு அதிகப்படியாக வேலைகள் நடத்தக் கூடிய அளவில்—மலைகளில் மரங்கள் என்ற மூலப் பொருள்தான் அதிகமாகக் கிடைக்கின்றது. பல்வேறு விதமான தொழிற் கூடங்கள் அமைக்கப்படுமா? அவ்வாறு எவ்வளவு அமைக்கப்படும் ?

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1982 பிப்ரவரி 4

அத்தனை பேர்களும் சேர்ந்து அவர்களை மறிக்கும் அளவிற்குச் சூழ்நிலை ஏற்பட்டது. அதைத் தடுத்து, காடுகள் வளர்ப்பது நமது கடமை, ஆனால், முந்தைய ஆண்டுக்குண்டான பணத்தை வாங்கி வந்து விடுகிறோம் என்று சொன்னதன் பேரில் அவர்களைப் பிறகு அனுமதித்திருக்கிறார்கள். இந்த மாதிரி அதிகாரிகளின் மெத்தனப் போக்கால் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகின்ற பல சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரிலே பெட்ரோலிய விலையினுடைய உயர்வின் காரணமாக பஸ் சார்ஜை உயர்த்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே அதே பெட்ரோலிய விலை உயர்வின் காரணமாக மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கட்டுப்படியாகவில்லையென்றால்: கூட்டுவதைப்பற்றி எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் கிராமப்புறங்களில் சரியாக மின் விளக்குகள் எரிவதில்லை என்பதை மற்றவர்களோடு சேர்ந்து நானும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்புகள் போடுகிறார்கள், ஆனால் இரண்டு நாட்களுக்கு மேல் அவைகள் தாக்குப் பிடிப்பதில்லை. அந்த பல்புகளை மறுபடியும் போடுவதற்கு ஆட்கள் வேண்டுமென்றால் ஆட்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப் பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன. மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் பம்பு செட்டுகளுக்காக ஐந்தாண்டுகளுக்கு முன்பு வாங்கி வைத்துக் கொண்டிருக்கும் மோட்டார்களுக்கெல்லாம் கூட இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை.

இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுவதற்குக் காரணம் அதிகாரிகளின் மெத்தனப் போக்குதான் என்பதைத் தயவுசெய்து அமைச்சர்கள் கவனித்துப் பார்த்து அதிகாரிகள் சரியாக வேலை செய்கிறார்களா என்பதைக் கவனித்து இந்த அரசு ஒரு நல்ல அரசாக விளங்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த உரையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் மாநாட்டைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த மாநாட்டை ஒட்டி, மதுரையில் பல்வேறு நிரந்தர அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இன்று அந்த வேலைகள் நின்றுபோய் இருக்கின்றன.



1982 பிப்ரவரி 4] [திரு. க. பாரமலை]

குறிப்பாக, மதுரைக்கு அருகிலுள்ள வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தி படகு விடுதல், பூங்கா வைத்தல், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், நட்சத்திர ஓட்டல் கட்டுதல், மிருகக் காட்சி சாலை அமைத்தல் போன்ற பல்வேறு முன்னேற்றத் திட்டங்களை அரசு மேற்கொண்டிருந்தது. அந்த வேலைகளெல்லாம் இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. வேகமாக வளர்ந்து வருகின்ற ஜன நெருக்கடி மிக்க மதுரை மாநகருக்கு இந்தத் திட்டங்கள் எல்லாம் மிக மிக அவசியமானவை என்பதை நான் குறிப்பிடுவதோடு, அந்த வேலைகளைத் தொடர்ந்து செய்து, தமிழ் மாநாட்டின் சிறப்பு என்றென்றும் நிலைத்து நிற்கும்படி செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசின் கல்வித் துறையில், பல்வேறு மாற்றங்கள் அல்லது சீர்திருத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களை அமைத்திருப்பதின் மூலம் நாம் தெரிந்து கொள்ள முடியும். இந்த உரையிலே, திருநெல்வேலியிலே ஒரு பொறியியல் கல்லூரி துவக்கப்பட்டிருப்பது குறித்தும், 6 பாலிடெக்னிக்குகள் துவங்கப்பட்டிருப்பது குறித்தும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு போல் இந்த ஆண்டும் இராமநாதபுரமாவட்டத்திற்கு ஒரு பாலிடெக்னிக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே இராஜபாளையம், விருதுநகர் போன்ற நகரங்களில் உள்ள பாலிடெக்னிக்குகளைத் தொடர்ந்து, சிவகாசியில் கூடுதலாக ஒரு பாலிடெக்னிக்கைத் துவங்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் வட பகுதியிலே இருக்கிற செட்டி நாடு தவிர பரந்து விரிந்து கிடக்கின்ற கிழக்கு இராமநாதபுரத்திலே ஒரு பாலிடெக்னிக்கும் இல்லை என்பதை நான் அரசுக்குச் சுட்டிக்காட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய மேற்கு பகுதியில் உள்ள சிலைமான் ருக்மணி ஆலையின் சார்பிலே டிப்ளமா இன் டெக்ஸ்டைல் டெக்னாலஜி என்ற கோர்ஸ் உள்ளடக்கிய ஒரு பாலிடெக்னிக் அமைப்பதற்கு அவர்கள் அரசாங்கத்தை அணுகியிருக்கிறார்கள். அதற்கு அனுமதி கொடுத்து, வருகின்ற நிதி ஆண்டிலாவது அந்த பாலிடெக்னிக் துவங்க அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், திருப்புவனம் பகுதியில், தனியார் துறையிலும், ஜாயின்ட் செக்டார் துறையிலும் பேப்பர் தொழிற்சாலைகள் பல துவங்கி நடந்து வருகின்றன. அவர்கள் டிப்ளமா இன் பேப்பர் டெக்னாலஜி என்ற கோர்ஸ் உள்ளடங்கிய பாலிடெக்னிக் நடத்த முன்வந்திருக்கிறார்கள். அதற்கும் அரசாங்கத்தை அணுகியிருக்கிறார்கள். அதற்கும் அரசு அனுமதி அளித்து, அந்த பேப்பர் டெக்னலாஜிக்கல் டிப்ளமா கோர்ஸ்கள் அங்கே வருவதற்கு உதவ வேண்டுமென்று மாநில அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. பாரமலை] [1982 பிப்ரவரி 4

தன்னிறைவுத் திட்டம் அமுல்படுத்தப்படுவதைப் பொறுத்தவரை, பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் அதனை விஸ்தரிக்கின்ற அரசின் முடிவை நான் வரவேற்கிறேன். இந்த ஆளுநர் உரையில், கடலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, மானாமதுரை போன்ற இடங்களில் இருக்கிற தொழிற்கூடங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் மானாமதுரையும் ஒன்று. அந்த மானாமதுரையினுடைய தொழில் பகுதியை விஸ்தரிக்கும்போது, இன்றைக்குத் திருச்சியிலே இருக்கிற மத்திய அரசாங்கத் தொழிற்சாலைகளுக்கான உபரி தொழில்கள் அங்கு வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது, பருவ காலங்களில் வீணாகி கடலுக்குச் செல்லுகின்ற தண்ணீரை வறட்சிப் பகுதிகளுக்குத் திருப்பிவிடுகின்ற முயற்சி பற்றி. அந்தப் பகுதியில் இருக்கிற கிருதமால், பரலியாறு திட்டங்கள் வேகமாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அங்கு சீமைக்கால் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து கைவிடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று நமது அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றைக்கு எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான பிரச்னை, கண்மாய்களை ஆழப்படுத்துதல், கரைகளை வலுப்படுத்துதல் போன்ற முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், பாசன வசதி அளிக்கும் அந்தக் கண்மாய்களுக்குத் தண்ணீர் விடுகின்ற சப்ளை சானல்கள் பராமரிக்கப்படுவதில்லை. இதற்கு முன்பிருந்த ஜமீன்தார்கள் காலங்களிலே குடி மராமத்து என்ற பெயரில் அங்கிருந்த மக்களால், மராமத்து வேலைகள் செய்யப்பட்டு வந்தன. ஆனால், இன்று கிராமங்களிலே ஒரு கட்டுக்கோப்பு இல்லாத காரணத்தாலே, இன்று சப்ளை சானல்கள் சீர் செய்யப்படாமல் ஆறுகளிலிருந்து வருகின்ற தண்ணீரை சப்ளை சானல்கள் மூலம் எடுத்துச் சென்று கண்மாய்களில் தேக்கி வைக்க முடியாத நிலைமையிருக்கிறது. ஆகவே, இந்த சப்ளை சானல்களை சீர் செய்கின்ற பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை லெவி வாங்குவதிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. வியாபாரிகள் அவர்கள் வாங்குகின்ற நெல்லில், 50 சதவீதம் அரசாங்கத்திற்கு லெவியாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி Traders Levy தான் போட்டிருக்கிறீர்கள்.



1982 பிப்ரவரி 4] [திரு. க. பாரமலை]

ஆனால் நெல்லை இன்றைக்கு Direct Purchasing Centre என்று சொல்லப்படுகிற நேரடியாக வாங்குகின்ற சென்டரில் அவர்கள் வாங்குவதற்குத் தயாராக இல்லை. ஆனால் விவசாயிகள் 4 மூட்டை, 5 மூட்டை என்று வண்டியில் ஏற்றி பக்கத்து ஊர்களில் விற்கலாம் என்று சொன்னால் அதை அதிகாரிகள் கைப்பற்றி விடுகிறார்கள். ஆகவே நான் கேட்டுக் கொள்வது, இந்த டிரேடர்ஸ் லெவியை நீங்கள் அமல் நடத்துகின்றபோது, விவசாயிகள் விற்பனைக்கு எடுத்துச் செல்லும் நெல்லைப் பறிமுதல் செய்யக் கூடாது என்று அதிகாரிகளுக்கு கண்டிப்பான ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அரிசனங்கள் முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதை இந்த உரை சுட்டிக் காட்டுகிறது. குறிப்பாக நான் சொல்லிக் கொள்வது 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளிலே அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவே இல்லை என்பது மட்டும் அல்ல, ஒரு வீடு கூடக் கட்டப்படவில்லை. இதற்குச் சொல்லப்படுகின்ற காரணம் வீட்டினுடைய மதிப்பீடு ஏறிக் கொண்டே போகிறது. இந்த நிலையில் எப்படிக் கட்டுவது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 4,000 ரூபாய் என்றிருந்தது 8,000 ரூபாயாக அதிகமான மதிப்பீடு ஆகி, இன்றைக்கு 12,000 ரூபாயாக ஆகி விட்டிருக்கிறது. இன்னும் ஒரு வருடம் பொறுத்துப் பார்த்தால் 15 ஆயிரம் ரூபாயாக ஆகிவிடும். ஆகவே நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது, நீங்கள் இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதாக இருந்தால் தயவு செய்து வீட்டினுடைய எண்ணிக்கை அதிகமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, இருக்கின்ற நிதி ஒதுக்கீட்டை ஆதாரமாக வைத்துக் கொண்டு, அந்தத் திட்டத்தை அவசியம் நீங்கள் துவங்க வேண்டும். இந்த ஆண்டிலேயே அதற்குரிய ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அரிசனங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சலுகைகளைப் பல்வேறு வகைகளில் வேறு சமுதாயத்தினரைச் சேர்ந்தவர்கள் தட்டிச் செல்லுகின்றனர் என்பதற்குப் பல்வேறு ஆதாரங்கள் இருக்கின்றன. இந்த வருடத்தில்கூட மருத்துவக் கல்லூரியிலும், இன்ஜினியரிங் கல்லூரியிலும் உயர்ந்த சாதிக்காரர்கள் கொண்டாரெட்டி, மலைச்சாதி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தவறான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டு ஏறக்குறைய 40 சதவிகிதம் இடங்களை அவர்கள் பெற்று இருக்கிறார்கள். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே

[திரு. க. பாரமலை] [1982 பிப்ரவரி 4

நானும் சகோதரி பொன்னம்மாளும் இதுக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், அவர்கள் சான்றிதழ்கள் கொண்டு வந்தால் அதிலே அரசு குறுக்கிட முடியாது, ஆனால் சான்றிதழ்கள் வழங்குவதைப்பொறுத்தவரையில் சில கடுமையான உத்தரவுகளைப் போட்டிருக்கிறோம் என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலை ஜாதி மக்களுக்கும் தனித் தனியாக இத்தனை சதவிகிதம் என்று பிரிக்காத காரணத்தினால் அவர்கள் இந்த அளவிற்குத் தவறான சான்றுகளைப் பெற்று அதிகமான இடங்களைப் பெற முடிகிறது. ஆனால் மத்திய அரசாங்கத்தில் இருப்பதைப் போல தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 17 சதவிகிதம், மலை வாழ் மக்களுக்கு 1 சதவிகிதம் என்று வைத்துக் கொண்டால் நிச்சயமாக 1300 இடங்களில் 13 இடங்கள் மலைவாழ் மக்களுக்குக் கிடைக்கும். அப்போதுதான் தவறு செய்ய இடம் இருக்காது என்ற காரணத்தால், மத்திய அரசாங்கத்தைப் போல மாநில அரசாங்கமும் ஜன விகிதாசாரத்திற்கு ஏற்றபடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் தனித் தனியாக இத்தனை சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டால் நிச்சயமாக இந்தத் தவற்றைத் தடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதைச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இதிலே குறிப்பிட்டு இருக்கும் காவிரி பிரச்னை குறித்து இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் கூடி ஒரு முடிவு எடுத்து இருக்கிறோம். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், அதிலே மத்திய அரசின் மத்தியஸ்தத்திற்கு இடமில்லை. நிச்சயமாக, சுப்ரீம் கோர்ட்டுக்கோ அல்லது டிரிபியூனலுக்கோ போனால்தான் நியாயம் கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இதிலே நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. 1924 ஆம் ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தம் இன்றைக்கு அமலில் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு நாம் இருக்கிறோம். ஆகவே, அந்த அளவிற்குத் தமிழ்நாட்டு நலனை மனதில் கொண்டு அன்றைக்கு அந்த ஒப்பந்தம் செய்யப் பட்டு இருக்கிறது. அதை மீறி, இன்றைக்கு மத்தியஸ்தத்தின் அடிப்படையில் நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டால் பின்னர் ஒரு 50 ஆண்டுகளுக்குப் பின்னாலே அதனை மீண்டும் பரிசீலனை செய்யப்படுகிறபோது 1982 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டை ஆண்டவர்கள், தமிழ் நாட்டிலுள்ள தலைவர்கள் தமிழ் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு ஒரு நல்ல முடிவு எடுத்து இருக்கிறார்கள் என்று நமது சந்ததியினர்—சமுதாயம் நினைக்கின்ற



1982 பிப்ரவரி 4] [திரு. க. பாரமலை]

அளவிற்கு இந்த ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, மத்தியில் யார் இருக்கிறார்கள், அவர்களை நாம் தட்டிக் கேட்கலாமா, கோபித்துக் கொள்வார்களோ என்று நினைத்துக் கொண்டு இதிலே மத்தியஸ்தத்திற்கு நாம் ஒப்புக் கொண்டால் அது தற்கொலைக்கு ஒப்பான முடிவு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே நாம் உறுதியாக நின்று சுப்ரீம் கோர்ட்டுக்கோ அல்லது டிரிபியூனலுக்கோ எடுத்துச் செல்வதுதான் நம்முடைய நலனைக் காப்பதற்கு வழி வகுக்கும் என்பதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் பொது மக்களுக்கு வழங்குவதற்காகத் திங்கள் ஒன்றுக்கு 10,800 டன் கோதுமையை ஒதுக்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டது என்றும் மத்திய அரசு 4,000 டன் கோதுமை மட்டுமே ஒதுக்கி வருகிறது என்றும் இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதோடு நமக்கு ஏற்கனவே கோதுமைப் பண்டங்கள் தயாரிப்பதற்காக ப்ளோர் மில்லுக்கு 65,000 டன் ஒதுக்கி இருந்தது. தற்போது 30,000 ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது.

இந்த அறிக்கையின் மூலம் என்ன அறிகிறோம் என்றாம் நாம் கேட்ட அளவைக் கொடுக்க வேண்டும் என்று மறுபடியும் கேட்டு இருப்பதாகத்தான் தெரிகிறதே தவிர வேறு எந்த் வகையில் நாம் கேட்ட அளவைப் பெறுவதற்கு முயற்சிகள் மே கொள்ளப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. இன்றைக்கு பேக்கரி வைத்திருப்பவர்கள் ரொட்டி உற்பத்தியாளர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஏற்கனவே நமக்கு இருந்த அலாட்மென்டில் 50 சதவிகிதம் குறைந்து விட்ட காரணத்தால் குடிசைத் தொழில் போல் அந்த ரொட்டி தயாரிக்கும் தொழிலைச் செய்து கொண்டு இருப்பவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு வட மாநிலங்களில் கோதுமை உற்பத்தி கணிசமான அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். ஆகவே நாம் கேட்ட அளவிற்கு கோதுமையை மத்திய அரசு தர வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை மாநில அரசு மேற் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு நாளைக்கு 1,250 டன் கரும்பு அறைக்கும் சர்க்கரை ஆலை அமைக்க மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டு இருக்கிறோம் என்று சென்ற ஆண்டு கவர்னர் உரையில் சொல்லப் பட்டு இருக்கிறது. அது என்ன ஆனது என்பதைப் பற்றிய எந்த விதமான குறிப்பும் இதிலே இல்லை. அப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகளை இங்கே நாம் அமைப்பதன் மூலம் வேலை

வாய்ப்பை அதிகரிக்க முடியும். ஆகவே அத்தகைய நடவடிக்கைகளில் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

ஆளுனர் உரையினைப் பார்க்கிறபோது மின்கட்டண உயர்வு நிச்சயமாக இருக்கும் என்கிற முறையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த மின் கட்டணம் உயர்த்துவதற்கான காரணங்களைக் கூறுகின்றபோது மின்வாரியத்திற்குத் தேவைப்படுகிற பல்வேறு பொருள்கள் மீது மத்திய அரசு போடும் வரி அதிகமாகி விட்டது என்றும் மற்றும் இரயில்வே கட்டணம் எண்ணெய் விலைகள் அதிகரித்து விட்டது என்றும் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளது. ஆகவே, அந்த வரிகளை மின் வாரியத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றோ அல்லது குறைக்க வேண்டும் என்றோ மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொள்வதன் மூலம் ஓரளவிற்கு இந்த மின் கட்டண உயர்வைத் தடுப்பதற்கு முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பினாமி நில ஒழிப்புச் சம்பந்தமாக நாம் இங்கே நிறைவேற்றி அனுப்பிய சட்டத்திற்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் தராமல் திருப்பியனுப்பி விட்டது. நேற்றைய முன் தினம் பேசிய மதிப்பிற்குரிய திரு. இளையபெருமாள் அவர்கள் மத்திய அரசு பிரதம அமைச்சருக்குத் தெரிவிக்காமலேயே இந்த முடிவை மேற்கொண்டிருக்கக் கூடும் என்கிற ஒரு அச்சத்தை எழுப்பினார்கள். இன்றைக்கு பிரதம அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கின்ற 20 அம்சத் திட்டத்தில் நிலச் சீர்திருத்தத் திட்டம் நல்ல முறையில் செயல் படுத்தப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான ஒரு திட்டமாக இருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகையிலே பார்க்கிறபோது ஒரு செய்தியைப் பார்த்தேன். பிரதம அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற 20 அம்சத் திட்டத்தை அமல் படுத்தாத அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்படும் என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அறிவித்து இருக்கிறார். நான் தாழ்மையோடு ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத் திட்டத்தை இங்கே நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தோம். அது திரும்ப வந்து விட்டது. ஆகவே மாநில அரசாங்கங்கள் நிலச் சீர்திருத்தத் திட்டங்களை அமல் படுத்தவில்லை என்றாலும் மத்திய அரசு அமல் படுத்த வில்லை என்றாலும் அந்த அரசுகளை எதிர்த்து அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்



மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரு போராட்டத்தை நடத்தத் தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் பல்வேறு நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருந்தன. அந்தத் திட்டங்களில் நிலை என்ன என்பது தெரிவிக்கப்பட வேண்டும். மத்திய அரசாங்கம் நெல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 130 என்றும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 200 ஆகவும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு வருகிறது என்று சொன்னோம். அவர்களுக்குக் கொடுக்க மனம் இல்லை. ரூ. 105 நெல்லுக்கும் ரூ. 130 கரும்புக்கும் என்று நிர்ணயித்துள்ளார்கள். ஆகவே, நாங்கள் ரூ. 115 நெல்லுக்கும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 175-ம் அளிக்கிறோம் என்று தமிழ்நாடு தானே அறிவித்தது. அது குறித்து மேல் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, கோவை, திருச்சி பல்கலைக் கழகங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால், சென்னை நகரில் 'மெட்ராஸ் ரேபிட் டிரான்போர்ட் சிஸ்டம்' கொண்டு வரப்படும் என்று சென்ற முறை சொல்லப்பட்டு இருந்தது. இந்த முறை அதைப் பற்றி ஒன்றும் காணோம்.

நெல் உற்பத்திக்கும், கரும்பு உற்பத்திக்கும் நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்த வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டு, சென்ற ஆளுநர் உரையோடு, இந்த ஆண்டு ஆளுநர் உரையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்த உரை சென்ற உரையின் பின்னால் அரசு எடுத்த நடவடிக்கைகளை விவரிக்கின்ற ஒரு 'அட்மினிஸ்டிரேடிவ் ரிப்போர்ட்' போல் இருக்கிறதே தவிர, இதிலே பாராட்டுகின்ற அளவிற்கு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்து உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 5—2—82-ம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 5- பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

86. சென்னையிலுள்ள செக்கஸ்லோவோகியா சோசலிசக் குடியரசின் வர்த்தகப் பிரதிநிதியினருக்குச் சொந்தமான TMQ: 998 ஆம் எண் வண்டிக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு 28—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற உள் துறையின் 1765 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

87. சிமெண்டு விற்பனையின் மீது செலுத்த வேண்டிய வரி வீதத்தைக் குறைப்பது குறித்து 28—9—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1097 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

88. ரொட்டிக் கடைப் பொருட்களின் மீது விற்பனை வரி விதிப்பதிலிருந்து விலக்களிப்பது குறித்து 11—9—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-அறக் கட்டளைகள் துறையின் 1019ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

89. சென்னையிலுள்ள, மெட்ராஸ் பெட்ரோலியம் நிறுவனத்திற்கு விநியோக இருப்பிலுள்ள மின்மாற்றி எண்ணெயினை விற்பனை செய்வதன் மீதான விற்பனை வரியினை 8 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைப்பது குறித்து 14—9—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1022 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

90. சென்னை-12-ல் உள்ள தயாசண்டன் விற்பனை செய்யக் கூடிய பழைய இரும்பு பெட்டகம், காலிச் சாக்குகள் மற்றும் உடைந்த பாத்திரங்களை விற்பனை செய்வதன் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 28—9—1981-ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்





சமய அறக்கட்டளைகள் துறையின் 1099 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

91. ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாளர்கள் என்பீல்டு இந்தியா நிறுவனத்தின் அனைக்கரைப்பட்டி தொழிற் பிரிவு உற்பத்தி செய்யும் முழுதும் செய்து முடிக்கப்பட்ட பொருட்களின் விற்பனையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியில் இருந்து விலக்களிப்பது குறித்து 27—5—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 534 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

92. தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் ஒன்றிற்கொன்று பேருந்துகளை மாற்றிக் கொள்வதன் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 6—10—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1133 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

*93. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8 1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

*94. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆய்வாளர் தணிக்கை செய்துள்ளவாறு (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

*95. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம் [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

---

* 2—2—1982 அன்று அவைமுன் வைக்கப்பெற்றன.

96. கசப்புக்காய் மற்றும் தக்காளி ஆகியவற்றை வேளாண் விளை பொருள்களாக அறிவிப்பது குறித்து 31—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 628 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

$ 12. 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

@13. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 26—8—1981 முதல் 1—9—1981 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

14. 1971–72 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் 12-வது அறிக்கை (ஆங்கிலம், தமிழ்).

15. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1960–61 ஆம் ஆண்டு முதல் 1965–66 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான பொது நிறுவனங்கள் குழு (1974–75) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் 13-வது அறிக்கை (ஆங்கிலம், தமிழ்).

16. 1973–74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத்துறைகள் பற்றிய அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977-79) அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் 14-வது அறிக்கை (ஆங்கிலம், தமிழ்).

17. இந்து ஆங்கில நாளேடுக்கு "சட்டமன்ற செயலகம்" என்ற தலைப்பில் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் எழுதி கடிதம் குறித்து அவர் மீதும் அதனைப் பிரசுரித்ததற்காக, "இந்து" நாளேடு மீதும் எழுப்பப்பெற்றுள்ள உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கை.

---

$ 1—2—1982 அன்று உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப் பெற்றது.

@ 30—1—1982 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.



## இணைப்பு.

[172-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 30-க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகள் அரசின் முன் வைத்த 9 அம்ச கோரிக்கைகள் ஆராயப்பட்டு அரசின் நிதிநிலைக்கேற்ப செயலளவில் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு பல சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன. விவரங்கள் பின்வருமாறு :

கோரிக்கை : 1. மின் கட்டண உயர்வைக் குறைத்தல்.

உயர்த்திய மின் கட்டணத்தை 12 பைசாவாக்கவும்; மீட்டர் வாடகையை அறவே கைவிடவும், லெவி வரி ரூ. 5-யும்; மினிமம் சார்ஜையும், ஏ.எஸ்.டி.யையும், கெபாசிட்டர் பொருத்த நிர்பந்திப்பதையும், மின் விளக்குகளுக்கு போடும் அபராதத்தையும், பில் கட்டத் தவறினால் போடும் அபராதத்தையும் அடியோடு கைவிட வேண்டும். ஆர்.எப்.சி. நிரந்தரம் செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் மின் துண்டிப்பு செய்வதை அடியோடு கைவிட வேண்டும்.

அரசு அளித்த சலுகை :

1—9—1975 முதல் யூனிட் ஒன்றுக்கு 16 காசு என்று இருந்த மின் கட்டணம் 1—7—1977 முதல் சிறு விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 14 காசாக குறைக்கப்பட்டது. மேலும் 1—6—1978 முதல் சிறு விவசாயிகளுக்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 12 காசாகவும் மற்றவர்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 14 காசாகவும் குறைக்கப்பட்டது. மீட்டர் வாடகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5-லிருந்து 1—6—1978 முதல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 4 ஆக குறைக்கப்பட்டது. பின்னர் 1—7—1980-ல் மீண்டும் இது 2 ரூபாயாகக் குறைக்கப்பட்டது. இதனை அறவே ரத்து செய்வதென்பது இயலாது. பரித்திறன் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1.25 வீதம் அதிக பட்சம் ரூபாய் 5-க்குட்பட்டு வசூலிக்கப் படும் லெவியை ரத்து செய்ய இயலாது.

மினிமம் சார்ஜ் வசூலிப்பதை ஏற்கனவே அரசு கைவிட்டு விட்டது. கூடுதல் வைப்புத் தொகை (ஏ.எஸ்.டி.) வசூலிப்பதை ரத்து செய்ய இயலாது. "கெபாசிட்டர்" குறித்த காலத்தில் வெளியேற்றப்படும் மின்னோட்ட அளவை பராமரிக்கவும் அதிக

அல்லது குறைவழுத்தத்தால் மின்மோட்டார் தீய்ந்து போகாமல் பாதுகாக்கவும் பொருத்தப்படுவதால் இதை கைவிடக்கூடாதென அரசு முடிவு செய்துள்ளது.

மின் விளக்குகளுக்குப் போடும் அபராதத்தையும், பில் கட்டத் தவறினால் போடும் அபராதத்தையும் அடியோடு கைவிட வேண்டும் என்ற கோரிக்கையையும், ஆர்.எப்.சி. நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் நிறைவேற்ற இயலாது. எக்காரணத்தைக் கொண்டும் மின் துண்டிப்பு செய்யக் கூடாது என்பதும் ஏற்க இயலாது. விதிமுறைகளுககிணங்க ஒரு பயனீட்டாளர் மின் கட்டணங்களை செலுத்தவில்லையானால் குறிப்பிட்ட நாட்களுக்கு பின் ஏழு நாட்கள் நோட்டீஸ் கொடுத்து மின் துண்டிப்பு செய்ய வேண்டும். ஆயினும் 1980 நவம்பர் 21, 22 தேதிகளிலும் டிசம்பர் 4 ஆம் தேதியிலும் முதலமைச்சர் தலைமையில் நடந்த கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒவ்வொரு மாதமும் நடப்பு மாத தொகையுடன் நிலுவையில் உள்ள தொகையில் ஒரு மாதத் தொகையை கட்டினால் மின் துண்டிப்பு இருக்காது என்று முடிவு செய்யப்பட்டது.

கோரிக்கை : 2. அரசு, விவசாயிகளுடைய கூட்டுறவு, நிலவள வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கி, நகைக்கடன் ஆகிய கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

அரசு அளித்த சலுகை

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய 1977-ல் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழு 1979-ல் அளித்த பரிந்துரைகளை ஒட்டி தமிழக அரசு அபராத வட்டி மற்றும் சாதாரண வட்டி தள்ளுபடி போன்ற சலுகைகள் அளித்தது. வட்டிச் சலுகையினால் 5 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகள் பயனடைந்தனர். ஒரு விவசாயி செலுத்த வேண்டியிருந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மத்திய கால மாற்றுக் கடன்களை ஒருங்கிணைத்து 1979—80 லிருந்து 3 முதல் 6 ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த அனுமதிக்கப்பட்ட வகையில் மேற்படி கடன்கள் சுமார் 53 கோடி ரூபாய் அளவுக்கு ஒருங்கிணைக்கப்பட்டன. இதனால் சுமார் 2·35 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றனர். கால நீட்டிப்பினால் ஒவ்வொரு ஆண்டும் கட்ட வேண்டிய தொகை கணிசமாகக் குறைக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட இந்தச் சலுகையோடு கூட்டுறவு வங்கிகளுக்கும் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. தவணை தவறியகடன் மிகவும் அதிகரித்த காரணத்தால்





மாநிலக் கூட்டுறவு வங்கிக்குக் காட்ட வேண்டிய ஆதாரக் குறைவைச் (Noncove due Cove defich) சரிக்கட்டவும், திருப்பிச் செலுத்தவேண்டிய கடன்களைக் கட்டவும், தமிழக அரசு 10 மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு 42 கோடி ரூபாய் அளவுக்கு வழி வகைக் கடன்கள் வழங்கியுள்ளது. வசூலிக்கப்பட வேண்டிய கடனில் குறைந்தது 40 சதவீதமாகிலும் வசூலித்தால்தான் ரிசர்வ் வங்கி மேற்கொண்டு கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு கடன் வழங்கும் என்ற நிபந்தனை உள்ளது. ரிசர்வ் வங்கியுடன் தொடர்பு கொண்டு இது 20 சதவீதமாகத் தளர்த்தப்பட்டது. மேலும் ரிசர்வ் வங்கி கோரியபடி அது கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு 1980—81-ம் ஆண்டுக்கு வழங்கியுள்ள 55 கோடி ரூபாய் அளவு கடன் வரம்புகளுக்கு தமிழக அரசு உறுதி (Guarantee) அளித்துள்ளது.

விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் தவணைக்காலம் 31—12—1981 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 31—12—1981 வரை கடன் வசூலில் ஜப்தி போன்ற தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டா. 1974—75 முதல் 1977—78 ஆண்டு முடிய இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நீண்டகால கடன்களை 92·91 கோடி அளவுக்கு தனி ஒரு கணக்கின் கீழ் கொண்டுவர நிலவள வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதனால் கடனின் தவணைக்காலம் தக்கவாறு நீட்டிக்கப்படும். ஆயினும் ஒவ்வொரு தவணையிலும் செலுத்தப்படவேண்டிய தொகை முன்பு குறிக்கப்பட்ட தவணைத் தொகையை விட அதிகமாக இருக்காது. கடனைத் திருப்பி செலுத்துவதிலும் அவர்கட்கு கூடுதல் பளு ஏதும் இருக்காது.

கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் தவணை கடந்த கடன் நிலுவை 89 சதவீத அளவுக்கு உயர்ந்து, வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திற்குக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தவறும் நிலை ஏற்பட்டு மாநில நிலவள வங்கிக்கு 33.50 கோடி ரூபாய் அளவுக்கு தமிழக அரசு நிதியுதவி அளித்துள்ளது.

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள் 1979-ல் அளிக்கப்பட்ட சலுகைகளினால் போதிய அளவு நிவாரணம் பெறாமல் மாற்றப்பட்ட மத்திய காலக் கடன் சுமை தொடர்ந்து இருந்ததால், அவர்களுக்கு மேலும் நிவாரணம் அளிப்பது அவசியம் என அரசு கருதியது. 5 ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் சொந்தத்திலோ அல்லது குத்தகையிலோ பயிர் செய்யும் சிறு விவசாயிகளுடைய மாற்றப்பட்ட மத்திய காலக் கடன்கள் மொத்தத்தையும் வட்டியுட்பட கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்கள் சார்பில் செலுத்திவிட 1980 அக்டோபரில் அரசு ஆணையிட்டது. இந்த வகையில் 4.52 இலட்சம் சிறு விவசாயிகள் சுமார் 50 கோடி ரூபாய்

அளவுக்கு பயனடைந்துள்ளனர். 1—7—1975 முதல் 31—3—1980 வரை ஏற்கனவே சிரமத்துடன் இந்த வகைக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியிருந்தவர்களுக்கும் இந்த சலுகை நடப்பு ஆண்டில் கிடைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இந்த வகையில் சுமார் 9 இலட்சம் சிறு விவசாயிகள் 23 கோடி ரூபாய் அளவுக்கு பயன் அடைவார்கள்.

மேலும் நடப்பு ஆண்டில் நிதி நிலை அறிக்கையில் தெரிவித்து உள்ளபடி 30—6—1981-க்குள் குறுகிய காலக்கடன் அசல் நிலுவையைத் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு அந்த கடன் மீது செலுத்தவேண்டியுள்ள வட்டியும், அபராத வட்டியும் அரசினால் செலுத்தப்படும். மற்ற விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் குறுகியகாலக் கடன் அசலையும் வட்டியையும் 30—6—1981-க்குள் திருப்பி செலுத்தினால் அபராத வட்டியை அரசு செலுத்திவிடும். இந்தச் சலுகை அளிப்பதால் அரசுக்கு ஏற்படும் செலவு சுமார் 40 கோடி ரூபாயாகு. சுமார் 10 இலட்சம் சிறு விவசாயிகளும் 4 இலட்சம் இதர விவசாயிகளும் பயன்பெறுவர். மேலும் காலத்தே கடனைத் திருப்பி செலுத்துபவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 2 சதவீதம் வட்டியில் தள்ளுபடி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இப்படி 1977 முதல் 1981 வரை தமிழக அரசு அறிவித்த சலுகைகளை மொத்தமாகக் காணும்போது, தள்ளுபடியாக ரூ. 118 கோடியும் வழிவகைக் கடன்களாக ரூ. 75·50 கோடியும் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் எந்த ஒரு அரசும் இந்த மாநிலத்திலோ அல்லது வேறு எந்த ஒரு மாநிலத்திலோ இந்த அளவு, அதாவது ரூ. 193·150 கோடி ரூபாய் உதவி செய்ததாகத் தெரியவில்லை. சில குறிப்பிட்ட விவசாய பணிகளுக்காக 31—12—1980 வரை மொத்தமாக ரூ. 26·84 கோடி பெருமானத் தக்காவி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதனால் 17,97,709 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கிய கடன்களை ரதது செய்ய இவ்வரசுக்கு அதிகாரம் இல்லை. நிலவள வங்கி கடன்களையும் நகைகடன்களையும் ரத்து செய்வதற்கில்லை.

**கோரிக்கை. 3. விளை பொருள்களுக்கு விலைநிர்ணயம்**

விவசாய விளைபொருள்களுக்கு விவசாய பிரதிநிதிகள் கொண்ட கமிஷன் அமைத்து கட்டுப்படியாகும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நிர்ணயித்த விலைகளுக்கு கீழே சரியுமானால், சர்க்கார் கொள்முதல் செய்து கொள்ள வேண்டும். செக்போஸ்ட்டுகளை அகற்றி இந்தியா முழுவதும் தாராள நடமாட்டம் இருக்கவேண்டும்.



**அரசின் சலுகை :**

விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயிக்கும் அதிகாரம் மைய அரசிடம் உள்ளது. அவ்வரசு விவசாய விளைபொருள்கள் விலை நிர்ணய ஆணைக் குழுவின் பரிந்துரையின் மீது விளைபொருள்களுக்கு விலையை நிர்ணயிக்கிறது.

நெல்லை பொருத்தமட்டில், எப்படி கோதுமை உற்பத்தி செலவின் அடிப்படையில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படுகிறதோ, அதேபோல் நெல்லின் கொள்முதல் விலையையும் நிர்ணயிக்க வேண்டும் என்று இவ்வரசு மைய அரசை வற்புறுத்தி வருகிறது. மேலும் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக வாங்கும் சாதாரண ரக நெல்லுக்கு மத்திய அரசினால் குவிண்டாலுக்கு ரூபாய் 105 என நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு பதிலாக விவசாயிகளிடமிருந்து அவர்கள் தாமாகவே முன்வந்து கொடுக்கும் நெல்லை குவிண்டாலுக்கு ரூபாய் 115 என்று விலை கொடுத்து இந்த அரசு வாங்குகிறது. மத்திய அரசு அறிவித்துள்ள விலையைக் காட்டிலும் இது ரூபாய் 10 கூடுதலாகும். கரும்புக்கு டன் ஒன்றுக்கு மத்திய அரசு நிர்ணயித்த 1980–81-ம் ஆண்டுக்கான விலையான ரூபாய் 130—க்கு பதிலாக ரூபாய் 175 கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விளைபொருள்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை நிர்ணயம் பற்றியும் பரிந்துரை செய்யவும் விவசாயிகளின் இதர பிரச்சினைகளை ஆய்ந்து பரிந்துரை செய்யவும் முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களை பொருத்தமட்டில் 1977 அக்டோபர் முதல் இந்திய நாடு முழுவதும் ஒரே மண்டலமாக்கப்பட்டு போக்குவரத்து தடைகள் முழுவதும் நீக்கப்பட்டுள்ளன. தற்போது செக்போஸ்ட்டுகள் கிடையாது.

**கோரிக்கை 4.—பாசன வசதி.**

தேசத்திலுள்ள அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கி கங்கை காவிரி இணைப்பின் மூலம் வீணாக கடலில் மேற்குநோக்கி பாயும் நதிகளையும் கிழக்குமுகமாக திருப்பி தமிழ்நாட்டில் வறட்சி பகுதிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்கவேண்டும்.

**எடுக்கப்பட்ட நடவடிக்கை :**

இம்மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்படுகின்ற பகுதிகள் பயன்பெறும் வகையில் மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளில் உள்ள மிகுதியான நீரினை கிழக்குத் திசையில் திருப்பி விடுவதற்கான திட்டங்கள் குறித்து பரிசீலனை செய்து யோசனை கூறுவதற்கென ஒரு தொழில் நுட்பக் குழுவை மத்திய அரசு அமைத்தது. இப்பொருள் அக்குழுவின் ஆய்வில் உள்ளது.

கோரிக்கை: 5. தண்டத் தீர்வைப் பயிர் வரி:

பாசனப் பகுதிகளில்பயிர் கட்டுப்பாடும் தண்டத்தீர்வை பாசனத்தீர்வை உயர்வு ஆகியவைகளை அறவே கைவிடவேண்டும். லெவி கொள்முதல் கைவிட வேண்டும். பாசனப் பகுதிகளிலும் தோட்டக்கால் பகுதிகளிலும் பணப்பயிர்களுக்கு விதித்திருக்கும் பயிர் வரிகளை கைவிட வேண்டும்.

அரசின் சலுகை.

நிலவரி, தண்ணீர்த் தீர்வை, கூடுதல் நன்செய் தீர்வை கூடுதல் தண்ணீர் மேல்வரி, தண்டத் தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றை வசூலிப்பதை இயற்கையின் சீற்றத்திற்கு இரையான பகுதிகளில் தள்ளிவைக்கப்படுகிறது. இவ்வரிகளை தள்ளுபடி செய்தல் என்பது இயலாது.

தமிழகத்தில் பாசனத் திட்டங்களின் நோக்கம் பெரும் பகுதிகளில் புன்செய்ப் பயிர்களையே விளைவிப்பது என்பது ஆகும். எனவே இப்பகுதிகளில் நன்செய் பயிர் விளைவிக்கக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இக் கட்டுப்பாடுகள் மீறும் பட்சத்தில் அது முறையற்ற பாசனமாகக் கருதி தண்டத் தண்ணீர் தீர்வை விதிக்கப்படுகிறது. இல்லையெனில், கீழ் ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் வந்து சேருவதற்குத் தட்டுப்பாடு ஏற்படும் முதல் மற்றும் இரண்டாம்தர பாசன ஆதாரங்களால் பயன் பெறும் நஞ்சை நிலங்களுக்கு தனிநன்செய்த் தீர்வையும் மற்றநிலங்களுக்கு தனித் தண்ணீர் மேல் வரியும் 1976 ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதியிலிருந்து வசூலிக்கப்பட்டு வந்தது. 1386 ஆம் பசலியில் இம்மாநிலத்தில் நிலவிய ஓவ்வாத பருவ நிலை காரணத்தால் மேற்கூறப்பட்ட தனி நன்செய்த் தீர்வையும் தனித் தண்ணீர் மேல் வரியும் வசூலிக்கப்படவில்லை. இதனை செலுத்துவது விவசாயிகளுக்கு கடினமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டதால் இத்தனித் தீர்வைகள் வசூலிப்பதை 1—7—1976 லிருந்து கைவிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்ட முன் வடிவு சட்டமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப் பட்டது. இதற்கான குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு 1976-ம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரிவிதிப்பு சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட சில வணிகப் பயிர்கள் விளைவிக்கப் படும் நிலங்களின் மீது வணிகப் பயிர்வரி 1976 ஜூலை முதல் நாளிலிருந்து விதிக்கப்பட்டது. உழவர்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்ய அரசால் அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு வணிகப் பயிர் வரிவிதிப்பை ரத்து செய்யலாம் என்று பரிந் துரைத்ததை ஏற்று இவ்வரி விதிப்பை அதன் தொடக்க நாளி



லிருந்து ரத்து செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் லெவி கொள்முதல் முறையும் அதையொட்டிய கட்டுப்பாடுகளும் அடியோடு நீக்கப்பட்டுவிட்டது. தண்ணீர் தீர்வையை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழு தற்போது வசூலிக்கப்படும் தண்ணீர் வரி தண்டத் தண்ணீர் வரி, கூடுதல் மற்றும் தனித் தீர்வைகள் முதலியன பற்றி ஆய்ந்து பரிந்துரை செய்துள்ளது. அப்பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன,

கோரிக்கை 6.—நகர்புற உச்ச வரம்பு :

நகர்ப்புறங்களிலே பலதரப்பட்ட தொழிற்சாலைகள் ஏற்பாடு செய்வதை தவிர்த்து கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த நகர்ப்புறத்தை விட்டு 10 மைல் தள்ளி மேற்படி தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும். (மாஸ்டர் பிளான் சட்டத்தை அறவே ரத்து செய்ய வேண்டும்).

அரசின் சலுகை :

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை சணக்கெடுப்பின்படி 10 இலட்சம் மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள பெருநகர் தொகுதிகளிலும், 5 இலட்சம் மக்கள் தொகைக்கும் அதிகமாகயுள்ள நகரப்பகுதிகளிலும் புதிய தொழில் துவக்கக் கூடாது என மைய அரசு தெரிவித்துள்ளது. இதைத் தவிர நகர்ப்புறத்தை விட்டு 10 மைல் தள்ளியே தொழிற்கூடங்கள் அமைக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு ஏதும் தற்சமயம் இல்லை. நகர்ப்புற உச்சவரம்பு சட்டத்திலிருந்து விவசாய தொழிலுக்கு பயன்படும் நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை 7—கிராம அபிவிருத்தி :

நகர்ப்புறத்தில் உள்ளதுபோல், கிராமப்புறத்தில் தீப்பிடிக்காத வீடுகள், வைத்திய வசதி, குடி தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி ஆகியவைகள செய்து தரவேண்டும். குறிப்பாக விவசாய தொழிலாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து இலவசமாக குடியிருப்பு வீடுகள் கட்டித்தரவேண்டும்).

அரசின் சலுகை.

குடிநீர் வசதியை பொறுத்தவரையில் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் அரசினரால் நிதி ஒதுக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மதிப்புள்ள வேலைகள் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் செய்து முடிக்கப்படுகின்றன. மேலும்

ஊராட்சி ஒன்றியங்களில் கிராமப்புறத் தேவைகளின் அடிப்படையில் முறைப்படுத்தப்பட்ட மருந்தகங்கள் மற்றும் கிராம மருந்தகங்கள் பராமரிக்கப்படுகின்றன. உள்ளூர் தேவைக்கேற்ப சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஆங்கில முறை மருந்தகங்களும் பராமரிக்கப்படுகின்றன. அரசு புறம்போக்கு நிலங்கள் தலைக்கு 3 சென்ட் என்ற விகிதத்தில் ஏழை மக்களுக்கு இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களுள் பெரும்பாலோர் விவசாயிகள். 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தின்படி ஏழை விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி விவசாயிகளோ விவசாயத் தொழிலாளர்களோ ஒரு குடியிருப்பில் 19—6—1971 அன்று குத்தகை தாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருந்தால் எந்த வில்லங்கமும் இன்றி அக்குடியிருப்பின் சொந்தக்காரராவார்.

கிராம மக்களின் போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் சாலை போக்குவரத்துத் தேவைகளை மதிப்பிடுவதால் அறிவியல் பூர்வமான உதவிகளுக்கு வகை செய்வதற்கும் நடத்தப்பட்ட ஆய்வின் பயன்களை அடிப்படையாகக் கொண்டு, சுமார் 18 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 968 ஊராட்சிகளை உள்ளடக்கி, சிறு உந்துகளையும், பேருந்துகளையும் விடுவதற்காக 476 வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய வழித் தடங்களைத் தொடங்குதல், ஏற்கனவே உள்ள வழித் தடங்களில் மாற்றங்களைச் செய்து அவற்றை விரிவாக்குதல் ஆகியவை தொடர்பாக மேற்குறிப்பிட்ட ஆய்வின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டவற்றைச் செயல்படுத்துவதில் முன் உரிமை தருமாறு மண்டலப் போக்குவரத்து அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டாவது சாலைபோக்குவரத்து ஆய்வினை நடத்தி 426 வழித்தடங்களில் 22 இலட்சம் மக்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு 1980 ஜூலை முதல் 1981 ஜனவரி வரை 7.67 இலட்சம் மக்களுக்கு பயன்தரும் வகையில் 240 கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுத்துள்ளது. புதிய தடங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள தடங்களின் பயணிகள் விகிதத்தை கணக்கிடவும் மாவட்டங்களில் பேருந்து வசதிகள் செய்து தரப்படாத கிராமங்களுக்கு புதிய வழித்தடங்களை ஏற்படுத்தி அல்லது தற்போதுள்ள தடங்களில் மாற்றங்கள் செய்து பேருந்து வசதி செய்வதற்கும் புதிய சாலைகளை அமைத்து பேருந்து வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் புதிதாக ஏற்படுத்தப்படும் தடங்களில் முன்னுரிமை வழங்குவதை தீர்மானிக்கவும் மாவட்டங்களில் புதிய பேருந்துகளை விடுவதற்கான மற்று



நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் வேண்டி மாவட்டந்தோறும் துணை போக்குவரத்து ஆணையாளர், போக்குவரத்து கழகங்களின் நிர்வாக இயக்குநர்கள் பொது மேலாளர்கள் மண்டல போக்குவரத்து அலுவலர்கள் முதலான அலுவலர்களை உறுப்பினராகவும் கொண்டு மாவட்டம் தோறும் ஒரு குழு அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**கோரிக்கை 8.—விவசாயத் தொழிலில் ஏற்படும் அபாயங்களுக்கு குடும்பப் பாதுகாப்பு தொகை வழங்க வேண்டும்.**

மின்சார பம்பு செட்டுக்களை இயக்குவது, கிணறு வெட்டுவது, கரும்பு ஆலை ஆடுவது, டிராக்டர் இயக்குவது, வண்டி ஓட்டுவது, பூச்சி மருந்து தெளிப்பது போன்ற விவசாய வேலைகள் செய்யும்போது எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டால் அரசு ஊழியர்களுக்கு குடும்ப பாதுகாப்பு தொகை கொடுப்பது போல் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

**அரசின் சலுகை.**

பூச்சி மருந்து, ரசாயன உரங்கள் தெளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோர், குடிநீர் பாசனக் கிணறுகள் அரசு செலவில் ஆழப்படுத்துதல், தோண்டுதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளோர், தென்னை, பனை மரங்கள் ஏறுவோர் ஆகியோர் தம் பணிகளில் ஈடுபட்டுள்ளபோது இறக்க நேரிடினும் அல்லது வயல்களில் வேலை செய்யும்போதும். வெற்றிலைத் தோட்டத்தில் பணிபுரியும்போதும் பாம்பு அல்லது விஷப்பூச்சிகள் கடித்து இறக்க நேரிடினும் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் 5,000 வரை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் 60 வயதுக்கு மேற்பட்ட எவ்வேலையும் செய்ய இயலாத ஆதரவற்ற விவசாய தொழிலாளர்களுக்குப் பயன் படும் வகையில் முதியோர் உதவித் தொகை திட்டத்தை விரிவு படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**கோரிக்கை 9.—விவசாய பாதுகாப்பு இன்சூரன்ஸ்**

பயிர், கால்நடை, மின்சார பம்பு செட்டு ஆகியவைகளுக்கு குறைந்தபட்ச பாலிசியின் அடிப்படையில் பாதுகாப்பு இன்சூரன்ஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முதற் கட்டமாக இருபது தொழிற் கூடங்கள் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான இணைத் தொழில்களுக்காகக் கட்டப்படுகின்றன. இரண்டாவது கட்டமாக இருபது தொழிற்கூடங்களை அதையொட்டியே துவங்க இருக்கிறோம். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : நீலகிரியில் அமைக்கப்படுகிற தொழிற் கூடங்களில் அங்கே பணியாற்றக் கூடியவர்களை நியமிக்கும்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை அனுசரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இந்தக் கேள்வி சமூக நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டும்.

திரு. மு. அரங்கநாதன் : உதகையில் ஆரம்பிக்கிற தொழிற் கூடங்களில் நீலகிரியில் முக்கியமாக விவசாயக் கருவிகள் தயார் செய்வதற்கு முதல் இடம் கொடுத்து ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நான் ஏற்கனவே கூறியதுபோல் முதல் கட்டமாக இணைத் தொழில்களுக்கு முன் உரிமை கொடுக்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக இருபது தொழிற் கூடங்கள் வருகிற நேரத்தில் அந்தத் திட்டங்கள் உகந்ததாக இருந்தால் முன் உரிமை அளிக்கப்படும்.

**சேலம் மாவட்டத்திலுள்ள பட்டுப்புழு விற்பனை நிலையங்கள்.**

*வினா எண் 25—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பட்டுப்புழு விற்பனை நிலையம் (Cocoon Markets) எந்தெந்த இடங்களில் உள்ளது ?

(ஆ) அங்கே விலை நிர்ணயம் யாரால் செய்யப்படுகிறது?

(இ) சேலம் மாவட்டத்தில் பட்டுப்புழு வளர்த்தல் சம்பந்தமாக எடுக்கப்பட்டு வரும் தீவிர நடவடிக்கை யாது ?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) சேலம் மாவட்டத்தில் சேலம் நகரில் ஒன்றும், இராசிபுரத்தில் ஒன்றுமாக இரண்டு பட்டுக்கூண்டு விற்பனை கொள் முதல் (கக்கூன் மார்க்கெட்) நிலையங்கள் உள்ளன.

(ஆ) பட்டுப்புழு வளர்ப்புத் துறையால் நியமிக்கப்பட்டுள்ள சந்தை அலுவலர் (மார்க்கெட்டிங் ஆபீசர்) என அழைக்கப்படும் இளநிலை ஆய்வாளரால் விலைகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன.

(இ) 1974 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பட்டு விவசாயிகளுக்கு சலுகை விலையில் மல்பரி விதைக் குச்சிகள் அளிக்கப்படுகின்றன. பட்டு வளர்ப்புக் கூடம் அமைப்பதற்கும், பட்டு வளர்ப்புச் சாதனங்களை வாங்குவதற்கும் உதவிப் பணம் அளிக்கப்படுவதோடு, பட்டு வளர்ப்புத் தொழிலின் பல்வகைப் பிரிவுகளில் பயிற்சி தருவதற்கும் சேலத்தில் நூற்பு வசதிகளுடன் கூடிய ஓர் முன்னோடி மற்றும் விரிவாக்க நிலையம் ஏற்படுத்தப்பட்டது. தவிரவும் நோயற்ற முட்டைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ஓர் முட்டை வித்தகம், 1978-79-ம் ஆண்டு சேலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இம்மாவட்டத்தில் பட்டு நூற்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இராசிபுரம், ஆத்தூர், மோகனூர், அணையாபுரம் மற்றும் மேலப்பட்டி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தவிர சுமார் 75 தனியார் நூற்பு நிலையங்களுக்கும் சேலம் மாவட்டத்தில் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப் பூச்சி வளர்ப்பதை தனியார்கள் நடத்துவதால் சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே, அந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்பதைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவர அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே தனியார்கள் செய்கின்ற அந்தத் தொழிலைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வந்து, அதற்கு அரசு இப்போதே உதவி செய்து வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட விவசாயிகள் அந்தப் பட்டை தற்போது பெங்களூருக்குச் சென்று விற்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, சேலம் மாவட்டத்தில் அதற்கென்று ஒரு ரீலிங் சென்டரை ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 4

அரசின் சலுகை.

கால்நடை காப்புறுதித் திட்டம் பல்வேறு காப்புறுதி நிறுவனங்கள் மூலமாக முன்பிருந்தே செயல்பட்டு வருகிறது. பயிர் பாதுகாப்புறுதித் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக இம் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

வெள்ளிக்கிழமை, 1982 பிப்ரவரி, 5

தை 23; துன்மதி, திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. ''

குற்றம் நீங்கச் சொற்களை ஆராயும் வன்மையுடையார், அவையின்கண் பல நூல்களையும் கற்று அறிந்தவரின் கல்வி விளக்கமுறும்.

## 1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4 ஆம் நாளன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். சுப்பிரமணியக் கவுண்டர் அவர்கள் 1952–53 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் மேச்சேரி தொகுதியிலிருந்தும் 1957 ஆம் ஆண்டில் இருந்து 1962 ஆம் ஆண்டு வரை மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை சங்ககிரி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றும் மேலும் 1958–59 மற்றும் 1964–65 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகவும் நல்முறையில் பணியாற்றியுள்ளார். இவர் சேலம் மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவராக இருந்து கூட்டுறவு இயக்கத்தில் சிறந்த ஈடுபாடு கொண்டு பல பொறுப்புக்களை வகித்துள்ளார். சேலம் மாவட்டத்தில் அன்றைய மாவட்டக் கழக (டிஸ்டிரிக்ட் போர்டு) தலைவராகவும் இவர் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

[பேரவைத் தலைவர்] [1982 பிப்ரவரி 5

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.

## 2. வினாக்கள்—விடைகள்

### உக்குறியிட்ட வினாக்கள்.

### புதிய மீன்பிடி கப்பல்கள் வாங்கும் திட்டம்.

*வினா எண் 41—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு மீன்வள வளர்ச்சிக் கழகத்திடம் புதிதாக மீன்பிடி கப்பல்கள் வாங்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிதாக (பர்சீன்) படகுகள் வாங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) எவ்வாறு கப்பல்களும் படகுகளும் பயன்படுத்தப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(ஆ) ஆம். 6 பர்சீன் படகுகளும் 2 இணைப் படகுகளும் (C ier Vessel) வாங்கும் திட்டம் கழகத்தால் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் ஐந்து படகுகள் கட்டி முடிக்கப்பட்டு மீன் பிடிப்பில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டு இணைப் படகுகளும் வாங்கப்பட்டு பர்சீன் படகுகளுடன் பயன்படுத்தப்படுகின்றன.

(இ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் இரண்டு 'தஞ்சை', 'நெல்லை' என்ற 23 மீட்டர் நீளமுள்ள இழு படகுகள் (T wl ) விசாகப்பட்டினத்தில் இறால் மீன்கள் அதிகம் கிடைப்பதால் இறால் மீன் பிடிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 57 அடி நீளமுள்ள 'முல்லை', 'மருதம்' இழு படகுகள் (T wlers) மண்டபம் அருகில் காரல் என்ற மீன் வகைகளை மீன் தூள் நிலையத்திற்காக பிடிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதிக வேகத்திலும், குறைந்த நேரத்திலும் விரைவாக வலையை தூவி சுற்றி வளைத்து கூட்டமாக வரும் (Sh i Fisies) மீன்களைப் பிடிக்க பர்சீன் படகுகள் பயன்படுத்தப்படுகிறது.



1982 பிப்ரவரி 5]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் இவை வாங்கப்பட்டன ? தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திடம் மொத்தம் எத்தனைப் படகுகளும் கப்பல்களும் இருக்கின்றன ? அவைகளில் செயல்படுபவை எத்தனை, செயல்படாதவை எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தஞ்சை, நெல்லை என்று சொல்லப்படுகிற இரண்டு இழு படகுகளும் 1978 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டன. ஒவ்வொரு படகும் 50 இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ளது. இப்போது விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு, அங்கே இறால் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஒரு பர்சீன் படகு மூலம் 62,318 கிலோ கிராம் மீன் பிடிக்கப்பட்டு, 45,450 ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. 5 பர்சீன் படகுகள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன. இன்னொரு படகை விரைவில் பயன்படுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு ஒரு படகும், 1981 ஆம் ஆண்டு இரண்டு படகுகளும் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் நாள் ஒரு படகும், 16 ஆம் நாள் ஒரு படகும் செயல்படும் சூழ்நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இவை மங்களூர் கடற்கரையில் இப்போது மீன் பிடித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை கீழக் கடற்கரைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் விரைவிலே நடைபெறும். இதுவரை அப் படகுகளின் மூலமாக 250 டன்கள் மீன் பிடிக்கப்பட்டு அதன் மூலம் மொத்த வருமானம் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கிடைத்திருக்கின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, புதிதாக வாங்கப்பட்ட பர்சீன் படகுகள் மூலம் தாய்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் ஆழ் கடலில் சென்று அதிக அளவில் மீன் பிடிப்பது மாதிரி நாமும் அதிக அளவிலே மீன் பிடிக்க முடியுமா ? அந்த வகையிலே இந்தப் படகுகள் பயன்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ட்ராலர்ஸ் என்று சொல்லப்படுகின்றவை வங்காள விரிகுடா கடலிலே ஆழ் கடலில் சென்று மீன் பிடிக்கின்ற பணியிலே ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இன்னும் ஆழ் கடலிலே

சென்று பெருமளவில் மீன் பிடிக்கின்ற பெருங் கப்பல்களை வாங்குவதற்கான அனுமதியினை மத்திய அரசு நமக்கு வழங்க வேண்டும் என்று நாம் எடுத்துக் கூறி இருக்கிறோம். அதற்கான அனுமதியை அவர்கள் வழங்கியதற்குப் பிறகு மேற்கொண்டு ட்ராலர்ஸ் வாங்குவோமேயானால் ஆழ் கடலிலே சென்று ஏராளமான மீன் பிடிக்க வசதி வாய்ப்புக்கள் ஏற்படும்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, புதிய படகுகள் வாங்குவது சம்பந்தமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் ஏற்கெனவே சர்க்கார் படகு கட்டும் கூடங்கள் நாகப்பட்டிணத்திலும், சென்னையிலும், மண்டபத்திலும் இருக்கின்றனவே, இந்தப் படகுகளை வாங்குவதன் காரணத்தால் அங்கே பணியாற்றுகின்றவர்களின் கதி என்ன ஆகும்? அதை மூடிவிடுவது என்று உத்தேசமா? அந்தத் தொழிலாளர்களின் ஃப்யூச்சர் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பர்சீன் படகுகளை இங்கேதான் நாம் கட்டுகிறோம். ட்ராலர்ஸ்தான் வெளிநாட்டிலிருந்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆனால் இந்தப்படகு கட்டும் தளங்கள் இப்போது 4, 5 ஆண்டுகளுக்கும் மேலாக நஷ்டத்திலே பணியாற்றிக் கொண்டு வருகின்றன. அதை எந்த வகையிலே பயன்படுத்தலாம் என்றும் கூடுமான வரையில் வேலை இழப்பு ஏற்படாத அளவுக்கு ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்காகவும் குழு ஒன்று அமைக்கப்பட்டு அவர்கள் ஆராய்ந்து ஒரு அறிக்கை அளித்திருக்கிறார்கள். அந்த அறிக்கை மீன் துறையின் மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒன்று இவைகளை எந்த வகையிலே பயன்படுத்தலாம் என்று முயற்சிக்கப்படும். அப்படி பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேறு எந்தவகையிலே வேலை தரலாம் என்பது பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டுவிதமான படகுகள் பற்றிச் சொன்னார்கள். நம்மிடம் நான்கைந்து படகுகள் இருக்கின்றன. அவை ட்ராலர்ஸ். நம்மிடம் அவை அதிகமாக இல்லாததற்குக் காரணம் இங்கே அந்த அளவுக்கு காச் கிடையாது. வங்கத்திலே இருக்கின்றது. மங்களூரிலே இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் பர்சீன் படகுகளை வாங்குவதாகச் சொல்கிறீர்கள். பர்சீன் படகுக்கும் ட்ராலர்ஸ்க்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கின்றது. கூட்டம் கூட்டமாக மீன்கள் இருந்தால்தான் பர்சீன் படகுகளையும் வலைகளையும் நாம் பயன்படுத்த முடியும்......



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்லாமல் கேள்வியாகக் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, திரு. தாமரைக் கனி அவர்கள் கூட கேள்வி கேட்டார். அமைச்சரவர்கள் அதற்கு 2 இலட்சம் ரூபாய் வருவாய் வருவதாகச் சொன்னார்கள். அது லாபம் என்று சொல்லவில்லை. ஆகவே அது செலவு எல்லாம் போக மிச்சமா? அடுத்து இந்தப் படகுகளை வாங்குவதால் மீனவர்களுக்கு என்ன நன்மை? திரு. உமாநாத் அவர்கள் ஒரு நல்ல கேள்வியினைக் கேட்டார்கள். முன்பு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருந்தார்கள். இப்போது 500 அல்லது 600 பேர்கள்தான் இருக்கிறார்கள்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, படகு கட்டும் தளங்களில் பணியாற்றுகின்றவர்கள் 20, 25 வருஷம் சர்வீஸ் உடையவர்கள். அப்படிப்பட்டவர்களை வெளியே அனுப்பாமல் நம்முடைய மாநில சர்க்காரே அவர்களுக்குத் தகுந்த வேலையினைத் தருதவற்கு ஏற்பாடு செய்யுமா?

[முற்பகல் 9·10]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மீன் துறையின் மூலமாக மீனவர்களுக்கான பணியிலே நாம் ஈடுபடுகிறோம் என்பது மட்டுமல்லாமல் மீன் துறையினை வளர்க்கக்கூடிய பொறுப்பும் நமக்கு இருக்கின்றது. ஆகவே அதன் காரணமாக நாம் டிராலர்ஸ் போன்றவற்றை வாங்குகிறோம். இது மீனவர்களுக்கு நன்மை என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் நமக்கு பக்கத்திலே இருக்கின்ற கடலிலே இருக்கின்ற மீன்களை ஜப்பான் நாட்டுக்காரர்கள் வந்து அரித்துக்கொண்டு போகிறார்கள். ஆனால் அந்த மீன்களை நாமே அரித்து அதன்மூலம் மீன்துறையினை வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் 50 இலட்சம் ரூபாய் போட்டு ட்ராலர்ஸ் வாங்குகிறோம். இதனால், அந்த மீன் பிடிக்கும் வேலையில் திறமையுள்ளவர்கள், வல்லுநர்கள் இருப்பார்களேயானால் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அடுத்து, நான் முதலிலே நண்பர் உமாநாத் அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்கிறபோது சொன்னேன், அந்த அறிக்கையை

ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம் என்று, கேரளத்தைப் பொறுத்த வரையில் கூட படகு கட்டுகிற தொழில்நிலையத்தை வைத்து நட்டம் வந்த காரணத்தால், மூடி விட்டார்கள். இங்கேயும் தொடர்ந்து நட்டம் வருவதன் காரணமாக, எழுந்த பிரச்னைகள் அந்தத் தொழிற்சாலையை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது ஒன்று. மற்றொன்று, அந்தத் தொழிலாளிகளுக்கு எப்படி வேலைகளை தரலாம் என்பது. இவைகளைப் பற்றித்தான் அந்தக் குழுவிடம் கேட்டிருக்கிறோம். அந்தக் குழுவின் அறிக்கை தான் பரிசிலனையில் இருக்கிறது. அதில் முடிவு வந்த பிறகு எந்த வகையில் பயன் படுத்த முடியுமோ அந்த வகையில் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டத்தில் அமைக்கவிருக்கும் மீன்பிடி துறைமுகத்தில் பயன்படுத்துவதற்காக எத்தனை கப்பல்களையும் படகுகளையும் வாங்க அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும்—நேற்றுதான் இதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். 2½ கோடி ரூபாயில் சின்னமுட்டம் மீன் பிடி துறைமுகம் கட்டுவதற்கு என்று. எப்படி அதனை விரிவுபடுத்தலாம் என்று பின்னால் திட்டம் போட இருக்கிறோம், அடுத்த ஆண்டிலும் இந்த 5 ஆண்டு திட்டத்திலும் அதிகமான அளவிற்கு டிராலர்ஸ்களும் மற்றவைகளையும் வாங்க மத்திய அரசின் ஒப்புதல் கேட்டிருக்கிறோம். அவர்களுடைய அனுமதியோடுதான் வாங்கவேண்டும் அந்த முயற்சியில்தான் அரசு தற்போது ஈடுபட்டிருக்கிறது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விசைப்படகை நம்பி, தொழிற்சங்கம் வைத்துள்ளவர்கள். தங்கள் தொழிலையே மூலதனமாக வைத்து அரசிடம் கடன் பட்டு விசைப் படகுகளை வாங்கிவிடுகிறார்கள். இயந்திரக் கோளாறு காரணமாக நட்டம் அடைந்து விட்டால், அவர்களால் கட்ட வேண்டிய தவணைப் பணத்தை கட்ட முடியாவிட்டால், அந்தப் படகுகளை பறிமுதல் செய்கிற பழக்கம் இருக்கிறது. ஆகவே அந்தமாதிரி பறிமுதல் செய்வதைத் தவிர்த்து வட்டியை மட்டும் வசூல் செய்துக் கொண்டு, தவணை முறையை நீட்டித்துக் கொடுக்கும் வகையில் அரசு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், ஏராளமான வழி முறைகளை அவர்களுக்கு வழங்கித்



தான் கடைசியாக படகுகளை பறிமுதல் செய்யும் பணியை செய்கிறார்கள். வட்டியை மட்டும் வசூலிப்பது தவணை முறையை நீட்டித்துத் தருவது போன்றதல்லாமல் வேறு வழிகளிலும் அவர்களுக்கு பல சலுகைகள் வழங்கிய பிறகே, அப்போதும் பணம் கட்டத் தவறுவதினால்தான், கடைசி நடவடிக்கையாக படகுகளை பறிமுதல் செய்யும் வேலைகள் செய்யப்படுகிறது. இந்தக் கேள்வியை தனிக் கேள்வியாகப் போட்டால் இன்னும் பல விபரங்களைத் தர இயலும்.

*Construction of tenements for fishermen at Velanganni.*

*Q. No. 42—THIRU R. UMANATH . Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) Whether the Government have received a memorandum dated 1—7—1980 from the fishermen of Velanganni, Velanganni Post, Nagapattinam Taluk regarding construction of tenements for 146 fishermen,

(b) if so, the action taken thereon,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) வேளாங்கண்ணி மீனவர்களிடமிருந்து, வீடு கட்ட கோரிக்கை வரவில்லை. எனினும் மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1978–79 ஆம் ஆண்டில் 130 வீடுகள் கட்டவும், 1979–80 ஆம் ஆண்டில் 16 வீடுகள் கட்டவும் அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஆணையிட்ட பிறகு, அந்த வீடுகட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் எத்தனை மீனவர்களை அக்காமடேட் செய்யும், அவைகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் எந்த ஸ்டேஜில் இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் கீழ் 146 வீடுகள் கட்ட திட்டமிட்டு, 130 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, முடியும் தருவாயின் உள்ளன. 16 வீடுகளை இனிமேல் கட்டுவதற்கான பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இது ஆதி திராவிட நல வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் கட்டி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[5 பிப்ரவரி 1982

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அந்த வீடுகளை மீனவர்களுக்கு வாடகைக்கு விடுகிறீர்களா அல்லது இறுதியாக நிரந்தரமாக அவர்களே வைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் கட்டப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வசிக்கின்ற வீடுகளுக்கு வாடகை வசூலிக்கப்படுவது இல்லை. ஆனால் அவ்வீடுகள் அரசின் பெயரில்தான் இருக்கின்றன. அவர்கள் இலவசமாக குடியிருந்து வருகிறார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வாணியம்பாடி நகர மக்களுக்கு பட்டா வழங்குதல்.

*வினா எண் 43—திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டு இன்னும் பட்டாதார்களுக்கு நிலம் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ): 1,364 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். 1,223 நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. பலராமன் : பட்டா கொடுக்கப்பட்ட இடம் வசதியான இடம் அல்ல. அது மேட்டுப்பாங்கான மலைப் பிரதேசமாகையால் அந்த மக்கள் நகர்ப்புறத்திற்கு அருகாமையில் உள்ள நிலத்தைக் கோரி இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று பொது மக்களும் மற்றும் அரசியல்வாதிகளும் கோரி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்த இடத்தை (வருவாய்த்துறை அமைச்சர் நேராகச் சென்று பார்த்து அவர்களுக்கு எந்த இடத்தைக் கொடுப்பது என்று பார்த்து உள்ளூரில் கொடுக்கலாம் என்றால் அங்கே நிலம் இல்லாத காரணத்தாலும், மேலும், ஆற்றில் வெள்ளம்



1982 பிப்ரவரி 5]

வந்தால் பாதிக்கப்படும் என்ற காரணத்தாலும் மலைச் சரிவில், நானே நேராகப் பார்த்து அவர்களைக் கூட்டிவைத்து அவர்களும் ஏற்றுக்கொண்டு ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டது.

திரு. ஏ. சி. சண்முகம் : எஞ்சியுள்ள நபர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்? மேட்டுப்பாங்கான இடங்களில் குடிசைகள் போட்டுக் கொள்ள இடம் கொடுத்திருப்பதால் குடிநீர்ப் பிரச்சினை அவர்களுக்கு அங்கே அதிகமாக இருக்கிறது, அது தீர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில் வீடுகள் அவர்களே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இரண்டு பிரச்சினைகள் உள்ளன, ஒன்று குடிநீர்ப் பிரச்சினை, இரண்டாவது லைட். இரண்டிற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. சுந்தரம் : பட்டா கொடுக்கப்பட்ட பெரும்பகுதி மக்கள் அங்கே வசதி இல்லாத காரணத்தால் குடிபோகவில்லை, வேறு இடம் கேட்டிருக்கிறார்கள். அப்படி வேறு இடங்கள் கொடுக்க அரசு முயற்சி எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அந்த இடங்களைப்போய்ப் பார்த்து, வேறு இடங்கள் அந்த ஊரில் சௌகரியமாக இல்லை என்று தெரிய வருகிறது. வேறு நல்ல இடம் என்று தெரிந்தால் அரசாங்கம் கொடுக்க தயாராக இருக்கும்.

பைங்கிணர் கிராமத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கும் திட்டம்

*வினா எண் 44—திரு. சோ. அழகர்சாமி, திரு. என். ஏ. பூங்காவனம், திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் செய்யாறு தாலுகா பைங்கிணர் கிராமத்தில் சர்வே நெம்பர் 101/4-இல் பல ஆண்டு காலமாகக் குடியிருப்பவர்களை வெளியேற்றிவிட்டு வேறு நபர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா போட்டுக் கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், அதைத்தடுத்து அங்கு குடியிருப்பவர்களுக்கு அந்த இடங்களை சொந்தமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சொல்லப்பட்டிருக்கிற இடத்தை அடிப்படை ஊழியர்களுக்காக கொடுப்பதற்கு ஆக்கிரமிப்பை அகற்றிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அங்கே இருப்பவர்கள் நாங்கள் பத்து பதினைந்து ஆண்டுகளாக இருந்து வருகிறோம், எங்களை வெளியேற்றக் கூடாது என்று மனுக்கள் கொடுத்தார்கள். பிறகு, எது சரி என்று ஆராய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அவர்களது பதிலைக் கோரியிருக்கிறது அரசு.

திரு. என். ஏ. பூங்காவனம் : இந்தப் பகுதியில் நீண்ட காலமாக அந்த மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? பக்கத்திலுள்ள பல கிராம மக்களுக்கு அது நன்கு தெரியும். அப்படியிருக்க அடிப்படை ஊழியர்கள் என்ற பிரச்சினையைப் புகுத்தி அங்குள்ள மக்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தாமல் அவர்களுக்கே பட்டா கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்த நாட்டினுடைய குடிமக்கள் எல்லோரையும் ஒரே கண்ணால்தான் அரசு பார்க்கிறது. அடிப்படை ஊழியர்களா, மற்றவர்களா என்று பார்க்காது அங்கே நீண்ட காலமாக இருந்து சங்கடப்பட்டால் அரசு கவனிக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, மேற்படி இடம் நெடுஞ்சாலைப் புறம்போக்காக இருந்தது. அது கிராம நத்தமாக மாறியதே, செய்யாறு கோட்ட அரசு கடைநிலை ஊழியர்களின் வேண்டுகோளின் பேரில் நத்தமாக மாற்றும்போதே, மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி தம் மாற்றல் உத்தரவில் அது செய்யாறு கோட்ட கடைநிலை ஊழியர்களுக்கான குடியிருப்பு மனைகள் வழங்குவதற்காக என்று காரணம் குறித்தே மாற்றியுள்ளார் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? மனைப்பட்டா வழங்குவதற்கு முன்பு அதில் குடியேறக் கூடாது என்ற அதிகாரிகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டே கடைநிலை ஊழியர்கள் இன்றுவரை குடியேறாமல் இருந்து வந்துள்ளார் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அதில் சில கட்சிக்காரர்கள் அண்மையில் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்கள் என்பதையும் அதிலும் பலருக்கு வேறு மனைகள் உள்ளன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவாரா, அறிவாரா என்று பலமுறை கேட்பது எனக்கே புரியவில்லை. அமைச்சர் அவர்களிடம் ஒன்றிரண்டு



கேள்விகள் கேட்டால், அவரால் பதில் சொல்ல முடியும். நீங்கள் பட்டியல் போட்டுக்கொண்டு இப்படிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும் ? கேள்வி நேரத்தில், கேள்வி என்ன என்பதை மட்டும் கேளுங்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இருபது ஆண்டு காலமாக முயற்சி மேற்கொண்டு வரும், கடைநிலை ஊழியர்களுக்கு இடையூறு விளைவிக்கும், கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில், அதில் முறைகேடாக ஆக்கிரமிப்பு செய்துருப்போரை அகற்றிவிட்டு, கடைநிலை ஊழியர்களுக்கு முறைப்படி மனைப் பட்டா வழங்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 3, 4, 5 கேள்விகளுக்கு, முதல் இரண்டு கேள்விகளுக்கு அதை இந்த அரசு அறியும் என்றும், மூன்றாவது கேள்விக்கு சில பேரிடம் ஏற்கெனவே நிலப்பட்டா இருக்கிறதென்றும், சிலருக்கு மற்ற இடங்களில் நிலம் இருக்கிறதென்றும் தெரிவதால், அதைப்பற்றி இந்த அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இதிலே, அந்த நிலத்திலே உள்ள கடைநிலை ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிக்கிறார்கள். அங்கே, முதலிலேயிருந்து இருந்துவரும் கடைநிலை ஊழியர்களையும், மற்றவர்களையும் இந்த அரசு ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கிறது. அவர்கள் சங்கடங்களைப் பார்த்த பிறகு, யாருக்கு உண்மையிலேயே சங்கடம் இருக்கிறதோ அவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட இடத்தை அங்கே வசிக்கின்ற மக்கள் குடியேறிய பிறகு நத்தம் நிலமாக மாற்றினார்களா ? அல்லது அதற்கு முன்னாலே மாற்றினார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது, முதல் கேள்வியை அரசு அறியுமா என்று கேட்டார்கள். அரசு அறியும் என்று தெரிவித்திருக்கிறேன். அந்தக் கேள்வியின் பதிலை கவனித்திருந்தால், இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள்.

திரு. கோ. விஸ்வநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செய்யாறு அருகே உள்ள பிரச்சினை சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக வளரவிடாமல் உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய

விரும்புகிறேன் ? இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும், இந்தப் பிரச்சினையில் ஏன் இவ்வளவு காலதாமதமாகியும், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக வரக் கூடாது என்பதற்காகத்தான் ஆய்ந்து பார்த்து, இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இங்கே இந்தப் பிரச் சினையைப் பற்றிப் பேசுகிறபோதுகூட, ஒரு தரப்பில் இன்றைக்கு குடியேறியவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும் இன்னொரு தரப்பில் அடிப்படை ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறபோதே, இங்கே சட்டமன்றத்திலேயே மாறுபட்ட கருத்து வருகிறது. அங்கே எவ்வளவு மாறுபட்ட கருத்து வந் திருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் அறிவார் என்று கருதுகிறேன்.

## விக்கிரவாண்டி பேரூராட்சிப் பகுதியில் செய்யப்பட்டுள்ள நில ஆக்கிரமிப்புகள்.

*வினா எண் 45—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விழுப்புரம் வட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சியில் ஏ. இராமசுப்பு என்கிற பெரும் செல்வந்தர் அரசு விதிகளுக்குப் புறம்பாக அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட கண்டிஷன் பட்டாவை ரீசர்வே எண் 684/2 இல் 0.12 செண்ட் கிரயம் பெற்று நவீன பங்களா கட்டியிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) மேற்படி பேரூராட்சிக்கு சொந்தமான குட்டை புறம் போக்கு சர்வே எண் 684/3 இல் 0.08 செண்ட் இடத்தை இராம சுப்பு என்பவர் ஆக்கிரமித்திருப்பது உண்மையா ?

(இ) ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி பொதுமக்களிட மிருந்து அரசுக்கு வந்துள்ள புகார் மனுவின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) கேள்வியில் தெரியுமா என்று கேட்டிருக்கிறார்கள் ; தெரியும் என்று பதில் சொல்கிறேன். (ஆ) கேள்வியில் உண்மையா என்று கேட்டிருக் கிறார்கள். உண்மை என்று பதில் அளிக்கிறேன். (இ) கேள்வியில், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறேன்,



திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்குத் தெரியும் என்றும், இரண்டாவது கேள்விக்கு உண்மை என்றும், மூன்றாவது கேள்விக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார் கள். அந்த நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ? ஆட்சித் தலைவர், ஆர்.டி.ஓ., தாசில்தார் ஆகியவர்களிடம் பெட்டிஷன் கொடுக்கப்பட்டு, ஆரம்ப நிலையில், கட்டிடம் கட்டப்பட்ட நிலையிலே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இதைத் தடுத்திருக்க முடியும் என்று கருதுகிறேன். ஆனால், இப்போது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கவனத்திற்கு வந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, அவர்கள் வட்டாட்சித் தலைவரிடத்தில் சொல்லி, அவர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3 ஆம் நாளன்று ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்திருக் கிறார்கள் என்ற செய்தி நேற்றிரவு 12 மணிக்கு எனக்குக் கிடைத் திருக்கிறது.

திரு. கே. எம். தங்கமணி : நேற்று இரவுதான் ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்ததாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்..

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் அவைக்கு லேட்டஸ்டாக உள்ள விவரங்களைக் கொடுக்க வேண்டுமென் பதற்காக நேற்று இரவு பதிலைச் சேகரித்தேன் என்றுதான் சொன்னேன். நேற்று இரவு 12 மணிக்குத்தான் நோட்டீஸ் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை.

திரு. கே. எம். தங்கமணி : என்னிடம் அந்தக் கட்டிடத்தின் போட்டோ இருக்கிறது ; இதையெல்லாம் அறிந்து கொள்ளாமல் அதிகாரிகள் ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என் பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அந்தக் கட்டிடத் தின் படத்தைக் காண்பித்தார்கள். அந்தக் கட்டிடத்தின் மதிப்பு ஏறக்குறைய இரண்டு இலட்சத்திற்கு அதிகமாக இருக்கும். ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தில் அரசின் நிபந் தனையை மீறி விற்றிருக்கிறார்கள். வாங்கியவர்களும் அரசின் நிபந்தனையை மீறி வாங்கியிருக்கிறார்கள். அவரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : விழுப்புரம் பேரூராட்சிக்குச் சொந்த மான நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்று சொல்லி யிருக்கிறார்கள். அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட புறம்போக்கு

நிலத்தில் பங்களா கட்டும் அளவுக்கு அரசு அதிகாரிகள் எப்படி அனுமதித்தார்கள்? குடிசை போட்டால் கூட பிரித்துப் போடுகிறவர்கள் எப்படி பங்களா கட்ட அனுமதித்தார்கள்? அதை உடனடியாக அப்புறப்படுத்தி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்த நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பது சரியல்ல. அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டவர்களின் சம்மதத்தின் பேரில் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் அந்த நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது அல்ல என்று சொல்லுகிறார்கள். ஆனால் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட கன்டிஷன் பட்டா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல இடங்களில் இப்படி ஏழை எளியவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்களைப் பயமுறுத்தி அல்லது அதிகப் பணம் கொடுப்பதாகச் சொல்லி அந்த நிலத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டவர்களிடமிருந்து நஷ்டஈடு வாங்கி அந்த ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கண்டிஷன் பட்டா என்பது அரிசனங்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. இந்த நிலங்கள் அரிசனங்களுக்கு ரிசர்வ் செய்யப்பட்ட நிலங்கள் அல்ல என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படி கொடுக்கப்பட்ட நிலங்களை எல்லாம் பலர் விற்று விடுகிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து அதன் பேரில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக தனியாக அலுவலர்களைப் போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதில் இதுவும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விருது வழங்கும் திட்டம்.

*வினா எண் 46—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர்களுக்கு மாநில அரசு விருது வழங்குவது போன்று தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விருது வழங்க வேண்டுமென்று தொழில்நுட்பக் கல்வி வாரியம் தமிழக அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதென்பது உண்மையா?





(ஆ) ஆம் எனில், இது பற்றி அரசு என்ன முடிவு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) 1980–81ஆம் ஆண்டு முதல் பல்தொழிற் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர் எழுவருக்கும், பொறியியற் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர் மூவருக்கும் ஆகப் பத்துப் பேருக்கு, ஒவ்வொருவருக்கும் ரொக்கமாக ரூபாய் 1,000-மும் மற்றும் ரூபாய் 50 மதிப்பு கொண்ட பதக்கமும் கொடுத்து சிறப்பிக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: ஏற்கனவே இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு பரிசு கொடுத்ததாகவும், விருது கொடுத்ததாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இது தவிர தொழில் நுட்பக் கல்வி வாரியம் வேறு பரிந்துரைகள் ஏதாவது அறிவித்திருக்கிறதா? அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேறு பரிந்துரைகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, பல்வேறு நிலைகளில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு மாநில அரசு விருதுகள் வழங்குவதுபோன்று ஒவ்வொரு மாவட்ட அளவிலேயும் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் நல்லொழுக்கமும், பண்பும் படிப்பும் நிரம்பப் பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுத்து விருது வழங்குவது பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட கருத்துரை இப்போது ஆலோசனையில் இல்லை.

திரு. கோ. விஸ்வநாதன்: ஆசிரியர்களுக்கு விருது வழங்குகின்ற அரசாங்கத் திட்டத்தை அனைவரும் ஆதரித்து வரவேற்கிறார்கள். அதிலே கல்லூரி ஆசிரியர்கள் மட்டும் விடுபட்டுப் போயிருப்பது அவர்களுக்கு வருத்தமாக இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1982 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதன் தொடர்ச்சியாக கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் 1979—80 ஆம் ஆண்டு முதல் பத்து பேர்களுக்கு விருது வழங்கப்பட்டது அந்த விருது ஆயிரம் ரூபாய் பணமுடிப்பும், நற்சான்றும், பதக்கமும் கொண்டது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, விருது வழங்கும் போது என்ன என்ன அடிப்படைத் தகுதிகள் இருக்க வேண்டுமென்று அரசு நிர்ணயித்து இருக்கிறது? அந்தத் தேவைகளை கல்லூரித் துறையே ஆராய்கிறதா? அல்லது வேறு துறைகள் ஆராய்கின்றனவா? அதற்காக அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நல்லாசிரியர்களைத் தேர்வு செய்வதற்காக சான்றோர்களைக் கொண்ட குழு ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்பட்டு அவர்களை அதை பரிந்துரை செய்கிறார்கள்.

திரு. இல. பலராமன்: அதிகாரப் பற்றற்றவர்களை அதிலே இணைப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கல்லூரி ஆசிரியர்களில் நல்லாசிரியர்கள் யார் என்பதைத் தேர்ந்தெடுக்கிற பொறுப்பு இருக்கிற காரணத்தினால் அந்தத் துறையிலே அனுபவம் பெற்றவர்கள், அந்தத் துறையில் பல விவரங்களைத் தெரிந்தவர்கள் தான் இருக்க வேண்டும். ஆகவே அப்படிப்பட்டவர்களைக் குழுவிலே போட வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தனலவர் அவர்களே, நல்லாசிரியர்கள் அந்தக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது· நல்லாசிரியர்கள் சிலர் தேர்ந்தெடுக்கப்படாமல் விடுபட்டுப் போயிருப்பதாகப் புகார் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம: நல்லாசிரியர்கள் விடுபட்டுப் போனதாக தகவல் எதுவும் இதுவரை எங்களுக்கு வரவில்லை. நல்லாசிரியர்கள் என்ற விருது வழங்கப்படுவதற்குக் காரணம்மாணவர்களுடைய அறிவுவளர்ச்சியில் அவர்கள்கொண்டிருக்கின்ற அக்கறை. அவர்கள் சொல்லித் தருகின்ற பாடங்களை முறையாகச் சொல்லித் தருதல், கூடுதலாக மாணவர்களுடைய நலனிலே பாடுபட்டவர்கள் என். சி.சி. என்.எஸ். எஸ். போன்ற இயக்கங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தக்கூடியவர்கள் இப்படிப்பட்ட ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காகத் தருகிறோம் சம்பளம் வாங்குகிறோம். சம்பளத்திற்காக வேலை பார்க்க



1982 பிப்ரவரி 5]

வேண்டுமென்று நிலையில் உள்ளவர்களைக் காட்டிலும் இந்த நல்லாசிரியர்கள் சமுதாயத்திற்குத் தேவை என்ற அடிப்படையில் அவர்களை ஊக்குவிப்பதற்காக இப்படிப்பட்ட நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

### சேலம் அரசு கலைக் கல்லூரியில் மாலை நேர முதுகலை வகுப்புகள் துவக்கும் திட்டம்.

வினா எண் 47: செல்வி ப, விஜயலட்சுமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கலைக்கல்லூரியில் மாலை நேர வகுப்புகளின் முதுகலை வகுப்புகள் நடத்த அரசு முடிவெடுத்துள்ளதா?.

(ஆ) ஆம் எனில், வரும் கல்வியாண்டில் இத்திட்டம் செயல் படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) கணிதத்தில் இளமறிவியல் பட்டத்தகுதி B.Sc. (Maths) பற்று மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுமகணிதஆசிரியர்கள் தங்கள் கல்விதகுதியை உயர்த்திக்கொள்ள உதவும்வகையில் கணிதவியல் முது அறிவியல் (M sc., Maths.) துறையில் மாலைநேர வகுப்புகள் துவங்க பல்கலைக்கழகத்திற்குக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் ஒப்புதல் தருவதைப் பொறுத்து 1981—82 ஆம் கல்வி ஆண்டில் இந்த மாலை நேர முது அறிவியல் வகுப்பு துவக்கப்படுவது அமையும். இந்த வகுப்புகளில் ஆசிரியரல்லாதோர் சேர இயலாது.

செல்வி ப. விஜயலட்சுமி: தலைவர் அவர்களே, தற்போது மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் என்ன என்ன பிரிவுகள் சொல்லித்தரப் படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இதுபோன்ற மாலை நேர வகுப்புகளில் விஞ்ஞானமும் பாடங்களை அறிமுகப் படுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பி. எஸ். சி. (மேத்ஸ்) கூட ஒரு விஞ்ஞான வகுப்புத்தான் அதை ஆரம்பித்த பிறகு மற்றவற்றைப்பற்றி யோசித்து எந்தெந்த வகுப்புகள் தேவையோ அவற்றை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமனியன் : பேரவைத் தலைவ்ரவர்களே, இதுபோன்ற காலைநேர வகுப்புகளைத் தமிழகத்தில் அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் அரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மற்றக் கல்லூரிகளிலேயும் மாலை நேர வகுப்புகளுக்குப் போதுமான தேவையிருக்கும் என்ற நிலை இருக்குமேயானால், அதுபற்றி அந்தக் கல்லூரிகளிலிருந்து அவர்கள் பரிந்துரை செய்து பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினால் பல்கலைக்கழகம் அரசினுடைய நிலைகைளை உணர்ந்து அவர்கள் அதற்கான அனுமதியைப் தருவார்கள்.

கெங்கவல்லி அரசினர் மேல் நிலைப்பள்ளி.

*வினா எண் 48—திருமதி தா. இராசாம்பாள் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ கெங்கவல்லி (சேலம்) அரசினர் மேல்நிலைப்பள்ளி பிரித்து பெண்களுக்கென தனி பள்ளி தொடங்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

(ஆ) இவ்வாண்டிலேயே (1981–82) இது நிறைவேற்றபடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை நிலை எண். 1069-ல் கெங்கவல்லி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவியர்களை தனியே பிரித்து; 1981–82 ஆம் ஆண்டில் பெண்களுக்கென தனியாக உயர் நிலைப்பள்ளி துவங்க அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி பள்ளி 15—7—1981 முதல் நடைபெற்று வருகிறது.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவரவர்களே இப்பள்ளியைத் துவங்கியற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலேயும் என்னுடைய சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் அங்கே உள்ள ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில், இருபது ஏக்கர் உள்ள இடத்தில் மோட்டாரைப்பொருத்திதோட்ட வேலையையும் ஆ.ம்பிப்பதற்குச் சாதகமான நிலைமைகள்இருக்கின்றன அங்கேகிணறும் உள்ளது. அதே நேரத்தில் பெண்கள் பயிலுகின்ற பள்ளிக்கும் காம்பவுண்ட் இல்லாமல் திறந்த வெளியாக இருக்கிறது. எனவே அங்கே சுற்றுச் சுவர் ஒன்றும் அமைத்தும் மோட்டார் அமைத்துத் தோட்ட வேலைகளுக்கான நிலைகளையும் ஏற்படுத்தித்தர வேண்டும், அவர்களுடைய சொந்த உபயோகத்திற்கும்



தண்ணீர் தேவைப்படுகிகிறது. எனவே, சுற்றுச் சுவருக்கும் தண்ணீருக்கும் இந்த நிதியாண்டிலேயை நிதி உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்பிமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே பல்வேறு பள்ளிகளில் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து முன்னுரிமைப் பிரகாரம் வசதிகளைச் செய்து வருகிறோம். பல்வேறு பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றது ஆசையாகக் பல பள்ளிகளை ஆரம்பித்துவிட்டுப் போய்விட்டார்கள் முப்பது வருட காலத்தில் நாங்கள் வந்து 30 வருட காலத்தில் கட்டிடம் இல்லாத பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டித்தர வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் முன்னுரிமைப் பிரகாரம்தான் அந்த வேலைகளைச் செய்ய வேண்டும்.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பள்ளியை ஆரம்பிப்பதற்கென அரசு எந்த நிதி உதவியையும் செய்ய வேண்டியது இல்லாமல், கட்டிடங்கள், ஆசிரியர்கள், பர்னிச்சர்கள் ஆகிய அத்தனையும் இருக்கிறது ஆகவே, இதில் தனிக் கவனம் செலுத்தி பெண்கள் பயிலும் பள்ளி. ஊரை ஒட்டி இருப்பதால், பாதுகாப்புக்காகச் சுற்றுச்சுவரும், தண்ணீர் வசதியும் செய்து கொடுக்க அரசு உதவி செய்யுமா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்பிமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, எம்.எல்.ஏ. விற்குத் தங்கள் தொகுதியிலுள்ள பள்ளியைப் பற்றிய கவலை; அமைச்சருக்குத் தமிழ் நாட்டிலே உள்ள அத்தனை பள்ளிகளைப் பற்றியும் கவலை. இதுதான் கேள்வி—பதிலாக வந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள சொன்னார்கள், முப்பதாண்டுக் காலத்திலே ஏதோ திறந்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று. ஆனால் தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சியிலே இருந்த பாழுது கல்விக்கண் கொடுத்தவர் காமராஜ் என்று சொல்லுமளவிற்கு அவர்கள் பள்ளிகளைத் திறந்து கொண்டு வந்தார்கள்.

ஆனால், திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு நிரந்தரமான கட்டிடங்கள் இல்லாமல் மாணவ மாணவியர் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவ்வாறு பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் உடனடியாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

[1982 பிப்ரவரி 4

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்கின்ற நேரத்திலே அங்கே சில இடங்களில் ரீலிங் சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். மேலும் தேவைப்பட்டால், தொடர்ந்து அரசு துவக்கும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப் புழு வளர்ப்பதால், அந்தப் பட்டுக்குக் கிடைக்கும் விலையில் வித்தியாசம் இருக்கிறது. ஒரே ஏரியாவில் 10 பேர்கள் வளர்த்தால், சில பேர்களின் பட்டு வெள்ளையாகவும், சில பேர்களின் பட்டு மஞ்சளாகவும் இருக்கிறது. வெள்ளைப் பட்டுக்கு அதிகமான விலையும், மஞ்சள் பட்டுக்குக் குறைவான விலையும் கொடுக்கப்படுகின்றது. எனவே, எல்லோருக்கும் தரமான முட்டைகளைக் கொடுத்து, நல்ல பட்டை உற்பத்தி செய்வதற்கும், அதோடு ஒன்றான, நல்ல விலை கொடுக்கவும் அரசு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளைக் கவனத்தில் கொண்டு, நல்ல விதைகள், வித்துகள் அளிக்கப்படும். நல்ல, தரமான பட்டுக் கூடுகள் வருகின்ற நேரத்தில், அப்படி கொடுக்கப்பட்டு, அதற்குத் தரமான, நியாயமான விலை கொடுக்கப்படும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டு, பெரும்பாலும் கர்நாடக மாநிலத்தில், பெங்களூரில் விற்கப்படுவதால், அதிகமான விலை கிடைப்பதில்லை. ஆகவே, அதை அரசே கொள்முதல் செய்து, நம்மிடமுள்ள ரீலிங் சென்டர்களுக்குத் தேவையான பட்டை எடுத்துக்கொண்டு, மீதியை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற பட்டுக் கூண்டுகளைத் தமிழ்நாட்டிலேயே எடுத்து உற்பத்தி செய்வதற்குத்தக்க நடவடிக்கைகளை அரசு கவனமாகச் செய்து வருகிறது.

**திரு. பெ. திருமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப்பூச்சியை வளர்ப்பதால், புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ற ஆண்டில் லோன் கொடுத்து, பட்டுப் பூச்சி வளர்ப்புத் திட்டம் மூலமாக, அதிகமாக வளர்க்கப்பட்டு வறட்சியின் காரணமாக அந்தப் பட்டுப்பூச்சி, செடிகள் செத்துவிட்டன. அரசு கொடுத்த லோனைத் தள்ளுபடி செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 4]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியாக விவரம் கொடுத்தால், அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**கிருஷ்ணகிரியிலுள்ள பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை.**

*வினா எண். 26—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம்-கிருஷ்ணகிரியில் ஏற்படுத்தியுள்ள பால் பவுடர் தொழிற்சாலை எப்போது முதல் தனது பணியினைத் துவங்கும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலுள்ள பால் பொடி தயாரிக்கும் தொழிற் சாலை 1982 ஆம் ஆண்டு இறுதியில் செயல்படவுள்ளது.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டம், காவிரிப் பட்டிணம் பாதையில் கிருஷ்ணகிரியில் பால் பவுடர் தொழிற்சாலை இந்த ஆண்டில் செயல்படும் என்று தெரிவித்தார்கள். அதற்காக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் வறட்சிப் பகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் அந்தப் பால் பவுடர் தொழிற்சாலை எவ்வளவு தொகையில் அங்கே திட்டமிட்டு செயல்பட்டிருக்கிறது? அது இயங்குவதற்குப் பால் உற்பத்தி எவ்வளவு தேவை என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

[முற்பகல் 9-20]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் உருவாக இருக்கிற பால் பவுடர் தொழிற்சாலை ஏற்கனவே 175 லட்சம் ரூபாய் அளவுக்கு முதலீடு செய்து அதனைத் துவங்குவதாக முடிவு செய்யப்பட்டது. ஆனால் இப்போது அந்தத் திட்டத்திற்கு வேறு மதிப்பீடு செய்து 275 லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு அதை உயர்த்தி விரைவில் அதனை முடிக்க இருக்கிறோம். ஏற்கனவே 175 லட்சத்திற்குத் திட்டமிடப்பட்டிருந்த அந்தத் திட்டத்திற்கு விலைவாசி உயர்வு மற்றப் பிரச்சினை காரணமாக மேலும் 100 லட்சம் கூடுதலாகச் செலவழிக்க இருப்பதன் காரணமாக, அதாவது இரண்டே முக்கால் கோடி அளவுக்குத் திட்டம் தீட்டி கூடுதல் 100 லட்சம் ரூபாயை உள்ளடக்கிய திருத்திய மதிப்பீட்டுக்காக மத்திய அரசு ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளோம். அதுவும் கிடைத்துவிடும் என்று கருது

மாண்பமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஒரு நிலைமையை எடுத்துச் சொன்னேனே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜ் போன்றவர்கள் அதிக அளவில் மக்கள் படிக்கவேண்டுமென்ற காரணத்தால் பள்ளிகளைத் திறந்தார்கள். அவ்வாறு திறக்கின்றபொழுது பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்களைப் பற்றி மதிப்பிடவில்லை. இப்பொழுது தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் அத்தகைய பள்ளிகளுக்கான கட்டிடங்களைக்கட்டி வருகிறோம். இதில் உள்ள கஷ்டம் என்னவென்றால், பள்ளிகளைத் திறக்கும் பொழுது தேவயான கட்டிடங்களையும் கட்டியிருந்தால் உங்களிடத்தில்லே இப்பொழுது இவ்வளவு சிக்கலிலே மாட்டிக் கொண்டு பதில் சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை.

விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரி.

*வினா எண் 49—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரியில் முதுநிலை பட்டப்படிப்புகள் (M.A., M.Sc., M.Com.) போன்றவைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

மாண்பமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ). தற்போது அவ்வாறு திட்டம் ஏதும் இல்லை எனினும் 1982—83 இல் புதிய பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு, வகுப்புகள் துவங்க இவ்வாண்டு அக்டோபர் மாத இறுதியில் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். கல்லூரி முதல்வரிடமிருந்து அப்பொழுது விண்ணப்பம் வந்தால் பரிசீலிக்கப்படும்.

முதல் நிலை இரண்டாம் நிலை குற்றவியல் நடுவர் மன்றங்களை ஒருங்கிணைக்கும் திட்டம்.

*வினா எண் 50—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதல்நிலை குற்றவியல் நடுவர் மன்றம் இரண்டாம் நிலை குற்றவியல் நடுவர் மன்றம் ஒருங்கிணைப்பு திட்டம் சம்பந்தமான அரசு ஆணை (G.O.) வழங்கப்பட்டிருக்கிறதா?

(ஆ) இல்லை எனில், உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா ?



மாண்பமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) ஆம். அத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நீதித்துறை அதிகாரிகளைப் போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும் திட்டம்.

*வினா எண். 52—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தின் நீதித்துறை அதிகாரிகள் நியமனத்திற்கு ஆனதேர்வுக்களை போட்டித் தேர்வு (Competitive Examination) மூலம் தேர்ந்தெடுக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்பமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

[முற் பகல் 9—40]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தினை அமுல்படுத்த இவ்வளவு காலதாமதம் ஏன் ? காலதாமதத்தை உடனடியகத் தவிர்த்து, மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்பமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைப்புத் திட்டத்தின் நோக்கம். செகண்ட் கிளாஸ் அதிகாரத்தை உடைய சப்-மாஜிஸ்டிரேட்டுகளது தரம் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்ஸ் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு, அவர்கள் உரிமையியல் வழக்குகளை நடத்துகின்ற டிஸ்டிரிக்ட் முனிசிப்புக்குச் சமமாகக் கொண்டு வரப்பட்டு (District Munesif cum-Judicial Magistrate) என்ற நிலைக்கு அவர்கள் உயர்த்தப்பட்டு, ஒரே கூரையின் கீழ் (Civi. Crimin l within criminal *I* and *II* class offences) ஆகிய அனைத்து வழக்குகளிலும் மக்களுக்கு நீதி கிட்ட வேண்டும். நெடுந்தொலைவுக்குச் செல்லாமல் அருகிலேயே அவர்களுக்கு நீதி கிட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. அதிலே இருக்கிற

பிரச்சினை, அரசு உயர் நீதி மன்றத்திற்கு இதை நடைமுறைப் படுத்துவதற்கான பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது. உயர்நீதி மன்றம்தான் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரைக்கும் இதைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம் எனக் கருதுகிறது. ஒருங்கிணைப்புத் திட்டத்தைத் தமிழகம் முழுவதும் ஒரே நேரத்தில் அமுல்படுத்தி நடத்த, அதற்காக உயர்நீதிமன்றத்தையே அரசுக்குக் குறிப்பு அனுப்ப அரசு கூறி இருக்கிறது.

திரு. ஸேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாநிலத்தின் நீதித்துறை அதிகாரிகள் நியமனத்திற்கு ஆன தேர்வுகளைப் போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா என்பதற்கு ' ஆம் ' என்று பதில் அளித்தார். அமைச்சர், 1958-ஆம் ஆண்டினுடைய சட்டக் கமிஷன் அறிக்கையிலே இது விரைவாக செயல்பட வேண்டும். அதுவும் போட்டித் தேர்வு மட்டுமல்லாமல், பிராக்டிக்கல் தெர்வு, அதை அடுத்து, வாய் மொழித் தெர்வு வைக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அரசு விரைவாக, அந்தக் கமிஷன் சொல்லியிருக்கிற தேர்வு அடிப்படையில், போட்டித் தேர்வு, பிராக்டிக்கல் தேர்வு, வாய்மொழித் தேர்வு ஆகியவற்றை நடத்துகின்ற நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்பிமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்டிரேட் என்ற பதவியை பொறுத்த வரைக்கும் 1965-ஆம் ஆண்டிலிருந்தே போட்டித் தேர்வு சர்வீஸ் கமிஷன் மூலமாக நடத்தப்படாத ஒரு நிலை இருந்து வந்தது. அதைப் போலவே, டிஸ்டிரிக்ட் முனிசிப்பைப் பொறுத்தவரைக்கும்கூட, 1975-ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்தப்படாத நிலைமை இருந்தது. 1965-ஆம் ஆண்டிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பதவியிலே பணி புரிந்து வருபவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் 1965-ஆம் ஆண்டிலிருந்த விதியின்படி வழக்குரைஞர்கள் மத்தியிலிருந்தும் சர்வீசிலிருந்தும் நீதித் துறைக்கு ஆட்களைக் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். ஆனால், வழக்குரைஞர்கள் மத்தியிலிருந்து யாரையும் தேர்ந்தெடுக்காத காரணத்தால், வழக்குரைஞர்கள் மத்தியில் பிரச்சினை எழுந்து தங்களுக்குப் பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டு இனி வருங்காலத்தில் எடுக்கப்படுகின்ற பதவிகளுக்கு, 5 : 1, அதாவது 5 பேர்களை வழக்குரைஞர் பிரிவிலிருந்து எடுத்தால், ஒருவர் மட்டுமே சர்வீசிலிருந்து என்ற முறையில் எடுத்து, அதைச் சீர் செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் பொதுமக்கள் நெடுந்தூரம் சென்று கஷ்டப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதாகக் கூறினார்கள். காஞ்சி மாநகர் செங்கல்பட்டு மாவட்டத் தலைநகராக இருந்தாலும், அந்தப் பகுதியிலே இதுபோன்ற முதல் நிலை மாஜிஸ்டிரேட் கோர்ட் இல்லாத நிலையையறிந்து, உடனடியாக அங்கு அந்த கோர்ட் திறக்கப்பட நடவடிக்கை எடுக்குமா அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்துகின்றபோது, காஞ்சிக்கு மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலுமே இந்தக் குறை தீர்ந்து விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50-வது கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, உயர்நீதி மன்றத்திலே அவர்கள் நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாடு முழுவதும் இந்த மதுவிலக்குத் திட்டத்தின் காரணமாக, இது முதல் வகுப்பு நீதி மன்றத்திற்குப் போக வேண்டும் என்ற காரணத்தினால், முதல் வகுப்பு நீதி மன்றங்களிலே ஆயிரக்கணக்கான வழக்குகள் 2 ஆண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தினால், இது விரைவாக நடைமுறைப் படுத்தப்படுமா ? அது மட்டுமல்ல, தேர்வு முறையைப் பற்றிச் சொன்னார்கள். 1965 லே இருந்து நடைமுறைப் படுத்தாத காரணத்தால் தமிழகம் முழுவதும் 30 நீதி மன்றங்களில் நீதிபதிகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதனால் அந்தப் பகுதி மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பதனால் உடனடியாகத் தேர்வுக் குழு போட்டு இந்தக் குறையை நீக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு வழக்குகளைப் பொறுத்த வரையிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே என்னிடம் நேரில் சொன்னார். மதுவிலக்கு வழக்கைத் துரிதமாக முடிக்கின்றபோது மக்களுக்கு இன்னல் குறையும். நீதி மன்றங்களிலும், பென்டன்சி குறையும் என்கின்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்கள் பரிந்துரையை ஏற்று உடனடியாக அரசு உத்தரவிட்டு 21 நீதிமன்றங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்த பிரச்சினையைப் பொறுத்தவரையில், 31 நீதி மன்றங்களில் நீதிபதிகள் இல்லாத நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப்போல, 1965 ஆம் ஆண்டி

லிருந்தே வழக்கமாகவே உயர்நீதி மன்றம் சர்வீசிலே இருந்து மட்டும் தேர்ந்தெடுத்து அரசின் அனுமதி பெற்று நியமித்து வந்தார்கள். தேர்வு நடத்துவது அரசு அல்ல. முழுக்க முழுக்க தேர்வு நடத்துவதற்கு உயர்நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருக்கிறது.

தற்போதும்கூட அதே அடிப்படையில் சென்ற ஆண்டு 52 பேர்கள் அடங்கிய லிஸ்ட் ஒன்றைத் தயார் செய்து அதுவும் சர்வீசிலே இருந்த அவர்களைக் கேட்டு அவர்களிலிருந்து தேர்ந்தெடுத்து அரசுக்கு, அவர்களை நியமனம் செய்ய, அப்ருவல் கேட்டு உயர்நீதி மன்றம் அனுப்பியது. இதிலே 35 பேர்கள் மட்டுமே தகுதியைப் பெற்றிருந்தார்கள். விதி 8 (4) (2) என்ற விதியின் கீழ் 5 ஆண்டு காலம் குறைந்தபட்சம் அவர்கள் வழக்குரைஞர் பட்டம் பெற்று, அனுபவம் பெற்று இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த விதியின் படி தயாரித்த ஒரு 17 பேர்களை மேற்கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றம் கேட்டு அதற்காக விதிகளை 'ரிலாக்ஸ்' செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் அவர்கள் இந்த மனுக்களைக் கோருகின்றபோதே ஒரு கன்டிஷன் போட்டிருந்தார்கள். அந்தக் கன்டிஷன் பிரகாரம்-மனு தாக்கல் செய்யக்கூடிய தகுதியை அவர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டு காலம் அனுபவம் பெற்றிருக்கக் கூடியவர்கள் மட்டுமே மனுவைத் தாக்கல் செய்யவேண்டும் என்று நோட்டிபிகேஷன் போட்டிருந்த காரணத்தால் பல டிப்பார்ட்மெண்டுகளிலே வேலை செய்த பல பேர்கள் தகுதியைப் பெறாதவர்கள் மனு தாக்கல் செய்யவில்லை. அடுத்து, தகுதியைப் பெற்ற பலர், மனு தாக்கல் செய்திருந்த அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், மனு தாக்கல் செய்யத் தகுதியே இல்லாமல், நோட்டிபிகேஷனும் கோரப்படாமல் இருந்த நிலையில் தாக்கல் செய்தவர்களில் 17 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தால், அது விதிக்கு அப்பாற்பட்டு இருக்கிறது என்ற காரணத்தாலும், தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் அரசுக்கு மனு தந்திருந்த காரணத்தாலும், இதை அரசு உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் சொன்னது. உயர்நீதி மன்றம் அதைத் தற்போது ஏற்று, விதிக்குட்பட்டு தகுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த 35 பேர்களை அந்தக் காலியாக இருக்கின்ற இடங்களில் நிரப்புவதற்கு இசைந்து, ஒரு வாரத்திற்கு முன்னால் அரசுக்கு உயர்நீதிமன்றம் பதில் அனுப்பி இருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நீதித் துறை நியமனங்களுக்கு வழக்கறிஞர் அனுபவம் கேட்கப்படுகிறது. ஆனால் நடைமுறையில் 'பார் கவுன்சில்'-ல் பதிந்த வருடங்கள் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதை மாற்றி தொழில் நடத்திய அனுபவத்தைக் கணக்கில் எடுக்கிற வகையில் தமிழக நீதித் துறை நியமன விதிகள் திருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதியிலே, மாண்புமிகு உறுப்பினர் பாலு அவர்கள் கூறியதைப்போல இருந்த போதிலும் கூட, அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது தேர்வாணைக்குழு, அவர்களது அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தால், நடைமுறையிலே அனுபவக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதற்காக விதியைத் தனியாக மாற்ற வேண்டியது இல்லை என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 9–50]

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீதிமன்றங்களில்—குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் இருக்கின்ற செகன்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட்ஸ் நீதிமன்றங்களில் மாஜிஸ்டிரேட்டுகள் கிடையாது. ப்ரொடக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஆக்ட் போடப்பட்டும் அதற்கும் நியமனம் கிடையாது. ஏற்கனவே வழக்கு மன்றத்திற்குப் போகக்கூடியவர்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். இப்படி ஒருங்கிணைப்பு செய்யும் நேரத்தில மாஜிஸ்ரேட்டுகள்—6 மாதம், 1 வருஷம்-இல்லாமல் இருப்பது சரியா ? இதைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்களுடைய உணர்வுகளோடு நானும் ஒன்றுகிறேன். இது குறித்து நாங்கள் உயர்நீதி மன்றத்திற்குப் பல முறை எழுதினோம். 52 பேர் கொண்ட ஒரு பட்டியலை அவர்கள் அனுப்பியதில் ஒரு சின்ன பிரச்னை காரணமாக, 17 பேர் தகுதியில்லாதவர்களாக இருந்தனர். அதன் காரணமாக சிலர் உயர்நீதிமன்றத்தில் ரிட் தாக்கல் செய்தனர். இதனால் ஒரு 4,5 மாதம் காலதாமதம் ஆகிவிட்டது. உயர்நீதி மன்றத்தால் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களாலேயே அனுப்பி வைக்கப்பெற்ற பட்டியலில் இருந்து தகுதியுள்ள ஆட்களை நியமிக்க தற்போது நடவடிக்கை எடுத்து விட்ட காரணத்தால், இந்தப் பிரச்னை தற்போது முடிந்து விட்டது.

**சிறைச்சாலைகளில் தண்ணீர், மின் இணைப்பு வசதிகளுக்கான நிதி உதவி.**

***வினா எண். 51—திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் தண்ணீர் வசதி, மின் இணைப்பு முதலிய வசதிகள் செய்வதற்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், 1980–81 ம் ஆண்டில் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 300 இலட்சம்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 3 கோடி ரூபாய் சென்ற ஆண்டு மத்திய அரசிடமிருந்து சிறைச்சாலையில் தண்ணீர் வசதி, மின் வசதி போன்றவற்றைச் செய்வதற்காகப் பெற்றிருக்கிறோம். அப்படி இருந்தும், இன்னும் சென்னை மத்திய சிறையில் குளிப்பதற்கு தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. நாங்கள் சிறைக்குச் சென்றிருந்த நேரத்தில் குளிப்பதற்காக பல மணி நேரம் காத்துக் கிடக்க வேண்டிவந்தது. மேலும், அங்கே அடிக்கடி மின்சார தட்டுப்பாடு ஏற்படுகிறது. 3 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெற்ற பின்பும், சென்னை நகரில் உள்ள சிறைச்சாலையில் இந்த வசதிகள் செய்து தராமல் இருக்கக் காரணம் என்ன ? வேறு எங்கே அந்தப் பணம் செலவழிக்கப்பட்டது? இப்போது நாங்கள் போகிறோம் என்றாலும் பின்னால் மற்றவர்கள் செல்வதற்கும் வசதி செய்து வைக்க வேண்டாமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் சென்னையிலே இருக்கின்ற மத்திய சிறைக்குத்தான் செல்ல வேண்டும் என்பது அல்ல. புழலுக்கு சிறைச்சாலையை மாற்றம் செய்கிறோம். வசதிகள் அங்கே அதிகமாக இருக்கும். அங்கே பிரச்னை இருக்காது (சிரிப்பு).

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, புழலில் ஏற்படுத்த இருக்கும் திறந்த வெளிச் சிறைச்சாலையில் இந்த வசதிகளைச் செய்து தர எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு ஒதுக்கிய 3 கோடி ரூபாயில் இருந்து அல்ல. மாநில அரசே 50 இலட்ச ரூபாய் ஒதுக்கி, பொதுப்பணித் துறை மூலமாக தற்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ள இந்த 3 கோடி ரூபாயை மத்திய சிறைச்சாலைகளுக்கு எந்தத் திட்டத்தின் கீழ் பகிர்ந்து அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அறிய விரும்புவதோடு, கோவைச் சிறைச்சாலையில் இருக்கும்படியான கைதிகளுக்கு சிறு



வாணி நீர் போதுமான அளவிற்குக் கிடைக்காமல் இருக்கிறது. அதைத் தீர்த்து வைக்க என்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 கோடி ரூபாய் எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பாளையங்கோட்டையில் இருக்கும் சிறைக்கு இன்னும் போதுமான இடவசதி செய்வதற்கு 47 லட்ச ரூபாயும், அதைப்போலவே அங்கே டைப்ரைட்டர், டெலிபோன் இன்ஸ்டலேஷன் போன்ற வசதிகளையும், டெயிலரிங் மெஷின்கள் மற்றும் பர்சேஸ் ஆப் ஆர்ம்ஸ் பார் செல்ப்—எம்ப்ளாய்மென்டுக்காக ரூ. 78 ஆயிரம் ரூபாயும், ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல், தென்னாற்காடு மாவட்டத்தில் (கடலூர்) உள்ள சப்-ஜெயில்களை நேரடியாக சிறைத் துறையின்கீழ் கொண்டு வருவதற்காக 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், அங்கே பர்னிச்சர் வாங்க 9,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, செங்கை மாவட்டத்தில் இருக்கும் சில சப்-ஜெயில்களை ரெவின்யூ துறையிலிருந்து நேரடியாக சிறைத் துறைக்கு மாற்ற 4 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். சென்னையிலே இருக்கின்ற சிறைச்சாலையைப் புழலுக்கு மாற்றுகின்றபோது கூடுதல் செலவுக்காக மேற்கொண்டு ஒரு 28 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் அதேபோல் குவார்ட்டர்ஸ் கன்ஸ்டிரக்ஷனுக்காக 14 லட்ச ரூபாயும் ஒதுக்கியுள்ளோம். மதுரையில் இருக்கும் சிறைக்கு தண்ணீர் வசதி மற்றும் கூடுதல் அக்காமொடேஷன் போன்றவற்றிற்கு 60 லட்ச ரூபாயும், வார்டர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்ட 11 லட்ச ரூபாயும், அதைபோல் பர்னிச்சர் வாங்க 75 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. திருச்சியில் இருக்கும் சிறைக்கு கூடுதல் இட வசதி முதலியவற்றைச் செய்வதற்கு 60 லட்ச ரூபாயும், பர்னிச்சருக்கு 75,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. வேலூரில் அதைப்போன்ற செலவுகளுக்கு 31 லட்ச ரூபாயும் சேலம் சென்டிரல் பிரிசனுக்கு ஒரு 16 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கோவையில் இருக்கின்ற சிறையில் குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில் தக்க நடவடிக்கைகளை அரசு இப்போது எடுத்து வருகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஆங்காங்கே சிறைச்சாலைகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முகவை மாவட்டத்திற்கு இதுவரையில் சிறைச்சாலை கிடையாது. ஆகவே, அங்கே ஒரு சிறைச்சாலை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, முகவை மாவட்டமும் பாண்டிநாட்டின் ஒரு அங்கம் ஆகையால் மதுரையிலே இருக்கிற சிறைச்சாலை முகவை மாவட்டத்திற்கும் பயன்படும்.

மலட்டாறு திட்டம்.

*வினா எண். 53—திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பருவமழை தவறியுள்ளதால் மலட்டாறு திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அணைக்கட்டு கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : தலைவரவர்களே, இப்போது அணைக்கட்டும் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆய்வு முடிந்து அறிக்கை எப்போது அரசுக்கு வரும்? எப்போது திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இதில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் அவருடைய கருத்து பெறப்பட்டு, அதன்படி திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : தலைவரவர்களே, இத்திட்டத்திற்குரிய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இத்திட்டத்தைப் பொறுத்தவரையில் இருவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. இதை ஒரு நீர்த்தேக்கமாக கட்டுவது என்பது ஒன்று. மற்றொன்று இதை ஒரு அணையாக கட்டுவது என்பது. இந்த இரண்டு கருத்துக்களில் எதை ஏற்றுக் கொள்ளலாம் என்பதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இதில் ஒரு முடிவு எடுத்த பிறகுதான் மற்ற பணிகள் தொடங்கப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய தேவையையும் அவசரத்தையும் உணர்ந்து அரசு ஏற்கனவே இதை ஒரு நீர்த்தேக்கத் திட்டமாக எடுத்துக்



கொள்ள பரிசீலனை செய்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த இடத்தைப் பார்வையிட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. அவரிடத்திலிருந்து இன்னும் அறிக்கை வராத ஒரே காரணத்தால் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்ற பதில் வந்திருப்பதாகக் கருதுகிறேன். அரசு ஒரு சுற்றறிக்கை அனுப்பியாவது மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உடனடியாக அறிக்கை பெற்று, திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அவருடைய கருத்தைத் தான் எதிர் பார்க்கிறோம். அவர் என்ன கருத்தைக் கொண்டிருந்தாலும் இறுதி முடிவை அரசுதான் எடுக்கும். அவர் என்ன கருத்தைக் கொண்டிருந்தாலும் அந்தப் பகுதி மக்கள் தேவையைக் கருதி தகுந்த நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தை எதிர்பார்க்கிறோம் விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வைகை ஆற்றின் கால்வாய்களை மேம்பாடு செய்யும் திட்டம்.

*வினா எண். 54—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977ஆம் வருட கடைசியில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வைகை சீரமைப்புக் கால்வாயும் அதைச் சார்ந்த கிளைக் கால்வாய்களும் கண்மாய்களும் உடைப்புகள் எடுத்தும் அதில் உள்ள பாலங்கள் சேதமடைந்தும் இதுவரை மராமத்து செய்யப்படாமல் உள்ளதா ?

(ஆ) இதனால் விவசாயத்திற்குத் தண்ணீர் வைகை அணையிலிருந்து விடமுடியாத நிலைமையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) 1977–79 ஆம் வருடத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் சேதம் அடைந்த வைகை ஆற்றின் கால்வாய்ப் பகுதிகளில் மீண்டும் வெள்ளக் காலங்களில் சேதம் ஏற்படாமல் தடுக்க, குறிப்பிட்ட இடங்களில் கால்வாய்களின் தடங்களை மாற்றியமைக்கவும் மற்றப் பகுதிகளை மேம்பாடு செய்யவும் ரூ. 313 இலட்சம் மதிப்பீட்டில், தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஒரு விரிவான செயற் குறிப்பினை அரசிற்கு அனுப்பியுள்ளார். இது

பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் மேற்சொன்ன பணிகளில் சில ரூ. 40 இலட்சம் செலவில் 1981—ஏப்ரல் திங்கள் முதல், வறட்சி நிவாரணப் பணியின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

(ஆ) கால்வாய்களில் சில பகுதிகள் சேதமுற்றதால் வைகை அணையிலிருந்து விவசாயத்திற்கான தண்ணீர் திறந்து விடமுடியாத நிலைமை எதுவும் ஏற்படவில்லை.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ச்சியாக மழையின் காரணமாக சின்னாபின்னப்பட்டு. அங்கே பெரும்பகுதி கண்மாய்களுக்கு தண்ணீர் வரவில்லை. ஆனால் இங்கே அமைச்சர் அவர்கள் எந்த கண்மாய்க்கும் தண்ணீர் வராத நிலைமை இல்லையென்று சொன்னார்கள். குறிப்பாக சுமார் 3,000 ஏக்கர் பாசன வசதியுள்ள எமனேஸ்வரம் ஏரிக்கு தண்ணீர் வரவில்லை. அதைப்போன்று பல ஏரிகள் தண்ணீர் வரத்து இல்லாமல் இருக்கின்றன. அங்கே எந்தவிதமான ரிப்பேரும் கடந்த நான்கு ஆண்டுகளாகச் செய்யப்படவில்லை. திட்டங்கள் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ; ஆனால் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. ஆகவே, உடனடியாக அந்த வேலைகளை ஆரம்பித்து, இந்த ஆண்டிலாவது தண்ணீர் வர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977, 79 ஆகிய ஆண்டுகளில் பெய்த பெருமழையின் விளைவாக வைகைக் கால்வாய்ப் பகுதிகளில் மிகுதியான வெள்ளம் ஏற்பட்டு சேதம் ஏற்பட்டது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதுபோல் அத்திட்டத்தினுடைய காலதாமதத்திற்கு காரணமே பழைய தவறை மீண்டும் செய்து விடக்கூடாது என்பதற்காகத்தான். முன்பு மணல் பாங்கான பகுதியிலே கால்வாய் வெட்டி கரை கட்டப்பட்டதன் காரணமாக பல கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அதே தவறை இந்த அரசும் செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் மணல் பாங்கான பகுதிகளை விட்டு நல்ல பகுதிகளுக்குக் கால்வாயினைக் கொண்டு செல்ல வேண்டி இருப்பதால் சற்று காலதாமதம் ஆகிறது. அந்த முறையில் கால்வாய்களை அமைத்து விட்டால் மழைக் காலங்களில் வெள்ளம் கரை புரண்டு ஏற்பட்டால் கூட



பாதிப்பு ஏற்படாது. மேலும் அப்படிப்பட்ட பகுதிகளில் சில இடங்களில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டி இருக்கின்றது. எனவே கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். ஆனால் அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கண்மாய் போன்றவைகளுக்கு தண்ணீர் கிடைப்பது பாதிக்கப்பட்டிருக்குமேயானால் அரசு அதனைக் கவனத்திலே கொண்டு தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆனால் நல்ல காலமாக அந்தப் பகுதியிலே நல்ல மழை பெய்து போதுமான அளவுக்குத் தண்ணீர் இருக்கின்றது. இப்போது தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே அதிலே குறை இருக்குமானால் அரசு அதனைக் கவனத்திலே கொள்ளும். மற்றப்படி இந்தத் திட்டத்தினை கொஞ்சம் நிதானமாகத் செய்ய வேண்டும் என்பதை மனத்திலே கொள்ள வேண்டி இருக்கின்றது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, எமனேஸ்வரம் கண்மாயை கரைமேல் இருக்கக்கூடிய கண்மாய் லிஸ்டிலே சேர்த்திருக்கிறார்களா என்று கேட்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கண்மாய் சேர்ந்திருக்கின்றது. அந்த கண்மாய்க்குத் தண்ணீர் வராததன் காரணமாக 3,000 ஏக்கர் விளைச்சல் நிலம் நான்கு ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தினை உடனடியாக அமல் செய்வதற்கு எற்கனவே திட்டமிடப்பட்டு மணல் பாங்கான பகுதிகளில் கரை போடப்பட்டது என்றும் அதன் காரணமாகத்தான். அப்படி ஏற்பட்டது என்றும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி மணல் பாங்கான பகுதிகளில் கரை போட வேண்டியதன் அவசியம் ஏன் ஏற்பட்டது. அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். அப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலங்களில் ஏற்பட்ட தவறு இது. அதற்காக டிப்பார்ட்மென்ட் மூலமாக சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றது அரசு.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே வைகை நதியிலே வெள்ளம் வரும்போது கிருதமால் வாய்க்கால் வழியாக வெள்ளம் பாய்ந்து மதுரை பஸ் நிலையம் மற்றும் திடீர் நகர் போன்ற குடிசைப் பகுதிகளில் அடிக்கடி சேதம் ஏற்பட்டு ஏழை எளிய மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த கிருதமால் நதியின் இரு பக்கமும் சுவர் கட்டுகின்ற திட்டம் அரைகுறையாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதை மீண்டும் கட்டி முடிக்கின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது குறித்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 55—திரு. க. பாலகிருஷ்ணன், திரு. தி. கே. நல்லப்பன் : மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் சென்னிமலைக்கு அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை ஒன்று கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) நொய்யல் ஆற்றின் குறுக்கே பெரியார் மாவட்டம் சின்னா அத்தூர் கிராமத்தின் அருகே ஒரு (Barrage) கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 713 லட்சம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணை கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதால் நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நொய்யல் ஆற்றுப் பகுதியில் ஒரு இடத்தில் அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள். அந்தத் திட்டமும் இதுவும் ஒன்றா, அல்லது இது வேறு திட்டமா, இரண்டும் ஒன்றுதான் என்றால் இதனால் மேலும் பாசனம் பெறுகின்ற பகுதிகள் எவை எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே இந்தநொய்யலாற்றுத் திட்டம் என்பது ஒரே திட்டம் தான். கோவை மாவட்டம், திருச்சி மாவட்டம், பெரியார் மாவட்டம் போன்றவைகளை இணைக்கக்கூடிய ஒரு திட்டம் இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு தடுப்பு சுவர் கட்டுவதற்குத்தான் இந்த 713 இலட்சம் ரூபாய்ஒதுக்கப் பட்டிருக்கின்றது. திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் ஆற்றுப் பாளையம் அருகே ஒரு ரிசர்வாயர் கட்டுவதற்காக 235 இலட்சம்





ரூபாய் தனியாக ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்திற்குத்தான் ற்போது அடிக்கல் நாட்டினோம். இந்தத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் டெண்டர் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்தின் துவக்க விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை பக்கத்தில் உள்ள நிலங்கள் வானம் பார்த்த பூமியாக இருந்துக் கொண்டு இருக்கிறது. அந்தப் பகுதியிலே பெரும்பாலும் வறட்சி நிலைமை நிலவிக் கொண்டிருக்கிற காரணத்தால், இந்த திட்டத்தை பெருந்துறை வட்டம் முழுவதும் பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது நொய்யல் ஆற்றில், தாராபுரம் வட்டம் சென்னிமலைக்கு அருகில் சின்னாமுத்தூர் கிராமத்தின் அருகில் கட்டப்படுவதால், பெரும்பாலும், முழுமையான அளவில் பெருந்துறை மாவட்டத்திற்கு பயன்படும் என்று சொல்ல முடியாது. பெருந்துறைக்கென்று ஏதாவது பாசன வசதி திட்டங்கள் இருக்கிறதா என்று தனிக் கேள்வியாகப் போட்டால், அதன் மூலம் இதற்கான பதிலை விவரமாகக் கூற முடியும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டு சம்பந்தமாக எங்களுடைய கேள்வியே, பெரியார் மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வட்டம், பெரும்பாலும் வறட்சியாக இருக்கிற காரணத்தாலும், பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி, சென்னிமலை வழியாக இந்த நொய்யலாறு ஒடுகின்ற காரணத்தாலும், அதிலே அணை கட்டினால், குறைந்தபட்சம் அந்தப் பகுதியில் உள்ள குளம் குட்டைகளாவது பாசனத்திற்கு பயன்படும் வகையில் மாற்ற முடியும் என்ற நோக்கத்தோடு தான் கேட்கப்பட்டது. ஆனால் பலன் வேறு எங்கேயோ போய்விடுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தயவு செய்து மழைக் காலங்களிலாவது குறைந்தபட்சம், கட்டவிருக்கிற சென்னிமலை பக்கம் அணைக்கட்டி பெருந்துறை வட்டத்திலுள்ள குளம் குட்டைகள் நிரம்பி பாசன வசதி பெற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய நன்மையைக் கருதித்தான் நானும் சொன்னேன் தனிக் கேள்வியாகப் போடும்படி. காரணம் மூலக் கேள்வி பெரியார் மாவட்டத்தில் சென்னிமலைக்கு அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை

[1982 பிப்ரவரி 5

ஒன்று கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்பது. அரசின் ஆய்விலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு 713 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது என்று விடையளித்தேன். அது தாராபுரம் பகுதிக்கு அதிகமான அளவில் பயன் தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே நீங்கள் குறிப்பிட்டு பெருந்துறை பகுதிக்கு என்னென்ன திட்டங்கள் இருக்கிறது, இந்த நொய்யலாற்றின் அணை மூலம் அதற்கு ஏதாவது பயன் கிடைக்குமா என்று தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் தரப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதியைப் பொறுத்த வரையில் ஏற்கனவே பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டமும் வேறு பல பாசன வசதிகளும் இருக்கின்றன. ஆனால் பெருந்துறையைப் பொறுத்த வரையில் ஆறு பஞ்சாயத்து நீங்கலாக, எந்தவிதமான பாசன வசதியும் இல்லை. ஆகவே, இதை அரசு மீண்டும் பரிசீலிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, ஆற்றின் போக்கை மாற்றுவதற்கு நமக்கு உரிமை கிடையாது. அணை கட்டும் காரணமே நீர் வளத்தை தேக்கிவைத்து நீர் பற்றாக்குறை காலங்களில் பயன்படுத்துவதற்காகத்தான். ஆகவே ஆற்றின் போக்கை வைத்துக் தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும். பெருந்துறை பகுதி வறண்ட பகுதி என்பதற்காகத்தான் அதற்கென்று வேறு பல திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. இந்தக் கேள்விக்கு அது சம்பந்தம் இல்லாதது, இங்கே சொல்லக் கூடாது என்பதற்காக தான், தனிக் கேள்வியாகப் போடும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் சொண்டேன். தனியாக கேள்விப் போட்டால் என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### சர்க்கரை மீது விதிக்கப்படும் வரி.

*வினா எண். 56—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குவிண்டால் சீனிக்கு மத்திய அரசு விதிக்கும் கலால் வரி அல்லது சுங்க வரி எவ்வளவு ?

(ஆ) இவ் வரியைக் குறைத்து வசூல் செய்யும்படி மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் செயற் குறிப்பு, அரசிடம் உள்ளதா ?



-1982 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) (1) லெவி சர்க்கரைக்கு ஆலைவாயில் விலையில் 13.175 சதவீதம்.

(2) வெளிச் சந்தைச் சர்க்கரைக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் வரி விதிப்பு மதிப்பில் (T: if V. l ை) 15.9 சதவீதம்.

(ஆ) இல்லை.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, மக்கள் உபயோகப்படுத்தக் கூடிய அத்தியாவசியப் பொருள்களின் விலை கால் பணம் என்று சொன்னால், அதற்கு போடக் கூடிய கலால் வரி, சுங்க வரி 3/4 பணம் என்ற வகையில் மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே இத்தகைய அத்தியாவசியப் பொருள்கள் மீது போடப்பட்டிருக்கும் கலால் வரி, சுங்க வரிகளை மத்திய அரசு நீக்க வேண்டும் என்று மாநில அரசு ஏதாவது எழுதி இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இதுவரையில் எதுவும் எழுதவில்லை.

### குளச்சல் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மணல்:

*வினா எண். 57—திருவாளர்கள் திரு. ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்தில் 1979–80 மற்றும் 1980–81-ல் மணவாளக்குறிச்சியிலிருந்து சேகரிக்கும் மணல் (மோனசைட்) எவ்வளவு ஏற்றுமதியாயிற்று ?

(ஆ) இதில் அயல்நாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதியாகி உள்ளது ?

(இ) இதனால் கிடைத்த அயல்நாட்டு செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) குமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்திலிருந்து மோனசைட் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் அங்கிருந்து ஆல்வாய்க்கு அனுப்பப்படுகின்றது.

(ஆ) பதில் எழவில்லை.

(இ) பதில் எழவில்லை.

1982 பிப்ரவரி 5]

[முற்பகல் 10-10]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மணவாளக் குறிச்சியில் உள்ள இந்தியன் ரேர் எர்த்ஸ்-க்குச் சொந்தமான பாக்டரியில் உற்பத்தி செய்யக்கூடிய இல்மினைட், சிர்கான், போன்ற பொருள்களில் இருந்தும் அதே போல் மோனோஸைட்டிலிருந்தும் தமிழக அரசுக்குக் கிடைக்கக் கூடிய வருவாய் என்ன ? மேலும் அந்தப் பொருள்களை உபயோகப்படுத்தி டைட்டானியம் டை ஆக்ஸைட், டைட்டானியம் மெட்டல் போன்ற பொருள்களை உற்பத்தி செய்து அதன் வழியாக அதிகமான அளவிற்கு வருவாயைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே அந்தப் பொருள் களை உற்பத்தி செய்வதற்கான தொழில் ஸ்தாபனங்களை ஏற் படுத்துவதற்கு தமிழக அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மூலக் கேள்வி அன்னியச் செலாவணி பற்றியது. அன்னியச் செலாவணி இல்லை என்று சொன்னேன். மற்றபடி தொழில்கள் துவங்கு வதற்கு, அவற்றை வைத்துக் கொண்டு என்னென்ன தொழில் களைத் துவங்கலாம் என்பது பற்றிய விவரங்களுக்கு தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தரலாம்.

திரு. டி. மணி : குளச்சல் துறைமுகத்தில் ஏற்றுமதியாகிற மணல் மற்றப் பொருட்கள் கரை வழி ஒரு மைல் தாண்டித் தான் கப்பலுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தத் துறைமுகத்தை விஸ்தரிக்கக் கூடிய அளவிற்கு கரையோரமாக கப்பல் வந்து செல்ல முயற்சி மேற்கொள்ளப்படுமா !

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இந்தக் கேள்வியை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அன்னியச் செலாவணி எவ் வளவு கிடைக்கிறது என்று கேட்டேன். மோனாஸைட் மட்டும் அல்ல. விமானங்கள் தயாரிக்க உபயோகப்படுத்தக் கூடிய இல்மினைட் போன்ற பொருள்கள் வெளிநாடுகளுக்கு, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அதிலிருந்து அன் னியச் செலாவணி கிடைக்கப்பெறவில்லையா ? அதில் எவ்வளவு விகிதம் தமிழக அரசுக்குக் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : நம்முடைய மாநிலத் திலிருந்து நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வில்லை. அதன் காரணமாக எந்தவிதமான அன்னியச் செலா வணியையும் நாம் பெறவில்லை.



1982 பிப்ரவரி 5]

மதுராந்தகம் வட்டத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம்,

*வினா எண். 58—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் வட்டத்தில் காகித ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆலை எப்போது முதல் செயல்பட ஆரம்பிக்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ரூ. 400 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு 4,500 டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு காகித ஆலை நிறுவ சர்க்கரை நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) நில ஆர்ஜிதம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

(இ) 1983 ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : சர்க்கரை ஆலை மூலம் காகித ஆலை மதுராந்தகத்தில் நிறுவ அரசு நடவடிக்கை எடுத்திருப் பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளவதோடு, அதே நேரத்தில் எவ்வளவு ஏக்கர் விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசு எண்ணியுள்ளது என்பதையும் அவர்களுக்கு மாற்று நிலங்கள் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இதற்கு தேவைப் படுகிற மொத்த நிலம் ஐம்பது ஏக்கர். நில ஆர்ஜித வேலை துவங்கியிருக்கிறது. இதில் எவ்வளவு நன்செய் நிலம், எவ்வளவு புன்செய் நிலம் என்ற தகவல் இல்லை. அப்படி நன்செய் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், அப்படிச் செய்வதால் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற் கான மாற்று ஏற்பாடுகளோ அல்லது உதவி பற்றிய விவரங் களையோ அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படும் ! நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட அந்த விவசாயக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சுமார் 250 பேர்கள் நேரடியாகவும், 150 பேர்கள் மறைமுகமாகவும் வேலை பெற வாய்ப்பிருக்கிறது. நிலம் கொடுத்தவர்கள், அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன் உரிமை வழங்கப்படும்.

[1982 பிப்ரவரி 5

## செங்கம் தொகுதியில் செயல்பட்டு வரும் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள்

*வினா எண். 59—திரு. தா. சாமிக்கண்ணு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் காயம்பட்டு, பூதூர், ஆண்டி பட்டி ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் ஓலை வேய்ந்த கட்டிடங்களில் செயல்படுவதை மாற்றி அவற்றிற்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) செங்கம் தொகுதியில் உள்ள காயம்பட்டு, மேல்புழுதியூர், ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு கூடுதல் நிரந்தரக் கட்டிடங்கள், வறட்சி நிவாரணப் பணி மற்றும் ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் இவ்வாண்டிலேயே கட்டி முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார். பூதூர் என்ற கிராமம் செங்கம் தொகுதியில் இல்லை. மேல் பூதூர் (மேல் செங்கம்பூதூர்) என்ற கிராமம் தான் உள்ளது. அங்கு இருக்கும் ஊராட்சி ஒன்றிய பள்ளி ''ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்'' கூரை வேய்ந்த நிரந்தரக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

திரு. தா. சாமிக்கண்ணு : பேரவைத் தலைவர் அவர்களே, அதன் மதிப்பீடு எவ்வளவு? அது இந்த ஆண்டில் துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவித்திருக்கக்கூடிய பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 50,000 க்குள் மதிப்பீடு தயார் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார். 1981–82 ஆம் ஆண்டில் கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.



1982 பிப்ரவரி 5]

## தனியார் விடுதிகளில் தங்கியிருக்கும் தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு அளிக்கப்படும் சகாயத் தொகை.

*வினா எண். 60—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்காக தனியார் நடத்தும் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு சகாயதொகையாக ரூ. 30 கொடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை ரூ. 50 ஆக உயர்த்தித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்காக தனியார் நடத்தும் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் சகாயத் தொகையினை கீழ்க்கண்ட விகிதங்களில் 1981–82 கல்வியாண்டிலிருந்து அதிகரித்து வழங்க அரசு நிலை ஆணை எண். 633, ச. ந. து. நாள் 27–8–1981ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| வரிசை எண். | | மாணவர் ஒருவருக்கு அளிக்கப் பட்ட சகாயத் தொகை. | உயர்த்தப் பட்ட தொகை | தற்போது அனுமதிக் கப்படும் தொகை |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்ட தலைமையிடங்களில் உள்ள தனியார் விடுதிகள். | 35 | 10 | 45 |
| 2. | மற்ற இடங்களில் உள்ள தனியார் விடுதிகள். | 30 | 10 | 40 |
| 3. | தனியார் விடுதிகள் ,, (பழங்குடியினர்க்கு) | 36 | 10 | 46 |

கிறோம். ஒப்புதல் கிடைத்தவுடன் 1982 இறுதிக்குள் அது செயல்படும். அப்படிச் செயல்படுகிற அந்தத் திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ ஒரு லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து பால்பவுடர் செய்கிற வகையில் கொள்திறன் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : ஒரு லட்சம் லிட்டர் பால் கொள் முதல் செய்து இயங்கினால்தான் அந்தப் பால் பவுடர் தொழிற் சாலை இயங்க முடியும் என்ற நிலையில், இப்பொழுது சராசரி யாக 25,000 லிட்டர்தான் உற்பத்தி இருக்கிறது என்ற நிலையில் பால் உற்பத்தியை ஒரு லட்சம் லிட்டர் அளவுக்குச் செய்ய வேண்டிய வழி வகைகளை முன் கூட்டியே செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதற்காகத்தான் ஆங்காங்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கி வருகிறோம். அதைப் போலவே பால் விவசாயி களுக்குத் தேவைப்பட்ட மாடுகளைப் பல்வேறு திட்டங்கள் வாயிலாகக் கொடுத்து வருகிறோம்... இப்படி உருவாகுகிற போது நம்முடைய அந்தக் குறியீடு நிறைவேறும் என்று கருதுகிறேன்.

திருச்செந்தூர் தாலூக்கா பாரஸ்ட் தேரியிலுள்ள பனை மரங்களினால் கிடைத்த வருமானம்.

*வினா எண். 27—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுகா பாரஸ்டு தேரியில் உள்ள பனை மரங்களினால் எந்தவிதமான வருமானமும் அரசுக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அங்கு பனை மரக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி பனைப்பொருள் தயாரிப்பது பற்றிய திட்டம் ஏதும் மேற்கொள்ளப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை. தேரியில் உள்ள பன்னிரண்டு குத்தகைப் பிரிவுகள் குத்தகை காலம் 1—1—1979 முதல் 31—12—1982 முடிய ஆண்டுக்கு ரூ. 76·572 வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(ஆ) இக் கேள்வி எழ இடமில்லை,





திரு. எஸ். என். இராமசாமி : பாரஸ்ட் தேரியில் அதிக பனை மரங்கள் இருப்பதால் தனி நபர்கள் ஏலத்தில் எடுத்துக் கொண்டு அரசுக்கு வருமானம் கிடைக்காமல் போய்விடுகிற காரணத்தால், நூறு, இருநூறு, ஐந்நூறு என்ற பங்கீட்டு முறை யில் ஏலத்தில் விட்டால் அரசுக்கு அதிக லாபம் வரும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மொத்தமாக ஏலத்தில் விடப்படவில்லை. பன்னிரெண்டு பகுதிகளாகப் பிரித்துத்தான் ஏலங்கள் விடப்படுகின்றன. ஆகவே, இப் போதுள்ள நடைமுறை பிரித்து விடுகிற நிலைமையில்தான் இருக்கிறது.

சென்னையில் அரசின் சார்பில் 5 நட்சத்திர அந்தஸ்தில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 28—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளுக்கு சென்னையில் ங்கிட 5 நட்சத்திர அந்தஸ்தில் சுற்றுலா விடுதி அரசின் சார்பில் ட்டிட எண்ணமுண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எங்கு கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் . (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. செ. இராமலிங்கம் : அண்மைக் காலத்தில் வளைகுடா நாடுகளில் இருந்து சென்னையைத் தவிர மற்றப் பெரு நகரங் களுக்கெல்லாம் பெரும் பணக்காரர்கள் வந்து தங்கி கொண் டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சென்னையில் தங்குகிற வகையில் நவீனமான விடுதிகளைச் சுற்றுலா வாரியம் கட்டி னால் அதிக வருமானம் வரும். ஆகவே, அதைப் பற்றி மறு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வெளிநாடுகள், அராபிய நாடுகளில் இருந்து வருகிறவர்கள் தங்குவதற்காக ஐந்து நட்சத்திர ஓட்டலை அரசோ, சுற்றுலாத் துறையோ கட்டு வது என்பது அவ்வளவு லாபகரமாக இருக்காது. அது மிகப் பெரிய முதலீட்டில் நடத்தப்படுகிற ஒரு தொழில். இப்போது தனியார் மிகப் பெரிய அளவில் சென்னை நகரத்திலேயே புதிய ஓட்டல்களை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு சுற்றுலாத் துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடுத்தர வருவாய்

[1982 பிப்ரவரி

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகின்ற விடுதிகளை அரசே ஏற்று நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அத்தகைய திட்டம் அரசு பரிசீலனையில் இல்லை.

திரு ப. பொன்னுரங்கம்; தலைவர் அவர்களே, என் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மாணவியர்களுக்கான ஆஸ்டல் கட்டிடம் கட்டப்பட்டு, வெகு நாட்களாகத் திறக்கப்படாமல் இருக்கிறது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி தனியார் துறையைப் பற்றியது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 3. அறிவிப்பு

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாரா செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



1982 பிப்ரவரி 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10–20]

(ஆ) கடன் நிவாரண திருத்தச் சட்ட முன் வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : கடன் நிவாரணச் சட்டம் சம்பந்தமாக ஒரு கிளாரிபிகேஷன். இந்தச் சட்டத்தை யாரும் எதிர்க்கப் போவதில்லை. அனைவரும் ஆதரிக்கக்கூடிய ஒன்று. ஏழைகளுக்குப் பயன்படக்கூடிய சட்டம். இந்தச் சட்டத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை எதிர்ப்பதாக இருந்தால் ஆரம்பத்தில் கருத்துச் சொல்லாமே தவிர, சட்டத்தை ஆதரிப்பதாகக் கூறி இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவது கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம் : இந்தச் சட்டம் செப்டம்பர் 30 ஆம் தேதி காலாவதியாகிறது. ........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்படுகிறது. பிறகு விவாதத்திற்கு வரும்போது விரிவாக இது போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்.

திரு. கோ. விஸ்வநாதன் : பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமுன் வடிவை அறிமுகம் செய்யும்போது அறிமுகம் செய்வதையே எதிர்ப்பவர்கள் மட்டுந்தான் ஏதாவது கருத்துக்களைச் சொல்லலாமே தவிர, முழுமையாக ஆதரிக்கக்கூடியவர்கள் அவ்வாறு பேச உரிமையில்லை. தாங்கள் இதிலே முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பில்லில் இருக்கும் கோளாறைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதாவில் இருக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்ட திருத்தங்கள் கொடுத்து வாதிக்க லாம். அறிமுக நிலையில் பேசுவது கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் இப்போது அறிமுகப்படுத் தப்பட இருக்கிறது. அறிமுகம் செய்யக்கூடாது என்று சொன் னால் பேசி முடிவு எடுக்கலாம். அல்லது விதிப்படி வரவில்லை என்று எடுத்துச் சொல்லலாம். அப்படி அல்லாது கருத்துக்களைச் சொல்வதானால் பின்னால் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திருத்தங் கள் கொண்டுவந்து கருத்துக்களைப் பேச, விளக்கத்தைத் தர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அறிமுக நிலையில் பேச வேண்டிய அவசியமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் ; இந்தச் சட்டம் செப்டம்பர் மாதம் 1981-ல் காலாவதியாகிறது. உடனடியாக ஆர்டினன்ஸ் கொண்டு வந்து கன்டினியூட்டி கொடுத்திருக்கலாம். ஆனால் ஆர்டினன்ஸ் டிசம்பர் மாதம் 9 ஆம் தேதி தான் கொண்டு வருகிறார்கள். இரண்டு மாதம் ஒன்பது நாட்கள் இடைவெளி இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்பார்களேயானால் மைய அரசு எந்த அளவுக்கு இதற்கு காரணமாக இருந்தது என்பதை விளக்கிச் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஆர்டினன்ஸ் போடக் கூடாது என்று யாரும் தடுக்கப்போவதில்லை. செப்டம்பர் மாதம் சட்டம் காலாவதியாகும்போதே போட்டிருக்கலாம். அப்படிப் போடாத தால் இந்தச் சட்டம் காலாவதியான காலத்தில் பான் புரோக் கர்ஸ், மணிலெண்டர்ஸ் இருக்கிற பாண்டுகளை வேலிட் ஆக்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்தின்போது எடுத்துக்கொள்ள வேண்டியவைகள் இவை. மாநில அரசைப் பொறுத்தவரை யில்—நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்—ஏழைகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டு மென்ற நன்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டு தொடர்ந்து இதற்கு நீட்டிப்புத் தரவேண்டுமென்று, பட்டிதொட்டிகளிலே எல்லாம் இந்தச் சட்டத்தினுடைய பலன் சென்றடைவதற்காக இன்னும் இதற்கு நீட்டிப்புக் கொடுக்க வேண்டுமென்று நோக்கத் தோடு மாநில அரசே இதைக் கொண்டுவந்திருக்கிறது.





ஆர்டின்ன்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டுமெனபது மாண்பமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியாமல் இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு 3, 4 மாதங் கள் அது வைத்து விட்டால் அதற்காக மாண்பமிகு உறுப்பி னர் அவர்கள் மத்திய அரசைக் சாடுகிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். அந்த விவாதத்தின்போது நீங்கள் சாடலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, விதி 124 தெளிவாகச் சொல்கிறது. மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள் இந்த மாமன்றத்திலே பல்வேறு விதமான சட்ட முன்வடிவுகளை எல்லாம் அறிமுகம் செய்ய இருக்கிறார்கள். அதற்கு முன்பாக தவறான முன்மாதிரியாக இது வந்து விடக்கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். விதி 124 இல்—

[i] *If* a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thanks fit, a brief statement from the member who movies and from a member who opposes the motion, may without further debate, put the question thereon.

[ii] It such a motion is agreed to, the Bill may be introduced.

என்று தெளிவாக இருக்கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் இதிலே ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். இரண்டு மாத இடைவெளியில் எந்தவிதமான சட்டமும் இதைப் பொறுத்தவரையில் கிடை யாது. சட்டமே இல்லாத நிலையில் இடைவெளி ஏற்பட்டு இருக்கிறது. எனவே இன்ட்ரடியூஸ் பண்ணுவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுபபினர் திரு பொன்னுரங்கம் மசோதாவை ஆதரித்து இருக்கிறார். ஆகவே இப்போது அது வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : நோக்கத்தை நாங்கள் ஆதரிக் கிறோம். டெக்னிக்காலிட்டிஸ் வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டெக்னிக்காலிட்டிஸ் பற்றி மசோதா வரும்பொழுது நான் பேச முடியும் இப்போது பேசமுடியாது.

பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 5. ஒழுங்குப் பிரச்சினை.

ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக் கொள்வது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன். விதி 54 இன் கீழ் சில கவன ஈர்ப்பு நோட்டீஸ்கள் கொடுத்தேன். அவைகளுக்கு எல்லாம் தாங்கள் அனுமதி மறுத்து எனக்கு அனுப்பி இருக்கிறீர்கள். அதை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று விதியிலே இல்லை. நம்முடைய விதி 13 இல்

Sub-Rule 3-இல்

The discussion on the address may be interrupted in the Course of a sitting by an adjournment motion under Rule 55.

என்று இருக்கிறது. சபையை ஒத்திவைக்கக் கோரும் அட்ஜர்ன்மென்ட் மோஷனை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கவன ஈர்ப்பை எடுக்க வேண்டாம் என்றால் எப்படிச் சரியாகும்?

இன்றைக்கு நாட்டிலே எவ்வளவோ நானாவிதமான செய்திகள் நடக்கின்றன. எல்லாவற்றையும் நீங்கள் கொடுக்கிற 10 நிமிடத்திற்குள்ளே நாங்கள் பேசி முடித்துவிட முடியாது. அப்படி எடுக்கக்கூடாது என்று இருந்தால் இந்த விதியை நீங்கள் இங்கே போட்டிருக்க வேண்டாம். கவர்னர்ஸ் அட்ரஸ் இருக்கிறபோது வேறு எதையுமே எடுக்கக் கூடாது என்று இதிலே சொல்லியிருக்கிறீர்கள். சபையிலே வேறு எதையுமே எடுத்துக்கொள்ள மாட்டீர்களா? இல்லை, எதையாவது எடுப்போம் என்று சொல்கிறீர்களா? இல்லை, இதை மாத்திரம் எடுக்கமாட்டேன் என்று சொல்கிறீர்களா? அப்படி எடுக்கக்கூடாது என்று முடிவு எடுத்தால் இந்த விதியை நீங்கள் திருத்தியிருக்கவேண்டும் சட்டமும் இருக்கும், எடுக்கவும்





மாட்டேன் என்று சொன்னால் அது முறையல்ல. நான் சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, அட்ஜர்ன்மென்ட் மோஷனையோ கால் அட்டென்ஷனையோ பிரிவிலேஜையோ மற்றவற்றையோ எடுக்கமாட்டேன் என்று சொல்கிறீர்களா?

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின்கீழ் உள்ள கவன ஈர்ப்புகளை நாளையிலிருந்து எடுப்பதற்கான வழிவகை செய்து கொண்டிருக்கிறேன். முடிந்தவரையில் அவைகளை எடுக்கிறேன்.

திரு. துரைமுருகன் : எனக்கு ஒரு உறுதிமொழி கொடுங்கள். நான் கொடுத்தது எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்பதைப் பார்த்துத்தான் முடிவெடுக்க வேண்டும். 54-வது விதியின்கீழ் தினசரி இரண்டு கவன ஈர்ப்புகளை எடுப்பதாக இருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, உங்கள் முடிவை நான் வரவேற்கிறேன். திரு. துரைமுருகன் அவர்கள் ஏற்கனவே பேசிவிட்டார்கள். பிறகு அவர் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்கக் கூடாதா? அவர் பேசிவிட்ட காரணத்தால் நாளைக்கு எதையும் ரெய்ஸ் செய்யக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 9-ஆம் தேதி வரையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடக்கவிருக்கிறது. அதற்குள் எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளவும், ஆளும் கட்சிக் காரர்களுக்கும் அமைச்சர்களுக்கும் நேரம் ஒதுக்கியாக வேண்டும்.

Thiru V. KRISHNAMOORTHI : It is an fundamental right to raise a matter when we feel it is very urgent. The Hon. Speaker should not foreclose our rights.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பற்றி எனக்கும் தெரியும். நானும் உறுப்பினராக இருந்திருக்கிறேன். ஆனால் நேரத்தையும் பார்த்துத்தான் அனுமதி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

[1982 பிப்ரவரி 5

## 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம். (தொடர்ச்சி).

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரை என்பது ஆட்சியின் கொள்கைகளைச் சொல்லக் கூடிய ஒரு ஆண்டு அறிவிப்பாக இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு ஆளுநர் உரையை எடுத்துப் படித்துப் பார்த்தால் முழுக்க முழுக்க இந்த ஆட்சிக்கு ஆளுநரை விளம்பர ஏஜண்டாக வைத்து அவர் கொடுத்த விளம்பரப் படியலாக இந்த உரை இருக்கிறது என்பதை நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு பிராபகரன் அவர்கள் பேசும் பொழுது ஒரு கருத்தைத் குறிப்பிட்டார்கள். பாரதி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதாகவும், ஆனால் சில பேருக்கு இருக்கின்ற வயிற்றெரிச்சல் எல்லாம் இந்தப் பாரதிக்கு இப்படியெல்லாம் சிறப்பு சேர்க்கிறார்களே என்று இருக் கிறது என்பதை அவர் யாரையோ மனத்தில் வைத்துக் கொண்டு குறிப்பிட்டார்.

பாரதிக்கு விழா எடுத்து இவர்கள் காட்டுகின்ற பெருமையை எல்லாம், முப்பதாண்டுக் காலத்திற்கு முன்னாலேயே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் தான் எழுதிய திரைப்படங் களில் பாரதியின் பாடல்களை அருமையாகப் புகுத்திக்காட்டி பாரதியின் பெருமை பாரெல்லாம் விளங்கச் செய்திருக்கிறார்கள்.

> ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
> அலையும் அறிவிலிகாள் பல்
> லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
> டாமெனல் கேளீரோ !

என்ற அந்தப் பாடலை முப்பத்காண்டுகளுக்கு முன்னாலேயே தான் கதை வசனம் எழுதிய திரைப்படத்தில் புகுத்தியிருக் கிறார்கள்.

அதுமட்டுமல்ல, "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்துவிட்டால்" என்ற இன்றைக் கிருக்கின்ற இந்த நிலைகெட்ட மனிதர்களை மனத்தில் நினைத்து அன்றைக்கே பாரதியின் பாடலை திரைப் படத்தில் புகுத்தி அந்தக் கொள்கையைப் பார் அறியச் செய்திருக்கிறார்கள்.





பாரதிக்கு விழா எடுக்கிறோம், தெருவெல்லாம் தமிழ் மணம் பரப்ப வேண்டுமென்று பாடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்குத் தமிழகத்தின் தலைநகராம் சிங்காரச் சென்னையில் தமிழ் மணம் ஓடவில்லை; சாக்கடையில் மணம்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. சென்னை நகரத்தின் 150 வட்டங்களில் நீங்கள் எந்த வட்டத்தை எடுத்துக்கொண்டா லும் சரி. அமைச்சராக இருப்பவரைச் சட்டமன்ற உறுப்பி னராகத் தேர்ந்தெடுக்கின்ற தொகுதியை எடுத்துக்கொண்டா லும் சரி, அல்லது என்னைப் போன்ற சாதாரண உறுப்பினர் களைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியானாலும் சரி;

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

எந்தத் தெருவிலும் மின்சார வசதி கிடையாது; எந்தத் தெருவிலும் ரோடு வசதி கிடையாது; எந்தத் தெருவிலும் குடிநீர் வசதி கிடையாது; எந்தத் தெருவிலும் சுகாதார வசதி கிடையாது; ரோடுகள் எல்லாம், குண்டும் குழியு மாக, சாலைகள் மிகவும் மேசமாக இன்றைக்கு இருக்கின்றன. குடிநீரும், கழிவுநீரும் குடிநீர்க் குழாய்களிலே ஒன்றாகக் கலக்கக் கூடிய அவல நிலை இன்றைக்குச் சென்னையிலே ஏற்பட்டு 'அந்தத் தமிழ் மணம் என்று சொன்னானே, பாரதி; அதுபோய், துர்நாற்றம் வீசுகிறது. ஒரு பெரிய இன்ஜினியர் சொல்லியிருக் கிறார். என்ன சொல்லியிருக்கிறார்? 'இன்னும் 5 ஆண்டுகளுக் குள் சென்னை நகரத்தினுடைய கழிவுநீர் மேம்பாடுத் திட்டம் செயல்படுத்தப்படாவிட்டால், 5 ஆண்டுக்காலத்திலே சென்னை நகரம் கழிவுநீரிலே மிதக்கக்கூடிய பேரபாயத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது' என்று அந்த இன்ஜினியர் சொல்லியிருக்கிறார். இங்கே அமர்ந்துகொண்ருக்கக்கூடிய ஆளும்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், இன்னும் 5 ஆண்டுக்காலத்திற்குள் சென்னை நகரம் எப்படி இருக்குமோ, எவ்வளவு நாட்களுக்கு நீங்கள் இருக்கிறீர்களோ, அதற்குள் இந்த விழாக்கள், விளம்பரங்கள், கண்காட்சிகள், பொருட் காட்சிகள், இவைகளையெல்லாம் விட்டுவிட்டு, உடனடியாக, அன்புகூர்ந்து, சென்னை நகரத்தை சிங்காரத் திருநகராக்க முடி யாவிட்டாலும், சுகாதாரச் சீர்கேடுகளைக் குறைக்கவேண்டும் அதை மாற்றவேண்டும், என்று நான் இங்கே பணிவோடு கேட் டுக்கொள்ள விரும்புகிறேன்.

பாரதிக்கு விழா எடுத்தோம், உலகத் தமிழ் மாநாடு நடத்தி னோம், என்று பெருமையாகப் பேசினீர்கள். இவையெல்லாம் எதற்காக? இன்னும்கூடச் சொன்னார்கள், நீதிமன்றங்களில் தமிழ் இப்பொழுது ஆட்சிமொழியாக வந்து விட்டது, நீதிமன்ற மொழி

[திரு. என். வி. என். சோமு] [1982 பிப்ரவரி 5

யாக வந்துவிட்டது, என்று. இவையெல்லாம் எதற்காக? தமிழ் மொழியைச் சீர்திருத்துவதற்காக. இருக்கிற தமிழ் மொழியைக் கெடுப்பதற்காக அல்ல. இருக்கிற தமிழ் மொழியின் தரத்தைக் கெடுத்து, உலக மக்களுடைய கண்ணோக்கிலே நாம் ஒரு கேலத்தை உண்டாக்குவதற்காக அல்ல. நேற்றைய தினம் கூட ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அபிஷீயல் லாங்குவேஜ் கமிஷன் இந்திய அரசியல் சட்டத்தை மொழி பெயர்த்திருக்கிறது. அதிலே, சீரியஸ் மிஸ்டேக்ஸ் மிகமிக, மோசமான தவறுகள் இருக்கின்றன என்ற காரணத்திற்காக, ஒரு குழுவை அமைத்திருக்கிறது. அரசு தலைமைச் செயலாளர் திரு. திரவியம் தலைமையிலே 8 பேர் கொண்ட குழு அரசியல் சட்டத் தமிழ் மொழி பெயர்ப்பிலே இருக்கக்கூடிய தவறுகளை மாற்ற வேண்டுமென்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஏன் இப்படி? இந்த நிலைமை எதற்காக ஏற்பட்டது? ரூ. 1 இலட்சம் செலவு செய்து, வெளியிடப்பட்ட அரசியல் சட்ட பதிப்புகளில் மிகமிக, சீரியஸான மிஸ்டேக்குகள் உள்ளன என்று சொல்லி, அதனை மாற்ற ஒரு குழு, அமைக்கப்பட்டிருக்கிறது? ஏன் இப்படி மொழி பெயர்ப்பு வேலையை, தமிழ் அறிவு இல்லாதவர்களிடம், தமிழ்ப்பற்று இல்லாதவர்களிடம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு சட்டச் சொல் அகராதி, 1969ஆம் ஆண்டு, அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. அதுவே போதும், ஆனால், அது போதாது, போதாது என்று அவசரம், அவசரமாக, 1979ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் தாம் ஒரு சட்டச் சொல் அகராதி வெளியிட வேண்டுமென்ற ஆசை காரணமாக லா லெக்சிகன் ஒன்றை வெளியிட்டார். அதிலே இருக்கக்கூடிய தவறுகளைப் பார்ப்போம். இந்த மன்றத்திலே தமிழறிந்த பெருமக்கள் இருக்கிறார்கள். நாமும் தமிழைப் பரப்பிக் கொண்டிருக்கிறோம் என்று பெருமைப்படுபவர்கள் இருக்கிறார்கள். ஆனால், 1979ஆம் ஆண்டு முதலமைச்சரால் வெளியிடப்பட்ட 'லா லெக்சிகனில்', சட்டச் சொல் அகராதியில், வெறும் வார்த்தைகள் இருக்கக்கூடாது. அதிலே, சட்ட நுணுக்கமான சொற்கள்தான் இடம் பெறவேண்டும். ஆனால் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களினால் வெளியிடப்பட்ட இந்தச் சட்டச் சொல் அகராதியில் இருக்கக்கூடிய சட்டச் சொற்களை நான் சொல்கிறேன், தயவு செய்து கேளுங்கள்.

Almond—பாதம் பருப்பு, சட்டச் சொல்லா?; animal—மிருகம், சட்டச் சொல்லா? baby food—கிளாஸ்கோ, லாக்டோஜன்; baby food—என்றால், கிளாஸ்கோ. இவை சட்டச் சொற்கள்.



1982 பிப்ரவரி 5] [திரு. என். வி. என். சோமு]

balcony, cafe, cake cup board, curry-powder, hair cutting saloon-ஐக் கூட, சட்டச் சொல் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., 1979ஆம் ஆண்டு வெளியிட்டிருக்கக்கூடிய சட்டச் சொல் அகராதியில் சொல்கிறார்கள். இவற்றுக்கு ஒரு சட்டச் சொல் அகராதி ரூ.20 இலட்சம் செலவில் வெளியிட வேண்டுமா என்பதை நான் இங்கே கேட்க ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்ல, ஏற்கனவே கலைஞர் வெளியிட்ட அந்தச் சட்டச் சொல் அகராதியில் அருமையான மொழிபெயர்ப்புகள். forgery—பொய் ஆவணம் புனைதல்—நல்ல அருமையான தமிழ்ச் சொற்கள்.

[முற்பகல் 10-40]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் சொல்லுகிற அந்தக் குறைபாட்டை பொறுத்தவரைக்கும் ஏதோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அந்தச் சட்டச் சொல்லை லெக்சிகனில் மொழி பெயர்த்தார் போன்ற ஒரு பிரேரணையைச் சொல்லி இருக்கிறார். ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள் தலைமையிலான ஒரு குழு அப்படி சில மொழி பெயர்ப்புகளைச் செய்த பிறகு, அதை நாங்களேதான் பார்த்து அதிலே குறைபாடு இருக்கிறது என்ற காரணத்தால் திரவியம் அவர்கள் தலைமையில் மற்றத் தமிழ் அறிஞர்களை எல்லாம் போட்டு, அந்தக் குறைபாடுகள் எங்கெங்கு இருக்கிறதோ அந்தக் குறைபாடுகளை நீக்கவேண்டும்; தமிழ்ச் சொல் இருக்க வேண்டும்; எளிய தமிழாக இருக்கவேண்டும்; புரிந்து கொள்ளக் கூடிய தமிழாக இருக்கவேண்டும்; வடசொல் கலவாமல் இருக்க வேண்டும் என்று நாங்கள் ஆணையிட்டு தற்போது எங்கெங்கு அந்தக் குறைபாடுகள் இருக்கிறதோ அவைகளை நீக்க நடவடிக்கை எடுத்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் பாராட்ட வேண்டுமேயொழிய, அதை விட்டுவிட்டு அதையே வைத்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடு பேசவேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர் திரு. சோமு அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் அமைச்சருக்கு பதில் சொல்வார். நீங்கள் உட்காருங்கள்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இந்த மொழிபெயர்ப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் செய்தார்கள் என்று சொல்லவில்லை. இத்தகைய கடுமையான மொழிபெயர்ப்புகளைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சருக்கோ, அல்லது மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கோ அவ்வளவு வல்லமை இல்லை என்று தெரியும். இதற்காக சட்டச் சொல் அறிஞர்களை வைத்துத்தான் செய்வார்கள். ஆனால், பாரதி விழா எடுத்துவிட்டோம், உலகத் தமிழ் மாநாடு எடுத்து விட்டோம் என்று பறைசாற்றிக்கொள்ளுகின்ற நீங்கள், அதேபோல இந்தக் குற்றச்சாட்டுகளுக்கும் நீங்கள்தான் பொறுப்பேற்றுக் கொள்கிற கடமையிலே இருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உங்களால் அமைக்கப்பட்டிருக்கின்ற குழு, ஏற்கனவே இருக்கக் கூடிய அந்தச் சட்டச் சொல் அகராதி போதாது என்று கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு சட்டச்சொல் அகராதியை வெளியிட்டாரா, அதற்குப் போட்டியாக 1979 ஆம் ஆண்டு, தான் ஒரு சட்டச் சொல் அகராதியை வெளியிட வேண்டும் என்று முதலமைச்சரால் பெரிய விழா எடுக்கப்பட்டு, இராஜாஜி மண்டபத்தில் வெளியிட்ட சட்டச் சொல் அகராதியில் எவ்வளவு கேவலமாக வார்த்தைகள் இருக்கின்றன. உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிற நேரத்தில் இதைப் பார்ப்பவர்கள் இதை கேலி செய்யமாட்டார்களா?

மேலும் வருகிறேன். 'ஃபோர்ஜரிக்கு' 'பொய் ஆவணம் புனைதல்'. ஆனால் புதிய அகராதியில் 'சிருட்சனை' என்று இருக்கிறது. இது தமிழா? இதற்குத்தான் பாரதிக்கு கோடி கோடியாக, லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவா? உலகத் தமிழ் மாநாட்டுக்கு 12 கோடி ரூபாய்கள் செலவா? அதோடு மட்டுமல்ல. அதேபோன்று 'f.cts' என்பதற்கு 'பொருண்மை' என்றிருக்கிறது. இந்த 'பொருண்மை' என்ற வார்த்தை தொல்காப்பியத்திலே இருக்கிறது. ஆனால் 'f.cts' என்பதற்கு 'சங்கதி' என்று வைத்திருக்கிறார்கள். என்ன சங்கதி? யாருடைய சங்கதி? 'Questi n of fact' என்று வரும்போது 'சங்கதி பிரச்சினை' என்று சொல்லியிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஒரு புகழ்வாய்ந்த வழக்கறிஞர். இன்றைக்கும் நீதிமன்றத்திற்குச் சென்று தாங்கள் வழக்குகளை நடத்தி வருகின்றீர்கள். உங்களுக்கும் தெரியும். 'facts' என்றால் 'பொருண்மை' என்பது உண்மை என்று. அதைப்போய் இங்கே அமர்ந்திருக்கின்ற நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று மாண்புமிகு நீதிபதி அவர்



களைப் பார்த்து, 'மாண்புமிகு நீதிபதி அவர்களே, நான் ஒரு சங்கதியைச் சொல்லுகிறேன்' என்றால் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள். நாம் எல்லாம் பயிற்சி செய்கின்ற வழக்கறிஞர்கள்.

அதோடு மட்டுமல்ல 'document' என்றால் 'ஆவணம்'. அதற்குப் 'பத்திரம்'. 'bor d' என்றால் 'பிணைமுறி'' கலைஞர் அவர்கள் வெளியிட்ட அந்த அகராதியில் 'b nd'. என்றால் 'பிணைமுறி'. அனால் நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட்ட அந்த அகராதியில் 'bond' என்றாலும் 'பத்திரம்' 'பிணைமுறிக்கும்' 'பத்திரம்'. இப்படி வெளியிட்டுவிட்டு, இந்தச் சிறப்புகளுக்கெல்லாம் சிகரமாக இருப்பதுபோல், 'hum n-being'-க்கு—சட்டச் சொல் அல்ல 'h man-being'. அதற்கு ஒரு விளக்கம் மொழி பெயர்ப்பு. 'h man-being என்றால்' 'மானிடப் பிராணி'. இங்கே இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறேன். சட்ட அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். நாம் எல்லாம் மானிடப் பிராணிகளா? இந்த முதலமைச்சர் அவர்களே அவ்வளவு கேவலமாகவா ஆகிவிட்டார்? மற்ற அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அவ்வளவு கேவலமாகவா ஆகிவிட்டார்கள். இந்த மாமன்றம் அவ்வளவு கேவலமாகவா ஆகிவிட்டது? 'human-being' என்பதற்கு 'மானிடப் பிராணி'. இந்த வெட்கக்கேட்டுக்கு உலகத் தமிழ் மாநாடு என்று பீற்றிக் கொள்கின்றவர்கள், இன்றைக்கு பாரதி விழா என்று பீற்றிக் கொள்ளுகின்றவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு இப்போதே இந்தத்தவறை திருத்திக்கொள்ளவேண்டும். 20 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு அகராதி பாழ். ஒரு லட்சம் ரூபாய் செலவிலே வெளியிட்ட அரசியல் சட்டத் தமிழ் மொழி பெயர்ப்பு—இது பாழ். இதற்கெல்லாம் யார் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

இன்றைக்கு உரிமையியல் நீதிமன்றங்களிலே 1-ந் தேதி முதல் தமிழில் பிரச்சினைகள் வருகின்றன. அந்த உரிமை இயல் நீதி மன்றங்களிலே இந்த Civil Procedure Code மொழி பெயர்க்கப்பட்டதா? Contract Act மொழிபெயர்க்கப் பட்டதா? Transfer of Property Act மொழிபெயர்க்கப் பட்டதா? Negotiable Instruments Act மொழிபெயர்க்கப் பட்டதா? Sales of Goods Act மொழி பெயர்க்கப் பட்டதா? இவைகள் எல்லாம் இல்லாமல் நாம் City Civil Court போய் எப்படி வழக்காட முடியும் என்பதை வழக்கறிஞரான தங்களுடைய கவனத்திற்கே விட்டுவிட ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னறக்கு பல பிரச்சினைகள் ஆளுநர் உரையில் எவ்வளவு கவனக் குறைவாக விடப்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டுவது என கடமையென்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் சட்டச் சொல் அகராதியிலே சில தூய தமிழ்ச் சொல் அல்லது மணிப்பிரவாள தமிழ்ச் சொல் அல்லது வட சொல் போன்றவை இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். நானே அதைப் படித்துப் பார்த்த பிறகுதான், அந்தக் குறை பாடுகள் இருக்கக்கூடாது, தூய தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும் என்கிற ஆர்வத்தோடுதான் அந்த மாற் றத்தை ஏற்படுத்தி By way of erratum, this can be used. There is no problem. This would not stand in the way of implementing Tamil in the subordinate judiciary. என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Negotiable Instruments Act, Contract Act, Civil Procedure Code போன்றவைகள் தமிழிலே வரப் போகிறதா என்று கேட்டார்கள். அவைகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் நீதிமன்றங்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தில் அவர் மேலும் எண்ணிப் பார்த்து செயல்பட வேண்டிய ஒன்றை நான் நினை வூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே வெளிவந்த சட்டச் சொல் மொழிபெயர்ப்பு அகராதியில் உள்ள குறை பாடுகளை மையமாக வைத்து, அதற்கு மேல் வளர்ச்சிப் பணி யாகத்தான் தொடர்ந்து மொழிபெயர்ப்பு செய்கின்றவர்கள் செய்ய வேண்டுமே தவிர, முதலில் வந்த அகராதியில் குறை பாடுகள் இல்லாத, தவறு இல்லாத சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் வேறு சொற்களை மறுபடியும் மொழி பெயர்ப்பு என்ற பெயரில் புதிதாக புதிய அகராதியில் புகுத்துவது என்பது பழைய அகராதியையும், புதிய அகராதியையும் பயன் படுத்துகிறவர்களுக்குப் பல்வேறுவிதமான இடர்ப்பாடுகளை விளை விக்கும் என்ற காரணத்தால் ஒரேவிதமான பொருள் தரும், ஒரேவிதமான சொற்கள்தான் இரண்டு அகராதியிலும் இடம் பெறுகின்ற வகையில் திருத்தம் கொண்டு வரப்பெற வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூறுகிற உணர் வோடுதான் நாங்களும் ஒன்றி செய்து வருகிறோம். அந்த முறை யிலேதான் அது வெளியிடப்படும்.

திரு. என். வி. என். சோமு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தமாதம் 1-ம் தேதி முதற்கொண்டு உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனால் அவைகளுக்குத் தேவையான அடிப்படை யான சட்டங்கள்—நான் ஏற்கனவே குறிப்பிட்ட சட்டங்கள்—தமிழில் இன்னும் மொழி பெயர்க்கப்படாத நிலையில் நீதிபதிகள் எவ்வாறு தீர்ப்புகளை எழுதுவார்கள், எதை அதிகாரபூர்வமாக வைத்துக் கொண்டு எழுதுவார்கள் என்பதற்காக அதைக் குறிப் பிட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டச் சொற்களை ஏற்கனவே இருந்த ஒரு குழு அருமையான முறையில் எழுதி வெளியிட்டு இருக்கிறார்கள். அதிலே யார் இருந்தார்கள் என்றால்—தமிழ் ஆய்ந்த பெருமகன்கள் அதிலே இருந்தார்கள். திருவாளர்கள் சீப் ஜஸ்டிஸ் எம். அனந்தநாராயணன், எஸ் வெங்கடேஸ்வரன், டி. எஸ். ராம லிங்கம், வி. கார்த்திகேயன், எஸ் ரங்கராஜன், மு. வரதராசனார், கா. அப்பாதுரை, பி. ஆர். பக்கிரிசங்கர், எம். சண்முகசுப்பிர மணியம், ஈ. எஸ். முத்துசாமி போன்றவர்கள் எல்லாம் அதிலே இருந்து, அந்தப் பணியைச் செய்தார்கள். அந்தப் புத்தகம் கலைஞரால் வெளியிடப்பட்டது. அப்படி கலைஞரால் வெளி யிடப்பட்ட அந்த லா லெக்சிகன் இருக்கிறபோது, மற்றொரு லா லெக்சிகன் நம்மையெல்லாம் ''மானிடப் பிராணிகள்'' என்று சொல்லக் கூடிய ''லா லெக்சிகன்'' தேவைதானா என்று நான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

அதேபோல், இன்றைய தினம் சட்டம் ஒழுங்கு பற்றி இங்கே பேசிக் கொண்டு இருக்கிறோம். இங்கே மிகவும் பிர மாதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உங்களால் நியமிக்கப்பட்ட ஐ. ஜி. பொன் பரம குரு அவர்கள் ஒரு கூட்டத் தில் சொல்லியிருக்கிறார். என்ன சொல்லியிருக்கிறார் என்றால், தமிழ் நாட்டில் 1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற கொலைகள் 785. 1980-ல் எவ்வளவு என்றால் 1,289. குற்றங்கள் 1971-ல் 51,616. இன்றைக்கு இப்போது நடைபெறுகின்ற ஆட்சியில் 1981-82-ல் 1,16,110 குற்றங்கள். இவைகளைத் தடுக்க என்ன செய்தீர்கள் ?

காவலருக்கு அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று சொல்கிறீர்கள். வண்ணாரப்பேட்டையில் ஒரு போலீஸ்காரர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார் திருச்சியில்

இருந்து வந்து கொண்டு இருந்த எக்சைஸ் இன்ஸ்பெக்டரின் மனைவி திருவள்ளுவர் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பஸ்ஸில் வந்து கொண்டு இருந்தபோதே திருட்டுக்கு பலியாகி, அந்த அம்மையார் தாலியைப் பறிகொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் இங்கே காவல் துறையில் நாங்கள் பிரமாதமாகச் செய்து விட்டோம் என்று இன்றையதினம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

[முற்பகல் 10-50]

பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றி பேசும்போது கூட அன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்ததை மேற்கோள் காட்டினார்கள். என்ன இருக்கிறது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில்? நான் அதைப் படிக்கிறேன், அருள்கூர்ந்து அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

Mr. Natarajan, appearing for D.M.K. President, M. Karunanidhi opposed the grant of total blanket stay.

என்று எதிர்த்திருக்கிறார்கள். மொத்தமாக பஞ்சாயத்துத் தேர்தலுக்கு தடை விதிப்பதை அங்கே இருந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் நடராஜன் அவர்கள் எதிர்த்திருக்கிறார்கள் என்பது தெளிவாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, அதே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் அவர்கள் படித்த பகுதிக்கு மேலே இன்னொரு பாரா இருக்கிறது; அதையும் சேர்த்து படித்தால் நல்லது.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சொல்லுகின்ற கருத்துக்கு மாறான ஒரு கருத்தை அமைச்சரவர்கள் சொல்வதாக இருந்தால் அந்தக் கருத்தைச் சொல்லிவிட்டு, அதற்கு விளக்கம் தருகின்ற வகையில் ''மேலே இருக்கிற பகுதியை படித்தால் நல்லது'' என்ற ஆலோசனையைச் சொல்வது பொருத்தமாக இருக்கும். ஆகவே, அந்த மாறுபட்ட கருத்து என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, இது ஏற்கனவே வெளியிடப்பட்ட கருத்துதான். இது பற்றி இங்கே சட்டமன்ற குறிப்புகளும் இருக்கின்றன. நான்





ஏற்கனவே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியைக் குறிப்பிட்டுக் காட்டி, அதிலே ஜி. இராமசாமி என்ற வழக்கறிஞர் தி.மு.க.-வுக்காக பொதுத் தடை கேட்டார் என்று சொல்லியிருக்கிறேன். இன்னமும் விளக்கமாகச் சொல்வதாக இருந்தால்,

D.M.K. with its Counsel G. Ramasawami who asked for blanket stay

என்று சொல்லி, அதிலே எழுதப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன பதில் என்று அப்போது கேட்டேன். திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போதுதான் இந்தக் கருத்து கேட்கப்பட்டது. அதையொட்டித்தான் திரு சோமு அவர்கள் இதை எழுப்பியிருக்கிறார்கள். அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிற அந்தக் கருத்தைப் பார்த்தவர், அந்தக் கருத்தில் இருக்கிற தெளிவற்ற செய்தியை சேர்த்து கவனித்திருப்பார் என்று எதிர்பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு. ஜி. இராமசாமி என்பவர் முழு தடை கேட்டார் என்று இருக்கிறதே என்று சொன்னால் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக வாதாடியவர் என்று அதிலே இல்லை. மேலும் ஜி. இராமசாமி என்பவர் பல வழக்குகளில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக வாதாடியிருக்கிறார். ஆனால் அவர் எப்போதுமே திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவாதாடுபவர் அல்ல. வேறு பல கட்சிகளுக்காகவும் வாதாடி இருக்கிறார் காங்கிரஸ் கட்சிக்காக வாதாடியிருக்கிறார்; மற்றும் பல கட்சிகளுக்காக வாதாடி இருக்கிறார். ஒரு குறிப்பிட்ட கட்சிக்காக மட்டும் அவர் வழக்கறிஞராக இருப்பவர் அல்ல.. இந்த நீதிமன்றத்தில் இந்தக் குறிப்பிட்ட வழக்கில் வேறு பலருக்காக வாதிடும்போது இந்த வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார். ஆனால் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த வழக்கில் ஆஜராகவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அஃபிடவிட் கொடுத்து, கலைஞர் கருணாநிதி அவர்களால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு. நடராஜன் மட்டும் தான். அவர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாதாடினார் என்ற கருத்து இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் தொக்கி வந்து இருக்கிறது.

அது மட்டுமல்ல. வேறு பல பத்திரிகைகளிலும் இந்த செய்தி வந்திருக்கிறது. ஆகவே, எங்கள் சார்பில் வழக்கறிஞர் ஜி. இராமசாமி என்பவர் வாதாடவில்லை என்ற உண்மையை புரிந்துகொள்வது யாவருக்கும் இயல்பாகும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, நான் அடிக்கடி குறுக்கிட விரும்பவில்லை. இருந்தாலும் இருக்கிற ஒரு கருத்தை திசை திருப்பிவிடுவது சரியாக இருக்க முடியாது. அதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

D.M.K.with its Counsel G. Ramaswamy, who asked for blanket stay என்பது சரியான விளக்கம். தி.மு.க. தன்னுடைய வழக்கறிஞர் ஜி. இராமசாமி என்பவர் மூலம் பொது தடை பெற்றார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர வேறு விதத்திலே அர்த்தம் கொள்வதற்கு அதிலே எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : சில நேரங்களில் தீர்ப்பினை எதிர்த்தெல்லாம் வெளியே போகக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆனாலும் உறுப்பினர்கள் தலைவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஆகவே எல்லோரும் எழுந்து பேசுவது சரியல்ல. மேலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. அன்பழகன் அவர்களே 'பேசுவோம் இல்லாவிட்டால் போவோம்' என்ற மாதிரி வார்த்தைகளை சொன்னால் எப்படி ?

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நான் என்ன சொன்னேன் என்பதை எண்ணிப் பார்த்து கருத்துக்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் என்ன சொன்னேன் என்றால், நான் பேசுவதற்கு இடம் இல்லாமல் நீங்கள் எல்லாம் பேசவேண்டிய அவசியம் இருந்தால் வெளியிலே போய்விடலாம் என்று என்னுடைய கட்சித் தோழர்களிடத்திலே சொன்னேன். அந்த உரிமை எனக்கு உண்டு. ஆகவே என்னுடைய உரிமையை நான் இழந்ததும் இல்லை என்னுடைய உரிமையை மீறி நான் செயல்படவும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையிலே இருக்கின்ற ஒரு கட்சியைப் பற்றியும் அந்தக் கட்சியின் பிரதிநிதியாக நீதிமன்றத்திலே வழக்காடிய ஒருவரைப் பற்றியும் பத்திரிகையிலே வந்திருக்கின்றது என்ற அடிப்படையிலே அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அந்தக் கருத்தை மறுத்து அப்போதே நாங்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். ஜி. ராமசாமி அவர்கள் எங்கள் கழகத்தின் சார்பிலே வாதாடவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வாதாடியவர் வழக்கறிஞர் நடராஜன்.



நீதிமன்றத்திலே அஃபிடவிட் எங்கள் சார்பிலே தரப்படவில்லை. இதை மறுத்து அமைச்சரவர்கள் சொல்ல முயற்சிப்பார்களேயானால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். திரு. ஜி. ராமசாமி அவர்கள் "நான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக வாதாடினேன்" என்று சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால் இன்னொரு மாபெரும் வழக்கறிஞர் ஒருவர், அரசாங்கத்திற்கு மிகவும் வேண்டிய வழக்கறிஞராகக் கருதப்பட்ட ஒருவர்—இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. திரு. ஜி. ராமசாமி எங்களுக்காக வாதாடவில்லை என்று நாங்கள் மறுத்ததற்குப் பின்னாலும் அவர் எங்களுக்காகத்தான் வாதாடினார் என்று திரித்துப் பேசுவதில் அரசாங்கம் அக்கறை காட்டினால் அதாவது அரசாங்கத்தின் உள்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அப்படிச் சொன்னால்—ஒரு மாபெரும் வழக்கறிஞர், முதலமைச்சருக்கு வேண்டியவர் தேர்தலை மொத்தமாக நிறுத்தவேண்டும் என்று வாதாடினார் என்ற குறிப்பும் அதே இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருக்கின்றது என்பதையும், ஆளும் கட்சிக்கு இந்தத் தேர்தலை நடத்துவதில் அக்கறை இல்லை என்ற கருத்தும் பத்திரிகையிலே வந்திருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையை வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது தவறான கருத்தை இட்டுக்கட்டிப் பேசவேண்டிய அவசியம் உங்களுக்கு ஏற்படுகின்றதோ அதே இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையின்படி முதலமைச்சரும் குற்றச்சாட்டுக்கு உள்ளானார் என்பதை நான் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பேராசிரியர் மாண்புமிகு திரு. அன்பழகன் அவர்களிடமிருந்து திரித்துப் பேசுவது இட்டுக் கட்டிப் பேசுவது அரசினுடைய நோக்கம் என்று கூறுகின்ற வார்த்தைகளை நான் எதிர்பார்க்கவில்லை. எனக்குக் கூட அந்த ஜி. ராமசாமி அவர்கள் சம்பந்தப்பட்ட நிலையையில் அப்படிப்பட்ட தொடர்பு எனக்கு இல்லை என்று கடிதம் வந்திருக்கின்றது. அதற்கு நான் பதில் அனுப்ப இருக்கிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையை நீட்டிக்கொண்டு போகாமல் பத்திரிக்கைகளில் வருகின்ற செய்திகளை நாம் எந்த அளவுக்கு மதிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு மதிப்பதற்கு அந்தப் பத்திரிக்கையின தரத்தை வைத்துத்தான் நிர்ணயிக்கிறோம். இதிலிருந்து சில பத்திரிக்கைகளைப் பற்றி நாம் என்ன நிலைமைக்கு வரவேண்டி இருக்கின்றது என்பதை நினைவில் கொண்டு இனி எச்சரிக்கையாக இருக்க அனைவரும் முயற்சித்து உதவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இங்கே நான் ஒன்றைச் சுட்டிக் காட்டவேண்டிய

அவசியத்திலே இருக்கிறேன். ட்ராஃப்ட் நோட்டிஃபிகேஷனில் முதலில் காஞ்சிபுரத்தை தனித் தொகுதியாகவும், செங்குன்றத்தை பொதுத் தொகுதியாகவும் அறிவித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு காஞ்சிபுரத்திலே யாரோ ஆளும் கட்சிக்கு வேண்டிய ஒருவர் நிற்கவேண்டும் என்று விரும்பிய காரணத்தாலே அவசரம் அவசரமாக காஞ்சிபுரத்தைப் பொதுத் தொகுதியாக அறிவித்து விட்டு செங்குன்றத்தைத் தனித் தொகுதியாக ஃபைனல் நோட்டிஃபிகேஷன் அளித்திருக்கிறார்கள். இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம் பஞ்சாயத்துத் தேர்தல் என்பது........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது முழு வழக்குமே நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசவேண்டும்.

**திரு. என். வி. என். சோமு :** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கின்ற கூற்றிலே தவறு ஏதாவது இருக்குமேயானால் அடுத்துப் பேசுகின்ற ஆளும் கட்சி உறுப்பினர் ஆதாரபூர்வமாக மறுத்துப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அன்பு கூர்ந்து நான் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மறுத்துப் பேசலாம் என்றாலும் வழக்குமன்றத்திலே அது இருப்பதால் அந்தப் பொருள் குறித்து விவாதம் கூடாது.

[முற்பகல் 11-00]

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். அரசாங்க நோட்டிபிகேஷனில் முதலிலே வந்ததற்கும் கடைசியிலே வந்ததற்கும் உள்ள மாறுபாடு வரையில் இங்கே குறிப்பிடுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. நீதிமன்றத்திலே வைத்து நடத்துகின்ற விவாதங்களை என்ற அடிப்படையிலே அதைக் கருதாமல் அரசாங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற குறிப்புகளில் மாதத்தின் முதல் வாரத்தில் வந்த நோட்டிபிகேஷனுக்கும் கடைசி வாரத்தில் வந்த நோட்டிபிகேஷனுக்கும் மாறுபாடு இருக்கிறது என்ற அளவுக்கு அரசாங்கம் நடந்துகொண்ட காரணத்தால் ஏற்பட்ட குறைகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுவதைத் தாங்கள் தடுக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நோட்டிபிகேஷனை எதிர்த்துத்தான் ரிட்டையே போட்டிருக்கிறார்கள்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூறியதைப்போல

The subject-matter of the notification is the subject-matter of the writ petition and so it has become *sub-judice*.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, அப்படிப் பார்த்தால், சட்டமன்றத்திலே எதையும் வாதிட முடியாது. (குறுக்கீடுகள்) எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது அல்லது எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்ற அடிப்படையில் நீதிமன்றத்திலே வாதிட முடியுமே தவிர அரசாங்கம் ஒரு நோட்டிபிகேஷனை திருத்தி வேறு ஒரு நோட்டிபிகேஷனை வெளியிடமுடியாது என்ற வகையில் நீதிமன்றத்திலே வாதிடுவது இயற்கை அல்ல. திருத்தங்கள் அரசாங்கத்தால் கொண்டு வரப்படலாம். ஆனால் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் தவறு என்ற அடிப்படையில் வாதிட வேண்டுமானால் அது சட்டமன்றத்திலேதான் வாதிட முடியும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சிறுபான்மை சமூகத்தினர் நலம் என்ற வகையில் அல்லது வாய்ப்பு இழந்தவர்கள் என்ற முறையில்தான் நீதிமன்றத்தில் வாதாட முடியும். அரசாங்கம் வெளியிடுகிற நோட்டிபிகேஷனில் அதன் நோக்கத்தை மாற்றி வேறுவிதமாக வெளியிட்டார்கள் என்று சட்டமன்றத்திலே பேசுவது என்பது சட்டமன்றத்தினுடைய உரிமை அது நீதிமன்ற நடவடிக்கைகளில் விவாதிக்கப்படுவது அல்ல.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதிக்கும்போது நோட்டிபிகேஷனை கடைசி நேரத்தில் மாற்றியது ஏன் என்றெல்லாம் கேட்பது ஒருவேளை சட்டத்திற்கு உட்பட்டதுதான் என்று எடுத்துக்கொண்டாலும் கூட அதிலே ஒரு நோக்கத்தை கற்பித்து இங்கே சொல்வது வழக்குக்கு பாதகமாக அமையும் என்ற காரணத்தால் அது சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தப் பிரச்னை இனிமேல் வேண்டாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல். கோர்ட்டிலே போடும்போதே போனாபைடு இருக்கிறதா இல்லையா என்று பார்த்துத்தான் போட்டிருக்கிறார்கள். இப்பொழுது அந்த கிரவுண்ட்ஸ்ஸை எல்லாம் இங்கே விவாதம் செய்தால் அந்தக் கேஸ் வழக்குமன்றத்திற்கு வரும்போது சங்கடமாக இருக்கும். அதனால் வழக்குமன்றத்தில் பெண்டிங்காக இருப்பதை இங்கே பேச வேண்டாம்.

களையும் பராமரிப்பது ஆகியவை மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என்று திட்டக் குழு வலியுறுத்தியுள்ளது. வேளாண்மை, தொழில், வாணிகம் வளர்ச்சியடைவதற்குக் கூடுதல் மின் உற்பத்தி மிகவும் அவசியமானதாகும். மத்தியத் திட்டக் குழு வலுவாகப் பரிந்துரை செய்துள்ள வண்ணம் மின் கட்டண வீதங்களை மாற்றியமைப்பது மூலம்தான் மின் வாரியத்திற்குப் போதிய வருவாய் கிடைக்கும். போதிய வருவாய் கிடைத்தால் தான், மின் வாரியத்தின் நிதி ஆதாரங்கள் சீரடையும். அப்போதுதான் மின் உற்பத்தியை அதிகரிக்க இயலும். மின் வாரியத்தின் நடவடிக்கைகளைக் கணிசமான அளவுக்குத் தொடர்ந்து நடைபெறச் செய்ய மாநில அரசு கடந்த சில ஆண்டுகளாகவே நூறு கோடி ரூபாய்க்கும் அதிகமாகவே நிதி உதவி அளித்து வந்துள்ளது. நிதி உதவியைக் காலவரையறையின்றி வழங்குவது மாநில அரசுக்கு இயலாது. ஏனெனில், அரசின் நிதி ஆதாரங்களைப் பெருமளவு அடிப்படையாகக் கொண்ட திட்டப் பணிகளையும், பிற வளர்ச்சி நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதை இது கடுமையாகப் பாதிக்கும். மேலும், மின் வாரியத்திற்குத் தேவைப்படும் பல்வேறு பொருள்களின் மீது அதிக வரிகளை மத்திய அரசு விதிப்பதன் மூலமும் இரயில்வே கட்டணம், எண்ணெய் விலைகள் முதலியவற்றை அதிகரிப்பதன் மூலமும், ஆண்டுதோறும் மின் உற்பத்திச் செலவு உயர்ந்து வருகிறது. எனவே, தற்போதுள்ள குறைந்த அளவு மின் கட்டண வீதங்களை மாற்றி அமைப்பதைத் தவிர மாநில அரசுக்கு வேறு வழியே இல்லை. தொழில் துறையில், தனியார் தங்கள் தொழிலுக்குத் தேவையான மின் உற்பத்தி செய்வதை அரசு அனுமதிக்க முடிவு செய்துள்ளது. தனியார் இலாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன் வருவார்களானால், அரசு அதைப் பரிசீலித்துப் பார்க்கவும் விரும்புகிறது.

17. காவிரி நீரைப் பங்கிட்டுக் கொள்வது தொடர்பான தகராறு இன்னும் தீர்க்கப்படாமலுள்ளது. மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் இது குறித்து தமிழ் நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால், துரதிருஷ்டவசமாக இப் பேச்சு வார்த்தைகள் இதுவரை வெற்றியடையவில்லை. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் உள்ள இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண மத்திய அரசு உதவி செய்யும் என நம்புகிறோம். அண்மையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு மாநாடு நடத்த இந்தியப் பேரரசு முன் வந்துள்ளது. அதில் நியாயமான இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும், இப்போது பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும் தண்ணீருக்கு உத்தரவாதம் தரப்படும் என்றும் இந்த அரசு நம்புகிறது. கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்தில் பாசனத்திற்காகத் திருப்பி விடுவதற்கான சாத்தியக்கூறு பற்றி பரிசீலிக்க மத்திய அரசு அமைத்த தொழில்நுட்பக் குழுவின் பரிவுரைகள் மீது விரைந்து நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வரும்.



18. அண்டை மாநிலங்களுக்கிடையே ஆற்றுநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வரும்போதே இந்த அரசு தமிழ் நாட்டில் பாசன வசதிகளை மேம்படுத்தத் தன்னால் ஆன முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறது. ஆற்றுப் பாசன ஆதாரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளதால், பாசன ஏற்பாடுகளை நவீனமயமாக்குவதில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது திட்ட முதலீட்டில் பாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு 48.59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில பாசனச் சிறப்புத் திட்டம், தூர் வாருதல்-பண்படுத்தல் திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் செலவு செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. குடிநீர் திட்டங்களுக்கும் பாசனத் திட்டங்களுக்கும் தமிழ் நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இதன் காரணமாக, அண்டை மாநிலங்களில் கிடைக்கின்ற உபரி நீரை இம்மாநிலத்தின் பயனுக்காகத் தந்துதவுமாறு அம்மாநிலங்களை நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். கிடைக்கின்ற நீரை அதிக அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள இயன்ற முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளும் நிலையில், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த வறண்ட பகுதிகளின் பயனுக்காக, சில பருவ காலங்களில் கடலில் போய் வீணாகக் கலக்கும் வெள்ள நீரைத் திருப்பி விடும் சாத்தியக்கூறுகளையும் மாநில அரசு ஆராய்ந்து வருகிறது. பொதுப்பணித் துறை இதற்கான ஆய்வுகளைத் தொடங்கியுள்ளது.

19. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்படுவதற்காகத் தமிழ் நாட்டில் புதிய தொழிற்கூடங்களைத் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்க அண்மையில் சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்குப் பல்வேறு ஊக்கத் திட்டங்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர், அடிப்படை வசதிகள் முதலியவை கிடைப்பது குறித்துத் தொழில் முனைவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களுக்குத தமிழ் நாட்டுத் தொழிலமைச்சர் சென்று வந்தார். இம் மாநிலத்தை விரைவில் தொழில் மயமாக்குவதற்காக, சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விற்பனை வரி அடிப்படையில் வட்டி இல்லாக் கடன் மீதான உச்ச வரம்பு 50 இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தொழிற்பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த இடங்களில் அமைக்கப்பெறும் புதிய தொழிற்கூடங்கள், முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் வெட்டு விலக்கு வசதிகளைப் பெறும். மின்னணுவியல், மருந்துப் பொருள்கள், மோட்டார் வண்டி துணைத் தொழில்கள் ஆகிய துறைகளில் புதிய தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்